சமணத் தடயம்



பதிப்பாசிரியர்கள் :

நடன. காசிநாதன்

மா.சந்திரமூர்த்தி

மணிவாசகர் பதிப்பகம்

சமணைத் தடயம்

பதிப்பாசிரியர்கள்:

நடன. காசிநாதன்

மா. சந்திரமூர்த்தி

மணிவாசகர் பதிப்பகம்

31, சிங்கர் தெரு, பாரிமுனை

சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 2005
திருவள்ளுவர் ஆண்டு : 2036

விலை : ரூ. 125.00
மணிவாசகர் வெளியீட்டு எண் : 1243

நினைவில் வாழும்
நிறுவனர்



ச. மெய்யப்பனார்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச்செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :
மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ✆:230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ✆:25361039


6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை-600017. ✆:24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ✆:2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ✆:2397155

28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ✆:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைபேசி : 25954528



காணிக்கை!

திருமலை திகம்பர ஜைன மடம்

தலைவர் பட்டாரக சிந்தாமணி

ஸ்வஸ்தி ஸ்ரீ தவளகீர்த்தி சுவாமி

அவர்கள் திருவடிக்கு



பதிப்புரை

ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம்

சமணம் என்பது ஒரு மதம் என்பதைவிட ஒரு வாழ்க்கை முறை என்பதே பொருந்தும். கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கை முறையை வலியுறுத்துவது சமணம். "இந்தியப் பெருநாட்டின் தொன்மைகளில் மதமும் ஒன்று. அதில் சமண மதம் மிகத் தொன்மையானது. இம்மதத்தின் தோற்றத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை. இத்தொன்மையை வேதங்கள் எழுதப்படுவதற்கு முன்பே ஜைன தர்மம் இருந்ததென்பதில் ஐயமில்லை" என டாக்டர். S. ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுகிறார். தமிழ்நாட்டில் கி.மு. நூற்றாண்டுகளிலேயே சமணம் பரவியிருந்ததை அறிந்துக்கொள்ள தொண்டூர், ஜம்பைக் கல்வெட்டுகள் உதவுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இதன் மூலம் விசாகாச்சாரியார் தமிழகத்திற்கு வருவதற்கு முன்பே இங்கு சமணம் இருந்தது இருக்க வேண்டும் என அறிய முடிகிறது. மேலும் தர்மம் குறைந்து விளங்கும் இந்நாளில் தீர்த்தங்கரார்கள் தோன்றுவது சாத்தியமில்லை. எனவே அறம் கூறிய அவர்களின் சமவ சரணத்தை நினைத்துப் பார்த்து நடக்க வேண்டும் என்பதற்காக தீர்த்தங்கரர் களின் கோயில்களை அமைத்தும், இயற்கைப் பாறையில் செதுக்கப் பட்ட உருவங்களை வணங்கியும் வருகிறோம். தமிழகத்தில் சமணம் 2000 ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து மக்கள் பின்பற்றும் சமயமாக இருந்து வருகிறது. இச்சமயத்தின் கொள்கைகளும், கோட்பாடுகளும் ஆணிவேர்களாய் தமிழகத்தின் சின்னஞ்சிறு ஊர்களிலும் பரவியிருந்தமைக்கு ஏராளமான கல்வெட்டு, சிற்ப, இலக்கியச் சான்றுகள் உள்ளன. இவ்வாறு அமைந்த கோயில்கள், படுக்கை, பாழி, குகைத்தளங்கள் சமணப்பள்ளிகள், சிற்பங்கள், ஓவியங்கள் செப்புத்திருமேனிகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் 'சமணத்தடயம்' எனும் நூலை வெளிக்கொணர்கிறது. தமிழகத்தில் ஆங்காங்கே உள்ள சமணத் தடயங்களை வரலாற்று நோக்கில் வெளிப்படுத்தும் உயர்ந்த குறிக்கோளில் இந்நூல் தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனத்தின் ஐந்தாவது தொகுதியாகும். சிறந்த ஆய்வறிஞர்களின் 40க்கு மேற்பட்ட கட்டுரைகள் அடங்கிய இந்நூலை எமது மணிவாசகர் பதிப்பகம் வாயிலாக வெளியிடுவதில் மிகப்பெருமை அடைகிறோம்.

முன்னுரை

உலகியல் தொடர்பான சிந்தனைகளும் அதன் அடிப்படையில் எழும் பலவகையான ஆசைகளைத் தணிக்கும் விதமாக பல அறிவியல் சாதனங்கள் இருந்தாலும் இவற்றில் எந்த ஒன்றாலும் மனிதன் திருப்தி அடைவதில்லை. ஆனால் இதற்கு மாறாக உலகியல் பொருள்களின் மேல் உள்ள பற்றைத் துறந்து பேரின்ப உணர்வைப் பெற்று ஆனந்தம் காணும் துறவியர் முழுத்திருப்தி அடைகின்றனர். இதற்கு தீர்த்தங்கரர்களும், பாகுபலியுமே சான்று. ஜாதி, மத, இன, இட வேறுபாடு இன்றி உலகமெங்கும் உள்ள மக்கள் பாகுபலியை வழிபடுவதே இதற்கு எடுத்துக்காட்டு.

தென்னகத்தின் சமய வாழ்வில் கோயில்கள் இன்றியமையா இடம் பெற்றுள்ளன. கோயில்கள் மக்களின் வழிபாட்டு இடங்களாக மட்டுமின்றி ஞான மையங்களாகவும், கலைகளின் இருப்பிடமாகவும், இலக்கிய, காப்பியங்கள் அறங்கேறிய அவைக்களமாகவும், அறம் கூறும் அவையாகவும், சான்றோர்கள் பயிலும் நூலகங்களாகவும், பிணிதீர்க்கும் மருந்தகங்களாகவும், இயற்கைச் சீற்றம் மேலோங்கிய காலத்தில் புகலிடமாகவும் செயல் பட்டிருக்கின்றன. இவை அனைத்தையும் இந்து சமயக் கோயில்கள் மட்டுமின்றி சமண சமயக் கோயில்களும் செய்திருக்கின்றன; செய்தும் வருகின்றன.

இவ்வாறு மிகத் தொன்மை வாய்ந்த சமணம் கர்நாடகத்திலிருந்து கொங்குநாடு, தொண்டைநாடு, பாண்டிய நாட்டிற்குப் பரவியது எனலாம். இதற்குச் சான்றாக பாண்டிய நாட்டிலும், தொண்டைநாட்டிலும் கி.மு. 3–ஆம் நூற்றாண்டு அளவிலான தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவ்வாறு கிடைக்கும் கல்வெட்டுகள் மூலம் சமணம் கி.மு. 3–லிருந்து கி.பி. 8–ஆம் நூற்றாண்டு வரை செழிப்புற்று இருந்ததை அறிகிறோம். இதன் பிறகு சைவ–வைணவ சமயங்கள் ஏற்பட்ட பிறகும் பல சமணக் கோயில்கள் – மடங்கள் கி.பி. 17–ஆம் நூற்றாண்டு வரை புகழ் குன்றாமல் இயங்கியதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. தமிழகத்தில் இன்றும் நூற்றுக்கும் மேற்பட்ட சமணக் கோயில்களும், அவற்றை நிர்வகிக்கும் மேல் சித்தாமூர், திருமலை மடங்களும் சிறப்புடன் இயங்கி வருகின்றன.

இவ்வாறு பெருமையும், புகழும் கொண்டு விளங்கிய சமணக் கோயில்களை ஜைன சமய நூல்கள் 'ஜின சைத்யாலயம்' என அழைக்கின்றன. இந்த ஜின சைத்யாலயம் இருவகைப்படும். அவை 'கிருத்திம சைத்யாலயம், அக்கிருத்திம சைத்யாலயம்' என்பன. அக்கிருத்திம சைத்யாலயம் தானே சுயம்புவாய்த் தோன்றியது. இவை மத்திய உலகில் உள்ளதாக நம்பப்படுகிறது. இது காண முடியாதது. மனிதர்களால், தேவர்களால் அமைக்கப்பட்டவை கிருத்திம சைத்யாலயம் எனப்பட்டன. இவையே இன்று நாம் காண்பவை. பொதுவாக 'ஜினாலயம்' என்று அழைக்கப்பட்டாலும் கல்வெட்டுகள் 'பள்ளிகள்' என்றே குறிக்கின்றன. கன்னட, தெலுங்கு மொழிகளில் 'பஸ்தி' எனப்பட்டன. கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் 'பள்ளிச் சந்தம்' எனப்பட்டன. பெரிய

பாறைகளில் தீர்த்தங்கரர்கள் செதுக்கப்பட்ட இடங்கள் 'தேவாரம்' எனப்பட்டன என்று கல்வெட்டுகளும், நூல்களும் கூறுகின்றன.

இவ்விதம் வேத காலத்திலிருந்தே குறிக்கப்படும் தீர்த்தங்கரர்கள், சமணக் கோயில்கள், மற்றும் வரலாற்றுச் சுவடுகள் பற்றி பல்வேறு ஆராய்ச்சியாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் வெளியிடும் இந்த 'சமணத் தடயம்' எனும் நூல். இவ்வகையில் தொல்லியல் தடயங்களையும், கல்வெட்டுகளையும் கண்டுபிடித்து அவற்றைக் கருத்தரங்குகளில் அறிஞர்கள் முன்னிலையில் வெளியிடுவதை தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் தன் கடமையாகச் செய்து வருகிறது.

இப்பணி தொடர்பான 5–வது கருத்தரங்கு திருவண்ணாமலை மாவட்டம் திருமலையில் 2005–ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் நடைபெற்றது. இக்கருத்தரங்கு தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சரும் நாடளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு செஞ்சி. இராமச்சந்திரன் அவர்களைச் சந்தித்தபோது தமது தொகுதிக்குட்பட்ட திருமலை அரஹந்தகிரி திகம்பர ஜைன மடத்தில் நடத்தலாம் என்ற கருத்துரை வழங்கியதோடு, எங்களுக்குப் போதிய ஒத்துழைப்பு அளிக்குமாறு திருமலை சுவாமிகளிடம் கேட்டுக்கொண்டார். அவரின் அன்பான வேண்டுகோளை ஏற்று சுவாமிகள் எங்களுக்கு இரண்டு நாள் கருத்தரங்கிற்கு அரங்கினை அளித்ததோடு உண்ண உணவும், இருப்பிடமும் அன்போடு அளித்தார்கள். திருமலை ஜைன மடத்தின் தலைவர் ஸ்வஸ்தஸ்ரீ தவளகீர்த்தி சுவாமிகளின் ஒத்துழைப்பும் அன்பும் ஆதரவும் இருநாட்கள் கருத்தரங்கு சிறப்பாக நடப்பதற்கு உதவின. இவர்கள் இருவருக்கும் எங்களது அகம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

எங்களது அன்பான வேண்டுகோளுக்கிணங்கி இக்கருத்தரங்கிற்கு வந்து கலந்துகொண்ட மாஸ்கோ பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் அலெக்சாண்டர் துபியான்ஸ்கி அவர்களுக்கும் எங்களது நன்றி.

தமிழகத்திலுள்ள சமணத் தடயங்கள் பற்றி கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மேலும் ஜைன இயலுக்காக இதுகாறும் உழைத்து வந்த அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளும் இந்நூலில் இடம் பெற்று பெருமை சேர்க்கின்றன. கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் இதனை நூலாக வெளியிட ஒத்துழைப்பு நல்கிய மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் திரு ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட வேண்டி இடைவிடா முனைப்போடு செயல்பட்ட மேலாளர் திரு. இராம. குருமூர்த்தி அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைக் கூறிக்கொள்கிறோம். இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரையாளர் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள். நன்றி,

வணக்கம்

நடன. காசிநாதன் – மா. சந்திரமூர்த்தி

உள்ளடக்கம்

பக்கம்



சமணம் ஓர் அறிமுகம்

கொல்லாமையைத் தாரக மந்திரமாகவும், அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி அவைகளுக்கு அறவுரை செய்வதே யாகம் என்றும் தம்முள் படிந்து கிடக்கின்ற கர்மத்தினைத் தியானம் என்கிற தீயால் சுட்டெரித்து ஆத்ம ஜோதியை பெறுவதே தவம் என்றும், உலகம் நிலையற்றது எனவே நிலையான வீடுபேறு அடைய நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் மூன்றும் ஒன்றாக நிற்பதும் தான் வழி என்றும் கூறி அதன் படியே செயல்பட்டு வரும் மதம் தான் ஜைனமதம்.

இம்மதம் தனது நிலையான கொள்கையினால் மூவாயிரமாண்டு வரலாற்று இந்தியாவின் வளர்ச்சியோடு தொடர்ந்து நடை போட்டு வரும் மதம் என்ற சிறப்பினைப் பெறுகிறது. வரலாற்றுப் பாதையில் பல சிக்கலான இடங்களைக் கடந்து வந்தாலும் இம்மதத்தின் கொள்கைக் கோட்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மிகச் சிலவே. கடந்து வந்த காலம் மட்டும் இதற்குப் பெருமை சேர்க்கவில்லை. மாறாத கொள்கையும் கோட்பாடும் தான் அதற்கு முக்கியக் காரணமாகிறது. இந்த மாறாத கொள்கைக் கோட்பாடுகளை வரன் முறைப்படுத்தி இம்மதம் தனது நீண்ட பயணத்தினை சிறிதும் தளர்வின்றித் தொடர முழு முதற் காரணமாக அமைந்தவர் மகாவீரர். வரலாற்றுக் காலத்தில் பிறந்த மகாவீரர் செய்த அற்புத மாற்றங்களும் அமைப்புகளுமே இம்மதம் இன்று வரை தொடர்ந்து நிலவப் பெருங்காரணமாக இருந்துள்ளதோடு மற்றபல மதங்களையும் செம்மைப்படுத்தியுள்ளது. எனவே மகாவீரரை இந்நாளில் நாம் அனைவரும் நினைவு கூர்வது அவசியமாகிறது.

ஜைனமதத்தின் தொடக்கம் சிந்து சமவெளி நாகரிகக் காலத்திலேயே காணப்படுகிறது. படிப்படியே ஆரியர்களின் ரிக், யஜுர் வேதங்களில் கூறப்பட்டு மகாபாரத காலத்தில் கண்ணனோடு இணைக்கப்பட்டு மகாவீரர் காலம் வரை

தொடர்ந்து இம்மதத்தின் வரலாறு காணப்பட்டாலும் தம் மதத்திற்கெனக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்து மக்களை நெறிப்படுத்த முயன்றது 23 வது தீர்த்தங்கரரான பார்ஸ்வநாதர் காலத்தில் தான்.ரிஷபநாதர் தொடங்கி 24 தீர்த்தங்கரர்கள் ஜைனமதத்தை நிறுவி வளர்த்து வந்தவர்கள் என கூறப்பட்டாலும் பார்ஸ்வநாதர் முன்னவர்களின் கொள்கைகளை வகைப்படுத்தி சங்கங்கள் ஏற்படுத்த வழி கோலினார். அவருக்கு சுமார் 250 ஆண்டுகளுக்குப் பின் வந்த வர்த்தமான மகாவீரர் அக்கொள்கைகளை மேலும் செம்மைப்படுத்தினார்.

வர்த்தமான மகாவீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரராகக் கூறப்படுகிறார். அர்த்தமாகதியில் எழுதப்பட்ட பல நூல்களிலும் இவர் (வைசாலிகா) வேசாலியன் என்றே அழைக்கப்பட்டார். ஜைனமதம் என்ற உயர்ந்த கட்டடத்திற்கு மிக உறுதியான அடித்தளம் இட்டவர். அதன் காரணமாகவே ஜைனமதம் விரிசல்களும் ஓட்டைகளும் இன்றி சிறந்து நிற்கக் காண்கிறோம். மகாவீரர் 'நிகந்த நாதபுத்த' என்ற பெயருடன் நிர்கிரந்த பிரிவின் தலைவராக விளங்கினார் என்பதையும் அவருடைய பரிநிர்வாண காலத்தைப் பற்றியும் பௌத்த நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன.

பெற்றோர் இவருக்கு வர்த்தமானர் என்று பெயரிட்டனர். யசோதா என்ற பெண்ணை மணந்து அனோஜா என்ற மகளுக்கும் தகப்பன் ஆனார். பெற்றோரின் இறப்பிற்கு பின்னர் அரசபதவிக்கு வந்த தன் அண்ணன் நந்தி வர்த்தன் மற்றும் முக்கிய மனிதர்களின் அனுமதியின் பேரில் சமணத் துறவியானார். தன்னுடைய முப்பதாவது வயதில் அரச வாழ்வைத் துறந்து பன்னிரெண்டு ஆண்டுக்காலம் கடுந்தவமிருந்து ஞானம் பெற்றார். தன்னுடைய 72 வது வயதில் பாவாபுரியில் பரிநிர்வாணம் அடைந்தார். 12 ஆண்டுக்காலம் அலைந்து திரிந்து கடுந்தவத்தால் கேவல ஞானம் பெற்ற அவர் தம்முடைய 42 வது வயது முதல் முப்பதாண்டுகள் தம் கொள்கைகளான கொல்லாமை, வாய்மை, பிறர் பொருள் விழையாமை, மிகுபொருள் வெஃகாமை, பிரம்மச்சரியம் என்ற ஐந்தையும் மக்களுக்குப் போதித்தார். ஜைனமதத்தின் பழைய தத்துவங்களின் நீண்ட பயணத்தில் சில சீர்திருத்தங்களை கொண்டு வந்து கட்டுக் கோப்பான மதமாக மாற்றினார்.மக்களை ஒன்று திரட்டி வழி நடத்தும் சிறந்த வித்தையை அறிந்திருந்தார். சங்கங்களை உருவாக்கினார். பெண்களுக்கும் தம் மதத்தில் இடங் கொடுத்தார். பிரம்மச்சரியத்தை வலியுறுத்தினாலும் உலக வாழ்வில் ஈடுபட்டவர்களுக்கென ஸ்ராவக விரதத்தை ஏற்படுத்தியதால் ஜைன மதத்தின் வேர் மக்கள் வாழ்வின் அடிவரை பரவித் தழைத்தது.

மகாவீரர் வலியுறுத்தி சென்ற ஐந்து விரதங்கள் ஜைன மதத்தினரால் இன்று வரை மாறாது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்ற பெருமையோடு அவருடைய மதக் கொள்கைகளின் தாக்கம் இந்தியாவில் வளர்ந்த பல மதங்களிலும் காணப்படுவது சிறப்புக்குரிய ஒன்றாகும். அதிலும் குறிப்பாக கொல்லாமை அதாவது உயிர்க்கொலை செய்தலை வெறுக்கும் மாபெரும் அறத்தைத் தொடக்க காலத்திலிருந்து வலியுறுத்தி வரும் நிலையில் இந்து மதம் போன்ற பிற பெரிய மதங்களும் பிற்காலத்தில் இதனை ஏற்றுக் கொண்டு கொல்லாமையை வலியுறுத்தி வருவதைக் காணலாம். இது போல வாய்மை(சத்தியம்) என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

யாகங்களில் உயிர்கள் பலியிடப்படுவதை வெகுவாகக் கண்டித்தும் கள்ளுண்ணும் பழக்கத்தைக் கைவிட்டொழிக்க கோரியும் 2500 ஆண்டுகளுக்கு முன்பே அஹிம்சைப் புரட்சி செய்த பெருமையாளர். மகாவீரர், கொல்லாமை, வாய்மை, கள் உண்ணாமை இவற்றையே அடிப்படைக் கொள்கையாக்கி நாடெங்கும் அதைப் பரப்பி மக்களை நெறிப்படுத்தியவர். இந்திய மக்கள் மனதில் அவ்வெண்ணங்களை இன்று வரை நிலைத்திருக்கும்படிச் செய்தவர். அதனால் அவர் மகாவீரர் தானே. அம்மாவீரரின் கொள்கைகளை இந்த இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் நாடெங்கும் பரப்பியவர் மகாத்மா காந்தியடிகள். அவர் எம் மதமும் சம்மதம் என்ற கொள்கையினை உடையவர். அஹிம்சை மற்றும் வாய்மை என்பதை தாரக மந்திரமாகக் கொண்டவர். அதன்படி வாழ்ந்தவர். எனவே இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அஹிம்சைப் புரட்சியாளர் காந்தியடிகள் வரை இந்திய மக்கள் அனைவருடைய மனத்திலும் அஹிம்சையையும் வாய்மையையும் ஆழமாகப் பதியச் செய்தவர் வர்த்தமான மகாவீரர் தான் என்பதில் ஐயமில்லை. இன்று குடி குடியைக் கெடுக்கும் என்று இடிமுழக்கம் செய்கிறோம். இதை 2500 ஆண்டுகளுக்கு முன்பே முழக்கம் செய்து மக்களை நல்வழிப் படுத்தியவர். எனவே மகாவீரர் கொள்கைகளை நாமும் கடைப் பிடித்து நடக்க சபதம் எடுப்போம்.

ஆர். வசந்த கல்யாணி

❖ ❖ ❖

1. தொண்டை மண்டலத்தில் சமணப்பள்ளிகள்

அனந்தபுரம் கோ.கிருட்டினமூர்த்தி

முன்னுரை

தமிழ்நாட்டில் இற்றைக்கு 3000 முதல் 2000 ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய பண்பாட்டில் இப்போதைய சமயத்தைக் குறித்த பங்கு மிகவும் குறைவு. அக்காலத்தில் காதலும், வீரமும் வாழ்க்கை. உழைப்பும், பொருள் ஈட்டலும் வாழ்க்கையின் முக்கிய நோக்கம். எனவே வேளாண்மையும், வணிகமும் முக்கியத் தொழிலாக இருந்தது. வேளாண்மையில் ஈடுபட்டிருந்த மக்கள் போரிலும் ஈடுபட்டனர். 2000 ஆண்டுகளுக்கு முன்பு சமயக் கோட்பாடு தமிழ்நாட்டில் வேரூன்றத் தொடங்கியது. அத்தகைய சமயக் கோட்பாடுகளில் சமண சமயமும் ஒன்று. சமண சமயம் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கிய போது வாழ்க்கைக்குரிய அறநெறிகளையும், ஒழுக்க நெறிகளையும் உணர்த்தச் செய்தது. அதற்குத் துறவிகள் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டனர். சமணத் துறவிகளின் வழியாக கி.மு. 4- 3 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் குறிப்பாக பாண்டிய நாட்டிலும், தொண்டை மண்டலத்திலும் சமண சமயம் பரவி நிலைப்பெற்றிருந்தது.

தொண்டை மண்டலத்தில் சமணத் துறவிகள் சமண சமயக் கோட்பாடுகள் பரவிடக் குகைத் தளங்களைத் தங்குமிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டனர். அவ்விடங்கள் பள்ளி என்று கூறப்பட்டது.ஆயினும் அப்பள்ளி பின்னர் **தவப்பள்ளி, அதிட்டானம், பெரும்பள்ளி, பாழி, தேவாரம், பஸ்தி** எனவும் அழைக்கப்பெற்றன.

தொண்டை மண்டலத்தில் சமணப்பள்ளிகள்

தொண்டை மண்டலத்தில் சமண சமயம் கி. மு. வுக்கு முன்பே பரவியிருந்தது. தமிழ் நாட்டில் களப்பிரர் ஆட்சியின் போதும் சமணம் பரவியிருந்தது என்பதை அறிகிறோம்.தொண்டை மண்டலத்தில் பல்லவ வேந்தன் முதலாம் நரசிம்ம வர்மன் (கி.பி. 630-660) களப்பிரரை வென்றான். அதன் பிறகு இரண்டாம் மகேந்திரவர்மன் ஆட்சிக்காலம் வரையிலும் சமணம் வளர்ச்சி நிலையை அடைந்திருந்தது.

பல்லவர்களுக்கு அடுத்து சோழர்கள் தொண்டை மண்டலத்தில் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்திய போதும் சமண சமயம் வளர்ந்திருந்தது. ஆனாலும் கி.பி.7 - ஆம் நூற்றாண்டுக்குப்

பிறகு சமண சமயத்தின் வளர்ச்சி குன்றத் தொடங்கியது என்பதையும் அறிகிறோம்.

தொண்டை மண்டலத்தில் சமணப் பள்ளிகளில் நிலையை மூன்று வகையாகக் காணமுடிகிறது.

1. கி.மு. வுக்கு முன்பு முதல் கி.பி. 1 - ஆம் நூற்றாண்டு வரை
2. கி.பி. 1 - முதல் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு வரை
3. கி.பி 7 - முதல் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு வரை

கி.மு. முதல் கி.பி. 1 - ஆம் நூற்றாண்டு வரையில்

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் மகாவீரர் கலிங்க நாட்டிற்கு வந்து சமண சமயத்தின் அறநெறிகளை வலியுறுத்தினார். அதன் பின்னர் சமண சமயம் ஆந்திர மாநிலத்தில் அப்போதைய தொண்டை மண்டலத்து நெல்லூர் வரை பரவியிருந்தது.

கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் மௌரியப் பேரரசின் மாமன்னன் சந்திரகுப்த மௌரியன் சமண சமயத்தைத் தழுவினான் . அவன் சமணத் துறவியாகி கர்நாடக மாநிலம், சரவண பெலகோலா (வெள்ளைக்குளம்) சென்று அங்கு சமண மடத் துறவியாக இருந்து சமண சமயத்தை வளர்க்கும் முயற்சியை மேற் கொண்டார். அம்மடத்து சமணத் துறவிகள் வழியாகத் தொண்டை மண்டலத்தில் கி.மு.3 - ஆம் நூற்றாண்டில் சமண சமயம் பரவியது.

மகாவீரரின் அறநெறிகளைப் பின்பற்றிய சமணத் துறவிகளில் பதினொரு பேர் அவரின் மாணாக்கராகக் கருதப்படுகின்றனர். அவர்களில் பத்திரபாகு முனிவர் முக்கியமானவர். இவரே சந்திர குப்த மௌரியனுக்கு குருவாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரபாகு முனிவரின் மாணாக்கர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து குறிப்பாகத் தொண்டை மண்டலத்துப் பகுதிகளில் சமண சமயத்தைப் பரவிடச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.அவர்கள் தங்கிய குகைத் தளங்களே பாழி எனவும், பள்ளி எனவும் குறிப்பிடப்பட்டன.

தொடக்க நிலையில் சமணத் துறவிகள் தமிழ் நாட்டில் குறிப்பாகத் தொண்டை மண்டலத்திற்கு வருகை புரிந்து தங்கிய இடங்கள் குறித்து அறிய முடியவில்லை. ஆனாலும் சமணத் துறவிகள் தங்கிய இடங்களை அவ்விடத்தின் அமைப்பு, கல்வெட்டு, சிற்பச் சான்றுகளைக் கொண்டு பிரித்துக் காணலாம்.

1. கி.மு. வுக்கு முன்பு முதல் கி.பி.தொடக்கம் வரை
2. கி.பி. 1 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு வரை
3. கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு வரை

என நோக்கும் போது சமணப்பள்ளிகளின் வளர்ச்சியை உணர முடிகிறது.

கி.மு. வுக்கு முன்பு முதல் கி.பி.1 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் சமணத் துறவிகள் இருந்த இடம் குகை, அதிட்டானம், பள்ளி, பாழி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விடங்களிலுள்ள கல்வெட்டுகளின் செய்திகளைக் கொண்டு சமணத் துறவிகள் பள்ளிகளில் இருந்து செயல்பட்ட முறையை அறிகிறோம்.

குகை

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டம் கண்டகூர் மலைக்குகையில் அருவாளர் (சமணத்துறவிக்கு) க்கு அருவாஹின குலத்தைச் சேர்ந்தவர் பள்ளி அமைத்துக் கொடுத்துள்ளார். அப்பள்ளியை கி.மு. 3 - 2 ஆம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டுக் குகை என்று தெரிவிக்கிறது. இக்குகையை **நந்தசெட்டி மகன் சிறீவிரிசெட்டி** அளித்துள்ளான்.

அதிட்டானம்

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிவட்டம் தொண்டூர் குன்றுப் பகுதியில் கி.மு. 3 - ஆம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டு உள்ளது. இக்குகைப்பகுதியில் **செங்காயிபன்** எனும் துறவிக்கு **அறம்மோகி** (மோசி - துறவு) என்பார் பள்ளி அமைத்துக் கொடுத்துள்ளார். அப்போது பள்ளி அதிட்டானம் எனக் குறிக்கப்பட்டுள்ளதை அறிகிறோம்.

பள்ளி

பள்ளி எனும் சொல் தொண்டை மண்டலத்தில் விழுப்புரம் மாவட்டம் நெகனூர்ப்பட்டி கி.மு. 2 - 1 ஆம் நூற்றாண்டு கல்வெட்டின் மூலமாக முதன் முதலில் அறிகிறோம். அதன் பிறகு இச்சொல் பல பொருள்களை உணர்த்தி வழக்கத்தில் வந்துள்ளது. **ஒதண்ணி** என்பார் **செக்க உதிதாயி** எனும் சமணப்பெண் துறவிக்கு பள்ளி அமைத்துக் கொடுத்ததைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

பாழி

தொண்டை மண்டலத்தில் சமணப்பள்ளியைக் குறிக்கும் பாழி எனும் சொல் முதன் முதலாக ஜம்பைக் கல்வெட்டைக் கொண்டு அறிய முடிகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.மு. 3 - ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. **'சதிய புதோ அதியமான் நெடுமானஞ்சி ஈத்த பாழி'** என்பது கல்வெட்டு. சதிய (சத்திய) புத்திரனான அதியமான் நெடுமானஞ்சி என்பவன் பள்ளி (பாழி) அமைத்தான் என்பது பொருள். இவன் சங்க காலத் தமிழ் அரசனாகக் கருதப்படுகிறான். இங்கு சமணத்துறவிக்கான இடம் பாழி எனக் குறிக்கப்பட்டதை அறிகிறோம்.

கி.மு. 1 முதல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை சமணப் பள்ளிகள்

தமிழ்நாட்டு வரலாற்றில் கி.மு. 3 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை சங்க காலமாகக் கருதப்படுகிறது.

இக்காலத்து இலக்கியங்கள் கி.பி. க்கு முந்தைய கி. மு. காலத்திய வாழ்க்கை அனுபவங்கள், சிந்தனைகள், பண்பாட்டு நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன . அவ்விலக்கியங்கள் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. சமண சமயம் இல்லறத்தை வலியுறுத்தி ஒழுக்கத்தை முக்கிய நெறியாகக் கடைப்பிடிக்க வேண்டியதைத் துறவிகள் வற்புறுத்தினர். அத்துறவிகளுக்கு அரசர்களும் மக்களும் உதவி புரிந்தனர். துறவிகளும் சமண நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். இந்தக் காலக் கட்டத்தில் சமணத் துறவிகளுக்கான பள்ளிகள் பெருகின. அப்பள்ளிகள் வெளிப்படையான சான்றுகளாலும், மறைமுகமான சான்றுகளாலும் தெரியவருகின்றன.

மாமண்டூர் சமணக்குன்று (கி.பி. 3 - 4)

செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூர் குன்றுப் பகுதியில் சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

கணிமான்
தேனூர் தந்த கோன் குன்று
செய்தான் தச்சன் சிறு
. . . . . வன்

எனும் கல்வெட்டு வாசகம் சமணப்பள்ளியைக் குன்று எனத் தெரிவிக்கிறது. கணிமான் எனும் அரசன் தேனூர் எனும் ஊரை வென்றுள்ளான் . அதன் காரணமாக தச்சன் சிறு (சாள) வன் என்பான் சமணத் துறவிகளுக்கு தங்குவதற்காகக் குன்று அமைத்துக் கொடுத்துள்ளான்.

ஓணம்பாக்கம் தேவாரம் கி.பி. 3 - 4

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் ஓணம்பாக்கம் உள்ளது. இவ்வூர் மலையைக் கருப்பங்குன்று என்பர். இங்கு படுக்கைகள் உள்ளன. இங்குள்ள கல்வெட்டு,

ஸ்ரீ சதுத்வீம்
சதி ஸதாவ கவ
ஸுதேவ சித்தா
ந்த படாரர்
ஜெய்வித்த
தேவாரம்

என்று கூறுகிறது.இதனைக் கொண்டு இங்கு சமணப்பள்ளி இருந்தது என்பதையும், அப்பள்ளி தேவாரம் என அழைக்கப் பட்டது என்றும் தெரிகிறது.

சோழபாண்டிபுரம்

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்தில் சோழபாண்டிபுரம் உள்ளது. இங்கு ஆறு படுக்கைகள் உள்ளன.

வேலி கொங்கரையர் புத்தடி என்பார் சமணத் தீர்த்தங்கரர் மற்றும் பிற சிற்பங்களை செதுக்கியுள்ளார். மேலும் சித்தவடவன் என்பவன் பாணப்பாடி என்னும் ஊரைக் கொடையுளித்தான். இதனைக் **குரந்தி குணவீரபடாரரும்** அவர் மாணாக்கரும் மேற்பார்வையிட்டுள்ளனர் என்பதை கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு கல்வெட்டொன்றின் மூலம் அறிய முடிகிறது. இச்செய்தியால் இக்காலத்திற்கு முன்பு சமணப்பள்ளி இயங்கியது என்று உறுதியாகிறது.

நிசீதிகை

திருநாதர்குன்று கி.பி. 3 – 4 ஆம் நூற்றாண்டு

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம்,. சிறுகடம்பூர் ஊருக்கு வடமேற்கில் உள்ள குன்றினைத் திருநாதர்க்குன்று என்று அழைக்கின்றனர். இங்கு 24 தீர்த்தங்கரர் சிற்பங்களும், ஆதிநாதர் தனிச் சிற்பமும் உள்ளது. இம்மலையில் இரண்டு இடத்தில் கல்வெட்டு காணப்படுகின்றன . அதில் ஒன்று,

'ஐம்பத் தெ(ழு) ன
சனந் நோற்ற
சந்திர நந்தி ஆ
சிரிகர் நிசீதிகை'

எனவும், மற்றொன்று,

'முப்பத் நாளன சன ெ(ந) ாற்ற
இ (ளை) ய படாரர் நிசீதிகை'

எனவும் காணப்படுகிறது. இதன் மூலம் **சந்திரநந்தி** எனும் சமணத் துறவி 57 நாட்கள் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார் என்பதையும், அடுத்து 30 நாட்கள் இளைய படாரர் எனும் சமணத்துறவி உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார் என்பதையும் அறிகிறோம்.

பறையன்பட்டு கி.பி. 5 – 6 ஆம் நூற்றாண்டு

விழுப்புரம் மாவட்டம், செஞ்சிவட்டம், அவலூர் பேட்டைக்கு வடமேற்கே 10 கி.மீ. தொலைவில் பறையன் பட்டு என்னும் ஊர் உள்ளது. பறையன்பட்டு கல்வெட்டில் காணப்படும் **பாணாநாடு** எனும் நாடு தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியான **பாணாராட்டிரம்** என்பது.பாணாராட்டிரத்தின் ஒரு பகுதி திருப்பாதிரிப்புலியூர். இங்கு சமணச் சமயத்துக்கான தலைமை மடம் இருந்துள்ளது. இம்மடத்தின் தலைவர் தருமசேனர். சந்திரநந்தி எனும் சமணத் துறவியார் இம்மடத்துத் தலைவராக இருந்த போது **லோகவிபாகம்** எனும் நூல் மொழி பெயர்க்கப் பட்டது. எனவே அக்காலத்தில் இங்கு சமணத் துறவிகள் கூடி இருந்து அவர்களால் சமண நூல் இயற்றப்பட்டது என்பது தெரிகிறது.

சரவண பெலகோலா கல்வெட்டு நாற்பதில் '**இவர் (குந்த குந்தர்) சுருத கேவலி பத்திரபாகு மற்றும் ஆச்சார்யா பிரபா சந்திரர் ஆகியோருக்குப்பிறகு முதல் இடம் பெற்றுள்ளார்**' எனக் கூறப்பட்டுள்ளது. குந்த குந்தர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பதைத் '**திகம்பர வட்டாவளிகள்**' எனும் தொடர் தெரிவிக்கின்றது. இதன் மூலம் குந்த குந்தர் தென்பாடலிபுத்திரத்திலிருந்த சமண சங்கத்தின் தலைவராக இருந்தார் என்பதையும் அறிகிறோம். இவரே திருவண்ணாமலை வட்டம் நீலகிரி எனப்படும் பொன்னூர் மலைக்குச் சென்று அங்குத் தங்கி தவமியற்றினார் என்பதை '**ஜுவாலாமாலினி அம்மன் மந்த்ர லஷ்ண**' எனும் நூலின் மூலம் அறிகிறோம். இதில் இவர் குந்த குந்தர் **ஏலாச்சார்யா** எனக் குறிப்பிடப்படுகிறார்.

மேல்கூடலூர் திருமணிக்கோயில்

விழுப்புரம் மாவட்டம் ,செஞ்சி வட்டத்தில் மேல்கூடலூர் உள்ளது. இவ்வூர் மலையில் சுமார் 35 படுக்கைகள் மற்றும் தீர்த்தங்கரர் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் சமணப்பள்ளி இயங்கியிருந்தது என்று அறிய முடிகிறது. இதனைத் திருமணிக்கோயில் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

பெரும்பள்ளி - திருநறுங்கொண்டை

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் திருநறுங்கொண்டை உள்ளது. இங்குக் **கீழைப்பெரும்பள்ளி, மேலைப்பெரும்பள்ளி** என இரு கோயில்கள் உள்ளன. இம்மலையில் படுக்கைகள் உள்ள பகுதி **நாற்பத்தெண்ணாயிரம் பெரும்பள்ளி** எனக் கூறப்படுகிறது. சமணத் துறவிகள் இம்மலையில் **வீரசங்கம்** நிறுவி சமணக் கொள்கைகள் வளர்த்ததை இதன் மூலம் அறிய முடிகிறது.

பெண்பள்ளி - விளாம்பாக்கம்

வேலூர் மாவட்டம் ஆர்க்காடு வட்டத்தில் உள்ள திருப்பாண்மலையின் தொடர்ச்சியே விளாம்பாக்கம் மலை. இதனை சின்னத் திருப்பாண்மலை என்றும் கூறுவர். இங்கு **அஷ்டநேமி பட்டாரரின் மாணாக்கி பட்டினக்குரத்தி** என்பார் கிணறு வெட்டிக் கொடுத்ததை கி.பி. 945 - முதலாம் பராந்தகன் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டுச் செய்தியால் இங்கு பெண் சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர் என்பது விளங்குகிறது.

சீயமங்கலம் பள்ளி

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம் **சீயமங்கலம் ஊரில்** கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் கங்க நாட்டு அரசன் இரண்டாம் இராசமல்லன் ஆட்சியின் போது இங்கு இருந்த இரண்டு சமணப்பள்ளிகளை செம்மைப்படுத்தினான். இங்கு **வஜ்ரநந்தி யோகிந்திரர்** எனும் சமணத்துறவி இருந்துள்ளார். எனவே இங்கு சமணப்பள்ளி இருந்தது என்பது தெரிகிறது.

கீழ்அரசம்பட்டு - பாழி

வேலூர் மாவட்டத்தில் கீழ்அரசம்பட்டு உள்ளது. இவ்வூர் மலையில் பாழி இருந்ததையும், இங்கு **ஸ்ரீ மல்லன் துக்கிலி** எனும் சமணத் துறவி இருந்ததையும் மூன்றாம் நந்திவர்மன் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

பள்ளி - வழுதலங்குணம்

திருவண்ணாலை வட்டம், கீழ்பெண்ணாத்தூருக்கு வடக்கே உள்ளது இவ்வூர். இவ்வூரில் உள்ள குன்றில் 34 படுக்கைகளும், அருகதேவர் சிற்பமும் காணப்படுகிறது. படுக்கை அமைப்பைக் கொண்டு இங்கு சமணம் கி.பி. 6 - 7 இல் நிலை கொண்டிருந்தது என்பதை உணர முடிகிறது.

மொந்தாரையூரில் யிருக்கு(ம்) பள்ளி
கண்ட மருதுபிரகுறை தெவர் கல்
யிட்டு காக்க காரையிட்டு புதுகிநெந்

எனும் கி.பி. 12 -13 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு மூலம் இங்குள்ள அருகதேவர் சிற்பம் சிதைந்திருந்தது என்பதையும் அறிய முடிகிறது. மேலும் கி.பி. 6 - 7 ஆம் நூற்றாண்டில் சமணப் பள்ளிகள் இருந்தது என்பதற்கானச் சான்றுகளாகக் குகைத் தளத்தில் காணப்படும் படுக்கைகள் உதவுகின்றன.

ஊர்	வட்டம்	மாவட்டம்	காணப்படும் படுக்கைகள்	பிறசெய்திகள்
அவலூர் பேட்டை	செஞ்சி	விழுப்புரம்	5	
கஞ்சியூர்	செஞ்சி	விழுப்புரம்	3	
தளவானூர்	செஞ்சி	விழுப்புரம்	2	பல்லவர்காலக் குடைவரை உள்ளது.
ஊரணித் தாங்கல்	செஞ்சி	விழுப்புரம்	17	அருகில் பெருபுகை, நெகனூர்பட்டி, திருந்நெற் குன்றம் உள்ளன.
சிவநாதபுரம்	வேலூர்	வேலூர்	4	படுக்கைப்பகுதி பஞ்சனமடம்
நாராயணபுரம்		வேலூர்	7	-
திம்மண்ணசாரி குப்பம்		வேலூர்	6	-
இரத்தினகிரி		வேலூர்	3	-
அனந்தவை		வேலூர்	4	-
சேதராம்பட்டு		திருவண்ணாமலை	சிதைந்துள்ளன	-
வெள்ளையாம்பட்டு	விழுப்புரம்	விழுப்புரம்	3	-
வேலப்பாடி		வேலூர்	7	-

கி.பி. 7 - 13 ஆம் நூற்றாண்டு வரை

வேடல்

இவ்வூர் திருவண்ணாமலை வந்தவாசி வட்டத்தில் உள்ளது. இங்கு பெண்பள்ளி இருந்தது என்பதை அறிகிறோம். இதனை **விடால்பள்ளி** என்று நந்திவர்மன் (கி.பி. 781) கல்வெட்டுக் கூறுகிறது. இங்கு பெண் சமணத் துறவிகள் சுமார் 500 பேர் இருந்துள்ளனர். இங்கு படுக்கைகள் ஏதுமில்லை.

ஆர்மாமலை

வேலூர் மாவட்டத்தில் இவ்வூர் உள்ளது. இவ்வூர் மலைப்பகுதியில் குகை அமைப்புக் காணப்படுகிறது. இங்குள்ள ஓவியம், கட்டடப்பகுதியைக் கொண்டு சமணத் துறவிகள் தங்கியிருந்திருக்க வேண்டும், சமணப்பள்ளியும் இருந்திருக்க வேண்டும் என்பதும் விளங்குகிறது.

திருப்பான்மலை

வேலூர் மாவட்டத்தில் இவ்வூர் உள்ளது. இவ்வூர் மலையில் உள்ள குகைப்பகுதியில் நந்திவர்மன் (கி.பி.781) கல்வெட்டும், முதலாம் இராசராசன் (993) கல்வெட்டும் காணப்படுகின்றன. மேலும் தீர்த்தங்கரர், இயக்கியர், நாதநந்தி சிற்பங்கள் இங்கு சமணப்பள்ளிகள் இருந்ததை நினைவுறுத்தும் சான்றாக உள்ளன.*

வள்ளிமலை

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் வள்ளிமலை உள்ளது. இங்குள்ள குகைப்பகுதியில் இரு தொகுதிகளாக சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள் உள்ளன. இரண்டாம் இராசமல்லன் (கி.பி. 873 - 907) காலத்தின் கல்வெட்டைக் கொண்டு இங்கு இருந்த சமணப்பள்ளி **பஸ்தி** எனக் குறிக்கப்பட்டது என்பதை அறிகிறோம். இந்த பள்ளியில் **பாலசந்திரதேவர் என்பவரின் மாணாக்கர் ஆரியநந்தி என்பாரும், பவணந்தி பட்டாரரின் மாணாக்கர் தேவசேனர்** என்பாரும் சமண நெறிகளை ஆராய்ந்துள்ளனர்.

திருப்பருத்திக் குன்றம்

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஒரு பகுதி. இங்கு கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டில் சிம்மவர்மன் காலத்தில்(556) மகாவீரருக்குக் கோயில் இருந்ததாக அறிகிறோம். அக்கோயில் **மகிழம்பள்ளி** எனப்பட்டது. அப்பள்ளியில் **வஜ்ரநந்தி** எனும் குரவர் இருந்துள்ளார்.

தியாகதுர்க்கம்

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் இவ்வூர் உள்ளது. இங்கு கி.பி. 7 - 8 ஆம் நூற்றாண்டில் சமணத் துறவிகள் வாழ்ந்திருக்க வேண்டும். படுக்கைகள் இருந்த பகுதியை

கட்டடமாக ஆக்கி உள்ளனர். அருகர் (அ) மகாவீரர் சிற்பமும், தர்மதேவி சிலையும் உள்ளது.

கீழ் சாத்தமங்கலம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் கீழ்சாத்தமங்கலம் உள்ளது. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் (கி.பி. 745) **இளையார் பவணந்தி** என்பவரைக் குறித்து அறியமுடிகிறது. கம்பவர்மன் காலத்தில் சந்திரநாதர் கோயிலைக் காடகதியரையர் என்பாரின் மனைவி புதுப்பித்துள்ளார். முதலாம் இராசராசன் (கி.பி. 998) காலத்தில் சந்திரநாதர் கோயில் **ஸ்ரீ ஆர்ய தீர்த்தப்பள்ளி** என அழைக்கப்பட்டுள்ளது. **பலதேவப் பீமாரன்** எனும் துறவி இங்கு வாழ்ந்ததை அறிகிறோம்.

கரந்தை

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கரந்தை முன்பு **கரந்தை திருப்பறம்பூர்** எனப்பட்டது. வடப்பகுதி திருப்பறம்பூர், தென்பகுதி கரந்தை என வழங்கப்பட்டு வருகிறது. இங்கு குந்துநாதர் தீர்த்தங்கரருக்கு கோயில் உள்ளது. இக்கோயிலில் காணப்படும் (கி.பி. 846 - 869) கல்வெட்டால் மூன்றாம் நந்திவர்மன் காலத்திற்கு முன்பு கோயில் அமைக்கப்பட்டிருந்தது என்பதை உணரமுடிகிறது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் இக்கோயில் **வீரராசேந்திரப்பெரும்பள்ளி** எனப்பட்டது.

பெரமண்டூர்

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் பெரமண்டூர் உள்ளது. இங்கு ஆதிநாதர், சந்திரபிரபா தீர்த்ததங்கரருக்கான கோயில்கள் உள்ளன. மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 866) காலத்தில் ஆதிநாதர் கோயில் **பெரும்பள்ளி** எனக் குறிக்கப்பட்டது.

இவை தவிர1. செங்கல்பட்டு மாவட்டம் குன்னத்தூர் சமணக்கோயில் பெரியநாட்டுப் பெரும்பள்ளி எனவும், 2. காஞ்சிபுரம் மாவட்டம் சிறுபாக்கம் சமணக்கோயில் சிறுகரணப்பெரும்பள்ளி எனவும், 3. திருவண்ணாமலை மாவட்டம் திருமலைச் சமணக்கோயில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் பங்கள நாட்டு நடுவில் வகைமுகை நாட்டுப் பள்ளி எனவும், 4. வந்தவாசி வட்டம் சளுக்கிச் சமணக்கோயில் வீரசேகரப்பெரும்பள்ளி எனவும், 5. திருக்கோயிலூர் வட்டம் ஜம்பைக் கல்வெட்டைக் கொண்டு வாலையூர், நாட்டுப் பெரும்பள்ளி கண்டராதித்தப் பெரும்பள்ளி எனும் சமணக்கோயில்கள் இருந்தமையையும் அறிகிறோம்.

2. திருவண்ணாமலை மாவட்டத்தில் சில ஜினாலயங்களைப் பற்றிய சிறப்புச் செய்திகள்

ஆர். விஜயன், ஆரணி.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சமணம் என்ற தலைப்பில் கட்டுரைக்கான செய்திகளைத் தொகுத்த போது இம்மாவட்டத்தின் அனைத்து ஜினாலயங்களிலும் பல சுவையான செய்திகள் இருப்பதைக் காணமுடிந்தது. அவற்றில்,

நவக்கிரகங்கள் ஒரே திசையில் அமைந்த	-	சேவூர்
மாடியின் மீது அமைந்த ஜினாலயம்	-	வந்தவாசி
சுரங்கப்பாதை அமைந்த கோயில்	-	ஆரணி
குன்றின் மீது கட்டப்பட்ட ஆலயம்	-	பொன்னூர்
குகைகளும் ஓவியங்களும் நிறைந்தவை	-	திருமலை
சிற்பங்களின் சிறந்த தொகுப்புக்கு	-	கரந்தை
மேற்குதிசை வாயில் ஜினாலயம்	-	ஆரணிப்பாளையம்.

என்பன போன்ற செய்திகளை இத்தொகுப்பில் காண்போம்.

❖ வந்தவாசி தாலுக்கா தெள்ளாறு - தேசூர் சாலையில் அமைந்த அகரக்கொரக்கோட்டை ஜினாலயத்தில் மூலவர் ஸ்ரீபார்சுவநாதர் கற்சிலைக்குப் பதிலாக உலோகச் சிலையில் காட்சி தருகிறார். மாவட்டத்தில் எல்லா ஜினாலய மூலவரும் கற்சிலைகளில் காட்சி தருகின்றனர். இந்த ஆலய மூலவர் உலோகத் திருமேனியில் காட்சியளிப்பது சிறப்பான ஒன்றாகும்.

❖ திருமலைசமுத்திரம் என்றழைக்கப்படுவது ஆரணி நகரம் - கொசப்பாளையம் பகுதியாகும். இங்குள்ள ஸ்ரீ ஆதிநாதர் ஆலயத்தில் கருவறையின் வெளிப்புறம் ஒரு சுரங்கப்பாதை உள்ளது. அது சுமார் 125 அடி தொலைவில் உள்ள கோயிலுக்குச் சொந்தமான சத்திரம் வரை செல்கிறது. இப்பாதை தற்போது பயன்பாட்டில் இல்லை என்றாலும் மற்ற எந்த ஆலயத்தில் இல்லாத சிறப்பு இந்த ஆலயத்திற்கு அதன் சுரங்கப்பாதையால் அமைகிறது.

❖ ஆரணிக்கு மேற்கே சேவூரில் உள்ள ஜினாலயத்தில் ரிஷபநாதர் காட்சியளிக்கிறார். இக்கோயிலின் வடகிழக்கில் நவகிரகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முக்கியத்துவம் என்னவென்றால் ஒன்பது மூர்த்திகளும் ஒரே திசையை (கிழக்கு) பார்த்தபடி காட்சி தருகின்றனர். இது போல் மற்ற எந்த ஜினாலயத்திலும் காண முடியாததாகும்.

❖ தேசூர் - சேத்துபட்டு அருகே உள்ள இசாகுளத்தூர் ஸ்ரீ மகாவீரர் ஜினாலயத்தில் தருமதேவியின் சிற்பமானது சுமார் 4 அடி உயரமுள்ளது. இதனுடைய சிறப்பு அதில் தருமதேவி அம்மன் நின்றபடி காட்சி தருவதாகும். இந்த அமைப்பு தமிழகத்தில் வேறு எந்த கோயில்களிலும் இல்லை.

❖ கரந்தை என்ற மூலிகைச் செடி ஒரு கல்ப மூலிகை எனச் சித்த மருத்துவம் பாராட்டும். அச்செடிகள் நிறைந்து வளரும் ஊர் ஆதலால் இக்கிராமம் கரந்தை என வழங்கப்பட்டது. செய்யாறு நகரின் வடகிழக்கு, ஆற்காடு நகருக்கு மேற்குத் திசையில் இவ்வூர் அமைந்துள்ளது.

மேலும் தமிழக இலக்கியங்கள் கூறும் ஒரு செய்தியானது ஒரு நாட்டின் மேல் படையெடுக்க விரும்பும் மன்னன் எதிரி நாட்டின் பசுக் கூட்டத்தைக் கவர்ந்து வருவான் . இம்முயற்ச்சியை எதிர்த்து நிற்கும் மற்றோர் மன்னன் போருக்குத் தயாராக கரந்தை மலர்களைச் சூடி நிற்பான்.[1] இதுவே தமிழக மரபு என்கிறது. மேலும் மூலிகையாகவும், போரின் அடையாளமாகவும் விளங்கும் கரந்தை ஒரு கிராமத்தின் பெயரையும் தாங்கி நிற்கிறது.

திருவண்ணாமலை மாவட்ட ஜினாலயங்களுள் சிற்பங்களின் அரசியாய் இவ்வாலயம் விளங்குகிறது. தங்கவண்ணம் பூசிய சுண்ணக்கலவைத் திருமேனியில் கண்கவர் வண்ண ஓவியம் நிறைந்த கோபுர உட்புறங்களும் சிறப்பானவை.

குந்து நாதர் ஆலயத்தினருகில் உயரமான மாடம் ஒன்றில் மேற்கு திசை நோக்கி பார்சுவ நாதர் காட்சி தருகிறார். இதனால் இவர் மேற்றிசைப்பெருமான் என சிறப்பிக்கப்படுகிறார். கிழக்கு உட்புறச்சுவரில் சிறுமேடையில் அமைந்த அகளங்காச்சாரியாரின் சிற்பம் அழகும், வித்தியாசமான அமைப்பும் கொண்டதாகும்.

கரந்தையின் அருகே உள்ள திருப்பணமூர் சமண வரலாற்றின் வெற்றித்தளம் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

கரந்தைப் பகுதியில் முக்கியத்துவம் பெற்ற இன்னொரு ஊர் அழிபடை தாங்கி என்பதாகும். பௌத்த மன்னராயிருந்து பின் சமணராய் மாறிய ஹிமசீதள ராஜாவின் காலத்தில் இவ்வூர் அற வழிதாங்கி எனப்பட்டது. வீர சம்புவராயன் காலத்தில் அழிபடைதாங்கி என்று ஒரு போர் சம்பவத்தால் மாற்றப் பட்டதாம்[2]

❖ திறக்கோல் - இக்கிராமம் தேசூரின் வடகிழக்கே உள்ளது. ஜினாலயத்தை நோக்கி மலைப்பகுதியில் செல்லும் போது காணும் பெரிய உருண்டை வடிவப் பாறை ஒன்றின் நான்கு புறமும் செதுக்கப்பட்ட பல்வேறு தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் மிக அழகு மிக்கவை. அதற்கு மேற்கே உள்ள மலையின் உச்சியில் ஒரு மண்டபம் பாழடைந்து முற்றுப் பெறாமல் நிற்கிறது. பூர்விகக் காலத்தில் இவ்விடத்தில் ஜைனர் சங்கம் இருந்ததாக கர்னல் மெக்கன்சியின் குறிப்புகள் தெரியப்படுத்துகின்றன.[3] மேலும்,

துறகல் என்றால் **பாறை** என்று பொருளாகும். அதுவே **திறக்கோல்** என்று திரிந்துள்ளது.

❖ ஆரணிப்பாளையத்தில் உள்ள ரிஷபநாதர் ஜினாலயமானது ஆகமவிதிகளைக் கருத்தில் கொள்ளாமல் கட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. கோயிலின் வாயில் மேற்குத் திசை நோக்கியும், கருவறையின் வாயில் தெற்குத் திசை நோக்கியும் மற்ற கோயில் அமைப்புகளிலிருந்து வித்தியாசமாக அமைந்துள்ளது.

❖ வந்தவாசி நகரில் உள்ள மகாவீரர் ஜினாலயம் சற்று மாறுப்பட்ட அமைப்பாக மாடியின் மேல் அமைக்கப் பட்டுள்ளது. தரைத்தளத்தில் வர்த்தக நிறுவனங்களும், மேல் தளத்தில் அமைந்த ஆலயமும் வேறு எங்கும் காணமுடியாது.1987 - இல் நிறுவப்பட்ட இந்த ஜினாலயம் மேல் சித்தாமூர் மடாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டதாகும்.

❖ ஆரணி - ஆற்காடு சாலையில் அமைந்துள்ள பூண்டியில் பொன்னிநாதர் (ரிஷபர்) ஆலயம் படை வீட்டை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த வீரவீர சம்புவராயன், சமய நாதமுனி என்னும் ஜைனத் துறவிக்காகக் கட்டித் தந்ததாகும். இந்த கோயில் கட்ட கற்சிலைகளைப் படைவீட்டில் (படவேடு) செதுக்கி வண்டிகளில் ஏற்றி பூண்டிக்குக் கொண்டு வரும் போது ஒரு வண்டியின் அச்சு முறிந்து நின்றதால் அவ்வண்டியிலிருந்த சிற்பத்தை அங்கேயே இறக்கி வைத்து சென்று விட்டனராம். அந்த இடமே சந்தவாசல் வடகிழக்கில் உள்ள வேலூர்சேரி கிராமமாகும். அவ்விடத்தில் இன்றும் அந்த சமணச் சிற்பம் உள்ளது என்பது சுவையான செய்தியாகும்.

❖ வந்தவாசி அருகே சீயமங்கலம் பக்கத்தில் உள்ளது தென்னாத்தூர் கிராமமாகும். இதற்கு நாளிகாபுரம் என்ற பழம் பெயரும் உண்டு. மூலநாயகர் மகாவீரருக்ககாக கட்டப்பட்ட இந்த ஜினாலயத்தின் சிறப்பு என்னவென்றால் மூலவர் இருக்கும் கருவறைப்பகுதி - அரியம்பூண்டி கிராம எல்லைக்கு உட்பட்டதாகும். கோயிலின் முக மண்டபம் தென்னாத்தூர் எல்லைக்கு உட்பட்டதாகும் என்பது சிறப்பான செய்தியாகும்.

❖ வந்தவாசியின் தென்மேற்கில் சேத்துப்பட்டு சாலையின் உட்புறமாக அமைந்தது பொன்னூர் கிராமம். இங்கு சிறு குன்று மேல் அமைந்துள்ள மேடான பெரும் பாறைகளின் மீது கட்டப்பட்டுள்ளதே இவ்வூர் ஜினாலயத்தின் சிறப்பாகும். இதன் மூலவர் கனககிரி ஆழ்வார் என்று அழைக்கப்படுகிறார். இவ்வூரின் வடக்கே வந்தசாசி - சேத்துப்பட்டு சாலையில் அமைந்தது பொன்னூர் மலையாகும். இதற்கு நீலகிரி என்ற புகழும் உண்டு.

கர்நாடக மாநிலம் சிரவண பெலகோலாவிலிருந்து சமணத் துறவிகள் தமிழகத்திற்கு வந்த போது ஒரு பிரிவினர் மதுரைக்கும் அதற்கு பிற்பட்ட காலத்தில் இன்னொரு பிரிவினர் காஞ்சி,

வந்தவாசி பகுதிக்கும் வந்தடைந்தனர். இக்காலக்கட்டத்திற்குப் பிறகு பொன்னூர் மலையில் வந்து தங்கிய துறவி **ஹேளச் சாரியார் எனப்படும் குந்தகுந்தாச்சாரியார்** ஆவார்.

❖ திருவண்ணாமலையிலிருந்து செஞ்சி செல்லும் சாலையில் உள்ளது சோமாசிபாடி என்னும் கிராமம். **தமிழகத்தில் சாந்திநாதருக்காக அமைக்கப்பட்ட ஒரே ஜினாலயம் என்ற சிறப்பு இவ்வாலயம் பெறுகிறது**. இதனருகே உள்ள வழுதலங்குன்றில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுக்கள், சமணத் திருமேனிகள், கற்படுக்கைகள் சமண வரலாற்றின் அழியாச் சான்றுகளாகத் திகழ்கின்றன.


❖ திருவண்ணாமலை மாவட்ட **ஜைனர்களின் தலைநகரம் என்று புகழக்கூடிய சிறப்புப் பெற்றது திருமலை** ஆகும். சித்தன்னவாசலைப் போன்று நீண்ட பெரும் பாறைகளைக் கொண்டது திருமலை. இராஜராஜ சோழனின் சகோதரி குந்தவை அம்மையாரால் கட்டித் தரப்பட்ட திருமலை ஆலயம் **குந்தவை ஜினாலயம்** என்றே சிறப்புடன் அழைக்கப்படுகிறது.

குகைக் கோயில்கள், பாறைச்சிற்பங்கள், பழங்கால ஓவியங்கள், கல்வெட்டுகள், திருவடிகள் இவைகளோடு **தமிழகத்திலேயே மிக உயரமான 16.5 அடி கொண்ட பாறைச் சிற்பம் சிகாமணி நாதருக்காகச் செதுக்கப்பட்டது இங்கு உள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.**

ஊரின் வடக்கே அமைந்த மடாலயம் மகான் ஸ்ரீதவள கீர்த்தி பட்டாரக ஸ்வாமிஜி அவர்களால் பராமரிக்கப்பட்டு 1997 முதல் பல்வேறு அறப்பணிகளைச் செய்து வருவது ஒரு நிகழ்கால அற்புதமாகும். இவ்வாறு நாம் ஜினாலயங்களுக்குச் செல்லும் போது அந்த ஆலயங்களைப் பற்றியும், தீர்த்தங்கரர்களைப் பற்றியும் மட்டுமின்றி சமண சமயம் சார்ந்த பிற செய்திகளைப்பற்றியும் அறிந்துக் கொள்வது அவசியமாகும். அதன்வரலாறுகளைப் போற்றி பாதுகாப்பதும் நமது கடமையாகும்.

உதவிய நூல்கள்

1. Dr. மா. ராஜமாணிக்கனார், தமிழக ஆட்சி, பாரிநிலையம், சென்னை . பக் - 115.
2. Dr. S. சௌந்தர பாண்டியன், தமிழக் ஊர் வரலாறுகள், அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகம், சென்னை. பக் - 8
3. T. chandra sekaran, A Descriptive Catalogue of the Tamil Manuscripts, Govt. Press, Madras. P - 2799.



1. விழுப்புரம் மாவட்டத்தில் மறைந்த சமணப்பள்ளிகள்

த. ரமேஷ் , முண்டியம்பாக்கம்.

விழுப்புரம் மாவட்டத்தில் பல சமணக் கோயில்கள் கால மாறுபாட்டினாலும், இயற்கையின் சூழலுக்கு ஈடு கொடுக்க முடியாமையினாலும், சரிவர கண்காணிக்கப்படாமையாலும் அழிவுற்றிருக்கின்றன. இத்தகைய கோயில்கள் அழிவுற்ற போதிலும் அவற்றின் சுவடுகளாக இடிபாடுகளோ, சிற்பங்களோ, கல்வெட்டுக்களோ இன்னும் எஞ்சியிருப்பதைக் காணலாம். விழுப்புரம் மாவட்டத்தில் கோலியனூர், மடவிளாகம், தாதாபுரம், உலகாபுரம், திருப்பாலப்பந்தல், பனைப்பாடி, பொன்பரப்பி, பள்ளிச்சந்தல், ஆற்காடு, அருளவாடி, ஐம்பை, செண்டூர், வீரமடை, தேவியகரம், முடியனூர், முண்டியம்பாக்கம், திண்டிவனம், மரக்காணம், எலவனாசூர் கோட்டை போன்ற இடங்களில் சமணக் கோயில்கள் இருந்து அவை அழிந்திருக்கின்றன என்பது தெரிய வருகிறது.

கோலியனூர்

விழுப்புரத்திற்கு கிழக்கே 6 கி. மீ. தொலைவில் விழுப்புரத்திலிருந்து பாண்டி செல்லும் சாலையில் கோலியனூர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு வடக்கே **சைனாகோயில்** என்னும் இடிந்த சமணக் கோயில் உள்ளது. ஜெயின் கோயில் என்பதே சைனாகோயில் என்று மருவியுள்ளது. இக்கோயில் முழுவதுமாக இடிந்துள்ளது. இது கருவறை , அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டிருந்திருக்கிறது. இக்கோயிலின் கருவறை அரைவட்ட வடிவ அமைப்பிலுள்ளதால் கஜபிருஷ்டக் கோயில் அல்லது தூங்கானை மாடக்கோயில் வகையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இக்கோயிலின் முன்பு சிறுசிறு மண்டபங்கள் இருந்ததற்கான வரலாற்றுச் சுவடுகள் காணப்படுகின்றன.[1]

இக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு **ஸ்ரீ நயினார் தேவர் பெருமானார் ஸ்ரீகோயிலை இடையாறு என்னும் ஊரைச் சேர்ந்த திருமறுமார்பன் வணிகபுரந்தரன் கட்டினான்[2]** என்பதைக் கூறுகின்றது. ஆனால் குறிப்பாக எந்த ஆண்டில் கட்டப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டு மூலம் அறிய முடியவில்லை. மற்றொரு கல்வெட்டு கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நயினார் அருமொழி நாயகர் கோயில் வழிபாட்டிற்காக விஜயராசபுரத்திலுள்ள சில நிலங்களைக் கொடுத்ததைத்

தெரிவிக்கிறது.[3]கோலியநல்லூரில் (கோலியனூர்) பண்டைய காலத்தில் சமணர்களுக்கும், இந்துக்களுக்கும் கலகம் நடந்து சமணர் துன்பமடைந்தனர் என்றும் செஞ்சியை ஆட்சிபுரிந்த மாதங்கன் என்பவன் இக்கோயிலை இடித்ததாகவும் மெக்கன்சியின் சுவடித் தொகுப்புக் கூறுகிறது.

தற்போது இக்கோயிலில் சிற்பங்களோ, கல்வெட்டுக்களோ இல்லை. கி.பி. 1924 - இல் இங்கிருந்த ஒரு மண்டபத்தை இடித்து அதன் கற்களைக் கொண்டு வீடூர் சமணக் கோயிலில் ஒரு மண்டபம் கட்டி கோலியனூரில் இருந்த கல்வெட்டு மற்றும் சிற்பங்கள்ஆகியவற்றை வைத்துள்ளனர்.[5]

உலகாபுரம்

திண்டிவனம் வட்டத்திலுள்ளது உலகாபுரம். இவ்வூரில் சமணக் கோயில் ஒன்று இருந்து அழிந்திருக்கிறது. ஆனால் இதன் சுவடுகள் எவையும் தற்போது எஞ்சியிருக்கவில்லை. எனினும் இவ்வூரிலுள்ள பெருமாள் கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கும் இராஜமகேந்திர சோழனது (கி.பி. 1063) கல்வெட்டு பெருமாள் கோயிலின் நிலங்கள் விற்கப்பட்டதைப் பற்றிக் கூறுகையில் இந்தப் பத்திரத்தினை **உலகாபுரத்திலிருந்த சுந்தரசோழப் பெரும்பள்ளியைச் சார்ந்த சுமந்திரபாகு ஆச்சாரியார் எழுதியிருக்கிறார்** என்பதைத் தெரிவிக்கிறது.[5] இவற்றிலிருந்து உலகாபுரத்தில் **சுந்தரசோழப் பெரும்பள்ளி** என்ற சமணக் கோயில் இருந்ததையும் அதனை சுமந்திரபாகு ஆச்சாரியார் நிர்வகித்ததையும் அறிய முடிகிறது.

தாதாபுரம்

திண்டிவனம் வட்டத்தைச் சேர்ந்தது தாதாபுரம். இதன் பழைய பெயர் **இராசராசபுரம்**. இதுவே காலப்போக்கில் தாதாபுரம் என மருவி வழங்கலாயிற்று.இவ்வூர் பெருமாள் கோயிலின் வடக்கு மற்றும் மேற்குச் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்களின் மூலம் முதலாம் இராசராசசோழனது 21 - வது ஆட்சியாண்டில் (கி.பி. 1006) அவரது தமக்கையாகிய **பராந்தக குந்தவைப் பிராட்டியார் இவ்வூரில் குந்தவை ஜினாலயம் என்னும் சமணக் கோயிலையும், குந்தவை விண்ணகரம் என்னும் வைணவக் கோயிலையும் , இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் எனும் சிவன் கோயிலையும்** கட்டியிருக்கிறதார்.[6] மேலும் அவற்றிற்கு பொன், வெள்ளி, முத்து முதலியவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களையும், பாத்திரங்களையும் அளித்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. தற்போது இவ்வூரில் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் என்னும் சிவன் கோயிலும், குந்தவை விண்ணகரம் என்னும் வைணவக்கோயிலுமே உள்ளது. குந்தவை

ஜினாலயம் என்னும் சமணக் கோயில் எங்கிருந்தது ,எவ்வாறு அழிந்தது என்பது பற்றி அறிய முடியவில்லை.

மாடவிளாகம்

திண்டிவனத்திலிருந்து செஞ்சி செல்லும் சாலையை ஒட்டியுள்ள ரெட்டணை என்னும் ஊரை அடுத்துள்ளது மாடவிளாகம் என்னும் ஊராகும். இவ்வூரின் கற்பலகையில் பொறிக்கப்பட்டிருக்கும் விக்கிரம சோழனது (கி.பி. 1128) கல்வெட்டொன்று அருகன் கோயிலுக்கு இறையிலியாக சில நிலங்கள் கொடுத்ததையும் இவற்றிலிருந்து பெறப்பட்ட வருவாயைக் கொண்டு பூந்தோட்டம் மற்றும் அன்னசத்திரம் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்ததைக் கூறுகின்றது.[7]

திருப்பாலப்பந்தல்

திருக்கோயிலூருக்குத் தென்மேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் திருப்பாலப்பந்தல் உள்ளது. இவ்வூரில் சமணக் கோயில் ஒன்று இருந்திருக்கிறது. இவற்றிலிருந்து பல சிற்பங்களும், படிமங்களும் கர்நாடக மாநிலத்தில் தார்வாரிலுள்ள கன்னட ஆய்வுக் கழகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பார்சுவநாதர், பாகுபலி முதலிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.[8] ஆனால் இவ்வூரில் சமணக் கோயில் எங்கிருந்தது என்பது பற்றியும் எவ்வாறு அழிந்தது என்பதையும் அறிவதற்கில்லை. ஆனால் இவ்வூரில் சிவன் கோயிலுக்குப் பின்புறம் உள்ள குன்றின் மேல் இரு பாதங்கள் செதுக்கப் பட்டுள்ளன.

பள்ளிச்சந்தல்

திருக்கோயிலூருக்கு வடமேற்கே 28 கி.மீ. தொலைவில் பள்ளிச்சந்தல் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரின் சிறிய குன்றின் மேல் சிதைந்து போன நிலையில் **சென்னியம்மன் கோயில்** என்ற பெயரில் சமணக்கோயில் இருக்கிறது. பாகுபலியின் சிற்பமும் சிதைந்துக் காணப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டு விஜய நகர மன்னன் அச்சுத தேவராயரின் காலத்தில் கி.பி.1532 - இல் வெட்டப் பட்டிருக்கிறது. இது ஜம்பையிலிருந்த நாயனார் விஜய நாயகர் என்னும் கோயிலுக்குக் கொடை வழங்கியதைக் கூறுகிறது[9]. இவ்வூர் **பள்ளிச்சந்தம்** என்று இருந்து காலப்போக்கில் **பள்ளிச்சந்தல்** என்று மாறியிருக்க வேண்டும்.

ஜம்பை

திருக்கோயிலூருக்கு வடமேற்கே 26 கி.மீ. தொலைவில் ஜம்பை என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள முதலாம் பராந்தகனுடைய கல்வெட்டு **வாலையூர் நாட்டுப் பெரும்பள்ளி**

என்னும் சமணக் கோயிலுக்குரிய ஏரியைப் பராமரிக்கும் பொருட்டு நிலக்கொடை (ஏரிப்பட்டி) அளித்ததைக் கூறுகின்றது.[10] வாலையூர் என்பது ஜம்பையின் பழைய பெயராகும். இவ்வூரின் வயலில் உள்ள மூன்றாம் இராசராசசோழனின் கல்வெட்டு **கண்டராதித்த பெரும்பள்ளி** என்னும் சமணக் கோயிலையும் அதனை நிர்வகித்த நேமிநாதரின் ஆணைப்படி வீரராஜேந்திரபுரம் என அழைக்கப்பட்ட ஜம்பையின் ஒரு பகுதி அஞ்சினான் புகலிடமாக ஆக்கப்பட்டிருக்றது என்பதையும் கூறுகின்றனது.[11]

பள்ளிச்சந்தலிலுள்ள விஜய நகரக் கல்வெட்டு ஜம்பையிலுள்ள நாயனார் விஜயநாயகர் எனும் சமணக் கோயிலுக்கு ஜோடிவரி, சூலவரி போன்ற வரிகளை ஒதுக்கியதாகக் கூறுகின்றது.[12] இக்கல்வெட்டுக்களில் இருந்து **வாழையூர், வீராஜேந்தரபுரம்** போன்ற பெயர்களில் ஜம்பை வழங்கப்பட்டதையும் அங்கிருந்து சமணக் கோயில் வாலையூர் நாட்டுப் பெரும்பள்ளி என்றும் கண்டராதித்த பெரும்பள்ளி என்றும் வழங்கப்பட்டதை அறிகிறோம்.[13]

பனைப்பாடி

திருக்கோயிலூர் வட்டத்திலுள்ளது பனைப்பாடி என்னும் ஊராகும். இவ்வூரில் சமணக்கோயில் ஒன்று இருந்திருக்கிறது. இக்கோயில் கி.பி.14 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் **ஒட்ட நாட்டவரது** (கலிங்கம்) படையெடுப்பினால் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறது.[14] எனவே விஜய நகர அரசரான சாளுவ நரசிம்ம தேவர் மீண்டும் தவறாமல் வழிபாடுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ததை திருக்கோயிலூர், திருப்பாலப்பந்தல் , நெற்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள இந்துக்கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[15] இவ்வூருக்கு அண்மையிலுள்ள சோழவாண்டிபுரம் சமணப்பள்ளிக்கு இப்பனைப்பாடியை **சித்தவடவன்** என்னும் சேதியராய மன்னன் தானம் அளித்தது குறிப்பிடத்தக்கது.[16]

பொன்பரப்பி

திருக்கோயிலூர் வட்டத்திலுள்ளது பொன்பரப்பி. இவ்வூரில் சமணக் கோயில் இருந்திருக்கிறது. இதனை திருக்கோயிலூர் திருபாலப்பந்தல், நெற்குன்றம் போன்ற ஊர்களில் உள்ள விஜய நகர மன்னரான சாளுவ நரசிம்ம தேவர் கல்வெட்டு மூலம் அறியலாம்.[17]

செண்டூர்

விழுப்புரம் வட்டத்தில் அமைந்துள்ளது செண்டூர். இவ்வூரில் சமணக் கோயில் மிகவும் சிதைவுற்றது. எனவே இங்கிருந்த

தீர்த்தங்கரர் சிற்பத்தை எடுத்துக் கொண்டு வருகையில் அதனை **பாதிராப்புலியூரிலேயே** வைத்து விட்டனர். இச்சிற்பம் மிகவும் சிதைந்துள்ளது.[18]

வீரமடை

திருக்கோயிலூர் வட்டத்திலுள்ளது வீரமடை. இவ்வூரில் அருகன் கோயில் ஒன்று இருந்து அழிந்துப்பட்டது. தற்போது இதன் இடிபாடுகளை மட்டும் காண முடிகிறது. இங்கு இருந்த தீர்த்தங்கரர் சிற்பத்தை இவ்வூரிலுள்ள சமணர்கள் மலையில் வைத்து வழிபடுகின்றனர்.[19]

முடியனூர்

திருக்கோயிலூர் வட்டத்திலுள்ளது முடியனூர். இவ்வூருக்கு மேற்கே ஏரிக்கரையை ஒட்டி கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில் உள்ளது.இக்கோயிலில் சிற்பங்கள் ஏதும் இல்லை. கருவறை விமானம் ஏதுமின்றி தட்டையாக உள்ளது. கோயிலின் முன்பு மானஸ்தம்பம் உள்ளதால் இது சமணக்கோயிலாகத் தான் இருக்க வேண்டும். ஆனால் இவ்வூரினர் இதனைப் பெருமாள் கோயில் என்று அழைக்கின்றனர்.[20]

தேவியகரம்

திருக்கோயிலூருக்குத் தெற்கே 2 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது தேவியகரம் என்னும் ஊராகும். இவ்வூரில் சமணக்கோயில் இருந்து காலப் போக்கில் அழிந்திருக்கிறது. இவ்வூரிலிருந்து மகாவீரர் சிற்பம் சென்னை அருங் காட்சியகத் திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.[21] இவையன்றி இவ்வூரில் சிதைந்த இயக்கர், இயக்கி உருவங்களும் காணப்படுகின்றன.

முண்டியம்பாக்கம்

விழுப்புரத்திலிருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் 8 கி.மீ தொலைவில் முண்டியம்பாக்கம் அமைந்துள்ளது. இவ்வூரையொட்டியுள்ள கொசப்பாளையத் திற்கு மேற்கே ஐயனார் கோயில் பகுதியில் பூமியைத் தோண்டும் போது தீர்த்தங்கரர் பொறிக்கப்பட்ட எல்லைக்கல் கண்டெ டுக்கப்பட்டுள்ளன. இவை சமணக் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட நிலமாகிய பள்ளிச்சந்தத்தின் எல்லைக் கல்லாகும்.[22] எனவே இவ்வூரில் சமணக் கோயில் இருந்து அழிந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

திண்டிவனம்

இந்நகரின் கிடங்கில் பகுதியில் பண்டைக்காலத்தில் சமணக்கோயில் ஒன்று இருந்து அழிந்திருக்கிறது. இக்கோயிலில்

இருந்து கி.பி. 12 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த **ஆதிநாதர்** உலோகத் திருமேனியும்[23] கி.பி. 15 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த **பத்மபிரபா தீர்த்தங்கரர்** சிற்பமும் சென்னை அருங்காட்சியகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.[24]

எளவனாசூர் கோட்டை

உளுந்தூர் பேட்டை வட்டத்தில் உள்ளது எளவனாசூர் கோட்டை என்னும் ஊராகும். இவ்வூரின் மலையில் சிதைந்து போன ஒரு சமணக்கோயில் உள்ளது.[25]

தனிச்சிற்பங்கள்

ஆற்காடு

திருக்கோயிலூர் வட்டத்தில் விழுப்புரத்திலிருந்து திருக்கோயிலூர் செல்லும் சாலையில் 25 கி.மீ. தொலைவில் ஆயந்தூரிலிருந்து தெற்கே 6 கி.மீ. தொலைவில் ஆற்காடு அமைந்துள்ளது. இவ்வூரின் வடக்கேயுள்ள இடைச்சி கல்லுக்கு அருகாமையிலும், ஏரி வாய்க்காலுக்கும் பக்கத்திலும் உள்ள நிலத்தில் சிற்ப வேலைப்பாடு மிக்க மகாவீரர் சிற்பம் உள்ளது[26]. இச்சிற்பம் சோழர்காலச் சிற்பக்கலையின் சிறப்பை வெளிக் காட்டுவதாய் உள்ளது. இச்சிற்பம் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.[27]

சிற்பத்தைச் சுற்றிலும் செங்கற் கட்டட இடிபாடுகளின் எச்சங்களைக் காணமுடிகிறது. மேலும் இது மலையின் பாறைகளில் செதுக்கப்படாமல் தனியாக பலகைக்கல்லில் வைக்கப்பட்டுள்ளது. எனவே இது கட்டடக் கோயிலின் மூலவராக இருத்தல் வேண்டும் என்பது தெளிவு. ஆகவே இவ்வூரில் சோழர்காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட சமணக் கோயில் ஒன்று இருந்திருக்க வேண்டும்.

அருளவாடி

திருக்கோயிலூர் வட்டத்தில் ஆற்காடு என்னும் ஊரை அடுத்துள்ள ஊர் அருளவாடி. இவ்வூரின் பெயர் அருகக் கடவுளின் அடிப்படையில் அமைந்து (அருகன்வாடி) அருளவாடி என மருவியிருக்கலாம். இவ்வூருக்குக் கிழக்கே ஆற்றுக்கு வடகரையில் நிலத்தின் வரப்பில் ஒரு தீர்த்தங்கரர் சிற்பம் உள்ளது.[28] இத்தீர்த்தங்கரர் அமர்ந்த நிலையில் மூடிய கண்களுடன் அமைதியான முகத்தோற்றத்தைக் கொண்டுள்ளார். தலைக்கு பின்பு உள்ள பிரபை சடை போன்று வளைந்துச் செல்வதால் இவரை ஆதிநாதர் என்று கருதலாம். இச்சிற்பம் கி.பி. 12 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இத்தீர்த்தங்கரர் உள்ள பகுதியில் செங்கற் கட்டட இடிபாடுகள் உள்ளன. ஆகவே இங்கு சமணக் கோயில ஒன்று இருந்து அழிந்திருக்கிறது.

மரக்காணம்

திண்டிவனம் வட்டத்திலுள்ளது மரக்காணம். இவ்வூரில் இருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் மரப்பாலம் அருகே முஸ்லிம் ஒருவர் வீட்டுத் தோட்டத்தில் தீர்த்தங்கரர் சிற்பம் இருந்தது. ஆனால் தற்போது இதனை உப்புவேலூரைச் சேர்ந்த சமணப் பெருமக்கள் உப்புவேலூர் சமணக் கோயில் வளாகத்தில் கொண்டு வந்து வைத்துள்ளனர். இச்சிற்பம் 96 செ.மீ. உயரமும், 69 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. தீர்த்தங்கரர் பீடத்தில் மூன்று சிம்மங்கள் காட்டப்பட்டுள்ளன.

தோளுக்கு மேலாக இரு சாமரம் வீசுவோர் உள்ளனர். தலைக்கு மேலாக முக்குடையும், பிண்டிமரமும் உள்ளது. இவை கி.பி. 13 -14 ஆம் நூற்றாண்டு பிற்காலச் சோழர் கலையமைப்பைக் காட்டுகின்றது. இத்தீர்த்தங்கரர் சிற்பம் மரக்காணத்தில் கிடைத்ததால் அருகக் கடவுளுக்குத் தனியாக ஒன்று கோயில் இருந்திருக்கிறது என்பது தெளிவு. இது எக்காரணத்தினாலோ அழிந்திருக்கிறது என்பதை மட்டும் அறியமுடிகிறது.

உதவிய நூல்கள்

1. ஆய்வாளர் கள ஆய்வின் போது நேரில் கண்டறிந்தது, செப்டம்பர் 2002.
2. S.I.I.Vol IV - No.64
3. A.R.E. 111/1897/ SII/Vol/IV/ No.65
4. ஆய்வாளர் கள ஆய்வின் போது நேரில் கண்டறிந்தது, செப்டம்பர் 2002.
5. A.R.E. 141/1919
6. முத்து எத்திராசன் - மா. சந்திரமூர்த்தி, குந்தவையின் கலைக்கோயில்கள், சென்னை, 1992.
7. A.R.E. 392 / 1924 - 25
8. A.R.E. 1939 43 Appendix - D pp 203 - 204
9. A.R.E. 449 / 1937 - 38
10. A.R.E. 446 / 1937 -38
11. A.R.E. 448 / 1937 - 38 Ep/Rep 1937 38 p 89.
12. A.R.E. 449 / 1937 - 38
13. Ibid
14. A.R.E. 416 / 1937 - 38
15. Ibid
16. A.R.E. 252 / 1936 - 37
17. A.R.E. 416 / 1937 - 38

18. ஆய்வாளர் கள ஆய்வின் போது நேரில் கண்டறிந்தது, ஆகஸ்ட்டு 2002.
19. ஆய்வாளர் கள ஆய்வின் போது நேரில் கண்டறிந்தது, ஆகஸ்ட்டு 2002.
20. தகவல் கோ. விஜய வேணுகோபால், கல்வெட்டாய்வாளர், பிரெஞ்சு இந்திய பண்பாட்டு கலைக்கழகம் , புதுவை, அக்டோபர். 2002.
21. ஏ.ஏகாம்பரநாதன் , தொண்டை நாட்டு சமணக் கோயில்கள், பக் - 245.
22. தகவல் கோ. விஜய வேணுகோபால், கல்வெட்டாய்வாளர், பிரெஞ்சு இந்திய பண்பாட்டு கலைக்கழகம் , புதுவை, அக்டோபர். 2002.
23. மா. சந்திரமூர்த்தி - கி. சீதரன், இராசராசன் வரலாற்றுக் கூடம், ப. 27, தொல்லியல் துறை வெளியீடு, சென்னை,1985
24. ஏ.ஏகாம்பரநாதன் , தொண்டை நாட்டு சமணக் கோயில்கள், பக் - 173
25. மயிலை. சீனி .வெங்கடசாமி, சமணமும் தமிழும், பக் - 253.
26. ஆய்வாளர் மற்றும் சீ. வீரராகவன் கல்வெட்டாய்வாளர் விழுப்புரம் ஆகியோர் கண்டறிந்தனர். ஜூலை. 2002.
27. தகவல் கோ. விஜய வேணுகோபால், கல்வெட்டாய்வாளர், பிரெஞ்சு இந்திய பண்பாட்டு கலைக்கழகம் , புதுவை, செப்டம்பர். 2002
28. தகவல் கோ. விஜய வேணுகோபால், கல்வெட்டாய்வாளர், பிரெஞ்சு இந்திய பண்பாட்டு கலைக்கழகம் , புதுவை, செப்டம்பர். 2002.



4. திருவள்ளூர் மாவட்ட சமண சமயச் சின்னங்கள்

து.துளசிராமன், திருவள்ளூர்.

சங்ககாலம் முதலே சமண சமயம் தமிழகம் முழுவதும் பரவியிருந்தது என்பதற்கு பல இலக்கிய மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக சமணம் தொண்டை நாட்டில் மிகவும் சிறப்புற்றிருந்தது. தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக தற்போது விளங்கும் திருவள்ளூர் மாவட்டத்தில் சமண சமயச் சின்னங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

புழல் - ஆதிநாதர் கோயில்

புழல் என்னும் ஊர் அம்பத்தூர் வட்டத்தில் சென்னைக்கு வடக்கே சுமார் பதினைந்து கி.மீ. தொலைவில் செங்குன்றத்துக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்வூரில் சோழர் காலத்தில் கி.பி. 12, 13 -ஆம் நூற்றாண்டு வாக்கில் ரிஷபதேவருக்காக (ஆதிநாதர்) எடுக்கப்பட்ட சமணக் கோயில் ஒன்று இருந்துள்ளது. மிகவும் சிதைந்த நிலையில் இருந்த இக்கோயிலை சென்னையைச் சேர்ந்த சுவேதாம்பரப்பிரிவு சமணப் பெருமக்கள் வடஇந்திய கட்டடக் கலைப்பாணியில் முழுவதுமாக மாற்றி கட்டியிருக்கிறார்கள். முன்பு இக்கோயிலின் கருவறையில் இருந்த ஆதிநாதபெருமான் சிலை சிறிது சிதைவுற்றிருந்ததால் அதனை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக புதியதாக வடிவமைக்கப்பட்ட வேறு சிலை தற்போது அங்கு நிறுவப்பட்டுள்ளது.பழைய சிலை தற்போதும் அக்கோயில் வளாகத்திற்குள்ளேயே தனியாக வைக்கப்பட்டுள்ளது. தொண்டை நாட்டை ஆட்சி புரிந்த குறும்பர் இன குறுநில மன்னன் ஒருவன் சமணத்துறவி ஒருவரது அறிவுரையின்படி புழலின் ஆதிநாத பகவானுக்கு கோயில் எடுப்பித்தான் என்று மெக்கன்சி சுவடித்தொகுப்பு குறிப்பிடுகிறது.

சிறுவரம்பேடு - சமணக்கோயில்

பொன்னேரி வட்டத்தில் சென்னைக்கு வடக்கே சுமார் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிறுவரம்பேடு என்னும் ஊர் தொன்மைச்சிறப்பு மிக்க ஊராகும். இவ்வூருக்குச் சரவணம்பேடு, குசலபுரி, சிறுவை, சிறுவாபுரி என வேறு பெயர்களும் உண்டு. இவ்வூரின் வடபுறத்தில் மிகவும் சிதைந்த நிலையில் சமணக் கோயில் ஒன்றுள்ளது. தெற்கு நோக்கியுள்ள இக்கோயிலின் கருவறையில் இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவநாதரின் சிலை உள்ளது. ஆடையின்றி நின்ற நிலையில்

காணப்படும் பார்சுவநாதரின் தலைக்கு மேல் ஐந்துதலை அரவம் காட்டப்பட்டுள்ளது. அரவின் உடல் தீர்த்தங்கரருக்குப் பின்புறம் வளைந்தவாறு செதுக்கப்பட்டுள்ளது. பார்சுவநாதரின் வலப்புறம் பத்மநிதியும் இடப்புறம் சங்கநிதியும் சிறிய அளவில் வடிக்கப்பட்டுள்ளனர். பத்மநிதியின் தலைக்கு மேலே தாமரை மலரும் சங்கநிதியின் தலைக்கு மேலே சங்கும் பொறிச்சுப் பட்டுள்ளன. இச்சிலை சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

சோழர் காலத்தில் இக்கோயில் கருங்கற் கோயிலாக இருந்துள்ளது. காலப்போக்கில் மிகவும் சிதைந்து விட்ட இக்கோயிலை பிற்காலத்தில் முழுவதுமாக அகற்றி விட்டு அவ்விடத்தில் செங்கற் கோயிலைக் கட்டியுள்ளனர். இக்கோயில் கருவறையின் கூரையில் பழைய கோயிலின் பலகைக்கற்களை வைத்துக் கட்டியுள்ளனர். அப்பலகை கற்களில் மிகவும் சிதைந்த நிலையில் சில கல்வெட்டு வரிகள் காணப்படுகின்றன. இவற்றுள், **1. . . . . சபையோம். . . 2. . . . . விரிச்சிக** . . . . என்றும் சில சொற்களை மட்டுமே அறியமுடிகிறது. இவை கி.பி. 12, 13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயிலில் சமணத்துறவி ஒருவர் தங்கியிருந்து பூசைகள் செய்து வந்தார் என ஊர்பெரியவர்கள் கூறுகின்றனர். தற்போது இக்கோயில் பூசைகள் ஏதுமின்றி பாழடைந்த நிலையிலேயே உள்ளது.

சத்தியவேடு - சமணப்பள்ளி

தமிழ்நாடு - ஆந்திரா எல்லையில் உள்ள சத்தியவேடு என்னும் ஊருக்கு அருகில் திருமதங்கேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில் கல்வெட்டுகளால் இவ்வூர் 'திருமதங்கன்பள்ளி' என்றழைக்கப்படுகிறது. 'பள்ளி' என்று முடியும் பெயருடைய இடங்களுக்குச் சமண மதத் தொடர்பு இருந்துள்ளது. இதனை திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி போன்ற பெயர்களைக் கொண்டும் அறியலாம். எனவே திருமதங்கன் பள்ளியும் ஒரு காலத்தில் சமணப்பள்ளியாகவே விளங்கியிருத்தல் வேண்டும்.

மணவூர் - சமணச்சிற்பங்கள்

திருத்தணி வட்டத்தில் திருவாலங்காட்டிற்கு அருகில் மணவூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூர் பல்லவர் காலந்தொட்டு கல்வெட்டுகளில் 'மணவூர்கோட்டம்' என்று காட்டப்பட்டு உள்ளது. இவ்வூரின் சேக்கிழார் தெருவில் உள்ள பிள்ளையார் கோயிலின் முன்புறத்தின் இருபக்கங்களில் இரண்டு சமண தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் உள்ளன. முதல் தீர்த்தங்கரர் சிற்பம் தாமரை மலர் மீது அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. தலையின்மீது முக்குடையும், இருபுறமும் சாமரம் வீசும்

இயக்கர்களும் உள்ளனர். இது ஆதிநாதர் சிற்பமாகும். இரண்டாவது தீர்த்தங்கரர் சிற்பம் சிம்மங்கள் தாங்கும் பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ளது. இச்சிற்பத்தின் மேலும் முக்குடையும் பக்கங்களில் சாமரம் வீசும் இயக்கர்களும் காட்டப்பட்டுள்ளனர். இச்சிற்பம் மகாவீரர் உருவமாகும். இவ்விருச்சிற்பங்களும் சோழர் கலைப்பாணியைக் கொண்டு விளங்குகின்றன.

திருப்பந்தியூர் - சமணப்பள்ளி

திருவள்ளூர் வட்டத்திலுள்ள திருப்பந்தியூரின் பழையபெயர் திருப்பன்னியூராகும். இவ்வூரில் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் சமணக் கோயில் ஒன்று இருந்திருக்கிறது. காலப்போக்கில் சிதைந்து போன இக்கோயிலின் அடிச்சுவடுகள் ஏதும் தற்போது காணப்படவில்லை. எனினும் முன்பு இருந்த கோயிலின் அடித்தளத்தில் இடம் பெற்றிருந்த பராந்தகச்சோழனது கல்வெட்டுகளைக் கொண்ட சில பலகைக்கற்கள் இவ்வூரின் நடுத்தெருவில் நடப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளிலிருந்து தீவடிபட்டன் என்பவரின் மகன் வீமடிகள் என்னும் துறவி இவ்வூரிலிருந்த சமணப்பள்ளியை நிர்வகித்து வந்ததாகவும் இவர் சிறிது பொன்னை தானமாகக் கொடுத்து ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தியதாகவும் அதன் மூலம் ஊரவர் இவ்வூரின் குளத்தை பராமரித்ததாகவும் செய்திகள் வெளிப்படுகின்றன. இதே போன்று பன்றியூர் கீழ்க்கோட்டை என்னும் ஊரைச் சார்ந்த சாத்தன் கண்டன் படமழகன் என்னும் சமணரும் பொன்னைத் தானமாகக் கொடுத்த செய்தியும் இங்குள்ள மற்றொரு கல்வெட்டால் தெரிகிறது.

சுப்பாரெட்டிப்பாளையம் - மகாவீரர் சிலை

சுப்பாரெட்டிபாளையம் என்னும் சிற்றூர் பொன்னேரி வட்டத்தில் மீஞ்சூருக்குத் தெற்கே ஏழு கி.மீ. தொலைவில் உள்ளது.இவ்வூருக்கு மேற்குப் புறத்தில் வயலில் இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரரின் சிலை ஒன்று உள்ளது. இதனை இவ்வூர் மக்கள் ‘எண்ணெய்ச் சாமியார்’ என்று அழைக்கிறார்கள். அமர்ந்த நிலையில் காணப்படும் மகாவீரரின் சிலை சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

ஆலத்தூர் - சமணச்சிற்பம்

திருவள்ளூர் வட்டம் திருநின்றவூருக்கும் பாக்கத்திற்கும் அருகில் உள்ள ஆலத்தூர் ஏரியில் மண் எடுக்கும் போது ஒரு சமணச்சிற்பம் கிடைத்தது. இது சோழர்கால சிலையாகும். இருபத்திநான்காவது சமண தீர்த்தங்கரரான மகாவீரர் சிலையான இதன் முகப்பகுதி மட்டும் சிதைந்து பேயுள்ளது. மகாவீரர் 41 செ.மீ. நீளமும், 28 செ.மீ. அகலமும்,17 செ.மீ. உயரமும் கொண்ட

செவ்வக வடிவ பீடத்தின் மீது அமர்ந்துள்ளார். பீடத்தின் இருபுறமும் இரு சிம்மங்கள் அமர்ந்துள்ளன. நடுவில் மலர் அலங்காரம் உள்ளது. பீடத்தின் மீது மகாவீரர் இரு கால்களையும் மடக்கி அதன் மீது இரு கைகளையும் ஒன்றின் மீது ஒன்றை வைத்தவாறு தியான நிலையில் அமர்ந்துள்ளார். கலைப்பாணியைக் கொண்டு இச்சிலை கி.பி. 11 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். தற்போதுஇச்சிலை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.

பிற ஊர்கள்

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம் கவரைப்பேட்டைக்கு அருகிலுள்ள அருகத்துறை, திருவள்ளூர் வட்டத்தில் உள்ள அமணம்பாக்கம், பள்ளிப்பட்டு வட்டத்தில் உள்ள அத்திமணஞ்சேரி ஆகிய ஊர்கள் பழங்காலத்தில் சமணத் தொடர்புடைய ஊர்களாகத் திகழ்ந்துள்ளன. ஊத்துக்கோட்டை வட்டம் கச்சூரிலும், நம்பாக்கத்திலும் சமணக் கோயில்கள் இருந்து அழிந்துபட்டன எனக் கூறப்படுகிறது.

உதவிய நூல்கள்

1. மயிலை. சீனி. வேங்கடசாமி , சமணமும் தமிழும் , 1980
2. ஏ.ஏகாம்பரநாதன், சோழர் ஆட்சியில் சமண சமய வளர்ச்சி, 1998.
3. இரா.நாகசாமி, செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, 1978
4. ஆவணம் இதழ் , 15, 2004, பக் - 144,145.

5. சோழநாட்டில் சமண சமயம்

திரு. மா. சந்திரமூர்த்தி – திருமதி. ஆர். வசந்தகல்யாணி,
சென்னை.

தோற்றம்

இந்தியாவில் தோன்றிய மிகப் பழைய சமயங்களுள் சிறப்பாக வைத்து எண்ணப்படுவது சமண சமயம். கௌதமபுத்தருக்குச் சமகாலத்தவரான மகாவீரர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது இம்மதம் என்ற கருத்தும், மகாவீரருக்குச் சற்று முற்பட்ட காலத்தைச் சார்ந்த பார்சுவநாதர் காலத்தது என்ற கருத்தும் மறுக்கப்பட்டுத் திராவிடப் பண்பாடு முகிழ்த்த சிந்து சமவெளி நாகரிக காலத்திலேயே இதன்தோற்றம் காணப்படுகிறது என்ற கருத்து தக்க சான்றுகளுடன் தற்போது நிறுவப்பட்டு வருகிறது.[1] மிகப்பழைமையான சமயமான இச்சமணம் பத்ரபாகு முனிவரால் தென்னாடு புகுந்தது. திராவிடக் கூறுகள் அதிகம் உள்ளதாகக் கருதப்படும் இம்மதம் திராவிட நாட்டில் குறிப்பாகத் தமிழ்நட்டில் மிக்க செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. கர்நாடகத்தில் பத்ரபாகு தங்கி தென்னாட்டில் சமணத்தைப் பரப்பினார் என்று கூறப்பட்டாலும் பழைமைச் சான்றுகள் கிடைப்பது தமிழ்நாட்டில் தான். கி.மு. 4 - ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் இருந்து கொங்கு நாடு வழியாகத் தமிழ்நாட்டிற்கு வந்தது என்று கூறப்பட்டாலும் கர்நாடகத்தில் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகள் கி.பி. 6 - 7 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே உள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் கி.மு. 3 - ஆம் நூற்றாணடிலிருந்தே ஆதாரப் பூர்வமாகக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. இது சமண சமயம் தமிழகத்திற் புகுந்தமைக்கான சிறு முன்னுரை.

தமிழ்நாடும் சமணமும்

தமிழ்நாட்டில் சமணசமயத்தின் ஆரம்பம், வளர்ச்சி, தளர்ச்சி ஆகியவற்றை மனதில் கொண்டு இதன் நிலையை மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. கி.மு.3 - ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.6 - ஆம் நூற்றாண்டு வரை.

2.கி.பி. 6 - ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 10 - ஆம்நூற்றாண்டு வரை.

3. கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு தொடங்கி பிற்காலம் வரை.

தமிழகம் வந்த சமண சமயம் கொங்கு நாட்டில் ஆரம்பித்துத் திருச்சி, புதுக்கோட்டை, மதுரை வரை தொடர்ந்து நீண்டுள்ள மலைத் தொடர்களில் தங்கத் தலைப்பட்டது. இன்றும் சமணம்

தமிழ்நாட்டில் வடபகுதியிலுள்ள தொண்டை மண்டலத்திலும் பரவியிருக்கிறது.

ஆகக் கொங்கு மண்டலம், மதுரை மண்டலம், தொண்டை மண்டலம் என்று இவர்களின் ஆதிக்கம் பெரும்பான்மைத் தமிழகத்தைப் பிடித்துக் கொண்டது. ஒரு மண்டலத்தை அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை போலும். ஆம். தொண்டை மண்டலத்திற்குத் தெற்கிலும், பாண்டியநாட்டிற்கு வடக்கிலும் உள்ள சோழமண்டலத்தில் (திருச்சியைத் தவிர்த்து) மேற்கூறப் படும் காலகட்டந் தொடங்கி அதாவது கி.மு.3 - ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 6 - ஆம் நூற்றாண்டு வரை சமணம் இருந்ததற்கான எந்தவிதத் தடயங்களுமில்லை.

சோழமண்டலமும் சமணமும்

ஓயாத போர், கொள்ளை, மரணம், கட்டுப்பாடற்ற ஆண் - பெண் உறவு, மிதமிஞ்சிய மது, மாமிச ஊண் முதலியற்றின் இருப்பிடமான புராதனத் தமிழகம் சமணம் ,பௌத்தம் ஆகியன கொண்டு வந்த சாந்தம், சமாதானம், ஒழுக்கம், பெண் வெறுப்பு முதலிய பண்புகளைத் தொடக்கத்தில் இலகுவாகவும் விருப்புடனும் ஏற்றது.[2]

எனவே தமிழகத்தில் சமணம் புகுந்த சூழ்நிலை அதன் வளர்ச்சியை வெகுவிரைவில் அதிகரிக்கச் செய்தது. கி.மு.3 - ஆம்நூற்றாண்டு முதல் 6 - ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளை ஆண்ட பாண்டியர், பல்லவர், சேரர், கங்கர் ஆகிய அரச பரம்பரையினரும், வணிக வர்க்கத்தினரும் சிறப்பான வரவேற்பும், மதிப்பும், பொருளுதவியும் நல்கினர். இதனால் சமணர் செல்வாக்குப் பெற்றனர். இந்த நிலையில் ஆரம்ப காலச் சமண மதத்திற்குச் சோழநாட்டில் வரவேற்பு கிட்டவில்லையா என்ற கேள்வி எழுகிறது. சோழநாடு தவிர்த்து தமிழகத்தின் ஏனைய பகுதிகள் அனைத்திலும் சமண மதம் வந்து நிலைபெற்ற நிலையில் சோழநாட்டில் ஏன் காலூன்றவில்லை? இதற்குப் பொதுவாக சோழமண்டலம் சமணர் குடியேறத் தக்க வகையில் அமையவில்லை என்று ஒரு காரணம் கூறலாம்.

துறவறம், தவம் இவற்றையே குறிக்கோளாகவும், கொல்லாமையைக் கோட்பாடாகவும் கொண்டிருந்த சமண முனிவர் மக்களின்று தனித்து நின்ற ஆரவாரமற்ற மலைக் காடுகளையே தம் துறவு வாழ்க்கைக்கு ஏற்ற இடங்களாகத் தெரிந்தெடுத்துக் கொண்டதில் வியப்பேதுமில்லை. எனவே மலைகள் மிகுந்த பகுதிகளில் இவர்களின் முதல் குடியேற்றம் காணப்படுகிறது என்று கொள்ளலாம். இதற்கு எதிரிடையாகச் சோழமண்டலம் முழுவதும் சிறு குன்றும் தட்டுப்படாச் சமவெளி நிறைந்த பகுதி. எனவே ஆரம்ப கட்டச் சமணர் வாழ்வு இங்கு காணப்படவில்லை என்பதை முதற் காரணமாகக்

கொள்ளலாம். இரண்டாவதாகக் கொல்லாமையைத் தாரக மந்திரமாகக் கொண்டிருந்த சமணர் நிதிக்குப்பை நிறைந்த செல்வரை நாடினர். வணிகரும் இவர் சமயத்தை ஆதரித்தனர். ஏனெனில் பலம் வாய்ந்த அரசாட்சியில் பொருளீட்டி வாணிபம் செய்யும் வாய்ப்பு இருந்தது. அதே சமயத்தில் கொல்லாமையையும் கடைப்பிடிக்க முடிந்தது.[3] இவ்வணிகர் உள்நாட்டுப் பெருநகரங்களுடனும் வெளிநாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டு இருந்தனர். அதற்குத் தக்க இடங்களில் குடியேறியும் இருந்தனர். பெருவழிகள் நிரம்பிய நகரங்கள் கடற்கரைப் பட்டினங்கள் ஆகியவற்றில் இவர்கள் குடியேற்றம் காணப்பட்டது. எனவே இவர்களால் ஆதரிக்கப்பட்ட சமணரும் பௌத்தரும் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் வாழ்ந்தனர் என்றும் கொள்ளலாம். உழுதொழிலை ஆரம்ப காலச் சமணம் ஆதரிக்கவில்லை. உழவுத்தொழிலானது வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்றவற்றை விட கொலைத் தொழிலைச் சிறிதளவே செய்வதாயிருப்பினும் (அதாவது உழும் போது புழு, பூச்சிகளை கொல்வது போன்ற செயல்கள்) ஆரம்ப காலச் சமணம் இத்தகைய சிறு ஊறு விளைவிக்கும் செயலைக் கூட விரும்பாது உயர்நிலைக் கொள்கையைக் கொண்டிருந்தது. ஆக அவர்கள் வணிகத்தையே ஆதரிக்க வேண்டியிருந்தது.[4] இதனால் உழுதொழில் மிகுதியும் நிறைந்திருந்த சோழ மண்டலத்தின் மீது அவர் நாட்டம் செல்லவில்லை என்பதும் யதார்த்தமான கருத்தாம்.எனவே மதத்தின் ஆழ்ந்த அடிப்படைக் கொள்கைகள் காரணமாக சமண மதம் ஆரம்ப கட்டத்தில் சோழமண்டலத்தில் பரவ வழியில்லாமல் போயிற்று.

கி.பி. 6 - ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.10 - ஆம் நூற்றாண்டு வரை

அதுவரை நிலையாக ஓரிடத்தில் தங்காமை, வனவாசம் ஆகியவற்றை வலியுறுத்தி வந்த சமணர் ஓரிடத்தே நிலையாகத் தங்கியிருந்து மக்களுக்குத் தொண்டு செய்யும் முகத்தான் மதத்தை பரப்பும் உத்தியைக் கையாண்டனர்.அத்துடன் 6 -ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி 10 - ஆம் நூற்றாண்டு வரை உள்ள இந்த காலம் விந்திய மலைக்குத் தெற்கே உள்ள தென்னிந்தியாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலமாகப் போற்றப்படுகிறது. இக்காலம் முதல் கோயிற் கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் இவை தொடர்பான பல கவின் கலைகளும் மலரத் தொடங்கின.[5] சமணர்களின் கொள்கைக் கோட்பாடு மாற்றமும் கோயிற் கட்டடக்கலையின் தோற்றமும் பல உன்னத திருப்பங்களுக்குக் காரணமாயின. ஏற்கனவே உருவ வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து வந்த சமணர்க்கு இக்கோயிலமைப்பு முறையினால் மக்களின் நிலையான நல்லெண்ணத்தைப் பெறுவது எளிதாயிருந்தது. இந்த அருமையான சூழ்நிலையில் சமணமதம் சோழமண்ணில் தலை

தூக்கிற்று. இக்காலத்தில் இருந்த சமணக் கோயில்களின் எஞ்சிய பகுதிகளோ, சிற்பங்களோ நமக்குக் கிடைக்கவில்லை என்றாலும், சிலப்பதிகாரத்தின் வழிச் சமணர் சோழநாட்டின் பகுதிகளில் இருந்துள்ளனர் என்பதும், சிறப்பான விழா எடுத்துப் போற்றும் நிலையில் இருந்துள்ளனர் என்பதும் அறியப்படுகின்றது. கோவலனும் கண்ணகியும் புகார் நகரை விட்டு வெளியேறும் நிலையில் அவர்கள் புகார்நகரின் கண் உள்ள அனைத்துக் கோட்டங்களையும் வணங்கி வழிபட்டுச் செல்கின்றனர். அவற்றுள் ஒன்று சமணர் சிலாதலம் சென்று தொழுதது.

"புலவு ஊண் துறந்து பொய்யா விரதத்து
அவலநீத்து அறிந்து அடங்கிய கொள்கை
மெய்வகை உணர்த்த விழுமியோர் குழீஇய
ஐவகை நின்ற அருகத் தானத்துச்
சந்தி ஐந்தும் தம்முடன் கூடி
வந்து தலை மயங்கிய வான் பெருமன்றத்துப்
பொலம் பூம்பிண்டி நலங்கிளர் கொழு நிழல்
நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினும்
சாரணர் வருஉம் தகுதி உண்டாம் என
உலகநோன்பிகள்ஒழுங்குடன் இட்ட
இலகொளிச் சிலாதலம் தொழுது"

சென்றதாகச் சிலம்பு கூறுகின்றது.[6]

கோயில் நிர்மாணம், தெய்வங்களுக்குச் செய்யும் தொண்டு போன்றவற்றைப் புனிதமான செயல்களாக வலியுறுத்திய சமய மறுமலர்ச்சிக் காலத்தில் போடப்பட்ட வித்தானது எல்லா சமயத்தவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கடவுட் கொள்கை உடையோர், கடவுள் மறுப்புக் கொள்கையோர் ஆகிய இருபான்மையினருமே கோயிலமைப்பு முறையில் சமயத்தைப் பரப்பினர். ஆறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி புதிய சகாப் தத்தைத் தோற்றுவித்தது என்றே கூறவேண்டும்.

அதாவது குடைவரை மற்றும் கற்றளி அமைப்பு புத்தமதம் தவிர்த்த பிராமண - சமண சமயங்களுக்கு ஒரு புதிய சமுதாயச் சூழலை உருவாக்கித் தந்தது.[7] இந்த காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சமயங்கள் போட்டி போட்டுக் கொண்டு தம் மதத்தை நிலை நிறுத்தும் சூழ்நிலையில் சமணம் பல இடங்களில் நிலைக்கத் தலைப்பட்டிருத்தலையும் அதனை சம்பந்தர், அப்பர் வெறுத்துப் பாடுதலையும் காண்கிறோம். செந்தலை,கூகூர், மருத்துவக்குடி, தேவங்குடி, பழையாறை, திருவாரூர் ஆகிய ஊர்களில் சமணப்பள்ளிகளும் கோயில்களும் இருந்துள்ளன. திருநாகேஸ்வரம் கோயில் கல்வெட்டொன்று முதலாம் ஆதித்தன் காலத்தது. இக்கல்வெட்டில் 'மிலாடுடையார் பள்ளி' எனப்படும்

சமணக் கோயில் திருச்சுற்றாலை, கோபுரம் ஆகியவற்றைப் பழுது பார்க்கத் திரைமூர் நாட்டுக் குமாரமார்த்தாண்டபுரத்தைச் சேர்ந்த பெருநகரத்தார் (வணிகர் குழு) தானமளித்தது குறிக்கப் பட்டுள்ளது.8 ஆனால் இக்கல்வெட்டைத் தவிர இப்பெருங் கோயில் இருந்தமைக்கான தடயங்கள் இன்று காணப்படவில்லை. அதுபோன்றே திருப்புகலூரில் சமணர் வாழ்ந்திருந்தனர் என்பதையும் அங்கு ஒரு சமணக் கோயில் இருந்து பிற்காலத்தே சைவக்கோயிலாக வடிவாக்கப்பட்டிருக்க வேண்டும். சம்பந்தர் திருப்புகலூர் அக்னீசுவரர் கோயிலிலுள்ள வர்த்தமானேஸ்வரர், வர்த்தமானேஸ்வரி பற்றி தனியே பாடல்கள் பாடியுள்ளார். வர்த்தமானர் என்பது சமணத் தீர்த்தங்கரர் மகாவீரர் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே சமணக் கோயில் அங்கு இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

சமய மறுமலர்ச்சிக் காலத்திற்கு முன் கட்டப்பட்ட சமணக் கோயில்கள் பலவும் சைவக் கோயில்களாக மாற்றப்படல், புதிய சமணக் கோயில்கள் எழுதல் ஆகிய இரண்டு நிலைகளையுமே இக்காலக்கட்டத்தில் காண்கிறோம்.

கி.பி. 10 - நூற்றாண்டு தொடங்கி சமணத்தின் நிலை

தொடர்ந்து மற்ற பகுதிகளில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளுக் கேற்பச் சோழநாட்டிலும் சமணரின் வளர்ச்சியும் தளர்ச்சியும் இருந்தது. கி.பி. 8 - ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு மிகச் செல்வாகுடன் இருந்த நிலையில் சிறிது தொய்வு ஏற்படுகிறது. காரணம் சமணரை ஆதரித்த வணிகரின் சூழ்நிலை எனலாம். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உடனடியாக விற்றுவிடக் கூடியனவாகவும் பொன்னைக் கொண்டு வரக் கூடியனவுமான சரக்குகளையே வணிக வர்க்கத்தினர் ஊக்கப்படுத்தியமையாற் சிறுகைத் தொழிலும் விவசாயமும் வளர்ச்சியடைய முடியாத நிலையை அடைந்தன.[9] இந்தச் சமுதாயத்தின் பின்னணியில் வணிக வர்க்கத்தினருக்கு எதிராக வேளாளர் சாதியினராகிய நிலவுடைமை வர்க்கத்தினர் தொடுத்த பொருளாதாரப் போரானது தத்துவ வடிவில் சமணத்திற்கும் சைவத்திற்கும் இடையே ஏற்பட்ட போராக மாறியது. எனவே சீரான வளர்ச்சி கண்ட சமணம் சைவத்தோடு நிலை நிற்கவேண்டியதாயிற்று என்றாலும் மக்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்டது சமணம். அவ்வளவு எளிதில் அழியவில்லை. காலப்போக்கில் மன்னர் மற்றும் பொதுமக்களின் ஆதரவு ஓரளவு தொடர்ந்து நிலையாகவே இருந்துள்ளது என்பது அவ்வக்காலக் கல்வெட்டுகளால் அறியக் கிடைக்கின்றது.

கி.பி.9, 10 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பரகேசரி கல்வெட்டொன்று செந்தலை சுந்தரேசுவரர் கோயிலில் உள்ளது. ஆரம்பவீரன் என்பவன் பள்ளியுடைய கனகசேனபடாரருக்காக

தானம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு பிறிதோர் இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டு கோயிற் கோபுரத்தில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இன்னும் இக்கோயிற் கோபுரம் முழுமையுமே சமணர் கோயிலைச் சார்ந்தது என்பது பலரும் அறியாத செய்தியாம்.[10]

கூகூர் கல்வெட்டொன்று முதற் குலோத்துங்கன் காலத்தில் அவன்பெயரில் கட்டப்பட்ட குலோத்துங்க சோழப் பெரும் பள்ளிக்கு நிலம் தானமாக அளித்ததைக் கூறுகின்றது.[11]

மருத்துவக்குடி ஐராவதீஸ்வரர் கோயில் மண்டபத்திலுள்ள மூன்றாம் குலோத்துங்கனின் 10 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஜனநாதபுரம் என்னும் ஊரிலுள்ள சேதிகுல மாணிக்கப் பெரும்பள்ளி, கங்கருள சுந்தரப் பெரும்பள்ளி என்னும் இரண்டு சமணக் கோயில்களைக் குறிக்கின்றன.[12]

குடவாசல் கோனேரீஸ்வரர் கோயிலில் உள்ள துண்டு கல்வெட்டுகளால் இங்கு அக்காலத்தில் சமணக் கோயில் ஒன்று இருந்ததை அறியலாம்.புஷ்பசேனபடாரர்,பள்ளிச்சந்தம், பள்ளி வாரியப் பிடாரர் போன்ற சொற்றொடர்கள் இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.மேலும் பல ஊர்க்கல்வெட்டுகளிலும் "பள்ளிச்சந்த" நிலங்களும் குறிக்கப் பட்டிருக்கின்றன.

மேற்கூறிய பல ஊர்களிலும் சமணக் கோயில்கள் இருந்துள்ளமை அறியப்பட்டாலும் அவை கட்டப்பட்ட சில காலங்களுக்குள்ளாகவே இருந்தஇடம் தெரியாமல் போயிற்று. காரணத்தை நாம் சேக்கிழாரின் பெரிய புராணத்தின் வழி அறியலாம்.பெரியபுராணத்தில் தண்டியடிகள் புராணங்கூறும் போது அவர் திருவாரூரின் கண் இருந்த அமணர் பாழிகளை அழித்து செங்கண்விடையார் திருக்கோயிலுக்குத் தீர்த்தக்குளம் அமைத்ததையும், அப்பர் பற்றிக் கூறுமிடத்து மகேந்திரவர்மன் பாடலிபுத்திரத்தில் இருந்த சமணப்பாழியை அழித்து "குணதரீஸ்வரம்" என்ற சைவக்கோயிலைக்கட்டினான் என்றும் வரலாறு கூறிச் செல்கிறது. ஆகவே நீண்ட நெடிய மதில்களையும் கோபுரங்களையும் கொண்டிருந்த சமணக் கோயில்கள் பலவும் இல்லாமற் போனமைக்குக் காரணம் கூற வேண்டியதில்லை.

மேற்கூறிய சில சான்றுகளால் கி.பி. 13,14 - ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து சமண சமயம் சோழநாட்டில் இருந்து வந்துள்ளமை புலனாகிறது. அதன் பின்னர் இன்னும் பல ஊர்களிலும் சமணம் இருந்துள்ளமையை பிற்காலத்தே மெக்கன்சி என்பவரால் தொகுக்கப்பட்ட ஓலைச்சுவடிகள் வாயிலாக அறிகின்றோம். சோழநாட்டிலுள்ள சமணப்பதிகளைக் குறிக்கும் போது பதினாறு ஊர்கள் சுட்டப்படுகின்றன. தஞ்சாவூர், மன்னார்கோயில், தீபங்குடி, வேதாரண்யம், அனிமதிக்கொடி, திருவாரூர், கீழப்படுகை, தோப்புத்துறை, திருவையாறு,

தொழுவனாம்குடி, கும்பகோணம், கும்பசமுத்திரம், சிறுக்கும்பூர், ஆமூர், நாகப்பட்டினம், உரத்த நாடு ஆகியன.

இவற்றுள்தீபங்குடி கலிங்கத்துப்பரணி பாடிய ஜெயங் கொண்டார் பிறந்த ஊராகக் கூறுவர். இவர் சமணர் என்றும் சிலர் கூறுவர். இத்தீபங்குடியில் சமணக்கோயில் ஒன்று உள்ளது. தவிர மன்னார்குடி, கருந்தட்டாங்குடி, கும்பகோணம் ஆகிய ஊர்களில் சமணக் கோயில்கள் இருப்பதோடு இன்றும் சமணர் வாழ்கின்றனர்.

தமிழகத்தின் முதற்கால கட்டச் சமண மதத்தின் வளர்ச்சியை நாம் சோழநாட்டில் காண இயலவில்லை. ஆனால் அதன் பின் சமணம் அங்கும் நிலை பெற்று ஒரு சீரான வளர்ச்சியினைக் கண்டது என்பதும் இன்று வரை பல ஊர்களில் தொடர்ந்து சமணக் கோயிலும் சமணரும் இருந்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

உதவிய நூல்கள்

1. Jaina Art and Architecture Vol.I.p 21
2. கலாநிதி க. கைலாசபதி
3. மேற்படி பக்கம் 21
4. Das Gupta - The Jaina Philosophy p 173
5. Jaina Art and Architecture Vol.I.p 84
6. சிலப்பதிகாரம் நாடுகாண் கதை, வரி 15 - 25
7. Jaina Art and Architecture Vol.I.p 186
8. S.I.I. Vol. XIII. No.13
9. கைலாசபதி மேற்படி நூல் பக் - 99
10. கட்டுரை ஆசிரியரால் பார்த்து அறியப்பட்டது.
11. ARE 288 of 1917
12. ARE 392 of 1907.

6. கொங்கு நாட்டில் சமணம்

முனைவர். அர. சம்பகலட்சுமி, சென்னை.

தமிழ்நாட்டில் சமணம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பரவியிருந்தது. கி.மு. 3 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7, 8 - ஆம் நூற்றாண்டு வரை மிக்க செல்வாக்குடனும் பெருமையுடனும் திகழ்ந்தது. பின்னால் சைவ - வைணவப் பெரியார்களும், தத்துவ மேதைகளும் தோன்றி சமண - பௌத்த மதங்களின் பெருமை குறையக் காரணமாக இருந்தனர். இருப்பினும் சமணமதத்தின் புகழ் முழுவதும் குன்றாமல் பல இடங்களில் கோயில்களும், மடங்களும் தொடர்ந்து கி.பி. 16, 17 - ஆம் நூற்றாண்டுகள் வரை செயல்பட்டு வந்தன என்பதற்கு போதிய சான்றுகள் கல்வெட்டுகளின் மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டிற்கு சமணம் மைசூர் மாநிலத்தின் வழயாக வந்திருக்க வேண்டும். கி.மு. 4 - ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அதாவது மௌரிய அரசன் சந்திரகுப்தன் காலத்திலேயே சமணத்துறவிகள் வடநாட்டிலிருந்து மைசூர் மாநிலத்திலுள்ள சிரவணபெலகோலா என்ற இடத்திற்கு வந்தனர் என்பதற்கும், அங்கிருந்து மேலும் தெற்கு நோக்கித் தமிழ்நாட்டை அடைந்தனர் என்பதற்கும் பல சான்றுகள்உள்ளன. ஆனால் மைசூர் மாநிலத்தில் சமணர் பற்றியக் கல்வெட்டுச் செய்திகள் கி.பி.6, 7 - ஆம் நூற்றாண்டில் தான் கிடைக்கின்றன. தமிழ்நாட்டிலோ சமணர் பற்றிய செய்திகள் கி.மு.3 - ஆம் நூற்றாண்டிலிருந்து பிராமி வரிவடிவம் கொண்ட தமிழி என அழைக்கப்படும் எழுத்தில் உள்ள கல்வெட்டுகளிலிருந்தே கிடைக்கின்றன.

மைசூர் மாநிலத்திலிருந்து சமணர் கொங்கு நாட்டின் வழியாக தமிழ்நாட்டிற்கு வந்திருக்க வேண்டும். கொங்கு நாடு மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு முக்கிய பாதையாக அமைந்தது. சமணத் துறவிகள் கொங்கு நாட்டின் மலைகளில் முதன்முதலில் தங்கள் தவத்திற்கு ஏற்ற குகைகளை அமைத்துக் கொண்டனர். கல்லிலே படுக்கைகளைச் செதுக்கி அமைதியான சூழ்நிலையில் தங்கள் வாசங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இதற்குச் சான்றாக புகழியூர்,அறச்சலூர், ஐயர்மலை முதலிய இடங்களில் உள்ள தமிழிக் கல்வெட்டுகளைக் கூறலாம்.

கொங்கு நாட்டிலிருந்து இச்மணத் துறவிகளில் சிலர் தெற்கு நோக்கி பாண்டிய நாட்டிற்கும், கிழக்கு நோக்கி தொண்டை நாட்டிற்கும் சென்று அங்குள்ள மலைகளிலும், குன்றுகளிலும் தங்களுக்கு இடம் தேடிக் கொண்டனர். பாண்டிய நாட்டில்

கி.மு.3 - ஆம் நூற்றாண்டிலிருந்தும், தொண்டை நாட்டில் கி.மு.3 - ஆம் நூற்றாண்டிலிருந்தும் கல்வெட்டுகள் சமணர் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றன.

சமண சமயம் பரவியதற்கு ஒரு பாதையாக மட்டும் கொங்கு நாடு இடம் பெறவில்லை. கொங்கு நாட்டிலேயே சமணம் ஓரளவு சிறப்புற்று விளங்கியது. புகழியூர், அறச்சலூர் என்ற அறச்சாலையூர், சுக்காலியூர், ஐயர்மலை, சங்கரமலை போன்ற இடங்களிலும் சமணத்துறவிகள் தங்கி தவம் புரிந்து வந்தனர். அவ்விடங்களிலுள்ள சிராவக தர்மத்தை மேற்கொண்ட இல்லறவாசிகள் சமணத்துறவியர்களுக்கும் சமண சமய மேம்பாட்டிற்கும் உதவி புரிந்து வந்தனர். புகழூரிலிருக்கும் ஆர்நாட்டார்மலையில் உள்ள 'தமிழி' கல்வெட்டில் யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்ற சமண முனிவருக்கு சங்ககாலச் சேர அரச வழியில் வந்த ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருக்கடுக்கோன் மகன் இளங்கடுங்கோ என்பவன் ஒரு இடத்தை அமைத்துக் கொடுத்தான் என்ற செய்தி காணப்படுகிறது. இக்கல்வெட்டு சங்க காலத்து சேர மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதாலும், சமண மதத்தில் அவர்கள் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக் காட்டுவதாலும் மிகச் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது. இங்குள்ள மற்றும் பல தமிழி கல்வெட்டுகள் வணிகன் வேணி ஆதன் என்பானையும், கொற்றன், கீரன் முதலிய சிராவகர் களையும் குறிப்பிடுகின்றன.

அறச்சாலையிலுள்ள தமிழி கல்வெட்டு தேவன் சாத்தன் என்ற மணிவண்ணக்கன், ஏழுதானம் செய்வித்தான் என்று கூறுகிறது. கி.பி.2,3 - நூற்றாண்டுகளைச் சேர்ந்த இக்கல்வெட்டு களுக்குப் பிறகு கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் சமணர் பற்றிய கல்வெட்டுகள் கிடையாது.

தமிழி கல்வெட்டுகளுக்குப் பின் சமண சமயத்தைப் பற்றிய செய்திகளில் அடுத்த இடம் வகிப்பவை 9, 10 - ஆம் நூற்றாண் டுகளைச் சேர்ந்த தமிழ்மொழியில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் ஆகும். இவை கொங்கு நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஐவர் மலையில் காணப்படுகின்றன. அதே நூற்றாண்டுகளில் தர்மபுரி பகுதியில் சமஸ்கிருத, கன்னட மொழிகளில் நொளம்ப அரசர்கள் காலத்தில் பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுகள் கிடைக்கின்றன. கி.பி.10, 12 - ஆம் நூற்றாண் டுகளில் கொங்கு சோழர் காலத்தைச் சேர்ந்த பல கல்வெட்டுகள் திங்களூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன.அதே காலத்தில் கங்கஅரசர் கல்வெட்டுகளும் விஜயமங்கலத்திலும், சோழர், விஜயநகரர் அரசர் காலத்து கல்வெட்டுகள் விஜயமங்கலம் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. ஆகவே சமணத்

தலங்கள் சேலம், கோயம்பத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் அமைந்திருந்தன. அவற்றுக்கெல்லாம் நடு நாயகமாக விஜய மங்கலம் விளங்கியது.

மேற்கூறிய கல்வெட்டுச் செய்திகளிலிருந்து கொங்கு நாட்டில் சமண சமயத்தின் வரலாற்றைத் தொகுத்துக் கொடுப்பது எளிதல்ல. இருப்பினும் எந்தெந்த இடங்களில் எந்தெந்த அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள இம்மதத்திற்குப் பெரும் ஊக்கத்தை அளித்தனர் என்பதைத் தெளிவாகக் கூறலாம்.

இச்சமணத் தலங்களைப் பற்றி விவரிக்கும் முன்னர் கொங்கு நாட்டுடன் சம்பந்தப்பட்ட இரு அரசகுலங்களைப்பற்றி நாம் அறிந்ததைக் கூறுவது இன்றியமையாததாகும். ரட்டர்கள் என்ற ராஷ்டிரகூட குலத்தினர் கி.பி. 250 முதல் கி.பி.405 வரை இங்கு ஆட்சி செலுத்தினர் என்று சரித்திரப் பேராசிரியர் டாக்டர் ஆரோக்யசாமி அவர்கள் கருதுகிறார். அவர்கள் சமணமதத்தைப் பின்பற்றினர் என்பது அவரது கூற்று. ரட்டர்களில் ஏழாவதும் கடைசி மன்னனுமான திருவிக்கிரமன் என்பவன் சமணமதத்தைக் கைவிட்டு சைவமதத்தைத் தழுவினான் என்றும் அவர் கூறியுள்ளார். இதன்காரணமாக கங்க வம்சத்தவர் தங்கள் ஆட்சியை ஸ்தாபித்து சமண மதத்தின் பெருமையை நிலைநாட்டினர் என்றும் அவர் எடுத்துரைத்தார். கங்க வம்சத்தினரின் ஆட்சியை நிறுவ சிம்மநந்தி என்ற ஒரு சமணப் பெரியார் முக்கிய காரணமாக இருந்தார் என்பது பல வரலாற்று மூலங்களிலிருந்து நாம் அறியும் ஒரு முக்கிய செய்தியாகும்.

ரட்ட அரசர்களைப் பற்றி டாக்டர் ஆரோக்யசாமி அவர்கள் கூறுவதெல்லாம் 'கொங்குதேச ராஜாக்கள்' என்ற வரலாற்று நூலின் அடிப்படையிலே தான் அமைந்துள்ளது. வேறு எவ்வித சான்றுகளும் கிடையாது. ரட்ட அரசர்கள் யார், எங்கிருந்து வந்தனர், அவர்கள் காலம் யாது, கி.பி.250 முதல் கி.பி. 405 வரையா என்பதற்கு சரித்திர பூர்வமான ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

சிம்மநந்தி ஆசிரியர் என்ற சமணப்பெரியார் பேரூர் (கங்கபேரூர்) என்ற இடத்தில் இரு கங்க இளவரசர்களைச் சந்தித்தார் என்றும் அவர்களில் ஒருவனான மாதவகொங்குணி வர்மன் என்பவனைக் கொண்டு கங்கப்பேரரசை நிறுவினார் என்றும் பல செப்பேடுகளும் வரலாற்று நூல்களும் கூறுகின்றன. இவ்வரசர்களுக்கு சமண சமணத்தின் பெருமையை எடுத்துக் கூறி அவர்களை சமண சமயத்தை நிலை நாட்டுமாறு பணித்தார் என்றும் கூறப்படுகிறது. கங்கஅரசு நிறுவப்பட்டதே கங்கர்களுக்கும் சமண சமயத்திற்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தியது போலாகும்.

கங்கஅரசர்கள் ஆண்ட இடங்கள் பெரும்பாலும் மைசூர் மாநிலத்திலுள்ளவை. அவையெல்லாம் சேர்ந்தது கங்கபாடி என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு ஆகும். மேலும் கொங்கு நாட்டின் சில பகுதிகளையும் கங்கர்கள் கைப்பற்றி கி.பி. 5 - ஆம் நூற்றாண்டிலிருந்து 11 - ஆம் நூற்றாண்டு வரை ஆண்டு வந்தனர்.இக்காலத்தில் சமணசமயம் கொங்கு நாட்டில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தது. மற்றும் கொங்கு சோழர்கள், சோழப்பேரரசர்கள், பாண்டியர்கள், விஜயநகர அரசர்கள் காலத்தில் சமணம் பல இடங்களில் சிறப்புற்று இருந்ததை அந்தந்த அரசர்கள் காலத்துக் கல்வெட்டுகளிலிருந்து அறியலாம்.

கொங்கு நாட்டு சமணத் தலங்கள்

விஜயமங்கலம் (கோயம்புத்தூர் மாவட்டம்)

கொங்கு நாட்டுச் சமணத் தலங்களில் மிகப் பெரியது விஜயமங்கலம். பஸ்திபுரம் என அழைக்கப்படும் விஜயமங்கலத்தின் ஒரு பகுதியில் சந்திரபிரபர் என்ற சமணத் தீர்த்தங்கரர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் தற்போது அம்மணீஸ்வரர் கோயில் அல்லது அமணேஸ்வரர் கோயில் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. நிர்வாண நிலையை மேற்கொண்ட சமணமதத்தின் தெய்வ உருவங்கள் அம்மணமாகவே அமைக்கப்படுவதால் பின்னால் அவை அமணேஸ்வரசுவாமி என்று அழைக்கப்படலாயின.

இச்சந்திரபிரபர் கோயிலில் பல மண்டபங்கள் உள்ளன. ஆதிநாதர் அல்லது ரிஷபதேவர், அனந்தநாதர், மகாவீரர் போன்ற தீர்த்தங்கரர் உருவங்களையும், குஷ்மாண்டினி என்ற இயக்கியின் ஒரு சிறு ஆலயமும் இங்கு காணலாம். மேலும் ஆதிநாதரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் சிற்பங்களையும் இம்மண்டபங்களில் காணலாம். ஆதிநாதருக்காக தனியே ஒரு சிறுகோயில் முடிவுறாத நிலையில் சந்திரபிரபர் கோயிலின் பிரகாரத்தில் வட பகுதியில் உள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் மிகப் பழைமையானது கங்கஅரசரின் தளபதியும், சமணமதத்தில் பெரும் ஈடுபாடு உடையவனுமான சாமுண்டராயனின் தங்கை புளியப்பை என்பவளின் நிசிதிகையைக் குறிக்கும் . சாமுண்டராயன் 10 - வது நூற்றாண்டின் ஒரு தலை சிறந்த தளபதியாவான். சமணத்திற்கு அவன் ஆற்றிய பணிக்ளில் மிகுந்த பெருமை வாய்ந்தது சிரவணபெலகோலா எனுமிடத்தில் அவன் எழுப்பிய 57 அடி உயரமுள்ள கோமதீஸ்வர் சிலையாகும்.

சோழர் காலத்தில் இக்கோயில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்று பெயர் பெற்றிருந்தது. இரண்டாம் குலோத்துங்கனின்

காலத்தைச் சேர்ந்த கி.பி.1163 - ஆம் ஆண்டு கல்வெட்டொன்று இப்பெயரைக் குறிக்கிறது.மேலும் இக்கோயிலுக்கு நிவந்தமாக நிலம் வழங்கப்பட்ட செய்தியையும் தெரிவிக்கிறது. வீரசங்காதப் பெரும்பள்ளி என்பதை வீரசங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட கோயில் என்றும் கூறலாம். ஆனால் தாராபுரம் தாலுக்காவில் பிரமியம் என்ற இடத்திலுள்ள கல்வெட்டில் வீரசங்காத சுற்றிய தேவன் என்ற ஒரு அமைச்சனின் பெயர் காணப்படுகிறது. வீரசங்காத என்பது இவ்வமைச்சரின் பிருது என்றும் அவன்பல வீரர்களை வென்றவன் என்ற பொருள் கொண்டது என்றும் திரு.கே.வி. சுப்ரமணியஅய்யர் அவர்கள் கருதுகிறார்கள்.

மற்றும் பல சிதைந்து போன சோழர்காலக் கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களையும் ,விழாக் களையும் குறிக்கின்றன.

விஜயநகர மன்னன் ஹரிஹரராயர் காலத்தில் நிலமானியம் வழங்கப்பட்ட செய்தியை கி.பி. 1412 - ஆம் ஆண்டின் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.

கி.பி. 10 - ஆம் நூற்றாண்டிலிருந்து 15 - ஆம் நூற்றாண்டு வரை விஜயமங்கலத்து சமணத் திருக்கோயில் சிறப்புற்று விளங்கியது.சமண மதத்தின் மேன்மை குன்றிய பிறகு இக்கோயிலின் உயர்ந்த, குறுகிய கோபுரத்தை நெட்டை கோபுரம் என்றும், கோயில் கொண்ட தீர்த்தங்கரரை அமணேஸ்வரர் என்றும் அழைக்கலாயினர்.

திங்களூர் (கோயம்புத்தூர் மாவட்டம்)

திங்களூரில் உள்ள சமணக்கோயில் ஒன்பதாம் தீர்த்தங்கரரான புஷ்பதந்தர் என்பவருக்கு எழுப்பப்பட்டது. இக்கோயிலை சந்திரவசதி (பஸ்தி - கோயில்) என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன. கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு கொங்கு சோழர் காலத்து கல்வெட்டொன்று இக்கோயில் முகமண்டபம் கட்டிய செய்தியைக் கூறுகின்றது. இம்மண்டபத்தைக் கட்டியவர் விக்கிரமசோழர் என்றும், அவன் சிங்களாந்தகன் என்ற பிருதைக் கொண்டிருந்தான் என்றும் இக்கல்வெட்டிலிருந்து அறிகிறோம். கி.பி. 1045 - இல் இம்மண்டபம் கட்டப்பட்டதாகக் குறிக்கப்படுவதால் விக்கிரமசோழன் என்பவன் சோழப் பேரரசர்களான முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன் காலங்களில் கொங்கு நாட்டில் ஒரு சிற்றரசனாக இருந்திருக்க வேண்டும். மேலும் இவன் கோ நாட்டான் விக்கிரமசோழன் என்று குறிக்கப்படுவதால் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள குளத்தூர் தாலுக்காவாக தற்போது விளங்கும் முற்காலத்து கோ நாட்டைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும் என்பது புலனாகிறது. அங்கு வாழ்ந்த இருக்குவேளிர் குலத்தைச் சேர்ந்தவன் என்றும்,

முதலாம் ராஜராஜனின் 52 - ஆம் ஆட்சியாண்டில் கி.பி. 1006 - 7 இல் இவன் கொங்கு நாட்டின் சிற்றரசனாக முடிசூட்டப் பெற்றான் என்றும் கூற இடமிருக்கிறது.

தர்மபுரி

பண்டைய காலத்தில் தகடூர் என்று புகழ்பெற்ற தர்மபுரியில் 9 - 10 ஆம் நூற்றாண்டுகளில் சமணம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. நொளம்ப அரசன் மகேந்திரன் கலத்தில் இங்கு ஒரு சமணத்திருக்கோயிலை ஒரு வணிகரின் மக்கள் நிதியண்ணன் சண்டியண்ணன் என்பவர் கட்டினார். இக்கோயிலுக்கு அவர்கள் நிவந்தங்கள் அளித்ததையும் கி.பி. 892 - 3 ஆம் ஆண்டு கலவெட்டுகள் பதிவு செய்துள்ளன. முக்கியமாக மூலப்பள்ளி என்னும் கிராமத்தை இக்கோயிலுக்காக விஜயசேன சித்தாந்த படாரர் என்பரின் சீடர் கனகசேன சித்தாந்த படாரர் என்பவரிடம் ஒப்படைத்த செய்தியை அறியலாம். இக்கல்வெட்டுகள் தற்போதுள்ள மல்லிகார்ஜுனர் ஆலயத்தின் தூண்களிலே கண்டெடுக்கப்பட்டவை. இங்கு கட்டப்பெற்ற சமணக்கோயிலே பிற்காலத்தில் மல்லிகார்ஜுனர் ஆலயமாக மாறிவிட்டிருக்கலாம். மேலும் மல்லிகார்ஜுனர் என்ற பெயரே மல்லிநாதர் என்ற தீர்த்தங்கரரின் பெயரிலிருந்து வந்திருக்கலாம்.

தர்மபுரியிலுள்ள மாரியம்மன் கோயிலிலும் மகேந்திரனின் கல்வெட்டொன்று (கி.பி.898) ஒரு சமணக் கோயிலுக்கு அளிக்கப்ட்ட தானத்தைப்பற்றி குறிப்பிடுகிறது. அதில் பொன்னெற கொரவர் என்ற சமண முனிவர் குறிப்பிடப்படுகிறார்.

தர்மபுரிக்கு அருகே உள்ள ராமக்கா குளத்திற்குப் போகும் வழியிலும், அதமன் கோட்டையிலும் பல சமணச்சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதமன் கோட்டை மகேந்திர மங்கலம் என்றும் ஒரு காலத்திலி பெயர் பெற்றது. இப்பெயர் நொளம்ப மகேந்திரன் காலத்திலேயே வைக்கப் பட்டதாக இருக்கலாம்.

முடிகொண்டான்

கி.பி. 12 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருநது இங்கு நகரஜீனாலயம் என்று பெயர் கொண்ட ஒரு சமணக்கோயில் இருந்தது. இக்கோயிலைச்சேர்ந்த சிற்பங்களிலே ஒன்று கொள்ளேகால் தபால் நிலையத்திற்கு அருகே கண்டெடுக்கப் பட்டதாக கல்வெட்டுத்துறை அறிக்கை ஒன்று கூறுகிறது. மற்றும் மேட்டுப்புதூர் , அரசமலை, வெள்ளோடு, பூந்துறை, சனகை அல்லது சீனாபுரம் முதலிய இடங்களிலும் சமணச்சின்னங்கள் கிடைத்துள்ளன.

திருமூர்த்தி மலை

ஆனைமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இம்மலையில் ஒரு பெரியபாறை சமணச்சிற்பங்களோடு காணப்படுகிறது. இப்பாறையில் சமணத் தீர்த்தங்கரர் ஒருவரின் உருவமும், அதன் இருபக்கங்களிலும் காவல் தேவதைகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இப்பாறை மலையிலிருந்து உருண்டு விழுந்து விட்டதாகவும், ஆகவே இச்சிற்பம் படுத்த நிலையில் உள்ளது என்றும் கூறப்படுகிறது. இச்சிற்பத்துக்கு அருகே உள்ள ஒரு கல்வெட்டு எத்துலப்ப நாயக்கன் என்ற ஒரு சிற்றரசன் காலத்தில் (கி.பி.1793) ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. இவ்வொப்பந்தத்தின்படி அமணசமுத்திரத்தின் தலைவரிடமிருந்து அமணேஸ்வரருக்காக திருமண வரியாக நான்கு பொன் வசூலித்துக் கொடுப்பதற்கும் திருமண சமயங்களில் நிலஉரிமை மாற்றம் ஆகாமல் தடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப் பட்டதாக அறிகிறோம். அமணேஸ்வரர் என்பது இச்சிற்பத்தைக் குறிப்பதனாலும், அமணசமுத்திரம் என்ற பெயர் சமணர்கள் வாழ்ந்த இடத்தைக் குறிக்கும் என்பதாலும் இக்கல்வெட்டு இப்பகுதியில் சமணசமயத்தின் ஓங்கிய நிலையை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் எத்துலப்ப நாயக்கன் காலத்திலேயே மேற்கூறிய சமணச்சிற்பம் மும்மூர்த்திகளாகிய சிவன்,விஷ்ணு, பிரமன் ஆகியோராகக் கருதப்பட்டது என்றும் இம்மலையின் பெயரான திருமூர்த்தி மலை, திரிமூர்த்தி மலையாக மாறிவிட்டது என்றும் சொல்லலாம்.

அய்யம் பாளையம்

(ஐவர்மலை – தென்மேற்கு கொங்கில் உள்ள வைகாவி நாட்டை சேர்ந்தது.)

இங்கு பல இயற்கைக் குகைகளும், சமணச்சிற்பங்களும், கி.பி. 9, 10 - ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் உள்ளன. கல்வெட்டுகள் இம்மலையை திருஅயிரைமலை என்று குறிக்கின்றன. பாண்டிய மன்னன் வரகுணன் காலத்தைச் சேர்ந்த கி.பி. 870 - ஆம் ஆண்டு கல்வெட்டொன்று இங்குள்ள பார்சுவநாதர் சிற்பத்தையும் மற்றும் இயக்கிகளின் உருவங்களையும் குணவீரக் குரவடிகளின் சீடர் சாந்திவீரக்குரவர் என்பவர் புதுப்பித்ததாகக் கூறுகிறது. நேமிநாதம் என்ற நூலை இயற்றிய குணவீரபண்டிதர் என்பவரையே இக்கல்வெட்டும் குறிப்பதாக புலவர் இராசு அவர்கள் எண்ணுகிறார்கள்.

மற்றும் பல கல்வெட்டுகள் அஜ்ஜநந்தி எனும் பெரும் புகழ்பெற்ற முனிவரையும், இந்திரசேனர், மல்லிசேனப்பெரியார்,

பார்சுவ படாரர் என்ற குரவர்களையும், பெரும்பட்டியூர் பட்டினிக் குரத்தி, அவரது மாணாக்கி புவ்வணந்தி குரத்தி போன்ற குரத்தியர்களையும் குறிக்கின்றன. இவர்கள் 9,10 - ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சமணப் பெரியார்கள் ஆவர். முக்கியமாக அஜ்ஜநந்தி என்பவரை தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலும் உள்ள கல்வெட்டுகள் குறிக்கின்றன. எனவே,அவர் அக்காலத்தில் தமிழ்நாட்டு சமண முனிவர்களில் தலைசிறந்த இடம் வகித்தவராக இருந்திருக்க வேண்டும்.

கொங்கு நாடும் சமண நூல்களும்

கொங்கு நாட்டில் பல சமணப் பேரறிஞர்கள் தோன்றி இலக்கியத் தொண்டு புரிந்து, பல அருஞ்செல்வங்களைத் தமிழுக்குத் தந்திருக்கிறார்கள். அவர்களுள் முதலாவதாக கொங்கு வேளிர் என்ற பெருங்கதை ஆசிரியரைக் கூறலாம். இக்காவியம் கங்கஅரசன் துர்விநீதன் என்பவன் வடமொழியில் எழுதிய பிருகத்கதையைத் தழுவி எழுதப்பட்டது. துர்விநீதனின் பிருகத்கதைக்கு மூலமாக இருந்த காவியம் 'பைசாசி' மொழியில் குணாட்டியர் என்பவரால் எழுதப்பட்ட பிருகத்கதா என்ற நூல். பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் விஜயமங்கலத்தைச் சேர்ந்தவர்.

அடுத்தது சனகை எனும் சீனாபுரத்தைச் சேர்ந்த பவநந்தி என்ற முனிவராவார். அவர் புனைந்த இலக்கண நூலான நன்னூல் தமிழ்மொழிக்கே ஆதார நூலாக விளங்குகிறது. இவர் காலம் கி.பி. 12, 13 - ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். இவர் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கீழ் சிற்றரசனாக விளங்கிய அமராபரணன் சீயகங்கன் என்பவனால் ஆதரிக்கப்பட்டவர்.

சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்குநல்லார் சமண மதத்தைச் சார்ந்தவரென்று கொங்குமண்டல சதகத்தின் செய்யுள் ஒன்றைக் கொண்டு கூறப்படுகிறது. இவர் நிரம்பை என்ற விஜயமங்கலத்தின் அருகில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்.

கொங்கு மண்டல சதக ஆசிரியரான கார்மேக கவிஞர் என்பவரும் சமணமதத்தவர் என்றும் அவர் விஜயமங்கலத்தில் பிறந்தார் என்றும் கூறப்படுகிறது. ஆகவே கொங்கு நாட்டின் சிறப்பை கி.பி. 17 - ஆம் நூற்றாண்டில் (19 - ஆம் நூற்றாண்டு என்றும் சிலர் கருதுகின்றனர்.) பாடிய ஜினேந்திரன் என்ற கார்மேக கவிஞரும் சமண மதத்தைச் சேர்ந்தவர் என்பது சமண மதத்தினர் கொங்கு நாட்டிற்கு தேடித்தந்த புகழையும் பெருமையையும் நிலை நாட்டுகின்றனது.

உதவிய நூல்கள்

1. I.Mahadevan, Corpus of Tamil Brahmi Inscription, Seminar on Inscription, Ed.R.Nagaswamy,Madras, 1966.
2. M.Arokisawamy, The kongu Country, pp104 ff.
3. B.A. Salefore, Medieval Jainism with special Reference to Vijayavagarar,pp 8 - 13,
4. *இரா.நாகசாமி, நடன. காசிநாதன், கு. தாமோதரன், ச. ஹரிஹரன், கல்வெட்டியல், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1973.*
5. *மா. சந்திரமூர்த்தி, ஐயர்மலை தமிழிக் கல்வெட்டு, கொங்குத் திங்களிதழ், 1973.*
6. *கொடுமுடி சண்முகம், சுக்காலியூர் சமணர் படுக்கைகள், கொங்கு திங்களிதழ்,1973.*
7. *புலவர். செ. இராசு, அறச்சலூர் கல்வெட்டு, கொங்கு திங்களிதழ், 1973.*
8. *மா. சந்திரமூர்த்தி, சங்கரமலையும் - சமணர் படுக்கையும், முக்குடை, திங்களிதழ், 1973.*
9. *நடன. காசிநாதன், கல்லெழுத்துக்கலை, மணிவாசகர் பதிப்பகம், 1985.*
10. Epigraphia Inddica, Vol. XXX, pt.III,pp99 ff, "Seven Vatteluttu Inscription from the Kongu Country"
11. K.A. Nilakanta Sastry and T.N.Subramanian"Tingaeur Inscription of Konattan Vikrama Chola" Ep.Ind., Vol XXX Pt VI.
12. M.E.R. 1905, No.705.
13. Annual Report on South Indian Epigrapohy, 1905, No 597.



7. திருநறுங்கொன்றை - ஒரு புதிய பார்வை

கவிஞர் கூ. பிச்சைப்பிள்ளை, கூ. கள்ளக்குறிச்சி.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர் திருநறுங்கொன்றை. இவ்வூர் உளுந்தூர் பேட்டையிலிருந்து வடமேற்கில் 16 கி.மீ. தூரத்திலும், திருக்கோயிலூரிலிருந்து 21 கி.மீ. தூரத்திலும் உள்ளது. அப்பாண்டை நாதர் எனப் போற்றப்படும் பார்சுவநாதர் கோயிலும், சந்திரநாதர் கோயிலும் இணைந்து ஒரே வளாகத்தில் காட்சி தருகின்றன. மலையின் மேலே அமைந்துள்ள பார்சுவநாதர் கோயில் '**மேலைப்பள்ளி**' எனவும், சந்திரநாதர் கோயில் '**கீழைப்பள்ளி**'எனவும் அழைக்கப் படுகின்றன. திருஞான சம்பந்தர் இவ்வூருக்கு அருகிலுள்ள திருநெல்வெண்ணெயை ,

"நீக்கிய புனலணி நெல்வெணெய் மேவிய
சாக்கிய சமண் கொடுத்தீரே
சாக்கிய சமண் கொடுத் தீருமைச் சார்ந்து
பாக்கிய முடையவர் பண்பே"

என்று பாடிய போது திருநறுங்கொன்றையை நினைவில் கொண்டே பாடியிருக்கிறார் எனத் தெரிகிறது.எனவே திருநறுங் கொன்றை திருஞான சம்பந்தர் காலமாகிய 7 ஆம் நூற்றாண் டிலேயே செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்திருக்க வேண்டும் . இராசராச வளநாட்டில் இருந்த 22 நாடுகளில் கீழ்க்கொன்றை நாடும் ஒன்று. இதை ஜம்பைக் கல்வெட்டு(67/1906), **கீழ்க் கொன்றை நாட்டு முடியனூரிலிருக்கும்** .... என்று பேசுவதால் அந்நாடு திருநறுங்கொன்றையை முன்னிலைப்படுத்தி ஏற்பட்ட தாகலாம். இதனால் இவ்வூரின் பழமையும் பெருமையும் விளங்குகிறது.

இலக்கியங்களில் திருநறுங்கொன்றை

தமிழ் இலக்கியங்கள் பலவாறாக திருநறுங்கொன்றையைப் புகழ்ந்து பேசுகின்றன. ஞானசாகரர் இயற்றிய '**இடையாலக் குறவஞ்சி**'யும், மண்டல புருடர் இயற்றிய' **சூடாமணி நிகண்டும்**' ,அனந்த விசயரின் '**அப்பாண்டை நாதர் உலாவும்**',' **திருமேற்றிசை அந்தாதியும்**','**திருநறுங்கொன்றை தோத்திர மாலையும்**' இவ்வூரின் பெருமைகளைப் பேசுகின்றன.

வரலாற்றில் திருநறுங்கொன்றை

திருநறுங்கொன்றைக் கல்வெட்டுகளில்,

1. ராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடி நாட்டுத் திருநறுங் கொண்டை (SII- VOL - VII எண் - 1011)

2. ராஜராஜ வளநாட்டு குன்றத்தூர் நாட்டுத் திருநறுங்கொண்டை (SII- VOL - VII எண் - 1012)

3. முனைப்பாடி பள்ளிச் சந்தம் திருநறுங்கொண்டை (SII- VOL - VII எண் - 1015)

4. ராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடிக் குன்றத்தூர் நாட்டு திருநறுங்கொண்டை (310/1939 - 40)

5. நடுவில் மண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு குறுக்கைக் கூற்றத்து ஆதனூர் பற்றுத் திருநறுங்கொண்டை (303,304/ 1939 - 40) எனப் பலவாறாக வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் திருநறுங்கொன்றை

திருநறுங்கொன்றையில் முப்பத்தைந்து கல்வெட்டுக்கள் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. அவை இந்தியக் கல்வெட்டுக்கள் ஆண்டறிக்கை 1902 இல் 381 முதல் 385 - வரையிலும் ,1940 இல் 299 முதல் 320 வரையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுச் செய்திகளை முனைவர் ஏ.ஏகாம்பரநாதன் அவர்களும், முனைவர் சி. கே. சிவப்பிரகாசம் அவர்களும் வெளியிட்ட 'தமிழ்நாட்டு சமணக்கல்வெட்டுக்கள்' (jaina inscriptions of Tamilnadu) என்ற நூலில் வரிசை எண் 452 முதல் 490 வரை பட்டியலிட்டு விளக்கியுள்ளனர். மேலும் திரு.ஏ.ஏகாம்பரநாதன் அவர்கள் திருநறுங்கொன்றைக் கோயில்களைப் பார்வையிட்ட போது உலோகத் திருவுருவங்களின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள ஐந்து கல்வெட்டுகளையும் கண்டு பிடித்து தமது திரு நறுங்கொண்டை வரலாறு என்ற நூலில் (பக்கம்74-76) வெளியிட்டுள்ளார். இக்கோயிலில் உள்ள தருமதேவி சிலையில் சோழர் கால எழுத்து ஒன்று ஐந்து வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளதை அண்மையில் திரு.மா. சந்திரமூர்த்தி அவர்கள் கண்டு பிடித்தார். அதனை திரு. நடன. காசிநாதன் அவர்களும், மா. சந்திரமூர்த்தி அவர்களும் படித்து பத்திரிகை செய்தியில் வெளியிட்டுள்ளனர். தென்னிந்திய கல்வெட்டுக்கள் தொகுதி xvii வரிசை எண் 145 (ARE 125/1904) கடலூர் மாவட்ட தீர்த்தனகிரி சிவாங்குரீசுவரர் கோயில் கல்வெட்டில் உள்ள முதன்மைப் பெற்ற கோயில்கள் பட்டியலிலும் திருநறுங்கொன்றை இடம் பெற்றுள்ளது.

கல்வெட்டுச் செய்திகள்

திருநறுங்கொன்றைக் கோயிலுக்கு நிலங்கள் வழங்கியமை, விளக்கெரிக்க நிவந்தங்கள், பொன் வழங்கியமை மற்றும் பிற தானங்கள் வழங்கப்பட்ட செய்திகளையும் இவ்வூர் கல்வெட்டுகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. முதலாம் இராசராசனின் பத்தாவது ஆட்சியாண்டில் (கி.பி. 995) திருநறுங்கொன்றைக் கோயிலின் வழிபாட்டுச் செலவுகளுக்காக '**ஜயாறன் தேவியம்மனார்**' சில நிலங்களைத் தானமாக வழங்கினார்.[1] இவனுடைய பதினேழாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1002) இவன் எல்லா நலனும் பெற்றுத் திகழ இவனது

படைத்தலைவன் "**மும்முடிச் சோழ பிரம்மராயன்** " பத்து "மா" அளவுள்ள நிலங்களை மேலைப்பள்ளி, கீழைப்பள்ளி ஆகிய இரண்டு கோயில்களுக்கும் வழங்கி இரண்டிரண்டு நந்தா விளக்குகள் எரிக்க ஏற்பாடு செய்தான்.[2]. கி.பி. பதினோராம் நூற்றாண்டில்அப்பாண்டை நாதர் கோயிலுக்கு சில நிலங்களை "ஒற்றி"யாகக் கொடுத்து அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் கோயில் செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.[3] விக்கிரம சோழனுடைய பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1128) மலையமல்லனான விக்கிரம சோழ மலையமான் என்னும் சிற்றரசன் பயிரிடப்படாமல் கிடந்த நிலங்களைச் சீர் செய்து அந்நிலங்களை '**இறையிலி**'யாக ஆக்கி கோயிலுக்கு அளித்தான்.[4] இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் வைகாசித் திருநாளின் போது அருண்மொழித் தேவரையும், நித்திய கல்யாண தேவரையும் உலா எடுத்துச் செல்ல "**விழாப்புறம்** " ஆக செலவு செய்யப்பட்டது. விக்கிரம சோழனின் பதினாறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1134) ஏரி உடைப்பால் பயிர் செய்யப்படாமல் கிடநத நிலங்கள் திருத்தப்பட்டு திருவிழாக் காலங்களில் இறைவனை பல்லக்கில் ஏற்றிச் செல்ல "**சிவிகைப்புறம்** " ஆக வழங்கப்பட்டது.[5].

மூன்றாம் குலோத்துங்க சோழன் அப்பாண்டை நாதருக்கு சிறுசாத்த நல்லூர் என்ற ஊரைத் தானமாக வழங்கினான் என்பதை,

> "வீரன் திருவறம் பேணுமெய் வீரசங்கத்தவரே
> சேரும் கனகச்சினகிரியப்பர்க்குத் தெய்வமணம்
> கூருந்தெரியற் குலோத்துங்க சோழன் கொடுத்த நல்லூர்
> சாரும் பழனச் சிறுசாந்தை காத்த மட பதியே "[6].

என்ற பாடல் எடுத்துக் காட்டுகிறது. இப்பாடலில் வரும் சிறுசாத்த நல்லூர் இப்போது மடப்பட்டுக்கு அருகில் **சிறுத்தனூர்** என்று வழங்கப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1187) நறுங்கொன்றை அருகப் பெருமானுக்கு திருநாமத்துக் காணியாக ஆற்றூர்(கொன்றைக்கு பக்கத்து ஊர்) திருநறுங்கொன்றை , ஏனாதி மங்கலம் (எரளூருக்குப் பக்கத்தில் உள்ளது.) ஆகிய ஊர்களை **அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரக் காடவராயன்** வழங்கி அவ்வூர் நிலங்களில் இருந்து கிடைக்கும் நன்செய், புன்செய், தறியிறை, தட்டார்பாட்டம் ஆகிய வரிகளையும் கோயிலுக்கே அளித்தான்.[7] மூன்றாம் இராசராசனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1226) பார்சுவநாதருக்கு நந்தா விளக்கெரிக்க **கூடல் ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன்** என்னும் காடவச் சிற்றரசன் பத்து"மா"அளவுள்ள நிலம் வழங்கினான்.[8] திரிபுவனச் சக்கரவர்த்தி சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி.1251 - 1268)திருநறுங்கொன்றை கோயிலில் வைகாசி மாதத்தில் நடைபெறும் '**நற்காட்சித் திருவிழாவிற்கும்** ,தை மாதத்தில் நடைபெறும் '**அஸ்தத் திருவிழாவிற்கும்** ' ஆகும் செலவிற்காக" **இருங்கோளப்பாடி தவத்தாளன்**" என்பவன் சில நிலங்களை வழங்கினான்[9] மாறவர்மன் விக்கிரம பாண்டியன் ஏழாம்

ஆட்சியண்டில் (கி.பி.1290) அப்பாண்டை நாதர் கோயிலில் 'நித்திய அமுதுபடி' முதலிய வழிபாட்டுச் செலவுகளுக் காக திருநறுங் கொண்டையில் ஆறு'மா' அளவுள்ள நிலம் விடப் பட்டது. ஒரு "மா" என்பது இருபதடி கோலால் அளக்கப்பட்ட இருநூறு குழிப்பரப்பினைக் கொண்டது எனவும் கூறப்பட்டுள்ளது[10]

விளக்கெரிக்க நிவந்தங்கள்

முதலாம் இராசேந்திரன் காலத்தில் (கி.பி. 1012 - 1044) பார்சுவநாதருக்கு முன்பாக ஒரு விளக்கெரிக்க **கலிமானன்** விஜயாலயமல்லன் என்பவன் தொண்ணூற்றாறு ஆடுகளை வழங்கினான்.[11] கி.பி. 1361 இல் "ஆதனூர் பற்று" சபையினர் அப்பாண்டை நாதர் கோயிலில் ஒரு விளக்கெரிக்க சிறிதளவு நிலம் வழங்கினர்.[12] இதே ஆண்டில் பழம்பட்டினம் என்னும் ஊரைச் சேர்ந்த **'செம்பாதி வில்லவதரையர்'** என்பவர் மகனும் சில நிலங்களை வழங்கினான்.[13] பழம்பட்டினம் என்ற ஊர் இப்போது விருத்தாசலத்துக்குத் தெற்கில் 'பழையபட்டினம்' என்ற பெயரோடு விளங்குகிறது.

மூன்றாம் இராசராசன் ஆட்சியில் "யட்சிக்கு" முன்பாக ஒரு சந்தி விளக்கெரிக்க கொல்லியூர் (தற்போது கொல்லூர்) உடையான் என்பவருடைய சம்மதத்தின் பேரில் **"ஆதிபட்டாரகன் புஷ்பசேனன்"** என்பவன் 6 காசுகளை அளித்திருக்கிறான்.[14] அவர்களே மூன்று"மா" அளவுள்ள நிலத்தையும் வழங்கினர்.[15]

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மல்லிசேன தீர்த்தங் கரருக்கு ஒரு விளக்கெரிக்க **இராசேந்திர சோழ சேதிராயன்** என்பவன் "நெல்" தானம் அளித்திருக்கிறான்.[16] இக்குலோத்துங்க சோழனின் எட்டாம் ஆட்சியாண்டில் சந்திரப்பிரபா தீர்த்தங் கரருக்கு நந்தா விளக்கொன்று எரிக்க 40 பசுக்களைத் தானமாக **'மங்கல முடையான் நயச்சன் தேவன்'**, **'ஆற்றூர் உலகு டையான்'**, **'தீபங்குடி ஓமைநாதன்'** போன்றோரால் வழங்கப்பட்டது.

உதவிய நூல்கள்

1. திருநறுங்கொண்டை வரலாறு - மு.சண்முகம் பிள்ளை
2. திருநறுங்கொண்டை வரலாறு - ஏ.ஏகாம்பரநாதன்
3. அப்பாண்டை நாதர் உலா - மு. சண்முகம் பிள்ளை
4. இடையாலக் குறவஞ்சி - புலவர்.ஆ. திருமொழி
5. தமிழ் இலக்கிய வரலாறு - மு. அருணாசலம்
6. Jaina inscriptions of Tamilnadu - Dr. A. Ekambaranathan Dr. C.K. Sivaprakasam.



8. தொண்டூர் - சங்க காலக் கல்வெட்டு

மா. சந்திரமூர்த்தி, சென்னை.

தொண்டூர் செஞ்சியிலிருந்து 15 கி. மீ. தொலைவில் சின்னகரம், சோழகுணம் ஆகிய கிராமங்களை அடுத்து அமைந்துள்ள சிற்றூர். இவ்வூர் ஏரியை அடுத்து ஒலக்கூர் பசுமலை எதிரில் தொண்டூர் குன்று உள்ளது. இக்குன்று தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டமும், சம்புவராயர் மாவட்டம் வந்தவாசி வட்டமும் இணையும் இடத்தின் அருகே அமைந்துள்ளது. இக்குன்றில் இரண்டு இடங்களில் குகைத்தளங்களும், சமணப்படுக்கைகளும் உள்ளன. குகைத்தளம் உள்ள மலையை **'பஞ்சனாப்பாடி - குன்று'** என்றும், **'பஞ்சனாப்படி குன்று'** என்றும் ஊரார் அழைக்கின்றனர்.

முதல் குகைத்தளம்

இவ்வூரின் முதல் குகைத்தளம் நிலப்பரப்பிலிருந்து ,சுமார் 20 மீட்டர் உயரத்தில் அமைந்து காணப்படுகிறது. இக்குகைத்தள முகப்பு சுமார் 5 மீட்டர் உயரம் உடையது. இதனை அடைய 28 சிறிய படிகள் உள்ளன. முகப்பு வாயிலைத் தாண்டி உள்ளே சென்றால் ஒரு கல் மேடை மீது சமணப் படுக்கைகள் தலைத் திண்டுகளுடன் செதுக்கப்பட்டு காணப்படுகின்றன. இப்படுக்கைகளில் இடப்புறம் 2 மீட்டர் தூரத்தில் கற்பாறையில் பார்சுவநாதர் உருவம் இருந்த கோலத்தில் புடைப்புச் சிற்பமாக உள்ளது. இதனை இப்பகுதி வாழ் மக்கள் **நயினார் கோயில்** என்று அழைத்து வருகின்றனர்.

தமிழ் பிராமிக் கல்வெட்டு

இச்சமணப்படுக்கைகளின் கால்மாட்டின் கீழ் உள்ள சரிவில் சுமார் ஒரு மீட்டர் தூரத்தில் இரண்டு வரிகளில் தமிழ் பிராமிக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது இக்கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டது.[1] அக்கல்வெட்டு வாசகம் வருமாறு,

1. ஸங்காயிபன் (அ) (இ)ங்காயிபன் ஏவ அகழ் ஊரறம்
2. மோசி செயித அதிடானம்

இதனை ஸங்காயிபன் (அ) இளங்காயபன் ஏவ அகழ் ஊர் அறம்மோசி என்பவன் அதிட்டானம் (படுக்கை) செய்வித்ததைக்

குறிக்கிறது. இக்கல்வெட்டின் முதல் வரியில் 11 வது, மற்றும் 14 வது எழுத்துக்கள் தெளிவின்றிக் காணப்படுகின்றன.

அகலூர்

இக்கல்வெட்டில் அகழ் ஊர் என்று குறிக்கப்படும் ஊர் இன்றும் இக்குகைத்தளம் அமைந்துள்ள தொண்டூருக்கு அருகில் அகலூர் என்ற பெயரில் உள்ளது.

இப்படுக்கைகளைச் செய்யும்படி மோசி என்பனுக்கு ஆணையிட்ட **ஸங்காயிபன் அல்லது இளங்காயிபன்** என்னும் பெயரைப் போலவே மதுரைக்கருகில் இருக்கும் ஆனைமலை தமிழ்பிராமிக் கல்வெட்டில் **அரட்டகாயிபன்** என்ற பெயரும், புகளூருக்கருகில் உள்ள ஆறுநாட்டார் மலையிலும், திருச்சிக் குன்றிலும் **செங்காயபன்** என்ற பெயர் காணப்படுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

சங்ககாலக் கல்வெட்டு

சங்க இலக்கியப் பாடல்களைப் பாடிய புலவர்களுள் மோசி கீரனார், மோசி சாத்தனார் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. மோசி என்பது ஓர் ஊர்பெயராகவோ அல்லது ஆள் பெயராகவோ இருக்கலாம். இங்கு **'மோசி செயித'** என்று வருவதால் மோசி என்பது சங்க காலத்தில் மக்கள் பெயராகவே வழங்கி வந்திருக்கிறது. இத்தகைய பெயர் சங்ககால இலக்கியங்களில் மட்டுமே வழங்கி வருவதிலிருந்து, பிற்காலத்தில் வழக்கிழந்தமையால் இப்பெயர் தாங்கிய இக்கல்வெட்டு சங்க காலத்தை சேர்ந்ததே என்பது உறுதியாகிறது. எனவே இக்கல்வெட்டின் காலத்தை கி.மு.3 - கி.மு.2 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். இதன் எழுத்தமைதியும் இதற்குத் துணை புரிகிறது. இக்கல்வெட்டில் புள்ளி இல்லாமையும் அகழ் ஊர் என உயிரெழுத்துப் புணர்க்கப்படாமல் (பிற பிராமிக் கல்வெட்டுகளில் வருவது போல பண + அன் / கடல் + அன் என) வருவதாலும் இதன் பழமையை உணரலாம்.

மூன்று படுக்கைகள்

இக்கல்வெட்டின் முடிவில் மூன்று பக்கக் கோடுகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை வாக்கிய முடிவை அல்லது கல்வெட்டின் முடிவைத் தெரிவிக்கும் குறியீடாக இருக்கலாம் அல்லது சமண சமயத் தொடர்புடைய குறியீடுகளாகவும் இருக்கலாம். (முக்குடைப் போன்று) ஒருவேளை மூன்று படுக்கைகளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். இப்படுக்கைகளின் அருகில் உள்ள பார்சுவநாதர் சிலை கி.பி. எட்டாம்

நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். இன்றும் இத்திருவுருவச்சிலையைத் தொண்டூரைச் சேர்ந்த அகலூர், பென்னகர் ஊரவர்கள் முக்கிய தெய்வமாக வழிபடுகின்றனர். இக்கோயிலை இவர்கள் நயினார் கோயில் என்று அழைத்து வருகின்றனர்.

இரண்டாம் குகைத்தளம்

எனவே சங்ககாலம் முதல் இன்று வரை இப்பகுதி சமணத்தலமாக விளங்கி வருவது என்பது குறிப்பிடத்தக்கது. இக்குன்றின் மற்றொரு பகுதியில் இரண்டாம் குகைத்தளம் அமைந்துள்ளது. இங்கு முகப்பு வாயிலை அடுத்து ஐந்து சமணப் படுக்கைகள் வரிசையாக வெட்டப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 1.75 செ.மீ. நீளமும், 44 செ.மீ. அகலமும் உடையவை. இங்குள்ள படுக்கைகளில் முதல் மூன்று படுக்கைகள் தலை வைத்துப் படுக்கும் நிலையில் கல் திண்டுகளுடன் உள்ளன. இப்படுக்கைகள் சமமாகச் செதுக்கப்படாமல் ஒன்றில் பக்கவாட்டில் ஒன்றாகவும், சரிவாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இப்படுக்கைகளிலிருந்து குகையின் விதானம் 85 செ.மீ. முதல் ஒரு மீட்டர் வரை உயரம் உடையவை. இங்குள்ள குகையிலும் படுக்கைகள் அருகிலும் எழுத்துக்கள் காணப்படவில்லை. இப்பகுதியை அடையும் வழியில் பாறைச் சரிவுகளின் இடையே வேம்பு, வேப்பிலை மரங்களும், உன்னிக்காரைச் செடிகளும், சூரைப்புதர்களும், மஞ்சிப்புல்லும் அடர்ந்து காணப்படுகின்றன.

குறிப்பு

இத்தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு கட்டுரை ஆசிரியரால் 18 – 10 – 1991 அன்று கண்டு பிடிக்கப்பட்டது.



9. நெகனூர்பட்டி தமிழ் - பிராமிக் கல்வெட்டு

முனைவர் சு. இராசவேலு, சென்னை.

அடுக்கங்கல்

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிவட்டம் செஞ்சி - அவியூர் சாலையில் நெகனூர் செல்லும் வழியில் 6கி.மீ தொலைவில் நெகனூர்பட்டி அமைந்துள்ளது.

நெகனூர்பட்டி ஏரிக்குள் நடந்து மேற்கே சென்றால் சிறு தொலைவில் 'அடுக்கங்கல்' (சிறுசிறு பாறைகள் அடுக்காக உள்ளதால்) என்னும் சிறு குன்று உள்ளது. அதன் கீழ்ப்பகுதியில் தரையை ஒட்டி ½மீ உயரத்தில் குகைத்தளம் அமைந்துள்ளது. இப்பாறையின் தரைப்பகுதி படுக்கை போன்று. சமமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

சமணப் படுக்கையும் கல்வெட்டும்

படுக்கைகள் கிழக்கு மேற்காக உள்ளன. படுக்கைப் பகுதிக்கு சற்று தூரத்தில் கிழக்கு நோக்கி தமிழ் பிராமி எழுத்துக்களால் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு 53 செ.மீ நீளமும் 42 செ.மீ அகலமும் கொண்டு 4 வரிகளில் செதுக்கப்பட்டிருக்கிறது.

கல்வெட்டு செய்தி

பெரும் பொகய்
செக்க உதிதாயியயா (ஹா)
செஇக ஒதண்ணிசெ
யிவித்த பள்ளி"

என இக்கல்வெட்டு என்னால் படிக்கப்பட்டது.[1]

பெரும் பொகய் என்னும் ஊரைச் சேர்ந்த செக்க உதிதாயி என்ற சமணத் துறவியாருக்கு தவம் செய்வதற்காக ஒதண்ணி என்பவர் பள்ளி செய்வித்தார் என்பதே கல்வெட்டின் மூலம் அறியபெறும் அரிய செய்தியாகும்.

கல்வெட்டு வாசகத்தை சிலர் கீழ்கண்டவாறு படித்துள்ளனர்.[2]

1. பெரும் பொதன்
2. செக்கந்தி தாயியரு

3. செக்கந்திணண் செ

4. யிவித்த பள்ளி

கல்வெட்டில் கூறப்பெறும் பெரும்பொகை என்ற ஊர் தற்போது நெகனூர்பட்டிக்கு தென்கிழக்கே ஆனத்தூர் மலைக்கு தெற்கில் பெரும்புகை என்று வழங்கப்பெறும் ஊரே ஆகும்.

பெரும்புகை என்னும் ஊரில் தற்போதும் சமணக் குடும்பங்கள் (சுமார் 30) உள்ளன. இவ்வூரில் மல்லி தீர்த்தங்கரருக்கு அழகான கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயிலின் பழமையான தீர்த்தங்கரர் மகாவீரர் என்றும் இவ்வூர் சமணர்கள் கூறுகின்றனர். இவ்வூரைச் சேர்ந்த சமணத் துறவியே செக்க உதிதாயி என்பவர் ஆவார்.

இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் இறுதிப்பகுதியைச் சார்ந்தது என்று கருதலாம். மேலும் அதை அரச்சலூர்க் கல்வெட்டுக்கு முற்பட்டதாகவும் கொள்ளலாம். செவ்வகக் கட்டத்திற்குள் பண்டைய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதும் எல்லா எழுத்துக்களிலும் தலையில் அழகுக்கோடு இடப்பட்டுள்ளதும் இக்கல்வெட்டில் குறிப்பிடத் தக்க அம்சமாகும். இதுபோன்று பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலும் அழகுக் கோடிடப்பட்டிருப்பதை இங்கு காணலாம். பெரும்பாலும் மெய்யெழுத்துக்களுக்குப் பக்கவாட்டில் புள்ளியிடப்பட்டுள்ளதும் இங்கு சிறப்பு அம்சமாகக் கருதலாம். இக்கல்வெட்டில் யி, தி, வி ஆகிய எழுத்துக்களில் சுழிகள் இடமிருந்து வலமாக வளைந்து செல்கிறது. இதுவும், அழகுக்கோடும் எழுத்து வளர்ச்சி நிலையைக் காட்டுவதாக உள்ளது. எனவே இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகவும் 4-ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாகவும் கருதலாம்.

இக்கல்வெட்டு காணப்படும் குகைத்தளத்தின் கீழ் அகலமான ஒற்றைப் படுக்கையும் இதன் அருகில் அழகிய சுனையும் உள்ளது. "பள்ளி" என்று குறிக்கப்பட்டிருப்பதால் இது சிலர் அமர்ந்து பாடம் கற்பதற்கு ஏற்றவகையில் தளம் (தரை) அமைக்கப் பட்டுள்ளது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

கோட்டுருவங்கள்

படுக்கைக்கு மேலே சிறிய இடைவெளிக்கு மேலுள்ள சரிவான விதானத்தில் வெள்ளைக் கோட்டுருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்கு கிழக்கு-மேற்காக ஐந்து மனித உருவங்கள் உள்ளன. இவற்றுக்கு வடக்கில் 40செ.மீ தொலைவில் மற்றொரு அமர்ந்த நிலையிலுள்ள கோட்டுருவம் உள்ளது.

இவற்றில் மேற்கூறிய ஐந்தும் நிற்கும் உருவங்கள் ஆகும். இவற்றில் மூன்றுமட்டும் வடதிசை நோக்கி விரைந்து செல்வது போல் காணப்படுகின்றன. இவற்றின் கைகள் மேலே தூக்கி விரிந்த நிலையிலும், கீழே விரித்துத் தொங்கவிட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

மேற்றிசையிலுள்ள உருவம் இடதுகையில் வாளும் வலதுகையில் கேடயமும் பற்றிய நிலையில் உள்ளது. இதன் தலைமுடி பின்புறம் காற்றில் பறப்பது போன்று நீண்டுள்ளது. நடையில் மிடுக்குள்ளது.

இங்குள்ள உருவங்களைக் காட்டும் போதெல்லாம், இடுப்புக்குக் கீழே நடுவே செங்குத்துக் கோடு காணப்படுகிறது. இது இடைக்கச்சையிலிருந்து வெளிப்பட்டுச் செல்லும் ஆடைக்கட்டாக இருக்கலாம். இங்குள்ள ஐந்து உருவங்களில் நடுவிலுள்ள பெரிய உருவத்தின் இடையில் உள்ள கச்சு விரிந்து காணப்படுவது மேற்சொன்ன கருத்தை உறுதிப்படுத்துகிறது. வடதிசை நோக்கிச் செல்லும் பெரிய உருவத்தின் கைகளில் மூன்று கோடுகள் உள்ளன. இக்கோடுகள் அவற்றின் விரல்களைக் குறிப்பதாகலாம். இங்குள்ள உருவங்கள் பெரும்பாலும் தலையுடனும் ஒருசில தலைஇல்லாமலும் காணப்படுகின்றன.

தென்திசை நோக்கியுள்ள உருவத்தின் இருகைகளும் முன்நோக்கி அழைக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளன. கிழக்கிலுள்ள உருவம் மங்கலாகத் தெரிகிறது. கைகளைச் சற்று விரித்து வீசி நடப்பதுபோல் தோன்றுகிறது.

இதன் கீழுள்ள உருவம் இரு கைகளையும் பக்கங்களையும் நீட்டிய வண்ணம் காட்டப்பட்டுள்ளது. இதன் வலதுபுறம் அக்குள் பகுதிக்குக் கிழ் பக்கவாட்டில் இருகோடுகள் உள்ளன. இவ்வுருவத்திற்கு மட்டும் தலை காட்டப்படவில்லை. வடபுறம் தனித்துள்ள உருவத்தின் கைகள் கீழ்நோக்கி இடுப்பில் இணைந்துள்ளன. இடையின் கீழ்ப்பகுதி தீட்டப்படவில்லை. இதன் தலை பெரிதாயும் வட்டமாகவும் காணப்படுகிறது. வெள்ளைக் கோட்டுருவங்களாக இவை திகழ்கின்றன. இங்குள்ள ஓவியத் தொகுப்பில் மிகப்பெரியது 20செ.மீ. உயரமும், 16செ.மீ அகலமும் உடையது. மிகச்சிறியது 13செ.மீ உயரமுடையது. வடபுறம் தனித்துள்ள உருவம் 15செ.மீ உயரமும் 8.5செ.மீ அகலமும் உடையது.

கோலமும் கட்டமும்

இக்குகைத் தளத்தின் வடமேற்குப் பகுதியில் மற்றொரு படுக்கைப் பகுதியைக் காணலாம். இங்கு தளத்திலிருந்து 86செ.மீ உயரத்தில் எளிய கோலமும் சதுரகட்டங்களும் சூலவடிவ மனித

உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. நான்கு புள்ளிவைத்துச் சதுரக்கோலம் போட்டது போன்று ஆனால் புள்ளிஇன்றி உள்ளது. இக்கோலம் தெற்கு வடக்காக 14செ.மீ நீளமும், கீழ்மேலாக 10செ.மீ உயரமும் உடையது. இத்தளத்தின் மற்றொரு பகுதியில் உள்ள நீள்சதுரவடிவக் கட்டம் நான்கு சமகட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இச்சதுரக்கட்டம் 14 செ.மீ நீளமும் 10செ.மீ உயரமும் உடையது. இதனருகில் தலையின்றி இடையும் மூன்று கோடுகளுடன் கால்பகுதியும் காட்டப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் நான்காவதாக உள்ள ஓவியம் குறிப்பிடத்தக்கது. 'ப' வடிவில் உள்ள திரிசூலம் போன்று இக்கோட்டு ஓவியம் உள்ளது. இது 10செ.மீ உயரமும் 10செ.மீ அகலமும் உடையது. இன்றைய நிலையில் இப்பகுதி வாழ்மக்கள் காலரா போன்ற தொற்று நோய்கள் பரவும் போது அவற்றைத் தடுத்து நிறுத்த இதுபோன்ற குறியீடுகளை வீட்டின் முன்புறம் அல்லது சுவரில் வரைவது வழக்கமாக உள்ளது. மேலும் பொங்கல் முடிந்த மறுநாள் மாட்டுச்சாணத்தில் இந்தக் குறியீடுகளை வீடுகளில் தீட்டுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். மக்களின் மனநம்பிக்கையின் ஏதோ ஒருவகை வெளிப்பாடே இவ்வோவியங்கள். அன்று முதல் இன்றுவரை இவ்வோவியங் களுக்கு விளக்கங்கள் வேறுவேறாக இருப்பினும் நம்பிக்கையின் வெளிப்பாடுதான் அடிப்படைக் காரணம் என்பதில் மறுப்பேதும் இல்லை.[3]

அடிக்குறிப்புகள்

1. தினமணி, மார்ச் 25, 1992.
2. மா. சந்திரமூர்த்தி - ஆர். வசந்தகல்யாணி, நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டுகளும், பண்டைய ஓவியங்களும் - ஓர் ஆய்வு, அம்மன் தரிசனம், சென்னை, 2004.
3. மேலது.

10. ஊரணித்தாங்கல் மலையும் சமணர் படுக்கைகளும்

ஆர். வசந்தகல்யாணி, சென்னை.

அமைவு

இவ்வூர் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் செஞ்சி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர். செஞ்சியிலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் அண்மைக்காலம் வரை **காவற்காடு** என்று வழங்கப்பட்டது.

ஊரணித்தாங்கல் மலை

ஊரணித்தாங்கல் சாலையின் வடபுறம் சுமார் 1 கி.மீ. தொலைவில் மிக இயற்கையான சூழலில் இம்மலை அமைந்துள்ளது. இம்மலையை ஊரார் **காவக்காட்டு மலை** என்றும், **ஊரணித்தாங்கல் மலை** என்றும் அழைத்து வருகின்றனர். இம்மலையின் அடிவாரத்திலிருந்து வடக்கு நோக்கி பார்த்தால் சுமார் 200 அடி உயரத்தில் சமணர் குகைத்தளம் அமைந்துள்ளதை எளிதில் காணலாம். இக்குகைத் தளத்தை அடையச் சரியான மலைப்பாதைகள் இல்லை.

கற்படிகளும் கற்குழிகளும்

இக்குகைத் தளத்தை நெருங்கும் வழியில் பக்கவாட்டில் கீழ் மேலாக எட்டுக் கற்குழிகளைக் காணலாம். இவை ஏறி வருவோர் கீழே விழுந்து விடாமல் கைப்பிடிகள் அமைக்கும் வகையில் வெட்டப்பட்டுள்ளது. பக்கவாட்டில் நடந்து வந்து குகைத் தளத்தை அடைய ஆறு கற்படிகள் வெட்டப்பட்டுள்ளன.

முகப்பு வாயில் மற்றும் குகைத்தளம்

இக்குகைத்தளத்தின் முகப்பு வாயில் சுமார் 2. 75 மீட்டர் உயரத்தில் அமைந்து விளங்குகிறது. வெளி முகப்பு வாயிலிலிருந்து உள்ளே செல்லச் செல்ல 1.50 மீட்டர், 1.25 மீட்டர், 2.75 மீட்டர் உயரத்தில் குகைத்தளம் சரிவாக மேல் நோக்கிச் செல்கிறது. முகப்பு வாயிலிலிருந்து வடக்கு நோக்கி 10.90 மீட்டர் நீளத்திலும், கீழ் மேலாக 13.50 மீட்டர் அகலத்திலும் இக்குகைத்தளம் அமைந்துள்ளது.

சமணர் படுக்கைகள்

இக்குகைத் தளத்தின் முன்னும், பின்னும், இடையிலும், பக்கவாட்டிலுமாக ஆறு இடங்களில் கற்படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. குகைத்தளத்தின் முகப்பு வாயிலை ஒட்டித் தென்திசையில் ஐந்து படுக்கைகளும் , வடதிசையில் மூன்று படுக்கைகளும், நடுவில் மூன்று படுக்கைகளுமாகப் பதினெட்டுப் படுக்கைகள் இத்தளத்தில் வெட்டப்பட்டுள்ளன. இப்படுக்கைகள் யாவும் மிகவும் வழவழப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. மிக நீண்ட நாள்களாக இப்படுக்கைகள் பயன்பாட்டில் இருந்துள்ளன என்பதை இப்படுக்கைகளின் வழவழப்பும் பளபளப்பும் காட்டுகின்றன.

இங்குள்ள 18 படுக்கைகளில் 16 படுக்கைகள் மட்டும் தலைவைத்துப் படுக்க வசதியாக கல் திண்டுகளுடன் காணப்படுகின்றன. ஏனைய இரு படுக்கைகள் திண்டுகளின்றி எளிமையாக வெட்டப்பட்டுள்ளன. இப்படுக்கைகள் யாவும் பெரும்பான்மையாகக் கீழ்த்திசையில் தலை வைத்துப் படுக்கும் வகையில் அமைந்துள்ளன. இவற்றில் மூன்று மேற்குத் திசையிலும், மூன்று வடக்குத் திசையிலும் தலை வைக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள படுக்கைகளில் மிகப் பெரியது 2 மீட்டர் நீளமும், 60 செ. மீ. அகலமும் உடையதாகும். ஏனையப் படுக்கைகள் 1.50மீட்டர் நீளமும் 50 செ.மீ. அகலமும் கொண்டதாக விளங்கக் காண்கிறோம்.இவை 1,2,3,4,5 என்ற எண்ணிக்கையில் ஆங்காங்கே தனித்தும் , இணைந்தும் செதுக்கப்பட்டிருப்பினும் இதனை ஊரார் **பஞ்ச பாண்டவர் படுக்கை** என அழைத்து வருகின்றனர்.

சமணப்பள்ளி

குகைத்தளத்தின் படுக்கைகளைத் தாண்டி உட்புறம் சென்றால் பெரிய கூடம் போன்ற அமைப்புக் காணப்படுகிறது. இதனை ஊரார் **பள்ளிக்கூடம்** என்றே அழைப்பர். இதன் மையப்பகுதியில் 25 நபர்களும், படுக்கைகள் உள்ள குகைத் தளப்பகுதியில் 75 நபர்களுமாக மொத்தம் 100 பேர் அமரும் வகையில் சமணப்பள்ளியும், படுக்கைகள் உள்ள குகைத் தளமும் விசாலமாக அமைந்து விளங்குகின்றன.

தாமரைத் திருவடிகள்

சமணப்பள்ளியின் மையப்பகுதியில் கீழ்த்திசை நோக்கிய வண்ணம் பெரிதும் சிறிதுமாக மூன்று திருவடிகள் தாமரைமலர் இருக்கை மீது செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நடுவேயுள்ள திருவடி அளவில் பெரியது. இது 20 இதழ்களை உடைய பெரிய

தாமரைப் பொகுட்டின் நடுவே அமைந்துள்ளது. இதன் வலப்புறமுள்ள சிறிய திருவடி 16 இதழ்களை உடைய தாமரைப் பொகுட்டின் மீதும், தென்புறமுள்ள திருவடி 13 இதழ்களை உடைய பொகுட்டின் மீதும் அமைந்து விளங்கக் காண்கிறோம்.

மங்கலச் சின்னங்கள்

திருவடிகளுக்கு முன்புறம் முக்குடை, ஸ்வஸ்திகம், கண்ணாடி முதலிய மங்கலச் சின்னங்கள் வெட்டப் பட்டுள்ளன. அதன் கீழ் திருவடிகளுக்குரிய பெரியார்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு

நடுவேயுள்ள பெரிய திருவடியின் கீழ் '**ஸ்ரீ108 ஆச்சார்ய நிர்மல் சாகர மஹராஜ்**' என்றும், வலப்புறத்திலுள்ள சிறிய திருவடியின் கீழ் '**வர்த்தமான சாகரர்**' என்றும், இடப்புறமுள்ள திருவடியின் கீழ் '**சாந்தி சாகரர்**' என்றும் பொறிக்கப் பட்டுள்ளது. இவர்கள் 1976 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள சமணத் தலங்களுக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டதன் நினைவாக இவை இங்கு வெட்டப்பட்டுள்ளன என்பதை அறிகிறோம்.

எழுத்துக்கள்

குகைத்தளத்தின் முகப்பிலோ படுக்கை மீதோ பொதுவாகக் காணப்படும் பண்டைய எழுத்துக்கள் இங்கு காணக் கிடைக்கவில்லை. இருப்பினும் முகப்பு வாயிலையடுத்து (84செ.மீ. x 44செ.மீ.) செவ்வக வடிவில் சமண இருக்கையொன்று செதுக்கப்பட்டுள்ளது.இதன் முன்புறம் 55 செ.மீ. தூரத்தில் ஒருவரியில் 8 எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பண்டைய தமிழ் வரி வடிவங்களை ஒத்துள்ளது எனினும் உறுதியாகச் சொல்லவோ,பொருள்படப்படிக்கவோ இயல வில்லை. இவ்வெழுத்துக்களை '**பரசேனர்(வ)ரு**' என்று படிக்கலாம்.

வண்ண எழுத்துக்கள்

இங்குள்ள படுக்கையில் விதானத்தில் வெள்ளை வண்ணத்தில் மூன்று எழுத்துக்களைக் காணலாம். தவிர இப்படுக்கைகளின் மேல் விதானத்தின் பக்கப்பாறையில் மூன்று வரிகளில் தெலுங்கு எழுத்துக்களும், அதன் முன்புற விதானத்தில் நான்கு வரிகளில் தமிழ் எழுத்துக்களும் வெள்ளை நிறத்தால் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் எழுத்தமைதி கொண்டு இவை கி.பி. 16 -17 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகக் கருதலாம்.

சங்ககாலச் சான்றுகள்

ஊரணித்தாங்கல் மலை அடிவாரத்தில் சங்ககாலத்தைச் சார்ந்த கறுப்பு - சிவப்பு நிறப் பானையோடுகள் காணப்

படுகின்றன. மேலும் ஊரணித்தாங்கல் கிராமத்திற்கு அருகில் பெரும்புகை, நெகனூர்பட்டி போன்ற சமணத்தலங்கள் உள்ளன. இன்றும் பெரும்புகையில் சமணர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரில் மல்லிநாத தீர்த்தங்கரருக்கு அழகிய கோயில் ஒன்றும் உள்ளது. நெகனூர்பட்டியில் கிடைத்துள்ள தமிழிக் கல்வெட்டுகளும், ஓவியங்களும் சுமார் 1800 ஆண்டுகட்கு முற்பட்டவை என்பது உறுதியாவதால் இவ்வூரணித்தாங்கல் பண்டு புகழ்பெற்ற சமணத் தலமாக இருந்திருக்க வேண்டுமென்பதும், இப்பகுதியில் சமணம் நன்கு தழைத்திருந்தது என்பதும் உணர முடிகிறது.

விதானங்களில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு கி.பி. 16 - 17 ஆம் நூற்றாண்டுகளிலும், திருடிகளிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு கி.பி. 1976 ஆம் ஆண்டு வரையிலும், இன்னும் அண்மைக் காலங்களிலும் எனத் தொடர்ந்து சமணர்களுக்குரிய சிறப்பிடமாக இவ்வூர் இருந்து வந்திருப்பதை அறிய முடிகிறது.

சமணர் படுக்கைகளின் காலம்

கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டு வரை சமணத் துறவியர்க்கு படுக்கைகள் வெட்டப்பட்டு வந்துள்ளதை தமிழகமெங்கும் காணப்படும் பண்டையக் கல்வெட்டுகளுடன் கூடிய படுக்கைகளால் அறிய முடிகிறது. இதனைக் கொண்டு நெகனூர்பட்டிக்கு அருகாமையிலுள்ள ஊரணித்தாங்கல் சமணப்படுக்கைகளும் சற்றேறக் குறைய கிறித்துவ சகாப்தத்தின் தொடக்கக் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



11. மேல்கூடலூர் - சமணப்பள்ளி

பெ. இலெனின், புதுச்சேரி.

அமைவிடம்

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் செஞ்சிக்குத் தென் கிழக்கில் சுமார் 16 கி.மீ. தூரத்தில் மேல்கூடலூர் அமைந்துள்ளது. அவ்வூருக்கு வடக்கே சுமார் 3 கி.மீ. தூரத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தளவானூரும், கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் பிடாரிப்பட்டும், 6 கி.மீ. தூரத்தில் எசாலமும், தெற்கே 3 கி.மீ. தூரத்தில் எண்ணாயிரமும், தென்மேற்கே 5 கி.மீ. தூரத்தில் பிரம்மதேசமும் அமைந்துள்ளன. வடக்கும் தெற்குமாக அமைந்துள்ள வெளவால் குன்றம், குன்னத்தூர் மலைகளுக்கு இடையில் மக்களால் ***பஞ்சபாண்டவர் மலை, ஐவர்மலை*** *என்று அழைக்கப்படும் ஒரு சிறிய மலை இவ்வூருக்கு மேற்கில் சுமார் ½கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அம்மலையின் கிழக்குச் சரிவில் சுமார் 78 மீட்டர் உயரத்தில் இயற்கையாக அமைந்த குகைத்தளங்கள் காணப்படுகின்றன.*

கற்படுக்கைகள்

குகைத்தளங்களின் சரிவான கீழ்ப்பகுதிப் பாறையில் ஒன்பது, ஏழு, ஆறு, ஐந்து, ஒன்று என்ற எண்ணிக்கையில் தனித்தனியாகத் தலையணை போன்ற அமைப்புடன் சுமார் 35 கற்படுக்கைகளுக்கு மேல் வெட்டப்பட்டுள்ளன. படுக்கைகளின் சராசரி அளவு சுமார் 189 × 42 செ.மீ. நீள அகலம் முதல் 200 × 43 செ.மீ. நீள அகலம் வரை வெட்டப்பட்டுள்ளன. கற்படுக்கைகளின் அளவை நோக்குங்கால் அதில் சிறு மாணவர்களோ அல்லது மெல்லிய உடல்வாகுள்ள சமணத் துறவியர்களோ தான் படுக்கப் போதுமானதாக உள்ளன.பாறை இடுக்குகளில் சற்று இருட்டான அறை போன்ற இடத்தில் வெட்டப்பட்டுள்ள ஒன்பது படுக்கைகளை நோக்கும் போது அவ்விடத்தில் பெண் துறவியரும் தங்கி கல்வி கற்றிருக்கலாம் அல்லது கற்பித்திருக்கலாம் என்று தோன்றுகிறது.சற்று சரிவான பாறையில் வெட்டப்பட்டுள் ளமையால் படுக்கைகளை மழைநீர் நனைக்கா வண்ணம் அதனைச் சுற்றி சிறிய வாய்க்கால் போன்ற அமைப்பு வெட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பார்சுவநாதர்

கற்படுக்கைகளுக்கு வடதிசையில் உள்ள செங்குத்தான பெரிய பாறையில் தென் திசை நோக்கியவாறு முக்குடை முதல் பாதகமலம் வரை 167 செ.மீ. உயரமும் 37 செ.மீ. அகலமும்

கொண்ட அழகிய முகச்சாயலுடன் தவநெறி கொண்டொழுக தாமரைப் பீடத்தின் மீது நிற்கும் திருக்கோலத்தில் இருபத்து மூன்றாம் தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர் செதுக்கப்பட்டு மிக அருமையாகத் தோற்றமளிக்கிறார்.

ஐந்தலை நாகம் அவரது தலைக்கு மேல் படம் விரித்த நிலையிலும் அதற்கு மேல் முக்குடையும் அணிசெய்கின்றன. பார்சுவநாதருக்கு இடது புறம் நின்ற நிலையில் சுமார் 80 செ.மீ. உயரமும், 25 செ.மீ. அகலமும் தலையில் மணிமகுடத்துடனும் மேலாடை, காதில் குண்டலம், புஜவளையுடன் சாமரம் அல்லது தாமரை மொட்டு போன்றதைக் கையில் ஏந்திய புடைப்புருவம் ஒன்றும் செதுக்கப்பட்டுள்ளன.

இக்குகைத்தளங்களை 1982 ஆம் ஆண்டு முதன் முதலாக ஆய்வு செய்த புதுச்சேரி வரலாற்றுச் சங்கத் தலைவர் பி.எல். சாமி இ.ஆ.ப., பாகூர் புலவர் சு. குப்புசாமி, வில்லியனூர் புலவர் நா. வேங்கடேசன், அனந்தபுரம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அத்துணை உருவத்தை ஒரு அரசனாகவும், திரு.ஏகாம்பரநாதன் இயக்கனாகிய தரனேந்திரனாகவும், முண்டியம்பாக்கம்.ரமேஷ் இயக்கியாகிய பத்மாவதியாகவும் குறிப்பிடுகின்றனர். எவ்வாறாயினும் இத்துணை உருவம் மேலும் ஆய்வுக்குறியதாகவே தோன்றுகிறது.

ஆசனம்

பார்சுவநாதரை வணங்கி கிழக்கு நோக்கி பாறை இடுக்குகளில் இறங்கினால் கடுமையான வெயிலோ, மழையோ தாக்கா வண்ணம் குகைத்தளங்களின் கிழக்கு விளிம்பில் தென் கிழக்கு நோக்கியவாறு ஒரு பாறையில் மிக நேர்த்தியுடன் 134 செ.மீ. நீளமும், 69செ.மீ. அகலமும் கொண்ட ஒரு ஆசனமும் படுக்கைகளின் தொடக்கத்தில் 100 × 58 செ.மீ நீள,அகலம் கொண்ட அரை வட்ட வடிவமான ஒரு ஆசனமும் வெட்டப்பட்டுள்ளன. அவ்வாசனங்களில் சமண முனிவர்கள் அமர்ந்து மாணாக்கர்களுக்கு கல்வி, மருத்துவம், சமய நெறி போன்றவை போதித்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

உரல்

கற்படுக்கைகளுக்குத் தென்திசையில் சுமார் 2 மீட்டர் தூரத்தில் குகைக்கு வெளியில் மூலிகைகள் இடிப்பதற்கு வசதியாக 10 செ.மீ. ஆழமும், 13 செ.மீ. அகலமும் கொண்ட உரல் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. அவ்வுரல் சமணத் துயறவியர்கள் பொது மக்களுக்கு மருத்துவத் தொண்டு புரிந்துள்ளமையைத் தெள்ளத் தெளிவாகச் சுட்டுகிறது.

சுனைகள்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள படிகளின் வழியாக குகைத்தளங்களுக்குச் செல்லும் வழியில் இடதுபுறம் (குகைத்தளங் களுக்குத் தென்திசையில்) சற்றே உயர்ந்த நிலையில் ஒன்றும்,

தாழ்ந்தநிலையில் ஒன்றுமாக அகன்ற இரண்டு நீர் சுனைகள் ஒரே பாறையில் இயற்கையாக அமைந்துள்ளன.

சுனைகள் அமைந்துள்ள பாறை மேற்குத் திசையில் மிக உயர்ந்து இருப்பது மழைக்காலங்களில் மழைநீர் உயர்ந்த பாறையின்வழியாக நீர் அருவியாக வழிந்து சுனைகள் நிரப்ப இயற்கையான அமைப்பைக் கொண்டுள்ளன. சுனையின் கிழக்குப் பகுதி சரிவாக அமைந்துள்ளதால் தடுப்புச் சுவர் எடுப்பித்து வைத்திருந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன.

பார்சுவநாதர் சிலைக்கு வலப்புறம் கிழக்குத்திசையில் மேலும் கீழுமாக இரண்டு பெரிய சுனைகளும் மற்றும் சில இடங்களில் சிறிய நீர் சுனைகளும் காணப்படுகின்றன. சமணப்பாழிகள் அமைந்துள்ள இடங்களில் இயற்கை சுனைகள் காணப்படுவது மரபேயாகும். அத்தளத்தில் உள்ள அனைத்து சுனைகளும் நீர் தேங்கி நிற்க முடியாத நிலையில் கல்,மண் ஆகியவற்றால் தூர்ந்து போய் முட்புதர் மண்டிக் கிடக்கின்றன.

மகாவீரர் சிலை

மலையின் இடையில் உள்ள பெரிய சுனையில் முட்புதர் மண்டிக்கிடக்கும் பகுதியில் 125 செ.மீ. உயரமும் 75 செ.மீ. அகலமும் 19 செ.மீ. கனமும் கொண்ட ஒரு கற்பலகையில் முக்குடையின் கீழ் தியானநிலையில் அமர்ந்திருக்கும் மகாவீரரைக் காண்கிறோம். சிதைந்த நிலையில் உள்ள இத்தீர்த்தங்கரர் சிலை கழுத்துப் பகுதியில் உடைந்து இரண்டு துண்டுகளாகக் காணப்படுகின்றது.

தீர்த்தங்கரரைக் குறிக்கும் அடையாள லாஞ்சனை இல்லாத நிலையில் இதனைப் பொதுவாக மகாவீரர் சிலை எனக் கொள்ளலாம். பக்கவாட்டில் சாமரம் வீசும் தேவர்களை காணப்படுவதால் அவ்வாறே கருதலாம். தலைக்குப் பின்புறம் பிரபா மண்டலம் காணப்படுகிறது. பிண்டியின் அடையாளம் எதுவுமில்லை.தியான நிலையை அர்த்த பரியங்காசனம் எனக் கொள்ளலாம். இதன் காலம் சுமார் கி.பி.12 அல்லது 13 ஆம் நூற்றாண்டு.

கல்வெட்டுக்கள்

கற்படுக்கைகளுக்கு அருகில் சுமார் 1100 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல் வெட்டுகள் பல்லவ மன்னன கோ விசய நிருபதுங்கன் மற்றும் முதலாம் பராந்தகச் சோழன் ஆகியோரால் முறையே கி.பி. 867 - 900 மற்றும் கி.பி911 - 940 ஆம் ஆண்டுகளில் வெட்டப் பட்டதாகத் தெரிகிறது.

கருத்து

கல்வெட்டுக்களில் காணப்படும் தெய்வாலயங்களின் பெயர்களும் கொடையளித்தவர்களின் பெயர்களும் இந்து

சமயத்தைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்பது கல்வெட்டாய்வாளர் திரு. சு இராசவேலு மற்றும் முன்னாள் தொல்லியல் இயக்குனர் திரு தாமோதரன் ஆகியோரின் கருத்தாக இருக்கிறது. மற்றும் சிலர் இந்துக்களின் சமணதாக்கமாகவும் ,மேலும் பலர் சமணத்தைச் சார்ந்ததாகவும் குறிப்பிடுகின்றனர்.

கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள **'பிடாரி'** என்னும் சொல்லுக் கேற்ப தற்போதும் பிடாரிப்பட்டு என்ற ஊர் ஒன்று இன்றும் இவ்வூருக்கு அருகில் உள்ளது. மேலும் **மூலஸ்தானத்து தேவர், அவனித்திலதத்து தேவர் திருமணிக் கோயில்** என்று கல்வெட்டில் குறிக்கப்படும் தேவாலயங்கள் வேறு பெயர்களால் இன்றும் இவ்வூருக்கு அருகில் அமைந்துள்ள எசாலம், எண்ணாயிரம் , பிரம்மதேசம், பிடாரிப்பட்டு ஆகிய ஊர்களில் காணப்படும் மற்றும் அழிந்து எச்சமாகக் காணப்படும் சிவ, விஷ்ணு ஆலயங்களையும் குறிக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது. பரந்த மனப்பான்மையும் அக்கறையும் கொண்டு அறிஞர்கள் ஆய்வு செய்தால் மேலும் பல புதிய செய்திகள் வெளி வரவும் சரியானத் தொடர்புகளை அறியவும் முடியும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

தற்போதைய நிலை

குகைத்தளங்களில் வெட்டப்பட்டுள்ள கற்படுக்கைகள் , ஆசனங்கள் மற்றும் கல்வெட்டுக்களின் மீதும் மாணவர்களும், இளைஞர்களும் மற்றவர்களும் வண்ணக்குழம்பு கொண்டும் தங்கள் பெயர், முகவரி, நாள் போன்ற விவரங்களை எழுதியும் உளி கொண்டுபுதிய கல்வெட்டுகள் வெட்டியும் வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளையும் நினைவிடத்தையும் அழித்து வருவது வேதனைக்குரிய செய்தியாகும்.

பாதுகாப்பு

இக்குகைத்தளங்களின் அருகாமையிலுள்ள ஊர்களில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களைக் கொண்டு உழவாரப்பணியாக குகைத்தளங்களைச் சுத்தம் செய்து அறியாமையால் உல்லாசப் பயணிகள் எழுதியுள்ள எழுத்துக்களையும் பக்தர்கள் பூசியுள்ள சுண்ணாம்புக் கோடுகளையும் அழித்து அருமையான பழங்கால நினைவிடத்தை பாதுகாத்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். நடுவன் அரசும், மாநில அரசும் அவ்விடத்தைக் கையகப்படுத்தி பாதுகாக்க ஆவண செய்யலாம்.



12. வளத்தி - ஆதிநாதர் ஜினாலயம்

மா. சந்திரமூர்த்தி, சென்னை.

தமிழகத்தில் சமணம் 2000 ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து மக்கள் பின்பற்றும் சமயமாக இருந்து வருகிறது. இச்சமயத்தின் கொள்கைகளும், கோட்பாடுகளும் ஆணி வேர்களாய் தமிழகத்தின் சின்னஞ்சிறு ஊர்களிலும் பரவியிருந்தமைக்கு ஏராளமானக் கல்வெட்டு, சிற்ப, இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் தென்னார்காடு மாவட்டம் சமணம் வளர்ந்து நிலைத்த முக்கிய பகுதியாக விளங்குகிறது. குறிப்பாகச் செஞ்சியைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகள் பெரும்பாலும் சமண முனிவர் தம் வாழ்விடங்களாய்த் திகழ்ந்துள்ளன. அவற்றின் வரலாறும் 2000 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றன. இம்மாவட்டத்தில் மேல் சித்தாமூர், ஊரணித்தாங்கல் , தொண்டூர், திருநாதர் குன்று, நெகனூர்பட்டி, அகலூரர் போன்ற ஊர்கள் குறிப்பிடத்தக்கன. அவ்வகையில் வளத்தி எனும் ஊரும் சமணம் தழைத்த ஊர் என்பதைச் சான்றுகள் எடுத்துக் கூறுகின்றன.

ஊர் அமைவு

செஞ்சிக்கு வடக்கே 13 கி.மீ. தொலைவில் செஞ்சி - சேத்துப்பட்டு சாலையில் மேல்மலையனூர் அருகில் அமைந் துள்ளது வளத்தி எனும் இவ்வூர். இங்கு சமணத் தொடர்புடைய இடங்கள் இரண்டு உள்ளன. ஒன்று ஊரிலுள்ள புஞ்சை நிலத்தின் நடுவேயும் , மற்றொன்று ஊரின் நடுவேயும் உள்ளன.

நன்ஞானக்குன்று

வளத்தி கிராமத்திற்குத் தெற்கே சுமார் 1 கி.மீ. தொலைவில் புஞ்சை நிலத்தில் ஒரு பெருங்குன்று உள்ளது. இதனை நன்ஞானக்குன்று என்றழைக்கின்றனர். குன்றின் தென்திசையில் ஒரு பெரும் குகை உள்ளது. முன்பு இங்கு சமணப் பெரியார்கள் இருந்திருத்தல் வேண்டும். இக்குகையின் கற்பாறையில் கீழ்த்திசை நோக்கிய வண்ணம் பார்ச்சுவநாதரின் திருமேனி புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. **"அணிவன அணியா அழகா போற்றி"** என்று போற்றத்தக்க வகையில் வடிக்கப்பட்டுள்ள இச்சிற்பம் காயோத்சர்க்க நிலையில் நின்ற கோலத்தில் தலைக்கு மேல் நாகங்கள் குடை போல் நிழல் பரப்ப எழிலாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 9 - 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

நன்னீர் சுனைகள்

பொதுவாகக் குன்றின் மேல் சமணப் பெரியார்கள் வாழ்ந்த இடங்களுக்கு அருகாமையில் வற்றாத நன்நீர் சுனைகள் இருப்பது வழக்கம். அவ்வகையில் இக்குன்றில் **குந்தானி சுனை** என்றும் **சூரியன் பார்க்காத சுனை** என்றும் அழைக்கப்படும் இரு பெரும் நீர்ச்சுனைகள் உள்ளன. இவற்றில் இன்றளவும் நீர் வற்றியதில்லை.

துறவு பூண்டு தவம் செய்த நிலையில் இக்குன்றில் வாழ்ந்த சமணப் பெரியார்கள் காலச் சூழலுக்கேற்ப மக்களோடு இயைந்து வாழத் தலைப்பட்டுத் தம் சமயத்தைப் பெருக்க எண்ணிய காலத்தில் ஊரின் நடுவே ஆலயம் எழுப்பப்பட்டு வளர்ந்ததாகக் கொள்ளலாம் . எனவே இரண்டு கால கட்டங்களில் சமணத்தை இங்கு காண்கிறோம்.

ஆதிநாதர் ஜினாலயம்

செஞ்சி வட்டத்திலுள்ள ஜினாலயங்களில் வளத்தி ஆதிநாதர் ஜினாலயம் குறிப்பிடத்தக்கது. இக்கோயில் கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது. மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், முக மண்டபம், இருபது கால் மண்டபம், கலசார்ச்சன மண்டபம், கோபுரம், மானஸ்தம்பம், மடப்பள்ளி ஆகிய பகுதிகளைக் கொண்டு கோயில் விளங்குகிறது.இக்கோயில் மூலஸ்தானம் சதுர வடிவுடையது. இதன் நடுவே ஆதிநாதர் பரியங்காசனத்தில் அமர்ந்த கோலத்தில் வழிபாட்டில் உள்ளார். மூலவர் திருவுருவம் கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மூலஸ்தானத்தின் புறச்சுவர் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை கருங்கல்லில் கட்டப்பட்டுள்ளது. கோயில் அதிட்டான வரிகள் பிற்காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. கருவறைப் புறச்சுவரின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் தேவகோட்ட மாடங்கள் இல்லை.

கருவறைப் புறச்சுவரையொட்டி அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. இத்தூண்களின் கீழ் உள்ள சதுரப் பட்டைகளில் பார்ச்சுவநாதர், தீர்த்தங்கரர், ஆயன், அமர்ந்த சிம்மம், மகாவீரர், ஆதிநாதர், ஆடல்அணங்கு, சிம்மம், பார்ச்சுவநாதர் ஆகிய சிற்பங்கள் உள.

ஜினாலயத்தின் கருவறை மேலுள்ள விமானம் ஒரு தளத்தை உடையது. விமானத்தளம் செங்கல்லும், சிமெண்டும் கொண்டு 1980 - ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. விமான தளத்தைக் கர்ண கூடங்களும், சாலைகளும் அலங்கரிக்கின்றன. விமான கோட்டங்களில் எட்டு தீர்த்தங்கரர் சிற்பங்கள் உள்ளன. தென் புறத்தில் பத்மாவதி அம்மனுக்குச் சிலை உள்ளது. விமானத்தின் நான்கு திசைகளிலும் விமானந் தாங்கிகள் தம் தோள்களில் விமானத்தைத் தாங்கி நிற்கின்றனர். விமானத்தின் வேதிப்

படையின் நான்கு மூலைகளிலும் நான்கு அமர்ந்த சிம்மங்கள் உள்ளன. விமானக் கிரீவம் வட்ட வடிவுடையது. சிகரம் வட்ட வடிவில் வேசர சிகரமாக அமைந்துள்ளது. சிகரத்தின் உச்சியில் உலோகக் கலசம் அலங்கரிக்கிறது.

கருவறையின் முன்புறம் உள்ள அர்த்த மண்டபம் சதுர வடிவுடையது. நான்கு மூலைச் சவுக்காக அமைந்த இப்பகுதி தூண்களின்றி எளிமையான அமைப்பை உடையது. கருவறை அர்த்த மண்டபத்தின் தென்புறச்சுவரில் இரு கல்வெட்டுக்கள் உள்ளன.

மகாமண்டபம்

அர்த்த மண்டபத்தின் முன்பு சதுர வடிவில் மகாமண்டபம் விரிந்துள்ளது. இம்மண்டபத்தைப் பதினாறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவற்றில் இரண்டு வரிசையில் உள்ள எட்டு தூண்கள் சுவரை ஒட்டி அமைந்துள்ளன. ஏனைய எட்டு தூண்கள் நடுவே வரிசையாகக் காணப்படுகின்றன.

இத்தூண்கள் மேலும் கீழும் சதுரமாக அமைந்து இடையேயுள்ள நீண்ட உடற்பகுதி எண்பட்டை. வடிவில் அமைந்துள்ளது. இத்தூண்களின் கீழுள்ள நான்கு சதுரப்பட்டைகளிலும் பூர்ண கும்பம் காட்டப்பட்டுள்ளன. மேல் பட்டைகளில் விரிந்த மலர், அன்னம் ஆகிய உருவங்களைக் காணலாம். இத்தூண்களின் மேலுள்ள இரு தலைப்போதிகைகள் சோழர்காலப்பாணியில் அமைந்து அலங்கரிக்கின்றன.

மகாமண்டபத்தின் தெற்கு மாடத்தில் யானை மீது அமர்ந்த பிரம்மதேவர் கீழ்த்திசை நோக்கிக் காட்சியளிக்கிறார். வடக்கு மாடத்தில் பத்மாவதி அம்மன் கையில் மலர் ஏந்தி தென்திசை நோக்கி அமர்ந்துள்ளாள். தர்மதேவியின் உருவம் கீழ்த்திசையை நோக்கிய வண்ணம் மாடத்தில் காட்சி அளிக்கிறது.

இம்மகா மண்டபத்தின் முன்புற மேடை மீது உற்சவ விக்கிரகங்கள் வழிப்பாட்டில் உள்ளன. மண்டபத்தின் பக்க மேடையிலும் உலோகச் சிலைகள் உள்ளன.

முகமண்டபம்

மகாமண்டப வாயிலின் இருபுறமும் துவாரபாலகரது உருவங்கள் காத்து நிற்கின்றன. இவை மேற்கைகளில் அங்குசமும், பாசமும் ஏந்தி முன்கைகளை கதையின் மீது கொண்டு முத்திரைக் காட்டி எச்சரிக்கின்றன.

துவாரபாலகரை ஜடாமகுடமும், காதில் மகர குண்டலமும், கழுத்தில் மலர்ப் பதக்கமும், இடையில் ஆடையும், உடை மணியும் அலங்கரிக்கின்றன. இவற்றில் **'1947 வருடம் வளத்தி பொன்னுசாமி நயினார் தருமம்'** எனக் கல்வெட்டுப் பொறிக்கப் பட்டுள்ளது.

முகமண்டபத்தைத் பதினாறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவை மேலும், கீழும், நடுவிலும் சதுரமாக அமைந்து இடையே உள்ள பகுதி எட்டுப் பட்டை வடிவில் அமைந்துள்ளது.

இத்தூண்களின் மேல் இரண்டு தலைப் போதிகை, மூன்று தலைப்போதிகைகள் சோழர் காலப் பாணியில் அமைந்து அணி செய்கின்றன. தூணில் அன்னப் பறவைகள், விரிந்த மலர்கள் மட்டும் உள்ளன.

முகப்புமண்டபம்

இதன் முன்புறம் மற்றொரு முகப்பு மண்டபம் உள்ளது. இதனை எட்டு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவை பிற்காலச் சோழர் காலத்தினைச் சார்ந்தவை. இவை மேலும், கீழும், நடுவிலும் சதுரமாக அமைந்து இடையே உள்ள பகுதி பதினாறு பட்டை வடிவுடையன.

சதுரப் படைகளில் சங்கும், பூதகணம், மதங்கொண்ட யானை ஒருவனைக் கீழே கிடத்தி வீழ்த்துதல், கொடிப்பெண், ஆடு மகள், பின் இருகரங்களில் சங்கு ஏந்திய தெய்வ உருவங்கள் அங்குசம் பற்றிய விநாயகர், விரிந்த தாமரை ஆகிய சிற்பங்கள் உள்ளன.

இக்கோயில் வடதிசையில் உள்ள பெருமாள் கோயில் தோட்டத்தில் இருந்த அழிந்த கோயிலின் கட்டடப் பகுதிகள் இங்கு கொண்டு வரப்பட்டு கட்டப்பட்டுள்ளது. இத்தூண்கள் கி.பி. 12 - 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நான்கு தலையும் சிறிய மூலையையும் கொண்டு இரு முத்தலைப் போதிகைகள் தூண்கள் மீது அலங்கரிக்கின்றன.

இதன் முன்புறம் உள்ள மானஸ்தம்பம் 47 அடி உயரத்தில் ஒரே கல்லைக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. இக்கல் வளத்தி கிராமத்து தலைப் பாறையிலிருந்து வெட்டப்பட்டு திரு. சக்கரை சிற்பிகளால் 1947 - ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு கனகசாந்தி நயினார் அம்மணி அம்மாள், கெம்பம்மாள் ஆகியோரால் அறக்கொடை அளிக்கப் பட்டுள்ளது. இந்த மானஸ்தம்பத்தில் தீர்த்தங்கரர் சிலைகள் உள்ளன. மானஸ்தம்பம் முன்புறம் உள்ள பலிபீடம் ஊர்ப் பெண்கள் செய்த தருமம் ஆகும்.

கோயில் கோபுரம் மூன்று நிலைகளை உடையது. அதிட்டானத்தின் மேல் செங்கல்லைக் கொண்டு 150 ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. கோபுரக் கலசங்கள் சுதையால் செய்யப்பபட்டு அலங்கரிக்கின்றன. அதில் சிற்பங்களின்றி கர்ணக் கூடும், சாலையும் மாறி மாறி கட்டப்பட்டுள்ளது.

கலசார்ச்சன மண்டபம்

திருச்சுற்றின் வட கிழக்கு மூலையில் அமைந்துள்ள இம்மண்டபத்தை இருபது தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவை

பிற்காலச் சோழர் காலத்தவை. கி.பி. 12 -13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. அபிஷேகம், சொற்பொழிவுகள், தர்ம உபதேசம், சுவாமி அலங்காரம் ஆகிய நிகழ்ச்சிகள் இங்கு நடக்கின்றன. முகப்பு மண்டபத்தைப் போல இதன் கொடுங்கையும் கல்லால் அமைந்து அணி செய்கிறது.தென் கிழக்கு மூலையில் மடப்பள்ளி அறை உள்ளது. வெளி மதில் வடகிழக்குத் திசையில் யானை, குதிரை, பட்டறை ஆகியன அடங்கும் வாகன மண்டபம் உள்ளது.

உற்சவ சிலைகள்

1. ரிஷப தீர்த்தங்கரர்
2. பார்ச்சுவதீர்த்தங்கரர்
3. சர்வாணயக்ஷர்

இம்மூன்று சிலைகளையும் விழாக் காலங்களில் வீதி உலா எழுந்தருளச் செய்வர். இவைத் தவிர,

அஜித தீர்த்தங்கரர்	சம்பவநாதர்
அபிநந்தநாதர்	சுமதிநாதர்
சுபார்ஸ்வநாதர்	சந்திரப்பிரபாநாதர்
சாந்திநாதர்	முனிஸ்வரதநாதர்
வர்த்தபினர்	பாகுபலிஸ்வரம்
நந்தீஸ்வரம்	மஹாமேரு
நவதேவதா	சர்வாணயக்ஷன்
பஞ்சபரமேஷ்டி	பஞ்சபரமேஷ்டி
ரத்தினத்ரயம்	சதுர்விம்சதி
சுரதஸ்கந்தம்	கதைபரமேஷ்டி
திரிகாலத் தீர்த்தங்கரர்	சரஸ்வதி
ஸ்ரீஜூவாலாமாலினி	கோமுகயக்ஷன்
பிரம்மதேவர்	தர்மதேவி
சக்ரேஸ்வரியக்ஷி	சர்வாணயக்ஷி

ஆகிய நாற்பதுக்கும் மேற்பட்ட செப்புச் சிலைகள் உள்ளன. இவற்றுள்ரிஷப தீர்த்தங்கரர் சிலை பழமையானது. ஏனைய சிலைகள் 200 ஆண்டுகட்கு முற்பட்டவை. இவை யாவும் நித்திய வழிபாட்டில் உள்ளன. வெள்ளைக் கல்லாலான ரிஷப தீர்த்தங் கரருக்கு நித்தம் ஒரு காலப் பூசையும், நிவத்தியங்களும் நடைபெறு கின்றன.



13. கள்ளப்புலியூர் - பார்சுவநாதர் கோயில்

கோ. அர்ச்சுனன், சென்னை.

கள்ளப்புலியூர் செஞ்சி தாலுக்காவில் உள்ள ஓர் ஊர் ஆகும். இது செஞ்சியில் இருந்து தேவனூர் வழியாக 23 கி.மீ. வடக்கே உள்ளது. செஞ்சியில் இருந்து பென்னகர் வழியாக 15 கி.மீ. தொலைவிலும் இவ்வூரை அடையலாம். நகர பேருந்து வசதிகள் உள்ளன.இவ்வூரின் மேற்குப் பகுதியில் சமண மதத்தினருக்காக பார்சுவநாதர் கோயில் எடுப்பிக்கப்பட்டு உள்ளது. இக்கோயில் சோழர் காலத்தைச் சேர்ந்தது ஆகும். இதன் மேற்கே சுமார் 200 மீட்டர் தூரத்தில் சமண முனிவர்களின் திருவடி அடையாளங் கள் வடிக்கப்பட்டுள்ளன. இவ்வூரில் 60 சமணசமயக் குடும்பங்கள் இருக்கின்றன. இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் ஆகிய மண்டபங்களைக் கொண்டு விளங்குவதோடு தர்மதேவிக்கும், பத்மாவதிக்கும் மகாமண்டபத்தின் வலப்புறத்தில் தெற்கு நோக்கி துணைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பார்சுவநாதர் கோயில்

இக்கோயிலின் கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது. இது கீழ்த்திசை நோக்கி உள்ளது. கருவறை நடுவே மேடை மீது செவ்வக வடிவான கற்பலகையின் முன்புறம் பார்சுவநாதர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் ஆடை அணியா அழகராக நின்ற கோலத்தில் காணப்படுகிறது. தலை மீது ஐந்து தலைநாகம் கவிழ்ந்து நிழல் கொடுக்கிறது. முதுகின் பின்புறம் நாகத்தின் உடல் சுருண்டு நிற்கிறது. கருவறையின் முன்பு இருப்பது அர்த்த மண்டபம் ஆகும் இங்கு 75 - க்கும் மேற்பட்ட ஆகம சுவடிகள் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதனையடுத்து வருவது மகாமண்டபம் ஆகும். இது மற்ற மண்டபங்களை விட பெரியது ஆகும். இம்மண்டபம் முன்புறம் சதுரமாக விரிந்துள்ளது. நடுவே நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இது மேலும் கீழும் சதுரமாகவும், நடுப்பகுதி எண்பட்டை வடிவிலும் அமைந்து ள்ளது. இதன் போதிகை சோழர்காலப் பாணியில் அமைந் துள்ளது. இம்மண்டபத்தில் ஆண்கள் அமர்ந்து வழிபாட்டிற்குப் பயன்படுத்துகின்றனர். மகாமண்டபத்தின் முன்புறம் முக மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் வாயிலை ஒட்டி

கீழ்மேலாக இருவரிசைகளில் எட்டுத் தூண்கள் அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தை பெண்கள் வழிபாட்டிற்குப் பயன்படுத்துகின்றனர்.

முகமண்டபத்தின் வெளிப்புறத்தில் **மானஸ்தம்பம்** (கொடிமரம்) அமைக்கப்பட்டு உள்ளது. இது ஒரே கல்லினால் நீண்டு உயர்ந்து காணப்படுகிறது. இதன் அடிப்பாகம் சதுரவடிவிலும், மேல்பகுதி அறுகோணம் மற்றும் எண்கோண வடிவங்களில் மாறி மாறி அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தாடி, அதோபத்மம், பலகை ஆகிய பகுதிகளும், அதன் மீது சிகரமும் அமைக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து **மானஸ் தம்பத்திற்கும்** முகமண்டபத்திற்கும் இடையில் பலிபீடம் அமைக்கப்பட்டுள்ளது. எட்டுத் திசைகளையும், காக்கும் கடவுள்களான திசைக்காவலர்களையும் இப்பலிபீடம் குறிப்பால் உணர்த்துகிறது.

தர்மதேவி சன்னிதி

கள்ளப்புலியூரில் உள்ள கோபுரம் மேல் அடுக்கு இன்றி மொட்டைக் கோபுரமாகக் காட்சித் தருகின்றது. இது அதிட்டானம், பாதம், பிரஸ்தரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது். பிரஸ்தரத்தில் கர்ணகூடுகள் அமைக்கப் பட்டுள்ளன. துணைக்கோயிலாக தர்மதேவி அம்மன் சன்னிதி அமைக்கப்பட்டுள்ளது. அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய ஆறு பகுதிகளை இத்துணைக்கோயில் கொண்டு விளங்குகின்றது.

கள்ளப்புலியூரில் உள்ள ரிஷபநாதர் கோயிலில் உள்ள அலங்கார மண்டபம் சோழர் காலத்தைச் சேர்ந்தது ஆகும். விஷேச காலங்களில் உற்சவ மூர்த்தி திருமேனிகள் இங்கிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இக்கோயிலைச் சுற்றி பிரகாரமும், பிரகார மதில் சுவரும் அமைக்கப்பட்டுள்ளன.

கோயில் விமானம்

இக்கோயிலின் விமானம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.அதிட்டானம், பாதம், பிரஸ்தரம், சிகரம், கிரீவம், கலசம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. பாதத்தில் கருவறையைச் சுற்றிலும் தேவக்கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவக்கோட்டத்தில் இறை உருவங்கள் இல்லை. பாதத்தின் மேல் பிரஸ்தரம் உள்ளது. பிரஸ்தரத்தின் கீழ்ப்பகுதி உத்திரம் ஆகும். வாஜனத்தின் மீது விலங்குகளின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கள்ளப்புலியூர் கோயிலின் விமானம் சோழர் காலத்தைச் சேர்ந்தது ஆகும். இக்கோயிலின் விமானச் சாலையில் **சமணத் தீர்த்தங்கரர்களின் உருவங்கள்** அமைக்கப்பட்டுள்ளன. சாலைக்கும், கர்ண கூட்டிற்கும் இடையில் **சிறுசாலை** அமைக்கப்பட்டுள்ளது. **அகாரைகள்** முகசாலைக்கும் சிறுசாலைக்கும் இடையிலும்,சிறுசாலைக்கும் கர்ணகூட்டிற்கும் இடையிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் கர்ண கூடுகளில் **கணதரரின் உருவங்கள்** அமர்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் மீது கிரீவமும் அதன் மீது சிகரமும் அமைக்கப்பட்டுள்ளன. சிகரத்தின் நான்கு புறமும் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. சிகரம் நெல்லிக்கனி வடிவில் உள்ளது. இதன் மீது மகாபத்மம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மீது பூரண கும்பம் வடிவில் கலசம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறையும், அர்த்த மண்டபமும் கருங்கல் கட்டுமானத்துடன் கூடிய பழைய அமைப்பாகும் . மகாமண்டபம், முகமண்டபம் வெளிச்சுவர் யாவும் செங்கற் கட்டுமானம் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது.

சமணத் திருமேனிகள்

சமணத் திருமேனிகளில் பழைமையானது பார்சுவநாதர் திருமேனியாகும். பார்சுவநாதர் **இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர்** ஆவார். தரனேந்திரனும், பத்மாவதியும் பார்சுவ நாதரின் பணியாளர்கள் ஆகும். கற்சிற்பமான பத்மாவதியின் திருமேனி இக்கோயிலின் கருவறையின் முன்பு வைக்கப் பட்டுள்ளது. இக்கோயிலின் மூலவரான பார்சுவநாதர் அகற்றப்பட்டு செப்புத் திருமேனி வைக்கப்பட்டுள்ளது. கல்லில் வடிக்கப்பட்டுள்ள பத்மாவதி நாகக் கட்டின் கீழ் அமர்ந்துள்ளார். கைகளில் பாசம், அங்குசம், அபயம், பழம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறார். பத்மாவதியின் வாகனம் **கோழிப்பாம்பு** ஆகும். இதனை **குக்குடசர்ப்பம்** என்று அழைப்பர். இதன் உயரம் இரண்டு அடி ஆகும்.

செப்புத் திருமேனிகள்

இக்கோயிலின் மூலவரான பார்சுவர் செப்புத்திருமேனி கி.பி.18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். இவர் நின்ற நிலையில் **கயோத்சர்க்க** கோலத்தில் காட்சி தருகிறார். இவரின் தலை மீது பாம்புக்கூடும் பிரபாவளியும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் 40 செப்புத் திருமேனிகள் உற்சவச்சிலைகளாக உள்ளன. அவற்றில் ,

நந்தீஸ்வர தீபம், பார்சுவ தீர்த்தங்கரர், தர்ம தீர்த்தங்கரர், சதுர்விம்சதி இரத்தின திரயம், பஞ்சபரமேட்டி, அனந்த தீர்த்தங்கரர், நவதேவதை, அனந்தர், ரிஷபாதி அனந்த தீர்த்தங்கரர், ரிஷப தீர்த்தங்கரர்,சக்கரேஸ்வரி, யக்ஷி, கோமுக யக்ஷன், சரஸ்வதி, சர்வாங்க யக்ஷன், கூஷ்மாண்டி யக்ஷி, வர்த்தமான தீர்த்தங்கரர், சாந்தி தீர்த்தங்கரர், பாகுபலி சுவாமி, மகாமேரு, நேமி தீர்த்தங்கரர், தரநேந்திர பத்மாவதி, நவகிரகம், கணதரர், யானை மீது பிரம்மதேவர், ஜுவாலினி யக்ஷி, சுதர்ஸ்கந்தம், பாதம், பலிபீடம், அஷ்டமங்கலம் முதலியவை குறிப்பிடத் தக்கவை. இவை கி.பி. 16 முதல் 18 ஆம் நூற்றாண்டுகளில் செய்தளிக்கப் பெற்றவை. **கணதரர்** சிலையில் எழுத்துப் பொறிப்பு உள்ளது. சாலிவாகன சகாப்தம் 1834 என கிரந்த எழுத்திலும் , தமிழ் எண்ணிலும் குறிக்கப்பட்டுள்ளது.[1] எனவே இச்சிலை கி.பி. 1912 - இல் வார்த்தளிக்கப்பட்டதை அறிகிறோம்.

அடிக்குறிப்பு :

மா. சந்திர மூர்த்தி, எழுத்துப் பொறித்த செப்புத் திருமேனிகள் - ஓர் ஆய்வு, தரங்கம்பாடி வரலாற்றுக் கருத்தரங்கு, 1988.



14. வீரவீர ஜினாலயம்

(அழகிய சோழப் பெரும்பள்ளி)

கி. ஸ்ரீதரன், சென்னை.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டத்தில் ஆரணி - ஆற்காடு சாலையில் 3 கி. மீ. தொலைவில் பூண்டி அருகர் கோயில் அமைந்துள்ளது. சமண சமயத்தைச் சார்ந்த இக்கோயிலை வரலாற்றுச் சின்னமாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை போற்றிப் பராமரித்து வருகிறது.

பொன்எழில் நாதர் என வழங்கப்படும் இக்கோயில் சோழர்காலக் கட்டடக் கலைச்சிறப்புடன் அமைந்துள்ளது. சமயம் மாறுபட்டாலும் தமிழகக் கட்டக்கலையின் மரபு மாறாமல் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலை **வீர சம்புவராயன்** என்ற சிற்றரசன் கி.பி.13 - ஆம் நூற்றாண்டில் கட்டியதால் அவனது பெயர் அடிப்படையில் இக்கோயிலை **வீர வீர ஜினாலயம்** என்றும் அழைப்பது இக்கோயில் கல்வெட்டினால் அறிய முடிகிறது.

இக்கோயில் கருவறை , அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைத் திருச்சுற்று மதில் உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. கருவறையின் அடித்தளம் உபானம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை என்ற உறுப்புகளை உடையதாக விளங்குகிறது. கருவறை வெளிச் சுவரினை கோஷ்டபஞ்சரம் என்ற அமைப்புகள் அலங்கரிக்கின்றன. தேவ கோட்டங்களுக்கு மேல் (வண்டிக்கூரை) சாலை அமைப்பு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதன் நடுப்பகுதியில் தீர்த்தங்கரர் வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அரைத் தூண்களில் பலகைப்பகுதிக்குக் கீழே நடனமாடும் பெண்களின் சிற்ப வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. இக்கோயிலின் கருவறை பிற்காலச் சோழர் கட்டடக் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

கருவறையும், அர்த்த மண்டபமும் தான் முதலில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காண முடிகிறது. மகாமண்டபம் பின்னர் கி.பி.15 - 16 - ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கட்டடக்கலை மாற்றங்களினால் அறிய முடிகிறது.

கருவறைக்கு மேலே இருதள விமானம் காட்சி தருகிறது. சுதையினால் கட்டப்பட்ட இவ்விமானத்தில் பல தீர்த்தங்கரரின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறையில் பார்சுவ நாதரின்

அழகிய வடிவத்தைக் காணமுடிகிறது. இக்கோயில் பார்சுவநாதருக்காக அமைக்கப்பட்டக் கோயிலாகும். தலைக்கு மேலே பாம்பின் வடிவத்தையும் நின்ற கோலத்தில் பார்சுவநாதரையும் காணலாம். இதே வடிவம் கோயிலின் நுழைவு வாயிலில் அமைக்ககப்பட்டுள்ள மூன்று நிலைக் கோபுரத்திலும் சுதையால் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறைக்கு முன் உள்ள மகாமண்டபத்தில் 24 தீர்த்தங்கரர்கள் அடங்கிய சிற்பங்களும், நவதேவதை சிற்பங்களும் வழிபாட்டில் உள்ளன. இக்கோயில் ஒரு திருச்சுற்றுடன் விளங்குகிறது. திருச்சுற்றில் **பிரம்மதேவர், சரசுவதி, லட்சுமி, சக்கரேசுவரி, பத்மாவதி, நவக்கிரகங்கள்** வழிபாட்டில் உள்ளன.

திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் பொன்எழில் நாதர் மற்றும் ஜுவாலா மாலினி ஆகியோருக்கு தனிக் கோயில் (சன்னிதி) உள்ளது. ஆதிநாதர் ஆன பென்எழில நாதர் தியான கோலத்தில் அமர்ந்திருக்க இரு மருங்கும் சாமரம் வீசுவோரது சிற்றுருவங்களும், தலைக்கு மேலே முக்குடையும் மெல்லியதாக வடிக்கப்பட்டுள்ளன.

இச்சன்னிதிக்கு முன்னர் 1949 - இல் அமைக்கப்பட்ட மானஸ்தம்பம் உள்ளது. இதில் **பூண்டிக் கோயில் அர்ச்சகர் அப்பாகுட்டி உபாத்தியார் தர்மம் 25 - 1 - 49** என்று கீழ்ப்பகுதியில் எழுத்துப் பொறிப்புக் காணப்படுகிறது.

இக்கோயிலின் கருவறையின் மேற்குப் பக்கத்தின் அதிட்டானத்தில் பாடல் கல்வெட்டு காணப்படுகிறது. **சீயன் சம்பு மன்** ...... என்ற பெயர் அக்கல்வெட்டில் வருகின்றது. அதனைத் தொடர்ந்து **'வீர வீர ஜினாலயம் என்று தன்பெயர் பொறித்தமைத்து'** என்ற தொடரும் வருவதால் **சம்புவராயர்** பணியாக இருக்கலாம். என தென்னிந்திய கல்வெட்டு ஆண்டறிக்கை 1900 ,எண்- 58 குறிப்பிடுகிறது."

இக்கோயிலின் கிழக்கே ஒரு வயலின் நடுவே கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் ஒன்று அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்டது. பல்குன்றக் கோட்டத்து மெய்யூர் நாட்டுப் பூண்டியில் அழகிய சோழப்பெரும்பள்ளி நாயனார்க்குத் திருவிளக்குக்குத் தான் பெறும் மகமை, நாட்டு வினியோகம் ஆகியவற்றைத் தானமாக அளித்த செய்தி இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் மன்னன் பெயர் இல்லை. சக ஆண்டு எழுதப்பட்டுள்ளது. எனினும் ஆண்டுப்பகுதி படிக்க இயலாத அளவு பொறிந்து விட்டது. பிற்பகுதி பெரிதும் சிதைந்துள்ளது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இதன் காலம் கி.பி.

14 - ஆம் நூற்றாண்டு எனக் கருத முடிகிறது. கல்வெட்டின் மேல் பகுதியில் சமணப்பெண் தெய்வம் (யக்ஷி) உருவம் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலி வாகன சகாப்தம்
2. பலகுன்ற கொட்டத்து மெய்யூர் நாட்டு
3. பூண்டியில் அழகிய சோழப் பெரு
4. ம் பள்ளி நாயனார்க்கு திருவிளக்குக்கு
5. ச் ச[ம]ந்துக் குடுத்தார் . . [மகமை] னாட்
6. டு வினியோகத்துக்கு கடவோம்
7. நாட்டு வினியோகத்துக்கு
8. கொடு வந்த இவர்களுக்கு . .
9. டவதல்ல இப்படிக்கு இது (வே)ம்
10. (ா) னியமாக விடு(த்)தோம் யா . . . கொ
11. ள்வோ (மாக) சிறப்பாகக் குடுத்தோம்
12. நாங்களு மிடக் கடவதாகவும்
13. . . . . . . க்கும் . . . இப்
14. . . ஆவுத்தார்க்கும் . . . இப்
15. ல் இவை . . . னையாக
16. ம் யாக . . இக்கட . . ம்
17. . . . . கடவோம்

இதில் குறிக்கப்படும் அழகிய சோழப்பெரும் பள்ளி முதலில் வீரவீர ஜினாலயம் என்று பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்தில் அழகிய சோழப்பெரும் பள்ளி என்று பெயர் மாற்றம் அடைந்ததை இக்கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது.

அருகர் கோயிலில் உள்ள பாடல் கல்வெட்டு

1. சிறப்பருளிக் கொற்றவன் மகிழ்ந்த கொள்கையனாகி மெய்த்தவத்திர்க்கு வெண்டுவதி யாதென அத்தவனுரைப்பொ னின்னகன்றலை ஞாலத்துச் செயங்கொண்ட சொழ மண்டலந்தன்னிற் பயன்படு சொலைப் பல்குன்றக் கொட்டத்து வெண்டியது (சு)ரக்கு மெயூர் நாட்டுப் பூண்டியென்பது காண்டகு திருநகர் சியன் சம்புமன் திரு . . . . . றமாப் பொய்காலத்துப்

2. (பு)ரந்துடன் வந்தது அறநெறி வளர வருணமக்கென்ன மற(ம)லிதானை மன்னர் மன்னன் சினவரன்றனக்குச் செம்பொற் கொ்யி னிவன் தகவருளி நின்று நீடு விளங்க வீரவீரசியென் றினி தினிடப்ப வெல்லை தழுவிய விரும்பெடுட்பட நல்லறந் தழைப்ப . . . . . கமைந்தனனெ

3. அஃதான் றணிநக ரகன்பெய ரெல்லையாவதுங் கணியிலுப்பைக்குக் காண்டகு மெற்கு நெருநற்பாக்கத்தெல்லை வடமெற்கும் பொருநற்குன்றிப் புனல்யாற்றின் வடக்குங் குலாமலிகுண்டிகைத் துறைக்கு வடகிழக்கு மிலாறையா தித்தமங்கலத் தெல்லைக் கெய்கிழக்கு மிரும்புனற் பொய்கை மெயூரெல்லை . . ந்த தென் கிழக்கு மல்ல

4. ற்றால் சீர் மறையொ ராதையெல்லை நிலத்துக்கியைந்த தெற்கு மிவ்வாதனூரி லகன் பெயரெல்லையிற் பீலிமடுவிற்குப் பிறங்கு தென்மெற்கு மெண்டிசைமருங்கி னுமியன்றவெல்லையிற் குண்டிகைக்கல்லு நாட்டிக் கண்கவர் கொல்லை நன்னிலங் குறைவின்றி விரிந் . . . . . னெல்லைமுற்று மி

5. றையும் வரியு மந்தராயமு மாயமு மமஞ்சியும் வந்தன பிறவுமாற்றி வளமலிமாளிகை யெடுக்கவு மணிக்குலைக்கமுகு நளிகெரமு நன்குடனாக்கவுங் கரும்புஞ் செந்நெலு மொருங்குடனடவுஞ் ச(ம்)பகந தமனகஞ் சதி கெதகை வண்கழுநீருடன் மலர்பல வியற்றவும் . . . . ஞ் செக்கு மமைக்*

6. கவுமருளிச் சாலையுந் தவமுந் தருமமுந் தழைப்பச் செம்பிலுங் கல்லிலுஞ் செய்து தன் புக ழலர்கதிரளவுஞ் செல்ல மலர் த(லை) யுலகின் வாழ்வமைத்தனனெ வ

உதவிய நூல்கள்

1. South Indian Inscription, Vol - VII - *62*

2. *அழகிய சோழப்பெரும் பள்ளி,கல்வெட்டிதழ், 64, தொல்லியல் துறை வெளியீடு (அக்டோபர் - 2004)*

☛ *இக்கல்வெட்டு அழகிய சீயன் சொக்கசீயன் என்று விருதுகள் கொண்டிருந்த காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் காலத்தியதாக இருக்கலாம் என்று பதிப்பாசிரியர் நடன. காசிநாதன் கருதுகிறார்.*

15. உப்பு வேலூர் சமணர்களின் சமூகப்பார்வை

சு. வேல்முருகன், புதுவை.

முன்னுரை

தொண்டை மண்டலத்தில் தொல் சீர்பரப்பும் திண்டிவனம் வட்டம் வானூர் ஒன்றியத்தில் உள்ளது உப்புவேலூர். அவ்வூரில் நாற்பது குடும்பங்களில் 200 சமணர்கள் வாழ்கின்றனர். அம்மக்களின் கோயில் வழிபாடு, சமூகப்பழக்கங்கள். பண்பாட்டுக் கூறுகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இடப்பெயராய்வு

உழவுத்தொழில் வளங்கொழிக்கும் உப்புவேலூர் புதுச்சேரி - திண்டிவனம் பேருந்து சாலையில் கிளியனூரின் கிழக்கே 16 கல் தொலைவில் அமைந்துள்ளது. ஒய்மா நாடெனும் திண்டிவனப் பகுதியில் நல்லியகோடன் ஆட்சி புரிந்த வேளையில் அவனுக்குப் போர் புரிய வேல் கொடுத்த ஊராதலின் அதனை உப்பு வேலூர் என்பார். முருகனுக்கு வேல் கொடுத்த ஊராதலின் உப்பு வேலூர் என்பாரும் உளர்.

நல்லியக்கோடன் காலத்தில் உப்பினை ஏற்றி வந்து இருப்பு வைத்துப் பயன்படுத்தினர். அதனால் உப்புவேலூர் ஆயிற்று என்கின்றனர். ஊரில் உப்புப்பாட்டை வீதி என்று ஒரு தெரு உள்ளது. இன்றும் ஊரில் உள்ள ஒரு பெரிய மேட்டிற்குக் குதிரைக் கட்டியமேடு என மக்கள் கூறுகின்றனர். உப்பு ஏற்றிய குதிரைகளை இங்குத்தான் இளைப்பாறக் கட்டி வைத்திருந்தனர். உலகோர் புகழ்ந்து செப்பும் படியாக உள்ள உப்புவேலூரின் பழைமையை இதனால் உய்த்துணரலாம். சமணர்களின் வீடுகள் நூறு ஆண்டுகளுக்கு மேலான பழைமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. நாட்டு ஓடு போட்ட சுற்றுக்கட்டி வீடுகள் ஒரே கதவுடன் காணப்படுகின்றன.

இடம் பெயரக் காரணம்

செஞ்சிப் பகுதியில் செழிப்புடன் வாழ்ந்த சமணர்கள் ஆட்சியாளர்களின் தொல்லை தாங்க முடியாமல் இடம் பெயர்ந்து இங்கு வந்து விட்டனர். திண்டிவனத்திலிருந்து பிரம்மதேசம், உலகாபுரம் வழியே வயற்காட்டுப் பகுதியைக் கடந்து இவ்விடத்திற்கு வந்து வாழிடமாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக முஸ்லீம்களின் படையெடுப்பு முதன்மைக் காரணமாகும். இருநூறு - முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே இவர்களின் முன்னோர்கள் இங்கு வந்துவிட்டதாகக் கூறுகின்றனர்.பலகுடும்பங்கள் குழந்தைகளையும், முதியவர்

களையும் அழைத்துக் கொண்டு தட்டு முட்டுச் சாமான்களோடு நடந்தே இவ்வூருக்கு வந்ததாக நினைவுக் கூறுகின்றனர்.

சமணர்கள் கூட்டுக் குடும்பங்களாக வாழ்கின்றனர். குடும்பத் தலைவரின் அறிவுரைப்படி குடும்பங்கள் நன்முறையில் நடந்து வருகின்றன. பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் பேரார்வம் காட்டுகின்றனர். சிலர் வேளாண்மை, அரசு மற்றும் தனியார் துறையில் பணியாற்றுகின்றனர். சிலர் வணிகம் செய்கின்றனர். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' எனும்படி வாழ்க்கைச் சூழலை அமைத்துக் கொண்டனர்.

கோயில்

உப்பு வேலூரில் சமணர்களால் கட்டப்பட்ட பழைய கோயிலை இடித்து விட்டுப் புதிய வடிவமைப்பில் கோயிலைக் கட்டியுள்ளனர். இப்போதிருக்கும் கோயில் அறுபது ஆண்டுகளுக்கு முன் புதுப்பித்த கோயிலாகும். பஜனைக் கோயில் இடிந்து போயிற்று.

கோயின் மூலவர் **விருஷப தீர்த்தங்கரர்** ஆவார். அவரே வழிபடு தெய்வம். பெண் தெய்வங்களாகப் பத்மாவதி அம்மன், சுவாலா மாலினி அம்மன் சிலை வழிபாடு உண்டு. சிலையாக வடித்திருக்கும் தருமதேவியைச் சமணர்கள் வழிபட்டு வருகின்றனர். மற்ற சமணர்கள் வாழிடங்களில் உள்ளது போல் எழுமாதர் (சப்தகன்னியர்) வழிபாடும், நாகவழிபாடும் இங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சமணரின் சாத்திரப்படி கட்டியுள்ள இக்கோயிலில் 1. இராசகோபுரம்,2. பலிபீடம், 3. மானஸ்தம்பம், 4. முன்மண்டபம், 5. துவாரபாலகர், 6. சங்கநிதி, 7. பத்மநிதி, 8. ஆகமநூல்கள்,9. உற்சவ மூர்த்திகள்,10. பிரம்மதேவர், 11. முக்குடைச்சட்டம், 12. அபிடேகத் திருமேனி, 13. இயட்சி கருவறை,14. உள்மண்டபம்,15.மூலவர்,16. பத்மாவதி,17. நவக்கிரகம், 18. சேத்திர பாலகர், 19. பாண்டுக சிலை மண்டபம் முதலியவை உள்ளன.

மேல் சித்தாமூர் மேற்பார்வை

திண்டிவனம்- செஞ்சி சாலையில் வல்லம் எனும் இடத்திற்கு வடக்கே இரண்டு கி.மீ. தூரத்தில் மேல்சித்தாமூர் உள்ளது. அங்குள்ள சமண மடமே அனைத்துக்கும் தலைமை இடமாக உள்ளது. அம்மடத்தின் மேற்பார்வையில் தான் உப்புவேலூர் கோயிலும் நடைபெற்று வருகின்றது. மேலும் திருமலை சமண மடாதிபதிகளும் இங்குள்ள கோயிலுக்கு வேண்டிய அறிவுரைகள் வழிகாட்டுதல்கள் அளித்து வருகின்றனர்.

பாண்டுகசிலை மண்டபம்

கோயிலின் முன்பகுதியில் தெற்குத் திசை நோக்கியவாறு பாண்டுக சிலை மண்டபம் அழகாக அமைந்துள்ளது. பாண்டுக சிலை மண்டபம் என்பதற்கு வெண்மைக் கல்லாலான இருக்கை என்பது பொருள்.ஜென்மாபிடேகம் என்கிற நிகழ்ச்சி நடைபெறக் கூடிய இடமாகும்.

அதனுள் கண்ணாடியாலான ஓர் அறையை தனியே அமைத்துள்ளனர். அதில் சுதை வேலைப்பாடுகளால் குன்றுகள், சுனைகள், அருவிகள் போன்றவற்றைச் செய்து, வண்ணம் தீட்டி அழகு படுத்தியுள்ளனர்.ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் தனித்தனியே மண்டபம் கட்டி மின்விளக்குகளால் அணி செய்துள்ளனர். கோயிலுக்கு வருவோர் பாண்டுக சிலை மண்டபத்தைக் கண்டு களிக்குமாறு பாங்குடன் அமைத்துள்ளனர். இம்மண்டபத்தை அமைத்தவரின் வாரிசு இங்கு வாழ்கின்றனர். மண்டபத் தூணில் கல்வெட்டு ஒன்றுள்ளது. அதன் மூலம் கட்டியவர் வரலாறு தெரிகிறது

பூஞ்செடி சாமி

கோயிலின் வடக்குப் பகுதியில் பூஞ்செடிசாமி அமர்ந்த நிலையில் உள்ளார். மழையில்லாத போது பூசை செய்து வணங்கினால் மழை பெய்யும் எனக் கூறுகின்றனர். அவ்வழகிய சிலையினைத் திறந்து வைத்தவர் விஜயமதி மாதாஜி சங்கமம் - ஸ்தாபன 26 - 2 - 87, பிரம்சாரிணி குல்கந்திபாய், கிசான்கட், இராஜஸ்தான் என்று அங்குள்ள கல்வெட்டு வாசகம் பேசுகிறது.

சேத்திரபாலகர்

இங்குள்ள சேத்திர பாலகர் சிலை மிக அருமையான முறையில் சிற்பியின் கைவண்ணத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றது. நான்கு கைகளிலும் சின்னங்களை ஏந்தியவாறு தலை முடியில் தீ நாக்குகள் மேல்நோக்கிச் சுடர் விட, அதன் நடுவில் தீர்த்தங்கரர் அமர்ந்திருப்பது போல அமைந்திருக்கும் முறை காண்பதற்கரிய சிற்பமாகும். பின்புறத்தில் காவலுக்குத் துணையாக நாய் ஒன்றுள்ளது.

அறவாழி

மூலவரான விருஷப தீர்த்தங்கரருக்குத் தென்திசையில் ஐம்பொன்னாலான தகட்டில் சக்கர அமைப்பைக் காணமுடிகிறது. தீர்த்தங்கரர்களின் தகட்டில் சக்கர அருளுரையும், ஆசியும் எப்போதும் நிகழ்ந்துக் கொண்டிருப்பதாக எண்ணிச் சக்கரத்தை அமைத்துள்ளனர். 24 தீர்த்தங்கரர் களின் நினைவாக 24 ஆரக்கால்கள் அதில் காணப்படுகின்றன. அதில் உள்ள அறுகோணங்கள், ஆறுவகைத் தொழில்களையும், ஆறுவகை உயிர்களையும் குறிப்பதாகக் கூறுகின்றனர். அங்குள்ள மேடைகளில் பல செப்புத் திருமேனிகளும், விளக்குகளும் , பூசைக்குரிய பாத்திரங்களும் காணப்படுகின்றன. மேலும் சித்தச் சக்கரம், கணதர வளையம், இயட்சச் சக்கரம், ஸ்தாபன சக்கரம் முதலியவை இருப்பதாகவும் கூறுகின்றனர்.

உபாத்தியாயர்

கோயில் பணிகளைக் கவனிக்கும் பொறுப்பாளரை **உபாத்தியார்** என்று அழைக்கின்றனர். ஆசிரியர்களை, குருவாக மதிக்கக் கூடியவர்களை **உபாத்தியாயர்** என்பது உலக வழக்கு .

ஆனால் இங்குள்ள உபாத்தியாயர் கோயில் பணிகளைக் கவனிப்போராக உள்ளார்.

இங்குள்ள விருஷப தீர்த்தங்கரருக்குக் காலை, மாலை பூசை வழிபாடு செய்பவர் உபாத்தியாயரே ஆவர். வழிபாட்டுப் பணிகள் முடிந்ததும் மற்ற சமணர்களோடு நெருங்கிப் பழகி, இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொள்கின்றனர். அவருக்குச் சமண மக்களிடையே ஒரு மதிப்பு உண்டு.

திருமணங்கள்

இங்கு உறவுமுறைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. கொள்வினை, கொடுப்பினை எல்லாம் அவர்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன. திருமணங்களை அர்ச்சகர்- உபாத்தியாயர் நடத்தி வைக்கின்றனர். (உபநயனம்) பூணூல் கல்யாணம், ஆண் பெண் முகதரிசனம், கங்கணம் கட்டுதல், அரசாணிக்கால் நடுதல், பாலியம் விடுதல் ஆகிய அனைத்தும் நடைபெறுவதுண்டு. ஆனால் பாத பூசை மட்டும் கிடையாது.

ஸ்வஸ்திக் என்று மூன்று முடிச்சுப் போடுதல் உண்டு. தென்னஞ்சோலை குறியீடு மங்கல நாணில் உள்ளது. நாகவள்ளி முகூர்த்தம், பெண்ணின் காலில் மெட்டி போடுதல், சீர்வரிசைக் கொடுத்தல் ஆகியவை உண்டு. திருமணத்தின் போது முப்பத்திரண்டு விளக்குகள் ஏற்றுவர். திருமணம் முடிந்ததும் வரவேற்பு செய்வர். அதனை **எதிர் கல்யாணம்** என்பர். அது வாழ்த்தாக அமையும். கழுத்தில் மஞ்சள் கயிறு அல்லது இரட்டைச்சரடு போடும் வழக்கம் உள்ளது.திருமணங்கள் செய்து வைக்கும் உபாத்தியாயர் தம் குடும்பத்திற்குள் திருமண உறவு வைத்துக் கொள்வர். அவர்கள் வேறு சமணர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. வேறு யாரிடமும் பெண் எடுக்கமாட்டார்கள்.

பிற பழக்கங்கள்

குழந்தைகளுக்குக் காதணி விழா என்றால் உளுந்தூர் பேட்டைக்கு அருகிலுள்ள திருநறுங்கொண்டைக்குச் சென்று வழிபாடு செய்து, காதணி விழா செய்கின்றனர். உயிர்ப்பலியிடல், ஊன் உண்ணுதல் கிடையாது. புகைத்தல், மதுப்பழக்கம் கிடையாது.

இறப்பு நிகழ்ச்சியை **அபணகிரியை** (அபரகிரியை) என்கின்றனர். பூ, மாலை வைத்துக் கட்டுகிற பாடை உண்டு. ஆனால் பாடை கட்டுவதற்காக நிறைய பணம் செலவழிப்பது கிடையாது. ஏழு- புள், தாள்கத்தை, வைக்கோல் போட்டு புதிய துணியைப் போர்த்திக் கொண்டு செல்வர். இறந்தவர் உடலை இரவில் தங்க வைப்பதில்லை. உடனே எரித்து விடுவர். இறப்புச் செய்தியைச் **சுகதிப் பிராப்தி** என்கின்றனர். இறந்த நாளிலிருந்து 11, 13, 15 ஆகிய நாட்களில் காரியம் செய்கின்றனர்.

ஐம்பது வயதுக்கு மேல் உள்ளவர்கள் வெங்காயம், வெள்ளைப்பூண்டு சாப்பிட மாட்டார்கள். மாலையில் ஆறு மணிக்கு மேல் சாப்பிட மாட்டார்கள். தண்ணீர் குடிக்க நேர்ந்தாலும் குடிக்கமாட்டார்கள். உபவாசம் இருப்பவர்கள் ஒருநாள் முழுதும் தண்ணீர் கூட அருந்தாமல் இருப்பர். சிலர் வெள்ளிக் கிழமைகளில் சாப்பிடமாட்டார்கள்.

வழிபாட்டு முறை

உப்பு வேலூரில் உள்ள தீர்த்தங்கரர் கோயிலில் நவராத்திரி விழா செய்வதுண்டு. தேவிகளுக்கு மட்டும் தான் பூசை நடைபெறும். ஒன்பது நாள் பூசை கோயிலுக்கு உள்ளேயே நடைபெறும். உபயதாரர் மட்டும் விழா ஏற்பாட்டைச் செய்வர். இது பரம்பரை பரம்பரையாகச் செய்யப்படுகிறது. நவராத்திரி பூசையின் போது சுண்டல் கொடுப்பர். வெற்றிலைப் பாக்கினைப் பட்டிப்போட்டுக் கொடுப்பதுண்டு. படையலின் போது கற்பூரம் ஏற்றுவர். நவராத்திரி பூசை தீர்த்தங்கரருக்குச் செய்வதில்லை. கொலுவின் போது சரசுவதி பொம்மை, சமசுகிருதத்தில் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் முதலியவற்றை வைத்து வழிபடுவர்.

நற்காட்சி விரதம்

உப்புவேலூர் சமணர்கள் நற்காட்சி விரதம் இருக்கும் பழக்கம் கொண்டவர்கள். கார்த்திகைத் திங்கள் கடைசி நாளில் மாலை போட்டு நாற்பத்தெட்டு நாட்கள் விரதம் இருந்து உளுந்தூர்பேட்டைக்கு அருகிலுள்ள திருநறுங்கொண்டைக்குச் செல்வது வழக்கம். சபரிமலை ஐயப்பனுக்கு மாலை போடுவது போல நற்காட்சி விரதத்திற்கும் மாலை போட்டுக் கொள்கின்றனர். காவி உடையைக் கட்டிக் கொண்டு இரண்டு வேளை உணவு மட்டும் உண்டு வருகின்றனர். புளித்த மாவில் உணவுப் பொருள் செய்யப்படுவதில்லை. மாவு அரைத்த உடனேயே அதில் இட்டலி, தோசை எனச் செய்து உண்கின்றனர்.

உப்புவேலூர் சமணர்களின் இப்பழக்கம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. தலையில் சுமக்க வேண்டிய இருமுடி கிடையாது. நடந்தே திருநறுங்கொண்டை சென்று இறைவனை வணங்குவர். அங்குள்ள நிர்வாண நிலை தீர்த்தங்கரருக்குப் படையல் போடுவர். இப்படிச் செய்வதன் மூலம் தமக்கும் தம் குடும்பத்தார்க்கும் எல்லா நலமும் வளமும் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

சமயப்பொறை

சோழர், பல்லவர்களின் ஆட்சிக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் பல்வேறு தொல்லைகளுக்கு ஆட்பட்டாலும் பிற சமயத்தைச் சாராமல் சமண சமயத்தையே பின்பற்றி வாழ்கின்ற மக்களைக் கொண்டது உப்புவேலூர் எனும் போது அவர்களின் வைராக்கியம் புலப்படுகிறது. அங்கு வாழும்

இந்துக்கள், முசுலிம்கள், கிறித்துவர்கள் போன்ற பிற சமயத் தாரோடு பகைமை பாராட்டாமல் சமயக் காழ்ப்பு இல்லாமல் வாழ்வது பாராட்டுக்குரியதாகும். அனைவராலும் மதிக்கப்படும் மக்களாகச் சமணர்கள் அங்கு வாழ்வது வாழ்வியல் நெறியில் அவர்கள் கொண்டிருக்கும் ஒரு பிடிப்பினைக் காட்டுகிறது. ஒழுக்கம் சார்ந்த வாழ்வியல் முறையில் பிறரால் மதிக்கப்படு கின்றனர்.

சமணர் என்றும், நயினார் என்றும், சைனர் என்றும் மக்களால் அழைக்கப்படுகினறனர். பொருளாதாரத்தில் சிறிது ஏற்றத்தாழ்வு இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் வேறுபாடு இல்லை. பிறரோடு கருத்து வேறுபாடு என்பதில்லை. அனைவரும் ஒரே பண்பாட்டை பழக்க வழக்கத்தைப் பின்பற்றி வாழ்வதால் வேறுபாட்டிற்கு இடமில்லாமல் போகிறது.

பசிப்பிணி அகற்றல், கல்வி உதவி, பொருளாதார உதவி முதலியன செய்து பிற மக்களின் இன்ப துன்பங்களில பங்கு கொள்கின்றனர். **மனித நேயம், சகோதர உறவு, விருந்தோம்பல், வழிபாடு** ஆகியவற்றைக் காத்து உப்பு வேலூர் சமணர்கள் பண்பாட்டில் உயர்ந்து காணப்படுகின்றனர்.

முடிவுரை

உப்புவேலூரில் சமணர்களின் வாழ்க்கை சூழலுக்கு ஏற்ப மாறுதல் கண்டு வருகிறது. பல்வேறு பணிகளின் காரணமாகக் குடும்பங்கள் இடம் பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. இனி எதிர் வரும் காலத்தில் இங்கு மிஞ்சியிருக்கும் குடும்பங்கள் மிகச்சிலவே எனும்படியாக நிலை உருவாகி வருகிறது. அங்குச் சமணர்கள் வாழ்கிறார்கள். வாழ்வதற்கான அடையாளங்களை விட்டுச் செல்கின்றனர் என்பதிலே நமக்குப் பெருமை. அவர்களின் வாழ்க்கை மேம்பட உறுதுணை புரிவோமாக.

உதவிய நூல்கள்

1. சமணமும் தமிழும் - மயிலை.சீனி. வேங்கடசாமி, கழகம்.
2. செஞ்சிப்பகுதியில் சமணம் - அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி

நேர்காணல் உதவி

திரு. செந்தமிழ்ச் செம்மல். சீனு. வேணுகோபால்

திரு. பாவலர்.ஆ. மு. தமிழ்வேந்தன், புதுவை

திரு. ஏ. ஜோதிகாந்தன், ஆசிரியர் (ஓய்வு) உப்புவேலூர்

திரு. ஆர். சந்திரநாதன். ஆசிரியர் (ஓய்வு) உப்புவேலூர்

திரு. துரை (எ) தன்யகுமார் ஆசிரியர், உப்புவேலூர்.



16. கலிக்குறி அரசர் அமைத்த பாழி

ப. வெங்கடேசன், காவேரிப்பாக்கம்.

வேலூர் மாவட்டம், வேலூரிலிருந்து தெற்கே 20 கி. மீ. தொலைவில் சறுக்கு மலை அமைந்துள்ளது. இம்மலை தெற்கு - வடக்காக நீண்டு சுமார் 6 கி.மீ. நீளமுடையதாக உள்ளது. சரிவாக வழுக்கும் தன்மையுள்ள பல பாறைகள் இம்மலையில் அமைந்துள்ளதால், இம்மலைக்கு சறுக்குமலை எனப் பெயர் வந்திருக்கலாம். இம்மலைக்கு அருகில் சின்னப்பாலம் பாக்கம், ரங்காபுரம், நாகநதி, கீழ்அரசம்பட்டு முதலிய ஊர்கள் அமைந்துள்ளன.இம்மலைக்குத் தென்பகுதியில் சின்னப்பாலம் பாக்கமும், வடபகுதியில் கீழ்அரசம்பட்டும் உள்ளன.

கீழ்அரசம்பட்டு ஊருக்கு அருகில் அமைந்துள்ள இம்மலைப் பகுதியின் அடிவாரத்தில், ஒரு பெரிய பாறையில் 76 செ.மீ. நீளமும், 30 செ.மீ. அகலமும் கொண்ட செவ்வகக் கட்டத்தில் மூன்று வரிகளிலுள்ள கல்வெட்டு பின்வருமாறு உள்ளது.

1. ஸ்ரீ கோவிசைய நந்திச்சுவர பருமற்கு யாண்டு நாலா
2. வது ஸ்ரீ கலிக்குறி அரசர் செய்வித்த பாழி
3. ஸ்ரீ மல்லன் துக்கலி[1]

பல்லவ மன்னன் நந்திச்சுவர வர்மனின் நாலாவது ஆட்சியாண்டில் ஸ்ரீகலிக்குறி அரசர் என்பவர் சமணச் சான்றோர் ஒருவர் தங்குவதற்கு பாழி எனப்படும் படுக்கையை அமைத்துக் கொடுத்த செய்தியை இது குறிப்பிடுகிறது. **பல்லவர் காலத்தில் பாழியைக் குறிக்கும் கல்வெட்டு தமிழகத்தில் கிடைத்திருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.**

நந்தீச்சுவரவர்மன் எனப் பெயர்ப் பொறித்த கல்வெட்டுகள் இதற்கு முன் திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்இராவந்த பாடி[2] என்ற ஊரிலும், வேலூர் மாவட்டத்தில் கீரைச் சாத்து என்ற ஊரிலும் கிடைத்துள்ளன. இவ்வூர்களில் அமைந்துள்ள கல்வெட்டுகளில் இடம் பெறும் நந்தீச்சுவரவர்மன் என்பவன் இரண்டாம் நந்திவர்மன் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[3] தவிர கீரைச்சாத்து, பஞ்சபாண்டவமலை முதலிய ஊர்களிலுள்ள இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டு எழுத்துக்களும் சறுக்கு மலையிலுள்ள நந்தீச்சுவரவர்மனின் கல்வெட்டு எழுத்துக்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்துள்ளன. மேலும் ஸ்ரீமல்லன் துக்கலி என்ற பெயர் இக்கல்வெட்டில் இடம்

பெறுகிறது. மல்லன் என்னும் சிறப்புப் பெயர் இரண்டாம் நந்திவர்மனுக்கு உரியதாகும். ஆகவே இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் நந்தீச்சுவரவர்மன் இரண்டாம் நந்திவர்மன் ஆவான். இக்கல்வெட்டு அவனது 4 - வது ஆட்சியாண்டில் கி.பி. 735 - இல் வெட்டப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

இக்கல்வெட்டில் **கலிக்குறி அரசர்** என்ற பெயர் இடம் பெற்றுள்ளது. இக்கலிக்குறி அரசர் யார்? என்பதைப் பற்றி இங்கு ஆராய்வோம். கலி அரசரைப் பற்றியச் செய்தி முதன் முதலில் நமக்கு **வேள்விக்குடி செப்பேட்டில்** தான் கிடைக்கிறது. இச்செப்பேட்டில்,

அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி
அகலிடத்தை களப்ரெனன்னுங்
கலி அரசன் கைக்கொண்டு [4]

என்றத் தொடர் வருகிறது. எண்ணற்ற ஆதி அரசர்கள் ஆண்டுக் கொண்டிருந்த நிலப்பரப்பைக் கலி மன்னனாகிய **களப்பிரன்** கைப்பற்றிக் கொண்டான் என்று குறிப்பிடுகிறது.[5]

பொன்னிவாடி என்னும் ஊரில் வெட்டப்பட்ட கல்வெட்டில்

ஸ்வஸ்திஸ்ரீ சந்திராத்திய குலதிலகன் சா
ம்ப பௌமன் கலி நிருப கள்வனாயின கோ
க் கண்டன் இரவி [6]

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் **கலி நிருப கள்வனாயின கோக்கண்டன் இரவி** என்றத் தொடர் இடம் பெறுகிறது. இது **கள்வனாயின் கோக்கண்டன் இரவி என்னும் அரசன் கலி அரசன்** என்பதைக் காட்டுகிறது.

வேள்விக்குடி செப்பேட்டில் வரும் கலி அரசன், பொன்னி வாடி கல்வெட்டில் இடம் பெறும் **கலி அரசன், கள்வனாயின கோக்கண்டன் இரவி ஆகியோர் களப்பிரர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்** என்பதை அறியலாம். அறிஞர். திரு. **நடன காசிநாதன்** அவர்களும் **களப்பிரர், கள்வர்** ஆகியோர் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தன்னுடைய **களப்பிரர்** என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[7]

ஆகையால் கீழ்அரசம்பட்டில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டில் குறிக்கப்பெறும் **கலிக்குறி அரசர்** களப்பிர அரசன் என்பதை உறுதியாகக் கூறலாம்.

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வெளியிடப்பட்ட பட்டத்தாள்மங்கலம் செப்பேடு வல்லபர், களப்பிரர், கேரளர், பாண்டியர், சோழர், துளுவம், கொங்கணர் முதலியோர்

பல்லவர்களுக்கு அடங்கி ஆட்சிச் செய்த அரசர்கள் என்பதைக் காட்டுகின்றது.[8]

ஆகவே களப்பிர அரசரான கலிக்குறி அரசர் பல்லவமன்னன் இரண்டாம் நந்திவர்மனுக்கு அடங்கிய சிற்றரசர் என்பதை இக்கல்வெட்டு காட்டுகின்றது.

மேலும் இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் ஸ்ரீமல்லன் துக்கலி என்னும் பெயர் பாழியைப் பயன்படுத்திய சமணச் சான்றோரையோ அல்லது பாழி அமைந்துள்ள இடத்தையோ குறிப்பதாக இருக்கலாம்.இக்கல்வெட்டு அமைந்துள்ள பாறையின் கீழ்ப்பகுதியில் மண்மேடும், முட்புதரும் காணப் படுவதால் பாழி அமைந்துள்ள இடத்தைக் காண இயலவில்லை.

இதுகாறும் நாம் அறிந்தவற்றால் 1. பல்லவர் காலத்தில் பாழி யைப் பற்றிக் குறிக்கும் கல்வெட்டு தமிழகத்தில் கிடைத்தி ருப்பது இதுவே முதல் முறையாகும்.2. கலிக்குறி அரசர் களப்பிர பரம்பரை யைச் சேர்ந்தவர்3. களப்பிரர் சமண சமயத்தை ஆதரித்தனர் ஆகியச் செய்திகளை இக்கல்வெட்டின் மூலம் அறியலாம்.

குறிப்புகள்

1. ப. வெங்கடேசன், நந்தீச்சுவரவர்மனின் கீழ்அரசம்பட்டுக் கல்வெட்டு, ஆவணம் - 7, சூலை 1998.
2. செங்கம்வட்டம், கீழ் இராவந்தபாடி நடுகல்லை தொல்லியல் துறையின் மேனாள் துணை இயக்குனர் திரு. மா. சந்திர மூர்த்தி அவர்கள் 1971 - ஆம் ஆண்டு தம் களஆய்வின் போது கண்டுபிடித்தார்.
3. செங்கம் நடுகற்கள் 1971/51 , கி.குமார் - இரண்டாம் நந்திவர் மனின் கீரைச்சாத்துக் கல்வெட்டு, ஆவணம் - 7, சூலை 1998.
4. பாண்டியர் செப்பேடுகள் பத்து, வேள்விக்குடிச் செப்பேடுகள், வரி 39 -46.
5. நடன. காசிநாதன், களப்பிரர் பக் - 11.
6. Epigraphia Indica Vol - XXXVIII No.6/3 - 39.
7. நடன. காசிநாதன், களப்பிரர் பக் -14.
8. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக் - 246.

17. சோழபாண்டிபுரம் கல்வெட்டுகள்

வில்லியனூர், ந. வேங்கடேசன்

வரலாற்றுத் துணை

ஆயிரம் ஆயிரம் கதைகளைச் சொல்லுகின்ற எத்தனையோ சிற்றூர்கள் நம் நாடெங்கும் பரந்து கிடக்கின்றன. சோழ வாண்டிபுரம்! இதுவும் ஒரு சிற்றூரின் பெயர் தான்! ஆனாலும் இந்தப்பெயருக்குப் பின்னால் எவ்வளவு பெரிய வரலாறு மறைந்து கிடக்கிறது! நாம் கடந்து வந்த காலப் பாதையை அறிந்திட வரலாற்றுச் செய்திகள் துணைபுரியும் அன்றோ!

இந்த ஊரின் பெயரிலேயே சோழனும் பாண்டியனும் கலந்து விடுகின்றனர். இப்பெயருக்கு இடையிலே ஒளிந்து கொண்டிருக்கும் சோழமன்னன், முகத்திலும் மார்பிலும் தொண்ணூற்றாறு விழுப்புண் பெற்றுப் பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கிய விசயாலய சோழனின் வழி வந்தவன். ஆனாலும், இவன் ஆண்ட நாடு பாண்டிய நாடு .

*இவன் முடி சூடிக் கொண்ட இடம் மதுரையம்பதி. முடிசூடும் நாளன்று இவனுக்குச் **சோழபாண்டியன்** என்ற அபிடேகப் பெயர் இடப்பட்டது. இம்மன்னன் யார்? அறிந்திட வேண்டாமா?*

ஆற்றல் மிகு வேந்தர்

அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்தியவன்
தெண்டிரை ஈழ மண்டலம் முழுவதும் தன்
தண்டாற் கைப்பற்றியவன்
பல் பழந்தீவை வெற்றிக் கொண்ட வேந்தன்
கடாரத்தரசனை வென்றடக்கிய மாமன்னன்

என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படுகின்ற இராஜேந்திர சோழனின் மகனே இச்சோழ பாண்டியன்.உலகமே வியக்கும் வண்ணம் மாபெருங் கோயில் ஒன்றைத் தஞ்சைப்பெருநகரில் எடுப்பித்து மங்காப் புகழ் பெற்ற இராசராச சோழனின் பெயரனே இச்சோழ பாண்டியன்.

தீர்வு கண்டனன்

அக்காலம், பாண்டிய மன்னர்கள் சோழப்பேரரசுக்குத் தொல்லைகள் கொடுத்த காலம். இக்கலகத்தை அடக்க இராசேந்திர சோழன் ஒவ்வொரு முறையும் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்க வேண்டி இருந்தது.

இதற்கொரு முடிவு காண எண்ணிய இராசேந்திரன் தன் மக்களில் ஒருவனுக்கு மதுரையம்பதியிலே முடிசூட்டி சோழபாண்டியன் என்று பெயரிட்டு, சோழநாட்டுப் பிரதிநிதியாகப் பாண்டிய நாட்டை ஆண்டு வரச் செய்து, சோழநாட்டுப் பெரும் படை ஒன்றை அங்கே நிலைப்படையாக அமைத்துத் தன் நாடு மீண்டான்.

அதன் பின்னரே பாண்டியரின் பெரும் பகை நீங்கியது. இற்றைக்குத் தொள்ளாயிரத்து எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.பி. 1018 - வது ஆண்டில் இந்நிகழ்ச்சி நடந்ததாக வரலாறு பேசுகிறது.

முடிகொண்ட வாழ்வு

இம்முடிசூட்டு விழா மாபெரும் அரசு விழா அன்றோ! ஆதலின் நாடெங்கும் இவ்விழாக் கொண்டாடப் பெற்றது. இதன் நினைவாகச் 'சோழபாண்டியன்' என்னும் பெயரில் பல ஊர்கள் புதியனவாகத் தோற்றுவிக்கப் பெற்றன.

சோழபாண்டிபுரம்

சில பழைய ஊர்கள் இப்புதிய பெயரைப் பெற்றதும் உண்டு. அத்தகைய ஊர்களிலே ஒன்று தான் சோழபாண்டிபுரம். இப்பெயரையே இக்காலத்தார் சோழவாண்டிபுரம் என்றுக் கூறுவார்கள்.

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திருக்கோவலூரிலிருந்து தென் மேற்கே 16 கி.மீ. தொலைவில் இச்சிற்றூர் அமைந்துள்ளது. இந்நாளில் இது ஒரு சிற்றூராய் காட்சி தந்தாலும் முன்னாளில் இது ஈடும் எடுப்புமின்றி சிறந்ததொரு பெரு நகராய் விளங்கியது. இந்நகரில் சமணர்களே மிகுதியும் வாழ்ந்தனர். சைவர்களும் இருந்தனர்.

சமணர் பெருக்கம்

ஊருக்கு வடகிழக்கே உயர்ந்து நிற்கும் பெருங்குன்று ஒன்று உண்டு. அக்குன்றில் இயற்கையில் அமைந்த பெரிய பெரிய குகைத்தளங்கள் உள்ளன. அவற்றை ஒட்டிய நன்னீர்ச் சுனைகள் பல. குகைகளுக்குள் வழவழப்பாகச் செதுக்கப் பெற்ற கல்படுக்கைகள், இம்மலையின் வடகிழக்குப் பகுதியில் நெடிந்துயர்ந்து நிற்கும் பாறையில் சமணத் திருமேனிகள் பல அழகுறச் செதுக்கப் பெற்றுள்ளன. அவற்றுக்கும் கீழே அருமையானதொரு கல்வெட்டு. அதுதான் சோழபாண்டிபுரத்தின் வரலாற்றைக் கூறவல்ல பேரேடு.

சமணத்தலைவர்கள்

சமணச்சமயத் தத்துவங்களைப் பரப்புவதற்கு அவ்வப்போது பெரியோர் பலர் தோன்றுவர். இதுவரை இருபத்து நான்கு பெரியவர்கள் அவதரித்தனர். அவர்களைத் தீர்த்தங்கரர் என்று கொண்டாடுவது சமணரின் மரபு.

மாபெரும் சிலை

இவர்களில் முதலாவது தீர்த்தங்கரர் ரிஷபதேவர். இவருடைய மகன் பாகுபலி. இவர் நின்ற நிலையிலேயே பரி நிர்வாணம் அடைந்தார்.

இப்பாகுபலிக்கு கர்நாடக மாநிலத்தில் சிரவணபெலகொலா (புனித வெள்ளைக் குளம்) என்ற இடத்தில் **கோமடன்** என்ற அரசன் 53 அடி உயரமுள்ள திருமேனி ஒன்றை அமைத்தான். அச்சிற்பம் ஒரே கல்லால் ஆனது. அது உலக அதிசயங்களில் ஒன்று. அச்சிற்பம் அமைத்த மன்னன் பெயராலேயே பிற்காலத்தில் **கோமதீஸ்வரர்** என்று அழைக்கப்பெற்று வருகிறது.

சிறந்த சிற்பங்கள்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அச்சிற்பத்தின் அமைப்பிலேயே, சிறிய அளவில் சோழபாண்டிபுரம் மலைப் பாறையிலும் கோமதீஸ்வரரின் சிற்பம் வடிக்கப் பெற்றுள்ளது. அதற்கும் அடுத்தார் போல் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவநாதரின் திருமேனியும், இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரரின் அழகியத் திருமேனியும் அதற்கும் அடுத்து பத்மாவதி அம்மனின் திருவுருவும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

சமணர் தொண்டு

சோழபாண்டிபுரம் மலைக்குகைகளில் வாழ்ந்த சமண முனிவர்கள் சமண சமயத்தவர்க்கும் மற்றவர்க்கும் நன்னெறி காட்டினர். சின்னஞ்சிறார்களுக்குக் கல்வி புகட்டினர். தமிழ் வளர்த்தனர். மருத்துவராய் உதவினார்கள். அன்பு செலுத்தினார்கள். எல்லோருடைய அன்பையும் ஒருங்கே பெற்றார்கள்.

பஞ்சபாண்டவர் மலையா?

இத்தகைய சமண முனிவர்கள் வாழ்ந்து மறைந்த குன்றுகளைப் பஞ்சபாண்டவர் மலை என்றுப் பொதுவாகக் கூறுவது நம் நாட்டவர் வழக்கம். சோழபாண்டிபுரத்து மக்களும் அவ்வூர் சமணக் குன்றைப் பஞ்சபாண்டவர் மலை என்று கூறுவதை இன்றும் கேட்கலாம்.

'பஞ்சபாண்டவர்களும் திரௌபதியும் இக்குகைகளிலே தான் வாழ்ந்தார்கள். இங்குள்ள சுனைகளிலே தான் நீராடினார்கள். அதோ தெரிகிறதே அந்த சுனையில் தான் பீமன் தனது கதையால் நீரை அடித்து, மேலிருந்த விழும் நீரை அருந்துவான் - ' இப்படி எல்லாம் அவ்வூர் மக்கள் அம்மலையைப் பற்றிச் சொல்லுவதைக் கேட்கிறோம். பாரதக்கதை இந்நாட்டில் எந்த அளவு செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதற்கு இவையெல்லாம் சான்றுகள்.

சமணர் வாழ்ந்த குகைத்தளங்கள் உள்ள எல்லா ஊர்களிலும் இதே கதையைத்தான் கூறுகிறார்கள். சோழபாண்டிபுரம் மலைக்கு **ஆண்டிமலை** என்று இன்னொரு பெயரும் உண்டு. இப்பெயர் இங்கு வாழ்ந்த சமண முனிவர்களைக் குறிப்பால் உணர்த்தும் வரலாற்றுக் கருவுள்ள பெயர் என்றேக் கொள்ளலாம்.

வீரசோழபுரம்

சோழபாண்டிபுரத்துக்கு அண்மையில் **வீரசோழபுரம்** என்றோரு சிற்றூர் உண்டு . முற்காலத்திய தமிழ்நாட்டுப் போர்களங்களில் இதுவும் ஒன்று. இப்பகுதிகள் யாவும் மலையமான் நாட்டு எல்லைக்கு உட்பட்டவை.

கடை ஏழு வள்ளல்களில் ஒருவனும், சங்க காலத்தில் வாழ்ந்தவனுமான மலையமான் திருமுடிக்காரியின் வழிவந்த மலையர் குலத்துக் குறுநில மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டவை. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனாரும் இக்குடியில் தோன்றி இப்பகுதியை ஆண்ட அரசரே.

நரசிம்ம வர்மன்

இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இத்தொல் பழங்குடியில் முதலாம் நரசிம்ம வர்மன் என்னும் மன்னன் இப்பகுதியில் ஆட்சி செலுத்தினான்.

இம்மன்னனோடு இராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் என்பவன் மாறுபட்டுப் போரிடக் கருதினான். இருதிறத்துப் படைகளும் வீரசோழபுரத்தில் போரிட்டன. மலையமானுக்குச் சோழப் பெரும்படை துணையாக நின்றது. இறுதியில் நரசிம்மன் வெற்றி பெற்றான்.

வெற்றித்தானம்

வெற்றி பெற்ற இப்பெருந்தகை திருநாவலூர்த் திருத்தொண்டீச்சுரமுடைய மகாதேவற்கு விளக்குத் தானமாக 15 கழஞ்சு பொற்காசுகளைக் கொடையாக வழங்கினான். அடுத்து அவன் கவனம் சோழபாண்டிபுரத்துச் சமணத் திருமேனியின் மீது சென்றது. இத்திருமேனிக்கு நித்தப்படி நிவேதனங்களுக்கும் இன்ன பிறத்தேவைகளுக்கும் '**பனைப்பாடி**' என்னும் ஒரு ஊரையே தானமாக வழங்கினான். இச்செய்திகளையே அங்குள்ள பாறைக்கல்வெட்டு பதிவு செய்து காட்டுகிறது.

நிலைத்த சான்றுகள்

இத்தனை வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சோழபாண்டிபுரம் தனது பழம் பெருமைகளை இன்றைய நாளில் இழந்து விட்டாலும் அங்குள்ள **ஆண்டி மலைக்குகைகள்**, அங்குள்ள **கல்படுக்கைகள், சமணத் திருமேனிகள், நன்னீர்ச்சுனைகள், கல்வெட்டுகள்** ஆகியவை யெல்லாம் அதன் பழம் பெருமையை வரலாற்றை, கடந்த கால நிகழ்வுகளை மனம் விட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றன.



18. தியாகதுர்க்கம் மலையம்மன் கோயில் ஓர் ஆய்வு

சி. வீரராகவன், விழுப்புரம்.

ஊரும் பேரும்

உளுந்தூர் பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையில் 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது தியாகதுர்க்கம். இவ்வூரின் தெற்குத் திசையில் மலை ஒன்று உள்ளது. இம்மலை யின் உயரம் சுமார் 800 அடியாகும். இம்மலை அக்காலத்தில் **"திம்மப்பைய துர்க்கம்"** என்று வழங்கி வந்தது. இத்திம்மப்பைய துர்க்கமே பின் **தியாகதுர்க்கம்** என மாறியிருக்கக் கூடும்.

அருநிலைத்தியாகன் என்ற தலைவனின் பெயர் இம் மலைக்கு ஏற்பட்டதாகக் கூறுவர். இத்தலைவனின் பெயரால் இவ்வூரின் மேற்கில் தியாகை என்றும் பெயர் கொண்ட ஊர் ஏற்பட்டிருக்க வேண்டும். தியாகதுர்க்கத்தின் தெற்குப் பகுதியில் இயற்கையாக அமைந்த இம்மலையின் மீது கற்களால் சுவர் எழுப்பிய கோட்டை ஒன்றும் உள்ளது. தமிழகத்தில் உள்ள 84 கோட்டைகளில் இது ஒன்றாகும்.

தியாகதுர்க்கக் கோட்டை

கி.பி. 18 - ஆம் நூற்றாண்டின் தியாகதுர்க்கக்கோட்டை சிறப்புப் பெற்றிருந்தது. இப்போது அக்கோட்டையில் சில தடயங்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. கி.பி. 1756 - இல் பிரெஞ்சுக்காரரும், கி.பி.1760 - இல் ஹைதர் அலியும், கி.பி. 1756 - இல் ஆங்கிலேயரும் , தியாகதுர்க்கத்தைக் கைப்பற்றினர். கி.பி. 1790 - இல் திப்பு சுல்தான் இங்கு ஆங்கிலேயருடன் போர் புரிந்தான். கி.பி. 1801 - இல் பிரிட்டிஷ் ஆட்சி உறுதிப்பட்டதும் இம்மலைக்கோட்டைப் பகுதி இராணுவ தளமாக மாறியது. இதற்கு முன் இக்கோட்டையை ஆற்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த கர்நாடக நவாப்பான **சாதத்துல்லாகான்** இப்பகுதியை ஆண்டு வந்தான்.

இம்மலைக்கோட்டையின் உள்ளே உச்சிக்கோட்டை என்ற பகுதியில் மாட்டுப்பட்டி, பணக்கொட்டடி, (அக்கச்சாலை) பொன்கொட்டடி, இராமன் பாதை கோட்டை அறை, பீரங்கி, செங்கல் அறை, சாமியார் கொட்டடி என்பன உள்ளன.

மலையம்மன் கோயில்

சாமியார் கொட்டடி என்னுமிடத்தில் தான் மலையம்மன் கோயிலும் ஒரு கிணறும் உள்ளன. இப்பகுதி இயற்கையாக அமைந்த குகைத்தளமாகும். இக்குகைத்தளத்தில் சமணர்கள் வாழ்ந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இக்குகையின் முகப்பில் கரடு வெட்டப்பட்டிருப்பதே இதற்குச் சான்றாகும். எனினும் சமணர் படுக்கைகளோ,கல்வெட்டுச் சான்றுகளோ காணப்படவில்லை.

இக்குகையில் கி.பி. 8 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணச்சிற்பங்கள் காணப்படுகின்றன. தீர்த்தங்கரர், யக்ஷி ஆகியோரின் இரண்டு சிற்பங்கள் கற்பலகையில் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. இயற்கையாக அமைந்த இக்குகைகளில் சுமார் 18 அடி நீளத்திலும், 8 அடி அகலத்திலும்,3 அடி உயரத்திலும் மேடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மேடையின் மீது நடு நாயகமாக இச்சமணச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி மக்கள் தீர்த்தங்கரரை சித்தராகவும், யக்ஷியான தர்மதேவியை எல்லையம்மனாகவும் கருதி வழிப்பட்டு வருகின்றனர்.

தீர்த்தங்கரர் சிற்பம்

தீர்த்தங்கரர் சிற்பம் முக்கோண வடிவிலான கல்லில் புடைப்புச்சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. தியான நிலையில் அமர்ந்திருக்கும் தீர்த்தங்கரரின் இருக்கையின் பீடத்தில் மூன்று சிங்கங்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விருக்கை சிங்காதனம் வடிவில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. அமைதியும் அருளும் கொண்ட இத்தீர்த்தங்கரரின் திருமுகம் சற்று தட்டையாகவும்,உடலமைப்பு மெல்லியதாகவும் உள்ளது. முடியமைப்பு, கன்னம், நீண்ட காதுகள், உதடுகள் ஆகியவை இயற்கையாக உள்ளவாறு செதுக்கப்பட்டுள்ளன. பத்மாசனத்தில் அமர்ந்து தியான நிலையில் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளது. தலைக்குப் பின்புறம் உள்ள அரைவட்டப் பிரபையில் காணப்படும் மூன்று நெருப்பு சுவாலைகள் மும்மணிகளைக் குறிப்பதாகும். பிரபைக்கு மேலாக முக்குடை செதுக்கப்பட்டுள்ளது.தீர்த்தங்கரரின் தோளிற்கு இணையாக இரண்டு சாமரங்கள் மென்கோட்டு வடிவத்தில் வடிக்கப்பட்டுள்ளன. இவ்வுருவமைப்பைக் கொண்டு இத்தீர்த்தங்கரர் இருபத்தி நான்காவது தீர்த்தங்கரராகிய மகாவீரரையே குறிப்பதாகும்.

தருமதேவி யக்ஷி

பார்சுவநாதரின் யக்ஷி பத்மாவதி ஆவாள். அதேபோல் நேமிநாதர் என்று வழங்கப்படும் 22 வது தீர்த்தங்கரரின் யக்ஷி தருமதேவியாவாள். தருமதேவிக்கு வழங்கும் மறுபெயர் கூஷ்மாண்டி ஆகும்.

காஞ்சிபுரத்திலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள கரந்தை குந்து நாதர் கோயில் மானஸ்தம்பத்திற்கு வடக்கில் தருமதேவி யக்ஷிக்கு தனிக்கோயில் கட்டப்பட்டுள்ளது. தருமதேவி சிங்க வாகனத்தின் மீது வலது காலை வைத்தவாறு பீடமொன்றில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள். இது சுதைச்சிற்பமாகும். இதன் காலம் கி.பி. 15, 16 - ஆம் நூற்றாண்டு ஆகும்.

தியாகதுர்க்கத்தில் தீர்த்தங்கரின் சிற்பத்தை அடுத்து தருமதேவி யக்ஷி சிற்பமே இம்மலையம்மன் ஆலயத்தில் நடு நாயகமாக நிறுவப்பட்டுள்ளது. இத்தேவி அழகாகக் காட்சியளிக்கிறாள். யக்ஷியின் வலது கையில் தாமரை மொட்டும், இடது கை அருகில் இருக்கும் பணியாளின் தலை மீது வைத்தவாறும் உள்ளன. தருமதேவியின் தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் மகரக்குண்டலங்களும், மேற்கைகளில் கேயூரங்களும், கைவளைகள் மற்றும் மேகலை போன்றவை எளிமையாகத் திகழ்கின்றன. தருமதேவியின் பின்புறம் கமுகு(பாக்கு) மரம் அழகாகத் திகழ்கிறது. இம்மரத்தில் கமுகுக் குலையொன்றும் காட்டப்பட்டுள்ளது. இவளது தோளுக்கருகில் இரண்டு குழந்தைகளின் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. குழந்தைகளின் சிரசுகளை கரண்ட மகுடமும், கழுத்தினை கழுத்தணிகளும் , காதுகளை குண்டலங்களும் அலங்கரிக்கின்றன. பணிப்பெண்ணுக்குப் பதிலாக ஆடவன் ஒருவன் தனது இடது கையில் பணிக்கம் (உணவுப்பாத்திரம்) ஏந்தியவாறு தருமதேவியின் இடது காலருகில் அமைக்கப்பட்டுள்ளான்.

யக்ஷியின் வலது புறத்தில் அவளது வாகனமாகிய சிங்கம் எதிர்த்திசையை நோக்கியவாறு செதுக்கப்பட்டுள்ளது. இச்சிங்கத்துக்குக் கீழே பணிப்பெண் ஒருத்தி உத்குடி ஆசனத்தில் அமர்ந்திருக்கிறாள். இவள் தனது வலது கையை மேலே தூக்கி தருமதேவிக்கு அஞ்சலி செலுத்துவதாக அமைக்கப்பட்டுள்ளாள். தருமதேவி தனது அடியவர்களுக்கு குறையற்ற அன்னம் அளித்து அருள் பாலிப்பதால் '**அன்னபூரணி**' எனவும் '**அறப்பெருஞ் செல்வி**' எனவும் அழைக்கப்படுகிறாள்.

தருமதேவி வணக்கம்

இதனுடைய அடிப்படையில் தான் ஞானசாகரர் தான் இயற்றிய இடையாலக் குறவஞ்சியில் அருகர் வணக்கத்திற்கு முன்பாகவே தருமதேவி வணக்கத்தை வைத்துக் கட்டளைத் கலித்துறையில்,

பூமேக மாகநிறைத்தே மலர்ச்சொரி பிண்டியின் கீழ்
நேமீசர் பொற்பதம் சென்னியின் மேல்நிக ராயணிந்து
தீமேக வல்வினை தீர்த்தே வயலைச் செழித்தவளே
தாமோத ரன்மிசைத் தானேறி வாய்தர்ம தேவிதையே

என்ற ஒரு பாடலை எழுதியிருக்கிறார்.

அதாவது சிங்கத்தை வாகனமாகப் பெற்று வயலாமூரில் செழித்து வளர்கின்ற தர்மதேவியே மேகக்கூட்டம் போல் அடுக்கடுக்ககாய் பூத்து மலர்களைச் சொரிகின்ற அசோக மரத்தின் கீழ்எழுந்தருளிய நேமி தீர்த்தங்கருடைய பொன் போன்ற பாதங்களை முடி மீது சிறக்க அணிந்த தீ மேகம் போல் மக்களைச் சூழும் தீவினையினைப் போக்கி அருளும் உன்னை வணங்குகிறேன் என்கிறார்.

பல்லவர் காலம்

இவ்விரண்டு சிற்பங்களும் தொண்டை நாட்டை ஆண்ட பல்லவர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாக இருக்கலாம். தியாகதுர்க்கத்தில் வாழும் மக்கள் தங்கள் சமய தெய்வங்களாக வழிபட்டும் விழாக்கள் எடுத்தும் வருகின்றனர். சமண சமயத்தைச் சார்ந்த மக்களும் தர்மதேவி யக்ஷிக்கும், மகாவீரர் தீர்த்தங்கரருக்கும் இவர்களது விழாக்காலங்களில் விழாக்கள் எடுத்தும் வருகின்றனர்.

சமீபகாலத்தில் இம்மலையைச்ள சுற்றி ரூபாய் 60 இலட்சம் செலவில் பாதை(தார்சாலை) அமைத்து கிரிவலம் வர இருக்கின்றனர். மனிதனாகப் பிறந்த நாம் வாழ்வில் ஒரு முறையாவது இக்கோயிலுக்கு சென்று சிற்பங்களை கண்டு வர வேண்டும். ஏனெனில் சமணர்களும் இந்துக்களும் வழிப்பட்டு வரும் இவ்வாலயம் மதமாச்சரியமற்றது என்பதற்காகவே.

உதவிய நூல்கள்

1. முனைவர் ஏ. ஏகாம்பரநாதன், பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், தொண்டை நாட்டு சமணக் கோயில்.

2. திரு. கு. தாமோதரன், விழுப்புரம் மாவட்ட வரலாறு, தமிழகத் தொல்லியல் துறை வெளியீடு, சென்னை.

3. புலவர். ஆ. திருமொழி, உரையாசிரியர், இடையாலக் குறவஞ்சி.

குறிப்பு: களஆய்வின் போது உதவிய ஆய்வாளர்கள், திரு. கூ. பிச்சைப்பிள்ளை, திரு. த. ரமேஷ் ஆகியோருக்கு நன்றி.



19. கெடில நதிக்கரையில் அழிந்து போன சமணக்கோயில்கள்

வெ. நாராயணமூர்த்தி, கடலூர்.

நடுநாடு எனப்படும் பழைய தென்னாற்காடு மாவட்டத்தை ஊடறுத்துச் செல்வது வரலாற்றுப் புகழ்மிக்க கெடிலநதி. கள்ளக்குறிச்சி வட்டம் மையனூரில் உற்பத்தியாகி கிழக்கே சுமார் 112 கி. மீ. தூரம் பயணித்து கடலூர் தேவனாம்பட்டினத்தில் வங்க கடலில் இந்நதி கலக்கிறது.

நதிக்கரை ஓரங்களில் நாகரிகங்கள் தோன்றி வளர்ந்ததைப் போலவே சமயங்களும் தோன்றி வளர்ந்துள்ளன. மனித இனத்தின் வாழ்வியல் தேவையான நீர்வளமே இதன் அடிப்படைக் காரணம் எனலாம். இந்த கெடிலநதிக்கரை ஓரத்தில் சங்ககாலம் முதல் சைவம், வைணவம், புத்தம், சமணம் ஆகிய சமயங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டு வளர்ந்தன. பொதுமக்கள் மற்றும் அரசர்களின்ஆதரவோடு போட்டிபோட்டு வளர்ந்த இந்தச் சமயங்களுக்குள் பக்தி காலத்தின் தொடக்கம் எனப்படும் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டளவில் விரும்பத்தகாத ஒரு போட்டி உருவாயிற்று. இந்தப்போட்டி சமயப் பகையாய் உருமாறி ஒரு சமயம் வேறொரு சமயத்தை வேரறுக்கத் தலைப்பட்டது. சமயப் பகை சமயப் போராய் மாறி ஒன்றை ஒன்று அழிக்கத் தொடங்கின.இந்தப் போர் நெடுங்காலம் தமிழகத்தில் நீடித்தது. இந்தப் போரில் அன்பையும் கொல்லாமையையும் வலியுறுத்திய சமண சமயம் சிறுகச் சிறுக அழியத் தொடங்கியது. சைவசமய பக்தி இயக்கத்தின் காரணமாக சமண சமயத்தைச் சேர்ந்த பொதுமக்களும் அரசர்களும் சைவசமயத்திற்கு மாறத் தொடங்கினர். இந்த இடத்தில் தான் ஒரு மாபெரும் வரலாற்றுத் தவறின் தொடக்கம் உருவானது. அதாவது சைவத்திற்கு மாறியவர்கள் சமண சமயம் தொடர்பான கோயில்கள் சிற்பங்களை அழிக்கத் தொடங்கினர்.இதனால் தமிழகக் கலை வரலாற்றின் ஒரு பகுதி மறையத் தொடங்கியது

தமிழகமெங்கும் நிகழ்ந்த இந்தக் கலைக் கொலைக்கு கெடிலநதிக்கரையும் தப்பவில்லை. கெடிலநதிக்கரை ஓரம் இருந்த ஏராளமான சமணக் கோயில்கள் தகர்க்கப்பட்டன. கூடவே கெடிலநதியின் வெள்ளப்பெருக்கும் சேர்ந்துக் கொண்டதால் பல சமணக் கோயில்கள் இயற்கைச் சீற்றத்தாலும் அழிவுற்றன. கெடிலக்கரை சமணக் கோயில்களின் அழிவுக்கு இவ்வாறு நாம் இரண்டு காரணங்களை வரையறுக்கலாம்.

1. இயற்கை அழிவு (மழை வெள்ளம், கால மிகுதி)

2. செயற்கை அழிவு (கோயில்களை இடித்துத் தகர்ப்பது)

இயற்கை அழிவுகளால் மறைந்து போன சமணக்கோயில்கள்

குமரப்ப நாயக்கன் பேட்டை

கடலூருக்கு மேற்கே 6 கி. மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். இவ்வூர் பேருந்து நிலையத்திற்கு வடக்குப் புறசந்தில் ஒரு சமணத் திருவுருவம் மேற்கு நோக்கிய நிலையில் உள்ளது. பளபளப்பு மிக்க கருங்கல்லில் செய்யப்பட்ட இச்சிலை 179 செ. மீ. சுற்றளவும் 127 செ. மீ. உயரமும் உள்ளது. தலையில் சுருள்முடி உள்ள இச்சிலையின் வலது முழங்கால் உடைக்கப்பட்டுள்ளது. இந்தச்சிலையைப் பற்றிய குறிப்பு தென்ஆற்காடு மாவட்ட கெஜட்டின் பக்கம் 318 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.தொல்லியல் ஆண்டறிக்கை 1921 - 22 இல் பக். 99 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வூர் மக்கள் இச்சிலை வெள்ளத்தில் அடித்து வரப்பட்டது என்று கூறுகிறார்கள். 4 அடி உயரமுள்ள இந்தச் சிலையையே வெள்ளம் கொண்டு வந்திருக்கிறது எனில் இச்சிலை இருந்த கோயிலும் வெள்ளத்தில் அழிந்து போயிருக்க வேண்டும்.

ஏறத்தாழ கி.மு. 3 - ஆம் நூற்றாண்டளவில் பத்திரபாகு முனிவரின் சீடரான வைசாக முனிவர் என்பவரால் தமிழகத்தில் நுழைந்த சமண சமயத்திற்கு கி.பி. 6 - ஆம் நூற்றாண்டு வரை மரக்கோயில்களும் செங்கற் கோயில்களுமே இருந்தன. கி.பி. 7 - ஆம் நூற்றாண்டில் மகேந்திரவர்மன் பல்லவன் காலத்திற்கு பிறகே கற்றளிகள் உருவாகத் தொடங்கின. ஆகவே இந்த சமணக் கோயில்கள் தாக்கு பிடிக்க முடியாமல் விரைவில் அழிந்து போயின. அதிலும் வெள்ளப் பெருக்கில் சிக்கித் கொண்டால் கேட்கவே வேண்டாம். குமரப்ப நாயக்கன் பேட்டை சமணச்சிலைக்கு உரிய கோயில் கெடில நதிக்கரை ஓரத்தில் இருந்த ஒரு சமணக் கோயில் என்பது தெரிகிறது.

கீழ் அருங்குணம்

கடலூருக்கு மேற்கே 17 கி.மீ. தொலைவில் கெடிலக் கரையின் வடக்குப்புறம் உள்ளது கீழ்அருங்குணம். இங்கு ஒரு சமணச்சிலை இருப்பதாக தென்னாற்காடு மாவட்டத்தின் கெஜட்டின் 311 - ஆம் பக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.இச்சிலையைப் பற்றி ஆராய்ச்சியில் பேரறிஞர். மயிலை. சீனி வேங்கடசாமியும் தமது ‘சமணமும் தமிழும்’ நூலின் 115 - ஆம் பக்கம் குறிப்பிடுகிறார். செங்கல் சூளைக்காக மண்ணைத் தோண்டிய போது அமர்ந்த நிலையில் சிலை இருந்ததாகவும் தலைக்கு மேல்குடையும் இரண்டு பக்கங்களிலும் இயக்கியர் சாமரை வீசுவது போன்றும் இருப்பதாக குறிப்பு காணப்படுகிறது. ஆனால் அந்த சிலை தற்போது அங்கு இல்லை. அந்த ஊரில் நேரில் சென்று

விசாரித்ததில் ஊர்பிடாரி அம்மன் கோயிலுக்கு அருகில் அந்த சிலை வெகுகாலம் கவனிப்பாரின்றிக் கிடந்ததாகவும் சில ஆண்டுகளுக்கு முன்பு யாரோ சிலர் வந்து அதை ஒரு லாரியில் ஏற்றி எடுத்துச் சென்று விட்டதாகவும் தெரிவித்தனர்.

வானமாதேவி

கீழ்அருங்குணத்துக்கு நேர் எதிர்புறம் கெடிலநதியின் தென்புறம் வானமாதேவி என்ற ஊர் உள்ளது. இந்த ஊரில் உள்ள ஒரு சிறு குன்றின் மேல் ஒரு சமணத் திருவுருவம் இருந்ததாகவும் ஊரில் திருவிழா நடந்த ஓர் இரவு வேளையில் யாரோ சிலர் லாரியில் வந்து இதை ஏற்றிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

கீழ்அருங்குணம்,வானமாதேவி இந்த இரண்டு ஊர்களிலும் இருந்த இரண்டு சமண உருவங்களும் களவாடப்பட்டு விட்டன என்பது இதன் மூலம் புலனாகிறது. பல லட்சம் ரூபாய் இதில் கைமாறி உள்ளதாகவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர். இயற்கை அழிப்பது போதாது என்று மனிதனே வரலாற்றுக் கலைப்பொக்கிஷத்தை அழித்து விடுகிறான் என்பதை நினைக்கும் போது நெஞ்சு கனக்கிறது.

இந்த இரண்டு சமணத்திருவுருவங்கள் இங்கு இருந்தன என்பதைக்கொண்டு இங்கு சமணக்கோயில்கள் இருந்தது என்பது புலனாகிறது. இதைக் கருத்தில் கொண்டு இங்கு ஒரு களஆய்வு மேற்கொண்டேன். இந்தச் சமணக்கோயில்களின் காலம் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இருக்க வாய்ப்பு இருக்குமானால் கற்றளியின் சிதைந்த பாகங்கள் சிதறிக் கிடக்கக்கூடும் என்ற நோக்கில் என் ஆய்வு அமைந்தது. கீழ்அருங்குணத்திற்கும், வானமாதேவிக்கும் இடைப்பட்ட கெடிலநதியின் மேல் ஒரு தடுப்பணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணை கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட கற்கள் யாவும் ஒரு கோயிலின் பாகங்களாக இருப்பதைப் பார்த்து திகைப்படைந்தேன். அணை 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக ஊர் மக்கள் கூறுகிறார்கள். அணையின் கீழ்பாகத்தில் சில சிலைகள் இருப்பதாகவும் கூறுகின்றனர்.ஆனால் ஆய்வு மேற்கொள்ள ப்பட்ட நாட்களில் கெடிலத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியதால் எதையும் அறிய முடியவில்லை.

வெள்ளம் வடிய இரண்டு வாரங்கள் காத்திருந்து மீண்டும் ஓர் ஆய்வை மேற்கொண்டேன். அப்போது இவ்வூர் மக்கள் கெடிலநதியின் நடுவில் ஒரு கோயில் புதையுண்டு கிடப்பதாகவும் சில சமயம் கோயிலின் மேற்பகுதி வெளியில் தெரிவதாகவும் கூறினார்கள்.கெடிலநதியின் கட்டப்பட்டிருந்த தடுப்பணையின் ஒரு துண்டுப் பலகைக் கல்லில் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியுடன் கூடிய ஒரு கல்வெட்டு புதிதாக எனக்குக்

கிடைத்தது. 60 செ.மீ. நீளமும்30 செ.மீ. அகலமும் உள்ள ஒரு துண்டுப் பலகையில் நான்கு வரிகளில் உள்ள அந்தக் கல்வெட்டு தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது. முதல்வரியின் மேல் சிமெண்டு வைத்துப் பூசப்பட்டு விட்டது. அக்கல்வெட்டு வாசகம்,

1. ....

2. ரண்டு.......செய்த......நா........ப

3. ....ராஜ்ஜயம் பண்ணிதுக்கு.......

4. ....ன்ற பிரமாதி ஸம்வற்ஸ...........

என்று உள்ளது.இந்தக் கல்வெட்டின் உதவியால் இது அழிந்து போன சமணக் கோயிலா என்று உறுதிப்படுத்த போதுமான செய்திகள் கிடைக்கவில்லை.

செயற்கை அழிவுகள்

திருவதிகை

திருவதிகையில் இரண்டு சமணச்சிற்பங்கள் இருப்பதாக தென்னாற்காடு மாவட்ட கெஜட்டில் உள்ளது. ஆனால் அந்தச் சிலைகள் தற்போது அங்கு இல்லை. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை துணை இயக்குநர் திரு. மா.சந்திரமூர்த்தி அவற்றைச் சில ஆண்டுகளுக்கு முன்பு குணபரவீச்சுரம் அருகே சாலையில் பார்த்ததாக கூறினார். இவ்வூர் மக்களிடம் விசாரித்ததில் அது மகேந்திரபல்லவன் எடுத்த குணபரவீச்சுரம் சிவன் கோயில் அருகேயும் வேறொரு சமணச்சிலை திருவதிகை திரௌபதி அம்மன் கோயில் அருகே கிடந்ததாகவும் இந்த இரண்டையும் யாரோ லாரியில் ஏற்றிச் சென்று விட்டனர் என்றும் கூறினார்கள். ஆக கெடிலகரை நெடுக ஒரு திருட்டுக் கும்பல் சமணச் சிலைகளை களவாடி உள்ளது தெரியவருகிறது. எனினும் முன்பே அந்த சிலைகளைப் புகைப்படம் எடுத்து பண்ருட்டி தமிழரசன் என்பவர் 1.1.96 தினமணியில் பிரசுரித்திருக்கிறார். இதில் முதலாவது சமணச்சிலை கிடந்த இடத்தில் மகேந்திரவர்ம பல்லவனால் எடுக்கப்பட்ட குணபரவீச்சுரம் எனும் சிவன் கோயில் ஒரு சமணக் கோயிலே என்று நாம் கூறமுடியும். குணபரன் எனும் சிறப்புப் பெயர் கொண்ட மகேந்திரபல்லவன் கி.பி.590 - 630 முன்பு சமணனாய் இருந்து பின்பு சைவனாய் மாறினான் என்பது அவன் திருச்சி மலைக்குகையில் பொறித்துள்ள வடமொழிக்கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. அந்தக் கல்வெட்டு "விபக்ஷ ஒழுக்கத்தை(வேறுசமயத்தை) விட்டுத் திரும்பி லிங்கத்தை வழிபடுகின்ற குணபரன் என்னும் அரசன் இந்த உலகில் நெடுங்காலம் வாழ்க" என்று கூறுகிறது.

சேக்கிழாரின் பெரிய புராணம் திருவதிகையில் குணபரன் எனும் மகேந்திரன் கட்டிய கோயிலுக்கு பாடலிபுத்திரத்தில்

(திருப்பாதிரிப்புலியூர்) இருந்தும் கூட கல்கொண்டு வந்தான் என்று கூறுகிறது. அந்ததப்பாடல்,

"வீடறியாச் சமணர் மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின் கட் கண்ணுதற்குப்
பாடலிபுத்திரத்தில் அமண பள்ளியொடு பாழிகளும்
கூட இடித்துக் கொணர்ந்து குணதரவீச்சரம் எடுத்தான்"

இச்செய்யுளின் 3 மற்றும் 4 வது வரிகளைக்கவனிக்க வேண்டும்.' பாடலிபுத்திரத்தில் அமண் பள்ளியொடு பாழிகளும் கூட இடித்துக்கொணர்ந்து' என்றசொல்லாட்சியைக் கருத்திலே கொள்ள வேண்டும்.

திருவதிகையில் ஒரு சிவன் கோயில் எடுக்க பாடலிபுத்திரத்தில் உள்ள பள்ளியோடு பாழிகளும் கூட இடித்தான் என்பதிலிருந்து நாம் ஒன்றை உய்த்துணர முடிகிறது. அதாவது திருவதிகைக்கு ஏறத்தாழ 35 கி. மீ. தொலைவில் உள்ள பாடலிபுத்திரத்தில் (திருப்பாதிரிபுலியூர்) இருந்த சமணப் பள்ளிகள் பாழிகள் போன்றவற்றை இடித்து அந்த மரம் மற்றும் செங்கற்களை மட்டும் கொண்டு திருவதிகையில் குணபரவீச்சுரம் சிவன் கோயில் எடுத்தானா என்பது ஆராயத்தக்கது. பாதிரிப்புலியூரின் பள்ளிகளை இடித்தவன் அங்கேயே சிவனுக்குக் கோயில் எடுக்காமல் ஏன் மேற்கு நோக்கி 35 கி.மீ. கெடிலக்கரையில் பயணம் செய்து திருவதிகையில் சிவன் கோயில் எடுக்க வேண்டும்? மகேந்திரபல்லவன் பாடலிபுத்திரத்தில் சமணப்பள்ளி, பாழிகளை இடிக்கையில் பாடலிபுத்திரத்தில் சிவன் கோயில் இருந்திருக்கிறது. அப்பர் அதை வழிபட்டிருக்கிறார். அதேபோல் திருவதிகையிலும் சிவன் கோயில் இருந்திருக்கிறது. அப்பர் அங்கிருந்துதான் தன் சைவ சமணப்பணியைத் தொடங்கி யிருக்கிறார். இவ்வாறு இடித்த இடத்திலும் சரி கட்டிய இடத்திலும் சிவன் கோயில் இருக்கையில் மகேந்திரன் ஏன் பாடலி புத்திரத்தில் இடித்து திருவதிகையில் கட்டினான் என்று ஆராய்ந்தால் நமக்கு உண்மை விளங்கி விடும்.

திருவதிகையில் அந்த சமயத்தில் ஒரு சிறந்த சமணக் கோயில் இருந்திருக்கிறது. மதம் மாறியதற்கு அடையாளமாக மகேந்திர பல்லவன் அந்தச் சமணக் கோயிலை இடித்து குணபரவீச்சுரம் எடுத்தான். அதற்காக பாடலிபுத்திரத்தில் இருந்து கூட கற்களைக் கொண்டு வந்து கட்டினான் என்பதை உய்த்துணரலாம். அவ்வாறு மகேந்திரன் இடித்த சமணக் கோயிலின் சமணச் சிற்பம் தான்1.1.96 இல் தினமணியில் புகைப்படமாக பிரசுரிக்கப்பட்டது என்பதும் அந்தச் சிற்பம் தற்போது களவாடப்பட்டு விட்டது என்பதும் தெளிவாகிறது. மகேந்திரன் இடித்த சமணக்கோயில் சிற்பம் வெகுகாலமாய் குணபரவீச்சுரம் கோயில் அருகில் கவனிப்பாரற்று கிடந்துள்ளது. இந்தச் சிற்பத்தைப் புகைப் படத்தில் பார்க்கும் போது அதன் பழமை நன்றாகத் தெரிகிறது.

இச்சிற்பத்தில் முக்குடை இல்லை. சிலை மிகவும் பொரிந்து போய்த் தெரிவதில் இருந்தே இதன் பழமை கி.பி. 7 - ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என அறிய முடிகிறது. மகேந்திரன் கோயிலை ஒரளவு இடித்து தள்ளிவிட்டு கருவறை சமணச்சிலையை வெளியில் எறிந்து விட்டு அங்கே தாராலிங்கம் எனப்படும் 16 பட்டை லிங்கத்தை நிறுவினார்.

திருவதிகையில் இருந்த இரண்டாவது சமணச்சிலை புகைப்படத்தில் முக்குடையுடன் காட்சி தருகிறது. இதில் தீர்த்தங்கரரின் இருபுறமும் இயக்கியர் சாமரம் வீசுவது புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. சிலைஅமைப்பு ஏறத்தாழ கி.பி. 10- ஆம் நூற்றாண்டளவில் வடிக்கப்பட்டது என்பதைக் கணிக்கமுடிகிறது. களவு போன இந்தச்சிலை இருந்த இடத்தில் தற்போது திரௌபதி அம்மன் கோயில் உள்ளது. அருகில் சிதைந்த சிவலிங்கங்கள் இரண்டு உள்ளன.

இந்த இரண்டாவது திருவதிகை சமணச் சிலைக்குரிய கோயில் எப்போது எப்படி மறைந்து போனது என்பது புலனாகவில்லை. ஆனால் திருவதிகையில் சமணக் கடவுளான அருகருக்கு கோயில் இருந்தது என்பதை திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலின் இரண்டாம் கோபுர வெளி வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள சுந்தரபாண்டியனின் சிதைந்த கல்வெட்டு உணர்த்துகிறது.

அந்தக் கல்வெட்டில் அவ்வூர் வழக்கு பற்றிய செய்தி ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் "......வடக்கு அருந்தேவர் தெருவில் மேல்தலை சந்திக்கு வடக்காக ஸ்ரீ மகாதேவரும் நகரத்தாரும் பொருந்தாமையாலும் முனியாதி வைரமுடைய அருத்த தேவர் தெருவில்.......... அருக்க தேவர் கோயிலில் தெற்கில் சந்திக்கு......" என்று போகிற இக்கல்வெட்டு திருவதிகையில் ஒரு சமணக்கோயில் இருந்ததைத் தெரிவிக்கிறது. இக்கோயில் பின்பு அழிந்து போய் சமணச் சிற்பம் மட்டுமே எஞ்சி தற்போது அதுவும் காணாமல் போய்விட்டது.

பொதுவாக சமணச் சிற்பங்களுக்கு அருகில் சைவசமய சிற்பங்கள் இருந்தால் அங்கிருந்த சமணக் கோயில் இடித்துத் தகர்க்கப்பட்டு அங்கு சிவன் கோயில் கட்டப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இவ்வகையில் திருவதிகை இரண்டாம் சமணச்சிற்பம் இருந்த இடத்தில் இரண்டு சிவலிங்கங்கள் இருப்பதால் திருவதிகையின் கல்வெட்டு குறிப்பிடும் அருக்கதேவர்கோயில் இடிக்கப்பட்டு அழிந்து போய்விட்டது என்பதை உணரலாம்.

இதேபோன்று கெடில ஆற்றுக்கும் தென்பெண்ணை ஆற்றுக்கும் இடையே உள்ள கணிசப்பாக்கம் என்னும் சிற்றூரில்

உடைந்த நிலையில் ஒரு சமணச்சிலை கிடைத்துள்ளது. இதற்கு அருகில் லிங்கமும் நந்தியும் உள்ளதால் சமயப் பூசலால் கணிசப்பாக்கம் சமணக் கோயிலும் அழிந்து போனது எனலாம்.

கெடிலநதி பாதை மாறி மாறி பயணிப்பதற்கும் கரை உடைந்த வெள்ளப் பெருக்கிற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன. செயற்கையாகவும் இயற்கையகவும் அழிக்கப்பட்ட அழிந்து போன சமணக் கோயில்கள் சமணச் சிற்பங்கள் ஏதேனும் பிற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் பின்வரும் நீலகேசிப் பாடலை ஆராய்ச்சியாளர்கள் வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என்று நம்பலாம்.

"பொங்கு சாமரை யேந்திப்
புடைபுடை யியக்கர் நின்றிரட்டச்
சிங்க வாசனத்திருந்து
தெளிந்தொளி மண்டில நிழற்றத்
திங்கள் முக்குடை கவிப்பத்
தேவர்தந் திருந்தவை தெருள
அங்கபூவம தறைந்தாய்
அறிவர்தம் அறிவர்க்கும் அறிவா"

உதவிய நூல்கள்

1. South Arcot District Gazetter
2. சமணமும் தமிழும் - மயிலை சீனி.வேங்கடசாமி
3. பெரியபுராணம் - சேக்கிழார்
4. நீலகேசி
5. மகேந்திரவர்மன் - மயிலை சீனி. வேங்கடசாமி
6. தமிழ்நாட்டு வரலாறு - பல்லவர் பாண்டியர் காலம், தமிழ்வளர்ச்சி இயக்ககம்
7. A.R.E. 1904 and 1921,22 - pp 99.
8. தினமணி (1.1.1996)
9. கவிஞர் தமிழரசன், திருவதிகைக் கோயில்கள் வரலாறு, படம் - 4, 12, பண்ணுருட்டி, 1997.
10. S.I.I.Vol I.



20. அறவழிதாங்கி

(ஒரு வரலாற்று ஆய்வு)

ஆர். விஜயன், ஆரணி

இடஅமைவு

அழிவிடைத்தாங்கி என இப்போது அழைக்கப்படும் இடம் அக்காலத்தின் தொண்டை மண்டலத்தில் அடங்கிய **தெண்ட காருண்யம்** என்ற பகுதியில் அமைந்திருந்தது. பழைய குறிப்புகளில் ஆற்காடு - காஞ்சிபுரம் சாலையில் உள்ளதாகக் காட்டப்படுகிறது. அதாவது ஆற்காடு கலவை வழியே காஞ்சிபுரம் செல்லும் பழங்காலத்தில் முதன்மைச் சாலையாக விளங்கிய பாதையின் வழியில் அமைந்துள்ளது. தற்போது செய்யாறு தாலுக்காவில் இக்கிராமம் அடங்கியுள்ளது.

அழிவிடைத்தாங்கியின் பழைய பெயர் **அறவழிதாங்கி** என்பதாகும். வில்சன் என்ற ஆங்கிலேயரின் நூற்குறிப்பில் **அகூடுதாங்கி** (Akudu Tanki) என்றும் காணப்படுகிறது.

அறவழிதாங்கியும் ஹிமசீதள ராசாவும்

பூர்விகக் காலத்தில் இப்பகுதியில் பௌத்தர்கள் அதிகம் வசித்தனர். சில இடங்களில் காடுகளை திருத்தி சிறு ஊர்களடங்கிய பகுதிகளை உருவாக்கி அப்பகுதிகளை பௌத்த மன்னர்கள் ஆண்டு வந்தனர். அக்காலக்கட்டத்தில் அறவழிதாங்கி எனப்பட்ட இப்பகுதியில் ஏழு சுற்று மதில்கள் கொண்ட கோட்டையைக் கட்டி அரசோச்சிய பௌத்த மன்னர்களில் கடைசி மன்னர் **ஹிமசீதள ராசா** என்பவராவார்.

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த **கர்னர் காலின் மெக்கன்ஸி** (1754 - 1821)என்பார் தென்னிந்தியாவில் சர்வே பணியில் ஈடுபட்டிருந்த போது எழுதப்பட்ட அவருடைய ஆவணங்களில் ஹிமசீதள ராசா மற்றும் அறவழிதாங்கியைப் பற்றியக் குறிப்புகள் விரிவாகக் காணப்படுகின்றன.

அக்காலத்தே இப்பகுதியில் வாழ்ந்த பௌத்த துறவிகள் சிறந்த கல்விமான்களாக விளங்கியதோடு தர்மசாஸ்திரம் மற்றும் தர்க்கசாஸ்திரம் வரையிலான பரந்த கல்வியை அங்கு கற்க வரும் சமணர் உள்ளிட்ட அனைவருக்கும் போதித்தனர். எனவே வட இந்திய பகுதியிலிருந்தும் பௌத்த - சமணத்துறவிகள் உள்ளிட்டோர் அறவழித்தாங்கியில் வந்து பாகுபாடின்றி கல்வி கற்றனர். பௌத்த மன்னன் ஹிமசீதள ராசாவின் ஆட்சியின் போது கல்வி பெற வட பகுதியிலிருந்து ஜைன இளைஞர்களான

அகளங்கர், நிஷ்களங்கர் *ஆகிய இருவர் வந்து தங்கி பயின்றனர். அவ்வேளையில் புத்த துறவிகளுக்கும் இவர்களுக்கும் பேதம் ஏற்பட மதம் சார்ந்த கருத்து மோதல்கள் உண்டாகி அங்கிருந்து இருவரும் வெளியேறினர். அதில் அகளங்கர்* ***சிரவண பெலகோளா*** *சென்று அங்கிருந்த ஜைன மடத்துறவியிடம் சில நாட்கள் தங்கி சமணக் கல்வி பயின்று மீண்டும் அறவழித் தாங்கிக்கு வந்தார்.*

பௌத்த துறவிகளுக்கும் அகளங்கருக்கும் மீண்டும் கருத்து மோதல்கள் எழுந்தன. ஹிமசீதள ராசாவுக்கும் இம்மோதல்கள் வளர்வதில் விருப்பமில்லை. எனவே பௌத்த - சமணத் துறவிகளை அழைத்து இரு சாரரும் பொது மேடையில் வாதிடுமாறும் வாதத்தில் வென்றவர் மதத்தில் தாம் இருந்து தோற்றவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதாகவும் அறிவித்தார்.

அநிஷ்களங்கர் *என்பவர் தலைமையில் பௌத்த துறவிகள் ஒருபுறமும்* ***அகளங்கர்*** *தலைமையில் சமணச்சாதுக்கள் ஒரு புறமும் பொது மேடையிட்டு வாதம் செய்தனர். முடிவில் ஜைனத்துறவியான அகளங்கர் வென்றார் . பௌத்த துறவியான அநிஷ்களங்கர் கொல்லப்பட்டார். மற்ற பௌத்த துறவிகள் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டனர். மன்னர் ஹிமசீதள ராசா சமணத்தைத் தழுவினார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மன்னரும் அப்பகுதி மக்களும் சமணத்தின் பால் மிகுந்த ஆதரவு அளித்து வந்துள்ளனர்.*

சமயப் போரில் வென்ற அகளங்கர் பின்னர் அறவழித்தாங்கிக்கு அருகில் உள்ள கரந்தை - திருப்பறம்பூர் ஆகிய இடங்களில் தங்கியிருந்து சமண அறம் பரப்பியதாக மரபு வழிச் செய்திகள் வழியாக அறிகிறோம்.

கரந்தையில் உள்ள ஜினாலயத்தில் குந்துநாதர் கோயிலில் தருமதேவிக்காக எழுப்பப்பட்ட தனிக்கோயிலின் அருகே அகளங்காச்சாரி என்னும் சாதுவுக்காக ஒரு சிற்றுருவச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கரந்தை - திருப்பறம்பூர் நடுவே உள்ள ஏரியின் கரையில் கி.பி.19 - ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட ஒரு மண்டபத்தின் பீடத்தில் ***அகளங்கரின் திருவடிகள்*** *உருவாக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வருகிறது.*

இதன் மூலம் அறவழிதாங்கியின் வரலாறுடன் இக்கரந்தை யின் வரலாறும் சேர்ந்து சமண மதத்தின் சரித்திரத்தில் நீங்காத இடம் பெற்றுள்ளது.

தொல்காப்பியத்தில் அழிபடை தட்டோர்

அழிபடைத்தாங்கி எனற் பெயரைத் தாங்கி பல இடங்கள் பல்வேறு காலக்கட்டங்களில் இருந்திருக்கலாம் எனபதற்குப் பண்டைத் தமிழ் நூலான தொல்காப்பியம் ஒரு சான்றாக இருக்கிறது.

'அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ'

என்கிறது தொல்காப்பியம். அதாவது **அழிபடை தட்டோர்** என்பது **படை தட்டழிந்தோர்** என்று இங்கே பொருள்படும். தொல்காப்பியப் புறத்திணையியலில் வஞ்சித் திணைக்குரிய 13 துறைகளில் இதுவும் ஒன்றாக **அழிபடை** குறித்துப் பேசுகிறது. வஞ்சித்திணையானது மண் மீது ஆசைக் கொண்டு போரிட்டு வெற்றி பெற்ற மன்னர் மற்றும் உடன் வந்து போரிட்ட பகைவேந்தர் இருவருக்கும் பொதுவானதாகும்.

வெற்றி பெற்ற வேந்தன் தனக்காக இதுவரை போரிட்டு வெற்றி தேடித்தந்த வீரர்களைக் காணச் செல்வான். போரின் போது தன் கையிலிருந்த படைக்கருவிகளான கணை, வேல், கத்தி, கேடயம், முதலியவறைப் பயன்படுத்திய போதும் பகைவர் எறிந்த போர்கருவிகளைத் தடுத்தப் போதும் சில வீரர்கள் இறந்திருப்பர், பலர் புண்பட்டு வீழ்ந்து கிடப்பர். அவ்வீரர்களை மன்னன் நேரில் சென்று விசாரித்ததும் பொருளுதவி அளித்தும் அன்புடன் தழுவி ஆதரிப்பான்.

இதைப் போலவே தோல்வி கண்ட மன்னனும் தம் படை வீரர்களிடம் சென்று ஆறுதல் பேசி பொருளுதவிசெய்து விட்டு வருவர் என்கிறது தொல்காப்பியம்.

இன்னொரு இலக்கியச் சான்றாக ஒரு சமயம் பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற வேந்தன் தனக்காகப் போர்களத்தில் போரிட்டு வீழ்ந்து கிடக்கும் வீரர்களை நள்ளிரவிலும் உறங்காது சென்று நலன் விசாரித்ததை

நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரோடு திரிதரு வேந்தன்
பலரோடு முரணிய பாசறைத் தொழிலே. (186 – 188)

என்னும் நெடுநல்வாடை பாடலின் மூலம் அறியமுடிகிறது.

ஆக அழிந்த துயருற்ற தம்படையைச் சந்தித்து, அவர்களை ஆதரித்து ஆறுதல் கூறுவது வழக்கம். அதனை நினைவு படுத்துகிறது சம்புவராய மன்னன் ஒருவரின் சரித்திரம்.

அழிபடை தாங்கியும் சம்புவராயனும்

கி.பி.13. - ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அறவழிதாங்கி உள்ளிட்ட பெரும்பகுதியை சம்புவராய மன்னர்களுள் ஒருவரான **வீரசம்புவராயர்** என்பார் ஆண்டுக் கொண்டிருந்தார்.

அவ்வேளையில் வடதிசையிலிருந்து யாதவராயன் என்னும் அயல்தேச மன்னன் போருக்காக நிறைய படைவீரர்களுடன் வந்து முற்றுகையிட்டான். அறவழித்தாங்கியில் ஏழு சுற்றுக் கோட்டைக்குள்ளிருந்து சம்புவராயன் போரிட்டான். ஆனாலும் முற்றுகை ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைப் பெற்றதில் சம்புவராயன் படைகள் அழிந்து நாசமாயின. சம்புவராயன்

கனவில் **காலபைரவர்** என்ற கடவுள் தோன்றி மீண்டும் போரிட அறிவுரை கூறிட மறுதினம் வீர சம்புவராயன் புதுத் தெம்புடன் போரிட்டு யாதவராயனை வென்று கைது செய்தானாம்.

அழிந்து போன பட்டணத்தையும் , அழிந்து போன படைகளையும் கடவுள் தாங்கி காத்ததாலும் படை வீரர்களுக்கு மன்னன் ஆறுதலை வழங்கியதாலும் அவ்விடத்திற்கு அழிபடை தாங்கி எனறு பெயரை வைத்து நிலைத்தான்.

அழிபடை தாங்கிக்கு பாலாற்று நீர்

இந்த வீர சம்புவராயன் ஆட்சிகாலம் கி.பி.1306 - 1317 ஆக இருக்கக்கூடும் . மேலும் வீரசம்பன் எனக் கல்வெட்டுக்கள் மூலம் அறியப்படும் சம்புவராயன் இவரே எனத் துணியலாம்.

வேலூர் மாவட்டம் ஆற்காடு நகரம் ஒரு பழங்கால ஊராகும் . இவ்வூரின் கிழக்குப் பகுதியிலுள்ள கிராமம் **முப்பது வெட்டி** என்பதாகும். வீரசம்புவராயன் ஆற்காட்டுக்கு வடமேற்கில் பாலாற்றிலிருந்து ஒரு கால்வாயை வெட்டி முப்பது வெட்டி வழியாக அழிபடை தாங்கி வரை கொண்டு சென்று பாசன வசதியும் அமைத்திருந்தான் . அக்கால்வாய் **வீரசம்புவராயன் கால்வாய்** என்றழைக்கப்பட்டது.

தற்போது இக்கால்வாய் ஆற்காடு நகரில் புறவழிச் சாலையின் வடக்கே அரசு போக்குவரத்துக் கழக பணிமனைக்கு மேற்கே பாலாற்றில் தொடங்கி இராமகிருஷ்ணா மேநிலைப் பள்ளியின் தென்புற மதிற்சுவர் ஓரமாக ஓடி நகருக்குள் பயணித்து முப்பது வெட்டி வழியாகச் செல்வதைக் காணமுடிகிறது. ஆனால் தற்போது பாலாற்றில் நீரின்மைக் காரணமாக இக்கால்வாய் கழிவு நீர் கால்வாயாக ஓடுகிறது என்பது வருத்தத்திற்குரிய செய்தி யாகும். இந்த வீரசம்புவராயன் கால்வாய் அக்காலத்தே அழிபடை தாங்கி பகுதியை செம்மையானதாய் வளப்படுத்தியது எனலாம். இக்கால்வாய் வெட்டியதன் மூலம் சம்புவராயன் மக்களின் பால் கொண்ட அன்பை வெளிப்படுத்தியதை உணர முடிகிறது.

மேலும் இந்த வீரசம்பன் என்கிற வீரசம்புவராயன் ஒரு சமயம் தான் பிற மன்னர்களைப் போரினால் வென்று கொண்டு வந்த செல்வங்களை **ஞானாத்மன்** என்னும் தவசீலரிடம் கொடுத்து **திருவல்லம்** என்னும் ஊரில் அமைந்த **சிவன் (சைவ) கோயிலுக்கு மண்டபம்** ஒன்றையும், காஞ்சிபுரம் **அருளாளப் பெருமாள் எனும் (வைணவ) கோயிலுக்கு புஷ்ப ரதம்** ஒன்றையும் கொடுத்ததாகக் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

இதன் மூலம் வீரசம்புவராய மன்னன் சமணர் வாழ்ந்த அறவழிதாங்கி உள்ளிட்ட பகுதிகள் செழிக்க கால்வாயை வெட்டியதோடு தான் சார்ந்த சைவ மதத்தின் பால் உதவியதற்கு நிகராக வைணவ கோயிலுக்கும் பொருளுதவி செய்து மதங்களைக் கடந்து மனதில் நிற்கிறார். இவரைப் போலவே பல

சம்புவராய மன்னர்கள் சமணத்திற்குப் பல்வேறு காலக்கட்டங் களில் உதவி புரிந்துள்ளனர் என்பது அவர்களது வரலாற்றின் வழி நெடுகிலும் காணப்படும் செய்திகளாகும்

அழிவிடைதாங்கி

சம்புவராய மன்னர்களின் சமகாலத்திலும் சற்று பின்னரும் பல குறுநில மன்னர்கள் இப்பகுதியில் அரசோச்சினர். இவர்களில் மாறவர்ம குலசேகரப் பாண்டியனின் மகனான வீரபாண்டியன் தமது ஆட்சியில் ஜெயம் கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து பாராசூர் நாட்டு மதுரையாகிய திருவம்பலப் பெருமாள் நல்லூர் என்னும் கிராமத்தை திருவோத்தூர் (செய்யாறு) என்னும் ஊரில் அமைந்த சிவாலயத்திற்கு மடப்புறமாக அழிவிடைத்தாங்கி நாட்டவர் விடுவதாக அறியப்படுகிறது. இதன் மூலம் அறம் செய்வதில் அழிபடைத்தாங்கியின் பங்கு காலம் கடந்தும் தொடர்வது பாராட்டத்தக்கது.

மேற்காணும் செய்திகளால் அறவழிதாங்கி என்ற சமணர் காலப்பெயர் சம்புவராயர் காலத்தில் அழிபடைதாங்கி யாய் பெயர் மாற்றம் பெற்று பிற்காலத்தில் அழிவிடைத்தாங்கி யாய் மருவி தற்காலத்திலும் இதே பெயரில் இக்கிராமம் வழங்கப்பட்டு வரலாற்றில் நிலைப்பெற்று நிற்கிறது.

அடிக்குறிப்புகள்

1. Wilsons Mackenzie Collection. Vol.2/edi.Prof.Wilsons/1882/ PXXXVIII
2. மெக்கன்ஸி குறிப்புகள், Vol/edi.T.V.மகாலிங்கம், சென்னை.1972.
3. நச்சினார்க்கினியார் உரை,தொல்காப்பியம், தென்னிந்திய சைவ சித்தாந்த பதிப்பகம், திருநெல்வேலி,1947.
4. Dr. S. சௌந்தரபாண்டியன் - நடன. காசிநாதன், தமிழக ஊர் வரலாறுகள், முப்பந்தட்டிப் பட்டணம்- கைப்பீது, தமிழ்நாடு அரசு கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை, 1995. பக் 49 - 50.
5. A.R.E. 3 of 1890/E.I.Vol 3/P70
6. A.R.E. of 1893/E.I.Vol 3/P71
7. S. கிருஷ்ணமூர்த்தி, திருவோத்தூர் (செய்யாறு) வரலாறு, சேகர் பதிப்பகம், சென்னை, 1994, பக் 63.

21. திருமலை சமணப் பள்ளி

முனைவர். ஆர். பூங்குன்றன், திருமலை.

திருமலை ஈராயிரமாண்டு பழமையுடைய ஓர் ஊர் ஆகும். இவ்வூர் திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தில் அமைந்துள்ளது. ஆரணி - போளூர் பெருவழியில் வடமாதி மங்கலம் பிரிவிலிருந்து 4 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. வேலூரிலிருந்து ஒரு பேருந்து செல்கிறது. போளூரிலிருந்தும் சில சிற்றுந்துகள் இயக்கப்பெறுகின்றன.

இவ்வூர் சமணப்பள்ளி கி.பி. 7 - ஆம் நூற்றாண்டிலிருந்து இயங்கி வருகிறது. பல்லவர் காலத்துச் சிற்பங்கள் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. இப்பள்ளி பல்லவர் காலம் தொடங்கி நாயக்கர் காலம் வரை ஆயிரம் ஆண்டுகள் செல்வாக்குடன் விளங்கியது. இவ்வூரில் வாழ்ந்த சமணர்களிடம் சமஸ்கிருத, பிராகிருத ஏட்டுச் சுவடிகள் வைத்திருந்தமை பற்றி முதல் கல்வெட்டு ஆய்வாளர் குறிப்பிடுகிறார். 1960 ஆண்டு வரை சீவக சிந்தாமணிச் சுவடிகளை சமணப் பெரியார்கள் ஓலைச் சுவடியிலிருந்து வாசித்ததைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இவ்வூரிலிருந்த பல சமஸ்கிருத சுவடிகளை பாண்டிச் சேரியில் உள்ள பிரஞ்சு இந்தியக்கழகம் வாங்கிச் சென்று பாதுகாத்து வைத்திருக்கிறது.

பெருங்கற்சின்னங்கள் (பாண்டியர் வீடு)

சங்ககாலத்திற்கு முன்பின் காலங்களில் பெருங்கற்சின்னங்கள் உருவாக்கப்பெற்றன. பெருங்கற்சின்னங்கள் உருவாக்கப்பெற்ற பல வாழ்விடங்களில் சமணப் பள்ளிகள் நிலை கொண்டன. மதுரையைச் சுற்றியுள்ள பல சமணப் பள்ளிகள் அருகில் பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ளன. சித்தன்ன வாசல், புகழூர் (கரூர்) போன்ற இடங்களில் சமணப் பள்ளிகள் உள்ளன. அருகிலேயே பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ளன. பெருங்கற் சின்னங்களை உருவாக்கிய மக்களிடையில் சமண சமயக் கருத்துக்களைப் பரப்பவே அப்பகுதிகளில் சமணப்பள்ளிகள் உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். திருமலையில் சுடுகாடு செல்லும் வழியில் நடுக்காடு உள்ளது. இங்கு பத்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. நடுக்காட்டின் அருகில் பேய்ஏரி என்ற பெயரில் ஒரு ஏரி உள்ளது. இந்த ஏரியை மக்கள் வேறு விதமாக அழைக்கின்றனர். பெருங்கற்சின்னங்கள் அருகிலும் பிற இடங்களிலும் புதிய கற்காலக் கருவிகள்

கிடைக்கின்றன. அதனால் திருமலையில் புதிய கற்காலந் தொடங்கி மக்கள் வாழ்ந்து வருகின்றனர் எனலாம்.

பெருங்கற்காலத்திற்கு பின் திருமலையில் மக்கள் வாழ்க்கை இருந்த தன்மை பற்றி செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை. கி.பி. 7 - ஆம் நூற்றாண்டின் சிற்பங்கள் இங்கு ஒரு சமணப்பள்ளி நிலை பெற்றிருந்ததுப் பற்றிய சான்றுகளாகக் கிடைக்கின்றன. சங்ககாலத் திற்குப் பின்னும் பல்லவர் காலத்திற்கு முன்னும் நிலை பெற்றிருந்த களப்பிரர் ஆட்சியின் போது உருவாக்கப் பெற்ற வரலாற்றுச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை. தருமதேவி கோயிலிலுள்ள பாகுபலியின் சிற்பமும் மேல்கோயில் முன்மண்டபத்திலுள்ள தீர்த்தங்கரர் உருவம் ஒன்றும் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவையாகக் கலை வல்லுனர்கள் கருதுகின்றனர். அதனால் இவ்வூரில் பல்லவர் காலம் தொடங்கி சமணப் பள்ளி செழுமையுற்றிருந்தது எனலாம்.

பல்லவர் காலத்தில் சிறப்புற்றிருந்த சமணப் பள்ளிகள் தொண்டை மண்டலத்தில் பல இருந்தன. ஆர்மாமலை, திருப்பருத்திக்குன்றம், பஞ்சபாண்டவர் மலை, வேடல், வள்ளி மலை, திருநாதர் குன்று போன்ற பல ஊர்களில் சமணப்பள்ளி பற்றிய சான்றுகள் கிடைக்கின்றன. பல்லவர்களைத் திராவிடர் என்றும், தொண்டை மண்டலத்தை திராவிட நாடு என்றும் கல்வெட்டுகள், செப்பேடுகள் கூறுகின்றன. திராவிட சங்கம் என்ற சமணப் பிரிவும் கூட தொண்டை நாட்டில் உருவான சங்கமாக இருக்கலாம்.

மதுரையில் வஜ்ஜரநந்தி குரவர் உருவாக்கிய திராவிட சங்கம் என்ற அமைப்பு சமணத்தின் ஒரு பிரிவு என்று தான் கொள்ள வேண்டும். கி.பி. 5 - ஆம் நூற்றாண்டில் மதுரை திராவிட சங்கம் என்ற பிரிவு உருவாக்கப் பெற்றதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. அந்த நிலையில் தொண்டை நாட்டில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பாவது திராவிட சங்கம் உருவாகியிருக்க வேண்டும் எனறு கருதலாம்.தொண்டை நாட்டில் நிலைப்பெற்றிருந்த திராவிட சங்கம் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. தொடக்கத்தில் இப்பிரிவு மிகவும் செல்வாக்கு பெற்று விளங்கிது. திகம்பர சமணப்பள்ளிகளில் திராவிட சங்கத்தில் செல்வாக்கு மிகுதியாக இருந்தது.

வைகாவூர் பள்ளி

திருமலைக்குப் பண்டை நாளில் வைகைமலை என்றும், மலையடிவாரத்திலிருந்த ஊருக்கு வைகாவூர் என்றும் வைகாவூர் திருமலை என்றும் பெயர் பெற்றிருந்தது. கி.பி. 10 - ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பெயர் நிலை பெற்றிருந்தது. காலப் போக்கில் திருமலை என்ற பெயர் மட்டும் நிலை பெற்றிருந்தது. இவ்வூர் சமணப் பள்ளிகள் பற்றிய கல்வெட்டுகள் கி.பி. 10 - ஆம்

நூற்றாண்டில் இருந்து கிடைத்தாலும் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டிலிருந்து அப்பள்ளி செயல்பட்டிருக்க வேண்டும். இங்கு வாழ்ந்த முனிவர்கள் பற்றிய கல்வெட்டுகள் கூறுகின்றன.பரவாதி மல்லர், அரிட்டநேமி, குணவீரமா முனிவன், போன்றவர்கள் தவமியற்றியுள்ளனர். இவர்களில் குணவீரமா முனிவன் தான் காலத்தால் முற்பட்டவர். இவரைப் பற்றிய அழகிய பாடல் சாசனம் ஒன்று கிடைத்துள்ளது. அவர் பெரிய ஏரியில் மதகு அமைத்துத் தந்ததைப் பற்றி கூறுகின்றது. இதுபற்றி பின்னால் குறிக்கப் பெறுகிறது. சமணப் பள்ளிகள் மக்கள் வளத்தில் காட்டிய ஈடுபாடு இக்கல்வெட்டால் புலப்படும்.

சித்திர மேழி பெரியநாட்டார்

திருமலையில் சித்திரமேழிப் பெரிய நாட்டார் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சித்திரமேழி பெருக்காளர் இவ்வூர் பள்ளிக்குக் கொடை அளித்ததைப் பற்றி இக்கல்வெட்டுக் கூறுகின்றது. சித்திரமேழி பெரிய நாட்டுச் சபை செல்வாக்குப் பெற்று விளங்கிய ஊர்கள் சமண சமயத் தொடர்புடைய ஊர்களாக விளங்குகின்றன. சித்திரமேழிப் பெரிய நாடு வேளாளர் - வாணிகர் கூட்டமைப்பாக விளங்கியது. இடைக்காலத்தில் வேளாண்மையுடன் வாணிகமும் பெருமை பெற்று விளங்கியது. அதன் விளைவாக சமணப்பள்ளிக்கு நிறைய கொடைகள் அளிக்கப்பெற்றன. (வரலாறு முழுவதும் சமணத்திற்கும் வாணிகத்திற்கும் இடையிலிருந்த பிணைப்பு குறிப்பிடத் தக்கது) அதனால் சித்திரமேழிப்பெரிய நாட்டார் சமணப் பள்ளிக்குக் கொடை அளித்ததில் வியப்பேதுமில்லை. மேலும் சித்திரமேழி பெரிய நாட்டு அமைப்பில் இடங்கை சாதியார் செல்வாக்குப் பெற்று விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. சித்திரமேழிப் பெருக்காளர் வைகாவூர் பள்ளிக்கு நிலக்கொடை அளித்துள்ளனர்.

மதகமைத்த மாமுனிவர்

முதலாம் இராசராசன் காலத்தில் திருமலைப்பள்ளியில் தவமியற்றிய குணவீர மாமுனிவர் இவ்வூர் பெரிய ஏரிக்கு மதகமைத்து ஊரை வளப்படுத்தினார். இந்தச் செய்தியை அழகிய விருத்தப்பாவில் பாடி வைத்துள்ளனர்.

அலைபுரியும் புனற் பொன்னி ஆறுடைய சோழன்
அருள் மொழிக்கு யாண்ட இருபத்தொன்றாவது
கலைபுரியும் மதி நிபுணன் வெண்கிழான் கணிச்சேகர
மருபொற் சூரியன் றன் நாமத்தால் வாழ்
நிலை நிற்க கலிங்கிதிட்டு நிமிர் வைகை மலைக்கு
நீடுழி இரு மருங்கும் நெல்விளையக் கண்டேன்

குலைபுரியும் படை அரைசர்க் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர்வையைக கோவேய்

இந்தப் பாடல் கல்வெட்டுக் கூறும் குணவீரமாமுனிவன் வச்சிரநந்தி மாலையை அளித்த குணவீர பண்டிதர் என்று கூறுவாரும் உளர். இது ஆய்வுக்குரியது. கி.பி. 11 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் இம்முனிவர்.

கருநாடகத் தொடர்பு

முதலாம் பராந்தகனின் கல்வெட்டு ஒன்று கருநாடகத்தை சேர்ந்த படைத்தலைவன் ஒருவன் வைகாவூர் பள்ளி வாழ் அடிகள் மார்களுக்கு அமுது ஊட்டுவதற்கு பொன்னைக்கொடையாக அளித்துள்ளான். இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கிருட்டிணன் காலத்தில் இப்பகுதியை ஆட்சி செய்த பிருதிகங்கரையர் மனைவி கங்கமாதேவி என்பவள் இவ்வூர் பள்ளி இறைவனுக்கு விளக்கெரிப்பதற்கு பொன் கொடை அளித்துள்ளாள். விசைய நகரர் காலத்தில் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டில் தண்ட நாயகன் ஒருவன் திருமலை பள்ளிக்குக் கொடை அளித்துள்ளான். தொடர்ந்து திருமலைப்பள்ளிக்கும் கருநாடகத்தை சேர்ந்த சிரவணபெல்லிகுளத்தில் இருந்த பள்ளிக்குமிடையில் தொடர்பு நிலை பெற்றிருந்தது. இது பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை நீடித்தது. தற்போது ஏற்படுத்தப் பெற்றுள்ள அரஹந்தகிரி பள்ளியும் சிரவணபெல்லி குளத்து மடத்தின் பெருமுயற்சியால் உருவாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

கொடையளித்தோர்

இவ்வூர் சமணப் பள்ளிக்கும் பல திறப்பட்ட மக்கள் கொடையளித்துள்னர். அரசர்கள், சிற்றரசர்கள், அரசிகள், அரசிகளின் பணிப்பெண்கள், நாட்டார்கள், சேனாதிபதிகள், ஊர்மக்கள், வேளாளர்கள், வணிகர்கள் எனப் பலதிறத்து மக்கள் இவ்வூர் பள்ளிக்கு கொடை அளித்துள்ளனர். சோழப் பேரரசு உருவாகிய பின் இவ்வூர் பள்ளி அரசியல் செல்வாக்குப் பெற்ற பெரும் பள்ளியாக எழுச்சிப் பெற்றது. முதலாம் இராசராசனின் தமக்கையார் குந்தவை பிராட்டியார் தன் பெயரில் குந்தவை ஜினாலயம் என்ற கோயிலைக் கட்டினார் . அவர் புகுந்த வீடான வல்லவரையர் மரபினர் இக்கோயிலுக்கு நிறைய கொடைகளை அளித்துள்ளனர். மூவேந்த வேளார் படைத்தளபதிகள் அரசு அலுவலர்கள் எனப் பல பிரிவினர் இவ்வூர்ப்பள்ளிக்கு பெருங்கொடையை அளித்துள்ளனர்.

.இவ்வூர் பள்ளிக்கு அதியமான் மரபைச் சேர்ந்த விடுகாதழகிய பெருமாள்அளித்த கொடை குறிப்பிடத் தக்கது. அவன் மரபினர் அப்பள்ளியில் இயக்கர், இயக்கியர் உருவங்களை செய்து வைத்துள்ளனர். விடுகாதழகிய பெருமாள் காலத்திற்கு முன்பு அச்சிலைகளுக்கு சிதைவு ஏற்பட்டுள்ளது. இச்சிதைவைச்

சரிசெய்து திருமலை மேல் வைத்தான். இச்செய்தியை அழகிய விருத்தப்பாவில் கூறியுள்ளார்கள்.

வஞ்சியர் குலபதி எழினி
வகுத்த வியக்கரியக்கியரோடு
எஞ்சிய வழிவு திருத்திவெண் குண
விறை திருமலை வைத்தான்
அஞ்சிதன் வழி வரும வன்வழி
இகலி அதிகன வன்நூல்
விஞ்சையர் தலைபுனை தகைமையர்
காவலன் விடுகாதழகிய பெருமாளே

இச்செய்தியை வடமொழியிலும் கூறியுள்ளார்கள். அப்பாடல் சார்தல அடிகளில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஓவியங்கள்

திருமலையில் உள்ள குகைக் கோயிலில் ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன. குகைக் கோயிலில் கட்டப் பெற்றுள்ள சுவர் செங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றால் ஆனவை. சுவரின் வெளிப்புறத்திலும் உள்புறங்களிலும் ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன. இங்குள்ள ஓவியங்கள் சோழர் காலத்தின் இறுதியிலிருந்து வரையப் பெற்றிருக்க வேண்டும். குகை வாயிலில் சம்புவராயர் கல்வெட்டுகள் இருப்பதால் இவ்வோவியங்கள் சம்புவராயர் காலம் தொடங்கி நாயக்கர் காலம் வரை தொடர்ந்து வரையப் பெற்றிருக்க வேண்டும்எனலாம் .

இயக்கி ஓவியம்

திருமலைக் குகை ஓவியங்களில் அணியாதழகிய தீர்த்தங்கரர் உருவஙகள் அக்கால மகளிர், கூத்தாடிகள், அரசர்கள், வானவியல் செய்திகள் விதானத்துப் பூவேலைப்பாடுகள், சமவசரணம் ஆகியவற்றை கொண்டு விளங்குகிறது. இவை எல்லாவற்றிக்கும் மேலாக இயககி ஜ்வாலாமாலினியின் ஓவியம் உயிரோட்டத்துடன் வரையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வோவியம் ஆளுயரத்திற்கு நின்ற நிலையில் வரையப் பெற்றுள்ளது. தொண்டை மண்டலத்தில் இயக்கி வழிபாடு பெருமை பெற்று விளங்கியதற்கு பஞ்சபாண்டவர் மலை பொன்னியக்கியார் உருவமே சிறந்த சான்று . இது தமிழகத்தில் உள்ள இயக்கி உருவங்களிலேயே காலத்தால் முற்பட்டது. திருமலையில் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பெற்ற இயக்கியின் உருவம் ஒன்று உள்ளது.

ஓவியத்தில் சமவ சரணம்

கேவல ஞானம் பெற்ற தீர்த்தங்கரர் இந்திரன் அமைத்த மேடையில் அமர்ந்து உரை நிகழ்த்துவார். அவ்வுரையை மக்கள்,

தேவர், நரகர், விலங்குகள், தவமுனிவர், பெண்முனிவர், ஆண்கள், பெண்கள், அரசர்கள், அரசிகள் எனப் பலர் அமர்ந்து கேட்பர். அவ்வுரையை எல்லோரும் சமமாக அமர்ந்து கேட்க சமவுரிமை பெற்றுள்ளதால் இதற்குச் சமவ சரணம் என்று பெயர். சமவ சரண ஓவியங்கள் திருப்பருத்திக் குன்றத்தில் (காஞ்சிக்கு அருகில உள்ள ஊர்) உள்ளன. அங்கு சமவசரணம் வடமொழிச் சமண நூல்களிலும் தமிழ் சமண நூல்களிலும் விவரித்திருப்பதைப் போல வரையப் பெற்றுள்ளது. தமிழ் இலக்கியத்தில் காலத்தால் முற்பட்ட சமவசரணம் பற்றிய செய்திகள் பெருங்காதையில் தான் உள்ளன. அந்நூல் கி.பி. 2 - ஆம் நூற்றாண்டு என்றும் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது.அந்நூலில் கூறப் பெற்றுள்ளதைப் போல முழுமையான சமவ சரணம் ஓவியம் திருப் பருத்திக்குன்றத்தில் உள்ளது.

திருமலை சமணப்பள்ளிகள் ஆற்றாதவர்களுக்கு ஆறுதல் அளித்தது. அஞ்சியவர்களுக்கு அஞ்சினான் புகலிடமாக விளங்கியது. இது ஐவகைத் தானங்களில் ஒன்றான அபயதானத்தைப் பற்றிக் குறிக்கிறது. சாஸ்திரதானம் அளித்த கல்வித்தானமளித்தது. இன்று பண்டைய சமணப்பள்ளிகள் புதுமைப் பெற்று பண்டைய ஒளிபெற்று விளங்குகின்றன. இங்கு பட்டமேற்றுள்ள முனிவர் சாஸ்திர தானத்திலும் கல்வி தானத்திலும் அளந்தறிய முடியாத பங்கினை ஆற்றி வருகிறார். அவருடைய கொடை நிழலில் திருமலைப் பள்ளி பண்டைய பேரொளியைப் பெற்று உலகுக்கெல்லாம் ஒளி வீசும் என்பதில் ஐயமில்லை.

உதவிய நூல்கள்

1. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதிகள் 1,19,23.
2. மயிலை. சீனி. வெங்கடசாமி, சமணமும் தமிழும்
3. C. Sivaramamoorthi, South Indian Painting.
4. பெருங்கதை, பெருமழைப்புலவர் உரை.
5. பெருங்கதை, உ.வே.சா. பதிப்பு.
6. Ramenthiranath Nandi, Religioous instritritution, and Culfs in the Deccan.
7. T.N. Ramachanthiran, Thirupparuthikunram and its temples.
8. C. Sivaramamoorthi, panorama of Jain art.



22. கழுகுமலை ஒரு கலைக்கருவூலம்

மூதறிஞர். கு. அருணாசலக் கவுண்டர்.

கோயில்பட்டியிலிருந்து சங்கரன் கோயில் பாதையிலே பன்னிரண்டாவது மைல்கல்லில் கரிசல் காடும் கரம்பும் சூழ்ந்த புன்செய் பிரதேசத்திலே கழுகுமலையைக் காணலாம். மலை என்பது வெறும் பெயரளவிலே தான். சுமார் 300 அடி மொட்டைப் பாறையே அது. அதன் உச்சியிலே தெரிவது பிள்ளையார் கோயிலும் தீபத்தம்பமுமே. மலை மீதேறி அங்கே செல்வதற்குச் சரியான பாதை இல்லை. சற்று சிரமத்துடன் தான் செல்ல வேண்டும். வழியிலே ஒரு குகைத் தென்படுகிறது.

இதுபோன்ற மலைச் சரிவுகளிலே பாறைகளில் படுக்கைகள் போலவும் ஆசனங்கள் போலவும் செதுக்கப்பட்ட குகைகளிலே தான் தமிழ்நாட்டின் மிகப்பழமையான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன. கி.மு. 3 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்குகைகள் யாவும் சமணசமயத்தை வளர்த்த முனிவர்கள் தங்கியிருந்த இடங்களே.

இம்முனிவர்கள் வசித்திருந்த மற்றொரு மலைச்சரிவிலே கிஜ்ஜக்கூடம் ஒன்று. கிஜ்ஜக்கூடம், அதாவது திரீதரகூடம் என்பதற்குக்கு கழுகுமலை என்பது பெயர். இம்மலைப் பாறைகளில் செதுக்கப்பட்ட படுக்கைகள் காணப்படுகின்றன. ஆனால் பிராமி லிபிக் கல்வெட்டு இல்லை.

பௌத்தர்க்குச் சற்று முன்னோ பின்னோ இங்கே சமண முனிவர்களும் குடியேறி தொடர்ந்து வசித்திருக்கின்றனர். இங்கே காணப்படும் நூற்றுக்கு மேற்பட்ட சமண சிற்பங்களும் கல்வெட்டுக்களும் புலப்படுத்தும் தெளிவான செய்திகளால் இம்மலை சமணரது பல்கலைக் கழகமாக அகில இந்தியாவிலும் முன்னர் பிரசித்தி வாய்ந்திருந்ததை நாம் அறிகிறோம்.

சமண தீர்த்தங்கரர்கள்

மலைமீது சமணச் சிற்பங்களைக் காண்பதற்கு முன் அடிவாரத்திலே அமைந்துள்ள கழுகாசல மூர்த்தியின் கோயிலுக்குச் செல்கிறோம். எட்டயபுரத்து அரச மரபினர் கட்டி வைத்த விசாலமான மண்டபங்களைக் கடந்து செல்கிறோம். வழிபாடு செய்துவிட்டு நாமும் வெளியேறி மலையை வலம்

வருகிறோம். அல்லிக்கேணியை கடந்து உருண்டமலை திரண்டமலை ஒய்யாரக் கழுகுமலையைப் பார்த்த வண்ணம் அதன் வடபாரிசத்திலே அகண்டதாய் பரந்து கிடக்கும் பாறை மீதேறிச் செல்கிறோம். கவனமாய்ப் பாதத்தை ஊன்றித்தான் நடக்கிறோம். பாதத்தை ஊன்றி வைக்கும் போதெல்லாம் பாதம் படும் சிற்சில இடங்களில் பாறையின்றும் சங்கீதத்துக்குரிய நாதங்கள் சப்த ராகங்கள் அல்லவா ஒலிக்கின்றன. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு இதைவிட்டு விட்டு சற்று வடக்கு நோக்கி மேல் ஏறுகிறோம். தென்புறம் மலைச்சரிவின் நெடுகிலும் அறுபது அடி உயரத்தில் ஒன்றன் கீழ் ஒன்றாக மூன்று வரிசைகளில் ஒரே சீராய்த் தோன்றும் இச்சிற்பங்களைப் பாருங்கள். மழித்த தலையுடன் இளமை முறுக்கோடு இரு கரங்களும் மருங்கிலே தொங்க முக்குடையின் கீழ் ஞான ஜோதியில் தம்மை மறந்து அவ்வொளியை மௌனமாகவே பரப்பும் வகையில் தோன்றும் இச்சிற்பங்கள் சிற்பக்கலைக்கே பெருமை தரும் செல்வம் அல்லவா? இவை யாவும் தீர்த்தங்கரர் உருவங்களே. அன்பும் அருளும் கொண்டு அமைதியின் வடிவாய்த் தோன்றும் இவர்கள் யார்? சமண சமயத்தை வளர்த்தச் சான்றோர் இவர்கள். இவர்களைத் தீர்த்தங்கரர்கள் என்பர். இச்சொல்லுக்குப் பிறவிப் பெருங்கடலினின்று நம்மைக் கரைச் சேர்ப்பவர் என்பது பொருள். இவர்கள் திகம்பரர்களே. அதாவது அம்மணமாகத் தோன்றுகின்றனர். மெய்ஞானியராய் வினைகளை வென்ற இவர்களுக்குக் கௌபீனமும் மிகை தான். பூரண வளர்ச்சி எய்திய இம்மானிடர்களையே கடவுளாகக் கொண்டு ஜைனமதம் வழிபடுகிறது. கண்காணாக்கடவுளை அது ஒப்புக் கொள்வதில்லை.

அம்பிகை

இதோ இந்த வரிசையின் இடது பால் மாடத்திலே பெண் உருவம் ஒன்று அசோக மரத்தின் கீழ் நின்ற கோலத்தில் தோன்றுகிறது அல்லவா? மகுடம் தரித்துக் காதுகளில் தோடு அணிந்து வலது கரத்தை மருங்கிலே நிற்கும் சிறுமியின் சிரசிலே வைத்து இடது கரத்திலே எதையோ ஏந்தி திரிபங்க நிலையிலே ஒய்யாரமாய் நிற்கும் இவள் தான் அம்பிகை. இவளை நேமிநாதரது யட்சி - சாசன தேவதை, அதாவது சேவகி என்பர். இவளது வாகனமாகிய சிங்கம் கம்பீரமாய் தலைநிமிர்ந்து நம்மையே பார்க்கிறது. இதன் வால் மேல்நோககிச் சுருண்டிருக்கிறது. இதன்அருகே அச்சம் இன்றிச சிறுவர் இருவர் நிற்கின்றனர். இந்த அம்பிகை துர்க்கையுடன்ஒன்றி மறைந்தாள்.

மகாவீரர்

அதோ வலது பால் சற்றுப் பெரியதாய் தோன்றும் அந்த கோஷ்டத்தைப் பாருங்கள். அதன் பிரபாவளியிலே பொறிக்கப்பட்டுள்ள அஷ்டமங்கலங்கள் அலங்காரச் சித்திரங்களின் சிற்றுளி நுணுக்க வேலைப்பாடுகளைச் சொல்லாமல் விவரிக்க முடியாது. இம்மாடத்திலே முக்குடைக் கீழ் வீற்றிருக்கும் வர்த்தமான மகாவீரர் சிற்பம் செய்நேர்த்தி வாய்ந்தது. காற்று வீசாத இடத்திலே ஆடாமல் அசையாமல் புகைத்தலுமின்றி நேராக நின்று எரிந்து கொண்டிருக்கும் விளக்குச்சுடர் போல் அல்லவா அவர் தோன்றுகிறார். தியானமே உறைந்து இறுகிச் சிலையானதோ என்று எண்ணுகிறோம். கீழே தீர்த்தங்கரர் இருவர் அமர்ந்திருக் கின்றனர். முடி தரித்த மன்னன் ஒருவன் மண்டியிட்டு வணங்குவதைக் காண்கிறோம். இவன் பாண்டியன் பராந்தக நெடுஞ்செழியன் ஆகலாம்.

பத்மாவதி

கீழே தனிக்கோஷ்டத்திலே யட்சி ஒருத்தி பத்மாசனத்திலே அமர்ந்திருக்கிறாள். அவள் சிரசின் மீது பாம்பின் படம் கவிழ்ந்திருக்கிறது. நான்கு கரம் வாய்ந்த இவள் வலது மேல் கையில் பாம்பு, கீழ்கையில் கனி, இடது மேல்கையில் அங்குசம் போன்ற ஒன்று தாங்கி கீழ்க்கையை மடியில் வைத்திருக்கின்றாள். இருமருங்கும் பணிப்பெண்கள் சாமரம் வீசி நிற்கின்றனர். இந்த யட்சி பார்சுவநாதரின் சேவகி பத்மாவதியாகலாம். சமணமதத் தெய்வங்களிடையே யட்சிக்குத் தனியிடம் இல்லை. தனி அந்தஸ்து இல்லை. தீர்த்தங்கரரின் சாசன தேவதையாய் சேவகியாய் தான் தோன்றுவாள்.

யட்சி வழிபாடு

கழுகுமலைச் சிற்பங்களுக்குத் தீர்த்தங்கரரை விட ஒருபடி அதிகமாகவே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதைக் கருதும் போது யட்சி வழிபாடு தமிழகச் சமணத்தின் சிறப்பியல்பு என்பது புலனாகிறது. 'அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிற்கு' பால்பாயசம் படைத்து மாதரி வழிபடுவதைச் சிலப்பதிகாரத்திலே காண்கிறோம். இதிலே இயக்கி என்பதும் நாம் இசக்கி என்பதும் யட்சியைத் தான். யட்சியைப் படாரியர் எனலாம். படாரித்தான் பிடாரியானாள். இசக்கியும், பிடாரியும் கிராமதேவதைகளாகவே பத்மாவதியுடன் ஒன்றினார்கள்.

பிங்கலந்தை நிகண்டு துர்க்கையின் பெயராகப் பகவதி பண்ணத்தி என்பன பயில்கின்றன. திவாகர நிகண்டிலும் பகவதியின் எதிராகப் 'பண்ணம் பணத்தி' பயில்கிறது. பண்ணத்தி என்பதற்குப் பாம்பின் படத்தைத் தரிப்பவள், நாகதேவதை பத்மாவதி என்பது பொருளாகிறது. சமணரது பத்மாவதி பகவதி வழிபாட்டிலே கலந்து மறைந்தாள் என்று கருதலாம். மலைச்சரிவிலே 60 அடி உயரத்திற்கு மேல் அலைஅலையாய்த் தோன்றும் இந்த ஆன்றோர்களை கீழ் நிற்கும் நாம் அண்ணாந்து பார்க்கும் போது அவர்கள் முன் நாம் எம்மாத்திரம்? நாம் சிறுமையை அலலவா உணருகிறோம். சர்வக்ஞர் அதாவது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர் அவர்கள். இந்த மகான்களது வடிவத்தை உருவாக்கிய சிற்பி தன்னையே ஒரு சித்த புருஷனாக மாற்றிக் கொண்டு தனது தியானத்திலே கண்ட தெய்வீக உருவங்களை கல்லிலே வடித்திருக்கிறான்.

இந்த உருவங்களிலே உடற்கூறோ அவயப் பொருத்தமோ இல்லைதான். ஆனால் அந்தச் சிலைகளின் மூலம் சாந்த ரசத்தை அல்லவா அவன் அள்ளிப் பொழிந்திருக்கிறான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் 300 வருட கால இடைவெளியிலே முன்னும் பின்னுமாய் இவை சமைந்தனவேனும் வேறுபாடு எதுவுமின்றி ஒரே அச்சில் வார்த்தார்போலத் தோன்றும் இவற்றின் ஒருமையும் ஒருங்கிணைப்பும் வியப்புக்குரியன.

கல்வெட்டுக்கள் தரும் செய்தி

ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் வட்டெழுத்தில் வாசகம் உள்ளது. ஒரு வாசகத்தால் கழுகுமலைக்குத் திருமலை என்ற பெயரும் அந்தக் கிராமம் நெச்சுர நாட்டுத் திருநெச்சுரம் என்று வழங்கப்பட்டதும் புலனாகிறது. சமண சமயச் சித்தாந்தங்களை நாள்தோறும் விளக்கிக் கூறுவதற்காக 'பதின்மர் வயிராக்கியர்க்கு' ஆகாரத் தானமாக நிலபுலங்கள் விட்ட செய்தி மற்றொரு கல்வெட்டால் புலனாகிறது. ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் அதைச் செதுக்குவித்தவர் பெயரும் முகவரியும் பொறிக்கப்பட்டுள்ளன. இதோ இந்த சிற்பத்தைச் செய்தது யார் தெரியுமா? திருநறுங்கொண்டை பலதேவ குறவடிகள் மாணாக்கர் கனக விசையை. திருநறுங்கொண்டை தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளது. இதோ இந்த சிந்பத்தொகுதிகள் யாவும் திருச்சாரணத்துக் குறத்திகள் செய்வித்த திருமேனிகளாம்.

இங்கே காணப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களும் சிற்பங்களும் கி.பி. 8, 9, 10 - ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவை புலப்படுத்தும் செய்திகள் யாவை? மிகப்பெரிய பல்கலைக்கழகம் ஒன்று பிரபலமான பேராசிரியர்களைக் கொண்டு முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து கழுகுமலையில் இயங்கி வந்திருக்கிறது. தொலைதூரத்திலிருந்து வந்து, அங்கே கல்வி பயின்று வெளியேறிய ஆசிரியர்கள் பலர், முனிவர்கள் பலர், வணிகர்களும், உழவர்களும் பற்பலர். ஆண்களே அன்றிப் பெண்களும் அங்கு மாணவிகளாகவும் ஆசிரியர்களாகவும் இருந்திருக்கின்றனர். இவர்கள் அனைவருமே போட்டி போட்டுக் கொண்டு கழுகுமலையைச் சிற்பங்களால் அலங்கரித்திருக்கின்றனர்.

சமணத் துறவிகளிடையே ஆண் பெண் பாலார் சேர்ந்து கல்வி பயில்வது என்ற கூட்டுக் கல்வி முறை இருந்ததா? இருந்தது என்று சொல்வதற்கில்லை. மடாலயங்களில் ஆண், பெண் துறவிகளுக்குத் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும் கல்வி பயிற்சியிலே ஓரளவு தேர்ச்சி எய்தியபின் நிபுணத்துவம், தனிப்பெரும் புலமைக் கருதி ஆண்களான குரவர்கள்ஆசாரிய பெண்களைச் சீடராக கொள்வதிலோ, பெண்களான குரத்திகள் ஆண்களைச் சீடர்களாகக் கொள்வதிலோ தவறில்லை என்றுக் கருதப்பட்டதைத் தான் கழுகுமலைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

'பைந்தொடி மகளிராவார் பாவத்தால் பெரிய நீரார். பேடி, அலி, குருடு இவர்களைப் போன்றது தான் பெண்பிறவியும். துறவு பூண்டு , மனத்தையடக்கி, உடலை வருத்தித் துன்பம் பொறுக்கும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை. எனவே அவர்கள் வீடுபேறு அடைதல் இல்லை' என்பர் திகம்பர சமணர். தமிழகத்திலே திகம்பர சமணம் தான் நிலவியது எனினும் கழுகுமலைக் குரத்தி களைக் கருதும் போது வைராக்கியத்துடன் முயன்றால் பெண்க ளும் வீடுபேறு எய்துதல் கூடும் என்ற கொள்கையை மேற்கொண்டது தமிழகத் திகம்பர சமணத்தின் சிறப்பியல்பு ஆகிறது.'

உதவிய நூல்கள்

1. திரு. A.P.C. வீரபாகு அவர்களின் மணிவிழா மலர்.

23. கழிஞ்சமலை கலைச்சின்னங்கள்

மா.சந்திரமூர்த்தி, சென்னை.

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையில் நரசிங்கப்பட்டி அருகில் 4 கி.மீ. தொலைவில் அரிட்டாபட்டி என்னும் ஊர் உள்ளது. இவ்வூருக்கு வடமேற்கில் ½கி.மீ. தொலைவில் இளமைநாயகிபுரம் என்னும் சிற்றூர் உள்ளது.

இளமைநாயகிபுரத்திற்கு அருகாமையில் உள்ள மலையினைக் கழிஞ்சமலை என்று ஊரார் குறிப்பர். 'கழி' என்ற இந்த சொல் இறத்தல், அழிதல், கடந்து போதல் என்ற பொருளைத் தருகிறது.[1] எனவே இம்மலையில் சமண முனிவர்கள் சல்லேகனை நோன்பு இருந்து வீடுபேறு பெற்றதைக் குறிப்பதாகக் கருதலாம். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் இம்மலையில் சமணர் படுக்கைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மலைக்குப் 'பெருமாள்மலை' என்ற மற்றொரு பெயருமுண்டு என்பதை 1906 - ஆம் ஆண்டு மதுரை மாவட்ட அறிக்கையால் அறிகிறோம்.[2]

மண்டபங்கள்

கழிஞ்சமலையின் கீழ்த்திசையில் ஒரு பகுதி ஆய்மண்டபம் என்றும், மேல்திசையில் மற்றொரு பகுதி இடைச்சி மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆய்மண்டபப் பகுதியில் பஞ்சபாண்டவர் படுக்கைகள் என அழைக்கப்படும் சமணர் படுக்கைள் அமைக்கப்பட்டுள்ளன. மலையின் மேல் திசையில் உள்ள இடைச்சி மண்டபப் பகுதியில் குன்றைக் குடைந்து சிவபிரானுக்கு எடுக்கப்பட்ட குடைவரைக் கோயிலைக் காணலாம்.

சமணர் படுக்கைகள்

இம்மலையின் ஆய்மண்டபப் பகுதியில் சமணர் படுக்கைகள் உள்ளன. அப்படுக்கைகள் பிற்காலக் கட்டட அமைப்புகளால் மூடப்பட்டு விட்டன. அவை அகற்றப்பட்டால் மேலும் சில கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்படலாம்.

தமிழிக் கல்வெட்டுகள்

குகைத்தளத்தின் மேலே உள்ள பாறை முகட்டில் தமிழிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் 1971 - ஆம் ஆண்டு[3] டாக்டர். கே.வி. இராமன், திரு. ஒய். சுப்பராயலு

ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டன. 25 எழுத்துக்கள் கொண்ட இக்கல்வெட்டு ஒரே வரியில் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

'நெல்வெளி இய் சழிவன் அதனன்
வொளியன் முசுகை கொடுவன்'[4]

என முன்னர் படிக்கப்பட்டது.

'நெல்வெலி ஈய் சழிவன் அதினன்
வொளியன் முழகை கொடுபிதோன்'

என தமிழ்நாடரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் பின்னர் படிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தை நெல்வெலி சழிவன் அதினன் அளித்ததாக அறிகிறோம். வொளியன் என்பது வொளியநாட்டு (ஒளியநாடு) அரசனைக் குறிக்கும். இது நெல்வெலி பாண்டியரின் மற்றொரு பெயரைக் குறிக்கிறது என்பர்.[5]

அரிட்டாபட்டி

கழிஞ்சமலையின் அருகில் அரிட்டாபட்டி என்னும் ஊர் உள்ளது. அரிட்டாபட்டியைச் சூழ்ந்த மீனாட்சிபுரம் போன்ற இடங்களில் தமிழிக்கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவை கிறித்துவின் சமகாலத்தவை. அரிட்டாபட்டி என்ற ஊர்ப்பெயரும் சமணர்களின் தொடர்பால் எழுந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆனைமலைக் கல்வெட்டில் 'அரட்ட காயிபன்' என்பானின் பெயர் குறிக்கப்படுகிறது. எனவே அவன் பெயரால் தோற்றுவிக்கப்பட்ட ஊர் அரிட்டாபட்டி என மருவி அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றுக் கருதலாம்.

சமண தீர்த்தங்கரர் திருமேனி

ஆய்மண்டபத்தின் அருகில் உள்ள பாறையின் மேற்பகுதியில் சமணத் தீர்த்தங்கரரின் திருமேனி ஒன்று புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர் பத்மபீடத்தில் தியான நிலையில் அமர்ந்து காணப்படுகிறார். அவர் தலையின் மேல் முக்குடை அணி செய்கிறது. தீர்த்தங்கரரின் கரங்கள் தியான முத்திரையில் காட்டப்பட்டுள்ளன. பேரழகு வாய்ந்த இத்திரு மேனியின் இருபுறமும் சாமரைகள் காணப்படுகின்றன. இத்திரு மேனி சுமார் 2 அடி உயரமும்; 1 அடி அகலமும் கொண்டு விளங்குகிறது.

பாண்டியர் ஓவியம்

இத்திருமேனி முழுவதும் ஒரு காலத்தில் வண்ணம் தீட்டப்பட்டு இருந்திருத்தல் வேண்டும். தீர்த்தங்கரருக்கு மேலும், பக்கங்களிலும் அழகிய ஓவியங்கள் எஞ்சியுள்ளன. தாமரை, கொடிகள், இலைகள், குத்துவிளக்குகள் முதலியன ஓவியமாகத்

தீட்டப்பட்டுள்ளன. மலர்கள் சிவப்பு நிறத்திலும், கொடிகள் இளஞ்சிவப்பு நிறத்திலும், இலைகள் பச்சை நிறத்திலும் மற்ற பகுதிகள் மஞ்சள் நிறத்திலும் தீட்டப்பட்டுள்ளன. தீர்த்தங்கரரின் திருமேனியின் மேலும், சாமரையின் மேலும் அழகிய வண்ணங்கள் எஞ்சி நிற்பதைக் காணலாம். இவ்வோவியங்கள் ஆனைமலை, கருங்காலக்குடி[6], கீழவளவு, கீழக்குயில்குடி, கொங்கர் புளியங் குளம் ஆகிய ஓவியங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கன.

வட்டெழுத்துக் கல்வெட்டு

இச்சமணத் தீர்த்தங்கரருடைய திருமேனியின் கீழ் நான்கு வரியில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அக்கல்வெட்டு சுமார் கி.பி. 8 - 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

1. **ஸ்ரீ திருப்பிணையன் மலை னெ**
2. **ற் கோட்டு கரணத்தார் மேல்**
3. **அச்சுணந்தி செய்வித்த திருமேனி**
4. **வாணியக்குடி ரக்ஷெ**

இவ்வட்டெழுத்துக் கல்வெட்டு இத்திருமேனியைஅச்சணந்தி செய்வித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

இங்குள்ள சமணப்படுக்கைகள், தமிழிக்கல்வெட்டுகள், சமணச்சிற்பங்கள், வட்டெழுத்துக் கல்வெட்டு ஆகியவற்றால் இப்பகுதி கிறித்து சகாப்தத்திலிருந்து கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு வரை சமணர்களின் முக்கிய பதியாக விளங்கியது என்பதை அறிகிறோம்.

உதவிய நூல்கள்

1. T. Burrow, M.B. Emeneau, A Dravidian Etymological Dictionary, pp - 96.
2. W. Francis, Madura District Gazetteers, p - 286, 1906.
3. Dr.K.V.Raman, Y. Subrayalu, A New Brahmi Inscription from Arittapatti, Araichi, Dec.1973.
4. Ibid. Araichi and Indian Express.
5. K.P.Aravanan, Research Papers on Tamilology, p - 66 - 67.
6. நால்வர், கல்வெட்டியல், பக் - 58 - 62.

சு.9

24. அயிரை மலையும் சமணமும்

வெ. நாராயணமூர்த்தி, கடலூர்.

சங்கஇலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் அயிரை மலை, புகழ் பெற்ற ஒரு சமணத் திருத்தலமாகும். தற்கால திண்டுக்கல் மாவட்டத்தில், பழனியில் இருந்து மேற்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள இந்த அயிரைமலை பழங்கால சமண சமய வரலாற்றைத் தன்னகத்தே உள்ளடக்கி கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறது.

பண்டைய சேரநாட்டின் ஒரு பகுதியாக அயிரைமலையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் விளங்கின. சங்ககாலச் சேரமன்னர்களது வரலாற்றைக் கூறும் சங்க நூல்கள் சேர அரசர்களின் நாட்டினது பரப்பையும், அதன் எல்லைகளையும் தெளிவாகக் கூறுகின்றன. சேரநாட்டில் உள்ள மலைகளாக நேரிமலை,செருப்புமலை, அயிரைமலை முதலியன குறிக்கப் படுகின்றன. இதில் சமணம் வளர்(ந்)த்த மலையாள அயிரை மலை பதிற்றுப்பத்திலும், குறுந்தொகையிலும், சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்படுகிறது.

பதிற்றுப்பத்தின் 21, 70, 79 ஆம் பாடல் வரிகளில் இம்மலை குறிப்பிடப்படுகிறது.

"இருகடல் நீரும் ஒரு பகலாடி
அயிரை பரைஇ "

என்று பதிற்றுப்பத்தின் 3 ஆம் பதிகமும்,

"உருகெழு மரபின் அயிரை மண்ணி"

என்று சிலப்பதிகாரத்தின் நடுகற்காதையின் 145 ஆம் பாடல் வரிகளும்,

"குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை ஆநிறைக்கு – "

என்று குறுந்தொகையின் 118 ஆம் பாடலும் அயிரை மலையைக் குறிப்பிடுகின்றன.இந்த மலையில் உள்ள கல்வெட்டுகளும் இம்மலையை அயிரைமலை என்றே குறிக்கின்றன.

அயிரைமலையின் பெயர்க்காரணத்திற்கு பலரும் பல விளக்கங்களைக் கூறுகிறார்கள். அயிரை என்றால் 'சிறிய' என்று பொருள். இந்த மலை ஒரு சிறு பாறை போலவும் இல்லாமல், தொடர்ச்சியான மலைபோலவும் இல்லாமல் ஒரு நெடிதுயர்ந்த

குன்று போல இருப்பதால் அயிரைமலை என்று பெயர் பெற்றது என்று கூறலாம்.

அயிரை மலை என்பது சுமார் 200 மீட்டர் இடைவெளி கொண்ட இரு மலைத் தொகுப்பாகும். கிழக்கே உள்ள அயிரைமலை நெடிதுயர்ந்து விளங்குகிறது.இதன் சுற்று வட்டாரத்தில் 15 கி.மீ. தொலைவுக்கு எங்கிருந்து பார்த்தாலும் இந்த மலையைக் காணமுடியும். மேற்கே உள்ள சற்றே உயரம் குறைவான அயிரைமலை தான் சமணத் துறவிகள் வாழ்ந்த அயிரைமலை.இந்த மேற்கு அயிரை மலையில் இயற்கையாய் அமைந்த குகைப்பகுதியில் அக்காலத்தில் சமணத்துறவிகள் வாழ்ந்து இறைப்பணி செய்து வந்தார்கள். ஒரே சமயத்தில் 50 பேர் படுத்து உறங்கும் அளவு கொண்ட குகைப்பகுதி மிகவும் பாதுகாப்பாக இயற்கையாகவே அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய இக்குகை எவ்வளவு பெரிய மழை பெய்தாலும் உட்புறம் தண்ணீர் புகாதவாறு பாதுகாப்பான முறையில், அதே சமயம் வெளிச்சமாகவும், காற்றோட்டமாகவும் அமைந்துள்ளது.

இந்தக் குகையின் மேற்புறம் சமணத் தீர்த்தங்கரர்கள் மற்றும் இயக்கிகளின் திருவுருவச் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன. சமணத் தீர்த்தங்கரர் சிலைகள் குகையின் நெற்றிப்பகுதியில் பாறையைச் சீர்திருத்தி புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. அயிரை மலையில் மொத்தம் பதினாறு சமணத் தீர்த்தங்கரர்களின் சிலைகளும், இயக்கிகளின் சிலைகளும் வடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலைகளுக்குக் கீழே இந்தச் சிலையை வடிக்க தானம் அளித்தவர்களின் பெயர்கள் தமிழ் வட்டெழுத்து வரிவடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகள் தமிழ் வரி வடிவத்திலும் உள்ளன. இந்தக் கல்வெட்டுகள் யாவும் Epigraphia Indica வின் Vol - 32லும், S.I.I. Vol - 14லும், ARE (1905) 691 - 703 வரையிலும் வெளியிடப்பட்டுள்ளன. மொத்தம் 15 கல்வெட்டுகள் அயிரைமலையில் உள்ளன. அவற்றில் 12 தமிழ் வட்டெழுத்து கல்வெட்டுகளும், 3 தமிழ் கல்வெட்டுகளும் இடம் பெற்றுள்ளன.

களப்பிர அரசர்கள் சமணத்தை ஆதரித்தமையால் சங்ககாலம் முதலே புகழ் பெற்ற இந்த சமணத் திருத்தலம் களப்பிரர்களின் காலத்திலும் மிகுந்த சிறப்போடு இருந்ததை அறிய முடிகிறது. கி.பி. 8 மற்றும் 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக்கள் நன்கு வளர்ச்சி அடைந்த நிலையில் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

2 ஆவது மற்றும் 4 ஆவது தீர்த்தங்கரர் சிலைகளின் கீழ் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுகள் புள்ளியிட்டு எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும். இந்த புள்ளியிடப்பட்ட வட்டெழுத்துகள் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

முதல் வட்டெழுத்துக் கல்வெட்டு "ஸ்ரீ வடபள்ளி ஆரம் விச்சி வரதபாணி செயல்" என்று E.I. விலும், S.I.I. விலும், ARE யிலும் குறிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்தக் கல்வெட்டின் வாசகம் "ஸ்ரீ வடபள்ளி ஆரம் விச்சி வர்த்தமானி செயல்"என்று இருக்கிறது. கல்வெட்டு குறிக்கும் வர்த்தமதானி என்பது சமணத்தில் ஆண்பால் பெயருக்கு இணையான பெண்பால் பெயராகும். இந்த வர்த்தமானி வடபள்ளி சமணத் தொகுதியைச் சேர்ந்த 'விச்சி' என்னும் பகுதியைச் சேர்ந்த அம்மையார் என்பது கல்வெட்டின் மூலம் புலனாகிறது.

அயிரைமலைக் கல்வெட்டுகளின் வாயிலாக இந்திரசேனன், வீரசங்கத்துப் பெருமடை மல்லிசேனன், ருத்த மாணாக்கர், ஸ்ரீ வெண்புனாட்டு நால்கூர் குடியன் மூவேந்தன், திருவரம்பத்தில் மூலத்தான ஆரி, கெழவத்து வெண்புனாட்டு கவிரிச்சி நாகன் , ஸ்ரீகாடன், குவணச்சேரி தட்டார், குணவீர குரவடிகள் மாணாக்கர் சாந்தி வீரக் குரவடிகள் ஆகிய ஆண்மக்களும், வடபள்ளி ஆரம்விச்சி வர்த்தமானி, ஸ்ரீ அச்சணந்தி, ஸ்ரீ பெரும்பத்தி, ஊர்ப் பட்டினிக் குரத்தியார் மாணாக்கியர் அவ்வணந்திக் குரத்தியார் ஆகிய பெண் மக்களும் அயிரை மலைச் சமணச் சிற்பங்களைச் செய்வித்தனர் என அறிய முடிகிறது. அதில் அச்சணந்தி எனும் சமணப் பெயர் சமண இலக்கியமான சீவக சிந்தாமணி குறிப்பிடும் அச்சணந்தியை நினைவூட்டுகிறது.

இங்குள்ள மொத்தம் பதினாறு சமணச் சிற்பங்களில் 12 முதல் 15 வரை உள்ள சிற்பங்களக்குக் கீழே கல்வெட்டுகள் ஏதும் இல்லாததால் அந்தத் திருவுருவச் சிலைகளைச் செய்வித்தவர்களை நாம் அறிந்து கொள்ள முடியவில்லை.

9-வது மற்றும் 10-வது சிலைகளுக்கு நடுவில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு முற்றிலும் சிதைந்து போய் உள்ளது. எனினும் ஓரளவு படிக்க முடிகிற வட்டெழுத்துச் செய்திகள் குகையின் கடைசிப்பகுதியில் உள்ள கடைசிக் கல்வெட்டுச் செய்திகளை மிகவும் ஒத்திருப்பதால் இந்த இரண்டு கல்வெட்டு களையும் வெட்டுவித்தவர் குணவீரக் குரவடிகள் மாணாக்கர் காழத்து சாந்தி வீரக்குரவர் என்பதை அறியலாம்.

இந்த கடைசி வட்டெழுத்துக் கல்வெட்டு தமிழக வரலாற்றின் ஒரு திருப்புமுனைக் கல்வெட்டு எனலாம். பாண்டியப் பெருவேந்தர்களின் கால வரிசையைத் தீர்மானிப்பதில் இந்தக் கல்வெட்டு தலையாய இடத்தை வகிக்கிறது. இரண்டாம் வரகுணனின் 8 - ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இந்தக் கல்வெட்டு மன்னனின் ஆட்சியாண்டோடு சக ஆண்டையும் இணைத்து 792 - என்று கூறுவதால், பாண்டியப் பேரரசர்களின் கால்வழியைக் குழப்பமில்லாமல் தீர்மானிக்க இந்தக் கல்லெட்டு உதவுகிறது.

சிறப்பு வாய்ந்த இந்தக் கல்வெட்டை ஆய்வாளர்கள், கல்வெட்டு அறிஞர்கள், வரலாற்றாசிரியர்கள் ஆகிய அனைவரும் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் எப்போதும் குறிப்பிடுவார்கள். இந்தக் கல்வெட்டு இந்தச் செய்தியை மட்டுமின்றி வேறு இரண்டு செய்திகளையும் தெரிவிக்கிறது. அதாவது இந்தக் கல்வெட்டு இம்மலையை 'திருவயிரைமலை' என்று தூய தமிழில் குறிப்பிடுகிறது. குகைக்கு மேல்புறம் உள்ள வேறொரு வட்டெழுத்துக் கல்வெட்டு 'ஸ்ரீ அயிரைமலை' என்று வடமொழி அடைமொழியைக் கொடுக்கையில் இக்கல்வெட்டு தூயதமிழில் குறிப்பிடுவதைக் காணலாம்.

மேலும் இந்தக்கல்வெட்டு "குணவீரக் குரவடிகள் மாணாக்கர் காழத்து சாந்தி வீரக் குரவர் திருவயிரை பாரீஷ்வ படாரரையும், இயக்கி அவ்வைகளையும் புதுக்கி, இரண்டுக்கு முட்டாவலியும், ஒரு அடிகளுக்குச் சோறாக அமைந்தன பொன் ஐந்நூற்றைம்பது காணம்" என்று குறிப்பிடுகிறது. இதில் 'புதுக்கி' என்ற சொல்லாட்சியை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கல்வெட்டு வெட்டப்பட்ட கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் சமணத் தீர்த்தங்கரர் பார்ஷ்வ படாரரையும் இயக்கி அவ்வைகளையும் புதுப்பிப்பதற்கு இந்தக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது என்பதால் கி.பி 9 - ஆம் நூற்றாண்டில் இந்தச் சமண திருவுருவங்கள் சிதைந்து போய் இருந்தன என்பதை அறிய முடிகிறது. அவ்வாறெனில் இந்த அயிரைமலையில செதுக்கப் பட்ட மிக்க பழைமையான சிற்பம் இந்த பாரீஷ்வர் என்பது தெரிய வருகிறது. பல நூற்றாண்டுகள் சென்று விட்டதால் சிதைந்த சிற்பத்தை 9 - ஆம் நூற்றாண்டளவில் புதுப்பிப்பதால் இந்தச் சமணச்சிற்பம் மிகத் தொன்மை வாய்ந்தாகத் தெரிகிறது.

அதோடு சைவ சமயத்தைச் சேர்ந்த இரண்டாம் வரகுண பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் இந்தச் சமண சமயக் கல்வெட்டுகளும் , சிற்பங்களும் அரசனின் அனுமதியோடு அமைக்கப்பட்டிருப்பதால், சைவனான வரகுணன் சமண சமயத்தின் பால் வெறுப்பு கொள்ளாமல், தன் முப்பாட்டன் அரிகேசரி நெடுமாறனான கூன் பாண்டியன், சைவநாயன்மாரான திருஞானசம்பந்தரின் பேச்சைக் கேட்டு சமணத் துறவிகளைக் கழுவேற்றிக் கொன்றதற்கு ஒரு கழுவாய் தேட இந்தச் சமணக் கல்வெட்டை தன் மேற்பார்வையில் அமைத்தான் என்று கொள்ளலாம்.

இவ்வாறு சங்ககாலம் முதல் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு வரையிலும் சிறப்பான சமணத் திருத்தலமாக விளங்கிய அயிரைமலை படிப்படியாக தன் சிறப்பை இழக்கத் தொடங்கியது. வரகுணனுக்குப் பிறகு கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு

வரை மூன்று தமிழ் கல்வெட்டுகள் இங்கு கிடைக்கின்றன. சோழன் முதலாம் ஆதித்தன் இப்பகுதியைக் கைப்பற்றியபின் இப்பகுதியில் சோழராட்சி ஏற்பட்டதாலும் பிறகு சைவர்களான கொங்குச் சோழர்கள் இப்பகுதியை ஆண்டதாலும் சமணம் தன் செல்வாக்கை இழந்து அயிரைமலையில் மறையத் தொடங்கியது.

கி.பி. 16 - ஆம் நூற்றாண்டளவில் மதுரை நாயக்க மன்னர்கள் இம்மலையில் சைவ சமயகடவுள் சிலைகளான விநாயகர், முருகன் அம்மன் போன்ற சிலைகளை நிறுவி வழிபடத் தொடங்கினர். இதன் தொடர்ச்சியாக அயிரைமலை என்பதை ஐவர் மலை என்று பெயர் மாற்றமும் செய்து இந்துமதத் தொடர்பான மலையாக மாற்றி விட்டார்கள். எனினும் ஐவர் எனப்படும் பஞ்ச பாண்டவர்களுக்கு உரித்தான எந்தச் செய்தியும் இம்மலையில் இல்லை.

இவ்வாறாக சங்ககாலம் முதல் ஏறத்தாழ கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு வரை சமணம் வளர்த்த அயிரை மலை அந்த பழைய வரலாற்றை அசை போட்டபடி மௌனமாக ஆனால் கம்பீரத்தோடு காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

உதவிய நூல்கள்

1. பதிற்றுப்பத்து
2. குறுந்தொகை
3. சிலப்பதிகாரம்
4. சீவக சிந்தாமணி
5. E.I.Vol. 32
6. S. I. I. Vol 14
7. ARE (1905) No. 691 - 703.
8. தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் - பாண்டியர் காலம், தமிழ் வளர்ச்சி இயக்ககம்.
9. பாண்டியர் வரலாறு, தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.
10. மா. சந்திரமூர்த்தி - வெ. வேதாசலம், பராக்கிரம பாண்டியபுரம், கலைத்தாய் பதிப்பகம், 2003.



25. கோயிலார்பட்டி சமணச்சிற்பங்கள்

மா. சந்திரமூர்த்தி, சென்னை

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத்தூர் வட்டம், திருப்புத்தூருக்கு 12 கி.மீ. தொலைவில் மகிபாலன்பட்டி என்னும் ஊர் உண்டு. கல்வெட்டுகளில் இவ்வூர் 'பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம்' என்று குறிக்கப்படுகிறது. இது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்கப் பாடலை இயற்றிய கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊராகும்.*

கோயிலார்பட்டி

மகிபாலன்பட்டிக்கு வடக்கே இரண்டு கி.மீ. தொலைவில் கோயிலார்பட்டி என்ற சிற்றூர் உள்ளது. மகிபாலன் பட்டி கண்மாயைக் கடந்தும் இவ்வூரை அடையலாம். இவ்வூர் பண்டைக் காலத்தில் பூங்குன்ற நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. இவ்வூர்ப்பகுதியில் அழிந்து போன ஒரு சமணக் கோயிலின் சுவடுகள் காணப்படுகின்றன.

சமணத்திடல்

கோயிலார்பட்டிக்கு தெற்கே 1 கி.மீ. தொலைவில் சமணர் திடல் உள்ளது. இத்திடலின் நடுவே கல்லினால் அமைக்கப்பட்ட சமணத் திருவுருவச் சிலைகள் காணப்படுகின்றன. இச்சிலைகள் உள்ள திடல் 'சமணர் புஞ்சை' என்றும் 'சமணாம் புஞ்சை' என்றும் ஊர் மக்களால் வழங்கப்படுகிறது. இப்பகுதியே பண்டு சமணப்பெரும்பள்ளி இருந்த இடமாதல் வேண்டும்.

சமணத்திருவுருவம்

இச்சமணர் திடலின் நடுவே கிழக்குப் பார்த்த நிலையில் பெரிய சமணத் திருவுருவம் ஒன்று காணப்படுகிறது. இச்சிலையின் உருவ அமைதி வருமாறு, இருகால்களை மடித்துத் தியானத்தில் அமர்ந்த நிலை. இரு கைகளும் வலது திருப்பாதமலரின் மேல் தியான முத்திரையில் அமைந்துள்ளன. இவ்வுருவம் மழுங்கியத் தலையும், நீள் செவியும், அகன்ற தோள்களும் கொண்டு ஆடை அணியற்று நிர்வாண நிலையில் காட்டப்பட்டுள்ளது. முகம் அமைதியும், பொலிவும் நிரம்பிய நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிலை 'சமணார் சிலை' என்று அழைக்கப்படுகிறது. இவ்வுருவம் சுமார் 1.25 மீ உயரமும், 80 செ.மீ அகலமும் கொண்டு விளங்குகிறது. தற்போது இவ்வுருவத்தின்

கைவிரல்களும், மூக்கின் வலப்பகுதியும் சிதைந்துள்ளன. சிலையின் உருவ அமைதியைக் கொண்டு கி.பி. 10 - ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பாண்டியர் பணியாக இதனைக் கருதலாம்.

கி.பி. 1950 இல் இடமாற்றம்

இச்சிலையை 25 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிருந்து எடுத்துச் சென்று மகிபாலன்பட்டி அய்யன் ஊருணிக் கரையில் கொண்டு வைத்தனர். பின்னர் இவ்வூர்ப் பகுதியில் மழை இல்லாமையால் சிலை மீண்டும் இங்கு கொண்டு வரப்பட்டதாக இவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

வழிபாடு

இங்கு முற்காலத்தில் சமணர்கள் இருந்து வழிபாடு செய்திருக்க வேண்டும். ஆனால் இவ்வூரில் தற்போது சமணர் எவரும் இலர். சுற்றுப்புற ஊர்களிலிருந்து செட்டியார்கள் இங்கு வந்து பூசை செய்து செல்கின்றனர். வயலில் பறிச்சல் நேரத்தில் தண்ணீர் இல்லாதபோது சமணச் சிலையின் மேல் எண்ணெய் தேய்த்து இரண்டு மூன்று சர்வம் தண்ணீர் ஊற்றி நீராட்டுவர். பிறகு பொங்கல் வைத்து படைப்பர். இவ்வழிபாட்டிற்குப் பின்னர் மழை வரும் என நம்புகின்றனர். புரட்டாசி மாதத்தில் இவ்வழிபாடு நடக்கிறது. செட்டியார், சேர்வை, பள்ளர் ஆகிய இனத்தவர் இவ்வழிபாட்டில் முக்கிய பங்கு கொள்கின்றனர்.

இப்பகுதியில் வாழும் செட்டியார்களும் ஏனைய இனத்தவரும் வயிற்று வலி வந்தால் இச்சமணர் சிலைக்கு நேர்ந்து கொள்கின்றனர். பின்பு சுகமாகிறது என்று நம்புகின்றனர். இதனால் பண்டைக்காலத்தில் இப்பகுதியில் இருந்த சமணர்கள் மருத்துவத் தொண்டு செய்து வந்துள்ளனர் என அறிகிறோம். சைன சமயம் வலியுறுத்தும் அறங்களில் இதுவும் ஒன்றாகும்.

முக்குடைச்செல்வன்

இப்பெரிய சமணத் திருவுருவத்திற்குப் பின்புறம் முக்குடைச் செல்வனின் சிறிய திருவுருவம் ஒன்று காணப்படுகிறது. இவ்வுருவமும் தனிக்கல்லிலே வடிக்கப்பட்டுள்ளது. முக்குடைச் செல்வன் அரியணையில் அமர்ந்து இரண்டு கைகளையும் தியான முத்திரையில் கொண்டுள்ளார். இவ்வுருவத்தின் தலையின் மேல் அணி செய்த முக்குடை தற்போது முற்றிலும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. முகமும் சிதைந்துள்ளது. உருவத்தின் பின்புறம் சிம்மத் தூண்களும், மகரவாயும் காட்டப்பட்டுள்ளன. இச்சிலையின் பக்கவாட்டில் இரண்டு இயக்கர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. அவர்கள் கரங்களில் தாமரைத் தண்டு ஏந்திய நிலையில் காட்டப்பட்டுள்ளனர். இயக்கர்களின் முடியைக் கரண்ட மகுடமும், காதுகளைப் பத்திர குண்டலமும் அணி

செய்கின்றன. முக்குடைச் செல்வனின் உருவம் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப் பாண்டியரின் கலைப்பணி யாகும். இச்சிலை 'சமணப்பிள்ளை' என அழைக்கப்படுகிறது. இது48 செ.மீ. உயரமும், 36 செ.மீ. அகலமும் உடையது.

மூன்று சிற்பங்கள்

இச்சிலைக்குச் சற்றுத் தொலைவில் மூன்று சிற்பங்கள் சிதைந்த நிலையிலும், இடுப்பு வரை மண்ணில் புதைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று பெண்ணுருவம். மற்றவை இரண்டும் ஆண் உருவங்கள். மூன்றாவது உருவத்தின் முடிமேல் ஐந்து தலை அரவம் அணி செய்கிறது. இது பார்சுவநாதரின் சிற்ப வடிவமாகும். இது கி.பி 12, 13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் பணியாம். இச்சிலைகளின் கைகளும் உடற்பகுதியும் சிதைந்து காணப்படுகின்றன.

அச்சணந்திக்காடு

சமணர் திடலுக்கு மேற்கே உள்ள பகுதி 'அச்சிக்காடு' என அழைக்கப்படுகிறது. ஆதியில் அச்சணந்திகாடு என்று பெயர் பெற்ற பகுதி இது. சமணர்களில் நந்திக் கணம் என்ற ஒரு பிரிவு உண்டு. இந்தக் கணத்தைச் சேர்ந்தவர் நந்தி என்னும் பெயரைச் சூட்டிக் கொள்வர். இவர்களில் அச்சணந்தி என்ற சமண முனிவரும் ஒருவர். பாண்டிய நாட்டில் அச்சணந்தி என்பார் சமணத் திருமேனிகளைத் தோற்றுவித்துள்ளார். அயிரமலை, அய்யம் பாளையம், உத்தமபாளையம், ஏர்வாடி, கருங்காலக்குடி, கழிஞ்சமலை, கீழக்குயில்குடி அகிய இடங்களில் இவருடைய கல்வெட்டுகள் உள்ளன. இவர் சமண ஆசிரியர் ஆதல் வேண்டும். எனவே அச்சணந்தி காடு என்ற பகுதி சமணர் பள்ளிக்கு உரிய நிலமாகிய பள்ளிச் சந்தமாதல் வேண்டும். இக்கலைச் சின்னங்களைக் கொண்டு கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு வரை சமண உருவங்கள் இப்பகுதியில் எடுப்பிக்கப்பட்டுள்ளன என்பதும், அவை வழிபாட்டில் இருந்திருக்கின்றன என்பதும் தெரியவருகிறது. எனவே இவ்வூர் பண்டைக்காலத்தில் சமண சமயம் சிறந்து விளங்கிய தலங்களில் ஒன்று என்பது இனிது விளங்குகின்றது.

அடிக்குறிப்பு:

*மா. சந்திரமூர்த்தி, கோயிலார்பட்டி சமணச் சிற்பங்கள்", முக்குடை திங்களிதழ், சென்னை, 1979.



26. சமணர்களின் இலக்கண நன்கொடை

புலவர், A. விஜயம்மாள் இராஜேந்திரன்.

மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகித்
துக்கம் கெடுப்பது நூல் – அருங்கலச்செப்பு
அறம் பொருள் இன்பம், வீடு அடைதல் நூல்பயனே நன்னூல்
எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி – *தமிழிலக்கண வகைகள்*

மேற்கூறிய மூன்றிடத்தும் சுட்டப்படும் பொருள் என்பதே பொருண்மையுடைத்து. மெய்ப் பொருளைக் காட்ட வாழ்வியல் பொருள்களை உணர்த்த வேண்டி உள்ளது. அந்த வாழ்வியல் பொருள்களை உணர்த்தவே இலக்கண நூல்கள் பொருளைக் கற்பிக்கின்றன. எழுத்துக்கள் சேர்ந்த சொற்கள் வாயிலாக பொருளைக் கற்பிக்க யாப்பும் அணியும் உதவுகின்றன. மெய்ப்பொருளை உணர்த்துவதே இலக்கியங்களின் இலக்காகும். அதிலிருந்தே மொழி இலக்கணங்கள் தோன்றியது.

மனமுடைய விலங்காகிய மனிதன் மனமுடைய மனிதனாய் வாழவும், மனம் கூட செயல்படாத தூய கந்தழியாய் நிலைத்து நிற்கவும் வழிகாட்டவே இலக்கியங்கள் வாழ்க்கை இலட்சியங்களை (குறிக்கோளை) உணர்த்துகின்றன். மனிதனின் இலக்கு வீடு அதனை விளக்கும் மொழியினது லட்சணம் புகல்வதே இலக்கணம்.

தமிழிலக்கண நூல்களும் தொன்மையும்

நன்நூல் விருத்தியுரை – கழக வெளியீடு அணிந்துரையில்
கழகப்புலவர் செல்லூர்கிழார் செ.ரா. இராமசாமிப்பிள்ளை

கனியினும் கட்டிபட்ட கரும்பினும் நனி சுவையுடையது நம் தமிழ்மொழி . அது காலத்தால் முற்பட்டது. இலக்கண இலக்கியப்பெருமை மிக்கது. மெல்லிய இனிய சொற்குழும முடையது. இனியது, நறுவியது. கேட்பினும், கருதினும், படிப்பினும் உள்ளம் உருக்கும் உயர் பண்புடையது.இப்பண்பு மேலீட்டினால் என்றும் மாறா இளமையும், வளமையும் செழுமையும் வாய்ந்து விளங்குவது தமிழ். இம்மொழித்திறன் முட்டறுத்து செந்தமிழாகச் சிறந்தொளிர வழிகோலிய வெழுந்த இயல் நூல்கள் பல.

அவற்றுள் காலத்தால் முற்பட்டது அகத்தியனாரால் யாக்கப்பட்ட அகத்தியம் என்னும் இயல் நூல் என்ப. அது காலக் கோட்பாட்டால் வழக்கு வீழ்ந்து அருகி மாள்கிற்று. ஆங்காங்கே சிற்சில நூற்பாக்கள் கிடைத்துள்ளன. அன்றி முறையோடு பயிலற்கேற்ற ஒருங்கமைந்த கோவைபடக் கிடைக்கவில்லை. ஆகவே அதன்பின் வழி நூலகத் தமிழ்மொழி கலை, தமிழர்

நாகரிகம் அகப்புற ஒழுகலாறுகள் யாவற்றையும் ஒருங்கே முற்ற முடிய எடுத்து விளக்கும் முழு வைரமணிப் பேழையாக இலகுறுவது ஒல்காப் பெருமைத் தொல்காப்பிய இயல்நூல் ஒன்றேயாம். இதன் கூறிய சீரிய கருத்துக்களை அறிந்து கொள்வது அஃகி ஆன்றவிந்த கொள்கை நுண்மான் நுழைபுலத்தார்க்கன்றி ஏனையோர்க்கு அரிதினும் அறிதாம். இதனைத் தொல்காப்பியர்க்குப் பின் தோன்றிய அலகிலுலறிவிற் புலமையாளர் நன்குணர்ந்தனர். உணர்ந்ததன் குறிக்கோளாகப் பலப்பல இயல்நூல்களும் வகுத்தமைத்தனர்.

அவைகளுள் ஐந்திலக்கணங்களையும் விளக்கும் நேமிநாதம், இலக்கண விளக்கம், வீரசோழியம் முதலிய நூல்களும், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற பொருள் ஒன்றையே விளக்கும் நூல்களும், மாறனலங்காரம், தண்டியலங்காரம் போன்ற அணி ஒன்றையே கிளக்கும் நூல்களும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்ற யாப்பு ஒன்றையே விதந்தெடுத்தோதும் நூல்களும் தொல்காப்பிய மாபெரும் இயல்நூலுக்கு விரிவுரை போன்று வகுத்தும் தொகுத்தும் மிகப்பலபட விரித்துக்கூறும் நூல்களேயாம். இவ்வாறு வகுத்தும் தொகுத்தும் எளிமையும் புதுமையும் ஒருசேர அமைக்கப்பட்டதே நன்னூலாகும் என்ற செல்லூர்க்கிழாரின் அணிந்துரை வாயிலாக இயல் நூல்களை அறிந்துகொண்டோம்.

தொல்காப்பியமும் அகத்தியமும்

தமிழ் இலக்கணங்களுள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். அதன்காலம் இன்னும் வரையறுக்கப்படவில்லை. ஒரு சிலர் கி.மு. 700 என்பர். ஒரு சாரார் கி.பி. 400 என்பர். கி.மு. 400க்கும் முற்பட்டது என்ற கருத்தே பெரிதும் நிலவுகிறது. தொல்காப்பியர் கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கு பிற்படாதவர் என்பர் கா. சுப்ரமணியபிள்ளை. தொல்காப்பிய நூற்பாவுக்குக் கடைசங்க நூல்களில் கூடச் சான்றுகள் இல்லாமையினை நோக்கும் போது தொல்காப்பியத்தின் பழமையை நாம் உணரலாம் என்ற விவரங்கள் அஞ்சல் வழி தொடர் கல்வித்துறை எம்.ஏ. முதலாண்டு 1980-81 பகுதி VII (C). தாள் - III இலக்கணம் எழுத்தியல் பாடம் இலக்கண அறிமுகம். எழுத்து அறிமுகம் தொல்காப்பியம் என்ற பத்தியில் இருந்து எடுக்கப்பட்டது. பாடநூல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை.

தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் என்பர். அவரது காலம் கி.மு. 700 எனக்கோடல் தகும். அகத்தியர் தமிழ் மொழியை அவலோகித முனிவர்பால் கற்றுணர்ந்தார் என்று அருகர் மதம் கூறும் அவலோகிதர் சமணர்.

அகத்தியம் சமணநூல்

அவலோகிதரின் மாணாக்கர் அகத்தியர். அகத்தியரின் மாணாக்கர் தொல்காப்பியர் தொல்காப்பியம் சமண நூல் என நிறுவும்.

அகத்தியர் என்னும் பெயரோர் இருவர் இருந்தனர் என கொள்ளல் வேண்டும். ஏனெனில் பேரகத்தியம் சிற்றகத்தியம் என்ற இரு நூல்களை இருவரும் இயற்றினர் என்பர். இவ்விருவரில் கணித சாஸ்திரங்களும் பேரகத்தியம் என்னும் இலக்கணமும் இயற்றிய ஆசிரியர் வாமனர் என்னும் அகத்தியர் என்பதும் இவர் ஜைந (சமண) மதத்தினர் என்பதும் கீழ்வரும் சான்றுகளால் விளங்கும்.

இவர் இயற்றிய எண்சுவடி கடவுள் வழிபாட்டில் "முத்தணிந்த முக்குடைக்கீழ் மூவா முதல்வனை" என்று அருகக் கடவுளைக் குறித்தும், முக்காணிவாய் பாட்டில் "நாலைம்பதனை இருபத்து நால்வர்க்கு" என்று இருபத்துநான்கு தீர்த்தங்கரைக் குறித்தும், மூன்றுமா வாய்பாட்டில், "விண்ணுளார் முக்குடைக்கீழ் வீரனடி தொழுவார்" என்று அருகக் கடவுளைக் குறித்தும், நாழிவாய்பாட்டில், "மறுவறு காட்சியவர் அதாவது குற்றமற்ற நற்காட்சியுடைவர்" என்று நற்காட்சியைப் பற்றியும், கலம் வாய்பாட்டில் "ஆத்தன் (அருகக் கடவுள்) கடைநெறி காட்சியவர்" என்று அருகனைக் குறித்தும் சொல்லியிருப்பதோடு அரைக்காணி வாய்பாடு பரிவாயில் தமிழ்மொழியில் தமது பெயரையும் அமைத்து "ஆறைந்து பூவி னகத்தியனா ரேழ்கோட்டை" என்று மொழிந்துள்ளார்.

இன்னும் பேரகத்தியம் இயற்றிய வாமனர் என்னும் அகத்தியர் ஜைனரே என்பதற்கு உதாரணமாக ச. பவானந்தம் பிள்ளை அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய பேரகத்தியத் திரட்டு என்னும் நூலின்கண்

"இலக்கண மெட்டமை யிறைவற் றொழுதெழுத்
திலக்கணக் காண்டமியம்புவல் யானே"

என்ற தற்சிறப்புப் பாயிரச் சூத்திரம் காணப்படுகிறது. மேற்கூறிய காரணங்களால் அகத்தியர் சமணர் என்பது விளங்கும். "இலக்கண மெட்டமை யிறைவர். எண்குணத்தான்" என்று ஆதிபகவனை விளித்த குறளாசிரியர் வழி அகத்தியர் வழியே. மேலும் இன்றும் உலகியல் வழக்கில் அகத்தியப்ப நயினார்கள் உள்ளனர் என்பதும் கருதத்தக்கதே.

ஆதாரம்நூல்: திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும் ஆசிரியர் காஞ்சிபுரம் தி. அனந்தநாத நயினார் அவர்கள்.

தொல்காப்பியம் சமண நூல்

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டதுமுதனு லாகும்"

என்னும் பொருளதிகாரம் மரபியல் 94ம் சூத்திரம் பகவான் காதிகர்மங்களைக் கெடுத்தவர். கேவல ஞானத்தை உடையவனாகிய அருகக் கடவுள், திவ்யத்துவனியினின்றும் அறிந்தது முதநூலாகும். என்றதனால் தொல்காப்பியர் சமணர் என்பது

விளங்கும் இங்ஙனம் அருகக்கடவுள் முதல் நூல் அருளியதைக் கொண்டு தொல்காப்பியர்.

'வழியெனப் படுவ ததன் வழித்தாகும்'
என்றபடி தாம் கூறியது வழிநூலாகும் என்றார்.

இன்னும் தொல்காப்பியத்தில் கூறிய உயிர் உடம்பின் இலட்சணங்களும் சமணசமயச் சார்பானவையேயாம். என்பதை,

"ஒன்றறிவதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றெடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றெடு கண்ணே
ஐந்தறி வதுவே யவற்றெடு செவியே
ஆறறி வதுவே யவற்றெடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

என்னும் தொல்காப்பிய பொருளதிகார மரபியல் 582ம் சூத்திரம் விளக்கும்.

இன்னும் இதனை விளக்கும்"புல்லு மரனு மோரறிவினவே" என்னும் சூத்திரம் முதல் "மக்கடாமே ஆரறிவுயிரே" என்னும் சூத்திரம் முடிய கூறிய எடுத்துக்காட்டுகளால் உலக உயிர்ப்பிரிவுகளை விளக்கியவர் சமணரே. இந்த இடத்தில் ஜீவபந்து T.S. ஸ்ரீபால் அவர்களின் 1968 உலகத்தமிழ் மாநாடு விழா மலரிலிருந்து எடுக்கப்பட்ட "சைனர்கள் கண்ட மெய்ந்நெறி" என்ற கட்டுரை ஜீவபந்து T.S. ஸ்ரீபால் அவர்களின் நூற்றாண்டு விழா நினைவுமலர் 1900-2000 தமிழ்ச் சமணர்கள் சங்கம் மதுரை என்ற நூலில் 98ம் பக்கம்.

விஞ்ஞான அறிஞரின் விளக்கம் என்ற தலைப்பின் கீழ் வருவது:

மேலே கூறிய சைன சமயக் கொள்கையை வலியுறுத்திப் பாரத நாட்டு விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திர போஸ் ஜெர்மனியில் நடந்த அகில உலக விஞ்ஞான மாநாட்டில் மரம், செடி கொடிகளுக்கு உணர்ச்சியுண்டு என்பதை விஞ்ஞானக் கருவி மூலம் விளக்கிக் காட்டுகையில் "யான் செய்துள்ள இவ்வாராய்ச்சி உண்மையைப் பாரத நாடாகிய எங்கள் நாட்டின் மிகத் தொன்மை வாய்ந்த சமயமாகிய ஜைன சமயந்தான் உலகுக்கு அளித்தது. யான் கண்டுபிடித்தது மரம், செடி கொடிகளுக்கு உயிர் உண்டு என்னும் சைன சமயக் கொள்கையை நிரூபிக்கும் இக்கருவியே ஆகும்" எனக்கூறி அதற்கு ஆதாரமாக சைன சமய நூல்களாகிய ஆசாரங்க சூத்திரம் ஜீவாபிக சூத்திரம் என்னும் இரு வடமொழி நூல்களைப் படித்துக் காண்பித்தார்.

ஜெகதீஸ்சந்திர போஸ் தமிழ் அறிந்திருப்பாரேயானால் மேற்கூறிய தொல்காப்பிய பொருளதிகார மரபியல் சூத்திரம்

582ஐயும் மேற்கோள் காட்டியிருப்பார் என்பது திண்ணம். அன்றைய ஆன்மீகம் இன்றைய விஞ்ஞானம்.

தொல்காப்பியர், பனம்பாரனார், இறையனார், இளம்பூரனர், அமிர்தசாகரர், குணசாகரர், அவிநயனர், பாடலனார், நாற்கவிராசநம்பி முதலானவர்கள் சமணர்களாயிருந்ததினாலேயே நன்னூலாசிரியர் பவணந்தியார் அவர்களது நூற்பாக்களை வேண்டிய இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

இறையனராகப் பொருள் உரையாசிரியர், நன்னூலாசிரியர், பவணந்தி முனிவர் யாப்பருங்கல விருத்தி உரையாசிரியராகிய குணசாகர், அகப்பொருள் விளக்க ஆசிரியர் நாற்கவிராஜநம்பி ஆகிய சமண இயல்நூல் ஆசிரியர்கள், முதல் நூல் வழிநூல் சார்பு நூல் மற்றும் நூலின் வகை பற்றிய நான்கு தொல்காப்பிய சூத்திரங்களையும் எடுத்தாண்டுள்ளதால் தொல்காப்பியர் சமணர் என்பது உறுதிபடுத்தப்படுகிறது.

ஆதாரம்: திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைனசமய சித்தாந்த விளக்கமும் ஆசிரியர் தி. அனந்தநாத நயினார் - காஞ்சிபுரம்.

நன்னூல்

ஆசிரியர் பவணந்தி முனிவர் இப்பெயர் பன்னருஞ் சிறப்பிற் "பவணந்தி என்னும் நாமத்து இருந்தவத்தோன்" என்னும் இந்நூற் பாயிரத்தால் அறியக்கிடக்கின்றது. சீயகங்கனே இந்நூல் செய்தற்குக் காரண்ன் ஆவான். அவன் காலமாகிய கி.பி. 1181 முதல் 1212 வரை என உரைப்பார். 12ம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 13ம் நூற்றாண்டின் துவக்கமாகும். மாநிலத்திலுள்ள 'கோலார்' என அறியக் கிடக்கின்றது. இது வடமொழியில் கோலாகலபுர மெனக்கிடக்கின்றது என கழகப்புலவர் விளக்குகின்றார் எனவே

சீயகங்கன் என்ற சமண கங்கமன்னன் தொல்காப்பியம் என்ற தொன்மையான சமண இலக்கண வழி நூலுக்கு பவணந்தி என்ற சமண முனிவரிடம் ஒரு சார்பு நூல் வேண்ட தோன்றியதே நன்னூல் என்னும் ஈடு இணையிலா சமண இலக்கண நூல் என்பதை அறிகின்றோம்.

மேலும் இந்நூற் பாயிரச் செய்யுளில் அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்தொகை வகை வரியில் நன்னூற் பெயரின் வகுத்தனன் என்றமையால் ஐவகை இலக்கணத்தையும் அமைத்தார். ஆயினும் அவர் காலத்தில் இந்நூல் முழுதும் இருந்து பின்னர் ஏதோ காரணத்தால் சிதைந்து அழிந்துபோய் இப்போதுள்ள எழுத்தும் சொல்லும் ஆகிய இரண்டுமே கிடைத்திருக்கலாம். ஆதலால், இற்றைநாள் நமக்கு நன்னூலில் கிட்டிபிருப்பன இவ்விரண்டிலக்கணமுமேயாம் என்பார் செல்லூர்க்கிழார்.

இந்நூலுக்கு முதல் உரை நூல் மயிநாதர் என்ற சமண முனிவரால் யாக்கப்பட்டது. அண்மைக்கால உரை நூல்

காண்டிகை உரையாக திகழ்வது ஸ்ரீ புராணச்செம்மல் பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் எம்.ஏ., என்னும் சமண புலவரால் இயற்றப்பட்டுள்ளது. காரணம் நன்னூல் சமண நூல் என்பதுவே.

நம்பியகப் பொருள்

சங்கப் பாடல்கள் பொருள் தொடர்நிலையாக அமையாமல் தனித்தனிப் பாடல்களாகப் பாடினர். அக்காலத்தவராகிய தொல்காப்பியர் தலைவன் கூற்று தலைவி கூற்று தோழி கூற்று எனப் பலவகைக் கூற்று வகைகளைத் தொகுத்துச் சுட்டினாரே யன்றி அகப்பொருள் செய்திகளைத் தொடக்கம் முதல் இறுதிகாறும் தொடர்பாகக் கூறினாரல்லர்.

இடைக்காலச் சோழர் ஆட்சியில் தோன்றிய நம்பியகப்பொருள் அகப்பொருள் இலக்கணத்தைப் பொருள் தொடர்பு சிறக்க அமைக்கவே, அதுவே பிற்காலக் கோவைகள் பலவும் தோன்றுவதற்கு இலக்கணமாகி, அகப்பொருள் இலக்கணமாக நாட்டில் பயில வழங்குவதாயிற்று.

அகப்பொருள் விளக்கம் எனப் பெயரிய இந்நூல் சிறப்புப் பாயிரம் நீங்கலாக அகத்திணையியல், களவியல், வரையில், கற்பியல் ஒழிபியல் என்னும் 5 இயல்களை உடையது. 252 நூற்பாக்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் நாற்கவிராசநம்பி இவர் சமண சமயத்தவர் என்பதை பூமிலி நாவன் மாமலைச் சென்னி என்ற இந்நூலின் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம். இவர்தம் இயற்பெயர் நம்பிநயினார் என்பது. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நாற்கவியில் வல்லவராதலின் இவர் நாற்கவிராசநம்பி என்றழைக்கப்பட்டார். இவர் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்பர். இலக்கணம் பயில்வோர் அகப்பொருள் இலக்கணமாக நம்பியகப்பொருளையே மிகுதியாகப் பயில்வர்.

ஆதாரம்: அஞ்சல்வழி தொடர்கல்வித்துறை எம்.ஏ., இரண்டாமாண்டு பகுதி VII(C) தாள் X இலக்கணம் - பொருளியல், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, பாடநூல் 1 பக்கம் 21, 22.

மேலும் சிறப்பாயிரம் 12ம் வரி முதல் முக்குடைக்கீழ்
ஏந்தெழில் அரிமான் ஏந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப உதய மால்வரைக்
கதிரோன் றிருந்தெனக் காண்டக இருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
உத்தமன் புளிங்குடி உய்யவந் தானெனும்
முத்தமி ழாசான் மைந்தன்

நாற்கவிராச நம்பியென் பவனே என்பதாலும் இவர் சமணர் என்பது விளங்கும்.

யாப்பருங்கலக் காரிகை

யாப்பு + அருமை + கலம் = யாப்பருங்கலம். யாப்பு என்னும் கடலை நீந்துதற்கு அரிய கலமாதலின் யாப்பருங்கலம் என்ற பெயரைப் பெற்றிருத்தல் வேண்டும். காரிகை என்பது பெண்ணைக் குறிக்கும். இந்நூலின் ஒவ்வொரு நூற்பாவும் மகடூஉ முன்னிலையால் கூறப்பட்டிருப்பதால் காரிகை என்ற பெயர் பெற்றதாகக் கூறுவர். தமிழில் காரிகை என்ற சொல்லுக்குக் கட்டளைக் கலித்துறை என்ற பொருளும் உண்டு.

இவ்யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் அமிதசாகரர் ஆவார். இதனை இந்நூலில் ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப் படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியரால் செய்யப்பட்டது என வரும் குறிப்பினால் உணரலாம். இவர் அளப்பருங்கடல் பெயர் அருந்தவத்தோன் என்று சிறப்பிக்கப்பெருகின்றார். இவரை அமுதசாகரர் என்றும் அமிதசாகரர் என்றும் கூறுவர். இவரது மற்றொரு நூல் 'யாப்பருங்கலம்' இது தவிர 'யாப்பருங்கல விருத்தி' என்ற நூலினையும் இயற்றியவர் இவரே.

இவர் சோழ நாட்டில் உள்ள தீபங்குடி என்ற ஊரில் வாழ்ந்த சமணர் வேளாளர். இவர் முதலாம் இராசராசன் காலத்தவர். காரிகை நூல் இயற்றியதற்காகத் தொண்டை நாட்டில் உள்ள குளத்தூரைப் பரிசாகப் பெற்றார் என்றும், கூறுவதுண்டு. இவரது காலம் கி.பி. 12ம் நூற்றாண்டு.

இந்நூலுக்கு பழைய உரை ஒன்று உண்டு. அதனை எழுதியவர் குணசாகரர். இவரும் சமண சமயத்தவரே. இவரது காலமும் கி.பி. 12ஆம் நூற்றாண்டு யுகாதி பண்டிகை அன்று சித்தாமூருக்கு அருகேயுள்ள விழுக்கத்தில் குளக்கரையின் மீது உள்ள மண்டபத்தில் உள்ள குணகாரர் பாதபூஜை இன்றும் நடைபெறுகிறது. இவரும் தொண்டை நாட்டினர் போலும்.

ஆதாரம்: இலக்கணம் யாப்பு அணியியல் பாடம் 19 பக்கம் 2, 3, 4 மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எம்.ஏ., முதலாம் ஆண்டு.

தொண்டை மண்டலமும் இலக்கண ஆசிரியர்களும்

"சோறுடைத்து சோணாடு. முத்துடைத்து பாண்டிய நாடு, வேழமுடைத்து மலைநாடு, தொண்டைநாடு சான்றோருடைத்து" என்ற வழக்கில் சான்றோரால் பெருமை பெற்றது தொண்டைநாடு. தொண்டையர் என்னும் அரசமரபினர் ஆண்ட நிலப்பரப்பு தொண்டைநாடு அல்லது தொண்டை மண்டலம் என அழைக்கப்படலாயிற்று. இது தற்போதைய தென்னாற்காடு (கடலூர், விழுப்புரம்) வடார்க்காடு (திருவண்ணாமலை, வேலூர்) செங்கல்பட்டு, சித்தூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தாகும். (தொண்டை நாட்டுச் சமணக்கோயில்கள், ஏ. ஏகாம்பரநாதன்).

நன்னூலாசிரியர் பவணந்தி பிறந்த ஊர் சனகாபுரம் கொங்குமண்டலத்தில் உள்ளது எனவும், தொண்டை மண்டலத்தில் உள்ளது எனவும் முறையே கொங்கு மண்டல சதகமும் தொண்டை சதகமும் கூறுவது முரண்படக் கூறுவதாகக் கொள்ளவேண்டாம் பவணந்தியார் பிறந்து வளர்ந்தது கொங்கு மண்டலத்தில் என்றும், அவர் சன்மதி முனிவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டிருந்தது தொண்டை மண்டலத்தில் என்றும் கொள்க என்று அண்மைக்கால நன்னூல் காண்டிகை உரையாசிரியர் ஸ்ரீ புராணச் செம்மல் ஸ்ரீ சந்திரனார் அவர்கள் ஓர் அழகிய விளக்கம் அளிக்கின்றார். எனவே நன்னூலாருக்கும் தொண்டை நாட்டிற்கும் உள்ள தொடர்பு விளங்கும். பேராசிரியர் ஜெ.ஸ்ரீ சந்திரனாரே அன்றைய தொண்டை நாட்டைச் சார்ந்தவரே.

யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் அமுதசாகரர் காரிகை நூல் இயற்றியதற்காகத் தொண்டை நாட்டில் உள்ள குளத்தூரைப் பரிசாகப் பெற்றார் என்று கூறுவதால், தொண்டை நாட்டினர் எனக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு. யாப்பருங்கலக்காரிகையின் உரையாசிரியர் குணசாகரர். இவர் பெயரில் இன்றும் விழுக்கம் கிராமத்தில் யுகாதிப் பண்டிகை தினத்தில் குளக்கரையில் அமைந்துள்ள இவரது பாதங்களுக்கு சிறப்பு பூசை நடைபெறுவதால் இவரும் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர் எனக் கொள்ளலாம்.

12, 13ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய இலக்கண நூல்களாகிய நன்னூல் நம்பியகப் பொருள் யாப்பருங் கலக்காரிகை ஆகிய நூல்களும் உரைகளும் பெரும்பாலும் தொண்டை மண்டல தொடர்புடையனவாகவே உள்ளன. மேலும் நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதரும் தொண்டை நாட்டினரே என தொண்டை மண்டல சதகம் கூறுகின்றது.

பரணிக்கோர் ஜெயங்கொண்டார் என இலக்கிய உலகம் போற்றிப் புகழும் ஜெயங்கொண்டார் வாழ்ந்தது தீபங்குடி யாயினும் அவரது பிறப்பிடம் இந்த திருமலை என்கிறது 'கொங்குநாடு சமணமும்' என்னும் நூல். திருமலை தொண்டை நாட்டினுள் அடக்கம். எனவே தொண்டை நாடு சான்றோருடைத்தானதுவோ யானறியேன்.

கடவுள், உயிர், உடம்பு, முதல் நூல், வழிநூல், சார்பு நூல் ஆகியவை தொல்காப்பியத்தில் உள்ளவாறே. நன்னூலிலும் கூறப் பட்டுள்ளது. நன்னூலாசிரியர் எழுத்ததிகாரத் தொடக்கத்தில்,

பூமலி அசோகின் புனைநிழல் அனர்ந்த
நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே

என்றும் சொல்லதிகாரத் தொடக்கத்தில்

முச்சகம் நிழற்றும் முழுமதி முக்ககுடை
அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே

என்று அருக பெருமானையே வணங்குவதால் பவணந்தி முனிவர் சமண சமயத்தவரே என்பதில் ஐயமேதுமில்லை.

'அமராபரணன்' என்னும் சீயகங்கன் மிகவும் விரிவாக இருக்கும் தொல்காப்பியத்தைச் சுருக்கித் தருமாறு பவணந்தி முனிவரை வேண்ட அவரும் அவ்வாறே செய்தார். அதே அடிப்படையிலே எழுந்தவை நம்பியகப் பொருளும் யாப்பருங்கலக்காரிகையும்.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் அமுதசாகரர் நாற்கவிராசநம்பி போன்றே நன்னூலார் வழியிலேயே கடவுள், முதல்நூல், வழிநூல், சார்புநூல் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களையே ஏற்று போற்றியுள்ளனர். எனவே தொல்காப்பியர் நன்னூலார், இறையனார் உரையாசிரியர், நாற்கவிராச நம்பி, அமுதசாகரர் ஆகியோரும் மயிலைநாதர், குணசாகரர் போன்ற உரையாசிரியர்களும் சமணரே.

தொல்காப்பியர் கூறிய வழிநூலைக் கொண்டு சார்பு நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவையாவன இறையனராகப் பொருள், நன்னூல், நேமிநாதம், வெண்பாப் பாட்டியல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை அகப்பொருள் விளக்கம் முதலான இலக்கணங்களாகும். என்னும்,

பவணந்தியார் தாம் இயற்றிய நன்னூலில் தொல்காப்பியர், பனம்பாரனார், இறையனார், இளம்பூரணர், அமிர்தசாகரர், குணசாகரர், அவிநயனார், பாடலனார், நாற்கவிராஜநம்பி முதலானோர் நூற்பாக்களை சேர்த்துக்கொண்டதற்கு காரணம் அவர்கள் சமணரே என்பதே.

ஆதாரம்: திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைனசமய சித்தாந்த விளக்கமும் (37) ஆசிரியர் அனந்தநாத நயினார் அவர்கள் பக்கம் 35 மற்றும் 37.

மொழித்திறன் முட்டறுக்க இலக்கண நூல்களை இயற்றியோர் சமணர்களே என்பது ஒருவாறு நிறுவப்பட்டது. அவர்களில் பெரும்பாலானோர் தொண்டை மண்டல சார்பு உடைய மன்னர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த நாட்டு புலவர்களால் இயற்றப்பட்டது என்பது புலனாகும். எனவேதான் எஞ்சிய சமணர்களின் உறைவிடமாகவும் விளங்குவது இந்த தொண்டை மண்டலமே. ஆகவே சான்றோருடைத்து தொண்டைநாடு என்பது ஏற்புடைத்தே.



27. நிகண்டுத் துறைக்குச் சமணர் பங்களிப்பு

முனைவர். மா. சற்குணம், மயிலம்.

சொற்களஞ்சியமாகவும், சொற்களுக்குப் பொருள் கூறவனவாகவும் செய்யுள் நடையில் செய்யப் பெற்ற நூல்களை நிகண்டு என்கிறோம். தமிழில் துறைதோறும் பணியாற்றியுள்ள சமணர்கள் இத்துறைக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளனர். அவ்வகையில் அமைந்த நிகண்டு சூடாமணியின் சிறப்புகளைச் சுட்டுவதே இவ்வாய்வின் நோக்கம்.

சூடாமணி நிகண்டு

இந்நிகண்டை இயற்றியவர் **மண்டல புருடர்** ஆவார். இவர், தம் பெயரை சூலினுள் 13 இடங்களில் **மண்டலவன்** எனக் குறிப்பிடுகிறார். இவர் தொண்டை நாட்டில் உள்ள **வீரை** எனும் ஊரில் பிறந்தவர். இவ்வூர் இப்பொழுது விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனத்திற்கு அருகில் உள்ளது. பெரமண்டூர் என்னும் பெயரால் இது இப்பொழுது வழங்கப் பெறுகிறது. இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். இவ்வூரில் இன்றும் சமணர்கள் வாழ்கின்றனர். இப்புலவர், தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர் என்று தொண்டை மண்டலச் சதகமும் இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

குணபத்திர முனிவர்

இவருக்குக் குருவாக வாய்த்தவர் **குணபத்திர முனிவர்** என்பராவார். இவர் தம் தமிழிலும் சோதிடத்திலும் வல்லவராய் விளங்கினார். **திருநறுங்கொன்றை** என்னும் ஊரில் இவர் இருந்துள்ளார். இவ்வூர் உளுந்தூர்பேட்டைக்கு அருகில் உள்ளது. இப்பொழுது இது திண்டரங் கோட்டை என மக்களால் வழங்கப் பெறுகிறது. தம் குருவின் பெருமையை பாயிரப் பகுதியில் மட்டுமின்றித் தொகுதிதோறும் உள்ள இறுதிப் பாடல்களிலும் நூலாசிரியர் புகழ்ந்துரைத்துள்ளார். மண்டல புருடர் **திருப்புகழ்ப் புராணம்** எனும் பெயரில் அருகதேவன் புகழ்பாடும் நூலையும் இயற்றியதாக அறிகிறோம்.

மண்டல புருடர் காலம்

இவர் காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு. இவர் காலத்தை அறுதியிட இந்நிகண்டின் ஒன்பதாவது தொகுதியில் உள்ள ஒரு செய்யுள் உதவுகிறது.

'கிருஷ்ணராயன் கை போல்
கொடைமடம் என்று சொல்ப
வரையாது கொடுத்த லாமே' *(செய்யுள் – 10)*

இதில் விஜய நகர அரசனாகிய கிருஷ்ண தேவராயன் பெயர் சுட்டப் பெறுவது கொண்டு, அவன் காலத்தினையொட்டி இப்புலவர் (கி.பி. 1509-1530) வாழ்ந்திருக்கக் கூடும் என்பர். கி.பி. 1520இல் இந்நிகண்டு இயற்றப் பெற்றிருக்கலாம் என்பர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.

நிகண்டு சூடாமணி

இந்நிகண்டிற்கு ஆசிரியர் இட்டபெயர் **நிகண்டு சூடாமணி** .நூலின் தற்சிறப்புப் பாயிரம் மற்றும் தொகுதிகளின் தொடக்கத்தில் உள்ள அருகக்கடவுள் வாழ்த்துகள் ஆகியன நூலாசிரியர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் முதலாவதாகிய தெய்வ பெயர்த் தொகுதியிலும் அருகதேவன் பெயர்களையே முன்வைத்துக் கூறுகிறார். சில பதிப்புகளில் மாறியிருப்பது பதிப்பாசிரியர்கள் தம் சமண உணர்விற்கேற்ப சிவன் பெயர்களை முன்வைத்துப் பதிப்பித்துத் தவறு செய்துவிட்டனர்.

தனித் தன்மை

தமிழில் தோன்றிய நிகண்டுகளுள் இந்நிகண்டே புலவர் பருமக்களால் மணிமுடியாய்ப் போற்றப் பெற்றது. இது, தோன்றிய பிறகு முந்திய நிகண்டுகளின் பயிற்சி படிப்படியாக குறையலாயிற்று. தொகுதிகளின் அமைப்பு முறையில் இது முதல் நிகண்டாகிய சேந்தன் திவாகரத்தைப் பின்பற்றியமைத் திருப்பினும் யாப்பு, கூறும் முறை, சொற்களின் எண்ணிக்கை ஆகியவற்றால் இது மிகவும் மேம்பட்டுள்ளது. விருத்தயாப்பினால் நூலாசிரியர் இந்நூலை இயற்றியுள்ளார். சொற்களைப் பதினோராம் தொகுதியில் எதுகை முறையில் அடுக்கிப் பொருள் கூறும் முறையைப் புகுத்தினார்.

> 'இசையொடு கற்கக் கூடியதாயும் அதிக சொற்கள் அடங்குதற்குரிய பாவினத்தால் இயன்றதாயும் இத் தொகுதி இருக்குமாயின் ஞாபகத்தில் வைத்தற்குப் பெருந்துணை யாயுதவுமென்பது கூற வேண்டா. இதனை உட்கொண்டு தங்காலத்துப் பெருவழக்கி லிருந்த விருத்த யாப்பினால் மண்டல புருடர் தமது சிறந்த நூலையியற்றினார்.'

என்பர் எஸ். வையாபுரிப் பிள்ளை.

நூலமைப்பு முறை

சூடாமணி நிகண்டு ஒரு முழுமை (பூரண) நிகண்டு. இது முப்பெரும் பகுதிகளையுடைது. ஒரு பொருள் குறித்த பல்பெயர்ப் பிரிவு, பல்பொருள் குறித்த ஒரு பெயர்ப் பிரிவு, தொகைப்பெயர் (பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்ப்) பிரிவு என்னும் இவற்றை முழுமை நிகண்டு செய்த ஆசிரியர்கள் கீழ்வரும் 12 தொகுதி களாகப் பகுத்து அமைத்துள்ளனர். இவ்வகைப்பாட்டினைப் பின்பற்றாத பிங்கலந்தை, நாமதீபம் போன்ற நிகண்டுகளும் உள.

இவற்றுள் முந்திய பத்தும் சொற்களஞ்சிய அறிவிற்கு உதவுவன. ஆங்கிலத்தில் உள்ள **தெசாரஸ்** (Thesaurus) என்பதற்கு ஈடானவை. இரண்டாவது பிரிவே அகராதிப் பொருள் உணர்ச்சிக்கு உதவுவதாகும். இறுதி, தொகைப் பெயர்கள் பற்றியது.

சூடாமணி நிகண்டு, பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்கு நூற்பெயரிடுவது முதல் பல்வகை உத்திகளைப் பின்பற்றுவதற்கு முன்னோடியாக அமைந்தது. பின்வந்தோர் பலர் **பல்பொருட் சூடாமணி, உசிதசூடாமணி, கைலாச நிகண்டு சூடாமணி, வேதகிரியார் சூடாமணி** என நூற்பெயர்கள் இட்டு வழங்கியுள்ளமை நோக்கத் தக்கது.

இந்நிகண்டின் 11ஆம் தொகுதியில் சொற்களை எதுகை முறையில் அமைத்துப் பொருள் கூறுகிறார் ஆசிரியர். இம்முறையை இவருக்குப் பின்வந்த நிகண்டு நூலார் பலர் பின்பற்றியுள்ளனர். நிகண்டுகளின் இருவேறு வளர்ச்சிப்போக்கில் ஒன்றனுக்கு வழிகாட்டியாக இந்நூலாசிரியர் விளங்கியுள்ளமையை நிகண்டு வரலாற்றை கூர்ந்து நோக்குவோர் நன்கறிவர்.

பிற்காலத்தில் (19, 20ஆம் நூற்றாண்டுகளில்) தமிழ்க் கல்வியில் ஈடுபட்டோர் நிகண்டுகளைப் பயிலும் போக்கில் அவற்றின் 11ஆம் தொகுதியை மனனம் செய்து வந்தனர். இது அவர்களின் சொற்பொருளறிவை மிகுதிப்படுத்த பெரிதும் உதவுவதாயிற்று. எனவேதான் போலும் நன்னூல் பாயிர உரையில் **நிகண்டு கற்றபின் இலக்கணம் கற்றற்குரியர்** என உரைகளார் குறிப்பிடுகிறார்.

ஒருசொல் பல்பொருட் தொகுதி

இவ்வகையில் மற்ற நிகண்டுகளை விடவும் சூடாமணியின் 11ஆம் தொகுதியையே பலரும் விரும்பிப் போற்றியுள்ளனர். இத்தொகுதியில் 310 விருத்தங்களில் 1575 சொற்களுக்குப் பொருள் கூறப்பெற்றுள்ளது. சேந்தன் திவாகரத்தை நோக்க இச்சொற்றொகை எண்ணிக்கையில் மிகுதியாகும். 18 வகையான எதுகைகளில் இச்சொற்களை ஆசிரியர் தொகுத்தளித்துள்ளார்.

யாப்பு நிரம்புதல் கருதி ஆசிரியர் ஆங்காங்கு சொற்களை அடையடுத்தும், பிற எதுகைக் கலப்புடனும் கூறியுள்ளார். நோக்குநூல் (Reference book) எனும் முறையில் அன்றி, மனப் பாடத்திற்கேற்றவாறு அமைத்தல் எனும் வகையில் நோக்கினால் இவர்தம் இம்முயற்சி அளப்பரியதாகவே தோன்றும்.

பல பதிப்புக்கள் கண்டது

சூடாமணி நிகண்டு முதலில் கி.பி. 1835இல் இலங்கை மானிப்பாய் எனும் இடத்தில் அச்சிடப் பெற்றது. *அது முதல் 1985 வரை வெளிவந்த பதிப்புகளில் (கிடைத்தவற்றையெல்லாம்) இக்கட்டுரையாசிரியர் ஆய்வு மேற்கொண்டதில் இந்நிகண்டு இடைப்பட்ட இந்த 150 ஆண்டு காலத்தில் 150 முறைக்குக் குறையாமல் அச்சுப் பெற்றமையை அறிய முடிந்தது. தமிழிலக்கிய நெடும் பரப்பில் திருக்குறள் மற்றும் சமயம் சார்ந்த நூல்களைத் தவிர்த்து நோக்கினால், தனியொரு நூல் தமிழ்க் கல்விக்காக இத்தனை முறை பதிப்பிக்குமளவிற்கு பயன்படுத்தப் பெற்றுள் ளமையை இந்நூலின் இமாலய வெற்றியைப் பறைசாற்றுவதாக அமைவதை நன்குணரலாம். தமிழுக்குச் சமணரின் பங்களிப்பில் ஐயத்திற்கிடமின்றி இவ்வுண்மை ஒரு முடிமணியே ஆகும்.ஆற்றொழுக்கான இந்நூல் நடைக்கு ஒரு சான்று,*

> "பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
> பகலே நாளொரு முகூர்த்தம் பகலவன் நடுவே தேசு
> மகரமே சுறாப் பூந்தாதாம் வசி கூர்மை வசியம் வாளே
> அக மன மனையே பாவம் அகலிடம் உள்ளமாமே"

(11–ஆம் தொகுதி செய்யுள் 1)

இப்பாடலில் பகவன், பகல், மகரம், அகம் முதலிய சொற்களுக்குப் பொருள் கூறுகிறார். இதன் ஓசையொழுங்கு இதனை ஓரிரு முறை படித்தாலே மனத்தில் பதியுமாறு உள்ளமையை உணரலாம்.

சூடாமணியின் 11ஆம் தொகுதியின் செல்வாக்கைக் கீழ்வரும் செய்திகள் மேலும் புலப்படுத்தும். இத்தொகுதி பலராலும் விரும்பிப் படிக்கப் பெறுவதை உணர்ந்த களத்தூர் வேதகிரி முதலியார் இப்போக்கிலேயே தம் காலத்தில் புதிதாக வழங்கிய சொற்களைச் சேர்த்து பொருண்மை சுட்ட விரும்பினார். சூடாமணியின் செய்யுட்கள் போல் முதலில் அவர் 90 செய்யுள்களை இவ்வாறு செய்து சேர்த்து ஒரு சொல் பல்பொருட்டொகுதி 400 பாடல் எனும் பெயரில் வெளியிட்டார். இவர் முன்னையோர் நூலில் தாம் எழுதியதையும் சேர்த்து இவ்வாறு வெளியிட்டது பதிப்பு நியதியாகாது; பெருங்குறையே எனினும் இதன்வழி நாம் அறிவது சூடாமணிக்கிருந்த

செல்வாக்கே. பின்பு மீண்டும் அவரே தம் படைப்பை 273 செய்யுள்களாக விரிவாக்கி அவற்றைச் சூடாமணியின் 11ஆம் தொகுதியுடன் சேர்த்து **1843** - ஆம் ஆண்டில் **'நிகண்டு'** எனும் பெயரில் வெளியிட்டார். ஏறத்தாழ சூடாமணி நிகண்டின் 11ஆம் தொகுதியை இருமடங்கு ஆக்கினாற்போல ஒரு செயலை அவர் செய்து முடித்தார். அவர் நினைத்திருந்தால் வேறு ஒரு நிகண்டு போல செய்திருக்கலாம். ஆயினும் அவர் அவ்வாறு செய்யாமைக்கு மண்டல புருடரின் படைப்புக்கு இருந்த சிறப்பே அவரை இவ்வாறு தம் பக்கம் இழுத்தது எனலாம்.

மண்டல புருடரும் சமணமும்

தமிழிலக்கிய உலகில் இலக்கணம், இலக்கியம், காப்பியம், நீதிநூல், உரைகள், கல்வெட்டுகள் எனப் பல துறைகளிலும் நற்பணிபுரிந்த சமணம் நிகண்டுத் துறையிலும் தமக்கு இணையாக வரலாற்றில் முந்தியும், பிந்தியும் யாரும் இலர் எனும் அளவிற்கு சூடாமணி நிகண்டை அளித்ததன் வாயிலாக மண்டலபுருடரும் சமணமும் இத்துறையில் முத்திரைப் பதித்துள்ளது. இந் நிகண்டைச் செம்மையாகப் பதிப்பித்து இக்காலத்தில் வாழும் சமணச் சான்றோர் தமிழ்த் துறையினர். இதனை நன்கு பயன் கொள்ளச் செய்ய வேண்டுவது இன்றியமையாதது.

உதவிய நூல்கள்

1. ச. வையாபுரிப்பிள்ளை, அரும்பொருள் விளக்க நிகண்டு, முன்னுரை, பக். 3-4.

2. மு. சண்முகம்பிள்ளை, நிகண்டு சொற்பொருட் கோவை, ப. 72

3. S. Vaiyapuripillai, 'History of Tamil Lexicograpy' Tamil Lexicon Vol I. P. XXVII.

4. மா. சற்குணம், 'நிகண்டு வளர்ச்சியில் இருவேறு போக்குகள்', இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 26: 1, பக். 444- 448.

28. சமணர் வளர்த்த தமிழ்

பேராசிரியர் . ஒளவை. சு. துரைசாமி பிள்ளை.

தோற்றமும் வளர்ச்சியும்

சமணம் என்பது நமது பாரத நாட்டுப் பழஞ்சமயங்களுள் ஒன்று.இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய பௌத்த சமயத்துக்குச் சில ஆண்டுகள் முன்னையது என்பர். இதனை முதலில் வர்த்தமான மகாவீரர் தோற்றுவித்தார். இச்சமயம் பொதுவாகச் சமணம் என வழங்கும். இதனைத் தமிழகத்திற்கு கொணர்ந்து பரப்பியவர் சமணத் துறவிகளான சமணராதலால் அவர் பெயரால் இச்சமயம் சமணம் எனத் தமிழ் மக்களிடையே வழங்குவதாயிற்று.

தமிழகத்தில் இன்று நிலவும் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம். அதன்காலம் கிறித்துவுக்கு 1500 ஆண்டுகள் முற்பட்டது. அது தமிழ் மொழிக்கு உரிய இலக்கணமேயன்றி இலக்கியமோ, சமய நூலோ அன்று. ஆகவே அது கொண்டு அக்காலத்தே நிலவிய சமயத்தை நன்கு அறிவதற்கு இல்லை. ஆயினும், "அகத்தெழு வளியிசை அரில் தப நாடி, அளவிற்கோடல் அந்தணர் மறைத்தே" என்றும், "கபிலை கண்ணிய வேள்வி நிலை"என்றும் வரும் வைதிக சமயக் குறிப்புகள் ஒழிய பௌத்தரின் பிடகமோ, சமணரின் ஆகமங்களோ உரைக்கும் கருத்துக்கள் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. ஆதலால் சமணமும், பௌத்தமும் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பே தமிழகத்திற் புகுந்தனவாம்.

சமணமும் பௌத்தமும் புதிதாகப் புகுந்து பரவிக் கொண்டிருக்கையில் திருக்குறள் தோன்றுவதாயிற்று. அகப்பொருட்கட்கு சிறப்பளித்து ஓங்கிய சங்ககாலக் குறிக்கோளைச் சிறிது மாற்றிப் புறமாகிய அறம் பொருட்கட்கு முதலிடம் தந்து இன்பமாகிய அகப்பொருளையும் கைவிடா தொழுகும் காலத்தில் திருவள்ளுவருடைய திருக்குறள் பிறந்தது. சமய வாழ்வுக்கேற்ற துறவறம் கூறுமிடத்தும் திருவள்ளுவர் வைதிகம்., சமணம், பௌத்தம் என்ற சமய வழிச் செல்லாது தமிழகத்தில் வரலாறறியாக் கால முதலே நிலவிய பழங்கருத்துக் களையே மேற்கொண்டுள்ளார்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சமண சமயம் தமிழகத்தில் ஓரளவு இடம் பெற்றது. தமிழ் மக்களோடு இனிது கலந்து பயிலும்

வாய்ப்பும் தோன்றியது. மக்கள் சமண சமயத்தை மதித்து அதற்குரிய கோயில்கள் அமைத்திருந்ததை அக்காலத்தில் பிறந்த சிலப்பதிகாரம் காட்டுகிறது.வைதிக பௌராணிக சமயக் கடவுளோடு ஒப்பச் சமணச் சமயக் கடவுட்கு கோயில்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததைச் சைவனான செங்குட்டுவன் தம்பி இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் தொடக்கத்தில் வைதிக சமயத்தையும் இடையில் சமணம், வைணவம், சைவமாகிய சமயங்களையும் காட்டிச் சமயப் பொது நூலாக அமைந்து விடுகிறது. கோவலன் கண்ணகியரை சமணச் சான்றோரிடம் கண்டதனால் மாதரி என்ற ஆய்மகள் அவர்களைச் சமணசமயத்து சாவகர்களாகக் கருதுகிறாளேயன்றி வேறன்று.

இளங்கோவடிகள் காலத்துக்குப்பின் தமிழக வரலாற்றில் இருள் படிந்து விடுகின்றது. தமிழர் வாழ்வே ஒன்றும் புலப்படாதவாறு மறைந்தொழிகிறது. பிற்கால வரலாற்றுக் குறிப்புகளால் களப்பிரர் என்னும் நாடோடிக் கூட்டம் தமிழகத்திற் புகுந்து தமிழ் வரலாற்றைச் சீரழித்து விட்டமை தெரிகிறது. அக்காலத்தே பௌத்தமும் சமணமும் செல்வாக்குப்பெற்றுள்ளன. கி.பி. ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் பல்லவர் ஆட்சி தோன்றித் தமிழகத்தின் வட பகுதியாகிய தொண்டை நாட்டில் செவ்விய இடம் பெற்றது.பௌத்தம் பொன்னும் பொருளும் நிறைந்த மடங்கள் பல அமைத்துச் சமயப்பணி புரிந்தது. சமணச்சமயம் பௌத்தர்களோடு போராடுவதோடு நில்லாமல் பாண்டிய நாடு புகுந்து பண்பு மேம்பட்டது. சமணச் சன்றோர் சிலர் மதுரைக்கு அருகில் வச்சிரநந்தி என்ற சமணச் சான்றோர் தலைமையில் சமணச்சங்கம் ஒன்றை நிறுவிச் சமயப் பணியும், தமிழ்ப்பணியும் புரிவதாயினர். வச்சிரநந்தியின் தமிழ்ச் சமணச் சங்கம் கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டு வரை இருந்ததெனச் சீவக சிந்தாமணி பற்றிய வரலாற்றால் அறிகின்றோம்.

கல்விப்பணி

கல்விப்பணி மேற்கொண்ட சமணச் சான்றோர் தங்கள் தவப்பள்ளிகளில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கூடம் அமைத்து மக்கட்குக் கல்வியறிவு வழங்கலாயினர். அக்காலம் முதல் தமிழகத்தில் கல்விச்சாலைகட்குப் பள்ளிக்கூடம் என்ற பெயர் தோன்றி வழங்குவதாயிற்று. இப்பள்ளிக் கூடங்கள் வடமொழி பெரிதும் தமிழ் மொழி சிறிதுமாகக் கற்பித்து வந்தன. இக்காலத்தில் தமிழ் பயில்வதற்காகச் சிறு நூல்களைச் சமணச் சான்றோர் செய்தளித்தனர். அவருள் முன்றுறையரையர் பழமொழி நானூறும், காரியாசான் சிறுபஞ்சமூலமும், மதுரைத்

தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் ஏலாதியும், துணை மாலை நூற்றைம்பதும் இயற்றியுதவினார். வேறு சமண முனிவர் சிலர் நாலடியாரைச் செய்தளித்தனர். பிற்காலத்தே பத்தாம் நூற்றாண்டில் இத்தமிழ்ச்சமண சங்கத்தார் பழைய நூலான திருவள்ளுவர் செய்த திருக்குறளையும் ஏனைச் சமயத்தவர் செய்த கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி ஐம்பது, கைந்நிலை என்ற அகப்பொருள் கூறும் நூல்களையும் களவழி நாற்பது, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நான்மணிக்கடிகை , திரிகடுகம், ஆசாரக் கோவை, முதுமொழிக்காஞ்சி ஆகிய பதின்மூன்றையும் கூட்டிப் பதினெண் கணக்கு என்ற பெயரால் தொகுத்து உதவினர்.

சமயப் போராட்டங்களிடையே சமணம்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகம் பௌத்த, சமண, சைவ சமயப்போராட்டங்களுக்கு இடமாயிற்று. கி.பி. நான்காம் நூற்றண்டில் சீத்தலைச் சாத்தனார் செய்த மணிமேகலையால் வீறுபெற்றுச்செல்வச் சிறப்பெய்திய பௌத்தம் குண்டலகேசி என்ற பெயரால் சமணத்தைத் தாக்கவும் சமணம் நீலகேசி, அஞ்சனகேசி, காலகேசி என்ற நூல்களையும் கொண்டு பௌத்தத்தைத் தாக்கியது. அக்காலத்தே தொண்டை நாட்டை ஆண்ட பல்லவ வேந்தனான மகேந்திர வர்மன்'மத்த விலாசம்' என்ற நாடகமொன்றை வடமொழியில் எழுதிப் பௌத்த சமயத்தை வலியழித்தான். இதனாலும், வேறு காரணங்களாலும் பௌத்தம் நிலையழிந்து கெட்டது. சமணம் செழித்தது. இவ்வாறே பாண்டிய நாட்டிலும் அது வேந்தனைத் தன் வயமாக்கி நாடு முற்றும் தன் புகழே நிலவச் செய்தது. இளைஞர்க்காக நரி விருத்தம், எலி விருத்தம், கிளிவிருத்தம் முதலிய சிறு நூல்களைத் தோற்றுவித்தது. இவ்வகையில் சமயக் கல்விக்கு இடம் கிடைத்ததும் அருங்கலச் செப்பு என்னும் சமண சமயக் கருத்துக்களைக் குறட்பாக்களால் தரும் நூல் பிறந்தது. முனைப்பாடியார் என்ற சமணச் சான்றோர் அறநெறிச்சாரம் என்ற நூலை எழுதினார்.

இங்ஙனம் சமணம் தொண்டை நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் அரசைக் கைப்பற்றி அரசர், செல்வர் முதலியவரின் ஆதரவு பெறவும் தமிழகத்தே வரலாறறியாக் கால முதலே இருந்து வரும் சைவத்தோடு போராட வேண்டியதாயிற்று. சோழ நாட்டிலும் நடுநாட்டிலும் ஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், நம்பியாரூராரும் தோன்றித் தொண்டை நாட்டுப் பல்லவ வேந்தனையும், பாண்டிய நாட்டுப் பாண்டி வேந்தனையும் சைவர்களாக்கிச் சமணத்தைத் தலை சாய்த்தனர். தமிழ் மக்கள் உள்ளம் ஞானசம்பந்தர் முதலியோர் பாடிய பண்டைய

இசைத்தமிழைச் சேர்ந்த தேவாரப் பாட்டுக்களைக் கேட்டு மக்கள் ஆர்வம் பெருகச் சிவநெறியைப் பின்பற்றக் கண்ட சமண சான்றோர் தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தை ஆராய்ந்து தொல்காப்பியம் காட்டிய பழைய செய்யுள் இலக்கணங்களை எளிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கினர். ஒரு சிலர் எழுத்தும், சொல்லும், பொருளும் ஆய்ந்து நூல்கள் எழுதினர்.

சமணர் எழுதிய நூல்கள்

அவிநயம்: இதனை எழுதியவர் அவிநயினார். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு என்ற இலக்கணங்களைக் கூறுவது. இது கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை இருந்து மறைந்து போயிற்று.

செயிற்றியம்: இதனை எழுதியவர் செயிற்றியனார். இதுவும் அவிநயம் போல எழுத்து, சொல் முதலிய இலக்கணங்களைக் கூறுவது. சமணர் குழுவிலேயே வழங்கி இடைக்காலத்தில் இறந்து விட்டது.

தக்காணியம்: இதன் ஆசிரியர் பெயர் தெரிந்திலது. எழுத்தும், சொல்லும் கூறுவது.

அணியியல்: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. செய்யுள் இலக்கணம் கூறும் இந்நூலாசிரியர் வெண்பாக்களைச் செப்பல், வெண்கூ, அகவல் என மூவகைப்படுத்துரைக்கும் இனத்தைச் சேர்ந்தவர்.

வாய்ப்பியம்: வாய்பியனார் செய்தது. எழுத்து, சொல் யாப்பு மூன்றும் கூறுவது.

மொழிவரி: இதன் ஆசிரியர் நல்லாறனார். இது எழுத்துக்கும்,சொல்லுக்கும் இலக்கணம் கூறுவது.

கடிய நன்னியம்: இதன் ஆசிரியர் கடிய நன்னியனார். இது செய்யுளிலக்கணம் ஒன்றே கூறுவது. இந்நூல் மருட்பாவின் ஈற்று அயலடி முச்சீர் பெறுதல் வேண்டா என்பது.

காக்கை பாடினியம்: ஆசிரியர் காக்கை பாடினியார். இந்நூல் செய்யுளிலக்கணம் கூறுவது. இவர் சங்க இலக்கியத்தில் வரும் காக்கை பாடினியார் அல்லர். இவரைக் 'காக்கை பாடினியார் முதலாகிய மாக்கவிப்புலவோர்' என்று சான்றோர் பாராட்டுவர். இவ்வாறே நக்கீரர் நாலடி நானூறு, நத்தத்தனார் பாடிய நத்தத்தம், பல்காயரது பல்காயம், பனம்பாரனாரது பனம்பாரம் ஆகிய நூல்களும் சிறுகாக்கை பாடினியம், சங்கயாப்பு,செய்யுளியல், செயல்முறை, பெரியபம்மம், மாபுராணம், யாப்பியல், நாலடி நாற்பது என்பனவும் செய்யுளிலக்கணமே கூறுவன. கையனார் செய்த இலக்கணமும் இவ்வகையைச் சேர்ந்தாகும்.

இனி பாட்டியல் கூறும் நூல்களாக இந்திர காளியார் செய்த இந்திரகாளியமும், பரிமாணனார் செய்த பரிமாண நூலும் நிலவின. அறிவுடை நம்பி என்ற சமணச் சான்றோர் சந்தப்பாக் களுக்கு வகுத்த இலக்கணமான சந்த நூல் பேணுவாரற்று இறந்தது.

இவற்றின்வேறாகத் தத்துவ தரிசனம் என்ற சமண சமயப் பொருள் நூலும் பாவைப்பாட்டு என்றநூலும் தோன்றிச் சில நூற்றண்டுகள் வாழ்ந்து இறந்தன.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோலாமொழித்தேவர் என்ற சமணச் சான்றோர் சூளாமணி என்ற தமிழ்க் காப்பியத்தை எழுதினார். அது விசயன் திவிட்டன் என்ற இருவருடைய வரலாற்றுக் காப்பியமாக நலமெல்லாம் ஒருங்கு விளங்க அமைந்தது. இப்போது அச்சாகி நிலவுகிறது. இக்காலத்தில் தான் திவாரக முனிவர் திவாகரம் என்ற சொற்பொருளுரைக்கும் நூலை எழுதினார்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கொங்கு நாட்டுப் பெருந்துறைக்கு அருகிலுள்ள விசயமங்கலத்தில் தோன்றிய கொங்கு வேளிர் என்ற சமண சான்றோர் உதயணன் வரலாற்றை மணிமேகலை போல அகவற்பாவில் பெருங் காப்பியமாக எழுதித் தமிழ்ப்பணி செய்தார். அதன் கண் வரும் உவமை நலங்களும் இயற்கைக்காட்சிகளும் திருத்தக்கதேவர்க்கு பெருந்துணை செய்துள்ளன. சூளாமணியும் நீலகேசியும் போலச் சமண சமயத்துக்கென அமையாது எச்சமயத்தாரும் விரும்பியேற்கும் முறையில் கொங்கு வேளிரது பெருநூல் அமைந்து இன்பம் நல்குகிறது.

கி.பி.பத்தாம் நூற்றாண்டில் சோழர் குடித்தோன்றலாகிய திருத்தக்கதேவர் என்ற சமண சான்றோர் சீவக சிந்தாமணி என்ற பெருங்காப்பியத்தை எழுதினார். சூளாமணி போலச் சமணசமயத் துறவொழுக்கங்களையுரைத்தற்கே இச்சிந்தாமணி முடிவில் சிறந்துள்தெனினும், தமிழ் வளத்தால் இலக்கிய நலத்தால் கம்பர் முதலிய புலவர் பெருமக்கள் விரும்பிப் பின்பற்றும் மேதகவு சான்றது.

இக்காலத்தே தான் சமணச் சான்றோராகிய அமுதசாகரர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்ற செய்யுள் இலக்கணத்தை எழுதினார். யாப்பருங்கலம் விரிந்த உரையால் மேம்படினும் காரிகையே நாட்டினரின் பேராதரவு பெற்று இன்றும் பயிலப்பட்டு வருகின்றது. அந்நாளில் அரசு புரிந்த சோழவேந்தர் அதனை வியந்து பாராட்டிச் சோழ நாட்டில் காரிகைப்புத்தூர் என்றோர் ஊரை அவர்களித்த சிறப்பைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டில் தீபங்குடியில் தோன்றிய சயங்கொண்டார் கலிங்கம் வென்ற சோழவேந்தனையும் அவன் தளபதி கருணாகரத் தொண்டைமானையும் சிறப்பித்துக் கலிங்கத்துப் பரணி என்றநூலைப் பாடினர். அதனை ஒப்பதும் மிக்கதுமாகிய பரணி இல்லாமையால் அவர் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெற்றார்.

இக்காலத்தில் தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர் என்ற சான்றோர் முன்னோர் கூறிவந்த உரைகளைத் தொகுத்தும் விளக்கியும் காண்டிகையுரை வழங்கினார். முன்னோர் பலர் இருந்திருப்பினும் இளம் பூரணரையே பலரும் உரையாசிரியர் எனக் கருதிப் பாராட்டுவதுண்டு.

கி.பி.பன்னிரெண்டாம் நூற்றாண்டில் குணவீரபண்டிதர் என்ற சமண சான்றோர் எழுத்தும் சொல்லுமாகிய பரந்த இலக்கணத்தை நேமிநாதம் என்று பெயரிட்டு வெண்பா யாப்பில் பாடினார். இவரே யாப்பருங்கலக் காரிகைக்கு உரை கண்டவர் என்று கருதுவோருமுண்டு. நேமிநாதம் பாடிய காரணத்தால் இக்குணவீர பண்டிதரை நேமிநாதர் என்று உரைப்பதும் உண்டு. இக்குணவீரரின் ஆசிரியர் வச்சனந்தி என்னும் சான்றோராவர். இவர் இந்திர காளியர் என்ற சமண பெரியார் வகுத்த இந்திர காளியத்தையும் பிறவற்றையும் முதலாகக் கொண்டு வெண்பாப் பாட்டியல் என்ற பெயரால் பாட்டியல் வகையும் இலக்கணமும் எழுதியுதவியுள்ளார். இந்நூல் தோன்றிய பின் ஏனைப் பாட்டியல் நூல்கள் சிறப்பிழந்து மறைந்தன.

இந்நாளில் தான் கொங்கு நாட்டில் அடியார்க்கு நல்லார் தோன்றிப் பண்டைய இசையும் கூத்தும் உரைக்கும் நூல்கள் சிலவற்றையும் பழைய அரும்பதவுரையையும் துணையாகக் கொண்டு சிலப்பதிகாரத்துக்கு விரிந்த உரை கண்டனர்.இவரது பேருரை சுவாமி விபுலானந்தர் அவர்கள் பல்லாண்டு ஆராய்ந்து எழுதிய யாழ்நூலுக்குப் பெருந்துணை புரிந்தது. இவரையும் இவரை ஆதரித்த பொம்மண்ண காங்கேயர் என்ற செல்வரையும் சமணர் என மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறுகின்றார்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் நாற்கவி ராசநம்பி என்ற சமண புலவர் தொல்காப்பியம் கூறும் அகப்பொருட் பகுதிக்கு இளம்பூரணர் கண்ட உரை துணையாகக் கொண்டு அகப்பொருள் விளக்கம் என்ற இலக்கண நூலை எளிய சொற்களால் இயன்ற சூத்திர யாப்பில் எழுதியுதவினார். அது இன்றும் தமிழ் மாணவர்களால் விரும்பிப் படிக்கப்படுகிறது எனின் அதன் சிறப்புக்கு வேறு கூறுவது மிகை. இந்நூற்றாண்டில் மதுரையா சிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்

சீவகசிந்தாமணியின் பொருட்டு சமணராகி அதற்கு இனிய உரையெழுதினார் என்பர்.

கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் சனகாபுரத்துப் பவணந்தி என்ற சமணச் சான்றோர் தொல்காப்பியம், நேமிநாதம், தொல்காப்பிய இளம்பூரணம் ஆகியவற்றை ஆராய்ந்து நன்னூல் என்னும் இலக்கணத்தை அந்நாளைய அரசியல் தலைவனான சீயகங்கன் விருப்பத்திற்கு இசைந்து சொற் சுருக்கமும், பொருள் விளக்கமும் இனிது அமைய எழுதியுதவினார்.

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தவரான மயிலைநாதர் என்ற சமணப் புலவர் நன்னூலுக்குத் தெளிவான உரையெழுதினார். இக்காலத்தில் சமண சான்றோர் புராணங்களையும் சிற்றிலக்கியங்களையும் எழுதலா யினர். அவற்றும் வாமன முனிவர் மக்கள் தாம் செய்யும் வினைக் கேற்ப மாறிமாறிப் பிறந்துழலும் திறத்தை விளக்கும் மேருமந்தர புராணத்தை எழுதி அளித்தார். சாந்தி புராணமும் இக்காலத்ததே என்பர். இவ்வாமன முனிவரே நீலகேசிக்கு மணிப்பிரவாள நடையில் உரையெழுதியவர் என்பாரும் உண்டு. உத்சி என்பவர் திருக்கலம்பகத்தையும், அவிரோதியார் திரு நூற்றந்தாதியையும் பாடி இளைஞர்களுக்கு தமிழறிவு வழங்கினர்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வெண்ணாவலுடையார் வேள் என்ற சமணப் புலவர் யசோதர காவியத்தைப் பாடினார். இது வடமொழியில் புட்பதந்தர் எழுதிய யசோதர சரிதையைப் பின்பற்றியது என்பர். இது போலவே உதயணகுமார காவியம் நாககுமார காவியம் என்பன சமண பள்ளிகளில் தமிழ் பயிலும் சிறுவருக்கென எழுதப் பட்டவனவாகும். நாககுமார காவியம் இப்போது கிடைப்பதில்லை. இக்காலத்தில் தான் பதினெண் கீழ்க்கணக்கு என்றும் ஐஞ்சிறு காப்பியம் என்றும் கூறப்படும் தொகுப்பு முறை கல்வி முறை பற்றி தோன்றிற்று. வச்சிரநந்தி தோற்றுவித்து நடப்பித்த தமிழ்ச்சங்கத்தார் பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகுப்பை வழங்கியிருக்கலாம் என்று நினைப்பவரும் உண்டு.

கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் கல்வி பயிலும் இளஞ்சிறார்க்கென முன்னாளில் வழங்கிய நெல்லிலக்க வாய்பாடு சிறுகுழி வாய்பாடு, கீழ்வாய் இலக்கம், பெருக்கல் வாய்பாடு எனக் கணக்கியல் நூல்கள்பல சமண ஆசிரியர்களால் செய்யப்பட்டன. சினேந்திரமாலை என்ற சோதிட நூலும் இந்நாளில் தோன்றிற்று.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் முகமதிய, ஐரோப்பிய, கிறித்துவ சமய ஆட்சியாலும் மக்கள் வாழ்வில் தோன்றிய

மாறுதல்களாலும் சமணர்கள் இயற்றியதாகக் குறிப்பிடத்தக்க இலக்கிய நூல்கள் எதுவும் தென்படவில்லை.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில மொழியும் கிறித்தவ சமயமும் மக்களிடையே சிறப்பிடம் பெற்றதனால் மக்கட்கு வாழ்வு தரவேண்டி தமிழ்க்கல்வி தளர்ச்சியுற்றது. தமிழ் கற்றோர்க்குப் பொருளாதாரத்தில் சிறுமையுண்டாயிற்று. சமயக் கல்வி சிறப்பிழந்தமையால் சமண சமயம் ஒளி மழுங்கிற்று.

முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் நூற்றாண்டு தோறும் சான்றோர் களை உயர்த்தி உயரிய நூல்களைப் படைத்துத் தமிழ் வளர்த்துப் புகழ் நிறுவி நின்ற சமண சமயம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வீழ்கதிர் ஞாயிறாகி விளக்கம் இழந்தது. எத்த னையோ சமண சமயத் தமிழ் நூல்கள் பெயர் தெரியா வகையில் இறந்து போயின. இந்நூற்றாண்டில் சமணரையுள்ளிட்ட யாவர்க்கும் அரசியற் செல்வாக்கே சமயம் . எந்நெறியிலேனும் பொருள் ஈட்டுவதே சமய ஒழுக்கம் என்று ஆகிவிட்டது. இனிச் சமயம் செய்தற்குரிய தமிழ்ப்பணியைக் காலம் தான் முடிவு செய்ய வேண்டும்.



29. தமிழில் சமணம்

இரா. வள்ளிமணாளன், சென்னை.

தத்துவ ரீதியாகப் பார்க்கும்போது பௌத்தர்கள் கொல்லாமையை வலியுறுத்தினாலும், புலால் உண்ணாமையை வலியுறுத்தவில்லை. **'கல்பய மாமிசம்', 'அகல்பய மாமிசம்'** என்று புலாலை 'ஏற்றுக் கொள்ளக்கூடிய', 'ஏற்றுக்கொள்ள இயலாத', என இருவகைப்படுத்தினர். 'பிறர் கொன்று தரும் புலாலை, இறந்த விலங்குகளின் புலாலை ஏற்பது தவறன்று' என்பது அவர்கள் கொள்கை. ஆனால், **கொல்லாமைக் கோட்பாட்டை முழுமையாக வலியுறுத்திய நூல்கள் பெரும்பாலும் சமண இலக்கியங்கள்** என்றால் மிகையாகாது. இந்தக் கோட்பாட்டை வாழ்க்கையில் தவறாது பின்பற்ற வேண்டும் என்று பேசிய பிற சமய இலக்கியங்களும் தமிழில் உள்ளன. ஆகவே, கொல்லாமைக் கோட்பாட்டை நாம் தமிழ் இலக்கியங்களில் சமய எல்லைகளைக் கடந்தும் காண முடிகின்றது.

கொல்லாமை என்பது வெறும் எதிர்மறை அறநெறி என்று கூறுவது பொருந்தாது. **விலங்குகளைப் பேணாமை, அடைத்து வைத்தல், கயிற்றால் பிணைத்தல், ஊனப்படுத்துதல் ஆகியவற்றைச் செய்யாமல் இருத்தலும் கொல்லாமைக் கோட்பாட்டில் அடங்கும்.** அனைத்து உயிரினங்கள்பாலும் கருணை காட்டுவதும் கொல்லாமைக் கோட்பாட்டின் ஒருபுறமாகும். 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்பதே இந்தக் கோட்பாட்டின் முழுமை வடிவம் என்றும் கொள்ளலாம். **'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன் பின்சாரப் பொய்யாமை நன்று'** என்பது குறள். தலையாய அறம் கொல்லாமை என்று குறள் உரைக்கிறது. **'அறவினை யாதெனின் கொல்லாமை கோறல் பிறவினை எல்லாம் தரும்'** என்ற குறள், கொல்லாமைக் கோட்பாடே பிறவினைகள் அணுகுவதைத் தவிர்க்கும் என்பதைத் தெளிவாக்குகிறது.

சமணர்கள் கொல்லாமை, பொய்யாமை, களவாடாமை, மிகுபொருள் விரும்பாமை, பிறன் மனை விழையாமை ஆகியவற்றை **'அணு விரதம்'** எனக் குறிப்பிடுவர். எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் இந்த விரதங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் உரைப்பர். இறந்த விலங்கின் புலாலை ஏற்கலாம் என்ற பௌத்தரின் வாதத்திற்கு எதிர்வாதமாக

நகைமிக்க வாதத்தை வைப்பர். 'கொழுத்த ஆடு ஒன்று நம் கண் முன்னால் சென்றால் நாவில் நீர் ஊறும்; என்று இந்த ஆடு சாகும்? அதன் மாமிசத்தை நாம் உண்ணலாம் என்று எண்ணத்தில் 'இம்சை எண்ணம்' தோன்றுகிறது' என்கிறார் வள்ளுவர்.

தமிழ் இலக்கியங்களில் கொல்லாமைக் கோட்பாட்டை எடுத்துக் கூறும் பல பகுதிகளைக் கீழே காணலாம். **'அறம் எனப்படுவது ஆருயிர் ஓம்பல், வதம் எனப்படுவது கொல்லா விரதம்'** என்ற பொருள் பொதிந்த பாடல்களை நாம் காணலாம்.

"பொய்யாமை நன்று பொருள்நன்று உயர்நோவகக்
கொல்லாமை நன்று கொழிக்கும்கால்" — *சிறுபஞ்சமூலம், 39*

"கொல்லாமை நன்று கொலைதீது எழுத்தினைக்
கல்லாமை தீது கதம்தீது – நல்லார்
மொழியாமை முன்னே முழுதும் கிளைஞர்
பழியாமை பல்லார் பதி." — *சிறுபஞ்சமூலம், 51*

"கொன்றான் கொலையை உடம்பாட்டான் கோடாது
கொன்றதனைக் கொண்டான் கொழிக்குங்கால் – கொன்றதனை
அட்டான் அடவுண்டான் ஐவரினும் ஆகுமெனக்
கட்டெரிந்த பாவம் கருது." — *சிறுபஞ்சமூலம், 70*

"கொல்லான் உடன்படான் கொல்வார் இனஞ் சேரான்
புல்லான் பிறர்பால் புலால்மயங்கல் – செல்லான்
குடிப்படுத்துக் கூழ்ஈந்தான் கொல்யானை ஏறி
அடிப்படுப்பான் மண்ணாண்டு அரசு." — *ஏலாதி, 42*

"கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல்...." — *பட்டினத்தார்.*

"கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே" — *தாயுமானவர்*

"உலகுடன் விளங்வரு சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறும்
அலகில்துயர் அஞ்சிஉயிர் அஞ்சவரும் வஞ்சக்
கொலை ஒழிமின் என்றுநனி கூறினர் அறிந்தோர்" — *வளையாபதி*

"உயிர்கள் ஓம்புமின் ஊன்விழைந்து உண்ணன்மின்
செயிர்கள் நீங்குமின் செற்றம் இகழ்ந்துஒரீஇக்
கதிகள் நல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்." — *வளையாபதி*

"கொன்றான் நுகரும் கொடுமையை உள்நினைந்து
அன்றே ஒழிய விடுவானேல் – என்றும்
இடுக்கண் எனவுண்டோ இல்வாழ்க்கைக் குள்ளே

படுத்தானாம் தன்னைத் தவம்." – *அறநெறிச்சாரம், 63*

"புலையும் கொலையும் களவும் தவிர்." – *கொன்றை வேந்தன், 63*

"ஊன்ஊண் துறமின்! உயிர்க்கொலை நீங்குமின். – *சிலப்பதிகாரம்*

"வலைபடைத்தார் ஊன்வேண்டா
அவ்விலைதான் வேண்டி
வலைபடைத்தார்க்கு எம்முயிரை
வைக்கின்றோம் இன்ன
கொலை படைத்தா னோகொடியன்
என்பனவே போலத்
தலைஎடுத்து வாய்திறப்ப
தாமிவையோ காணீர்" – *நீலகேசி*

"தன்னுயிர் தான்பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந்து உயர்ந்து போகுமே."

– *சீவகசிந்தாமணி, 3107*

"ஆருயிர் வருத்தம் கண்டால்
அருள்பெரிது ஒழுகி கண்ணால்
ஓருயிர் போல நெஞ்சத்து
உருகிநைந்து உய்ய நிற்றல்
வாரியின் வதங்கட் கெல்லாம்
அரசமா வதம்இ தற்கே
சார்துணை யாகக் கொள்க
தகவும்அத் தயவும் என்றான்."

– *யசோதர காவியம், 247*

"இவ்வுலகின் எவ்வுயிரும் எம்முயிரின் நேர்என்று
அவ்வியம் அகன்று அருள் சுரந்து உயிர் வளர்க்கும்
செவ்விமையின் நின்றவர் திருந்தடி பணிந்துஉண்
எவ்வினை கடந்துயிர் விளங்குவிறல் வேலோய்!"

– *யசோதர காவியம், 272*

__யசோதர காவியம்__ சிறு காப்பியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்த நூலில் ஒரு நிகழ்ச்சி விரித்துரைக்கப் படுகிறது. அவந்தி நாட்டில் __யசோமதி__ மன்னனாகவும் __புட்பாவலி__ அரசனின் தேவியாகவும் இருந்து ஆண்டனர். அவர்களுக்கு __அபயருசி__ மகனாகப் பிறந்தான். அரசிளங்குமரன் பொருள் உலகத்தை ஆள மனமில்லாமல் அருள் உலகம் ஆள நாட்டங்

*கொண்டு நடுங்காத் தவம் புரிவதில் ஈடுபட்டான். உடலில் இணையிலா அழகன். கானகத்தில் திரிந்து தவம் மேற்கொண்டான். மாரிதத்தன் என்ற வேறு ஒரு மன்னன் தன் குலதெய்வம் **கண்டமாரிக்குப்** பலிவேண்டி அழகுமிக்க அடலேறு கொணர்க என்று தன் காவலரை அனுப்பினான். காவலர் கண்ணில் அபயருகி சிக்கினான். அபயருகியைக் கண்ட மாரிதத்தன் மகிழ்ந்தான். பலியிட முனைந்தான். வாளும் கையுமாக நின்ற மாரிதத்தனைப் பார்த்து அபயருகி உரக்க நகைத்தான். வெகுண்ட மாரிதத்தன் ஏன் என்ற வினவ, அதற்கு அபயருகி **'என்னை ஒருமுறை கொல்லும் நீ உன் உயிரைப் பன்முறை கொன்று கொள்கிறாய்'** என்று பகர்ந்தான். அறவுரையும் வழங்கினான். இதனைச் செவிமடுத்த மாரிதத்தன் பிழை பொறுக்க வேண்டி மனம் திருந்தினான் என்று **யசோதர காவியம்** என்ற சமண காப்பியம் செப்புகிறது.*

**"அன்னனம் அண்ணல் கூற
அருளுடை மனத் தன்ஆகி
மன்னவன் தன்கை வாளும்
மனத்திடை மறனும் மாற்றி
என்னினி இறைவன் நீயே
எனக்கென இறைஞ்சி நின்று
பன்னுக குமர நுங்கள்
பவத்தோடு பரிவும் என்றான்."**

– யசோதர காவியம், 67

*யசோதர காவியத்திலேயே இன்னொரு இடத்தில் மாவுக் கோழியைக் கொல்வதும் பாவம் என்று எடுத்தோதப்படுகிறது. **யசோதரன்** அல்லல் தீர மாவுக் கோழியைப் பலியிட முனையும் போது, **சிந்தனையில் இம்சை எண்ணம் இருப்பதே பாவம்** என்று தாய் **யசோமதி** அறிவுரை கூறுவதைப் பின்னரும் (250, 252 ஆகிய) இரு பாடல்களில் பார்க்கலாம்.*

**"இன்னுமீது ஐய கேட்க
யசோமதி தந்தை யாய
மன்னவன் அன்னையோடு
மாவினிற் கோழி தன்னைக்
கொன்னவில் வாளில் கொன்ற
கொடுமையிற் கடியதுன்பம்
பின்னவர் பிறவி தோறும்
பெற்றன பேச லாமோ"
"உயிரவண் இல்லை ஏனும்
உயிர்க்கொலை நினைப் பினால்இம்**

மயரிகள் பிறவி தோறும்
வருந்திய வருத்தம் கண்டால்
உயிரினில் அருள்ஒன் றின்றி
உவந்தனர் கொன்று சென்றார்
செயிர்தரு நரகின் அல்லால்
செல்லிடம் இல்லை என்றான்."

தன்னுடைய வழிப்பயணத்தில் புலால் உண்ணாமையையும் கொல்லாமையையும் போதித்த சீவகனை, சீவக சிந்தாமணியில் திருத்தக்க தேவர் காட்டுகிறார்.

மேருமந்தர புராணம் *என்ற இன்னொரு இனிய சமணக் காப்பியம் இந்தக் கொல்லாமைக் கோட்பாட்டைப் போதிக்கும் முறையைப் படிப்போம்.*

"வதங்கள்பன் னிரண்டு மேவி
வையகத்து உயிர்கட்கு எல்லாம்
இதம்செய்து வருந்தில் வெந்தீ
இடுவெண்ணெய் போன்று இரங்கிச்
சிதைந்து இன்னாதன செய்தார்க்கும்
இனியவே செய்து சிந்தை
கதம் கடிந்து ஒழுகல் நல்லோர்
கருணையைக் கொடுத்த லாமே."

கொல்லாமை விரதத்தைப் பின்பற்றாவிட்டால் கொடு நரகு கிடைக்கும் என்று அச்சுறுத்தும் **வளையாபதி** *பாடல்:*

"கொன்றுயிர் நடுங்கச் சென்று
கொலைத் தொழில் கருவி ஏந்தி
நின்றெரி நுடங்கு கண்ணால்
பாவமே நினைந்து செத்தார்
சென்றெரி நரகில் வீழ்வர்
செவ்வனே துன்பம் அஞ்சி
நன்றியில் கொலலையி னீங்கி
நற்றவம் புரிமின் என்றான்."

என்று கூறுகிறது.



30. தமிழும் சமணமும்

P.S. சந்திரநாத் ஜெயின், பெரணமல்லூர்.

தமிழ்

வரலாறு காணா பழமையுடையது தமிழ். இலக்கிய வளமும் இலக்கண வரம்பும் பெற்றது தமிழ். அதனால் புறசமய தாக்கத்தையும் அயல்நாட்டு அரசியல் தாக்குதலையும் முறியடித்து அழியாமல் நின்றது தமிழ். **உயர்தனிச் செம்மொழி** என அறிஞரால் போற்றப்படுவது தமிழ்.

அதனால்தான் கிறித்துவம், மகமதியம் போன்ற புற சமயங்கள் தங்கள் மதத்தைப் பரப்ப தமிழை கருவியாகக் கொண்டன. தமிழைக் கற்றுத் தேர்ந்து புகழ் எய்தின. வளர்ந்த பண்பட்ட மொழியான தமிழை யாரும் வளர்க்க வேண்டிய அவசியம் இல்லை. உலகப் பொதுமறை என போற்றப்படும் **திருக்குறள்** போன்ற ஒரு நூல் இதுவரை தோன்றவுமில்லை; இனி தோன்றப் போவதுமில்லை.

சமணம்

இந்தியாவில் தோன்றிய சமயங்கள் அகச் சமயங்கள் என அழைக்கப்படுகின்றன. **சைவம், வைணவம்,** பௌத்தம் மற்றும் **சமணம்** போன்றவை அகச் சமயங்களில் குறிப்பிடத்தக்கன. **சமயக் கோட்பாடுகளில் சிறந்து விளங்கும் ஜீவாதாரக் கோட்பாட்டை வற்புறுத்த தோன்றியதே சமணம். சடங்குகளின் பெயரால், வேள்வியும் உயிர்பலியும் மலிந்து விட்ட காலகட்டத்தில் இதை பெறாத மதவாதிகள் சிலர் புதுநெறி கண்டனர். அதுவே சமண நெறியாகும்.** அகிம்சையும், நெறியும் சமணத்தின் இருவிழிகளாகும். மதவாதிகளுக்கு ஆடம்பரம் கூடாது என்கிறது சமணம். **எளிமையும், துறவும்** சமணத்தின் ஒழுக்கலாறுகள் ஆகும். நிருவாண நிலையே **ஜீவன்** முத்தி பெற உகந்தது எனப் பறை சாற்றுகின்றது சமணம்.

தமிழ்த் தொண்டு

சங்கம் மருவிய காலத்தை அடுத்துவரும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் 8 ஆம் நூற்றாண்டு வரை தமிழில் இருண்ட காலம் என்றழைக்கப்படுகிறது. களப்பிரர் ஆட்சிக்குப் பிறகு பல்லவர்கள் தமிழகத்தை ஆண்டார்கள். அக்காலத்தில்தான் சமணம் செல்வாக்குப் பெற்றிருந்தது. காஞ்சிபுரத்தில் தமிழுக்குத் தனியே பல்கலைக்கழகம் அமைத்த பெருமை சமணத்திற்கு உண்டு. மகேந்திரவர்மன் காலத்தில் அரசியல் செல்வாக்கோடு சமணப்புலவர்கள் தமிழை ஆய்ந்தனர். இலக்கணத்தை எளிமைப்படுத்த எண்ணினர்.

அதன் பயனாக நன்னூல், **யாப்பெருங்கலக் காரிகை, அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பாமாலை** போன்ற இலக்கண நூல்கள் தமிழில் தோன்றின.

பிற்காலத்தில் தமிழ் படிப்போர்க்கு இவை பேருதவியாக அமைந்தன. இன்றும் கல்லூரி பாடங்களில் மேற்சொன்ன நூல்களே இடம் பெற்றுள்ளன.

இலக்கண நூல்களே அன்றி, **காப்பியங்களும், புராணங்களும், நீதி நூல்களும்** இக்காலத்தில்தான் இயற்றப்பட்டன. **பெருங்கதை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூடாமணி, வளையாபதி, நீலகேசி** போன்றவை சமணம் தந்த பெருங்காப்பியங்களே ஆகும்.

உதயண குமார காவியம், நாககுமார காவியம் யசோதரக்காவியம், சூளாமணி போன்ற சிறு காப்பியங்களும் தமிழுக்கு சமணம் அளித்த கொடையே ஆகும். மேரு மந்திரபுராணம், சாந்தி புராணம், ஸ்ரீபுராணம் முதலியன புராண வகையில்அடங்கும். **நாலடியார், பழமொழி** போன்ற நீதி நூல்களும் சமணம் வழங்கிய பொக்கிஷங்களாகும்.

பெண்கள் வீட்டை அலங்கரிக்கும் போகப் பொருளாக கருதிய காலத்தில் இளங்கோவடிகள் என்னும் சமணத்துறவி கண்ணகியை ஒரு காவியத் தலைவியாக்கி கற்புக்கரசியாக மிளிர வைத்து பாண்டிய மன்னனையே. எதிர்த்து வழக்காடும் வீராங்கனையாக வடித்துக் காட்டியுள்ளார். சங்க யாப்பிலிருந்து மாறுபட்டு'**விருத்தப்பா**' என்ற புதுமுறையைக் கையாண்டு ஆயிரக்கணக்கான பாடல்களால் சீவகசிந்தாமணியைப் பாடிய திருத்தக்க தேவர் ஒரு சமணப்புலவர் ஆவார். இதில் சீவகன் என்னும் கதாநாயகன் எட்டுத் திருமணங்களைச் செய்து இறுதியில் துறவற நெறியே சுகமெனக் காட்டும் சமணக் கோட்பாடு போற்றத்தக்கது.

கடவுள் பெயரால் சிலைகள், வைரகிரீடங்கள், தங்கத்தேர் போன்ற ஆடம்பரங்களை அறவே நீக்கியது சமணமே ஆகும்.பௌத்தரையும் சைவரையும், வைணவரையும் தமிழால் வாதிடும் வல்லமையுடையது சமணம். காமமே ஞானத்திற்குத் தடை. பொருள் பற்றே முக்திக்கு முட்டுக் கட்டை என அழுத் தந்திருத்தமாக கூறுவது சமணம். அதனால் தான் முற்றுந் துறந்த நிருவாண நிலையை உலகுக்கு உணர்த்தி வருகிறது சமண சமயம்.

எனவே தமிழகத்தில் '**சமணத்தால் தமிழும், தமிழால் சமணமும்**' தழைத்தன என்பதை யாராலும் மறுக்க இயலாது. வாழ்க தமிழ்!

வெல்க சமணம்!!

31. தென்னகத்தில் சமணம்

P. அப்பாண்டை ராஜன், விழுப்புரம்.

இந்தியப் பெருநாட்டின் தொன்மைகளில் மதமும் ஒன்று. இதில் சமணமதம் மிகத்தொன்மையானது. இம்மதத்தின் தோற்றம், ஆதிகாதர் காலந்தொற்று தோன்றியது என்பதற்கு பலசான்றுகள் மொகஞ்சதாரோ ஹரப்பாவில் தொடங்கி தென்னிந்தியா எங்கும் விரிந்து பரந்துள்ளது என்பதற்கு இன்றுவரை பல்வேறு சான்றுகள் கிடைக்கி ன்றன.

சமணமதம், வேதகாலத்திற்கு முந்தியது என்பதை வேதங்களில் காணும் பலசான்றுகள் அறுதியிட்டுக் கூறுகின்றன. வேதங்களில் **விருஷபதேவர்** சமணசமய ஸ்தாபகர் என கூறப்பட்டு உள்ளது. **விருஷபர், அஜிதர், அரிஷ்டநேமி, வர்த்தமானர்** ஆகிய தீர்த்தங்களின் தன்மைகள், யஜீர் வேதத்தில் பல சுலோகங்களின் வாயிலாக நன்கு புலனாகிறது. இதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியத் தத்துவங்கள் என்ற நூலில் தெளிவாகக் கூறுகிறார்.

சமணசமயம் பத்திரபாகு காலத்திற்கு பின்னே தென்னகம் முழுமையும் பாவியது என்பதை அறுதியிட்டுக் கூறஇயலாது. அதற்கு முன்பே தென்னாட்டில் சமணம் தழைத்து இருந்தது என்பது கிடைக்கும் சான்றுகள் மூலமும், தொல்காப்பியர் காலத்தில், இலக்கணநூல் தோன்றியுள்ளதும் தென்னக சமணச்சான்றுகள் தானே. ஜெயின் அனா நூல்களில் பெரும் பிரிவுகள் அல்லது மகாஅதிகாரங்களே வேதங்கள் ஆகும். அவை நான்கு வேதங்களும், வடமொழியில் பிரதமாற யோகம், கானானு யோகம் திவ்யானு யோகம் என்று அழைக்கப்படுகின்றன.

1. 'மாதம்' என்னால் தொடக்கமற்ற தீக்காட்சியாளன். அவனுக்காக அனாநூல் பிரிவு மாதமானுயோகம் என்று சோமடசாரம் முதல் வேதத்தில் இருபத்து நான்கு தீர்த்தங்கள் பன்னிரண்டு சக்ரவர்த்திகள், ஒன்பது பலதேவர்கள், ஒன்பது வாசுதேவர்கள், ஒன்பது பிரதி வாசு தேவர்கள் என 63 நல்லோர்களையும், மேகஸ்வர கதைகள் சீவகன் ஜம்புநாதர் முதலிய நல்லோர்களின் சரித்திரங்கள் கூறப்படுகின்றன. தத்துவ ஞானிகளுக்கு பெரியோர்களின் சரித்திரம் சான்றாக அமைகிறது. தீய நல்ல எண்ணங்களின் பயனையும் அவர்கள் அறிகிறார்கள்.

2. கானானுயோகம் என்ற இரண்டாம் வேதத்தில் உலக அமைப்பு விளக்கப்படுகிறது.

3. சரணனுயோகம் என்ற மூன்றாம் வேதத்தில் இல்லற துறவறங்கள் விளக்கப்படுகின்றன.

4. நான்கு வேதங்களில் தலைசிறந்ததான திவ்யானு யோகத்தில் நான்காம் யோகத்தில் ஆறு பொருள்கள், ஏழு உறுப்புகள் தத்துவங்கள் ஊழ்வினை நிலைகள் முதலியன விளக்கப்படுகின்றன. பிரதமானு யோகம்' ஜீன சேரச் சாரியாவில் வடமொழியில் இயற்றப்பட்டுள்ள மகாபுராணம், தீர்த்தங்கரர் கள், சக்ரவர்த்திகள் முதலானவர்களின் சரித்திரங்களைக் கூறுகிறது. மாபெரும் பெரியோர்களின் புகழ்மிக்க வரலாறுகள் அடங்கியது. அல்லது மாபெரும் பெரியோர்களான தீர்த்தங்கரர் களால் கூறப்பட்ட வரலாறுகள் அடங்கியது. மாபெரும் நன்மையான வீடுபேற்றை அடைய துணை செய்வது என்னும் பொருளில் புராணம் என்று அழைக்கப்படுகிறது. மகாபுராணமே முதல் சமணவேதம் ஆகும். அதன் தமிழாக்கமான ஸ்ரீபுராணம் முதல் வேதம் ஆகிறது. இதில் கூறப்பட்டுள்ள நல்லறக் கதைகள் வீடுபேறையும் வீடுபேறடையும் வழிகளைக் கூறுவனவாக அமைகின்றன. பிறவிச் சுழற்சியில் வெறுப்பும் அச்சமும் கொள்ளச் செய்கிறது இந்நூல்.

அறம், பொருள், இன்பங்களை கூறுவதே கதை என கூறப்படுகிறது. அறத்தின் பயனைக் கூற பொருளும், இன்பமும் கூட விளக்கப்பட வேண்டும். பொருள், இடம், காலம், வீட்டு நெறி எண்ணநிலை (பாவம்) உயர்ந்த பயன் கதை ஆகிய ஏழு உறுப்புகளையுடையதே நல்ல கதையாகும்.

பொருள் உயிர்ப்பொருள், உருவப்பொருள், தருமப்பொருள், அதருமப்பொருள், ஆகாயப்பொருள், காலப்பொருள் என ஆறு ஆகும். இடம் மேல், கீழ், நடு ஆகிய மூன்றுலகமும் இடம் ஆகும்.

காலம்: இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் மூன்றுமே காலமாகும். வீட்டு நெறி தீர்த்தங்கரர்களின் வரலாறே வீட்டு நெறியாகும்.

எண்ணநிலை: வினைகளின் துணிவும் துணிவோடு அழிவும் அல்லது அழிவின் விளைவாகத் தோன்றும் உணர்வு நிலையே 'பாவம் எனப்படும்' எண்ண நிலை ஆகும்.

பயன்: வீடுபேறு கதை: தீர்த்தங்கரர்கள் ஆகியோரின் வாழ்க்கைச் சரித்திரம்.

உலகம் தோற்றக் கேடற்றது: இந்த உலகம், தோற்றமும் அழிவும் இல்லாதது. சிலர் உலகம், யாராவது ஒருவரால் படைக்கப்பட்டதாகவே இருக்க முடியும் என்கின்றனர். அப்படியானால் உலகைப் படைத்த அவரும் ஒருவரால் படைக்கப்பட்டவராகவே இருக்க முடியும். உலகை படைத்தவரும் கூட ஒருவரால் படைக்கப்பட்டவராகவே

இருக்கவேண்டும். இப்படியே முடிவின்றி கூறவேண்டிவரும். அது முடிவு பெயருடைய எனும் குற்றமாகும்.

உலகில் எதுவும் காரணப் பொருள் இல்லாமல் செய்யப்படுவது இல்லை. எடுத்துக்காட்டாக மண் இல்லாமல் பானை அமையாது. உலகைப் படைத்தனாக கருதப்படும் ஈசுவரனும் காரணப் பொருள் இல்லாமல் உலகை எப்படி படைக்க இயலும்? இதற்கு ஈசுவரன் முதலில் காரணப்பொருளை படைத்துவிட்டே பின் உலகைப் படைத்தான் என்றால் அதுவும் சரியில்லை. இங்கும் முடிவு பெயருடைய என்னும் குற்றமே வருகிறது. எப்படியெனில் காரணப்பொருளை செய்வதற்கும், மற்றொரு காரணப்பொருள் தேவைப்படுகிறது. காரணப்பொருள் தனக்கெனவாகவே அதாவது இயற்கையாகவே கிடைக்கிறது என்றால் உலகமும் அவ்வாறே தனக்குத்தானாகவே அமைகிறது. அதைப்படைக்க எவரும் தேவையில்லை என்று கருதவேண்டும். வளர்பிறை தேய்பிறையையும்' தேய்பிறை வளர் பிறையையும் ஒன்றையொன்று தொடர்வது போல் தொடக்கமற்ற காலத்திலிருந்தே உத்சப்பிணியும் ஏறுகாலமும் அவசரப்பிணியும் இறங்கு காலமும் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றன.

ஏறுகாலம் மக்களது குறைந்த அகவையாகிய 16 ஆண்டும் குறைந்த உயரமாகிய ஒரு முழத்தோடும் தொடங்கி முடிவில் மூன்று பல்லம் அகவையும் 6000 வில் உயரத்தையம் அடையும் காலமாகும். இதற்கு ஏறுகாலத்தின் காலஅளவாகிய பத்து கோடாகோடி கடற்காலம் ஆகிறது. மேரு மந்திர புராணத்தில் கடற்காலம் இவ்வாறு விளக்கப்பட்டு இருக்கிறது. எண்பத்து நான்கு நாலாயிரம் ஆண்டுகள் கொண்டது. ஒரு பூர்வம் எண்ணிக்கையில்லா பூர்வங்கள் கொண்டது ஒரு பல்லம். பல்லம் பத்து கோடாகோடி கொண்டது ஒரு கடற்காலம்.

இறங்கு காலம் மக்களது மூன்று பல்லம் அகவையையும் 6000வில் உயரத்தோடும், தொடங்கி மெல்ல மெல்லக் குறைந்து பத்துக்கோடாகோடி கடற்கால முடிவில் 16 ஆண்டுகள் அகவையிலும் ஒரு முழ முடிவிலும் முடிகிறது.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்திருந்த விலங்குகள் அமெரிக்காவில் அப்பொழுது உருகியதோர் வெள்ளத்தில் மூழ்கி மடிந்தன. அவை வெளியே எடுக்கப்பட்டு கலிபோர்னியா திறந்த வெளிப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அவை யானையை விழுங்கும் பெரிய அளவுடையன எனக் கூறப்படுகின்றன.

இப்பொழுது நடைபெறுவது இறங்கு காலமாகிய அவசரப்பணி காலமாகும். ஏறுகாலத்தைப் போன்றே இதிலும் ஆறு உட்பிரிவுகள் கூறப்படுகின்றன. முதற்காலம் நான்கு கோடாகோடி

கடற்காலம் கொண்டது. இரண்டாம் காலம் மூன்று கோடாகோடி கடற்காலம் ஆகும். மூன்றாம் காலம் இரண்டு கோடாகோடி கடற்காலம் ஆகும். நான்காம் காலம் 42 ஆண்டுகள் குறைந்த ஒரு கோடி கடற்காலம் ஆகும். நாம் வாழும் இந்த கடற்காலம் 21 ஆயிரம் ஆண்டுகள் கொண்ட ஐந்தாம் காலமாகும். இது தொடங்கி இதுவரை ஏறக்குறைய 2510 அண்டுகள் கழிந்துவிட்டன. ஆறாம் காலம் 21000 ஆண்டுகள் ஆகும்.

முதல் மூன்று காலங்களிலும் பத்து வகைக் கல்ப விருஷசங்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றன. கல்ப விருஷங்கள் துரவா வகையில் மிக்க செழிப்பான மண்ணே மரஉருவில் அமைந்து அம்மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றன என்று மகாபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அது எப்படி பாண்டம் துணி முதலிவற்றை அளிக்கும் என்ற கேள்விக்கு இடமில்லை. இயற்கை பலவானாகும். இயற்கை பற்றித் தருக்கம் செய்ய இடமில்லை. எப்படி இக்காலத்திலும் பருவங்களுக்கு எனப் பல்வேறு வகை மரங்கள் பல்வேறு வகைப் பழங்களைத் தந்து உயிரினங்களுக்கு நன்மை செய்கின்றனவோ அதே போல் கல்ப விருஷங்களும் பலவற்றை தந்து நன்மை செய்கின்றன என்றறிய வேண்டும் என்னும் மகாபுராணத்தில் கூறப்பட்டிருக் கிறது. அக்காலங்களில் பாரதநாட்டில் வாழும் மக்கள் உழைப்பின்றி வாழ்க்கை நடத்தியதால் அவர்கள் போக பூமி மக்கள் என்றும் நம் பாரத நாடு போக பூமி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நாம் வாழ் உலகமும் கீழாக ஏழுநாக பூமிகளும் வானுலகத்தில் உச்சியில் சித்த சிலா என்ற எட்டாம் பூமியும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகாயத்துச் சந்திர சூர்யர்கள் போன்று தேவர்கள் மேலுலகத்தில் விமானங்களில் வாழ்வார்கள். ஆகாயம் வரம்பின்றி அல்லது எங்கும் பரவிஇருப்பது அதன் நடுப்பாகத்தில் ஆகாயத்தின் வரம்பில் எண்ணின் ஒரு பங்களவு உடைய உலகம் இருக்கிறது. உலகமும் ஒவ்வொரு பூமியும் மூன்று வாத வளையங்களால் சூழப்பட்டுள்ளன.

சக்வார்த்தசித்தி என்ற சித்தியடைந்த உயிர்கள் சித்தசிலைக்கு மேலுள்ள உலகின் உச்சியை அடைகின்றனர். சித்தியடைந்த ஒவ்வொரு உயிரும் தன்கடைசி மனிதஉடலின் அளவில் சற்று குறைந்து இருக்கும்.

சித்தர்கள் எல்லாம் அருவம் ஆகையால் அவர்கள் விளக்குகள் ஒளிபோல ஒருவரை ஒருவர் ஊடுருவி தனி உரிமை யுடன் இருப்பர். இவற்றை இன்றைய வானியல் ஒத்துப்போகிறது.

சரணனு யோகம்

சரணனு யோகம் என்ற மூன்றாம் இல்லற துறவறங்களை விளக்குகிறது. அருங்கலச்செப்பு என்ற நூல் இல்லறத்தை முழுமையாக விளக்குகிறது.

1. இல்லறத்தார் சித்தர்களின் சிறப்பியற்றல்.
2. ஆச்சாரியார் உபாத்திய சாதுக்களின் பக்தி.
3. அறநூல்களைப் படித்தல்.
4. இல்லறத்தார் ஒழுக்கம் கடைப்பிடித்தல்.
5. வேண்டுதல் வேண்டாமை இலாமையாகிற சமநிலைவகிக்க, முயலுவதாகிய சாமாயிகம் செய்தல்.
6. ஆசாரதானம் முதலியவற்றை செய்தல்.

துறவறம்

யாருக்கு பிறவிச் சுழற்சியில் பெரும் அச்சம் தோன்றுகிறதோ அதை கடக்க எண்ணி சுற்றத்தார்களுக்கு அறிவித்து அவர்களிடம் விடை பெறுகிறார். ஒரு முனிவரை அணுகி தன் ஆடை முதலிவற்றை துறந்து அவற்றின் மீதுள்ள பற்றை துறந்து அகப்பற்றையும் துறந்து துறவேற்று துறவியாகிறார். துறவி உயிர்களை ஓம்ப மயிற் பிஞ்சத்தையும், சுத்தி செய்து கொள்ள கமண்டலமும் படிப்பதற்காக அறநூலும் தவிர யாதொன்றையும் வைத்துக் கொள்வது. இல்லை, அவர் ஐம்பெரும் நோன்புகளையும் அவற்றுக்கு உறுதுணை ஆயினவற்றையும் உள்ளம் மொழி உடல் அடக்கங்களால் ஒழுகுதல் உற்றநோய் நோன்னால் குற்றங்கள் நோராமல், காத்தல் நேர்ந்த குற்றங்களாகும். வேண்டுதல், வேண்டாமை யாகிற சமநிலை உயிர்த்தன்மையில் தோய்தல் ஆகிய ஆறு தினசரி கடமைகளை ஆற்றுகிறார். பன்னிரண்டு வகைத் தவங்களை செய்கிறார். இப்பன்னிரண்டு தவங்களில் தலைசிறந்தது தியான தவமாகும். இதை அடையவே பிறபதினோரு தவங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. தியானம் என்பது சிந்தனையே ஆகும். வீடுபேற்றிற்கு உதவுவன நற்சிந்தனையாகிய தரும தியானமும் சுக்கில தியானமும் ஆகும்.

சமண என்ற சொல் தமிழல் சமணம் என்று வழங்குகிறது. வடமொழியில் ஸ்ரமண என்று வழங்குகிறது. 'ஸ்ரம்' என்ற சொல்லுக்கு 'நோற்றல்', 'முயலுதல்' என்று பொருள். வீடுபேறடைய உற்ற நோய் நோற்றலைக் குறிக்கிறது.

யார் பகைவர் உறவினர்களிடையே நடுநிலைமை போற்றுகிறாரோ இன்ப துன்பங்களில் பொதுநோக்கு காட்டுகிறாரோ புகழ்ச்சி இகழ்ச்சிகளில் வேற்றுமை இன்மை பாராட்டுகின்றானோ இரும்பையும் பொன்னையும் ஒன்றாக பாவிப்பவர் எவரோ அவரே சமணர் ஆவார் என்பதாம்.

தெய்வீகப் பேறுகளில் விருப்போ அல்லது நோற்றலின் போது ஏற்படும் இடையூறுகளில் வெறுப்போ அடையோத நடுவுநிலைமையாளனே சமணன் எனலாம்.

அச்சமண அருளாளர்கள் பல ஆயிரக்கணக்கானோர் ஏன் கோடிக்கணக்கானோர் பல தீர்த்தங்களுடன் தோற்று முக்தி அடைந்த பலவரலாற்று சான்றுகள் பல இடங்களில் காணப்படுகின்றன.

பகவான் மகாவீரர் வரம்பில் அறிவை கேவல ஞானம் பெற்று முப்பது ஆண்டுகள் அறவுரை ஆற்றி கி.மு. 527ல் வீடுபேறடைந்தார். அவர்தம் அறவுரைகளை கௌதமகண தரர் சூத்திரங்களில் அமைத்தார். அவற்றின் தொகுப்பே பன்னிரெண்டு அங்கங்கள் ஆகும். அங்கம் என்றால் உறுப்பாகும். எப்படி இரண்டு வகைகள் இரண்டு தோள்கள் இரண்டு கால்கள் என உடலின் உறுப்புகள் 12 உள்ளவாறு அறிவு உடலின் சிறப்பு உறுப்புகள்.

1. ஆசாரங்கள் துறவிகளின் ஒழுக்கத்தை விரிவாகக் கூறுகிறது.

2. சூத்திர இருதரங்கம் இது பல்வகை அடக்கம் துறவு ஒழுக்கத்தில் குறை ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய கழுவாய் வகைகள் பிற அறங்களை விளக்குகிறது.

3. ஸ்தானங்கம். 4. ஸமவாயங்கம். 5. வியாக்கிய பிரஞ்சப்தி அங்கம். 6. நாத்ரு தர்மகதா அங்கம் தீர்த்தங்கரர்களின் அனாவிளக்கம்.

7. உபாஸ்காத்யாயன அங்கம். இது இல்லற தர்மத்தை கூறுகிறது.

8. அக்த கிருத தசர அங்கம் இஃது ஒவ்வொரு தீர்த்தங்கரர்ள் காலத்திலும், பொறுத்தற்கரிய கொடுமைகளை தாங்கி நோற்றுயர்ந்த துறவிகளைக் கொண்ட கதைகளை விளக்குகிறது.

9. அனுத்தரோப பாதிக தசஅங்கம் ஒவ்வொரு தீர்த்தங்கரர் காலத்திலும் மாபெரும் கொடுமைகளை பொறுத்து நோற்று விஜய வைஜயஸ்தர் முதலான துறவிகளை பற்றிய கதைகளைக் கூறுவதாகும்.

10. பிரசன வியாக்கரண சங்கம். இது ஒரு தலைக் கருத்து ஒருமைக் கொள்கை, ஆறுபொருள் என ஏழு தத்துவங்களை விளக்குவது.

11. விபாக சூத்திர அங்கம் நல்வினை, தீவினைகளால் எற்படும் விளைவுகளை விளக்குகிறது.

12. திருட்டிவாத அங்கம். இஃது பரிகர்மம் சூத்திரம் பிரதமானு யோகம். பூர்வம் மற்றும் குளிகை என்ற ஐம்பது பிரிவுகளையுடையது.

பகவான் மகாவீரரின் வழிவழி வந்த துறவு வீரர்கள் இயற்றிய அறநூல்கள் யாவும் பன்னிரண்டாம் அங்கத்தின் ஐம்பெரும்

பிரிவுகளுக்குள் ஒன்றான பதினான்கு பூர்வங்களில் தொகுக்கப் பட்டு நம்மிடையே உலா வருகின்றன.

மகாவீரர் முக்தி அடைந்த நாளில் அவர் கணதரர் கேவலஞானம் பெற்று 12 ஆண்டுகள் விளக்கி உள்ளார். அவர் வீடுபேறடைந்த அன்று ஜம்பு ஸ்வாமி வரம்பில் அறிவு பெற்று 38 ஆண்டுகள் அறம் பரப்பினார். 62 ஆண்டுகளுக்கு பிறகு விஷ்ணு, நந்தி, மித்திரர், அபராஜிதர், கோவர்த்தனர், பத்திரபாகு ஆகிய ஐவர். 100 ஆண்டுகள் அறம் வளர்த்தார்கள். அவர்களுக்கு பின் பன்னிரண்டு அங்கங்களில் நான்கு பூர்வங்களை தவிர்த்து பிறவற்றை கூறிவந்தவர்கள். விசாகாச்சாரியார், க்ஷத்திரியர், ஜயசேனர் விஜயர், புத்திலிங்கர். தேவர் தரும சேனர். நாகசேனர் சித்தார்த்தர் தருமசேனர் ஆவார். அவருக்கு பின் 180 ஆசாரிய பரம்பரையினர் சமணத்தை சார்ந்து அறம் வளர்த்த கதைகள் பல வாழ்கின்றன.

தென்தமிழ்நாட்டில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் ஆகியவைகளே தொண்டை மண்டலமாகும். தொண்டையர் என்னும் அரசமரபினர் ஆட்சி செய்த பகுதியானதால் தொண்டைநாடு அல்லது தொண்டை மண்டலம் எனப்பட்டது.

சங்ககாலத்தில் தொண்டை மண்டலம் பற்றி செய்தியில்லை. தொல்காப்பியர் தமிழ்நாட்டை 12 பகுதிகளாக காட்டுகிறார். இதுவே 13 மண்டலங்களாக அல்லது பகுதிகளாக பிரிக்கப்பட்டு இருந்தது என்பதை நன்னூல் விருத்தி மூலம் அறிய முடிகிறது.

புனல் நாட்டுக்கு வடக்கில் இருந்த நாடு அருவா நாடு. அருவா நாட்டிற்கு வடக்கில் இருந்த நாடு அருவர் வடதலை அல்லது வடஅருவா நாடு. அரு மரபினரை கரிகாலன் காடுகளை அழித்து குடியமர்த்தியதாக பெரும்பாறை படையில் காணப்படுகிறது. அவ்வாறு உருவாககிய நாடு 24 கோட்டங்களாக பிரிக்கப்பட்டது. அவை புழல், புலியூர், ஈக்காடு, மணவூர், செங்காடு, பையூர், எய்யில், தாமல், உளத்துக்காடு, செம்பூர், ஆமூர், ஈத்தூர், வெண்குன்றம், பல்குன்றம், இளங்காடு கலியூர், சிறுகரை, பருவூர்கடிகை, செந்திருக்கை, குன்றப்பட்டிரை, வேங்கடம் வேலூர் என்பன.



32. நீலகேசி - ஓர் ஆய்வு

கலைமாமணி கல்லாடன், புதுச்சேரி.

சமய நிலை

பண்டைத் தமிழர் வாழ்வு பண்பட்ட வாழ்வு; சீரும் சிறப்பும் வாய்ந்த வாழ்வு; உலகுக்கே அன்பையும் அறத்தையும் மானுடத்தையும் வழங்கிய வாழ்வு. இப்பண்பாட்டு நெறியே அந்நாளைய சமய நெறியாக விளங்கியது. அச்சமய நெறிக்குப் பொருள் நெறி மரபு துணைநின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரம் இதனை அகம், புறம் என்னும் பொருள் நெறியால் உணர்த்தி நிற்கின்றது; இருப்பினும், நிலங்களுக்கு உரிய தெய்வங்களையும் சுட்டிச் செல்கின்றது.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்' *(தொல் – பொருள்)*

ஓது சமயங்கள் பொருள் உணரு நூல்கள் எழுந்தன. பண்டைய வைதீக சமயம் சைவ வைணவ சமயங்களாகக் கிளைத்தது. பின்னர் பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் புகுந்தன. இவை புதிய சமயங்களாதலால், வரவேற்கவும் பெற்றன. எனினும் பகையும் பூசலுமற்ற சமயப்பொறை நிலவியது.

களப்பிரர் ஆட்சி சமய நிலையிலும் இருண்மையை ஏற்படுத்தியது. களப்பிரர்க்குப் பின்னர், தமிழகத்தில் ஒரு விழிப்பும் எழுச்சியும் ஏற்பட்டது.

சமயங்கள் மீண்டும் செல்வாக்குப் பெறுவதற்குப் போட்டியிட்டன. சைவ வைணவங்களுக்கு எதிராகப் பௌத்தமும் சமணமும் போட்டியிட்டன. பௌத்தமும் சமணமும் தமக்குள்ளே முரண்பட்டுப் பகைத்து நின்றன.

இந்தச் சூழ்நிலையில் சமயம் சார்ந்த காவியங்கள் எழுந்தன. அவை தாம் சார்ந்த சமயநெறிகளை வலியுறுத்தின; புறச்சமயங்களின் கொள்கைகளை எதிர்த்தன. இவ்வாறு சமயப் பிணக்குகள் அதிகரித்தன. இப்பிணக்குகளுக்கு நெய்யூற்றி தூபம் ஏற்றிய முக்கிய காவியங்கள் குண்டலகேசியும் நீலகேசியுமாகும்.

குண்டலகேசியும் நீலகேசியும்

குண்டலகேசி ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று; சமணத்தை ஒடுக்கி பௌத்தத்தை நிறுவ எழுந்த காப்பியம்.

நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று; குண்டலகேசியின் தாக்குதலை முறியடிக்கத் தோன்றிய எதிர்நூல்; சமணத்தை நிறுவ வீறுகொண்டு எழுந்த நூல்.

நீலகேசி காப்பியம்

நூலின் பெயர், 'நீலகேசி' யாப்பருங்கல விருத்தி இந்நூலை **நீலம்** எனவும் **நீலகேசி** எனவும் சமய திவாகர உரை, இதை **நீலகேசித்திரட்டு** என்றும் குறிக்கின்றன.

திரட்டு என்னும் சொல் சேர்ப்பு தொகுப்பு சுருக்கம், மொழிப்பு எனப் பொருள்படும். நீலகேசிக் காப்பியம் ஒரு தொகுப்பாகவோ, சுருக்கமாகவோ, பொழிப்பாகவோ தோன்றவில்லை. அது ஒரு முழுமையான நூலாகவே உள்ளது. எனவே **'நீலகேசித் திரட்டு'** என்று இந்நூல் குறிக்கப்பெறுவது கருதுகைக்குரியது.

இக்காப்பியத்தின் முதலாவது சருக்கம்; தருமவுரைச் சருக்கம். அதன் ஈற்றயல் பாடல் (என். 148), **'சினவரன் நெறி தெருட்டென்றான்'** என முடிகின்றது **'தெருட்டு'** எனில் **தெளிவித்தல்** எனும் பொருள்படுகின்றது. மேலும் தெருட்டு எனும் சொல் நூலில் பலவிடங்களில் பயிலப்படுகின்றது. எனவே இந்நூல் **'நீலகேசித் தெருட்டு'** என்றும் அழைக்கப்படுகின்றது.

குண்டலகேசி, சுருள்குழல் உடைய நங்கை. அப்பெயரில் எழுந்த காவியம் 'குண்டலகேசி', இந்நூல் அதனை எதிர்நிறுத்தி எழுந்த காவியமாதலால், 'நீலகேசி' - அதாவது கார்குழல் - எனப் பேர் பெற்றுள்ளது எனலாம்.

குண்டலகேசி, பிங்கலகேசி; அஞ்சனகேசி, காளகேசி முதலிய நூல்கள் தருக்க நூல்களாக உள்ளன. இந்நூலும் தருக்க நூலாதலால், அதே முறையில் 'நீலகேசி' என்னும் பெயரில் வழங்குவதாகவும் கொள்ளலாம்.

பழையனூர் அம்மனைத் தேவாரப் பதிகங்கள் 'வண்டார் குழலி' என்று குறிக்கின்றன.அப்பழையனூர்க் காளியே நீலியாகி, அந்நீலியே, நீலக்குழலாள் - நீலகேசி எனச் சமணர்களால் காவியத்தில் அமைக்கப் பெற்றுள்ளதாக ஒரு கருத்து.

காப்பியக் கதை

பாஞ்சால நாட்டு மன்னன் சமுத்திரராசன். அவன் நகரினை அடுத்து ஒரு பிணக்காடு, அதன் பெயர் **பலாலயம்**; அது பேய்கள் நிரம்பிய காடு. அக்காட்டில் ஒரு பிடாரி கோயில். அக்கோயிலில் **முனிசந்திரன்** என்ற சமணத்துறவி தங்கி இருந்தார்.

ஒரு நாள் ஒருசிலர், காளிக்குப் பலியிடுவதற்கு ஆடுகளைக் கொணர்ந்தனர். அருள் நிரம்பிய அத்துறவி இதனைக் கண்டு

உளம் துடித்தார். தம் அருளுரையால் பலி கொடுத்தலை விலக்கினார். அம்மக்களை நல்வழிப்படுத்தினார்.

அக்காட்டுப் பேய்களுக்கு ஊன் உணவு இல்லாமல் போயிற்று; எனவே அவை சினமுற்றன. முனிவரை விரட்டத் துணிந்தன. அதற்காகப் பழையனூர் நீலியாகிய நீலகேசி என்னும் பேயிடம் முறையிட்டன. நீலகேசி முனிவரை அச்சுறுத்தினாள்.

மன்னன் மகள் காமலேகை. நீலகேசி இம்மங்கையின் உருவங்கொண்டு முனிவரை மயக்கிட முனைந்தாள், அவர் தவநிலையை அழிக்கத் துணிந்தாள். முனிவர் இதை உணர்ந்து கொண்டார்; தம்மை அண்டி நிற்பது பேய் மகள் என்று கண்டார்; அவளுக்கு அறமுரைக்கத் தொடங்கினார்.

அறவிய மனத்தினை யாகி
அலங்கழித் தொழில் ஒழிந்து அடங்கி
உறவினை ஓம்பினை இரு என்ற
உயர்தவன் உரைத்தலும் இருந்தாள் *(பாடல். 74)*

முனிவர் அவளுக்குப் பல நல்லுரைகளை வழங்கினார். ஐயறிவுயிர்களின் தன்மையை விளக்கினார்; மக்களின் நிலையைக் கூறினார்; விலங்குறு துயர் விரித்தார்; உயிரில் பொருளாலும் உயிராலும் வரும் துன்பங்களைக் காட்டினார். பிணிக்குரிய மருந்துகள் சொன்னார். இவ்வாறு 'அறவியான் தானம் அற அமிர்தம் ஈந்தான்' (127)

நீலகேசி நெகிழ்ந்தாள், தன் பொய் உருமாற்றி மெய்உரு ஏற்றாள். தான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருள வேண்டினாள்.

காய்வ செயினும் குழவிக்கண்
கவன்று கழிகண் ணோட்டத்தால்
தாய்தன் முலையில் அமுதூட்டும்
தகையன் அறவோன் தானென்று
மாயஉருவம் மாறித்தன்
மற்றை உருவ மேகொண்டு
பேயேன் செய்த பிழையெல்லாம்
பெரும பொறுவென்(று) இறைஞ்சினாள் *(பா. 134)*

முனிவர் தேற்றுரை செய்து நீலகேசிக்குக் கழுவாய் கூறினார்; 'நீ செய்த தீவினை கெடும்படி நாட்டிலெங்கும் அருகன் நன்னெறியைக் கூறித் தெளிவிப்பாயாக!' என்றார்.

செய்த தீமை கெடக்கெட நாட்டில்
சினவரன் நெறியே தெருட்டு என்றான் *(பாடல் 148)*

அதுகேட்டு நீலகேசி அருகன் திருக்கோயிலை அடைந்தாள்.

முனிவரின் ஆணையைத் தலைமேற் கொண்டாள், அருகன் நன்னெறி பரப்ப நின்றாள்.

முன்னர் குண்டலகேசியோடு வாதிட்டு அவளை வென்றாள். பின், குண்டலகேசியின் ஆசிரியரான அருக்க சந்திரனையும் மறுத்து சமண சமயத்தைத் தழுவச் செய்தாள்.

அருக்கசந்திரன் ஆசிரியர் மொக்கலன், நீலகேசியிடம் தோல்வியுற்று அவள் அன்பினால் அருக சமயத்தைச் சார்ந்தான்.

நீலகேசி புத்தன் இருந்து அறங்கூறும் கபிலபுரம் சென்றாள். அங்கும் புத்தனின் கூற்றையெல்லாம் மறுத்தாள். அருக சமய அறங்களை அறிவுறுத்தினாள்.

அருகனின் நல்லறப் பணியினைத் தொடர வடநாடு சென்றாள். அங்குப் பூரணன் என்பான் வாதங்களை மறுத்து 'அருகன் அறநெறி நின்றுய்ம்மின்!' என அறிவுறுத்தினாள்.

அடுத்து பராசரன் என்னும் சமயாசிரியனையும் மறுத்து அவனை அருகநெறிக்கு ஆட்படுத்தினாள்.

பின்னர் உலகசித்து, பூதிகன், பிசாசிகன் முதலான சமயவாதிகளை வென்று அவர்களை அருகநெறி பற்றி வாழச் செய்தாள்.

இவ்வாறு நீலகேசி எங்கும் சென்று நல்லறம் கூறி நலம் பெருகச் செய்தாள் என்று காவியக் கதை கூறுகிறது.

நீலி பற்றிய வேறுகதைகள்

நீலி அல்லது நீலகேசி பற்றிப் பல்வேறு கதைகள் வழங்குகின்றன. பழையனூர் நீலகேசி என்றும் குறிக்கப்படுகிறது. பழவூர் நீலி, பழைய நல்லூர் நீலி என்றும் சொல்லப்படுகின்றது.

நீலி ஒரு பெண் பேய்; மனிதர்களே அன்றி மிருங்களுக்கும் தொல்லை கொடுத்து வந்தது. தேவர்களுக்கும் தாளமுடியவில்லை; இவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டனர். விஷ்ணு சிவன் உதவியைக் கோரச் சொன்னார். இவர்கள் சிவனை நாடினர்.

நீலியோ பார்வதியால் ஆதரிக்கப் பெற்றவள். எனவே, சிவன் நேரடியாக அவளிடம் மோதாமல், ஒரு நாட்டியப் போட்டி வைத்தார். நீலி சிவனுக்குச் சமமாக ஆடினாள். எனவே சிவன் காலைத் தூக்கிச் சுழன்று ஆடினார். அதைச் சந்தநடனம் என்பர்.

நீலி பெண் ஆனதால், தேவர்கள் முன் காலைத் தூக்கி நாட்டியம் ஆடமுடியவில்லை; அவள் தோல்வியை ஏற்றுக்கொண்டாள். பழையனூர்க் காளியே இந்நீலி என்று இத்தலத்தின் ஸ்தலமகாத்மியம் கூறுகிறது.

திருஞானசம்பந்தரும் நீலி வரலாற்றை, 'முனைநட்பாய் வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகை கேட்டு

ச.12.

அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே' என்று தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் நீலிக்கதை விரிவாகச் சொல்லப்படுகிறது. அக்கதை:

ஒரு பார்ப்பனன் தன் மனைவியுடன் இனிதே வாழ்ந்து வந்தான்; பரத்தையர் தொடர்பால் வறியவன் ஆனான். அவன் மனைவி தன் பெற்றோர் இல்லம் சென்றுவிட்டாள்.

பார்ப்பனன் மனைவியிடம் நயமாகப் பேசிக் குடும்பம் நடத்த அவளை அழைத்தான்; அவளும் நம்பிச் சென்றாள். அவனோ வழியில் அவள் நகைகளைப் பறித்துக்கொண்டு, அவளைக் குழந்தையுடன் கிணற்றில் தள்ளிக் கொன்றுவிட்டாள்.

பார்ப்பனன் மறுபிறப்பில் வணிகன் மகனாகப் பிறந்தான். தொழிலின் பொருட்டுப் பழையனூர் வந்தான். அவனை எதிர்பார்த்திருந்த நீலியாகிய பேய், முன்னர் மாண்ட அவன் மனைவியின் பழைய வடிவங் கொண்டது. குழந்தையுடன் அவனைத் தொடர்ந்து, பழையனூர் அறவோர்பால் முறையிட்டு வாழ்வளிக்க வேண்டியது.

வணிகன் மறுத்தான்; அவள் பேய் என்றுரைத்தான்; என்னைக் கொன்றுவிடும் என்றான், சான்றோர் உறுதி கூறினர், அவளை ஏற்றுக்கொள்ளும்படித் தேற்றினர்.

அச்சான்றோர்களின் கூற்றுப்படி வணிகன் நீலியை ஏற்றான். நீலியோ அவனை அன்றிரவே கொன்றுவிட்டு மறைந்தாள். அறம் உரைத்த வேளாண் மக்கள் எழுபதுபேரும் தம் வாய்மை காத்தற் பொருட்டு, தீயிற்பாய்ந்து உயிர் நீத்தனர்.

இந்த நீலியே நீலகேசிக் காப்பியத் தலைவியாக ஏற்றுக் காட்டப் பெறுகிறாள் என்று சொல்லப்படுகிறது.

இன்றும் கூட திருவாலங்காட்டுப் பழையனூரில் நீலிகதை வழக்கிலுள்ளது. அங்குள்ள கிணறு ஒன்றில் உடன் இறந்த முதலியார்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை பராந்தகச்சோழன் காலத்தவையாகும். எனவே பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நீலிக்கதையின் பதிவினைக் காணமுடிகிறது.

இன்னொரு கதையை, ரத்னகிரந்தக ஸ்ராவகாச்சாரம் என்னும் சமண இலக்கியம் பேசுகிறது.

நீலி ஒரு வணிகன் மகள்; சமண மதத்தைச் சார்ந்தவள். மற்றொரு வணிகள் மகன் அவளைக் கண்டான், காதலுற்றான் அவனோ பௌத்த மதத்தைச் சார்ந்தவன். எனினும், பொய்கூறி அவளை மணந்தான்.

புகுந்தவீடு வந்த நீலி ஏமாற்றப்பட்டதை அறிந்தாள், எனினும் இல்லறத்தில் இருந்தாள், தன் சமணக் கொள்கையில் நின்றாள்.

ஒரு நாள் வீட்டுக்கு வந்த புத்தத்துறவி ஒருவருக்கு விருந்து வைத்தனர். விருந்துக்குப் புலால் உணவு சமைக்கும்படி நீலி வற்புறுத்தப்பட்டாள். அவள் துறவியின் காலணி ஒன்றினை அரிந்து கறியாகச் சமைத்தாள். துறவி சுவைத்து உண்டு மகிழ்ந்தார். பின்னர் இது தெரிய வந்தது.

இச்செயலால் நீலி கற்பிழந்தவள் என்ற இடித்துரைக்கப் பட்டாள். அதற்காக அவள் மிகவும் கவன்றாள். ஒரு தேவதையின் உதவியால் தன் கற்பை நிறுவினாள்.

இப்படி நீலி பற்றிப் பல்வேறு கதைகள். ஒரு கதையில் பேய்ப்பெண் வருகிறாள், ஒருகதையில் சமணப்பெண் வருகிறாள், எந்தக் கதையும் காப்பியம் காட்டும் நீலகேசிக்குப் பொருந்தாத கதையாக உள்ளது.

ஆசிரியரே தாம் கனவில் கண்டதைப் புனைந்துக் கூறுவதாக உரைக்கிறார். சான்றோர் இந்நூலைப் பயிலா உரை என்று வெகுளாமல் விட வேண்டுகிறார்.

பண்டு ஆகமத்துள் பயிலா உரை என்று மிக்கார்
விண்டு ஈங்கு இதனை வெகுளார் விடல் வேண்டுவன்யான்
தண்டாமரைமேல் நடந்தான் தடம்தாள் வணங்கிக்
கண்டேன் கிடந்தேன் கனவின்இது கண்டவாறே. *(பாடல் 3)*

நூலாசிரியர்

இக்காப்பியத்தின் நூலாசிரியர் பற்றிய எச்செய்தியும் கிடைத்தில. ஆசிரியர் ஆழ்ந்த சமணசமயப் பற்றாளர் என்று தெரிகிறது. அவர் நீலகேசி மூலம் ஓதும் வாதங்கள் புத்த மதத்தையே நிலைகுலையச் செய்கின்றன.

இந்நூலின் உரையாசிரியர் சமயதிவாகர வாமன முனிவர். அவரும் நூலாசிரியர் பற்றி எச்செய்தியும் உரைத்திலர்.

நூலின் காலம்

காப்பியத்தில் (Ajivakar) ஆஜீவகர் பற்றியக் குறிப்பு வருகிறது. ஆஜீவகர் சக்ரவர்த்தி நயினார், தேவார காலத்திற்கு முற் பட்டவர் என்பதால், நீலகேசியின் காலத்தை கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 5-ம் நூற்றாண்டுக்குள் வகுத்துரைக்கி றார் (தஞ்சைத் தமிழ்ப்பல்கலைப் பதிப்பு)

பெருமழைப்புலவர் சோமசுந்தரனார் (கழகப்பதிப்பு) இந்நீலகேசி மகேந்திரவர்ம பல்லவன் காலத்திற்கு அணித்தாக ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம் என்று கருதுகிறார்.

மணிமேகலை, நாலடியார், சீவகசிந்தாமணி, குண்டலகேசி முதலான நூல்களைக் கருத்தில் கொண்டு, எஸ். வையாபுரியார் இதன் காலம் ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகாது என்று துணிகிறார்.

நீலகேசியில், தொல்காப்பியம், திருக்குறள், நாலடியார், சீவகசிந்தாமணி முதலான நூல்களின் பாக்கள் ஆளப்பட்டுள்ளன. மேலும் இந்நூல் குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்தது. எனவே, இந்நூல் இவற்றிற்கெல்லாம் பிற்பட்டதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

நாலடியார் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது; திருத்தக்க தேவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டினர். எனவே நீலகேசியின் காலத்தை 10ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

காப்பிய நோக்கம்

நீலகேசிக் காப்பியம் ஒரு சமய நூல், தருக்க நூல், தத்துவ நூல், அறிவியல் விளக்க நூல் என்னும் பல சிறப்புகளும் பொதுவிய நூலாகும்.

இக்காப்பியத்தின் முதன்மையான நோக்கம் சமண சமய ஒழுக்கங்களை முற்றாக உலகுணரச் செய்தலும் பௌத்தம் முதலான சமயங்களை ஒடுக்குதலுமாகும்.

ஊன் கொடுமை தவிர்த்தல், உயிர்க்கின்னா செய்யாமை, அரவு அறியா வாய்மை, கோறல், பொய்த்தல், கொடுங்களவு நீக்கிப் பிறன் மனைகண் மேற்சேறல் இன்றிச் செழும் பொருள்மேல் சிந்தை செலுத்துதல் (பாடல் 40) இன்னோரன்ன அறநெறிகளை உணர்த்தலுமே காப்பிய நோக்கமாகும்.

குண்டலகேசிக் காப்பியம் அருக சமயத்தைப் பற்றிக் கூறிய குறைகளுக்குத் தீர்வும், குற்றங்களுக்கு மாற்றும் பழிப்புகளுக்கு மறுப்பும் காட்டுதல், அருக சமயத்தின் மேன்மையை நிலைநாட்டுதல் முதலியனவும் காப்பியத்தின் நோக்கங்களாக உள்ளன.

காப்பிய அமைப்பு

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை புத்தமதக் காப்பியம்; காப்பியத் தலைவி சமயக்கணக்கர்களை அணுகி சமயக் கொள்கைகளைக் கேட்டு அறிகிறாள் எனக் காண்கிறோம். அவள் வேறு சமயத்தாரோடு சொற்போர் புரியக் காணோம். காவியத்துள் சமணரைப் பழித்தலைக் காண்கிறோம்.

குண்டலகேசியும் ஒரு பௌத்த காப்பியம். அதில் சமயப்போர் வெளிப்படையாகவே தொடங்கிவிடுகிறது; குண்டலகேசி சமணத்தை எதிர்த்து வாதுபுரிகிறாள். சொற்போர் நிகழ்த்துகிறாள்.

நீலகேசிக் காப்பியம் முழுக்கமுழுக்க ஒரு சொற்போர்க் களமாகத் திகழ்கிறது. காவியம் முழுதும் வாதங்கள் நிறைந்துள்ளன. தருமவுரைச் சருக்கம் தவிர்த்து மற்றைய ஒன்பது சருக்கங்களும் வாதச் சருக்கங்களாகும். ஆசிரியர், பௌத்த சமயத்தை மறுப்பதற்கு மட்டும் நான்கு சருக்கங்களை (பிரிவுகள்) வகுத்துக் கொண்டுள்ளார். அஜீவகம் முதலான ஏனைய ஐந்து சமயங்களுக்கும் ஐந்து சருக்கங்களே வகுத்துள்ளார்.

894 பாடல்களைக் கொண்ட இந்நூல், காப்பியத்திற்கே உரிய கடவுள் வாழ்த்து, பதிகம், நாட்டுச்சிறப்பு, நானிலச்சிறப்பு, செங்கோல் வேந்தன் மாண்பு, நகரச்சிறப்பு, நகை, இனிவரல், மருக்கை போன்ற சுவைகள் முதலிய கூறுகளைக் கொண்டு முழுக்காப்பியமாகத் திகழ்கிறது.

இந்நூல் தத்துவமும் வாதமும் கலந்ததாகையால், மற்ற காப்பியங்கள் அளவிற்கு இதன்பால் இலக்கியச்சுவை இல்லை என்றாலும், இதில் எடுத்துவைக்கும் வாதங்கள், மாற்றாரையும் பிணிக்கும் வெற்றி, அவர்களைத் தன்வயமாக்கும் திறம் முதலியன நூலின் ஒவ்வொரு சருக்கத்திலும் காப்பிய நயத்தைக் காட்டிச் செல்கின்றன.

காப்பியப் பயன்

நீலகேசிக் காப்பியம் ஓர் அருள்நெறிக் காப்பியம் எனலாம். உயிர்க்குலம் அனைத்தும் இன்பமுற விழையும், உயிரிரக்க உணர்வை ஊட்டும் காப்பியம் என்பதனைக் கடவுள்வாழ்த்துச் செய்யுள் நிறுவுகிறது. **'உயிர்கட்கு இடர்தீர்ந்து உயர் இன்பம் ஆக்கும் சொல்லான், தருமச் சுடரான்'** (பாடல் 1) என்னும் போதே அருகனின் பெருமை தெரிகிறது, அவன் பொதுமை புரிகிறது, அருள் உணர்வு நிறைகிறது.

அப்படியும் உயிர்க்குலங்கள் துன்பமுறுகின்றன என்றால் அத்துன்பம் தீர்வதற்கு **நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம்** என்னும் மும்மருந்தைக் காப்பியம் வழங்குகிறது. (பாடல் 116)

சிந்தனைக்குச் சில...

இக்காப்பியம் இப்படிப் பல சிறப்புகளைக் கொண்டிருந்தாலும், அதன் கதைப்போக்கும் மாந்தரின் பண்புநலனும் குறையாக உள்ளன.

நீலி ஒரு பேய் பெண், அவள் முனிவரின் அருளுரையால் தவப் பெண்ணாகிறாள்; சமயப்பேரறிவு கொண்டு அருக சமயத்தை நிலைநாட்ட எழும் புரட்சிப் பெண்ணாகக் காட்சி தருகிறாள். அவள் ஒரு புதுமைப் படைப்பு! அப்படி ஒரு பெண் இருந்தாளா? ஐயமே! ஆனால் இப்படி ஒரு வலிய பெண்மூலம், தம் சமய வலிமையை நிறுவ ஆசிரியர் முனைந்துள்ளார்.

புத்தர் ஒரு மாபெரும் சமயத்தை நிறுவிய பேரருளாளர். அவரை எதிர்த்து நீலகேசி வாதிடுவதாகவும் வெல்வதாகவும் காப்பியம் காட்டுகிறது. இஃது ஏற்புடைத்தோ? ஆசிரியரின் கற்பனை சமயப் பொறையையே தகர்க்கிறது.

பொதுவாக நூலின்கண் காணப்படும் வாதங்களும், சொற்போர்களும் நயன்மையாக இல்லை. வாதிடுவோரையும், பிறசமயத்தையும் இகழ்தல், நகையாடுதல் பழித்துரைத்தல் போன்ற குறைகள் உள்ளன. விழுமிய பொருளில் பழகுமொழியில் பயிலப்பெற வேண்டிய அறவுரைகளும், அருள்நெறிகளும் இப்படிக் குறைபடுகின்றன. நூலாசிரியரின் சமயவெறியின் உந்துதலே இதற்குக் காரணம் எனலாம்.

மதமாற்றச் செயல்கள் அன்றே தீவிரமாக நிகழ்ந்துள்ளன என்பதைக் காப்பியம் காட்டுகிறது.

பெரும்பாலும் அழிந்தொழிந்த குண்டலகேசி காப்பியம் நீலகேசியால் ஓரளவு விளக்கம் கூறுகிறது. நூல் முழுதும் கிடைத்திருந்தால்.....'

குண்டலகேசி என்னும் பெருங்காப்பியம் நீலகேசி என்னும் சிறுகாப்பியம் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்துள்ளது.

குண்டலகேசியின் ஒரு சில செய்யுள்களே கிடைத்துள்ள நிலையில், நீலகேசி காப்பியம் முழுமையாகக் கிடைத்துள்ளது, சற்றே மகிழ்வளிக்கிறது; நீலகேசி எப்படியோ காப்பாற்றப்பட்டுவிட்டாள்!

இயற்கையின் அழிவாலும் செயற்கையின் கொடுமையாலும் நம் இலக்கியக் கருவூலங்கள் அழிவுறாமல் அப்படியே கிடைத்திருப்பின்...! எண்ணும்போதே நெஞ்சம் பெருமிதத்தில் விம்முகிறது. இனியேனும் காப்போமாக.



13. காணக்கிடைக்காத காப்பியங்கள்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்.

தமிழ் இலக்கியம் பழைமைச்சிறப்புடையது. பரந்த நோக்குடையது. பண்பு அமைந்த பெட்டகமாவது. பல நாடுகளின் பன்மொழிப்புலமையாளர் தம் பாராட்டுக்குரியது. போற்றுதற்குரியது. இது என்று பிறந்தது என்றுரைக்க முடியாமல் இதயம் விம்மச் செய்யும் விந்தையுடையது.

பிற்காலத்து நூலோர் பழஞ்சிறப்புடைய பண்டைய நூல்களைப் பகுத்தும் தொகுத்தும் பார்த்து மகிழ்ந்தனர். அதையே மிகப் பிற்காலத்தார் தொடந்து போற்றி வருகின்றனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென் கீழ்க்கணக்கு, அகநானூறு, புறநானூறு என்ற பெருந்தொகை, ஐம்பெரும் காப்பியங்கள் என்றவாறு வகைப்படுத்தி வழங்குவதாயிற்று. தமிழ் இலக்கியங்களின் நெடிய வரலாற்றில் ஐம்பெருங்காப்பியங்கள் என்னும் வழக்கு நிலைபெற்று வருகிறது.

வடமொழியாளர்களும் 'பஞ்சகாவியம்' என்று வழங்கும் மரபு உள்ளதென்பர். தமிழ் ஐம்பெருங்காப்பியங்கள் என்னும் வழக்கு இருப்பதைக் கூறுகிறது ஒரு பழம் பாடல்,

சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்
கந்தா மணிமேகலை புனைந்தான் – நந்தா
வளையாபதி தருவான் வாசவனுக்கு ஈந்தான்
திளையாத குண்டல கேசிக்கும்

இப்பாடலில் முதலில் குறிக்கப்பெறுவன மூன்று.1.சிந்தாமணி, 2. சிலப்பதிகாரம், 3. மணிமேகலை என்பன நம் கண்ணிற் காணவும், கற்கவும், துய்த்து இன்புறவும் கிட்டியுள்ளன. மற்ற இரு நூல்களான வளையாபதி, குண்டலகேசி என்பன இதுவரை முற்றாகக் கிடைக்கவில்லை என்று கற்றோர் கவலையுற்றுக் கழறுகின்றனர்.

யாப்பருங்கலம் எனும் இலக்கண நூலில் கடவுள் வாழ்த்துப் பாடலாக வருவதெனக் கூறப்பெறும் பாடல் ஒன்றுண்டு.

உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமாண்
திலகமாய திறல் அறிவன் அடி
வழுவுஇல் நெஞ்சொடு வாலிதன் ஆற்றவும்
தொடுவல் தொல்வினை நீங்குக என்றுயான்

என்பதாகக் கூறுவர் முன்னோர்.

பெரும் புலவரும் பெரும் உரையாசிரியருமான நச்சினார்க்கினியர் மேற்கண்ட பாடல் வளையாபதி காப்பியத்தினுடையது என்று குறித்துள்ளார். இதனையும் கற்றோர் போற்றி வருகின்றனர்.

புறத்திரட்டு என்பதொரு நூல். அதில் 66 பாடல்கள் வளையாபதி நூலினை சேர்ந்ததென்று கூறப்பட்டுள்ளது. எழுபத்திரண்டு பாடல்கள் என்றும் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

வளையாபதி

திருக்குறள் பாடல்களை எடுத்தாளும் பான்மையை அறிஞர் எடுத்துக் காட்டுவர். அதனால் திருக்குறளுக்குப் பின்னர் தோன்றியதே வளையாபதி காப்பியம் என்பர். இக்காலத்தில் இச்சமயத்தார் எங்கும் பரவலாக வாழ்வதைக் காணலாம். சமணசமய வரலாற்றுச் சின்னங்களும் தடங்களும் எங்கும் காட்சியாய் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

பழைமையான சங்கப்பாடல்கள் சுருங்கக் கூறும் சொற்சித்திரங்கள்; தனிச் செய்திகள். காப்பியங்களோ பிற்காலக் கதைப் படைப்புகளாக பெருகி எழுந்தவை. சமயங்களைப் பரப்பும் சதுரப்பாடுகளாகச் சமைந்தவை.

உலகவாழ்வு நிலையற்றது என்பது பழைய அருகசமயம். உயிர்வாழ்தல் கடவுள் என்னும் பெரும்பதம் நோக்கிச் செல்வதற்கே என்பது அச்சமயக்கொள்கை. சான்றோர் பலர் சர வரிசையில் சமணத்தைக் காத்து வந்தது வரலாறாய் விளங்குகிறது.

நிலையற்ற பொருள்களை நினையாமல் விலகி வாழச் சொல்வதே சமயநெறி. அன்பும் அறமும் வாழ்வில் நிலைக்கச் சொல்வது சமயம்.கல்வியும் ஒழுக்கமும் கண்ணெனஓம்புமாறு வழிகாட்டுவது அருக சமயம். உயிர் ஓம்புதல், உணவு உதவுதல் அவர்களின் உயர்ந்த உயிர்வாழ்வுத் தொண்டாகும். நல்வினை, தீவினைகள் என்று பாகுபடுத்திப் பண்பட்ட வாழ்வைப் பகர்வது அருகநெறி. வளையாபதி சமணக் காப்பியம் என்கின்றனர். எனினும் சிவன் பற்றிய கருத்துகளடங்கிய செய்யுள்களும் உள்ளன. முழுக்கதையிருந்தால் சிவக்கதை பற்றிய செய்திக்கு விடை தெரிந்திருக்கும் துண்டுப்பாடல்களால் தொடர்கதை தெரிய வாய்ப்பில்லை. சமயச்சாரமும், நிலையாமையும் தெரிவது மட்டும் வெளிப்படை.

நாகாத்தல் நன்று. இன்றேல் சொல்லிழுக்குப்பட்டுச் சோர்வர் என்பார் திருவள்ளுவர். அதனையே வழிமொழியும் பாடலைக் காண்கிறோம்.

ஆக்கப் பகுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத்து உய்ப்பிக்கும்
காக்கப் படுவன இந்தியம் ஐந்தனுள்
நாக்கல்ல தில்லை நனி பேணு மாறே.

வளையாபதியில் நிலையாகக் கூறும் கூற்றும் காணத்தகும். நல்லோர் விலக்க வேண்டியவற்றை நல்லதொரு பட்டியலே தரப்பட்டுள்ளது.

பொய்யன்மின் புறங்கூறன்மின் யாரையும்
வையன்மின் வடிவல்லன சொல்லி நீர்
உய்யன்மின் உயிர்கொன்று உண்டு வாழுநாள்
செய்யன்மின் சிறியாதொடு தீயன்மின்
வித்தின்றேல் விளைவுண்டா?

என்று வினா எழுப்பி விடை கூறுதலைப் பார்க்கிறோம்.

உய்த்து ஒன்றி ஏர்தந்து உழஉழுது ஆற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குறல் என் ஒக்கும்
மெய்த்தவம் இல்லான் பொருளோடு போகங்கட்கு
எய்த்து உழந்தேதான் இடர்படு மாறே

முற்பிறவிப்பயனே இப்பிறவியில் கிட்டும் எனும் கருத்து இங்கே வலியுறுத்தப் பெறுவதை அறிகிறோம். பிறர்க்கு துன்பம் தராமல் பெரிது வந்து நன்மை புரியுமாறு பேசுகிறது சமணசமயம். இதனை விளக்கும் பாடல்களே இதுவரை கிடைத்துள்ளன. அவை எழுபத்திரண்டும் கற்கக் கற்கச் சுவையும் பயனும் தருவன. கல்வியுலகம் இதனைத் தமிழ்ச் செல்வம் எனப் போற்றி வருகிறது.

குண்டலகேசி

இந்தியத் துணைக்கண்டம் என்னும் பெரும் நிலப்பரப்பில் வடபுறம் பழைமைச் சான்றோரால் பிறந்ததென்பர். சமண சமயத்தை அடுத்த காலத்தில் கௌதம புத்தரால் தொடங்கிய இயக்கமே பௌத்தம் என்பர். கொலையுடன் கூடிய வேள்வி சார்ந்த பலமுனைகள் உடைய வேதங்கள் கொண்ட தேவ வழிபாட்டை ஏற்காத நிலையில் புதியவழி கண்டாராம் புத்தரான கௌதம சித்தார்த்தர். தென்னகம் அறியாத தெய்வ வழிபாட்டு முறைகள் வடபாலிருந்து பரவலாயின. அவா அறுத்தல், புலனடக்கம், அமைதியுடன் வாழ்தலே புத்த சமயம் புலப்படுத்திய நெறிகள். தொடக்க நிலையே தொடர்தல் என்பது எங்கும் எதிப்பார்க்க இயலாததாகவே வரலாறு காட்டுகிறது. அன்பும்

அறநெறிகளும் கொண்டு அளவற்ற அவாக்களை அணுகாமல் தூயநெறியில் தொண்டாற்றத் தூண்டின புத்தரின் அறிவுரைகள். எண்ணற்ற விளக்கங்கள் காலப்போக்கில் கூடலாயின. புத்த சமயத்தைப் பரப்பும் வகையில் புனையப் பெற்ற காப்பியக் கதையே குண்டலகேசி என்பர் கற்றறிந்தோர்.

பத்தொன்பது செய்யுள்களே பார்வைக்கு கிடைத்ததாய் பழம் புலவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதனையே இலக்கிய வரலாறாக ஏற்று வருகிறது தமிழுலகம்.

போர்த்தல் உடை நீக்குதல் பொடித்துகள் மெய்பூசல்
கூர்த்த பனி ஆற்றுதல் குளித்து அழலுற நிற்றல்
சார்த்தர் இடு பிச்சையர் சடைத்தலையர் ஆதல்
வார்த்தை இவை செய்தவம் மடிந்து ஒழுகல் என்றான்

என்பதொரு எழிற் பாடல். வேடம் புனைதலை வெறுக்கச் சொல்லும் கருத்தைக் காண்கிறோம். மனித உடலைப் பொய்யானதென்றும், ஒரு நாற்றம் கொண்டதென்றும், புனையும் வழிகளால் ஆவதொன்றுமில்லை என்றும் பாடல்கள் நிலையாமையை நினைப்பூட்டுகின்றன. மனிதகுலம் ஒத்த நிலையுடையதென வரையறுத்தது புத்தசமயம். அதை வகை வகையாய் வரைந்து காட்டிய கதைகளே சமயம் பரப்பும் சாலைகளாயின. அரசமரத்தின் கீழமர்ந்து அறிவொளிகண்ட அன்பு வழி வளர்ச்சிப் போக்கில் வாதங்களால் பின்னலிட்டது. வாக்குவல்லார் வளப்படுத்தும் வழிமுறையாய் வாய்த்தவையே கதைப்படைப்புகள். குண்டலகேசியும் ஒரு பெண்துறவியின் வாழ்வும் விளக்கவுரையும் என்பர். மணிமேகலைக் காப்பியமும் அதனைப் பாங்குறப் படைத்துக் காட்டியது. இவ்வழியில் குண்டலகேசி எனும் காப்பியமும் தோன்றியதாகலாம். எனினும் முழுதும் கிடைக்காதது பேரிழப்பே. குற்றமின்றி வாழக் குண்டலகேசியில் ஒரு செய்யுள்,

மண்ணுளார் தம்மைப் போல்வார்
மாட்டதே அன்று வாய்மை
நண்ணினார் திறத்தும் குற்றம்
குற்றமே நல்ல ஆகா
விண்ணுளார் புகழ்தற்கு ஒத்த
விழுமியோன் நெற்றி போழ்ந்த
கண்ணுளான் கண்டம் தன்மேல்
கறையை யார் கறையன்று என்பார்

ஆதலும் அழிதலும் பற்றிய அரியதொரு பாடலும் காண்கிறோம்.

மறிப மறியும் மலிர்ப மலிரும்
பெறுப பெரும் பெற்று இழப்ப இழக்கும்
அறிவது அறிவாக அழுங்கார் உவவார்
உறுவது உறும் என்று உரைப்பது நன்று.

மணிமேகலையில் உள்ள புத்தசமயச் சாரமும், புத்தனின் வழியில் வளர்ந்த வேகமும் குண்டலகேசியிலும் இருந்திருக்க கூடும். இதனைக் கிடைத்துள்ள சில பாடல்களே சான்று கூறுகின்றன எனலாம். பல சமயக் சார்போடு பின்னிப் பிணைந்து வளர்ந்து செழித்த தமிழ்மொழியின் சொற்செல்வங்கள் அனைத்தும் அழியாமல் கிடைத்திருந்தால் மேலும் பல இன்ப நிலைகள்பெற்றிருப்போம். சமயம் பேசுவன எல்லாம் மனித வாழ்வறம் வளர்ப்பதை யாரும் மறுப்பாரிலர்.

செந்தமிழ்ச் செல்வங்களின் பட்டியலில் சிறப்பிடம் பெற்று விளங்கும் சிந்தாமணியும், சிலம்பும், மேகலையும் கண்டு நெஞ்சார உண்டு மகிழ்கிறோம். வளையாபதியும், குண்டலகேசியும் காப்பியங்கள் எனும் விருதுகளோடு விளம்பப்படுவதையும் மறவாமல் போற்றி வருகிறோம்.

அன்பும், அறவழிகளும் பாடிப் பண்படுத்தும் தமிழ்க் காப்பியங்களும் மனித குலத்துக்கு ஒளி வழிகாட்டி உயிரூட்டி வருவதே கண் கண்ட வெற்றி. ஐம்பெருங்காப்பியங்கள் ஐம்புலன்களையும் நெறிப்படுத்தும் அரிய உயிர்ச் சத்துக்ளாகும். அருகநெறியும் - புத்தர் வழியும் அன்பு வாழ்வில் நடத்தி இன்ப நிலையில் இறுத்துமாக!



34. காலமாற்றத்தினால் ஏற்பட்ட கண்ணன் வரலாறு

புலவர் முத்து எத்திராசன், சென்னை.

முன்னுரை

நேமிநாதர் 22 வது தீர்த்தங்கரர். இவர் கண்ணனுக்குப் பங்காளி முறையில் தம்பியாவார். கண்ணனுடைய உடன் பிறந்த அண்ணன் வாலியோன் எனப்படும் பலராமன் ஆவான். இவ்விருவரும் நேமிநாதரின் உறவு என்பதை முன்னிட்டும் அல்லாமல் அக்காலத்தில் வடநாட்டுச் சமயமான சமணம் ஓங்கியிருந்ததால் அவ்விருவரையும் சமணர்கள் முதலில் போற்றினார்கள். அப்படிப் போற்றப்பட்ட சமணர்கள் தமிழ்நாட்டில் தம் சமயத்தைப் பரப்ப வந்தபோது அவ்விருவர் வரலாறுகளும் தமிழ்நாட்டில் வழங்கலாயின. அதனால் அவ்விருவரும் கடவுளாக தமிழர்கள் கருதி வழிபட்டனர். அப்படி வழிபட்ட கடவுளர்களாக புறநானூற்றின் மூலம் நாம் கண்டோம். இப்படியாக வழிபட்ட பலதேவன், கண்ணன் வழிபாடுகள் தொடர்ந்தது. காலப்போக்கில் கண்ணனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. காரணம் கண்ணன் மகாபாரதத்தை நடத்தி வைத்த வீரன் என்பதால் வீரவழிபாட்டிற்கு (நடுகல்வழிபாடு) முக்கியத்துவம் கொடுக்கும் தமிழர்கள் கண்ணனை மிகவும் போற்றலாயினர். அதே சமயம் சமணர்கள் பலராமனைப் போற்றலாயினர். காரணம் பலராமன் ஒழுக்கச்சீலனாக இருந்தான் என்பது தான். அத்துடன் கண்ணன் பல பெண்களின் பால் தொடர்பு கொண்டவன் என்ற கருத்து மேலோங்கியதால் காமத்தை வெறுக்கும் சமணர்கள் கண்ணனை அவ்வளவாக ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனால் கால ஓட்டத்தில் கண்ணன் தமிழர்களின் வழிபடும் தெய்வமானான். இதையேதான் தொல்காப்பியர் மாயோன் மேய என்ற வரியில் முல்லை நில தெய்வமாக நமக்கு காட்டுகிறார். அப்படிப்பட் நிலையில் பலதேவன் மட்டும் சமணர்களால்ர போற்றப்பட்டு வந்திருக்கின்றான். இவ்விருவரையும் சிலப்பதிகாரம் காலத்தில் மாறுபட்டுள்ளதைக் காணலாம்.

முதலில் சிவனும் அடுத்து கண்ணனும் மூன்றாவதாக பலதேவனும் நான்காவதாக முருகனும் வணங்கப்பட்டு வந்ததை,

'நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவ லுயர்ந்த ணியமமும்

மேழி வலனுயர்ந்த வெள்ளை நகரமும்
கோழிச சேவற் கொடியோன் கோட்டமும்'

(சிலம்பு: ஊர் காண் காதை, 7 - 10)

என்னும் வரிகளால் அறிகின்றோம். இதன் மூலம் பலதேவனின் வழிபாட்டை இறுதியாகத் தமிழ்நாட்டினர் வழங்கி வந்தனர் என்பதற்குச் சான்று. அதன் பின் பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடலின் மூலம்அறிவதால் அதற்கு முன்னரே பலதேவன் வழிபாடு தமிழ்நாட்டில் மறைந்து விட்டது என்பதாகும். இது பல்லவர் காலத்தில் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்பு உண்டு. பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியதால் தமிழ்நாட்டில் சமணம் வீழ்ச்சியுற்றது. அதன்மூலம் சமணர்கள் போற்றி வந்த பலதேவன் வழிபாடும் தமிழர்களிடையே மறையலாயிற்று.

மாமல்லபுரத்தில் கற்றளிகளை, குடைவரைக் கோயில்களை உருவாக்கிய பல்லவன் மகேந்திரவர்மனால் உருவாக்கிய கிருஷ்ண மண்டபத்தில் உள்ள புடைப்புச் சிற்பத்தில் கண்ணன் உருவத்தை விட பலதேவனை மிகவும் சிறப்புறக் காட்டப்பட்டதிலிருந்து இதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரை அமைந்துள்ளது. விரிவு கருதி சுருங்கக் கூற வேண்டிய அவசியத்தால் சொல்ல வந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் முடியாமல் போய்விட்டது. மேலும் கண்ணன் சங்க காலத்தில் கருணையுள்ள இடையர் குலத்தலைவன் என்பதாகக் காட்டப்பட்டுள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

"செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுந் தெளிந்த நெய்யும்
உறியொடு வாரியுண்டு குருநதொடு மருதமுந்தி
மறிவிழி யாயர் மாதர் வளைதுகில் வாரு நீரால்
பொறிவரி யரவினாடும் புனிதனும் போலு மன்றே"

என்னும் இப்பாடல் கம்பராமாயணம் பாலகாண்டம் ஆற்றுப் படலத்தில் உள்ள பதினைந்தாம் பாடலாகும். இப்பாடலானது மழை பெய்ததால் சரயு நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற காட்சியை மிக அழகாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பரால் வருணிக்கப்படுவதாகும் அவ்வருணனை வருமாறு,

முல்லை நிலத்தில் ஆற்றின் நீர் பெருகியோடி ஊரினுள் புகுகிறது. அப்படிப்புகுந்த நீர் ஊரினுள் புகுந்து அங்குள்ள வீட்டில் உள்ள பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை உறியோடு வாரியெடுத்து உட்கொண்டும் குருந்தமரத்தையும் மருதமரத்தையும முறித்துத் தள்ளியும் இவற்றோடு நில்லாமல் இடைச்சிகள் அணிந்த ஆடைகளைக் கவர்ந்தும் செல்கின்றது. இச்செயல் யமுனை நதியில்

கண்ணன் செய்த திருவிளையாடலைப் போன்று இருந்தது என்பதாம். இப்பாடலில் உள்ள 'குருந்தொடு மருதமுந்தி' என்னும் சொற்றொடருக்குக் கண்ணன் ஆயர் பெண்களின் ஆடைகளைக் கவர்ந்த வரலாற்றை உரைகாரர் எடுத்துக் காட்டுவார்.

மேலும் நீலநிற வண்ணனை சங்க இலக்கியங்கள் மாஅல், கார்வண்ணன், மணிவண்ணன், நெடியோன் என்று கூறும். அவ்வாறே சீவகசிந்தாமணி கருமை நிறமுடைய கண்ணனை நீலநிற வண்ணன் என்று கூறியுள்ளது. ஸ்ரீ பாகவதமோ கிருஷ்ணன் என்று வடமொழி சொல்லால் அழைக்கிறது. இதில் பலராமனைப் பற்றி கூறாததால் பலராமன் வழிபாடு சிலப்பதிகார காலம் வரை இருந்துள்ளதையும் பின்னால் அவ்வழிபாடு இல்லை என்பதையும் இதன் மூலம் அறிகின்றோம்.

கி.பி. 7, 8 - ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆழ்வார்களும் பலதேவன் வழிபாட்டை எடுத்துக் கூறவில்லை. அதற்குப் பதிலாக பலதேவனை வசுதேவன் என்றும் வசுதேவன் கண்ணனுக்குரிய பெயர்களுள் ஒன்று என்றும் கருதிய காரணத்தால் கண்ணனாகிய மாஅல் சமணர் போற்றி வணங்கும் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் களுள் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரரான நேமிநாதர் என்பவருக்கு தாயாதி முறையில் வந்த அண்ணன் எனவும் ஒவ்வொரு தீர்த்தங்கரர்களுக்கும் பலராமர், வாசுதேவர், பிரதிவாசுதேவர்கள் என்பவர்கள் இருக்கின்றார்கள் என்றும் அவிரோதி ஆழ்வார் என்னும் சமணப்புலவர் தாம் நேமிநாதரைப் பற்றி பாடிய 'திருநூற்றந்தாதி' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் பாடிய திருவெம்பாவை என்னும் நூலில் உள்ள பதினாறாவது செய்யுளாலும் இதனை அறியலாம். அச்செய்யுள் வருமாறு,

"பிறவிப் பெருங்கடலை நீந்திய பெய்வளையாய்
உறவுத் தமர்வாழுச் சந்தவாழ் மலைமேல்
அறமிகவுஞ் செய்யும் அம்மை அடியிணைகள்
நறைமிக்க பூவணையால் நல்கிப் பொழிந்தேத்திக்
கறவைத் திரள் காத்த கார்வண்ணனுக்கிளையான
நிறைமிக்கநேமிசினன் நின்பதங்கள் தாம்பாடித்
திறமுற்ற மாமுனிவன் சீரருளா லெங்கும்
நிறையப்பொழியுமழையேலோ ரெம்பாவாய்"

– *திருவெம்பாவை*

சிலப்பதிகார காலத்திலும் கண்ணன் யமுனை ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த ஆயர் மகளிரின் ஆடைகளை மறைத்து வைத்து விளையாடினான் என்று கருதும்படி உள்ளது. கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவை மூலம் ஓரிரு வரிகளில் இக்கதையை நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

"தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
அணிநிறம் பாடுகேம் யாம்
இறுமென் சாய னுடங்க நுடங்கி
அறுவை யொளித்தா னயர வயரும்
நறுமென் சாயன் முகமென் கொயாம்"

இங்குக் கூறப்படும் 'தொழுனைத் துறைவன்' என்பது யமுனையாற்றுத் துறையை உடைய மாயவன் (கண்ணன்) என்பதாகும். இப்பொழுது கடைச்சங்க நூல்களுள் ஒன்று திரிகடுகம் என்பது. அதை இயற்றியவர் நல்லாதனார் என்னும் புலவர். இவர் கண்ணனைத் தாம் வணங்கும் இறைவனாகக் கருதியதால் அந்நூலின் கடவுள் வாழ்த்தாகப் பாடியுள்ள பாடலில் கண்ணனைப் பூவண்ணனாகக் கூறி பாடியுள்ளார்.

"கண்ணகல் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் – நண்ணிய
மாயச் சடகம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி"

என்பது அப்பாடல்.

கண்ணன் துவராபதி (துவாரகை) க்குத் தலைவனாக வாழ்ந்தான் என்பது வரலாறு. அதுவும் அவன் பஞ்சபாண்டவர்க்குத் துணையாக இருந்து நூற்றுவரை அழித்தான் என்பது இதிகாச நூலான மகாபாரதத்தில் அறியப்படும் செய்தி. இச்செய்தியை நம் முன்னோர் அறிந்திருந்தனர் என்பதை ஆங்காங்கே சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம்.

"– – – – – – – – – – – – – – – வடா அது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
புன்றலை மடப்பிடி உணீஇயர் அங்குழை
நெடுநிலை யாஅம் ஒற்றி" –அகநானூறு, 59

இதைப்பாடியவர் மதுரை மருதனிள நாகனார் ஆவார். இப்பாடலின் பொருள் "தமிழ்நாட்டின் வடக்கில் உள்ள வற்றாத நீர்வளம் கொண்டுள்ள யமுனை ஆற்றின் நெடிய மணலையுடைய அகன்ற நீர்த்துறையில் நீராடிய ஆயர் மகளிர் தழையை ஆடையாக உடுத்துக் கொள்ள கரையிலுள்ள மரத்தின் கிளை வளையும் படி காலால் மிதித்துத் தந்த மால்(கண்ணன்)" என்பதாகும்.

பாண்டவர், நூற்றுவர் சண்டையைப் பற்றிய வரலாறு நடந்த காலம் கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதாக அதனை ஆய்ந்தவர் கூறுகின்றனர். எனவே பாரதத்தில் வரும் கண்ணன் அக்காலத்தவன் என்பது உறுதி. அவ்வரலாறு பற்றிய உண்மை செய்திகள் சில நூற்றாண்டுகள் வரை இருந்திருக்கும். அதன் பிறகு

காலப்போக்கில் பல புனைகதைகள் சேர்க்கப்பட்டு அது பெரிதாகி விடும். அப்படி பெரிதாக வளராத காலத்தில் கூறப்பட்ட பாரதக் கதையில் உள்ள உண்மைகளில் ஒன்றாகத்தான் மருதனிளநாகனார் நமக்கு எடுத்துக் கூறியுள்ளார். இதன் மூலம் அவருடைய காலம் சற்றேறக்குறைய பாரதப்போர் நடந்த ஐந்நூறு ஆண்டுகளுக் குள்ளாவது இருந்திருக்க வேண்டும். ஆகவே அவருடைய காலம் கி.மு. ஆயிரம் என்று கருதுவதில் தவறில்லை.

இப்போது கண்ணன் என்று தமிழிலும், கிருஷ்ணன் என்று வடமொழியிலும் வழங்குவதற்கான காரணத்தை ஆராய்வோம். கண்ணன் நிறம் கருப்பு. பலராமன் நிறம் வெள்ளை. கருப்பு நிறத்தையுடையவர்கள் ஆணாக இருந்தால் மாயோன் என்றும், பெண்ணாக இருந்தால் மாயோள் என்றும் பொதுப்பெயராக அழைக்கப்பட்டுள்ளதை சங்க இலக்கியங்களின் வாயிலாகக் காண்கிறோம். மாயோன் என்ற சொல்லைத் தொல்காப்பியம் 'மாயோன் மேய காடுறை உலகம்'என்று முல்லை நிலக் கடவுளாக கண்ணனை எடுத்துக் கூறியுள்ளதைக் கொண்டு அறிகின்றோம். மாயோன் என்று கூறியதுடன் கார்நிற வண்ணன், கார்மேகவண்ணன் என்றும் கூறினர். இவற்றிலுள்ள கார் என்னும் சொல் மழையைத் தரும் கரிய நிற மேகத்தை குறிப்பதால் கரிய என்னும் சொல் கார் என ஆனது. ஆகவே தான் மழைக்காலத்தை சங்கஇலக்கியங்கள் கார்காலம் என்றே குறிப்பிட்டன.

இப்போது கண்ணனின் அண்ணன் பலராமன்பெயர்க் காரணத்தைக் காண்போம். புறநானூற்றில் உள்ள 56 ஆம் பாடலை பாடியவர் மதுரைக்கணக்காயனர் மகனார் நக்கீரனார். இவர மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனான இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய பாண்டியன் நன்மாறன் என்பவனைப் பற்றிக் கூறுகையில் அக்காலத்தில் தமிழ் மக்களால் வணங்கப்பட்ட கடவுள்களான சிவன், பலராமன், கண்ணன், முருகன் ஆகியோரின் திறத்திற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இவர்கள் நால்வரும் உலகங்காக்கும் கடவுளர்கள் ஆவர். இவர்களில் முதலாவதாக கூறப்படும் சிவன் கூற்றத்திற்கு (யமன்) ஒப்பானவன். இரண்டாவதாகக் கூறப்படும் சங்கின் நிறத்தை (வெண்மை)யுடைய பலராமன் வலிமை யுடையவன். மூன்றாவதாகக் கூறப்பட்ட நீலமணி போன்ற நிறத்தையுடைய மாயோன் பகைவரை வென்றதால் புகழ்பெற்றவன். நான்காவதாகக் கூறப்பட்ட செய்யோனாகிய (சிவந்த நிறமுடையவன்) முருகன் கருதியதை முடிக்கும் திறத்தை உடையவன். இப்படிப்பட்ட நால்வர்களுடைய திறமும் ஒருங்கே படைத்தவன் பாண்டியன் நன்மாறன் என்று கூறியுள்ளார். இப்பாடலின் வாயிலாக நாம் அக்காலத்து மக்கள் வணங்கிய கடவுளர்கள் இந்நால்வர் என்பதுடன் கண்ணனின் அண்ணன் பலராமனை வாலியோன் என்றும், சங்கினை போன்ற வெண்மை நிறத்தை உடையவன் , பனைமரத்தைக் கொடியாகவும், நாஞ்சில் எனப்படும் ஏர்க்கலப்பையைக் கருவியாக உடையவன் என்றும் கூறியுள்ளார்.

மேலும் சிவனுக்கு அடுத்து பலராமனை வைத்துள்ள காரணத்தால் அவன் கண்ணனை விட மிக உயர்வாக அக்காலத்தில் மக்களால் கருதி வணங்கப்பட்டான் என்பது தெளிவாகிறது. வெண்மை நிறம் கொண்டவன் என்பதால் பலராமனை வாலியோன் என்று பெயரிட்டனர். சிலப்பதிகாரம் இந்திரவிழா எடுத்த காதையில் காணும் பதினேழாம் வரி வால்வளைமேனி வாலியோன்' என்று பலராமனை வெள்ளை நிற சங்கு போன்ற மேனியை உடையவன் வாலியோன் என்று விளக்கமாகக் கூறியுள்ளதைக் காணலாம். வால் என்றாலும் பால் என்றாலும் வெண்மை. இதையொட்டியே பால்நிறவண்ணன் என்று முல்லைக்கலி நான்காவது வரியும் 'பால் அன்ன மேனியன்' என்று நெய்தற்கலியும், 'பால்நிற வண்ணன்' என்று சீவகசிந்தாமணியும் கூறுகின்றன.

பால்நிற வண்ணன் என்பதைப் பரிபாடலில் உள்ள இரண்டாம் பாடலைப் பாடிய கீரந்தையார் திருமாலை நோக்கிக் கூறுவதாக உள்ள பாடலில்,

"நீயே நினது பிறப்பு முறை ஒன்றையே கருதிச் சங்கின் நிறத்தை ஒத்த வெண்ணிறமுடையோனாகிய பலதேவனுக்கு இளையவன் (கண்ணன்) என்று" கூறியுள்ளார். இப்பாடலில் பலதேவன் என்று வாலியோனைக் குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். எனவே இவர் காலத்தில் பலதேவனை வாலியோன் என்று வழங்கியுள்ளனர். இச்சொல் பால்வண்ணன் என்பதன் திரிபு எனலாம். பலதேவன் என்றால் தேவர்கள் பலர் என்று பொருளாவதால் வாலியோனைக் குறிக்க பலதேவன் என்று வழங்கினர். பின்னர் பலராமன் என்று வழங்கவும் செய்தனர். பலராமன் என்று சீவக சிந்தாமணி, கலித்தொகை போன்ற நூல்களுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியார் வழங்கிய காரணத்தால் அந்நூல் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு என்பதால் அதற்குப் பிறகு பலராமன் என்ற வழக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்யவேண்டியுள்ளது.

அண்ணனை பால்வண்ணன் என்றும், தம்பியை மால்வண்ணன் என்றும் வழங்கியிருக்கவேண்டும். மால்வண்ணன் என்ற சொல் இலக்கியங்களில் வழங்கப்படவில்லை எனினும் மாலவன் என்னும் சொல்லைக் கொண்டு ஊகிக்க வேண்டியுள்ளது. ஆனால் மால் என்ற சொல் அகநானூறு குறிப்பிடுவதால் பால் என்பதற்கு ஒப்புமையாக மால் என்று வழங்கியுள்ளனர். மால் என்ற இச்சொல் 'திரு' என்ற அடைமொழி பெற்று திருமாலாகியது. கடைசியில் திருமாலை முதன்மையாக வைத்து அதற்குப் பிறகு பத்து அவதாரங்களைக் கூறி வைணவர் உலகம் வழங்கி வருகிறது.

35. மேல்சித்தாமூர் மடத்து ஓலைச்சுவடிகள்

ச. கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

சித்தாமூர் என்ற பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன. சிற்றாமூர் என்ற பெயரே சித்தாமூர் என மக்களால் அழைக்கப்படுகிறது. சிறிய ஆமூர் என்பதே சிற்றாமூர் ஆகும். நல்லாமூர், ஆமூர் என்ற பெயரில் சில ஊர்கள் உள்ளன. விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டத்தில் ஓர் ஆமூரும், திருக்கோவலூர் வட்டத்தில் ஓர் ஆமூரும் உள்ளன. திருக்கோவலூர் ஆமூர் ஆன்மூர் என்று முன்பு வழங்கப்பட்டுள்ளது. நல்லாமூர் போல் கொண்டாமூர் என்ற பெயரில் ஓர் ஊர் உண்டு. ஆமூர் என்ற பெயரில் கோட்டமும் முன்பு இருந்துள்ளது. திண்டிவனம் வட்டத்தில் கிளியனூர் அருகில் கீழ்ச்சித்தாமூர் உள்ளது. செஞ்சி வட்டம் வல்லம் அருகில் மேல்சித்தாமூர் உள்ளது. காட்டுச்சித்தாமூர் என்ற பெயரில் செஞ்சி - திருவண்ணாமலை பாதையில் ஓர் ஊர் உள்ளது. திருவண்ணாமலை வட்டம் மங்கலம் அருகில் மலைச்சித்தாமூர் என்றபெயரில் ஓர் ஊரும், அச்சரப்பாக்கம் அருகே ஒரு சித்தாமூரும் உள்ளது.

நாகை மாவட்டத்தில் ஒரு சித்தாமூர் உண்டு. தொண்டை மண்டலத்தில் சித்தாமூர் என்ற பெயரில் பலஊர்கள் இருந்துள்ளன. இவற்றுள் செஞ்சி வட்டம் வல்லம் அருகில் உள்ள மேல்சித்தாமூர் சமண சமயத்தின் தலைமை ஊராக இருந்து வருகிறது. இங்குள்ள சமணப்பள்ளிகள் முற்காலச் சோழர் காலத்தது ஆகும்.சோழர் காலத்தில் மேல்சித்தாமூர் ஊரானது சிங்கபுரநாட்டுக் கீழ்வழியில் சித்தாமூராக இருந்துள்ளது.

விஜயநகர வேந்தர் இரண்டாம் தேவராயர் ஆட்சியில் மேல்சித்தாமூர் ஊரானது மகாபிரதானபெருமாள் தேவதண்ட நாயக சதுர்வேதி மங்கலம் என அழைக்கப்பட்டது. செஞ்சியை ஆட்சிபுரிந்த பிரதானி பெருமாள் தேவதண்டநாயகம் ஆவார். மேல்சித்தாமூர் சித்திநகர், சித்தை,சிற்றை, சத்தநகர் என்றேல்லாம் வழங்கப்பட்டன.

அப்பாண்டைநாதருலா என்ற நூல் சிங்கபுரி என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறது. சிங்கபுரம் (தற்போதுள்ள சிங்காவரம்) என்ற பெயரின் அடிப்படையில் சிங்கபுரி ஏற்பட்டிருக்கலாம். சிங்கபுரநாடு முன்பு இருந்துள்ளது. செஞ்சிப்பகுதி சிங்கபுர நாடாகும்.

மேல் சித்தாமூர் கோயில்கள்

மேல்சித்தாமூரில் பழைய சமணசமயப்பள்ளி அல்லது கோயில்கள் இரண்டுள்ளன. இவ்விரண்டில் மலைநாதர் கோயில் ஆதித்த சோழனுடைய ஆட்சியின் போது கி.பி. 888 - இல் தோற்றுவிக்கப்பட்டது. இதனைப் பாறைச்சிற்பக் கோயிலாகவும் குறிப்பிடலாம். இயற்கையாய் அமைந்த பாறைகளைச் சரிசெய்து சமண தீர்த்தங்கரர்களுடைய உருவங்களைச் செதுக்கியுள்ளனர்.கோமதீசுவரர், பார்சுவநாதர், ஆதிநாதர், மகாவீரர், அம்பிகாயக்ஷி ஆகியோருடைய உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக மலைக்கோயிலில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இச்சிற்பங்களை உள்ளடக்கி ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் காட்டாம்பள்ளி என்று முன்பு வழங்கப்பட்டது. கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட இக்கோயில் 12 - ஆம் நூற்றண்டு வரை மகோன்னத நிலையில் இருந்ததை இங்குள்ள சாசனங்கள் வாயிலாக அறிகிறோம்.

மலைக்கோயில் அல்லது மலைநாதர் கோயில் நாளடைவில் மல்லிநாதர் கோயில் என அழைக்கப்பட்டது. உண்மையில் மல்லிநாதருக்காக எடுக்கப்பட்ட கோயில் இதுவன்று. மற்றோர் கோயில் பார்சுவநாதருக்கு எடுக்கப்பட்ட கோயிலாகும். இங்கு ஏழு அடுக்கு கோபுரமும் உண்டு. மேல்சித்தாமூரில் பதினைந்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1163 - 1179) ஆட்சியின் போது சிற்றாமூர்த் திருவூராம் பள்ளியாழ்வார் என்று இறைவன் பெயர் கூறப்படுகிறது. முதலாம் ஆதித்தன் காலத்தில் காட்டாம் பள்ளியில் ஒத்துரைக்கும் மண்டபம் கோயிலில் இருந்துள்ளது. காடவர்கோன் மகளும் சோழனின் மனைவியுமான தேவியர் அளித்த நன்கொடை குறித்த பாடல் கல்வெட்டும் உள்ளது.

மேல்சித்தாமூரில் உள்ள சமணமடம் ஜினகாஞ்சி மடம் என்றழைக்கப்படுகிறது. எப்போது முதல் இப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது என்று கூறுவதற்கில்லை. விஜயநகர மன்னர் ஆட்சியின் போது இவ்வூர் அடங்கிய செஞ்சிப்பகுதியை வேங்கடபதிநாயக்கர் ஆண்டார். இவர் சமணர்களுக்குப் பல இடையூறுகளைத் தந்தார். இதனால் சிலர் மதம் மாறினர். சிலர் வேற்றூர் சென்றனர். திண்டிவனம் வட்டத்தில் உள்ள உப்புவேலூர் என்ற ஊரைச்சேர்ந்த சமணப்பெரியார் ஒருவர் சிரவணபெலகோலா சென்று நோன்பிருந்து சமண நெறியைப் பரப்ப மீண்டும் தமிழகம் வந்தார். அவர் பெயர் வீரசேனாச் சாரியார். மெக்கன்சி தொகுப்பு MSSII sec.2 சித்தாமூரில் மடத்தை இவரே தோற்றுவித்தார் என்று கூறுகிறது. மெக்கன்சியின் தொகுப்பு MSS II sec 5 பெருமண்டூர் சமணப்பள்ளியில் உள்ள ஓவியத்தில் வீரசேனாச்சாரியார் சமண மடம் ஏற்படுத்திய

விவரமுள்ளது.பெருமண்டூரில் வாழ்ந்த சமணர் மேல்சித்தாமூர் சமண மட வேலையை மேற்கொள்ள உடனே சென்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

மெக்கன்சி காஞ்சிபுரத்தில் ஜினகாஞ்சிமடம் இருந்து அழிந்ததாகவும் அதுவே மேல்சித்தாமூரில் ஏற்படுத்தப்பட்ட தாகவும் கருதுகிறார். காஞ்சியில் இருந்த தத்தாச்சாரியரை உப்புவேலூர் வீரசேனாச்சாரியார் வாதில் வென்றதாகவும் கருதப்படுகிறார்.வீரசேனாச்சாரியார் சொந்த ஊரிலேயே மாண்டார். செஞ்சியருகே உள்ள தாயனூரில் இருந்து வந்த சமணர்களே மேல்சித்தாமூரில் மடம் கட்டியதாகவும் கூறுவர்.

வீரசேனாச்சாரியருக்குப் பின்னர் வந்த மடாதிபதிகளில் சிலருடைய பெயர்களை மெக்கன்சியின் தொகுப்பில் காண்கிறோம். இவர்களில் தீரைவித்யா சக்கரவத்தி எனும் முனிபத்ர தேவாச்சாரியார் முக்கியமானவர் எனலாம். கி.பி. 1816 - இல் கர்னல் மெக்கன்சி இவரைச் சந்தித்திருக்கிறார்.

கி.பி. 1865 - இல் அபிநவஆதிசேன பட்டாரகர் மடாதிபதியாக இருந்து கோயிலின் கோபுரத்தைக் கட்டியுள்ளார். இவரையடுத்துக் குழந்தைசுவாமி, விமலநாதசுவாமி, அப்பாவுசுவாமி முறையே மடாதிபதியாக அருளாட்சி செய்துள்ளார்கள். கி.பி. 1915 - இல் அப்பாவுசுவாமியே சிறிதாக இருந்த மடத்தைத் தற்பொழு துள்ளவாறு பெரிதாகக் கட்டியுள்ளார். இம்மூவரும் உப்பு வேலூரைச் சார்ந்தவர்களே ஆவர்.

அப்பாவு சுவாமியை அடுத்து சக்கரவர்த்தி சுவாமி அவருடைய மைந்தர் சமுத்திரவிஜய சுவாமி முறையே மடத்தின் தலைவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் அகலூர் என்ற சமண சமய ஊரைச் சார்ந்தவர்கள். சமுத்திரவிஜயசுவாமிக்குப் பிறகு வந்தவாசி வட்டம் எறும்பூரைச் சார்ந்த சந்திரகீர்த்தி சாஸ்திரி பட்டத்திற்கு வந்தார். இவரையடுத்து தச்சூரைச் சார்ந்த ஸ்ரீபாலவர்ணி சுவாமி மடாதிபதி பொறுப்பை ஏற்றார். இப்பெரியவர் இளமையிலேயே மைசூர் அருகேயுள்ள சிரவண பெலகோலாவிற்குச் சென்று சமண சமய சாத்திரங்களைத் தெளிவாக கற்றறிந்து வந்தார். இவருக்குப் பின் சக்கரவர்த்தி மடத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் வளத்தி என்ற ஊரைச் சார்ந்தவர் . அரசு பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின்னர் மடாதிபதியானவர்.

1979 - இல் தஞ்சை மாவட்டத் தொல்லியல அலுவலராகப் பணியற்றிய காலத்தில் மேல்சித்தாமூர் மடத்தில் உள்ள ஓலைச்சுவடிகளையும் கோயில்களையும் ஆய்வு செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. மடத்தில் ஓலைச்சுவடிகளை ஆய்வுசெய்தபோது 200 க்கும் மேற்பட்ட தமிழ்,கன்னடம், சமஸ்கிருதம், கிரந்தம் எனப் பன்மொழிச்சுவடிகள் இருந்தன. 19 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த

கர்னர் மெக்கன்சி இங்கிருந்த ஓலைச்சுவடிகள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தாலும் முழுமையாகத் தெரிவிக்க வில்லை.

எனது ஆய்வில் சுவடிகளின் பெயர்கள், அளவுகள், எழுதியவர்கள், சுவடியில் பிரதி செய்தவர்கள், எழுதப்பட்ட வருடங்கள் போன்றவற்றை எழுதி ஒரு பிரதியை மடத்திற்கும் மற்றோர் பிரதியை தொல்லியல் துறைக்கும் கொண்டு சென்று பதிப்பிக்கப்பட்ட விவரங்களை ஆய்வு செய்தேன். தஞ்சை சரஸ்வதி மகால் ஓலைச்சுவடிகளின் பட்டியல் மற்றும் சென்னை அரசினர் கீழ்திசை சுவடிகளின் பட்டியல் இந்த ஆய்விற்கு உதவியாக இருந்தன. வடமொழிப்பண்டிதர்களும் பதிப்பித்த விவரத்தை அறிய உதவி புரிந்தனர். பல சுவடிகளில் எழுதியவர்களின் பெயர்களையும் காலத்தையும் காண்கிறோம். சில சுவடிகளின் கட்டைகளில் வண்ண ஓவியங்களும் சமண சமயத் தீர்த்தங்கரர்களின் உருவங்களும் அமர்ந்து ஓலைச்சுவடி எழுதும் பலகைகளும் மற்றும் சமணத்துடன் தொடர்புடைய உருவங்களும் உள்ளன. ஓலைச்சுவடிகளின் சுருக்கத்தை மட்டும் இங்கே காண்போம்.

1.	புராணம்	-	மகாபுராணம் போன்றவை.
2.	காவியங்கள்	-	சத்ரசூடாமணி, முனீஸ்விரதம், பார்சுவாப்யுதம் சந்திரபிரபா காவியம், நாககுமாரகாவியம்,
3.	வியாக்கரண நூல்கள்	-	சத்தாயனம்,கௌமாரம், அமரம், தனஞ்செயம்.
4.	தர்க்க நூல்கள்	-	அஷ்டசகஸ்ரீ, கமல மார்த் தாண்டா, நியமணி தீபிகை, நியாயகுமுத சந்திரிகா, நியாய மார்த்தாண்டா, தர்க்கபரிபாஷா, லகுவிருத்தி, பிரமேய ரத்னமாலா.
5.	ஆசாரவிதி நூல்கள்	-	யதியாசாரம், ஸ்ராவகசாரம், சபானஸாரம், ஆத்மானுஸாரம், த்ரைவர்ணிகா, சினசம்கீதா, ஏகஸந்தி, ரத்னகரண்டம்.
6.	கதைகள்	-	தர்மபரிக்ஷா, ஹரீவம்சா, புண்யஆஸ்ரவ கௌமுதி.
7.	அஷ்டநூல்கள்	-	விருஷ்யநாத அஷ்டகம், சந்திர நாத அஷ்டகம், நேமிநாத அஷ்டகம், பார்சுவநாத அஷ்டகம், அகளங்க அஷ்டகம், பாகுபலிநாத அஷ்டகம், வீரநாத

அஷ்டகம், சமவசரணாஷ்டகம்,
த்ரஷ்டாஷ்டகம், நேமிச்சந்திர
அஷ்டகம், ஜெயமாலை,
சசிகஸா மந்தபத்ரம், தண்ட
நாதஸ்துதி, புஷ்பாஞ்சலி, சக்தி
முத்தாவளி, சகஸ்ரநாமம்.

இவைகள் அன்றி பூஜாங்கவிதி, கிரியாவந்தனை, பக்தாமரம், வைத்யஸாஸ்திரம், த்ரைலோகஸாரம், கோமடஸாரம், ஸப்திஸாரம், பராப்ருத்திரையா திரிபங்கி, அலிபத்ரி பங்கி, ப்ரரூபனை, சத்திசம் போன்ற கிரந்த சுவடிகள் உள்ளன.

தமிழ்நூல்களில் சீவகசிந்தாமணி, சூடாமணி, நீலகேசி, மேருமந்திரம், நேமிநாதம், யசோதர காவியம், திருக்குறள், நாலடியர், உதயகுமாரகாவியம், கலிங்கத்துப்பரணி, மண்டல புருஷ நிகண்டு, சினேந்திரமாலை, உள்ளமுடையான் போன்ற நூல்களும் புத்த சமய நூல்களில் ஞானபிடகம், விநயபிடகம், அபிதம்ம பிடகம், ஆசியபிடக நூல்களும் மடத்தில் இருந்தன. அப்பாண்டை நாதர் உலா என்ற அச்சில் வராத சுவடி இருந்தது. இது பின்னர் நூலாக அச்சிடப்பட்டது. மகாபுராணம், பார்த்துவாப்யுதம், பூஜாங்கவிதி, ஜினசம்ஹிதை, கிரியாவந்தனை ஆகிய நூல்களை ஜினசேனாச்சாரியார் இயற்றியுள்ளார். இந்நூல்களின் பல பிரதிகள் மடத்தில் இருந்தன.

த்ரைலோக்யஸாரம், சோமடஸாரம், லப்திஸாரம் ஆகியவை நேமிசந்திரர் அவர்களால் இயற்றப் பெற்றவை ஆகும். இவைகளின் ஓலைச்சுவடி பிரதிகள் பல உள்ளன. ப்ராவ்பருத திரையை குந்த குந்தாச்சாரியார் இயற்றியுள்ளார். ரத்னகரண்டம், நியாய ஸாஸ்திரம் ஆகியவை சாமந்த புத்ராச்சாரியாரும், பக்தாமரம் மானதுங்காச்சாரியாரும், நாகுமார காவியம் மல்லிசேனாச்சாரி யாரும், வைத்யஸாஸ்திரம் பூஜ்யபாதராலும், சக்தாயனம் சகடாச்சாரியாராலும், ஏகசந்தி ஏகசந்தியாச்சாரி யாராலும், நீலமேகதர்க்கம் வாமனாச்சாரி யாராலும் இயற்றப் பெற்றன என்று மெக்கன்சி தன் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னைப்பல்கலைக்கழகம் தொல்லியல் மற்றும் பண்டைய வரலாற்றுப் பிரிவு பேராசிரியர் ஏகாம்பரநாதன் மேல்சித்தாமூர் என்ற பெயரில் அரிய நூலை எழுதியுள்ளார். பல்வேறு விவரங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

36. தொண்டை மண்டலத்தில் சமணப் பிரிவுகள்

முனைவர் ஆர். பூங்குன்றன், திருமலை.

தென்னிந்தியா பல்வேறு சமயங்கள் தழைத்து வளர்ந்த பகுதி. வட இந்தியாவிலிருந்து இங்கு பரவிய பௌத்தம், சமணம், ஆசிவகம், வைணவம், சைவம் போன்ற சமயங்களுடன் உலகாயுதம் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சம் ஆகிய அளவையியல் வாதங்களும் தென் இந்தியாவில் செழித்து வளர்ந்தன. மணிமேகலை, நீலகேசி, குண்டலகேசி ஆகிய நூல்கள் இந்தியத் தத்துவ ஞானங்கள் தென்னிந்தியாவில் தழைத்தன என்பதைச் சுட்டுகின்றன. எல்லா வகையான சமயவாதிகளும் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறினர். அவரவர் கோட்பாடுகளை எடுத்துக் கூறினர். இந்தக் கருத்து மோதல்கள் ஆரோக்கியமான அறிவுபூர்வமான கருத்து மோதல்களாக விளங்கினவே ஒழிய வன்முறை மோதல்களாக விளங்கியதில்லை. ஞானத்தின் வழியே அளவை வாதம் மூலமாக ஆன்மா வீடுபேறு பெறுவதற்கு அறுவகைச் சமயங்கள் வழி கூறுகின்றன. ஆனால் வழிபாட்டின் மூலமும், பலியிடுதல் மூலமும், தவத்தின் மூலமும், கொல்லாமை மூலமும் வீடுபேறு அடைவதை சமணம், பௌத்தம், சைவம், வைணவம், சாக்தம் போன்ற சமயங்கள் வலியுறுத்துகின்றன.இவை அறுவகை சமயங்களின்றும் வேறுபட்டவை.

வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த சைவம், வைணவம், சமணம், பௌத்தம் போன்ற பெருந் தெய்வ சமயங்கள் இங்கு வந்தடைந்த பின் பாரதுரமான மாற்றங்களுக்குள்ளாயின. சைவ சமயத்தில் அகச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், புறப்புறச் சமயம் என இருபத்திநான்கு பிரிவுகள் கிளைத்தன. சைவசித்தாந்தம் சத்காரிய வாதம் பேசுவதற்கு சாங்கியம் மட்டுமின்றி தென்னிந்தியாவில் நிலை பெற்றிருந்த தாய் வழிபாடும் அடிப்படைக் காரணமாகும்.

பௌத்தத்தில் மகாயானம், சௌத்ரந்திகம், யோகசாரம், சௌத்ராந்திக யோகாசாரம், மாத்யமிகம், வஜ்ரயானம் போன்ற பிரிவுகள் தென்னிந்தியவில் தோன்றின. சைவத்தின் பிரிவுகள் பற்றி ஏற்கனவே கூறப்பெற்றது. வைணவத்திலும் சில பிரிவுகள் தோன்றின. சமணத்தில் யாப்பனிய சங்கம், திராவிட சங்கம் (தொண்டை மண்லத்தில் தோன்றிய பிரிவு?) க்ஸ்தசங்கம், தேசிச்ங்கம் என்ற நான்கு பிரிவுகள் தோன்றின. இவற்றில் சில மூலசங்கத்திலிருந்து உருவானவை. சில மக்கள் தேவை கருதி உருவாக்கப் பெற்றவை.

யாப்பனியம்

வடகருநாடகத்தில் பெல்காம் பகுதியில் எழுச்சி பெற்ற இந்தச் சமணப்பிரிவு கி.பி. 5 - ஆம் நூற்றாண்டில் கல்வெட்டுகளில் முதல் முதலாகப் பேசப்பெறுகிறது. யாப்பனியப் பிரிவு வட கருநாடகத்தில் தோன்றினாலும் இரண்டு நூற்றாண்டு களுக்குள் தென் கருநாடகத்தில் செல்வாக்கு பெற தொடங்கியது. கி.பி. 7 - ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இரண்டாம் புலிக்கேசியின் மெய்க்கீர்த்தியை எழுதிய ரவிகீர்த்தி யாப்பணிய சமணத்தைச் சேர்ந்தவன். யாப்பனியம் தொடர்ந்து பல்வேறு அரசர்களாலும், சிற்றரசர்களாலும், வணிகர்களாலும், உழவர்களாலும், கைத் தொழிலாளர்களாலும் போற்றப் பெற்றது. அரசர் முதல் ஆண்டி வரை இச்சமயத்தை பலர் தழுவினர். பண்டைய காலத்தில் சமணம் உருவான போது பல கறாறான விதிமுறைகளை வகுத்தது. ஆனால் தென்னிந்தியாவில் பரவிய போது உருமாறி நின்றது. இந்தப் பிரிவுகள் வைதீக சமணத்தின் கோட்பாடுகளுக்கு எதிரான கோட்பாடுகளை உருவாக்கின. அதனால் சமண இலக்கியங்களும், கல்வெட்டுகளும் இந்த மாற்றங்களைப் புலப்படுத்தியுள்ளன. யாப்ணிய சங்கம், திராவிட சங்கம், நந்திசங்கம் எனப் பல பிரிவுகளும் மூலசங்கத்திலிருந்தே கிளைத்தன.

கி.பி. 11 - ஆம் நூற்றாண்டிலேயே யாப்பனியத்தில் இருபிரிவுகள் உருவாகிவிட்டன. யாப்பனிய என்றால் வழி விலகிச் சென்றவர்கள்என்று பொருள். சமணத்தின் கறாரான கோட் பாடு களை விட்டு விட்டு தாங்கள் வாழும் பகுதியில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டினையும் கணக்கில் எடுத்துக் கொண்டனர். யாப்பணியர்கள் பெண்களுக்கு வீடுபேறு உண்டு என்று கூறினர். பழமைவாத சமணம் பெண்களுக்கு வீடுபேறு இல்லை என்று கூறியது. மேலும் பெண்கள் ஆணாகப் பிறந்து தான் தவமியற்றி வீடுபேறு அடையமுடியும் என்று கூறியது. யாப்பனியக் கொள்கை பழமைவாத சமணத்திற்கு மாறானது. மேலும் பில்லிசூனியம் எடுத்தல், பேய் ஓட்டுதல் போன்ற மக்கள் தொடர்புடைய செயல்களில் ஈடுபட்டு சமணத்தைப் பரப்பினர். அவர்கள் மடங்களில் வாழ்ந்தனர். மக்களுடைய நன்மைக் காகவும் வளவாழ்வுக்காகவும் செயல்பட்டனர். அர்ககீர்த்தி என்ற யாப்பணிய முனிவர் விமலசந்திரனைப் பிடித்திருந்த சனியை நீக்கினார். திராவிட சங்கத்தைச் சேர்ந்த இந்திரநந்தி என்ற முனிவர் ஜீவாலாமாலினியின் யந்திரங்களைப் பற்றி பாடல்களைத் தொகுத்து உள்ளார்.

யாப்புனிய சங்கத்தையும் திராவிட சங்கத்தையும் பழமைவாத சமணம் கடுமையாகத் தாக்கியது. சமணமரபிற்கு மாறான கொள்கைகள் என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

யாப்பனியர்கள் தெய்வ வழிபாட்டினை உரமிட்டு வளர்த்தனர். தீர்த்தங்கரர்களின் பணிப்பெண்களாக விளங்கிய

வர்களைத் தாய் தெய்வமாக வழிபட வகை செய்தனர். ஜீவாலாமாலினிக்கு பல கோயில்களைக் கட்டினர். ஜீவாலா மாலினி என்ற இயக்கி வழிபாடு கி.பி.10 - ஆம் நூற்றாண்டிலிருந்து தான் பெருமைப் பெற்றது. யாப்பனியர்கள் சேடிம்பா என்ற ஊரில் உள்ள ஜீவாலினி கோயிலில் இருந்த யாப்பணிய பூசாரிகள் பேயோட்டும் சடங்குகளையும் செய்தனர்.

யாப்பனியர்கள் தென்னகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கினர். திகம்பர சமணத்துடன் முரண்பட்டு நின்றாலும் திகம்பர சமணத்தின் சில கொள்கைகளை யாப்பனியர் கடைப்பிடித்தனர். அதனால் யாப்பணியருக்கும் திகம்பரருக்கும் இடையில் இருந்த வேற்றுமைகள் குறைந்து போயிற்று. திகம்பரர்கள் யாப்பணிய சங்க்த்தினர் செய்த சடங்குகளை கண்டித்தனர்.ஆனால் கல்வெட்டுகள் திகம்பரர்களே அந்த சடங்குகளைச் செய்தனர் என்பதைச் சுட்டுகின்றன. பெண்ணும் மோட்சமடைய தகுதியானவள் என்று யாப்ணியர் கூறிய கோட்பாடுகளை திகம்பரர்கள் மறுத்தனர். ஆடையின்றி தவம் செய்வதற்கு பெண் ஏற்றவள் அல்லள் என்பது திகம்பரரின் கொள்கை. ஆனால் பல்வேறு திகம்பர பிரிவுகளைச் சேர்ந்த பிக்குனிகள் சல்லேகனை நோற்று உயிர் விட்டனர். அதனால் திகம்பரர்களும் பெண்களுக்கு மோட்சம் உண்டு என்ற கருதினர் எனலாம்.

யாப்பனியர்கள் திகம்பரர்கள் மத்தியில் வாழ்ந்தமையால் ஒருவரை ஒருவர் பாதித்து வந்தனர். சமூகத்திலிருந்த பிரச்சனைகளுக்கு யாப்பனியர் கூறிய வழி முறைகள் திகம்பரர் கூறிய வழி முறைகளை விட எளிதாக இருந்தன. அதனால் தீபகர்ப்ப இந்தியாவில் திகம்பரர் செல்வாக்கு குறைந்து போயிற்று. சமூகத்தில் பிரச்சனைகளும் நெருக்கடிகளும் மிகுந்த காலகட்டத்தில் யாப்பனிய பிரிவு எழுச்சி பெற்றது. திகம்பரர் கோட்பாடு உழவுத் தொழில் நெசவுத் தொழில் ஆகிய வளம் தரும் தொழில்களைச் செய்பவர்களுக்கு எதிராக பேசினர். ஆதலால் மக்களிடையில் செல்வாக்கிழந்தது. சமண முனிவர்கள் ஓரிடத்தில் தங்காமல் தேசாந்திரிகளாய் வாழ வேண்டும். அதனாலும் மக்களிடத்தில் செல்வாக்கிழந்தது. ஒரு பகுதியில் சமண முனிவர்கள் தங்கித் தவம் செய்யும் போது குறிப்பிட்ட பகுதியின் மக்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு செயலாற்றி செல்வாக்கைப் பெற முடியும். யாப்பனியர் விழா கொண்டா டுவதிலும் விழாக்களில் மக்கள் கலைகளை நடத்திக் காண்பிப் பதிலும் கவனம் செலுத்தினர். அதனால் மக்களைக் கவர்ந்தனர்.

திராவிட சங்கம்

இப்பிரிவினரின் பெயரே இப்பிரிவு தொண்டை மண்டலத்தில் உருவான சமணப்பிரிவு என்பதை வலியுறுத்தும். தொண்டை நாட்டிற்கு திராவிட நாடு என்றும் பல்லவர்களுக்கு திராவிடர் என்றும் பெயர் உண்டு. அதனால் திராவிட சங்கம்

ஐவர்மலை ஆயிரைப்பிடாரி, ஆழியாற்று ஆதாழியம்மன் ஆகியபெண் தெய்வங்கள் சமண மதத்துடன் இணைந்து விட்ட கொற்றவை உருவங்களே ஆகும். அயிரை சேரரின் குலதெய்வமாகவும் குறிக்கப் பெறுகிறது. ஆதாழியம்மன்வழிபாடு குறிப்பிடத்தக்கது. தீர்த்தங்கரர் உருவத்தையே அம்மன் என்று உருமாற்றி வழிபாடு செய்து வருகின்றனர். இத்தெய்வத்திற்கு இன்று வரை உயிர்ப்பலியிட்டு வருகின்றனர்.

இத்தெய்வம் தொல்பழங்காலம் முதல் அப்பகுதி மக்களால் வழிபடப் பெற்ற அணங்கு என்றே கொள்ள வேண்டும். அணங்கு வழிபாடு செய்யப் பெற்ற குகைகளில் சமண முனிவர்கள் தங்கித் தவம் இயற்றினர். அதற்குச்சான்றாக அங்கு சமணப் படுக்கைகள் இருப்பதைப் பார்க்க முடியும். பண்டைக் காலம் தொடங்கி இன்று வரை நடைபெறும் இவ்வழிபாடு சமண சமயப் பெண்தெய்வமான இயக்கி அம்மன் வழிபாடாக உருமாற்றம் செய்யப்பெற்று வழிபடப் பெறுகிறது. மலையாண்டிப் பட்டணத்தில் உள்ள பள்ளியம்மன் சமணப்பள்ளிகளில் இருந்த உருவங்களே. சில இடங்களில் ஓவியமாகவும், சில இடங்களில் சுடுமண் பொம்மையாகவும் செய்யப் பெற்று வழிபாடு செய்யப் பெறுகிறது.

தொல் ஓவியப்பாவை

ஓவியமாக வழிபாடு செய்யப் பெற்ற கொற்றவையின் உருவம் மூணாறு செல்லும் வழியில் மனையூர் அருகில் உள்ளது. இத்தொல்பழங்கால ஓவியம் 7000 ஆண்டுகட்கு முன் வரையப்பெற்ற செவ்வண்ண ஓவியம் ஆகும். பதினைந்தடி உயரம் கொண்ட பெண் உருவத்தைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான மான் உருவங்கள் வரையப் பெற்றுள்ளன. கொற்றவைக்க மான் வாகனமாகக் கூறப்பெறுவது தென்னிந்தியாவில் மட்டுமே. இதனை சிலப்பதிகாரம் பாய்கலைப்பாவை என்று கூறுவதை அறியமுடிகிறது.

தொண்டை மண்டலத்திலும் கொற்றவை வழிபாடு தொல் பழங்காலம் முதல் வழிபாட்டிலிருந்தது என்பது தொல்லியல் சான்றுகளாலும் சங்க இலக்கியச் சான்றுகளாலும் உறுதிப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படையில் கொற்றவை வழிபாடு பற்றிக் குறிக்கப் பெறுகின்றது. இங்குச் சிறப்புற்றிருந்த தாய்(கொற்றவை) வழிபாடு அனைத்துப் பெருந்தெய்வ சமயங்களிலும் இணைக்கப் பெற்றது.

இடைக்காலத் தமிழகதகில் தாய்ப் தெய்வம் சிவனை விட மும்மூர்த்திகளை விட உயர்ந்தவளாக காட்டப் பெற்றாள். தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் தாய்தெய்வ வழிபாடு பெருமை பெற்ற காலமாக இடைக்காலம் விளங்கியது. இடைக்காலத்தில் இந்தியவில் பல்வேறு பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் இணைக்கப்பெற்றனர். அவ்வாறு இணைக்கப்

பெறற பழங்குடிகள் பலர் தாய் வழிபாட்டினர். அதனால் இந்தியாவில் சாக்தம் பெரும் செல்வாக்கைப் பெறத் தொடங்கியது. அந்த வழிபாட்டின்மகோன்னதநிலை சோழர் கலத்தில் காணப்பெற்றது. அக்காலத்தில் பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்றனர். கி.பி.10 - ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13 - ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்திலி பழங்குடிகள பல சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்றனர்.

பூலுவர், மாவலர், காவரர், குறும்பர், வேட்டுவர், வேடர், ஆரியர், கன்னடிகர், கள்ளர, மறவர், இடையர், கொங்கர், காடர், புலையர், காரணவர், பள்ளர், ஆயி குடிகள் சோழர் காலச் சமூக நீரோட்டத்தில் இணைக்கபெற்றனர்.

பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்றபோது தொடக்கத்தில் இடங்கைப் பிரிவில் வைக்கப் பெற்றனர். இவர்களை விட உயர்ந்தவர்களாகக் கருதப் பெற்றவர் வலங்கைப் பிரிவில் வைத்துப் போற்றப் பெற்றனர். பழங்குடி மலைகளில் காடுகளில் வாழ்ந்த பழங்குடிகள் வேளாண்மை நாகரிகக் குடிமக்களாக மாற்றம் செய்யப் பெற்ற போது உடனடியாக 'உயர்ந்த' குடிகளுடன் சேர்ந்து வாழமுடியாது. அதனால் அவர்களை 'உயர்ந்த' குடிகளிடமிருந்து ஒதுக்கியே வைத்தனர் சோழப் பேரரசர்கள். காரணம் அம்மக்களின் பண்பாட்டு நிலை வேறுபட்டிருந்தமையே ஆகும்.அதனால் இடங்கை பிரிவில் வைத்து போற்றப் பெற்றனர். இடங்கை தமிழ் மரபில் கீழானது, வலங்கை மேலானது உயர்ந்தது என்று கருதப் பெற்று வருகிறது. அதனால் பழங்குடிகளை சமூக நீரோட்டத்தில் இணைத்த போது இடங்கைப் பிரிவில் வைத்துப் போற்றப் பெற்றது. பொருளாதாரத்தின் மேன்மையுற்ற சில இடங்கைச் சாதியார் வலங்கைக்கு மாறியதைப் பற்றிக் கல்வெட்டுகள் பேசியுள்ளன.

இடங்கைப் பிரிவினர் வழிபட்ட தாய்த்தெய்வ வழிபாடு 'வாமாசாரம்தந்திரம்' என்று அழைக்கப் பட்டது. இந்த மரபினை திருமூலர் கடுமையாகச் சாடுவார். ஆனால் கி.பி. 12 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் வாம மார்க்கத்தினை போற்றியுள்ளார்: இது பழங்குடித் தாய்தெய்வ வழிபாட்டின் செல்வாக்கினை உறுதிப்படுத்துகிறது. வாம மார்க்கத்தினரைச் சாடும் திருமூலர் கூட தனது நூலில் தாய்த் தெய்வத்தினை பெருமையாகப் போற்றியுள்ளார். அதனல் பழங்குடித் தாய்தெய்வம் மேனிலையாக்கம் பெற்று வந்தது எனலாம்.

பழங்குடித் தாய்தெய்வம் கொலையும் செய்யும் மணமகளாக காமம் சான்றவளாகக் காட்டப் பெறுகிறாள். தமிழகத்தில் பழங்குடித் தாய்தெய்வங்களை சிவ சமயத்தில் இணைப்பதற்குப் பெரும்பாடுபட்டனர். சிவனுடைய மனைவியாக்குவதில் பல இடர்பாடுகளைச் சந்தித்தனர். பல்வேறு போட்டிகளால் சிவனுடன் சரிநிகர் சமானமாக வைத்து போற்றப் பெற்றாள்.

ஆனால் ஊர்த்துவ தாண்டவ போட்டியில் தேவி சிவனிடம் தோற்று போய்விடுகிறாள் என்று புராணம் கூறுகின்றது. சிவனுக்கு அடங்கியவளாக தேவி காட்டப் பெற வேண்டும் என்பதே ஊர்த்துவ தாண்டவ போட்டியின் உள்ளடக்கமாகும்.

தேவியை சிவனின் அடியுறைவளாகக் காட்டுவதில் முழு வெற்றி பற்று விட்டார்கள் என்று சொல்ல முடியாது. கொடூர தெய்வத்தை இரு கூறாக்கி ஒன்று சாந்த சொரூபியாக சிவனின் மனைவியாக்கப் பெற்று திருக்காம கோட்டத்து நாச்சியாராக மாற்றப் பெறுகிறாள். மற்றோரு கூறு கர்ணகொடூரமாகக் காட்சியளிக்கும் காளியாக அந்தந்த ஊர் எல்லையில் வைத்து வழிபடப் படுகிறாள். கி.பி. 10 - ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த நடனமாடும் காளியின் உருவம் மயிலை மாரியம்மன் கோயிலில் உள்ளது. ஆலங்காட்டுக் காளி, தில்லைக் காளி, தஞ்சைக் காளி, திருவண்ணாமலைக்காளி, கச்சிக் காளி, குடந்தைக்காளி, திருமுருகன் பூண்டி காளி, நீலகண்டி காளி எனப் பல ஊர்களில் காளியாகவே வழிபடப் பெறுகிறாள்.

சமண சமயத்தில் பண்டைய தாய்த்தெய்வங்களில் வழிபாடு இணைக்கப் பெற்றது. இவ்வாறு இணைக்கப் பெற்ற நிலையில் சமணத்தில் புதுப்புது பிரிவுகள் தோன்றின. அவை பெண்களின் ஏற்றம் பேசின. பெண்களும் தவம் செய்து வீடுபேறு அமைய வழி கூறின. தொண்டை மண்டல சமணப்பள்ளிகளில் பெண் துறவிகள் இருந்தமை பற்றிக்கல்வெட்டுகள் கூறுகின்றன. கட்டிறுக்கம் வாய்ந்த சமண சமயம் கூட கால தேச வர்தமானங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டது என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

உதவிய நூல்கள்

1. மணிமேகலை
2. திருமந்திரம்
3. தக்கயாகப்பரணி
4. தி.ஸ்ரீ. ஸ்ரீதர், (ப.அ.)கோயம்புத்தூர் மாவட்டத் தொல்லியல் கையேடு
5. ஏகாம்பர நாதன், சமணக் கல்வெட்டுகள்.
6. B.P. Desai, Jainisam and same Jaine Epigraphs in South India
7. Ramentharanath Nandhi, Religious Institution and cults in the Deccan.
8. Debi prasad Chattopadhyaya lokayata: A study in Anicient Indion Matevialism.

37. ஜைனர்கள் கண்ட மெய்ந்நெறி

ஜீவபந்து T.S. ஸ்ரீபால், சென்னை.

சைன சமயம் உலகுக்கு உதவிய மெய்ந்நெறிகள் மக்கள் நல மேம்பாட்டிற்கும் வாழ்க்கை பண்பாட்டிற்கும் உலக அமைதிக்கும் இன்றியமையாதவை. சைன சமய மெய்ந்நெறிகளை அறிய தமிழ் இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. தமிழ் நூல்களிலேயே தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். எனவே தொல் காப்பியத்தின்றும் சைனர்கள் கண்ட மெய்ந்நெறிகளை ஆராய்ந்தறிவோம். தொல்காப்பியத்தில் சைன சமய நெறிகளே பெரிதும் காணப்படுகின்றன. அந்நெறிகளைப்பற்றி ஆசிரியர் குறிப்பிடும் போதெல்லாம் 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினர்' என்றும் 'நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டனர்' என்றும் உயர்வாகக் கூறிச் செல்கிறார்.

உலகம்

இவ்வுலகம் ஆதியும் அந்தமும் அற்றது.'மொழி முதற்காரணம், அணுத்திரள் ஒலி' என்னும் நன்னூல் கொள்கை போன்று அணுத்திரள்களாகியது. எக்கடவுளாலும் படைக்கப் படாதது. இயற்கையின்பாற்பட்டது. நிலம், தீ, காற்று, நீர், வெளி ஆகிய ஐந்தின்சேர்க்கையையுடையது. இவ்வாறு சைன சமயம் உலகைப் பற்றிக் கூறுகிறது. இக்கொள்கையையே தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் மரபியல் 89 - ஆவது சூத்திரத்தில்,

> **"நிலம், தீ, நீர், வளி விசும்போடைந்தும்**
> **கலந்த மயக்கம் உலகமாதலின்"**

என உலகத்தின் இயல்பை நன்கு விளக்கியுள்ளார். நிலம், தீ, நீர், வளி, வெளி ஆகிய ஐந்தில் வெளி மற்ற நான்கைப் போன்று நிறமோ, சுவையோ, மணமோ உடையதன்று. உலகில் உள்ள பொருள்கள் ஒதுங்குவதற்கும் அசைவதற்கும் இடம் விட்டுப் பெயர்வதற்கும் இடம் அளிப்பது. எனவே வெளி, உலகவெளி, அலோக வெளி என இருவகைப்படும். உலகவெளி புற உலகப் பொருள்களுக்கு இடம் தருவது. இதற்கு மேலும் எல்லையில்லா வெளி இருக்கிறது. இதுவே அலோகாகாயம் என அழைக்கப் படுகிறது.அவ்வகண்ட வெளியில் பல்லாயிரக் கணக்கான கோள்கள் உலவுகின்றன. இவ்விருபதாம் நூற்றாண்டில் நம் கண்களின் முன்னே இரஷ்ய வீரர்களும், அமெரிக்க வீரர்களும் வானவெளியெங்கும் இராக்கெட்டில் சுற்றி வந்ததைக் கண்டு களித்தோம். எனவே உலகத்தைப் பற்றிய சைன சமயக் கொள்கைக்கு அரண் செய்வது போன்று உலகம் கடவுளால்

படைக்கப்பட்டதன்று என்பதையும் இயற்கையின் பாற்பட்டது என்பதையும் தொல்காப்பியமும் இன்றைய உலகமும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

உயிர்வகைகள்

சைன சமயம் அகிம்சை நெறியை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதால் அது உயிர்வகைகளைப் பற்றி ஆராய்ந்து உலகுக்கு அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறது. இக்கடமை உணர்ச்சியை சைன அறவோர்கள் நன்கு உணர்ந்து உள்ளார்கள். அவர்களின் உயிரியல் ஆராய்ச்சி அறிவுக்கு விருந்தாகும். புலன்களுக்கேற்ப உயிரியல் உலகை வகுத்திருக்கின்றார்கள். எண்ணிக்கைகளைக் கொண்டு அவை வகுக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரிவுகளின் படி தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பதை அறிவித்திருக்கின்றனர் சைன அறவோர்கள். இந்த உயிரியல் தத்துவத்தைத் தொல்காப்பியர் நன்கு விளக்கியுள்ளார்.இவ்வாறே 'தத்துவார்த்த சூத்திரம்'என்னும் வடமொழிச் சைன நூலில் உயிரியல் தத்துவம் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவைத் தவிர கண்களுக்குப். புலனாகாத உயிரணுக்கள் இருக்கின்றன. அவற்றிக்கும் உணர்ச்சிப் புலன் மட்டும் உண்டு என்று கூறப்பட்டிருக்கிறது. மண்ணை உடலாக உடைய உயிர்கள், காற்றை உடலாக உடைய உயிர்கள், நெருப்பை உடலாக உடைய உயிர்கள், நீரை உடலாக உடைய உயிர்கள், மரம்,செடி,கொடிகளை உடலாக உடைய உயிர்களும் இருக்கி ன்றன. இவை உலகெங்கும் பரவிக்கிடக்கின்றன. இவ்வுயிரியல் தத்துவ விளக்கம் மேருமந்திர புராணத் தமிழ் இலக்கியத்திலும் தத்துவார்த்த சூத்திரம் என்ற வடமொழி நூலிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இவ்வகை உயிர்களில் உயர்ந்த இனத்திற்கு ஐவகைப் புலன்களுண்டு. அவற்றுடன் மனமும் ஒன்றாகும். இது இந்திரியத்தின் உருவம் எனப்படும். மனித இனம் இவ்வுயிர் வகைகளுக்கெல்லாம் தலையாயது. நன்மை தீமைகளை உணர்ந்து நல்லறங்களைப் பின்பற்றும் இயல்பு அமைந்துள்ளதால் மனிதன் ஆறறிவு படைத்தவன் எனப் போற்றப்படுகிறான்.

விஞ்ஞான அறிஞரின் விளக்கம்

மேலே கூறிய சைன சமயக் கொள்கையை வலியுறுத்திப் பாரத நாட்டு விஞ்ஞானி ஜெகதீஸ் சந்திர போஸ் ஜெர்மனியில் நடந்த அகில உலக விஞ்ஞான மாநாட்டில் மரம் செடி, கொடிகளுக்கும் உணர்ச்சியுண்டு என்பதை விஞ்ஞான கருவி மூலம் விளக்கிக் காட்டுகையில் 'யான் செய்துள்ள இவ்வாராய்ச்சி உண்மையைப் பாரத நாடாகிய எங்கள் நாட்டின் மிகத் தொன்மை வாய்ந்த சமயமாகிய சைன சமயந்தான் உலகுக்கு அளித்தது. யான் கண்டு பிடித்தது மரம், செடி, கொடிகளுக்கு உயிர் உண்டு என்னும் சைனச்சமயக் கொள்கையை நிரூபிக்கும் இக்கருவியே ஆகும்' எனக்கூறி அதற்கு ஆதாரமாக சைன சமய நூல்களாகிய ஆசாரங்க

சூத்திரம், ஜீவாபிகம் சூத்திரம் என்னும் இரு வடமொழி நூல்களைப் படித்துக் காண்பித்தார்.

உயிர் வேறு உடல் வேறு

உயிர் வகைகள்யாவும் தனித்தனி உடல்களையே உடையவை. உயிர் வேறு, உடல்வேறு என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது சைனசமயம். இக்கொள்கைளையும் தொல்காப்பியர்,

"சென்ற உயிரின் நின்ற யக்கை"

"காலம், உலகம், உயிரே, உடம்பே" *(தொ. பொ. கிளவி : 58)*

என அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

அறிவுக்கலை

இனி சைன சமயம் அறிவுக்கலையை எவ்வாறு வகுத்துள்ளது எனக் காண்போம்.சைன அறவோர்கள் அறிவினால் அறியப்படும் செயலை ஐந்து பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். ஐம்புலன்களால் அறியும் அறிவைப் புலன் அறிவு (மதிஞானம்) என்றும், நூல்களின் வாயிலாகப் பெறும் அறிவை நூல் அறிவு (சுருதஞானம்) என்றும் , வெகு தொலைவிலுள்ள பொருட்களையும், நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்ளும் அறிவை அவதிக்ஞானம் என்றும், பிறர் மனத்திலுள்ள உணர்ச்சிகளைத் தெரிந்து கூறும் அறிவை மனப்பரியை ஞானம் என்றும், ஐந்தாவது கேவலக் ஞானம் என்றும் அழைதுக்கப் பெறும். இவ்வறிவுகளில் மூன்றாவது அறிவாகிய அவதிக்ஞானம் சாதாரணப் புலன்களால் அறியப்படுவதன்று. மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் தூரமனோதிருஷ்டி என்றும் இவ்வறிவு ஒவ்வொரு மனிதனிடத்திலும் மறைந்து கிடத்தும் ஓர் ஆற்றல் என்றும் கூறுகிறார்கள். நான்காவதான மனப்பரியை ஞானமும் மிக்கச் சிறப்புடையது. இவ்வறிவை அறிவுத்துறை ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். அது மட்டுமன்று, அப்பேரறிவை 'டெலிபதி' என்றும் அழைக்கின்றனர். அருமை மிக்க இவவறிவை முற்றுந்துறந்த முனிவர்கள் தங்கள் கடுந்தவத்தாலடைந்து கர்மத்தைக் கெடுத்து வீடு பேற்றை அடைவார்கள். தீர்த்தங்கரர்களும் முனிபுங்கவர்களுமே கேவல ஞானத்தைப் பெற்று விளங்கினர். இவர்களில் முதல்வராக விளங்கிய பகவான் விருஷப தேவரையே தொல்காப்பியர் "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" எனப் போற்றியுள்ளார். அது மட்டுமன்று, இம்முதல்வரின் பற்றற்ற நிலையைக் கொண்டே இவரைக் கந்தழி எனவும் புகழ்ந்துள்ளார். கந்தழி எனில் பற்றற்றவர் எனப் பொருள்படும். சிலப்பதிகாரத்தில் இப்பெருமான் கோயிலை இளங்கோவடிகள் நிக்கந்தக் கோட்டம் எனப் போற்றியுள்ள தின்றும் அறியலாம்.

எனவே நல்லொழுக்கத்தினாலும் தூய தவத்தாலும் மக்கள் பலரும் அறிவும் பண்பும் பெற்றுயர்ந்து வினையின் நீங்கி வீடு

பேற்றினை அடையலாம் என்னும் ஆத்மீகக் கலையை சைன அறவோர்கள் உலகுக்கு வழங்கினர். இதனால் ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய சொந்த முயற்சியாலும் ஒழுக்கத்தாலும் உயர்வடைய வேண்டும் என்பதைத் தெளிவாக்கியுள்ளனர். இவ்வுண்மையை,

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் – தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் – நிலையினும்
மேன் மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்! "

என நாலடியாராலும் "தன்னை இறைவனாகச் செய்வானும் தானே தன்னை இறைவனாகச் செய்வானும் தானே" என்னும் அறநெறிச் சாரத்தாலும் அறியலாம்.

அறிவுரைகள்

மக்கள் பலரும் தங்கள் ஆன்மாவின் ஆற்றலை அறிந்து இந்தப் பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி பிறவாமையாகிய வீடு பேற்றை அடைய வேண்டும் என்ற பரந்த நோக்கங் கொண்டு சைன அறவோர்கள் மக்களுக்கு பல அறநெறிகளையும் வகுத்தளித்தனர். அவ்வாறு அறங்கூற வந்த சைன ஆன்றோர்கள் உண்மையைக் கைகொண்டனர். உண்மை என்னும் அடிப்படையில் ஆராயும் போது மக்கள் அனைவரும் அகிம்சை என்னும் அருளறத்தின் வழி நிற்க வேண்டியவர்களாகி விடுகிறார்கள். இவ்வுண்மையை முதன் அறிந்து உலகுக்கு உரை செய்தவர் பகவான் விருஷபதேவர். அப்பெருமகனையே திருக்குறள் ஆசிரியர் ஆதிபகவன் என்று போற்றுகிறார். பகவான் விருஷபதேவர் தாம் வகுத்த அறநெறிகளை இல்லறம் துறவறம் என இரு வகைகளாகப் பிரித்தார். இவ்விரு அறநெறிகளும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவை. இதனை அறநெறிச்சாரம்,

"நோற்பவர் இல்லவர்க்குச் சார்வாகி இல்லவரும்
நோற்பவர்க்குச் சார்வாயறம் பெருக்கி – யாப்புடைக்
காழுங் கடுகும் போல் நிற்கும் கயக்கின்றி
ஆழி சூழ் வையத்து அறம்"

என நன்கு விளக்கியுள்ளது. மேலும் தொல்காப்பியர்,

"காமம் சான்ற கடை கோட் காலை
ஏமம் சார்ந்த மக்களொடு துவன்றி
அறம் புரி சுற்ற மொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என விளக்கியுள்ளார். இச்சூத்திரத்தில் இல்லற இன்பங்களைப பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்பதும், பின்னர் கிழவனும் கிழத்தியும் துறவறத்திற்கான ஒழுக்கங்களை இல்லறத்திலேயே பயில வேண்டும் என்பதும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இல்லற நெறிகள்

பொருளதிகாரம், புறத்திணை இயலில் 21 - ஆம் சூத்திரத்தில்

"கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடையினாலும்
பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்
பொருளொடு புணர்த்த பக்கத்தானும்"

என்றார்.எனவே இல்லறமும் ஆத்மீகத் துறைக்கு அடிகோலும் பேரிடமாகும். இதனாற் தான் இல்லற நெறியைத் தவத்திற் கொப்பாகவும் போற்றப் பட்டுள்ளது.

"நற்றவம் செய்வார்க்கிடம்
தவம் செய்வார்க்கும் அஃதிடம்"

எனத் திருத்தக்கத் தேவரும் சீவக சிந்தாமணியில் விளக்கியுள்ளார். மேலும் திருக்கலம்பகத்தில் கூறிய படி கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர் மனை நயவாமை, ஊனுண்ணாமை, மிகுபொருள் விரும்பாமை, கள்ளுண்ணாமை, குரவரை இகழாமை போன்ற அறங்களும் இல்லறத்தார் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையா நல்லொழுக்கங்களாகும்,. இவற்றை அணுவிரதம் எனப் போற்றுவர்.

இவ்வற நெறிகளை முதல் முதலில் உலகுக்கு உரை செய்த பகவான் விருஷபதேவர். அவற்றை சமயம் அல்லது மதம் என்று அழையாமல் அறம் அறம் என்றே போற்றினார். அப்பெருமகன் மக்கள் சமுதாயத்தில் உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்காமல் அனைவரும் ஒன்றே என்ற முறையில் வாழுமாறு பணித்தார். தொழில் முறையால் வேறுபடினும் பிறப்பினால் மக்கள் பலரும் ஒரு குடும்பத்தார் போன்றவர்களாகையால் அவர் தம் அறநெறி அன்பின் அடிப்படையில் மக்கள் சமுதாயத்திற்கே உரியதாக அமைந்திருந்தது.ள

நான்கு தானங்கள்

இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு தானங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அன்ன தானம், அபயதானம், மருந்து தானம், கல்வி தானம் ஆகிய நான்கையும் மக்கள் வாழ்க்கை நலத்திற்கு உதவி புரியும் வகையில் இல்லறத்தாருக்குப் பணித்துள்ளார்கள்.

மும்மூடங்கள்

இப்பெற்றிய நல்லறங்களை மேற்கொள்ள தடையாய் இருப்பவை மூட நம்பிக்கைகள். அவை தேவமூடம், உலகமூடம், பாசண்டிமூடம் என மூன்று வகைப்படும். தேவமூடம் என்பது தன்னைத் தெய்வம் வாழ்வளிக்கும் என மயங்கி அதனை வழிபடுதலும், கோபமும் கொடூரமும் வாய்ந்த தெய்வங்கள்

உண்டென அச்சங்கொண்டு வணங்குதலும் ஆகியவை. உலக மூடம் என்பது புண்ணியம் பெறலாமென மலை மீதேறி வீழ்ந்து இறத்தலும் கற்பனையாக உலகில் கூறும் பல போலிக் கொள்கைகளை ஆராயாமல் நம்பிப் பின்பற்றுவதுவும் ஆகியவைகளாகும். பாசண்டி மூடம் என்பது துறவுகளுக்குரிய அறநெறிகளை பின்பற்றாமலும் தியாகமும் அறிவுமின்றித் தன்னலங் காரணமாக துறவி வேடம் பூண்டு ஏமாற்றும் போலித் துறவிகளை வணங்கி வாழ்த்துதலுமாகும்.

இம்மூன்று மூடங்களின்றும் நீங்கியவனே அறிவுடையவன். அவனே மயக்கமற்ற மாசறுகாட்சியுடையவன். அத்தகையாரே நல்லறங்களை உறுதியுடன் கடைப்பிடிப்பவர் என அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள்.

மும்மணிகள்

உலகியல் துறையில் மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தியது போன்றே ஆத்மீக துறைக்கும் வழிகோலியவர் சைன அறவோர்கள். ஆத்மீக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத னவாகிய நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம், என்னும் மூன்று மணிகளை வழங்கினார்கள். நற்காட்சி என்பது உண்மைப் பொருளை ஆராய்ந்தறிதல் என்பதாகும்.

“மெய்ப் பொருள் தேறுதல் நற்காட்சி என்றுரைப்பார்
எப்பொருளும் கண்டுணர்ந்தார்”

என அருங்கலச் செப்பு அறைகின்றது. கண்கள் எவ்வாறு புறப்பொருள்களை ஆராய்ந்து அறிகின்றனவோ அவ்வாறே நூற்பொருள்களின் உண்மைகளை ஆராய்ந்து ஏற்க வேண்டும் என்பதாகும். ‘எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்’ என்னும் குறளே நற்காட்சிக்கு நற்சான்றாகும். தமிழ் நூல்களில் காணப்படும் மாசறு காட்சி பொய்தீர் காட்சி போன்றவைகளெல்லாம் நற் காட்சியையே குறிக்கும். இவ்வாறு ஆராய்ந்தறிந்த நூற் பொருளில் அறிவைச் செலுத்துதல் நல்ஞானம் என்றும் அப் பொருளின் வழி ஒழுகுதல் நல்லொழுக்கம் என்றும் அறிவுறுத்தினர் .

உலகியல் வாழ்க்கை சிறப்புற எவ்வாறு இல்லற நெறிகளை வகுத்தருளினார்களோ அவ்வாறே துறவற நெறிகளையும் ஊழ்வினை பற்றிய விளக்கங்களையும் தத்துவக்கலையின் மேன்மையையும் சியாத்வாதக் கொள்கையையும் சைன அறவோர்கள் உலகுக்கு மெய்ந்நெறிகளாக வழங்கியுள்ளனர்.



18. சமுதாயக் கோட்பாடுகளும் சமணமும்

மு. பிரபாகரன், சென்னை.

மதங்கள் மக்களுக்கு வழிகாட்டுவதற்காகவே உருவாக்கப் பட்டது. வேதகாலம் தொடங்கி இன்றுவரை இந்திய நாட்டில் தோன்றி வளர்ந்த தத்துவங்களையும், அவற்றின் அடிப்படை யிலான மதங்களையும் ஆராய்ந்து பார்த்தால் இது நன்றாக விளங்கும். உலகில் பல மதங்கள் தோன்றின. அவற்றுள் சமணம் மிகவும் பழமையானதாகக் கருதப்படுகிறது[1]. மிகப் பழமை யானவை எனப் பறைசாற்றிக் கொள்ளும் இந்துமத இலக்கியங் களான வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் ஆகியவற்றில் சமணமத சான்றோர்களின் பெயர்களும், கருத்துக்களும் காணப்படுகின்றன.[2]

பலமதங்கள் இறைவன் பெயராலோ அல்லது தோற்றுவித்தவர் பெயராலோ அழைக்கப்படுகின்றன. புத்தரின் பெயரால் பௌத்தம் என்றும், கிறித்துவின் பெயரால் கிறித்துவம் என்றும், சிவனின் பெயரால் சைவம் என்றும், விஷ்ணுவின் பெயரால் வைணவம் என்றும் மதங்கள் பெயரிடப்பட்டுள்ளன. ஆனால், சமணம் ரிஷபதேவ மதம் என்றோ, மகாவீரர் மதம் என்றோ அழைக்கப்படவில்லை.[3]

*தமிழ்நாட்டிலிருந்த மதங்களில் மிகப்பழமையானது சமணமதம் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை. கி.மு. 3 - ஆம் நூற்றாண்டில் **பத்திரபாகு முனிவரின் சீடராகிய வைசாக முனிவரால்** தமிழ்நாட்டிலே சமணசமயம் பரவியது.[4] பண்டைக் காலத்தில் சமணசமயம் தமிழ்நாடு முழுவதும் பரவி நிலைப் பெற்றிருந்தது மட்டுமல்லாமல் செல்வாக்கு பெற்றும் இருந்தது.*

*மனிதகுலத்தை உய்விக்கும் பொருட்டு மானுடவடிவில் இம்மண்ணுலகிற்கு வந்து வாழ்ந்து வழிகாட்டிய தேவர்களை தீர்த்தங்கரர்கள் என்று சமணம் அழைக்கிறது. சமண சமயக் கொள்கைகளை அவ்வப்போது உலகத்திலே பரவச்செய்வதன் பொருட்டு தீர்த்தங்கரர்கள் தோன்றினார்கள். அவர்கள் 24 பேர் ஆவார்கள். **முதல் தீர்த்தங்கரர் ரிஷபதேவர் அல்லது ஆதிநாதர்** எனப்படுவார். **புலன்களையும், கர்மங்களையும் வென்றவர் ஆதலில் தீர்த்தங்கரருக்கு ஜினர்** என்னும் பெயர் உண்டு. ஜினரை கடவுளாக உடைய மதம் ஜைனமதம் எனப்பட்டது. சமண சமயக்*

கடவுளுக்கு **அருகன்** என்னும் பெயரும் உண்டு. உலகை மாயம் என்றோ, வெற்றுத் தோற்றம் என்றோ சமணம் கருதவில்லை. இப்பேருலகம் உலகின் பொருள்களும் நிகழ்வுகளும் உள்பொருள்கள் உண்மையானவை என்று சமணம் கூறுகிறது.[5]

சமணமதத்தின் சித்தாந்தம் மிகவும் சிறிய பிராணிகளைக் கூட இரட்சிக்கும்படி கட்டளையிடுகிறது. எந்த ஜீவனும் மரணத்தை விரும்புவதில்லை. எல்லாம் சுகத்தையே விரும்புகின்றன. துக்கம் விரும்பப்படாதது. ஒவ்வொரு ஜீவனும் மற்ற ஜீவன்களை ரட்சிக்கவேண்டும். நிலம், நீர், காற்று, நெருப்பு, தாவரம் ஆகியவற்றிலும் கூட ஜீவன் இருக்கிறது. நடந்து செல்லும்போது கீழே பூமியைப்பார்த்து நிதானமாகச் செல்லவேண்டும். சமணம் சில கடமைகளை மக்களுக்குப் போதிக்கின்றது.

- பொய் சொல்வதை விட்டுவிடு.
- திருடாதே.
- பிரம்மச்சர்யத்தை அனுஷ்டிக்க வேண்டும்.
- அதிகமான பொருள்களை சேர்க்காதே.
- யாரிடத்தும் பொறாமை கொள்ளாதே.
- குணத்தோடு கூடியவரைப் பார்க்கும்போது சந்தோஷம் கொள்.
- துக்கமுள்ளவர்களைப் பார்க்கும்போது அவர்களுடைய துக்கத்தை நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.
- எதையும் கொல்லாதே.[6]

இரவுண்ணாமையை ஜைனமதம் மிகமுக்கியமாக பின்பற்றி வருகிறது. இரவில் உண்பதால் சிறிய உயிரினங்கள் உணவில் விழுந்து உணவின் தூய்மை கெடுவதுடன், ஹிம்சைக்கும் காரணமாக அமைகின்றது. எனவேதான் உண்மையான ஜைன நெறியைப் பின்பற்றுவோர் இரவில் எந்த உணவையும் உட்கொள்வதில்லை. இந்த ஹிம்சையைக் கருதியே ஜைனத்துறவிகள் இரவில் வெளியே நடமாட மாட்டார்கள். இவர்களின் முழுமுதற் கொள்கையே அஹிம்சை. இவர்களின் முதல்விரதமே கொல்லாமை. எனவே ஜைனர்கள் அனைவருமே ஆதிகாலம் முதல், தாவர உணவையே உட்கொண்டு வருகின்றனர். ஆல், அரசு, வசுரி, அத்தி, இரளி என்ற தாவரங்களின் பழங்களை உண்ணக்கூடாது. சூரிய ஒளி புகாத தடித்த துணியினால் வடிகட்டி காய்ச்சிய பின்னரே நீரை அருந்தும் பழக்கம் பலநூறு ஆண்டுகளாக ஜைனர்களிடம் இருந்து வருகிறது.[7]

தமிழ்நாட்டில் பண்டை காலத்திலிருந்தே மனித சமுதாயத்தை ஒருங்கிணைத்து திறம்பட செயல்பட வைக்கும் ஆற்றல்மிக்கவையாகத் திகழ்ந்திருப்பவை பல்வேறு சமயங்களும், கோயில்களும் ஆகும். எனவேதான் மக்களின் வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகளை சமயத்துடனும், சமயச் சடங்குக ளுடனும் இணைத்து வந்திருப்பதைக் காணலாம். சமண உணர்வின் வெளிபாட்டினால் எழுந்த கோயில்கள் சமயப்பணிகள் மட்டுமின்றி சமுதாயப்பணிகள் பலவற்றையும் ஆற்றி வந்திருக்கின்றன.[8]

உணவு, அடைக்கலம், கல்வி, மருந்து என்னும் நான்கு தானங்களைச் செய்வதை சமணர் தமது பேரறமாகக் கொண்டிருந்தார்கள். இந்த நான்கினையும் **அன்னதானம், அபயதானம், சாத்திரதானம், ஔடததானம்** என்று கூறுவர்.

கழுகுமலையில் உள்ள கல்வெட்டுக்கள் சமண சமயத்தைச் சேர்ந்தவை. அவற்றில் வருணாசிரம அடிப்படையிலான சாதிப்பிரிவுகள் கூறப்படவில்லை. அதாவது பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர் என்ற முறையில் மக்கள் பிரிவுபட்டிருந்ததாகத் தெரியவில்லை. மாறாகப் பெரும்பாலும் தொழிலடிப்படை யிலான பிரிவுகளை உடைய மக்கள்தான் இருந்திருக்கின்றார்கள். அக்காலத்தில் பிராமணர்கள், வேளாளர்கள், ஆயர்கள், வணிகர்கள், தச்சர்கள், கொல்லர், குயவர், அரசு அதிகாரிகள், காவலர்கள் போன்றோர்கள் வாழ்ந்து வந்தனர்[9]

சமணசமயம் சாதிப் பாகுபாடு கருதாமல் அனைவருக்கும் பொதுவாக அறநெறிக் கருத்துக்களைப் போதித்து வந்திருக்கின்றது. மேலும் வேற்றுமைப் பாராட்டாமல் மருத்துவ உதவிசெய்தும், அடைக்கலம் கொடுத்தும், அன்னதானம் செய்தும், சமுதாயப்பணி புரிந்திருக்கின்றது. இதனால் தொழிலடிப்படையில் வேறுபட்டிருந்த பல பிரிவு மக்களையும் இது தன்னுள் கொண்டிருந்திருக்கின்றது. பிறப்பால் ஏற்பட்டதாகக் கூறப்படும் சாதிப்பாகுபாடுகளை இச்சமயம் ஏற்றுக் கொண்டதில்லை.[10] ஜைனர் என்ன தொழில் செய்யலாமோ அப்படிப்பட்ட தகுதிவாய்ந்த தொழிலில்தான் ஈடுபட வேண்டும். ஹிம்சைக்கும், குசீலத்துக்கும் காரணமான தொழில்களில் ஈடுபடக்கூடாது. அப்படிப்பட்ட தொழில் செய்வது ஜைன மக்களுக்கு அடையாளம் இல்லை.[11]

சேந்தன்வேளான், மயிந்தன்வேளான், புரவன்வேளான், வேளான் சாத்தன் போன்றவை கல்வெட்டுக்களில் காணப்படும் வேளான் பெயர்களாகும். அக்காலத்தில் வேளாண்மைத்

தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் சொந்த விளைநிலங்கள் மட்டுமின்றி, கோயில்களுக்கு அளிக்கப்பட்ட பள்ளிச்சந்த நிலங்களையும் பயிரிட்டு வந்துள்ளனர். **குறண்டிகாவிதி, சிலன்காவிதி, ஏனாதிக்கூத்தன்** போன்ற வணிகப் பிரிவைச் சார்ந்த மக்களும் அக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். கோன், இடையன் என்று அழைக்கப்பட்ட ஆயர்குல மக்களும் வாழ்ந்துள்ளனர். **திருநேச்சுரத்துக்கோன், மொழிச்சிக்கோன், இடையன் மனியன்சாத்தன், இடையன் சேந்தன்** போன்றோர் ஆயர் குலத்தைச் சார்ந்தவர்களாவர்.[12]

இந்தியாவின் வடபகுதியில் தழைத்திருந்த சமணசமயம் படிப்படியாகத் தென்னகத்திற்கும் பரவலாயிற்று. இச்சமயம் துறவியரின் அயராத முயற்சிகளினாலும், அரசகுலத்தவரின் ஆதரவினாலும், பொதுமக்களின் ஈடுபாட்டினாலும் நம்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்கிப்பெருகலாயிற்று. சமணசமயம் தென்னிந்தியாவில் வேரூன்றி தழைத்த பிறகு தமிழ் குடிமக்கள் பலரும் துறவு நெறி பூண்டு சமயப்பணி ஆற்றியிருக்கின்றனர். ஆடவர் மட்டுமின்றி பெண்டிரும் துறவு நெறி பூண்டொழுகி இருந்திருக்கின்றனர். தென்பாண்டிய நாட்டிலிருந்த ஏராளமான துறவியரையும், குரத்தியரையும் பற்றிய செய்திகள் கழுகுமலை, திருச்சாரணத்துமலை, ஏர்வாடி முதலிய கல்வெட்டுகளால் அறியலாம்.[13]

ஜைன குலத்தில் பிறந்தும் தீர்த்தங்கரரை வணங்காமலும், தீர்த்தங்கரர் கூறிய தர்மத்தில் நம்பிக்கை இல்லாமலும், ஜைனர் பாலிக்க வேண்டிய ஒழுக்கங்களை பாலிக்காமலும் இருந்தால் அவரை ஜைனர் என்று சொல்லக்கூடாது. ஜைனர் குலத்தில் பிறந்ததால் ஒருவர் ஜைனர் ஆகமுடியாது. ஜைன தர்மத்தில் சொல்லப்பட்ட ஒழுக்கங்களை பாலிப்பவரே ஜைனர் ஆவார். ஜைனராக விரும்புவோர்கள் போதைப் பொருள்களைக் குடிப்பதில்லை என்று சத்தியம் ஏற்க வேண்டும். வேசியர் தொடர்பும் ஒரு கெட்ட காரியம் என்றிருந்தனர். அக்காலத்தில் இவர்கள் சிறந்த குருக்களுடன் தொடர்பு வைத்திருந்தனர். பெண்களைப் பொருத்தவரை தொழிலுக்காகவோ, படிப்பதற்காகவோ தனியே வெளி இடங்களுக்கு செல்லுதல் கூடாது. அக்காலத்தில் பெண்கள் தக்க துணையுடன் தான் வெளியே சென்றர். ஆலயதரிசனம், குருதரிசனம் என்றாலும் தனியே செல்வதில்லை. இவர்கள் வீட்டு நிர்வாகத்தை நடத்தினர்.[14]

இவ்வாறு தமிழகத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் சமணசமயம் தமக்கென அமைந்த உயர்நெறிகளைப் போற்றும் வண்ணம் கலைகள் பலவற்றை செம்மையுடன் பாதுகாத்து

வருகின்றது. ஒருகாலத்தில் தமிழகம் முழுவதும் பரவி தமது உயர் அறநெறிகளைப் பரப்பி வந்த சமணர்கள் இன்று மிகவும் குறுகி ஏறக்குறைய 150 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். இறை வழிபாட்டிற்கென அமைந்த ஜினாலயங்கள் இருக்கும் ஊர்களின் எண்ணிக்கை 107 ஆகும். இவ்வாறு உலகில் முதலில் தோன்றியதாகக் கருதப்படும் சமண சமயம் சமுதாயத்தில் நல்ல பல ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டு, மக்கள் அனைவரும் வேற்றுமைப் பாராமல் ஒற்றுமையுடன் வாழ்ந்திருந்தனர். வாழ்ந்து கொண்டு வருகின்றனர் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

உதவிய நூல்கள்

1. மயிலை சீனிவேங்கடசாமி , சமணமும் தமிழும், பக் - 41
2. கே. நாராயணன், வழிகாட்டும் மதங்கள் - சமணம், பக்- 4
3. மேற்படி பக் - 6
4. மயிலை சீனி வேங்கடசாமி , சமணமும் தமிழும், பக் - 39
5. கே. நாராயணன் , வழிகாட்டும் மதங்கள் - சமணம், பக் - 45.
6. பார்சுவநாதன், ஜைனஅறமும், அறிவியலும், பக் - 64
7. மேற்படி பக் - 37.
8. ஏ.ஏகாம்பரநாதன், கழுகு மலையில் சமணம், பக் - 140
9. மேற்படி, பக் - 142
10. ஏ.ஏகாம்பரநாதன், தென்பாண்டி நாட்டு சமணக் கோயில்கள், பக் - 180.
11. பார்சுவநாகன், ஜைனஅறமும் அறிவியலும், பக் - 56
12. ஏ. ஏகாம்பரநாதன், தென்பாண்டி நாட்டு சமணக் கோயில்கள், பக், 182
13. மேற்படி, பக் - 179
14. பார்சுவநாதன், ஜைன அறமும் அறிவியலும், பக் - 57.



39. கண்டராதித்திய சோழரும் சமண மதமும் - ஓர் ஆய்வு

முனைவர். க. கருப்பையா, சென்னை.

தமிழ்நாட்டில் பண்டுநெடுங்காலமாக பல மதங்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஆனால் அவைகளுள் ஒரு சில மதங்களே உன்னத நிலையை எட்டியுள்ளது. மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்று அவர்கள் வாழ்க்கையின் வழிகாட்டிகளாகவும், பழக்க வழக்கங்களின் காலக் கண்ணாடிகளாகவும், பண்பாட்டின் பாதுகாப்புச் சுவர்களாகவும் அமைந்துள்ளன. விரல் விட்டு எண்ணக்கூடிய அத்தகு மதங்களில் சமணமும், புத்தமும் சிறப்பாகச் சொல்லக் கூடியவைகளாகவும், வைணவமதம் ஏற்கனவே தமிழகத்தில் காலூன்றி மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதும் உண்மையே.

மேலும் அது தமிழ்நாட்டில் திராவிட சைவ மதத்தோடு இணைந்து இரட்டைக்குழல் துப்பாக்கி போன்று வேற்று மதங்களைத் தாக்கி தங்கள் செல்வாக்கினைப் பதித்து விட்டன. அதிலும் வைணவம் ஒருபடி மேலே சென்று தன்னிடமுள்ள சில கொள்கைகளை விட்டுக் கொடுத்தும் சைவ மதத்தின் பல கொள்கைகளைத் தன்னுள் இழுத்துக் கொண்டு ஒரு பரிணாம வளர்ச்சியைத் தோற்றி விட்டிருக்கிறது.

இதிகாசங்களையும் , புராணங்களையும் எழுதி மக்கள் மனதை பண்படையச் செய்து இரு மதங்களும் இணைபிரியாத இந்து மதம் என பிரகடணப் படுத்தி விட்டன. கி.பி. 7 - 8 ஆம் நூற்றாண்டுகளில் இருமதங்களின் ஒட்டு மொத்த புரட்சித் தீயில் கொள்கைப் பிடிப்புள்ள சமணமும், பௌத்தமும் பொசுங்கிவிட்டது என்று எண்ணினால் அது மிகையில்லை.

தமிழ்நாட்டில் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு சோழர்களின் ஆளுகைக்குட்படுத்தும் பொழுது அனைத்து மதங்களுக்கும் அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கிறது. காழ்ப்புணர்ச்சி தவிர்க்கப்பட்டு எல்லா மதங்களையும் காப்பாற்றும் முயற்சியில் புதிய அரசாங்கம் ஈடுபடுகிறது. அதனால் செல்வாக்கு இழந்த பௌத்தமும், சைனமும் மீண்டும் உயிர்பெற்று எழத் துவங்கின. முதலாம் பராந்தகன் (கி.பி. 907) தொடங்கி பின்னால் வந்த சோழர்கள் அனைவரும் பல

கொடைகள் வழங்கி இவ்விரு மதங்களையும் ஆதரித்தனர். புத்தொளி பெற்று வளர்ச்சியடைந்தன என்றாலும் முன்னர் தான் இழந்த செல்வாக்கினை மீண்டும் முழுதும் பெற இம்மதங்களால் முடியவில்லை. இருப்பினும் அதன் கொள்கைகள் தமிழ் மக்களோடும் மன்னர்களோடும் இரண்டறக் கலந்துள்ளது என்பது மட்டும் உண்மை.

தமிழகத்தின் பொற்காலம் என்று போற்றப்படுவது கி.பி. 850 முதல் கி.பி. 1070 வரையிலான காலத்தில் ஆண்ட (விஜயாலய சோழன் முதல் அதிராஜேந்திர சோழன் வரை) சோழ மன்னர்களின் ஆட்சியாகும். இவர்கள் பொதுவாக சைவ மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் பிற மதங்களையும் மதித்துப் போற்றி வந்துள்ளனர் என்பது வெள்ளிடை மலை. இருப்பினும் இவர்கள் ஆருகதமத்தின் மேல் அதிக அக்கறையும், பற்றும் கொண்டுள்ளனர் என்பது அவர்களின் தானதர்ம சான்றுகளாயிருக்கின்றன. இவர்களின் இத்தகு அறச்செயல்களை இம்மதத்தின் மீது மனமொன்றிச் செய்வதை ஆய்வு செய்யும் போது ஏதோ ஒரு வகையில் ஆழ்ந்த பற்றும், மதிப்பும் அம்மதத்தின் மீது செலுத்தியுள்ளனர் என்று தெரிகிறது. ஒரு சில அரசர்கள் இம்மதத்தின் பாதுகாவலாக மட்டுமல்லாது உண்மையாகவே கடைப்பிடித்தொழுகினார்கள் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

சோழநாட்டை ஆண்ட முதலாம் பராந்தக சோழரின் மகன் (கி.பி. 907 - 955) கண்டராதித்திய சோழன் (கி.பி.950 - 957) ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போதே இறந்து விட்டதாகக் கோனேரி ராஜபுரம் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவரின் இந்த இறுதி நிகழ்வை **'மேற்கெழுந்தருளிய தேவர்'** என்ற வார்த்தையால் குறிப்பிடுகின்றனர். இதன் உள் அர்த்தம் என்னவென்று ஆராய்ந்து பார்த்த பலரும் பல கருத்துக்களைக் கூறுகின்றனர். K.A.N.. சாஸ்திரியார் தமது சோழர்கள் என்னும் ஆங்கில நூலில் மேற்கெழுந்தருளிய தேவர் என்பதற்கு மேற்கு நோக்கிச்சென்று விட்டார் என்று (the king who went to west) மட்டும் நேரிடையான அர்த்தம் தொனிக்கும் முறையில் கூறியுள்ளார். (The Cholas,p 252 - A.R.E.1920-21, pt,II,para289)

இந்நிகழ்ச்சியை அடுத்து இறந்து பட்ட கண்டராதித்த சோழனின் மனைவியும் இராணியுமான செம்பியன் மாதேவி அடிகள் கைம்மை நோன்பு கொண்டு மறைந்த மன்னனுக்கு சிலை வடித்து வழிபடுவது போன்று காட்சியை கோனேரிராஜபுரத்தில் அமைத்துள்ளது நோக்கத்தக்கதாகும். அதாவது மன்னன் இறந்து விட்டான் என்பதையே மேற்கூறிய பதம் அறிவிக்கிறது. மேலும் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் லெக்சிகன்

என்னும் நூலில் **"மேற்கெழுந்தருளின"** என்ற வார்த்தைக்கு **சுவர்க்கம் அடைந்தனர்** என்று பொருள் கூறுகிறது.

இச்சொல்லுக்கு இணையாகத் தமிழ் இலக்கியங்களில் **வடக்கிருத்தல்** என்ற வார்த்தைப் பயன்படுத்தப்படுகிறது. ஈண்டு கவனிக்கத்தக்கது. உயிர் துறக்கும் துணிவுடன் வடக்கு நோக்கி இருந்து **பிரயோபவேச விரதத்தை** மேற்கொள்ளுதல் என்று தமிழ் லெக்சிகன் அர்த்தம் கொள்கிறது. பிராயோபவேச விரதம் என்ற வார்த்தைக்கு கூர்ம புராணம் கீழ்கண்ட விளக்கத்தைக் கொடுக்கிறது. அதாவது உயிர் விடுதல் பொருட்டு தருப்பையில் உணவின்றியிருக்கும் மகாவிரதம் என்று கூறுகிறது.

புலவர் கழாத்தலையார் பாடிய புறப்பாடலில் வடக்கிருத்தல் என்னும் நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறார். பெருஞ்சேரலாதன் என்ற சேர நாட்டு மன்னன் கரிகால் பெருவளத்தான் என்னும் சோழனோடு வெண்ணிப்பரந்தலை என்னும் இடத்தில் பெரும் போரில் ஈடுபட்டான் . அப்போது சோழன் பெருவளத்தான் எய்திய அம்பு பெரும்சேரலாதனின் மார்பில் தைத்து ஊடுருவி அதன் புறத்தே சென்றது. அதனைப் புறப்புண் என்று பார்ப்பவர் சொல்லுவர் என எண்ணி நாணம் கொண்டு வடக்கிருந்து உயிர் துறக்க முனைந்தான் என்பதனை,

தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன், ஈங்கு
நாள் போற் கழியலஞாயிற்றுப் பகலே *(புறம்)*

புறப்புண் நாணி உயிர்விட்ட மன்னனை வெண்ணிக் குயத்தியார் என்னும் பெண்பாற் புலவர்,பலபடப் புகழ்ந்து வெற்றிக் கொண்ட மன்னனை இகழ்ந்தும் கீழ்கண்ட பாடல் வரிகளால் உணர்த்துகிறார்.

அமர்கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப்பறந்லை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே

த ஆற்றல் வெளிப்பட வென்ற வளவனின் புகழை விட விழுப்புண் அடைந்தும் அதனைப் புறப்புண் என நாணியது மிக்க புகழ் உடையதாயிற்று . ஆதலால் நின்னினும் மிக நல்லவரே அன்றோ என்று சொல்கிறார்.

பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்த ஆந்தையார் என்னும் மற்றுமொரு புலவன் தன்னுடைய நண்பரான மன்னர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்ததை அறிந்தார்

அவரைக் கண்டு வரச் சென்ற செய்தியை இன்னொரு புறப்பாடல் விளக்குகிறது. மேலும் பதினெண் கீழ் கணக்கு நூல் வகையைச் சார்ந்த சிறுபஞ்சமூலத்தில் (உண்ணாநோன்பு இருந்து)வடக்கிருந்த செய்தி என்பது ஒரு காரணத்தால் உயிரை விட எண்ணுபவர் வட திக்கில் ஆற்றிடைக் குறை போன்ற இடத்தில் அமர்ந்து உண்ணாதிருந்து உயிர் விடுதல் என்று இன்னொரு புறநானூறு பாடல் மூலம் அறிய முடிகிறது. சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பல்லவர் காலத்துக்கு முந்திய காலகட்ட இலக்கிய குறியீட்டு நூலில் (Pre - pallava Index, p - 729) வடக்கு திக்கு, வடக்கிருத்தல் என்பது வடக்கு நோக்கி உண்ணாநோன்பு இருந்து கொஞ்சம் கொஞ்சமாக உயிர் விடுதல் என்று அர்த்தம் கூறப்பட்டுள்ளது. ஆசாரக் கோவை என்னும் நூலில் (Pre - pallava Index ,p - 729) கிடைக்கப் பெற்ற செய்தியை எடுத்துக்காட்டுக் காட்டி கீழ்கண்டவாறு விளக்குகிறது. அதாவது வடக்குத் திசையில். தலை வைத்து தூங்குவதோ அல்லது கால்களை நீட்டித் தூங்குவதோ கூடாது என்றும், வடதிசையை மையமாகக் கொண்டு இயற்கையான எத்தகைய செயலிலும் ஈடுபடலாகாது என்றும் கூறுகிறது.

எனவே வடக்கிருத்தல், மேற்கெழுந்து அருளல் போன்ற இப்பதங்களெல்லாம் உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்டமையைக் குறிக்கின்றது என்பது தெள்ளத் தெளிவாக மேலே கூறப்பட்ட செய்திகளிலிருந்து தெரிய வருகிறது. இத்தகைய பழக்க வழக்கம் தமிழர்களிடையே தொன்று தொட்டு இருந்து வந்ததற்கான சான்றுகளாக இருந்துள்ளன என்பதை இலக்கியங்களின் மூலமாகஅறிய முடிகிறது. இருப்பினும் ஆருகத மதத்தில் இதை ஒரு புனித வழக்கமாக இறுதிக்காலத்தில் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை.

வடக்கிருத்தல் என்ற கொள்கை சமண மதத்தின் மிக முக்கியக் கோட்பாடான **சல்லேகனை** என்பதையே குறிப்பிடுகிறது என்று மயிலை சீனி வேங்கடசாமி தமது நூலில் கூறுகிறார். (வரலாற்றுதமிழ் இலக்கிய பேரகராதி vol III 812, சமணமும் தமிழும் பக் 180-184) மேலும் அவர் அருங்கலச்செப்பு என்னும் நூலில் உள்ள ஒரு செய்தியைக் கீழ்க்கண்டவாறு எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

இடையூறு ஒழிவில் நோய் மூப்பு இவை வந்தால்
கடை துறத்தல் சல்லேகனை

அதாவது பொறுக்க முடியாத மனவேதனை தீராத நோய், மிகுந்த மூப்பு வந்தால் சல்லேகனை செய்து உயிர் விடுதல் என்பதை சமணர்கள் தங்களின் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இது தற்கொலை செய்வதற்கு ஒப்பாகாது என்று

நீலகேசி என்னும் நூல் விவாதிக்கிறது கல்வெட்டுகளில் இவை **நிசீதிகை** என்ற பதத்தால் குறிப்பிடப்படுகிறது; இது சமண முனிவர்கள் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த இடத்திலமைந்த ஞாபகச் சின்னம் என்ற அர்த்தம் கொடுக்கிறது.

"ஐம்பத்தேழு சைனந் நோற்ற சந்திர நந்தி ஆசிரிகர் நிசீதிகை" என்று கி.பி. 3 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாதர் குன்று கல்வெட்டுக் கூறுகிறது. அதாவது சல்லேகனை அல்லது வடக்கிருந்து உயிர் துறக்கும் பெரியோனுக்கு அமைக்கப் பெறும் நினைவிடத்தைக் குறிக்கிறது.

வடக்கிருத்தல் ,சல்லேகனை , நிசீதிகை இம்மூன்றும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தல் என்ற உயரிய சமண மதக்கொள்கையை விவரிக்கிறது. எனவே சமணத்தின் இக்கொள்கை இந்து மதத்தில் மிகப் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. எப்படி இரண்டு மதங்களின் கோட்பாடுகளை ஒப்பிட்டு நோக்கினால் இவ்விரண்டும் வேறல்ல ஒன்றெனத் தெளிவாகப் புரிந்துக் கொள்ளலாம்.

இப்போது இந்து மதத்தில் ஒரு சாரார் ஊன் உண்ணாமையைக் கடைப்பிடிக்கின்றனர். இது ஆருகத மதத்தின் அடிப்படைக் கொள்கை. சமண மதம் செல்வாக்கிழந்த நாளில் அவர்கள் அனைவரும் இந்து மதத்தில் சேர்ந்தனர். மதம் மாறியவர்கள் ஆருகத (மரக்கறி) உணவு உட்கொள்ளும் பழக்கத்தை அப்படியே வைத்துக் கொண்டனர்

மகாவீரர் வீடு பேறடைந்த நாளை தீபாவளி (தீபம் = விளக்கு, ஆவளி = வரிசை) தினமாகக் கொண்டாடினர் சமணர்கள். இந்து மதத்திற்கு மாறிய போது அதை அப்படியே கடைப்பிடிக்கின்றனர். இப்பொழுதுள்ள நரகாசுரன் புராணக் கதை பொருத்தமற்றது என்று மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் கூறுகிறார்.

சிவராத்திரி திருவிழா சமணர்களுக்கும் சைவர்களுக்கும் பொதுவான திருவிழா. கைலாயமலை இருவருக்கும் பொதுவான புனித மலை. ஏனென்றால் முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் இம்மலையில் தான் வீடுபேறு அடைந்ததாக சிவராத்திரி விழாவை சமணர்கள் கொண்டாடுகிறார்கள்.

சைவரும், சமணரும் விருஷபத்தை தர்மத்தின் வடிவாகவும் சிவபெருமானின் வாகனமாக முன்னவரும், தியானத்தின் வடிவமாக பின்னவரும் கருதுகின்றனர். சிவபெருமான் முப்புரம் எரித்த கதையை சைவ நூல்கள் கூறுவது போன்று (மும்மலமாகிய காமம், குரோதம், மயக்கம்,)அருகப் பெருமானும் முப்புரம் எரித்த கதை சொல்லப்படுகிறது.

ஐயனார் - இது ஊர்த் தெய்வம். இதை பௌத்தம், சமணம் எனும் ஒரு சமயத்திலிருந்து எடுத்து இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு வழிபாட்டுத் தெய்வமாக்கப்பட்டுள்ளது. (பௌத்தத்தில் குதிரை வாகனம், சமணத்தில் யானை வாகனம்) இதற்கு பிரம்மயட்சகம், சாத்தனார் என்று பெயர்கள் சூட்டியுள்ளனர்.

இந்துக்களின் திருத்தொண்டர் புராணமும், சமணரின் திரிஸஷ்டி ஸலகால புருஷர் சரித்திரமும் ஒன்று போலத் தெரிகிறது. திரிஸஷ்டி என்பது அறுபத்தி மூன்று என்றும், ஸலகால புருஷர் என்பது பெரியவர் என்றும் அர்த்தம் கொடுக்கிறது. (தீர்த்தங்கள் 24, சக்கரவர்த்திகள் 12, பலதேவர் 9, பிரதி வசுதேவர் 9 ஆக மொத்தம் 63) எனவே சமணர்களும் , சைவர்களும் சித்தர் வழிபாடு நடத்திய பின்பே குழந்தைகளுக்குக் கற்பித்தலைத் தொடங்குகின்றனர். சித்தர்கள் வாழ்ந்த இடம் பிற்காலத்தில் சமணர்களின் குகைக் கூடங்களாக மாற்றப்பட்டது. மேலே கூறப்பட்ட இவ்வொற்றுமைக் கருத்துக்களினால் மக்களிடையே இவ்விரு மதங்களும் செல்வாக்குப் பெற்றுள்ளது என்பது வெளிப்படையாக உள்ளது. இதனால் மன்னர்களாலும் மக்களாலும் சைவத்தையும் சமணத்தையும் பிரிக்க முடியாமல் ஒன்றெனத் தெளிந்துள்ளனர் என்பது தெரிகிறது. எனவே தான் சமணத்திலிருந்து சைவத்திற்கும், சைவத்திலிருந்து சமணத்திற்கும் பலர் மாறி யுள்ளனர் என அறிய முடிகிறது.

பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் (கி.பி. 600-630), பாண்டிய மன்னன் நெடுமாறன் (கி.பி.850) இவ்விருவரும் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாறியுள்ளனர். இவர்களுக்குப் பின் வந்த சோழ அரசர்கள் சைவ மதத்தைச் சார்ந்தவர்களாயினும் வேறு மதங்களை வெறுத்து ஒதுக்கினாரல்லர். அதிலும் சமண மதத்தில் ஒரு பற்றுதல் அதிகமாக இருந்துள்ளது என்பது மட்டும் அவர்களின் கல்வெட்டுகளில் இம்மதத்திற்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அதிலும் கண்டராதித்த சோழனை இது வெகுவாக ஈர்த்துள்ளதில் ஆச்சர்யப் படுவதற்கில்லை. எனவே தான் இம்மதத்தின் மீது தீவிரப் பற்றுக் கொண்ட இவர் ஏழு வருடங்களுக்குள் தம்பதவியைத் துறந்து மேற்கெழுந்தருளியுள்ளார் எனத் தெரிகிறது.

'மேற்கெழுந்தருளின' என்ற இப்பதமும் வடக்கிருத்தல் என்ற வார்த்தையும் சுவர்க்கம் அடைதல் என்ற பொருளையே கொடுக்கின்றது என ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. மாறுபட்ட திசைகளின் பெயரைக் கொண்டிருந்தாலும் வேறுபட்ட பொருளைத் தராமல் உயிர் நீத்தல், சுவர்க்கமடைதல் என்ற பொருளையே கொடுப்பதை ஈண்டு முக்கியமாகக் கொள்ள

வேண்டும். இதனடிப்படையில் கண்டராதித்த சோழனை சமணரெனக் கொள்ளல் சரியா என்று கருத இடமுண்டு? ஏனெனில் இவர் ஒரு சிறந்த சைவ நெறி சமயத்தைச் சார்ந்தவர் என்பதும் சைவ மதத்தின் 12 திருமுறை நூல்களில் ஒன்றான 'திருவிசைப்பா' என்னும் நூலை எழுதியவர் என்பதும் யாவரும் அறிந்ததே. (Cholas, p - 188) இந்நூல் அவரது தந்தை மாமன்னர் பராந்தகசோழதேவர் தில்லை நடராஜப் பெருமானுக்கு பொன்னால் கூரை வேய்ந்த செய்தியை விளக்குகிறது. அப்படியிருக்க ஒரு சைவமதத்தினரை சமணரெனக் கொள்ளல் தருமமா? இறந்து பட்டோரை சைவ மதத்தில் மரித்தார், சிவலோக பதவியடைந்தார், வாழ்வை நீத்தார் என்று பல நல்ல தமிழ்ச் சொல் இருக்கும் போது மேற்கெழுந்தருளினார் என்று ஏன் பயன் படுத்தப்பட்டது என்பது மட்டும் புரியவில்லை.

சில கொள்கைகளைத் தவிர்த்து பல கொள்கைகளால் இவ்விரு மதமும் ஒன்றெனக் காண்பதால் ஏற்பட்ட பெருந்தன்மையான மயக்கமாக இருக்கலாம். இவருக்குப் பின் வந்த சோழ அரசர்கள் பலர் இம்மதத்தின் மீது பேரன்பு பூண்டு பல நிவந்தங்கள் அளித்து ஜினாலயங்களையும் கட்டியுள்ளனர். திருநறுங்கொண்டை, சிறுவாமுத்தூர் போன்ற ஊர்களில் உள்ள சமண மடா லயங்களுக்குப் பிற்காலச் சோழர்கள் அளித்த நிவந்தங்களையும் பற்றிச் சிறப்பாகப் பேராசிரியர். ஏகாம்பநாதன் என்பவர் அவருடைய நூல்களில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவைகளெல்லாம் நோக்கும் போது சோழர்கள் சமண மதக் கொள்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டு தமது வாழ்க்கையில் கடைப்பிடித்தது மேற்கெழுந்தருளியதன்மூலம் தெரிகிறது. இருப்பினும் இதை உறுதி செய்யும் முகமாக மேலும் சில தெளிவான ஆதாரம் தேவை என்பது உண்மையே. எனவே எதிர் காலத்தில் கிடைக்கும் பல மறுக்க முடியாத ஆதாரங்கள் அதனை உறுதி செய்யலாம்.






அயிரை மலை, திண்டுக்கல் மாவட்டம்




குகைப்பள்ளி – முகப்புத் தோற்றம்
இரத்தினகிரி, வாலாஜாப்பேட்டை வட்டம்



குகைப்பள்ளி – முகப்புத் தோற்றம்
நாராயணபுரம், வாலாஜாப்பேட்டை வட்டம்




குகைப்பள்ளி – சமணர் படுக்கைகள்
நாராயணபுரம், வாலாஜாப்பேட்டை வட்டம்



குகைப்பள்ளி – முகப்புத் தோற்றம்
திம்மணாச்சாரி குப்பம், வாலாஜாப்பேட்டை வட்டம்



சமணர் படுக்கைகள்
சிவநாதபுரம், வேலூர் வட்டம்




பைரவநாதர் மலை – குகைப்பள்ளி
குக்கலப்பள்ளி, காட்பாடி வட்டம்



நெட்டேறிமலை குகைப்பள்ளி – முகப்புத் தோற்றம்
வேப்பூர், காட்பாடி வட்டம்



சமணர் படுக்கைகள்
மேல் கூடலூர், விழுப்புரம் வட்டம்




அருமாமலை குகைப்பள்ளி – உட்புறத் தோற்றம்
மலையம்பட்டு, வாணியம்பாடி வட்டம்



மலைநாதர் கோயில் கோபுரம்
மேல் சித்தாமூர், செஞ்சி வட்டம்



தேர் மண்டபம் – தென்புறத் தோற்றம்
மேல் சித்தாமூர், செஞ்சி வட்டம்




திருமலை – குகைக்கோயில் – வெளிப்புறம்
திருவண்ணாமலை மாவட்டம்




பார்சுவநாதர் கோயில் – தென்புறத் தோற்றம்




அப்பாண்டைநாதர் கோயில்
திருநறுங்கொண்டை, உளுந்தூர்பேட்டை வட்டம்




ஆதிநாதர் கோயில்
உப்புவேலூர், மரக்காணம் வட்டம்



சமணர் கோயிலின் இடிபாடுகள்
கோலியனூர், விழுப்புரம் வட்டம்.




குந்தவை ஜினாலயத்தின் இடிபாடுகள்
தாதாபுரம், திண்டிவனம் வட்டம்.



24 தீர்த்தங்கரர்கள்
திருநாதர்குன்று, செஞ்சி வட்டம்.




பாறைச் சிற்பங்கள்,
திறக்கோல், திருவண்ணாமலை மாவட்டம்.



பார்சுவநாதர்
தொண்டூர், செஞ்சி வட்டம்.



தீர்த்தங்கரர் சிற்பம்
மேல் கூடலூர், செஞ்சி வட்டம்.



மகாவீரர்
ஆற்காடு, திருக்கோயிலூர் வட்டம்.




தீர்த்தங்கரர்
அருளவாடி, திருக்கோயிலூர் வட்டம்.




மகாவீரர்
சோழவாண்டிபுரம், திருக்கோயிலூர் வட்டம்



தீர்த்தங்கரர்
மரக்காணம், திண்டிவனம் வட்டம்



ஆதிநாதர்
அருகர் கோயில், பூண்டி




ஆதிநாதர்
மணவூர், திருத்தணி வட்டம்



சந்திரநாதர்
பெரமண்டூர், திண்டிவனம் வட்டம்




தீர்த்தங்கரர்
சிறுமதிரை




கோமதீஸ்வரர்
மேல் சித்தாமூர் – செஞ்சி வட்டம்




ரிஷபநாதர்
மேல் சித்தாமூர் – முற்காலச் சோழர் கலை



தீர்த்தங்கரர்
மலையம்மன் கோயில், தியாகதுர்க்கம்




தீர்த்தங்கரர்
ஆதிநாதர் கோயில், உப்புவேலூர்




தீர்த்தங்கரர்
கோமாஹூர்



தீர்த்தங்கரர்
குமரப்ப நாயக்கன்பேட்டை, கடலூர் மாவட்டம்



கோமதீஸ்வரர்
சோழவாண்டிபுரம், திருக்கோயிலூர் வட்டம்



பார்சுவநாதர்
அருகர் கோயில், பூண்டி




தருமதேவி
மேல் சித்தாமூர், முற்காலச் சோழர் கலை




தருமதேவி
சோழவாண்டிபுரம், சோழர் கலை



தருமதேவி
முற்காலச் சோழர் கலை, தியாகதுர்க்கம்




பார்சுவநாதர்
நல்ஞானக்குன்று, வளத்தி




ஆதிநாதர் திருமேனி
பெரமண்டூர், திண்டிவனம் வட்டம்



சர்வாணயக்ஷன் திருமேனி
அப்பாண்டைநாதர் கோயில், திருநறுங்கொண்டை




தருமதேவி திருமேனி
எழுத்துப் பொறிப்புடன் கூடியது,
திருநறுங்கொண்டை




ரிஷபநாதர் திருமேனி
திருநறுங்கொண்டை




எழுத்துப் பொறித்த நேமிநாதர் பீடம்
திருநறுங்கொண்டை



எழுத்துப் பொறித்த சந்திரநாதர் பீடம்
திருநறுங்கொண்டை



சந்திரநாதர்
எழுத்துப் பொறித்த திருமேனி,
திருநறுங்கொண்டை



தீர்த்தங்கரர் திருமேனி
சிங்காணிக்குப்பம், திண்டிவனம் வட்டம்



சாமரைதாரி
சளுக்கை, வந்தவாசி வட்டம்



சக்கரீஸ்வரி
சளுக்கை, திருவண்ணாமலை மாவட்டம்




தீர்த்தங்கரர்
திருமலை, போளூர் வட்டம்



மகாவீரர்
சளுக்கை, வந்தவாசி வட்டம்



திருதீர்த்தி
சிங்காணிக்குப்பம், திண்டிவனம் வட்டம்



இயக்கி அம்பிகா
சிங்காணிக்குப்பம், சோழர்கலை



மகாவீரர்
அரும்பலூர் புதையல்
போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்



அம்பிகா
அரும்பலூர் புதையல்
திருவண்ணாமலை மாவட்டம்



இயக்கி – சிற்ப வடிவம்
கி.பி. 3 – 4 ஆம் நூற்றாண்டு
கடைமலைப்புத்தூர்




காலிபங்கன் – கொம்புடைத் தெய்வம்
மண் தகட்டில் வரையப்பட்டது




கன்னியர் எழுவர் – புடைப்புச் சிற்ப முத்திரை
ஹரப்பன் நாகரிகக் காலம்



செம்மறியாடு – சிற்ப வடிவம்
ஹரப்பன் நாகரிகக் காலம்



தொண்டூர்
சங்ககாலக் கல்வெட்டு
எழுத்து வடிவம்
கி.மு. 300 முதல் 200 வரை



நெகனூர்பட்டி
சங்கம் மருவிய காலக் கல்வெட்டு
எழுத்து வடிவம்
கி.பி. 300 முதல் 400 வரை

40. தமிழகத்தில் சமணமதப் பெண் துறவிகளும் கல்வித் தொண்டுகளும்

த. அருண்ராஜ் – பா. அறவாழி, சென்னை

சமண மதம் நம் தமிழகத்தில் எப்போது ஒளி விட ஆரம்பித்ததோ அப்போது முதல் பல நூற்றாண்டுகளாகச் சமணத் துறவியர் நாட்டின் பலவேறு பகுதிகளுக்கும் சென்று சமய சமுதாயப் பணிகளைஆற்றி வந்திருக்கின்றனர். மனித குலம் உயரும் வகையில் எளிமையான போதனைகளை அனைவருக்கும் புரியும் படி எடுத்துரைத்ததால் இத்தகைய துறவிகளின் மீது மக்கள் அதிக அளவில் ஈடுபாடு கொள்ளலாயினர். ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல் இவர்கள் தங்களுடைய குருமார்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் செயல்பட்டிருக் கின்றனர். அதனால் மனித சமுதாயம் மேலும் எழுச்சிப் பெற்றது.

இத்தகைய பெருமை மிக்க சமண சமயத்தில் பெண் துறவிகளின் பங்கு மகத்தானது. கல்வி போதிக்கும் நல்லாசிரியை யாக அவர்கள் ஆற்றிய பெரும்செயல்களை சுருக்கமாகக் கல்வெட்டுச் சான்றுகளின் துணைக் கொண்டு விளக்குவதே இக்கட்டுரையாகும்

பெண் துறவிகள்

துறவு நெறி பூண்டு அறம் வளர்த்த பெண்மணியினரைக் **குரத்தி, பட்டாரி, சாரணி, ஆரியை,(ஆர்யாங்கனை)** எனவும் பலவாறாகக் குறிப்பிடுவது வழக்கமாகும். இவர்கள் ஆண், பெண் என்ற பேதமின்றி தங்களது குருவிடம் சமயக்கல்வி பயின்றிருக்கின்றனர்.ஆண் துறவியருக்குப் பெண் மாணாக்கியர் இருந்ததும், பெண் துறவியருக்கு ஆண் சீடர்கள் இருந்ததும் இதனை நன்கு அறிவுறுத்துவதாக உள்ளது. சில இடங்களில் பெண்டிருக்கெனத் தனியாகப் பள்ளிகளும் இருந்திருக்கின்றன.

சமணபள்ளிகள்

தற்காலப் பள்ளிக் கூடங்களைப் போல முந்தைய காலங்களிலும் சமண மத போதனைக் கூடங்கள் **பள்ளி** என்றேஅழைக்கப்பட்டன. இத்தகைய பள்ளிகள் வட தமிழகத்தில் (அன்றைய தொண்டை நாட்டைச் சார்ந்த) திருப்பாண்மலை, வேடலிலும் தென் தமிழக பாண்டியர்களின் இடமான திருசாரணத்து மலையிலும் இருந்திருக்கின்றன. கி.பி. **10 ஆம்** நூற்றாண்டில் திருப்பாண்மலையில் (ஆற்காடுக்கு அருகில் உள்ள இடம்) உள்ள ஒரு குடைவரை குகைப்பள்ளியில் நெம்பிபட்டாரகர் எனும் ஆண் துறவியின் சீடராக இருந்த **பட்டினி குரத்தி** எனும்

த.15.

பெண் ஆசிரியை தங்கியிருந்து சமண சாத்திரங்களை மாணவர்களுக்கு போதித்ததோடு மட்டுமில்லாமல் அப்பெண் துறவி அதே பள்ளியில் குடிநீருக்காக கிணறு வெட்டவும் ஏற்பாடு செய்தார் என வரலாற்றுச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

அதே போல் **கனகவீர குரத்தியர்** எனும் சமண சமய ஆசிரியை வேடலில் (தொண்டை நாடு) குகைப்பள்ளியில் தங்கி இருந்தும் பாடம் கற்பித்தும் தன் சமயத் தொண்டினை ஆற்றினார் என அறிய முடிகிறது.

தமிழ்நாட்டில் குகைப்பள்ளிகள் மட்டுமில்லாமல் முழுக்க முழுக்க பெண்களாலேயே நடத்தப்பட்ட ஒரு சமணப் பல்கலைக் கழகமும் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் இருந்ததற்கான சான்றுகள் கன்னியர்குமரி மாவட்டத்தில் உள்ள திருச்சாரணத்து மலையில் உள்ளன.

இங்கு அக்காலத்தில் அதிக அளவில் சமணமத பெண் துறவிகள் ஆசிரியைகளாக இருந்து மாணவர்களுக்கு கல்வி புகட்டியதாகவும் கழுகு மலையினைச் சேர்ந்த கி.பி.9 - ஆம் நூற்றாண்டு நினைவுக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இந்த பல்கலைக்கழகத்திற்கு திருவண்ணாமலை உள்ளிட்ட தூர பிரரேதசங்களில் இருந்தெல்லாம் சமண சமய அறிஞர் பெருமக்கள் வந்து சேர்ந்ததாகவும் இக்கல்வெட்டு மேலும் குறிப்பிடுகிறது. கழுகுமலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் மேலும் பல பெண் துறவிகளைப் பற்றிய விரிவான செய்திகளை தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் முதலாம் தொகுதியில் (South Indian Inscription Vol-I) காணலாம்.

பெண் ஆசிரியை ஆவதற்கான தகுதிகள்

வயதில் சற்ற முதிர்ந்த, உடலாலும், உள்ளத்தாலும், வலிமையுடைய, கற்ற, சகிப்புத்தன்மையுடைய, குழந்தைகளை வளர்க்கும் விதம் அறிந்த பெண்களே ஆசிரியையாக தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் சாதி, இன வேறுபாடும் இல்லாமல் எல்லா வகுப்பினருக்கும் கல்வி புகட்டினர்.

இப்படியாகச் சிறப்பாக கல்வி பணியாற்றிய சமண பெண் துறவிகள் காலம் எனும் நீரோடையில் சிக்கி, சமணமதம் இல்லாத மற்ற மதங்களின் வளர்ச்சியினாலும், மன்னர்களில் ஆதரவு குறைந்ததாலும் அழிவுறத் தொடங்கிய போது அதோடு தாங்களும் அழியத் தொடங்கினர்.

ஆனால் இவர்களின் பணியினையும், காலகட்டத்தையும் மேலும் தீர்க்கமாக ஆராய்வோமானால் எதிர்காலத்தில் மேலும் பல சமண பெண் ஆசிரியைகளை அறியமுடியும். அதன் மூலம் சமணமதம் புத்துயிர் பெறும் என்பது உண்மை.



41. சமணக் கோயில்கள்

எம்.எ. பத்மராஜ், விழுப்புரம்.

ஜைன தர்மம் வேத காலத்திற்கு முற்பட்டது என்றும் பழைமைச் சிறப்புடையதென்றும் வரலாறு கூறுகிறது. ரிஷப தீர்த்தங்கரர் மக்களுக்கு அருளிய தர்மோபதேசங்களையும், அறவுரைகளையும், நெறிமுறைகளையும் ஜைனம் என்றும் அதைப் பின்பற்றி வாழ்ந்த அனைத்து மக்களும் ஜைனர்கள் என்றும் கூறப்பட்டார்கள். ஜைனம் என்பது ஒரு மத சார்பு உடையதன்று.

ரிஷப தீர்த்தங்கரர் அருளிய தர்மத்தை அனைத்து மக்களும் அறிந்து பின்பற்றவும், ஆசையின் விளைவால் எழும் இன்னல் நிறைந்த வாழ்க்கையில் இருந்து விடுபடும் பெரு நோக்கால் சமண சமய அறவோர் பலர் துறவறம் ஏற்று மனிதசஞ்சாரம் அற்ற இயற்கையின் எழிலார்ந்த சூழலான மலைப்பகுதியினை நாடிச் சென்றனர். உணவுக்கும், உபதேசத்திற்கும் மட்டும் மக்கள் வாழும் பகுதிகளை நாடி வந்தனர்.

அத்தகைய அறவோர்கள் தங்கள் குழுக்களுடனும், சீடர்களுடனும் மலைக்குகைகளில் உறைய படுக்கைகளையும், சமயக் கல்வி வளர பாழிகள் அல்லது பள்ளிகள் நடத்த மேடைகளையும் உருவாக்கினார்கள். ஆரம்ப காலங்களில் திருவுருவங்களை சிற்பமாக வடித்து வழிபடவில்லை.

காலம் செல்லச் செல்ல அருகிலுள்ள பாறைகளில் இறை வடிவங்களைச் சமைத்து வழிபட ஆரம்பித்தனர். இதன் தொடர்சியாக கட்டடக் கோயில்களை உருவாக்கித் தொழ ஆரம்பித்தனர். சமண அறவோர்கள் சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை, வானவியல், மருத்துவயியல், இலக்கிய , இலக்கண தேர்ச்சி என்று அனைத்திலும் சிறப்புடையவர்களாக இருந்து சமண சமயத்தைப் பரப்பியும் அனைத்துக் கலைகளையும் போதித்து சிறப்புடன் வட இந்தியாவில் வாழ்ந்தனர்.

வடக்கில் வளர்ந்து, தழைத்து, செழித்திருந்த சமணம் தெற்கு நோக்கியும் பரவ ஆரம்பித்தது. தென்னாட்டில் சமணம் வந்த காலம் அறுதியிட்டுக் கூற ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றாலும் கி.மு. 3 அல்லது 2 ஆம் நூற்றாண்டில் சமண சமயம் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் பரவியதை அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. எனவே வரலாற்று ஆசிரியர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சமணம் தென்னகத்திற்கு வந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகின் தென்பகுதி பாண்டி நாடு என்றும், நடுப்பகுதி சோழநாடு என்றும், மேற்குப் பகுதி சேரநாடு என்றும், வடக்குப் பகுதி தொண்டை நாடு என்றும் பெயர் பெற்றிருந்தன.

தொண்டை மண்டலம் வடக்கே வடவேங்கடம், தெற்கே தென்பெண்ணையாறு, கிழக்கே வங்கக்கடல் , மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலை இவைகட்கு இடைப்பட்ட பகுதி. தற்போது செங்கல்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு, சித்தூர் மாவட்டங்கள் தொண்டை நாடாகும்.

சோழருக்கும் நாககுலத்தவருக்கும் ஏற்பட்ட பிணைப்பால் தொண்டைக்குலம் தோன்றிய தென்றும் சோழமன்னன் கிள்ளி வளவனுக்கும் நாக இளவரசி பீலிவளைக்கும் பிறந்த மைந்தன் தொண்டைமான் இளந்திரையன் ஆட்சி செய்த நாடு தொண்டை நாடு என்றும் வரலாற்றுச் செய்திக் கூறுகிறது.

ஆரம்ப காலங்களில் தமிழகத்தின் தென் பகுதியில் செழித்திருந்த சமணம் சற்று பிற்காலத்தில் தான் தொண்டை நாட்டில் வேரூன்றியது என்பது சான்றுகளின் அடிப்படையில் கருத வேண்டியுள்ளது. சமண சமயத்தவர்கள் ஏற்றம் பெற்றிருந்தபோது ஏராளமான கலைக் கோயில்களையும், கண்கவர் சிற்ப படிமங்களையும், வண்ண ஓவியங்களையும், சமய வரலாறுகளையும், இலக்கிய, இலக்கண படைப்புகளையும், சமுதாயத்திற்கு செய்த அரும் பணிகளையும் வெளிக் கொணரும் வண்ணம் அறிஞர்கள் பலர் சமணம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர்.. அதன் படி **சமணமும் - தமிழும், தென்னிந் தியாவில் சமணம், ஜைன தமிழ் இலக்கியங்கள், ஜைன தமிழ் இலக்கண நன்கொடை, தமிழகத்தில் ஜைனம், தென்னிந்திய சமண சிற்பக்கலை, சமண கட்டடக்கலை, தமிழக சமண கல்வெட்டுகள், சித்தாமூர் வரலாறு, திருநறுங்கொண்டை வரலாறு, தொண்டை நாட்டு சமணக் கோயில்கள், சமண சமயத் திருவுருவங்கள்** போன்ற பல நூல்கள் வெளிவந்தன.

சமண வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி சமணக் கோயில்கள் மூன்று வகையானவை.1. குகைக் கோயில்கள், 2. பாறைச் சிற்ப கோயில்கள், 3. கட்டடக் கோயில்கள்.

1. குகைக் கோயில்கள்

இவைக் **குகைப்பாழிகள்** என்றும் கூறப்படுகிறது. இயற்கை யான குகைகளாய் அவற்றில் கற்படுக்கைகள், கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தென்னாற்காடு மாவடத்தில் செஞ்சி வட்டத்தில் அகலூரை அடுத்த தொண்டூரில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த மூன்று கற்படுக்கைகளும், சங்ககாலத் தமிழ் பிராமிக் கல்வெட்டும் தொல்லியல் துறை அதிகாரி

திரு. மா.சந்திரமூர்த்தி அவர்கள் 1991 - ஆம் ஆண்டு கண்டு பிடித்துள்ளார். திருக்கோயிலூரில் இருந்து 30 கி.மீ. தூரத்தில் ஜம்பை என்னும் ஊரில் சமணப் பள்ளிகளில் காலத்தால் முந்தியவற்றுள் ஒன்றான குகைப் பள்ளியும்,தமிழ் பிராமிக் கல்வெட்டு ஒன்றையும் தொல்லியல் துறை ஆராய்ச்சி மாணவர் செல்வராஜ் அவர்கள் கண்டுபிடித்தார். இவ்விரு கண்டுபிடிப்பு களும் தொண்டை நாட்டில் சமணத்தின் தொன்மைக்குச் சான்றாக உள்ளது.

செஞ்சியில் இருந்து 32 கி.மீ. வடக்கில் அவலூர் பேட்டை வழியே சேத்துப்பட்டு செல்லும் வழியில் கப்பளாம்பாடி என்ற ஊருக்கு 2 கி.மீ. வடக்கே பறையன்பட்டு உள்ளது. இங்கு அமைந்த குகையில் 7 அடி நீளமுள்ள கல்படுக்கையும், ஐந்து வரி வட்டெழுத்துக் கல்வெட்டும் உள்ளது.

செஞ்சி விழுப்புரம் சாலையில் செஞ்சியில் இருந்து 15 கி. மீ. தொலைவில் கிழக்கே செல்லும் சாலையில் 6 கி.மீ தொலைவில் தளவானூர் உள்ளது. இங்குள்ள பாண்டவமலைக் குகைப்பள்ளி கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் அமைந்த 7 அடி நீளமுள்ள இரண்டு படுக்கைகளும், கல்வெட்டுகளும் உள்ளன.

உளுந்தூர்பேட்டையில் இருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள சிற்றூர் திருநறுங்கொண்டை. இங்குள்ள குன்றின் மேல் அப்பாண்டை நாதர் கோயிலும் குகைப்பள்ளியும் உள்ளது. இங்கு 10 அடி நீளமும், 3 அடி அகலமும் கொண்ட பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட படுக்கைகள் இருந்தன. இவற்றில் சில அண்மைக் காலத்தில் உடைக்கப்பட்டுள்ளன.கி.பி. 7 - 8 ஆம் நூற்றாண்டில் சமணத்துறவிகளைக் கொண்ட வீர சங்கம் இப்பள்ளியில் நிறுவப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

வடஆற்காடு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில் மாமண்டூரில் கல்வெட்டுகளும், வாலாஜா பேட்டைக்கு 15 கி. மீ. தொலைவில் உள்ள நாராயணபுரத்தில் பாண்டவமலைக்குகையில் 7 படுக்கைகளும் அங்கிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ள திம்மணசாரி குப்பத்தில் 6 படுக்கைகளும் கி.பி. 7 - 8 ஆம் நூற்றாண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன.

வேலூரில் இருந்து 2 கி.மீ.தொலைவில் வேலப்பாடி உள்ளது. இங்கு பகவதி மலையில் மூன்று குகைகள் உள்ளன. இதில் ஐந்து படுக்கைகள் உள்ளன. ஐந்தரை அடி நீளமுள்ள இரண்டு திருவடிகள் இங்கு உள்ளன. பாதங்களுக்கு அண்மையில் கல்வெட்டுகளும் உள்ளன.

வந்தவாசியில் இருந்து 50 கி.மீ.தொலைவில் வேடல் என்ற சிற்றூர் உள்ளது. இங்கு கி.பி.8-ஆம் நூற்றாண்டின் சமணப் பள்ளியான இரண்டு குகைகள் உள்ளன. எதிர்புறப் பாறைகளில்

சோழப் பல்லவக் கல்வெட்டுகள் உள்ளன. இதன் சிறப்பு என்னவென்றால் பெண் துறவிகளுக்கென்று ஒரு பள்ளி கி.பி. 885 இல் நிறுவப்பட்டு 500 மாணாக்கியர் இங்குப் பயின்றுள்ளனர்.

தேசூரில் இருந்து 4 கி.மீ.தொலைவில் சீயமங்கலம் என்ற ஊர் உள்ளது. இங்கு கி.பி. 9 - ஆம் நூற்றாண்டின் குகைப்பள்ளிகள் இருக்கின்றன. பாறையின் முகப்பில் மகாவீரர், பார்சுவநாதர், பாகுபலி திருவுருவங்களும், கல்வெட்டுகளும் உள்ளன.

ஆற்காட்டில் இருந்து 5 கி.மீ.தொலைவில் பாண்டவர் மலையுள்ளது. இதற்குச் சற்றுத் தொலைவில் விளாப்பாக்கம் என்ற ஊர் உள்ளது. இங்குள்ள மலையில் உள்ள குடைவரைக் கோயில் ஆறு தூண்களையும், இரண்டு அரைத் தூண்களையும் இரண்டு வரிசையாகக் கொண்ட அர்த்தமண்டபத்தையும், முகமண்டபத்தையும் பெற்றுள்ளது. இது கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு என்றுக் கூறுகின்றனர். கல்வெட்டுகளும் சிற்பங்களும் இங்கு உள்ளன.

குடியாத்தம் தாலுக்கா திருவலத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவில் மேல்பாடி என்ற ஊர் உள்ளது. இதனருகில் உள்ள வள்ளிமலையில் உள்ள குகையின் உட்புறத்தில் இரண்டு பக்கங்களிலும் சமணச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இங்கு கன்னட கல்வெட்டுகளும் உள்ளன.

திருவண்ணாமலையில் இருந்து 20 கி.மீ.தொலைவில் வழுதலங்குணம் உள்ளது. இங்குள்ள மலையில் உள்ள குகையில் ஒரே அளவின்றி 5, 6, 7, அடி நீளங்களில் ஏராளமான படுக்கைகள் காணப்படுகின்றன. இப்படுக்கைகளின் நடுவில் 12 அடி நீளமும் 6 அடி அகலமும் உள்ள மேடை அமைப்பு ஒன்று உள்ளது. இம் மலையின் முகப்பில் 6 அடி உயர தீர்த்தங்கரர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

செஞ்சியில் இருந்து 30 கி.மீ.தொலைவில் மேல் கூடலூர் உள்ளது. இங்குள்ள மலையில் சுமார் 100 அடி ஏறிச் சென்றால் பெரிய குகை உள்ளது. இங்கு ஆறு இடங்களில் மொத்தம் 30 படுக்கைகள் உள்ளன. இவை 7 அடி நீளமும் 3 அடி அகலமும் உடையவை. குகைக்கு வடக்கில் தனியாக பார்சுவநாதர் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இங்கு கல்வெட்டுகளும் உள்ளன.

2. பாறைச் சிற்பக் கோயில்கள்

துறவிகள் வசிப்பதற்கு ஏற்ற வகையில் குகைகள் இல்லாத மலைகளிலும் செங்குத்தான மலைகளிலும் திறந்த வெளிப்பாறைச் சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர். இப்படி பாறைகளில் தீர்த்தங்கரர்களின் திருவுருவங்களைச் செதுக்கி எதிரில் பந்தல்கள் அமைத்து வழிபாடு செய்து வந்தனர்.

இத்தகைய பாறைச் சிற்பங்கள் சமணர்களின் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்

செஞ்சியில் இருந்து 2 கி.மீ.தொலைவில் திருநாதர் குன்று உள்ளது. இங்குள்ள மலையில் 24 தீர்த்தங்கரர்களின் உருவமும் கல்வெட்டுகளும் உள்ளன. திண்டிவனத்தில் இருந்து 10கி.மீ.தொலைவில் ஆட்சிப்பாக்கம் உள்ளது. இங்குள்ள பாறையில் பார்சுவ தீர்த்தங்கரர் திருவுருவம் செதுக்கப் பட்டுள்ளது. திண்டிவனம் வட்டம் ஓலக்கூரில் இருந்து 9 கி.மீ.தொலைவில் அனந்த மங்கலம் உள்ளது. இவ்வூரில் உள்ள மலையில் தீர்த்தங்கரர்கள் உருவமும், கல்வெட்டுகளும் உள்ளன.

செஞ்சிக்கு சற்றுத் தொலைவில் உள்ள வளத்தி என்ற ஊரில் ஆதிநாதருக்குக் கட்டப்பட்ட கோயில் ஒன்றும், அடுத்த சிறுமலையில் பார்சுவதேவர் திவுருவமும் செதுக்கப்பட்டுள்ளது. மக்கள் மெய்யறிவாகிய ஞானத்தைப் பெற பார்சுவநாதர் வழிகாட்டியதால் இதற்கு நல்ஞானக்குன்று என்று பெயர் சூட்டியுள்ளனர்.

கட்டடக் கோயில்கள்

தென்னிந்தியக் கட்டடக் கலை வரலாற்றில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தான் கருங்கல்லைப் பயன்படுத்தி கட்டடக் கோயில்கள் எழுப்பத் தொடங்கினர். இதற்கு முன் மண், சுதை, மரம் உபயோகித்து கட்டி வந்தனர். தொடக்கத்தில் குடியிருப்புப் பகுதிகளில் சிறியனவாக உருவாக்கப்பட்ட கோயில்கள் மக்களின் இறையுணர்வை வளர்க்கவும், விழாக்கள் போன்றவற்றைச் செய்யவும் பெரியவையாக உருப்பெற்றன. இன்றும் சிறப்புடன் இருக்கும் தொண்டை நாட்டு சமணக் கோயில்கள் சிலவற்றைக் காணலாம்.

1. திருப்பருத்திக் குன்றம் - வர்த்தமானர் ஆலயம்
2. கரந்தை - குந்துநாதர் ஆலயம்
3. திருப்பரம்பூர் - புஷ்பதந்தர் ஆலயம்
4. வங்காரம் - ரிஷபதேவர் ஆலயம்
5. கீழ்சாத்தமங்கலம் - சந்திரநாதர் ஆலயம்
6. வெண்குன்றம் - பார்சுவநாதர் ஆலயம்
7. குன்னத்தூர் - ரிஷபநாதர் ஆலயம்
8. சரவணபேடு - பார்சுவநாதர் ஆலயம்
9. இளங்காடு - ரிஷபதேவர் ஆலயம்
10. ஓதலவாடி - ஆதிநாதர் ஆலயம்
11. பூண்டி - ஆதிநாதர் ஆலயம்
12. தச்சாம்பாடி - மகாவீரர் ஆலயம்

13.	தச்சூர்	-	ஆதிநாதர் ஆலயம்
14.	திருமலை	-	நேமிநாதர் ஆலயம்
15.	அகலூர்	-	ஆதிநாதர் ஆலயம்
16.	மேல்சித்தாமூர்	-	பார்சுவநாதர் ஆலயம்
17.	பெருமண்டூர்	-	ஆதிநாதர், சந்திரபிரபா ஆலயம்
18.	வீடூர்	-	ஆதிநாதர் ஆலயம்
19.	கீழ் எடையாளம்	-	ரிஷபநாதர் ஆலயம்
20.	முதலூர்	-	ஆதிநாதர் ஆலயம்
21.	உப்புவேலூர்	-	ஆதிநாதர் ஆலயம்
22.	விழுக்கம்	-	ஆதிநாதர் ஆலயம்
23.	மேல்மலையனூர்	-	ரிஷபநாதர் ஆலயம்
24.	திண்டிவனம்	-	அருகன் கோயில் (சிதிலமடைந்தது)
25.	புதுபேடு	-	பார்சுவநாதர் ஆலயம்
26	புழல்	-	ஆதிநாதர் ஆலயம்
27.	பொன்னூர்	-	ஆதிநாதர்ஆலயம்

மறைந்துப் போன சமணப்பள்ளிகள்

தமிழகத்தில் பல சமணக் கோயில்கள் காலப் போக்கிலும், கண்காணிக்கப்படாமையாலும், இயற்கையின் சீற்றத்தாலும் மற்ற சமயங்களின் ஆதிக்கத்தாலும் அழிந்து போயின. இக்கோயில்கள் அழிவுற்ற போதிலும் சிற்பங்களும் கல்வெட்டுகளும் எஞ்சியுள்ளன. சமணச் சான்றுகள் எஞ்சியிராவிடினும் சமணக் கோயில்கள் இருந்த ஊர்களில் இந்து சமயக் கோயில்களின் சாசனங்கள் மூலம் சமணக் கோயில்களை அறிய முடிகிறது. இவ்வாறு தொண்டை நாட்டில் மறைந்த சமணப்பள்ளிகள் சில காஞ்சிபுரம், அரசங் கழனி, கீரைப்பாக்கம், மாங்காடு, சிறுவாக்கம், திருப்பந்தியூர், சாந்தோம், புதுப்பாடி, சக்கரமல்லூர், மடவிளாகம், உலகாபுரம், ஒலக்கூர், திருவதிகை, திருப்பாலப் பந்தல், மயிலாப்பூர், பனைப்பாடி, பொன்பரப்பி, ஜம்பை, பள்ளிச்சந்தல் ஆகும்.

கொலியபுரநல்லூர்

பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில் விழுப்புரத்திற்கு 7கி.மீ. தொலைவில் உள்ளது கோலியனூர். இது பண்டைக்காலத்தில் கொலியபுர நல்லூர் என்று பெயர் பெற்றுள்ளது. இங்கு **நைனார் தேவர் பெருமனார் ஸ்ரீ கோயில்** என்று அழைக்கப்படும் அருகர் கோயில் இருந்தது. இது 1897 -ஆம் ஆண்டிலேயே மிகவும் சிதைந்த நிலையில் இருந்ததாகத் தொல்பொருள் கல் வெட்டாய்வுக் குழுவினர் கூறுகின்றனர். அப்போதிருந்த கோயில் கருவறை மண்டபம் ஆகியவற்றைக் கொண்டதாக இருந்தது. இது சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் இருந்த கோயில்.

இக்கோயிலின் ஒரு பகுதியை இடையாறு என்ற ஊரினைச் சார்ந்த **திருமறுமார்பன் வணிகபுரத்தான்** என்பவர் கட்டி இருக்கிறார். இக்கோயில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு இருக்கலாம் என்று கருப்படுகிறது. கி.பி.15 - இல் கொலிய நல்லூரைச் சேர்ந்த நல்லத்தம்பி முதலியார் பெரிய தம்பியார் விஜய ராஜபுரம் என்ற ஊரில் நிலங்களைத் தானமாகக் கொடுத்துள்ளார்.

இறுதியாக, தொண்டை நாட்டில் சமணம் ஈராயிரம் ஆண்டுகளாக நிலைத்து வந்திருப்பதைக் குகைப்பள்ளிகளும் , சிற்பங்களும், கல்வெட்டுகளும் , கட்டடக் கோயில்களும் இனிதே அறிவுறுத்துகின்றன. தமிழகத்தை மொத்தமாக எடுத்துக் கொண்டால் கி.பி. 9 - 10 ஆம் நூற்றாண்டுக்கு முன் சமண சமயம் பாண்டிய நாட்டில் அதிக செல்வாக்குடன் இருந்திருக்கிறது. பின் படிப்படியாகத் தொண்டை நாட்டில் தான் வலுவடைந் திருக்கிறது. கி.பி. 13 - ஆம் நூற்றாண்டில் வீரசேனாச்சாரியார் மேல் சித்தாமூர் ஜின காஞ்சி மடத்தை ஏற்படுத்திய பின் எத்தனை இன்னல்கள் ஏற்பட்டும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது சமண சமூகம் ஒன்று பட்டு ஆக்கப் பணிகளை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

தொண்டை நாட்டிற்கும் கர்னாடகத்திற்கும் சமணத்தின் வாயிலாக மிகுந்த தொடர்பு இருந்திருக்கிறது. சிரவண பெலகோலாவிலுள்ள மூல சங்கத்தில் சமய நன்னெறிகளை முறையாகக் கற்று சித்தாமூர் மடத்தின் தலைமைப் பொறுப்பைப் பலர் வகித்துள்ளனர். சித்தாமூர் கோயிலிலுள்ள மானஸ்தம்பத்தை கர்நாடக மாநிலத்து ஜகதாபிருத்தி என்ற ஊரைச் சேர்ந்த புஸ்செட்டி என்ற வணிகர் நிறுவியிருக்கிறார்.

உதவிய நூல்கள்

1 ஏ.ஏகாம்பரநாதன், தொண்டை நாட்டுச் சமணக் கோயில்கள்.

2. அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி, செஞ்சிப்பகுதியில் . சமணம்.

3. மா. சந்திரமூர்த்தி, தொண்டூர் - தமிழ்பிராமிக்கல்வெட்டு, கல்வெட்டு காலாண்டிதழ் 34, ப.1 - 3, 1992.

4. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும்.



42. விழுப்புரம் மாவட்ட சமணச்சிற்பங்கள்

சீ. ஸ்ரீதர், விழுப்புரம்.

தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே சிற்பக்கலை சிறந்த நிலையிலிருந்ததை அக்கால இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. ஆனால் சங்க காலச் சிற்பங்கள் எவையும் இதுவரை நமக்குக் கிடைக்கப் பெறவில்லை.தமிழகத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இருந்து தான் கல்லிலாலான சிற்பங்கள் வடிக்கப்பட்டதென வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதற்கு முன்பு இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்க மட்டுமே கருங்கல் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

சமண சமயச் சிற்பங்கள் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டிற்கு முந்தியவை தமிழகத்தில் கிடைக்கப் பெறவில்லை. தமிழகத்தை ஆட்சிப் புரிந்த மன்னர்களுள் பெரும்பாலானோர் இந்து சமயத்தினைச் சார்ந்தவராயினும் பலர் சமண சமயத்தை ஆதரித்தும் வந்துள்ளனர். இதனால் தான் சமண சமயக் குகைக் கோயில்களும் கட்டடக் கோயில்களும் ஏராளமான அளவில் உருவாக்கப்பட்டு அவற்றில் பாறைச் சிற்பங்களும், தனிச் சிற்பங்களும், உலோகச் சிற்பங்களும் உருவாக்கப்பட்டு அவை கலைக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஏராளமான சமணச் சிற்பங்கள் காணப் படுகின்றன. அவைகளைப் பாறைச்சிற்பங்கள், தனிச்சிற்பங்கள், கோயில் சிற்பங்கள் என மூன்று வகையாகப் பிரித்து அறியலாம்.

1. பாறைச்சிற்பங்கள்

மேல்சித்தாமூர்

மேல்சித்தாமூர் மலைநாதர் கோயில் கருவறையில் காணப்படும் சிற்பங்கள் பாறைச் சிற்ப வகையினைச் சார்ந்தவையாகும். ஏனெனில் அவற்றை இயற்கையான பாறையில் சிற்பங்களைச் செதுக்கி கோயில் அமைத்துள்ளனர். இங்கு முதலாவது தீர்த்தங்கரராகிய ஆதிநாதர், இருபத்திரண்டாவது தீர்த்தங்கரராகிய நேமிநாதர், இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர், ரிஷபநாதரின் மைந்தராகிய பாகுபலி என அழைக்கப் பெறும் கோமதீஸ்வரர் ஆகியோரது அழகிய திருவுருவங்கள் உள்ளன.

நேமிநாதர்

கருவறையிலுள்ள பாறைச் சிற்பத் தொகுதியில் மேற்குப் புறம் பீடம் ஒன்றில் அமர்ந்தவாறு நேமிநாதர் கம்பீரமாகக்

காட்சியளிக்கிறார். நேமிநாத தீர்த்தங்கரரின் இரு கரங்களும் ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கப்பட்டு தியான நிலையில் இருக்கின்றன. பரந்த உடல் அமைப்பும், அமைதியான முகச்சாயலும், வட்டவடிவ அமைப்புகளையுடைய சுருண்ட தலைமுடியும், சிறிது மூடிய கண்களும், நீண்டு வடிக்கப் பெற்ற காதுகளும் இச்சிற்பங்களுக்கு உயிரூட்டுவனவாகத் திகழ்கின்றன.

தருமதேவி

நேமிநாதரது இடதுபுறம் அவரது யக்ஷியாகிய **கூஷ்மாண்டினி** என அழைக்கப் பெறும் தருமதேவியின் எழிலார்ந்த சிற்பம் ஒன்று உள்ளது. வலது காலினைத் தன் வாகனமாகிய சிங்கத்தின் மீது ஊன்றியும், இடது காலினை பின்னோக்கி மடக்கி வைத்தும் திரிபங்கியாகவும் தீர்த்தங்கரரை நோக்கிச் சற்று வலப்புறம் சாய்ந்தவாறு அழகுறக் காட்சியளிக்கிறாள். இவளது வலதுகை தாமரை மலரைப் பெற்றும் இடதுகை தலைக்கு மேலாகத் தூக்கப்பட்டு அஞ்சலி செலுத்தியவாறும் இருக்கின்றன.இடது கையினை ஒட்டி கமுகு மரமும் காணப்படுகிறது. இவளின் தலையில் அழகிய மணிமகுடம், காதுகளில் தடித்த குண்டலங்கள், கழுத்தில் மணிமாலைகள், கைகளில் வளையல்கள், இடையினில் முத்துக்கள் கோர்த்த மேகலை முதலிய அணிகலன்கள் இடம் பெற்றிருக்கின்றன. புன்முறுவல் பூத்த முகமும், நெடிய கண்களும், பருத்த மார்பகங்களும், ஒடுங்கிய இடையும் இவள் ஒயிலாக நிற்கும் தோற்றமும் காண்பவர் நெஞ்சைக் கவர்வனவாகும். இவளது வலது காலுக்கருகில் இரு குழந்தைகள் சிற்பமும், இடது காலுக்கருகில் பெண்ணொருத்தியின் சிற்பமும் சிறியதாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இந்த யக்ஷி தன் கால்களை அழகுற வைத்திருக்கும் காட்சி விழுப்புரம் வட்டத்தில் உள்ள பனைமலை சிவன் கோயிலிலுள்ள பல்லவர் கால பார்வதி ஓவியத்தினை ஒத்துள்ளது. இத்தகைய அமைப்பில் நிற்கும் பெண்டிற் சிற்பங்கள் அஜந்தா, எல்லோரா, நாகார்சுனகொண்டா, அமராவதி, திரிபுவனம் போன்ற இடங்களில் காணப்படுகிறது.

ரிஷபநாதர்

நேமிநாதருக்கு அடுத்தாற் போன்று ரிஷபநாத தீர்த்தங்கரரின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அமைதியின் வடிவாய்த் திகழும் இவர் தியானத்தில் இருப்பதாகப் படைக்கப்பட்டுள்ளார். தலைக்கு மேல் முக்குடையமைப்பு செதுக்கப்பட்டுள்ளது. இவரது இரு மருங்கிலும் சாமரம் வீசும் இருவர் சிறிய அளவில் வடிக்கப் பெற்றிருக்கின்றனர். இத்தீர்த்தங்கரரின் உடலமைப்பு நேமிநாதரைப் போன்று உள்ளது.

பார்சுவநாதர்

ரிஷபநாதருக்கு அடுத்து நின்ற கோலத்தில் பார்சுவநாதர் சிற்பம் உள்ளது. நீண்டு பரந்த உடலமைப்புடன் கைகளைத் தொங்க விட்டவாறு இத்திருவுருவம் காட்சியளிக்கிறது. பரந்த மார்பும், அகன்ற தோள்களும், தசை மடிப்பினையுடைய இடையும் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. தலைக்கு மேலாக ஐந்து தலை நாகம் படம் விரித்த நிலையிலுள்ளது. இவரது வலப்புறம் தரணேந்திர யக்ஷனும், இடப்புறம் பத்மாவதி யக்ஷியும் காணப்படுகின்றனர். தரணேந்திரன் தீர்த்தங்கரரின் கால்களைத் தன் இரு கரங்களால் தொட்டு வணங்கி வழிபடுவதாகச் செதுக்கப்பட்டுள்ளது. கால்களை மடக்கி அமர்ந்தவாறு வழிபடும் நிலையில் இருக்கும் யக்ஷனது உடலும், தலையும் சற்று முன்னோக்கி குனிந்த வண்ணம் உள்ளன. வலது பக்கத்தில் பத்மாவதி யக்ஷி தனது வலது கையினை மேல் தூக்கி வணங்குவதாகக் காணப்படுகிறாள்.

பாகுபலி

பார்சுவநாதருக்கு அடுத்தாற் போன்று பாகுபலியின் சிற்பம் செதுக்கப்பட்டிருக்கிறது. இவர் பார்சுவநாதரைப் போன்றே நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். உடலமைப்பும், உருவ அமைப்பும் ஏறத்தாழ ஒன்றாகவே இருக்கின்றது. இவரது கால்களையும், கைகளையும் இலைகளுடன் கூடிய கொடி சுற்றிப் படர்ந்திருக்கிறது. பாகுபலியைக் குறிக்கும் சிற்பங்கள் அனைத்திலும் இப்பொதுத் தன்மையினைக் காண முடிகிறது. இவரது இருமருங்கிலும் இரு பெண்டிர் அஞ்சலி செலுத்திய வண்ணம் நிற்கின்றனர். இவர்கள் பாகுபலியின் சகோதரிகள் என்று கருதப்படுகிறது. இப்பெண்டிரின் ஆடை, அலங்காரம் மற்றும் உருவ அமைப்பினை முதலாம் ஆதித்தன் கட்டிய கும்பகோணம் நாகேஸ்வரர் கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள தேவ கோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள அரசியரின் சிற்பத்தை ஒத்துள்ளது. எனவே இம்மலைநாதர் கோயிலில் உள்ள பாறைச்சிற்பங்கள் முதலாம் ஆதித்தனின் காலமான கி.பி. 9 - ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகும்.

ஆட்சிப்பாக்கம் குன்று

திண்டிவனத்திலிருந்து பத்தொன்பது கி..மீ. தொலைவிலுள்ளது ஆட்சிப் பாக்கம் என்னும் ஊராகும். இவ்வூர் குன்றின் நடுப்பகுதியில் ஐந்தடி உயரத்தில் மேற்குத் திசையை நோக்கி பார்சுவநாதரின் சிற்பம் அழகுடன் வடிக்கப்பட்டிருக்கிறது. இத்தேவர் தாமரை மலரான பீடத்தில் நின்ற வண்ணம் தவம் புரிகிறார். இவரது தலைக்கு மேலாக ஐந்து தலை நாகம் படம் விரித்த நிலையிலுள்ளது.

இவரது வலப்புறத்தில் தலைக்கு மேலாக கமடன் தனது கரங்களில் பாறையொன்றினை ஏந்தி தீர்த்தங்கரர் மீது அதனை வீசுவதற்குத் தயாரான நிலையிலிருக்கிறான். எட்டு கரங்களைக் கொண்ட இந்த அசுரன் நான்கு கைகளால் பாறையினை ஏந்தியவாறுள்ளான். மற்ற கைகளில் இரண்டில் குறுவாளும், கேடயமும் காணப்படுகின்றன. எஞ்சிய கரங்கள் எச்சரிக்கையை அறிவிக்கும் தர்ஜன்ய முத்திரையையும், சூசி முத்திரையையும் குறிப்பவையாக உள்ளன.

பார்சுவதேவரின் இடதுபுறம் பத்மாவதி யக்ஷி நீண்ட கைப்பிடியைக் கொண்ட குடையினைப் பிடித்து தீர்த்தங்கரரைப் பாதுகாப்பது போன்று காட்சியளிக்கிறாள். குடையின் மேற்பகுதி பார்சுவநாதரின் தலைக்கு மேலாகக் காணப்படுகிறது. இத்தேவரது வலப்புறம் தரணேந்திர யக்ஷன் மண்டியிட்டு வழிபடுவதைக் காணலாம். யக்ஷிக்கு மேலாக விண்ணுலகத் தேவனாகிய இந்திரன் விமானத்தில் நிற்பது சிறப்பிற்குரியதாகும். இவர் நான்கு கைகளும் முறையே மேற்புற வலதுகை ஆச்சரியத்தைக் குறிக்கும் முத்திரையைப் பெற்றும், கீழுள்ள வலதுகை வாள் போன்ற கருவியைக் கொண்டும் காணப்படுகின்றன. மேலுள்ள இடதுகை கேடயத்தைத் தாங்கியும், கீழுள்ள கை இடுப்பினுள் ஊன்றி வைக்கப்பட்டும் உள்ளது. முன்பகுதியில் அன்னப்பறவை ஒன்றின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத் தொகுதியில் உள்ள ஆடை அலங்காரம், கலையமைப்பு போன்றவை கி.பி. 9 -ஆம் நூற்றாண்டில் முற்கால சோழராட்சியில் உருவாக்கப்பட்டதைப் பறைச்சாற்றுபவையாகும்.

வளத்தி

செஞ்சிக்கு வடக்கே சுமார் பத்து கி.மீ தொலைவில் செஞ்சி வந்தவாசி நெடுஞ்சாலையில் வளத்தி கிராமம் உள்ளது. இவ்வூருக்குத் தெற்கில் **நல்ஞானக்குன்று** அல்லது **நெடுஞ்சாங்குன்று** என அழைக்கப்படும் ஒரு குன்று உள்ளது. இக்குன்றின் மேற்குத் திசையில் 140 செ. மீ. உயரமும், 36 செ.மீ அகலமும் கொண்ட பார்சுவநாதர் புடைப்புச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் தாமரை மலரில் கால்கள் பதித்தவாறு உள்ளது. பார்சுவநாதர் தலைக்கு மேல் ஐந்து தலை நாகம் படம் விரித்த நிலையிலுள்ளது. அமைதியான முகத்தோற்றமும் அசைவற்ற மேனியும் இயற்கையாக படைக்கப்பட்டுள்ளன.

பாதூர்

உளுந்தூர்பேட்டைக்கு வடக்கே சுமார் எட்டு கி.மீ. தொலைவிலுள்ளது பாதூர் என்னும் சிற்றூர். இவ்வூரின் வடக்கேயுள்ள பாறையில் பார்சுவநாதரின் புடைப்புச் சிற்பம் உள்ளது. இச்சிற்பம் முழுவதும் சிதைக்கப்பட்டுள்ளது. நின்ற

நிலையில் உள்ள இத்தேவரது தலையில் ஐந்து தலை நாகம் சற்று சிதைந்த நிலையிலுள்ளது. அதன் மேல் முக்குடை சிறிது தெரிகிறது. சிதைவுற்ற இச்சிற்பத்தினை முருகன் என்று இவ்வூர் மக்கள் வணங்குகின்றனர்.

ஆனத்தூர்

செஞ்சிக்குக் கிழக்கே சுமார் பத்து கி.மீ. தொலைவில் ஆனத்தூர் உள்ளது. இவ்வூரின் மேற்கே உள்ள மலையின் கீழ்ப்பகுதியில் உள்ள தனிக்குன்றில் தீர்த்தங்கரர் புடைப்புச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. குன்றில் செதுக்கப்பட்டுள்ள தீர்த்தங்கரர் உருவத்தின் இரு பக்கங்களிலும் சாமரதாரிகளின் உருவம் காணப்படுகின்றன. தீர்த்தங்கரருக்கு மேலே பிரபையும் அதற்கு மேல் முக்குடையும் உள்ளது. யாளியின் வாயிலிருந்து இரு பக்கங்களிலும் தோரண அமைப்புகள் காட்டப்பட்டுள்ளன. தீர்த்தங்கரருக்குரிய சின்னம் இல்லாமையால் எத்தீர்த்தங்கரர் எனபது பற்றி அறிவதில் குழப்பம் ஏற்படுகிறது. பாறையில் உள்ள மற்றொரு தீர்த்தங்கரர் உருவத்தைக் கொண்டு இச்சிற்பம் கி.பி. 10 - 11 ஆம் நூற்றாண்டினததாகக் கருதலாம்.

அருளவாடி

திருக்கோயிலூர் வட்டத்தில் ஆற்காடு என்னும் ஊரை அடுத்துள்ள ஊர் அருளவாடி . இவ்வூரின் பெயர் அருகக் கடவுளின் அடிப்படையில் அமைந்து **அருகன்வாடி** என்பது அருளவாடி என மருவியிருக்கலாம் எனக் கருத இடமுள்ளது.இவ்வூருக்குக் கிழக்கே ஆற்றுக்கு வடகரையில் நிலத்தின் வரப்பில் ஓர் தீர்த்தங்கரர் சிற்பம் உள்ளது. இத்தீர்த்தங்கரர் அமர்ந்த நிலையில் மூடிய கண்களுடன் அமைதியான முகத்தோற்றத்தைக் கொண்டுள்ளார். இவர் அமர்ந்துள்ள சிம்மாசனத்தின் பின்புறம் திண்டு உள்ளது. தலைக்குப் பின்புறம் உள்ள பிரபை சடை போன்று வளைந்துச் செல்வதால் இவரை ஆதிநாதர் என்று கருதலாம். இவரது தோளுக்கு இரு புறங்களிலும் இரு சாமரம் வீசுவோர் எளிமையான தோற்றத்துடன் உள்ளனர். தலைக்கு மேல் முக்குடையும், பிண்டி மரமும் எளிமையாகக் காட்டப்பட்டுள்ளன. இவை கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

43. வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் சமணச் சிற்பங்கள்

ஆர். விஜயன், ஆரணி

தென்னகம் நோக்கி சமணம் பரவிட பெருவழிஅமைத்துக் கொடுத்தது பெருந்துறவி பத்திரபாகு அவர்களின் வருகையின் போதாகும். கி.பி. 3 - ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஆயிரக்கணக்கான சமணசாதுக்களோடு சிரவண பெலகோலா விற்க்கு பத்திரபாகு வந்தடைந்தார்.

பிற்காலத்தில் அங்கிருந்து தமிழகம் நோக்கி வந்த சமணத் துறவிகள் **விசாகாச்சாரியார்** தலைமையில், தென் தமிழகத்தில், மதுரை பகுதியில் வந்து தங்கினர். வட தமிழகத்தில் காஞ்சிபுரம் அருகே உள்ள மாமண்டூர் கல்வெட்டின் படி **சந்திரநந்தி ஆச்சாரியார், இளையபடாரர்** ஆகியோரும் மற்றோர் காலகட்டத்தில் **குந்த குந்தாச்சாரியாரும்,** ஜினகாஞ்சி மற்றும் வந்தவாசிப் பகுதிகளில் வந்து தங்கினார்கள். இவ்வாறு சமணப் பேராறு கர்நாடகத்திலிருந்து புறப்பட்டுத் தமிழக மண்ணில் இரு கிளைகளாகப் பிரிந்து பரவித் தழைத்தது. இவர்கள் தமிழகத்தில் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் தம் மதத்தையும் வளர்ப்பதில் தனித்துவம் படைத்தனர்.

தமிழகத்தின் வடபுலத்தைப் பொருத்த வரை இவர்களது சரித்திரச் சான்றுகள் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இன்றளவிலும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

தமிழகத்தின் தலை நகரமான சென்னை (எழும்பூர்) அரசு அருங்காட்சியகத்தை விட வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் சமண அடையாளங்க்ளின் சேமிப்பே இதில் மிக அதிகமாகும்.

விவரங்கள்

வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் இடம் பெற்ற சமணச் சிற்பங்களில்,

1. தீர்த்தங்கரர் - அரசாணிப்பாளை: இச்சிற்பத்தின் உருவமைதிக் கொண்டு இத்தீர்த்தங்கரர் எவரெனக் கண்டறியப்படவில்லை. அதற்கான அடையாள முத்திரையும் சிற்பத்தில் இல்லை. இச்சிற்பத்தில் தீர்த்தங்கரர் தியான நிலையில் அமர்ந்துள்ளார். ஆசனத்தில் அமர்ந்தபடி காணப்படும்

இச்சிற்பத்தின் அடிப்பீடத்தில் தாமரை இதழ்கள் கோட்டுருவமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அருகில் சாமரம் வீசுகின்ற இருவர் இருவேறு தோற்றங்களில் காணப்படுகின்றனர். இச்சிலை திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுக்கா, அரசாணிப்பாளை என்ற கிராமத்தில் கண்டெடுக்கப் பட்டதாகும். இச்சிற்பம் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் சேமிப்பு எண் 4/84

*2. **தீர்த்தங்கரர் - இரத்தினகிரி :*** வாலாஜா தாலுக்கா, இரத்தினகிரி அருகே கீழ் மின்னல் கிராமத்திலிருந்து கொண்டு வரப்பட்டது.இந்த தீர்த்தங்கரர் சிற்பத்தின் தலைக்கு மேல் பிரபையும் அதற்கும் மேலே முக்குடையும் , இருபுறமும் சாமரம் வீசுவோரும் செதுக்கப்பட்டு இருக்கிறது. இலாஞ்சனம் ஏதும் இல்லாததால் தீர்த்தங்கரர்களில் இவர் எவரெனக் கண்டறியப்பட இயலவில்லை. கேவலஞானம் பெறும் வேளையில் தாம் அமர்ந்திருந்த விருட்சத்தின் கிளைகளைப் போல ஐந்து வளைந்த கிளைகள் இவருக்கு மேற்புறமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் முகம் தெளிவாகத் தோன்றவில்லை. பீடத்தின் கீழே பெருந்தாமரை இதழ்களின் கோட்டு வடிவங்கள் மட்டும் தெளிவாய் தோன்றுகின்றன.இச்சிற்பம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் சேமிப்பு எண்.68/87

*3. **தீர்த்தங்கரர் - செங்கம் :*** இச்சிற்பம் செங்கம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். இச்சிலையில் உள்ள தீர்த்தங்கரரின் அடையாளமும் கண்டறியப்படவில்லை. சுமார் 4 அடி உயரமுள்ள கற்பலகையில் காணும் தீர்த்தங்கரர் தியான நிலையில் அமர்ந்துள்ளார். முகம் சிதைந்து மழுங்கலாக உள்ளது. தலையின் பின்புறம் அனல் சுவாலையுடன் கூடிய ஒளிவட்டம் செதுக்கப் பட்டுள்ளது. முக்குடையின் பரிமாணம் குறைந்த அளவில் எழுப்பப்பட்டுள்ளது. சிம்மாசனத்திற்கு சற்று மேலே சாமரம் வீசுவோர் இருவரும் தமது மறுகையை இடுப்பின் மீது வைத்துள்ளபடி அமைக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பமாகும் . இச்சிலைக் கண்டெடுக்கப் பட்ட நகரமான செங்கத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் நுழைவாயிலில் தீர்த்தங்கரருடைய ஒரு சிற்பம் இன்றும் உள்ளது என்பது செங்கம் தாலுக்காவில் சமணத்திற்கு ஆதரவாக கிடைக்கின்ற இன்னொரு அடையாளமாகும். இதன் சேமிப்பு எண். 185/91

*4. **மகாவீரர் - சேண்பாக்கம் :*** 24 வது தீர்த்தங்கரரான மகாவீரர் சிற்பம் அர்த்தப்பர்யங்காசன நிலையில் அமர்ந்துள்ளது. இச்சிற்பம் வேலூர் தாலுக்கா, சேண்பாக்கத்திலிருந்து

கண்டெடுக்கப்பட்டது. கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்சிலையில் மகாவீரர் அமர்ந்துள்ள சிம்மாசனத்தை சிங்கங்கள் இரண்டு தாங்கிட அருகே சாமரம் வீசுவோர் ஒரு கையில் சாமரமும், மறுகையில் விஸ்மய முத்திரையும் தாங்கி நிற்கின்றனர். மகாவீரரின் தலைக்கு மேல் அலங்கார வளைவு கொண்ட பிரபையும் முக்குடையும் செதுக்கப்பட்டுள்ளது. மகாவீரரின் முகம் சற்று சிதைவடைந்து காணப்படுகிறது. இச்சிற்பம் சோழர்காலக் கலையைச் சார்ந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதன் சேமிப்பு எண்.259/96

*5. **தீர்த்தங்கரர் - வாலாஜா :*** இச்சமணச்சிற்பம் வேலூர் மாவட்டம் வாலாஜா தாலுக்காவில் கண்டறியப்பட்டது. இந்த தீர்த்தங்கரர் சிலை சுமார் மூன்றரை அடி உயரமுடையது. மற்ற தீர்த்தங்கரர் சிற்பங்கள் பொதுவாகச் செவ்வக வடிவ கருங்கல் பலகையில் செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இச்சிலையானது தீர்த்தங்கரர் தனியே அமர்ந்திருப்பது போன்ற அமைப்பில் காணப்படுகிறது. இச்சிலையின் முன்புறமும், பின்புறமும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. ஆசனத்தில் இல்லாமல் தரையில் அமர்ந்துள்ளதைப் போல இயல்பாய் உள்ளது. இச்சிற்பத்தின் விழிகளும் தலையின் குறுஞ்சடையும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது.தீர்த்தங்கரர்களுக்குடைய எந்த இலாஞ் சனையும் இல்லாததால் இவரின் பெயரைக் கண்டறிய இயல வில்லை. இச்சிற்பம் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இதன் சேமிப்பு எண். 317/96

*6. **தீர்த்தங்கரர் - திருமணி :*** இச்சிற்பம் நீள் அரைக்கோள வடிவ கற்பலகையில் செதுக்கப்பட்டதாகும். இச்சிற்பத்தில் காணும் தீர்த்தங்கரரின் இலாஞ்சனையும் தெளிவற்று இருப்பதால் இவரையும் பிரித்தறிய முடியவில்லை. இத்தீர்த்தங்கரர் தியான நிலையில் அமர்ந்துள்ளார். இருபுறமும் உள்ள சாமரம் வீசுவோர் இருவேறு நிலைகளில் நிற்பதைக் காணமுடிகிறது. கற்பலகையின் இடதுபுற கீழ்பகுதி உடைந்தும் தீர்த்தங்கரரின் வலது முழங்கால் பகுதி சிதைந்தும் உள்ளது. தலைக்கு மேலே அலங்கார வளைவுகளும் , வளைவுகளுக்குள்ளே பெரிய பூக்களின் வடிவமும் சற்று வித்தியாசமான அழகைத் தருகிறது. மூன்று நிலைகளில் அமைக்கப்பட்ட முக்குடையும் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, திருமணி கிராமத்திலிருந்து சேமிக்கப்பட்ட இந்த சிற்பம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதன் சேமிப்பு எண். 362/99

*7.**தீர்த்தங்கரர் - மாதனூர்:*** ஆறாவது தீர்த்தங்கரரான பத்மபிரபா முழுதாய் மலர்ந்த தாமரை அடையாளத்தோடு அர்த்தப்பர்யங்காசன நிலையில் அமர்ந்துள்ளார். தலைக்கு

மேலே அலங்கார வளைவும் அதற்கும் மேலே முக்குடையும் பத்மபிரபருக்கு இருபுறமும் சாமரம் வீசும் இருவர் ஒருகையில் சாமரமும் , மறுகையை கீழே தொங்க விட்டபடியும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது.இவரின் தலையின் பின்புறம் ஒளிவட்டம் போன்ற பிரபை செதுக்கப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர் சிற்பத்தின் முகத்தில் வலது புறம் சிதிலமடைந்துள்ளது. இச்சிலையானது வேலூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்காவில் மாதனூர் அருகே உள்ள பொன்னகர் எனும் கிராமத்திலிருந்து பெறப்பட்டதாகும். இச்சிலை கி.பி. 13 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென வகைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் சேமிப்பு எண். 388/2001

இவற்றைத் தவிர கி.பி. 1995 இல் திருவண்ணாமலை மாவட்டம் , போளூர் தாலுக்கா, அரும்பலூர் கிராமத்தில் ,

தீர்த்தங்கரர்களின் திருமேனிகள்,யக்ஷி அம்பிகாவின் சிலைகள், சாமரம் வீசுவோர் மற்றும் கமுக மர வடிவ சிலை ஆகியன அடங்கிய சுமார் 15 உலோகப் படிமங்கள் புதையலாகக் கண்டெடுக்கப்பட்டு வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் தற்போது வைக்கப்பட்டுள்ளன. இவைகளோடு பல்வேறு காலகட்டங்களில் கிடைத்த பிற சமண உலோகப்படிமங்களும் இவ்வருங்காட்சியகத்தில் சேமிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் சமண வரலாற்றில் திருவண்ணாமலை மாவட்டம் செறிந்த அடையாளங்களைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் பல சமண ஆலயங்களில் மிகப் பழமையான, விலைமதிப்பற்ற உலோகப் படிமங்கள் குறைந்த பாதுகாப்புடனே தற்போது இருக்கின்றன. அவைகளின் மீது நாம் சிறப்பு கவனம் செலுத்தி பாதுகாப்பை அதிகரிக்கச் செய்வதும் மாவட்டத்தின் ஏதேனும் இரு இடங்களில் சிலைகளின்'சேமிப்பு ஆலயம்' உருவாக்கி பத்திரப்படுத்துவதும் காலத்தின் முக்கியத் தேவையாகும்.

சமணச் சான்றோர்களும் , வரலாற்றாளர்களும் வேலூர் கோட்டையின் தென்பகுதியில் அமைந்த அரசு அருங்காட்சி யகத்திற்குச் சென்று சமணச் சிற்பங்களைக் கண்டு வருதல் மிகவும் அவசியமானதாகும்.

44. வேலூர் மாவட்டத்தில் சமணக் கலைகள்

அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி

தொண்டை மண்டலத்தில் கி.மு. வுக்கு முன்பிருந்தே சமணசமயம் நிலைக் கொண்டிருந்தது. ஆயினும் கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டு முதல் இம்மண்டலத்தில சமண சமயம் குறித்த சான்றுகள் மிகுதியாகக் காணக்கிடைக்கின்றன. சமணச் சான்றுகளைக் கொண்டு சமண சமயம் சார்ந்த கலைகளைக் குறித்து அறியமுடிகிறது. குறிப்பாக வேலூர் மாவட்டத்தில் சமணம் தனது உணர்வைக் குகைக் கோயில்களாகவும், பாறைப் புடைப்புச் சிற்பங்களாகவும், கற்றளிகளாகவும், தனிச்சிற் பங்களாகவும் இருந்து உணர்த்துகின்றன. அவைகள் இம்மாவட்ட த்தின் மீது படிந்த சமண சமயத்தின் கலை உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன எனலாம்.

தொன்மையில் சமண சமயம் இம்மாவட்டத்தில் மிகுதியாகப் பரவியிருந்தது. ஆனால் இப்போது இம்மாவட்டத்தில் **குடியாத்தம், வாலாஜா, ஆற்காடு, வேலூர்** ஆகிய வட்டங்களில் மட்டுமே சமண சமயம் சார்ந்த கலைகளைக் கொண்ட சான்றுகள் காணக்கிடைக்கிறது. சுமார் 50 ஊர்களுக்கு மேல் சமண சமயச் சான்றுகள் உள்ளன. ஆயினும் இருபது ஊர்களில் மிகுதியான சான்றுகள் உள்ளன.

கோயில் கலை

வேலூர் மாவட்டத்தில் காணப்படும் சமணக் கோயில்கள் தனிச் சிறப்புடையன. சமணக்கோயில்கள் சுற்றிலும் மதில் சுவருக்குள் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. கோயில்கள் சில இராசகோபுரத்தைக் கொண்டுள்ளன.இக்கோபுரம் 3, 5, 7 நிலைகளை உடையனவாக உள்ளன. கோபுரம் தலை, மகாநாசி, சாலை, பஞ்சரம் ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளன. பொதுவாக சமணக்கோயில்கள் கிழக்கு நோக்கி உள்ளன.

இராசகோபுரத்தை ஒட்டி சுற்றிலும் அமைக்கப்பட்ட மதில்சுவரை **பொன்னெயில் வட்டம்** என்று குறிப்பிடுகின்றனர்.

இராசகோபுரத்தின் நுழைவு வாயிலின் வழியாக உட்சென்றால் அறிஞர் பேருரை மண்டபமும் (மன்றம்) வடகிழக்கில் காவல் தெய்வத்தின் (சேத்திரபாலகர்) சிறு கருவறையும் அடுத்து சற்று உயரமான அமைப்பில் **பாண்டுகசிலை** மண்டபமும் (தூய பிறப்பாளர் - தூய நீரவர் - தீர்த்தங்கரர் - ஜீனபகவான் பிறந்ததும் இங்கு அமரச்செய்து சௌதர்மேந்திரனும், ஈசான இந்திரனும், ஆயிரம் குடம்

பாற்கடல் நீரைக் கொண்டு நீராட்டுவர் என்று சமணர்களின் நம்பிக்கை. இதன் நினைவாக அமைக்கப்பட்டது பாண்டுக சிலை மண்டபம். இதனை வெண்மையான கல்லாசனம் - ஜென்மா பிடேகம் என்றுக் கூறப்படுகிறது.)

இதற்கு அடுத்து இயக்கி, இயக்கன் ஆகியோருக்கான சிறுகோயிலும், சுற்றுப்பாதையில் மூலவரை நோக்கி பலிபீடமும், மானஸ்தம்பமும் அமைக்கப்பட்டிருக்கும். இவ் வமைப்பு முறை சமணக் கலைமுறையின் தனிச்சிறப்பாகும்.

சமணக்கோயில் முன்பு இருக்கும் மானஸ்தம்பத்தின் நான்கு பக்கமும் கிழக்கில் **ஆதிநாதர்**, தெற்கில் **ஆஜிநாதர்**, மேற்கில் **சமீபவநாதர்**, வடக்கில் **அபிநந்தநாதர்** ஆகியோர் (முதல் நான்கு தீர்த்தங்கரர்கள்) உருவங்களையும், அவர்களுக்குரிய அடையாளங்களையும் செதுக்கியிருப்பர்.

சமணக்கோயிலின் முன் மண்டபத்தின் (மகாமண்டபம்) இருபுறமும் துவாரபாலகர் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும் . இம்மண்டபத்தின் மையப்பகுதியில் சிறிய மேடையிடப்பட்டி இக்கோயிலுக்குரிய உற்சவ மூர்த்திகள் உருவங்களும், சங்கநிதி - பத்மநிதி, ஆகமங்கள், அபிடேகமூர்த்தி உருவங்களும், பூசைப்பாத்திரங்களும் வைக்கப்பட்டிருக்கும் இங்கு முக்குடை என்னும் 365 விளக்குகள் கொண்ட விளக்குச் சட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வமைப்பு முறை சமணக் கோயில் கலைக்குரிய தனிச்சிறப்பாகும்.

உள்மண்டபத்தில் சமண தீர்த்தங்கரர் உருவப்படிமங்கள், பூசைக்குரிய விளக்குகள் மற்றும் சில பூசைப்பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். உள்மண்டபத்திற்கு அடுத்து கருவறை, கருவறையில் சமணத் தீர்த்தங்கரர் 24 பேர்களில் யாதேனும் ஒரு தீர்த்தங்கரர் உருவச்சிற்பம் அமைக்கப்பட்டிருக்கும்.

சமணக் கோயிற்கலைக்கு கருவறைக்கு மேல் அமைக்கப் பட்டிருக்கும் விமானம் சிறப்பானது. விமானத்தின் நான்கு திசைகளிலும் **தீர்த்தங்கரர் உருவங்கள்**, அவர்களின் பிறப்பு , அறநெறிகளை உணர்த்தும் நிகழ்ச்சிகள், அவர்களின் ஞானநிலை ஆகியவற்றின் சிறப்பை உணர்த்தும் சிற்பங்கள் சமண சமயத்தின் பால் பார்ப்பவரை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இங்கு **இயக்கன் இயக்கிகள்** சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வமைப்பு சமணக் கோயிலுக்கே த்னிச் சிறப்புடையதாகும்.

கருவறை சதுரம் அல்லது வட்டமாக அமைக்கப் பட்டிருக்கும் . கருவறை மீதான விமானம் ஒன்று , மூன்று அல்லது ஐந்து மாட அமைப்புகளைக் கொண்டிருக்கும் . விமானம் அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், கலசம் ஆகிய உறுப்புகளை எளிமையானதாகக் கொண்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பிற கலைகள்

வேலூர் மாவட்டத்தில் சமண சமயம் தன் பதிவுகளை சிறப்பானதாகவும் , புதுமையான வகையிலும், மறைவாகவும் , அடக்கமாகவும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது.அவை **குகைத்தளங்கள், பாறைச்சிற்பங்கள், கோயில்கள்** என அமைந்துள்ளன. சமண சமயம் இம்மாவட்டத்தில் தன் வளர்ச்சிக் காலங்களில் அறநெறிகளை மட்டும் வளர்க்காமல் கலை வளர்ச்சிக்கும் துணையாக இருந்து வந்ததோடு மட்டுமின்றி தொடர்ந்து தளராமல் இப்போதும் பங்காற்றிக் கொண்டு வருவது குறிப்பிடத்ததக்கது. பிற கலைகளில் சமண சமயத்தின் பங்கு நிலையை இங்கு சுருக்கமாகக் கண்போம்.

வாலாஜா வட்டம்

இவ்வட்டத்தில் கி.பி. 5 - ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே சமணம் பரவியிருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவ்வட்டம் **நாராயணபுரம்** எனும் ஊரின் மலைப்பகுதியில் உள்ள பஞ்சபாண்டவர் மலையில் சமணத்துறவிகள் வாழ்ந்துள்ளனர். இங்கு ஏழுபடுக்கைகளும் உடைந்த **தீர்த்தங்கரர்** சிற்பமும் காணப்படுகின்றன.

இவ்வூருக்கு மேற்கே உள்ள **திம்மணசாரிக்குப்பம்** எனும் ஊரின் மலைப்பகுதியில் ஆறு படுக்கைகள் காணப்படுகின்றன. **புதுப்பாடி** எனும் ஊரில் உள்ள கல்வெட்டு ஒன்று "**ஸ்ரீரவி குல மாணிக்கப் பெரும்பள்ளி** "என்ற சமணக்கோயில் இருந்தது என்பதைத் தெரிவிக்கிறது.

சக்கரமல்லூர் எனும் ஊரில் சமணக்கோயில் எதுவும் இல்லை. ஆனால் இவ்வூர் சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டு (33 / 1940 - 41) ஒன்று சமணக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பள்ளிச்சந்த நிலங்களைக் குறித்துக் கூறுகிறது. இக்கோயில் சிற்பங்கள் ஆற்காடு பதிவாளர் அலுவலகத்திலும், சென்னை அருங்காட்சியத்திலும் உள்ளன. இங்குள்ள மகாவீரரின் சிற்பம் சமண சமயத்து சிற்பக் கலைக்குச் சான்றாக உள்ளது.

வாலாஜாபேட்டைக்கு வடக்கே உள்ள **பெருங்கங்கி** என்னும் ஊரின் ஏரிப்பகுதியில் காணப்படும் சமணச்சிற்பங்கள் குறிப்பிடத் தக்கனவாகும். அடுத்து வாலாஜாபேட்டைக்குக் கிழக்கே **அனந்தலை** எனும் ஊர் மலையின் உச்சிப் பகுதியில் அமைந்துள்ள இயற்கையான குகைத்தளத்தில் சமணத்துறவி களுக்கான படுக்கைகள் அமைந்துள்ளன.

குடியாத்தம் வட்டம்

இவ்வட்டம் சமண சமய வரலாற்றுக்கு மிக சிறந்த வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டுள்ளது. சமண சமயம் சார்ந்த

குகைத்தளம், சிற்பங்கள் ஆகியன சமண சமயத்தின் கலைகளைக் குறித்து அறிய உதவுகின்றன.

இவ்வட்டத்தில் உள்ள மலையம்பட்டு என்ற ஊரைச் சார்ந்த மலையை அருமாமலை எனவும், அருகர்மலை எனவும் கூறுகின்றனர். இம்மலையின் மையப்பகுதியில் காணப்படும் **துவாரபாலகர்** சிற்பங்கள் புதுமையானது. இங்கு மூன்று துவாரபாலகர் சிற்பங்கள் காணப்படுவது சிறப்புடையதாகும்.

முதலிரண்டு துவாரபாலகர் சிற்பங்களில் இருகைகள் காணப்படுகின்றன. வலதுகை மேல் நோக்கியவாறும் அஞ்சலி செலுத்தும் நிலையிலும், இடது கை கதாயுதத்தின் மீதும் வைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது சிற்பம் மாறுபட்டு உள்ளது. இச்சிற்பம் சற்று வலப்புறம் சாய்ந்தவாறும் வலது கையில் கதாயுதத்தை ஏந்தியவாறும் செதுக்கப்பட்டுள்ளது.

முதலிரண்டு துவாரபாலகர்களின் வலது கால் நேராக தரையில் ஊன்றிய நிலையிலும், கால் சிறிது பின்னோக்கி மடக்கப்பட்ட நிலையிலும் உள்ளன. தலையில் மகுடத்திற்குப் பதிலாக கூம்பு வடிவான தலைப்பாகையும், பட்டையான கழுத்தணியும் , தட்டையான பூணூல் , உதரபந்தம் முதலியன எளிமையாகக் காட்டப்பட்டுள்ளன. முகம் மலர்ந்த பொலிவுடனும், உடல் மெலிந்தும் கையில் நீண்ட கதாயுதமும், கதாயுதத்தின் நடுப்பகுதி சுரைக்குடுவையைப் போன்றும், அடிப்பிடியில் மெல்லிய கைப்பிடியும் இருப்பது தனிச் சிறப்பாகும்.

இங்குள்ள துவாரபாலகர் உருவ அமைப்பு பொதுவாக சைவ வைணவக் கோயில்களில் காணப்படும் துவாரபாலகர் சிற்பத்திற்கும் உள்ள பொதுவான அமைப்பிலிருந்து முழுவதுமாக மாறுபட்டு அமைதியான முகத்தோற்றத்துடன் சமண ஒழுக்கத்தைக் கைப்பற்றி ஒழுகும் தோற்ற அமைதியைக் காணமுடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அருகாமையில் காணப்படும் ஓவியங்கள் சமணக் கலைக்குச் சிறப்பைக் கூட்டுவனவாக உள்ளன. இந்த ஓவியங்களின் கலை நுணுக்கத்தைக் கொண்டு கி.பி. 7 - 8 ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

அடுத்து குடியாத்தம் வட்டத்தில் உள்ள மேல்பாடி எனும் ஊரின் மலை **வள்ளிமலை** என்றும் அழைக்கப்படுகிறது. இம்மலையிலுள்ள இயற்கையான குகைத்தளம் சமண சமயக் கலைக்குச் சான்றுகளைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இங்கு இரு பக்கமும் புடைப்புச் சிற்பத் தொகுதிகள் காணப்படுகின்றன.

இந்த தொகுதிகள் ஆறாவது சிற்பத்திற்குக் கீழே மேலைகங்க அரசனான இரண்டாம் இராசமல்லன்(கி.பி. 873 - 907) காலத்தைச்

சார்ந்த கல்வெட்டு கன்னட மொழியில் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலை (பஸ்தி - கன்னட மொழி) சிவமாரனின் கொள்ளுப்பேரனும் இரணவிக்கிரமனின் மகனுமாகிய இராசமல்லன் அமைத்ததை அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்த ஆறாவது சிற்பம் **கோவர்த்தனர்** எனும் சமணப்பெரியார் என்பதை மற்றொரு கல்வெட்டும் தெரிவிக்கிறது.

இத்தொகுதியின் இரண்டாவது சிற்பத்துக்குக் கீழே உள்ள இரு கன்னடக் கல்வெட்டுகளில் ஒன்று மேலே உள்ள இரண்டாவது சிற்பத்தை **ஆரியநந்தி** என்பவர் செதுக்க ஏற்பாடுகளைச் செய்ததையும், அடுத்த கல்வெட்டு இரண்டாவது சிற்பம் **தேவசேனர்** என்ற துறவி என்பதையும் (இவர் பவணந்தி எனும் சமணத்துறவியின் சீடர் என்பதையும் பாணராயன் என்ற அரசனுக்கு இவர்சமயக் குருவாக இருந்தவர்)தெரிவிக்கிறது.

வள்ளி மலையின் இடது பக்கத்தில் இரு இடங்களில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இடதுப்பக்கச் சிற்பத் தொகுதியில் முதல் வரிசையில் **பார்சுவநாதரின்** இரண்டு உருவச் சிற்பங்களும் அடுத்து மற்றொரு தீர்த்தங்கரர் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன.இந்த தீர்த்தங்கரர் சிற்பங்களுக்கு பக்கங்களில் இயக்கர், இயக்கி உருவங்களும் செதுக்கப் பட்டுள்ளன. இவை சிறியனவாக உள்ளன. இவைகளுக்கு அடுத்து சமணப் பெண் தெய்வமான சரசுவதி (ஸ்ருததேவி சமண ஆகமங்கள் சுருதி என்ப) யின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

சரசுவதியின் உருவம் பெரிய அளவில் அரைவட்ட மாடத்தினுள் பீடமொன்றில் அமர்ந்த நிலையில் வலது காலைத் தொங்க விட்டும், இடது காலைப் பீடத்தில் மடக்கி வைத்தும் உள்ள நிலையில் காணப்படும் அமைப்பு சிறப்பானது. சிற்பக் கலைக்கு முத்திரையாக உள்ளது.இப்பெண் தெய்வத்தின் உருவஅமைப்பு கங்கரின் கலைப்பாணியைக் கொண்டு திகழ்வது சமணக் கலைக்குத் தனித்தன்மையைத் தருகிறது. இப்பெண் தெய்வத்திற்கு அடுத்து உள்ள இரு தீர்த்தங்கரர் உருவங்களில் முதலாவது **மகாவீரர்** எனவும், அடுத்தது **நேமிநாதர்** எனவும் அறிகிறோம்.

இடது பக்கத்தில் உள்ள சிற்பத் தொகுதிகளில் **பார்சுவநாதர்** தீர்த்தங்கரர் சிற்பம் காணப்படுகிறது என்பது முன்பு கூறப்பட்டது. .இவ்வுருவத்தில் ஞானத் தோற்ற அமைப்புடன் கூடிய பார்சுவநாதர் தலைக்கு மேல் ஐந்து தலைப்பாம்பு படம் விரித்து நிழலை அளிக்கிறது. இந்த அமைப்பு உலகத் துன்பங்கள் வந்து பாதிக்காது அரணாக இருந்து காக்கிறது என்று விளக்கம் அளிக்கப்படுகிறது. அடுத்துள்ள பார்சுவநாதர் சிற்பமொன்றில் பார்சுவநாதருக்குத் தலைக்குமேல் ஐந்து தலைப்பாம்பும் அதற்கு

மேல் முக்குடையும் வலப்புறம் இயக்கன் யானை மீது அமர்ந்த நிலையிலும் .இடப்புறம் இயக்கியின் உருவமும் அமைக்கப் பட்டிருப்பதும் சிறந்த எடுத்துக் காட்டு.

இம்மலையில் காணப்படும் சில சிற்பங்களின் உருவ அமைப்புகளைக் கொண்டு சமணத் துறவியர்களின் உருவம் எனவும், இவ்வுருவங்கள் சரவண பெலகொலாவில் இருந்த துறவியர்களை நினைவூட்டுவதாகவும் உள்ளன என டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன் அவர்கள் கூறுகிறார்.இங்குள்ள சிற்பங்கள் கி.பி. 8 முதல் 10 ஆம் நூற்றண்டு கால வரலாற்றினையும் சமண கலை வளர்ச்சியையும் உணர்த்துவனவாக இருக்கின்றன.

மேலும் இவ்வட்டப்பகுதியில் உள்ள களவனூர், குகை நல்லூர் ,தென்னம்பட்டு, திருமணி ஆகிய ஊர்களில் சமணக் கோயில்கள் இல்லையென்றாலும் சமண சமயச் சிற்பங்கள் சமண சமயத்தின் கலை அமைப்பிற்கு முக்கியச் சான்றுகளாக உள்ளன.

ஆற்காடு வட்டம்

ஆற்காடு ஊருக்குத் தென்மேற்கே **திருப்பாண்மலை** எனும் பஞ்சபாண்டவர் மலை சமணசமய கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இங்குள்ள இரண்டு குகைத்தளங்கள் சமணத் துறவிகள் வாழ்ந்த வரலாற்றை உணர்த்தியவாறு உள்ளன.

இக்குகைத் தளத்தில் வடக்குப் பகுதியில் அமர்ந்த நிலையில் இயக்கியின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இயக்கியின் வலது பக்கத்தில் துறவி ஒருவர் வணங்கியவாறு உள்ளார். இயக்கி இருக்கையின் அடிப்பகுதியில இரு ஆடவரும் ஒருவர் குதிரையின் மீது அமர்ந்துள்ள நிலையிலும் ஒருபெண் நிற்கும் காட்சியும் அழகாக செதுக்கப்பட்டிருப்பது சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த குகையின் முகப்பில் முக்குடையின் கீழ் அமர்ந்த நிலையில் உள்ள தீர்த்தங்கரர் உருவமும், இருபக்கமும் சாமரங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இத்தீர்த்தங்கரர் **மகாவீரர்** என்பர். இச்சிற்பம் முதலாம் இராசராசன் காலத்தில்(கி.பி. 993) செதுக்கப்பட்டதாகும். இதனை **திருப்பாண்மலை தேவர்** என்று இம்மன்னனின் கல்வெட்டுக் கூறுவதைக் கொண்டு அறிகிறோம்.

இங்கு நந்திவர்ம பல்லவனின்(கி.பி.781) கல்வெட்டும் உள்ளது. இக்கல்வெட்டு புகழாலைமங்கலம் எனும் ஊரைச் சேர்ந்த நாரணன் என்பவர் இங்குள்ள **பொன்னியக்கியார்** சிற்பத்தையும், **நாகநந்தி** எனும் துறவியார் சிற்பத்தையும் செதுக்கியுள்ளார் எனக் கூறுகிறது. இந்த பொன்னியக்கியார் சிற்பத்தை **சித்தயிகா** எனவும் கருதுகின்றனர்.திருப்பாண்மலை சிற்பங்கள்கி.பி. 9 முதல் 11 ஆம் நூற்றாண்டு வரைக்கான சமணக் கலை மற்றும் வரலாற்றுக்கும் சான்றுகளாக உள்ளன.

விளாப்பாக்கம்

திருப்பாண்மலையின் தொடர்ச்சியாக உள்ள மற்றொரு மலையை **சின்ன திருப்பாண் மலை** என்பர். இம்மலைப் பகுதியில் உள்ள ஊர் விளாப்பாக்கம். இம்மலையில் முதலாம் மகேந்திரன் (கி.பி.610 - 630)காலத்தைச் சேர்ந்த குடைவரைக் கோயில் உள்ளது. இக்குடைவரை ஆறு தூண்களையும் இரண்டு அரைத் தூண்களையும் இருவரிசைகளில் கொண்டுள்ள அர்த்த மண்டபத்தையும் மற்றும் முக மண்டபத்தையும் கொண்டுள்ளது.

விளாப்பாக்கம் நாகநாதேசுவர் கோயிலின் முன்புள்ள கல்லில் பராந்தக சோழனின் 38 வது (கி.பி. 945) ஆட்சியாண்டு கல்வெட்டு **அரிட்டநேமி பட்டாரரின்** மாணாக்கியாகிய **பட்டினிக்குரத்தி** என்பார் இவ்வூரில் கிணறுஒன்றை வெட்டுவதற்கு செய்ததையும் கிணறும் அதைச்சார்ந்திருந்த நிலங்களைக் கண்காணிக்க சதுர்விம்சதி என்ற இருபத்து நான்கு பேர் கொண்ட குழு இருந்ததையும் தெரிவிக்கிறது. விளாப்பாக்கம் சமண கலைக் குறித்து கி.பி. 7 - ஆம் நூற்றாண்டின் குடைவரை அமைப்பு உணரச் செய்கிறது.

வேலூர் வட்டம்

இவ்வட்டத்தில் வேலப்பாடி எனும் ஊர் உள்ளது. இவ்வூர் மலையை **வேலப்பாடி மலை** எனவும், **பகவதி மலை** எனவும் குறிப்பிடுகின்றனர்.பகவதிமலையில் உள்ள மூன்று குகைப் பகுதிகளில் சமணத் துறவியர்கள்வாழ்ந்திருந்தனர் என்பதற்கு சமணப்படுக்கைககள் காணப்படுகிறன. இம்மலையில் உள்ள **பன்ன பேசுவரம்** என்ற சமணக் கோயிலுக்கு இராட்டிர கூட மன்னனான மூன்றாம் கிருட்டிணனின் 26 - ஆவது ஆட்சி யாண்டில் (கி.பி. 965) **நுளம்பன் திரிபுவன தீரன்** என்பான் கொடை அளித்துள்ளான். அதனை இங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது . இன்று இக்கோயில் சிதைந்துள்ளது.

இக்கல்வெட்டுக்கு அருகில் இரண்டு பாதங்கள் செதுக்கப்பட்டுள்ளன.இப்பாதங்களுக்கு முன்னும் பின்னும் தாமரை மலரையும், இடைப்பட்ட பகுதியில் நாற்கோண வடிவ அமைப்பும் மெல்லியதாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருவடிகள் வழிபாட்டு முறையை இக்கலை அமைப்பு உணரச் செய்கிறது.

சிதைவுற்றுள்ள இக்கோயில் **பன்னப்பை** என்பவரால் கட்டப்பட்டது.பார்சுவநாதர் எனப்படும் 23 வது தீர்த்தங்கரருக்கு **பன்னகேஸ்வரர், பன்னாக நிழற் பெருமான்** என்ற பெயர்கள் வழங்கப்படுகிறது. இதன் மூலம் இக்கோயில் சமண தீர்த்தங்கரருக்கான கோயிலே என உறுதியாகிறது. இதன்மூலம் கி.பி. 6 - 7 ஆம் நூற்றாண்டில் இங்கு சமண சமயம் சார்ந்து கோயில் இருந்து வந்துள்ளது என்பது தெரிகிறது.

வேலூர்வட்டம் ஊசூர் எனும் ஊருக்கு அருகில் உள்ளது சிவநாதபுரம். இவ்வூர் மலைப்பகுதியில் நான்கு படுக்கைகள் உள்ளன.

முடிவுரை

வேலூர் மாவட்டத்தில் காணப்படும் சமணச்சான்றுகளைக் கொண்டு கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டு முதல் சமணசமயம் நிலைக்கொண்டுள்ளது எனத் தெரிகிறது. சமண சமயம் தன் வளர்ச்சிக் காலத்தில் சமணக் குடைவரை, சமணக் கோயில், சமண தீர்த்தங்கரர், இயக்கன் இயக்கி சார்ந்த தெய்வங்களின் சிற்பங்கள் , துறவியர்கள் சிற்பங்கள் , திருவடி வழிபாடு, 365 முக்குடை வழிபாடு மற்றும் பலவகை தீர்த்தங்கரர் உருவங்கள் இணைந்த அமைப்பு மற்றும் 1008 தீர்த்தங்கரர் உருவ அமைப்பு) பதினாறு வித்யாதேவிகள், பரிவார தேவதைகள், ஆறு குலப்பெண்கள், எட்டுத்திக்கு பாலகர்கள், தேவியர்கள், ஏழு கன்னியர்கள், கணதரர்கள் , ஆகம நூல்கள் எனும் உருவங்கள் சமண சமயக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இத்தகைய உருவங்களுக்கு மாற்று உருவங்கள் வேறு சமய கலைகளில் காணப்படவில்லை. தமிழ்நாட்டு சமண வரலாற்றில் வேலூர் வட்டத்தில் காணப்படும் சமணக்கலைகள் சார்ந்த சான்றுகள் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுள்ளன.

உதவிய நூல்கள்

1. ஏ.ஏகாம்பரநாதன், தொண்டை நாட்டுச் சமணக் கோயில்கள், சென்னை.
2. எஸ்.டி. பாஸ்கரன், ஆர்மாமலை ஓவியங்கள், கல்வெட்டு இதழ் - 7, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு.
3. Dr.Edward Montgomery and S.T. Baskaran, Arumamalai Paintings, Lalitkala 16 (Bombay - 1974)
4. மா. சந்திரமூர்த்தி - ஆர். வசந்தகல்யாணி, 'காவியமும் ஓவியமும்' தமிழர் நாகரிகம்(பதி) நடன.காசிநாதன், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு, சென்னை - 2000.
5. Indian Archaeology - A Review - 1970 - 71(New Delhi - 1974.)

45. விழுப்புரம் மாவட்டத்தில் புதிய சமணச் சான்றுகள்

சி. வீரராகவன் – மங்கையர்க்கரசி, விழுப்புரம்.

விழுப்புரம் மாவட்டத்தில் சமணச்சமயம் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் பரவியிருந்தற்கான சமணச் சான்றுகள் சமீப காலம் வரையில் பல்வேறு காலகட்டங்களில் பல இடங்களில் பல கல்வெட்டு அறிஞர்களால் கண்டறியப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் திருக்கோயிலூர் வட்டத்தில் கல்பட்டு, ஆற்காடு, நெடுமுடியான், வடியாங்குப்பம், கோமாளூர், அருளவாடி, விழுப்புரம் வட்டத்தில் கோலியனூர், ஆகிய இடங்களில் சமணச் சான்றுகள் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் பற்றிய விரிவான குறிப்புகளை இங்கு காணலாம்.

கல்பட்டு

இவ்வூரின் கண் கரடு வெட்டப்பட்ட ஓர் பாறை உள்ளது. இதனை இப்பகுதி வாழ் மக்கள் **'பாம்படிச்சான் பாறை'** என அழைக்கின்றனர். இப்பாறையின் கீழ் இயற்கையாக அமைந்த குகை அமைப்பு இருந்திருக்க வேண்டும். தற்போது இவ்வமைப்பு இல்லை. இவ்விடத்தில் உள்ள பாறை உடைத்து எடுக்கப்படாமல் இருந்தால் சமணர் கற்படுக்கைகள் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைத்திருக்கக்கூடும். இவ்வூரின் கண் **'மாடெறிக்கல்'** என்ற பாறை ஒன்று உள்ளது. இதனை இப்பகுதியில் வாழ் கிருத்துவர்கள் ஏசு கிருத்து மரித்து உயிர்ப்பித்து எழும் நாளன்று இப்பாறையில் கல் எறிகின்றனர்.இப்பாறைத் தொட்டி அமைப்பில் உள்ளது. இதன் உள் பகுதியில் மூன்று படுக்கைகள் வெட்டப்பட்டு இருப்பதை இவ்வூரில் இன்றும் காணலாம்.எகவே கல்பட்டு சமணர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கொண்டுள்ளது.

ஆற்காடு

விழுப்புரத்திலிருந்து இவ்வாற்காடு வழியாகத் திருக்கோயிலூருக்குச் செல்லலாம்.இவ்வூர் வாழ் திரு. குருநாத ஆச்சாரி அவர்களின் பாரம்பரியமான வயல் பகுதியில் சுமார் 140 செ.மீ. உயரமும், 70 செ.மீ. அகலமும் கொண்ட கற்பலகையில் புடைப்பாக வடிக்கப்பட்ட மகாவீரர் சிற்பம் ஒன்று உள்ளது. மகாவீரர் சிம்மாசனத்தின் மீது பத்மாசனத்தில் தியான நிலையில் அமர்ந்துள்ளார். சிம்மாசனம் அழகிய வேலைப்பாடுடன்

காட்டப்பட்டுள்ளது. சிம்மாசனத்தின் முன் பகுதியில் ஐந்து சிம்மங்களின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளது. மகாவீரரின் இரு பக்கங்களிலும் சாமரதாரிகளும், சாமரதாரிகளுக்கு மேல் கந்தர்வர்கள், பிண்டியை தாங்கியவாறு காட்டப்பட்டுள்ளனர். பிண்டிக்குக் கீழ் முக்குடைக் காட்டப்பட்டுள்ளது. மகாவீரர் தலைக்கு மேல் அழகிய வேலைப்பாடுடன் கூடிய மும்மணி மாலைகள் காட்டப்பட்டுள்ளது.

நெடுமுடியான்

திருக்கோயிலூரிலிருந்து லா. கூடலூர் செல்லும் வழியில் நெடுமுடியான் என்னும் கிராமம் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அருகே பாறைகளால் ஆன மலைக்குன்றுகள் வயல்களுக்கு நடுவே அமைந்துள்ளது. இம்மலைக்குன்றில் இயற்கையாக அமைந்த குகைகளில் சமணர் படுக்கைகள் காணப்படுகின்றன. இப்படுக்கைத் தடயங்களை நெடுமுடியானில் காணுகின்ற போது சமணர்கள் இங்கு வாழ்ந்து வந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

வடியாங்குப்பம்

இவ்வூரும் திருக்கோயிலூரிலிருந்து லா. கூடலூர் செல்லும் வழியில் உள்ளது. இவ்வூரின் மேற்குத் திசையில் பாறைகளால் ஆன மலைக்குன்றுகள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. இப்பகுதியில் உள்ள ஒரு பெரிய பாறையின் கீழ் சமணர் படுக்கைகளும் மருந்து குழைக்கும் சிறிய உரல் ஒன்றும் காணப்படுகின்றன. இக்குகையின் விதானத்தில் வெள்ளை நிறத்தில் வரையப்பட்ட குப்பி ஒன்றும் குப்பியின் அளவுக்கு வரையப்பட்ட கோல் ஒன்றும் காணமுடிகிறது. இக்குப்பியின் அருகே ஒரு பாம்பின் உருவம் வரையப்பட்டுள்ளது. இப்பாறை ஓவியம் விஷப்பாம்பு கடித்த ஒருவருக்கு எந்த அளவுக்கு மருந்து தரவேண்டும் என்ற கருத்தை விளக்குவதாக அமைகிறது. மேலும் படுக்கையில் கிரந்த எழுத்துகளில் 'சர்ஹர உரல்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. படுக்கைக்கு அருகே உள்ள உரலைக் குறிப்பதாக இக்கல்வெட்டு அமைந்துள்ளது. மேற்கூறப்பட்ட தடயங்கள் இப்பகுதியிலும் சமணர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை மெய்ப்பிக்கிறது.

கோமாளூர்

திருக்கோயிலூரிலிருந்து லா. கூடலூர் செல்லும் கூட்டுச் சாலையில் இறங்கி 2 கி.மீ. தூரம் கிழக்கே உள்ள ஏரியைக் கடந்து சென்றால் கோமாளூரை அடையலாம்.இவ்வூரின் மேற்கே அமைந்துள்ள அய்யனார் கோயிலும், இக்கோயிலுக்கு முன் சுமார் 10 முதல் 12 அடி உயரமுள்ள சுமார் இருபது சுடுமண் குதிரைகளும் நேர்த்திக்கடன் பொருட்டு பல்வேறு காலகட்டங்

களில் அமைத்துள்ளனர். நுண்கலையுடன் இக்குதிரைகள் காண்பவர் கண்களைக் கவரும் வண்ணம் காட்சியளிக்கின்றன. மேலும் இக்கோயில் மதிலுக்குட்பட்ட பகுதியில் கற்பாறைகள் காணப்படுகின்றன. இக்கற்பாறை அருகே மகாவீரர் சிற்பம் ஒன்று உள்ளது. இதனை இப்பகுதி மக்கள் நீர் பூசிய நாயனார் என்று சமயப் பொறையின்றி வழிபட்டு வருகின்றனர்.

இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரர் சிம்மாசனத்தின் மீது அமர்ந்து பத்மாசனத்தில் தியான நிலையில் கற்பலகையில் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளார். தலைக்கு மேல் முக்குடையும் , முக்குடைக்கு மேல் பிண்டியும், மகாவீரரின் இருபக்கங்களிலும் நின்ற நிலையில் சாமரதாரிகளும் காட்டப்பட்டுள்ளனர். முறையான கலை நுணுக்கத்துடன் வடிக்கப்பட்ட சிம்மாசனத்தின் பீடத்தின் கீழ் மூன்று சிம்மங்கள் உள்ளன. தீர்த்தங்கரரின் தலைக்குப் பின்புறம் ஞான ஒளி வட்டங்களைக் காணலாம். தலை மழுக்கப்பட்டு நீண்ட காதுகளையும், கட்டான உடல் அமைப்பும், சாந்தமே உருவான முகத்துடன் இச்சிற்பம் சிறப்புடன் தியான நிலையில் காணப்படுகின்றது. கோமாளூருக்குக் கிழக்கு வயல்வெளியில் உள்ள கற்பாறை ஒன்றில் இம்மகாவீரர் சிற்பம் போன்றே கோட்டுருவில் மற்றொரு வடிவம் வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். திருக்கோயிலூர் வட்டத்தில் வீரபாண்டியிலும், ஒட்டம்பட்டு , அருளவாடி, சிறுமதுரை ஆகிய இடங்களிலும் தீர்த்தங்கரர் சிற்பங்கள் காணக் கிடைப்பதிலிருந்து இவ்வூர் களிலும் சமண சமயம் தழைத்தோங்கி இருந்திருக்க வேண்டும்.

பேரங்கியூர்

விழுப்புரம் மாவட்டம் பேரங்கியூர் கோயிலில் உள்ள சோழர் காலக் கல்வெட்டு ஒன்று இவ்வூரின் கண் அக்காலத்தில் இடம் பெற்றிருந்த சமணக்கோயிலுக்குப் பள்ளிச்சந்தமாக நிலம் கொடையாக அளித்ததைப் பற்றிக் கூறுகிறது. பேரங்கியூருக்கு அருகே உள்ள கரடிப்பாக்கத்தில் சமணச்சமயத்தைச் சார்ந்த குடும்பம் ஒன்று உள்ளது. இக்குடும்பத்தைச் சார்ந்தவரே திரு. சந்திரசேகர நயினார் அவர்கள். இவரிடத்தில் சணச்சமயம் சார்ந்த ஓலைச்சுவடிகள் உள்ளன.



46. சமணத் திருமேனியியல்

(தொண்டை மண்டலம்)

முனைவர். த. கணேசன், தஞ்சாவூர்.

தொண்டை மண்டலம் என்பது விழுப்புரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதிகளில் சமணசமயம், சங்க காலம் தொட்டு தழைத்தோங்கியுள்ளது. இப்பகுதிகளில் சமணப் படுக்கைகளும், சமணக் கல்வெட்டுகளும், சமணத் திருமேனிகளும் கிடைக்கின்றன. இப்பகுதிகளில் கிடைக்கப்பெற்ற பாறை திருமேனிகளும், கல் திருமேனிகளும், செப்புத் திருமேனிகளும், வெள்ளி திருமேனிகளும் சமண மதத்தின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை ஆகும். இவை காலத்தினாலும், இந்து மக்களின் தாக்கத்தினாலும், பௌத்த மதத்தின் தாக்கத்தினாலும், பல்வேறு சிதைவுகளையும், மாற்றங்ளையும் பெற்று இறுதி வடிவம் பெற்றுள்ளன. இவ்வடிவங்களையும் மாற்றங்களையும் ஆராய்வதும், சமண திருமேனிகளின் வளர்ச்சியையும், மாற்றங்களையும் ஆராய்வதும் இன்றைய காலகட்டத்தில் முக்கியமான ஒன்றாகும்.

சங்க இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கௌந்தி அடிகளால் உறையூரில் வணங்கப்பட்ட ரிஷபநாத தீர்த்தங்கரரின் திருமேனி குறிக்கப்பட்டுள்ளது. இதில் ரிஷபநாதர், **'திங்கள் மூன்றடுக்கிய முக்குடைக்கீழ் ஆதியில் தோன்றிய அறிவினை வணங்கி'**, என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பிண்டி மரத்தின் கீழ் அமர்ந்துள்ளார். இதுபோன்று சமண திருமேனியியலை அறிந்து கொள்ள இலக்கியங்கள் பெரிதும் உதவவில்லையென்றாலும்; பாறைகளிலும், கற்களிலும், செம்பிலும், வெள்ளியிலும், வடிக்கப்பட்ட சமணத் திருமேனிகள், சமண திருமேனியியலை அறிந்து கொள்வதற்கு நமக்கு பெரிதும் உதவுகின்றன. அவற்றை பற்றி இக்கட்டுரையில் எழுதுவதே இதன் நோக்கமாகும்.

ரிஷபநாதர்

ரிஷபநாதர் சமண தீர்த்தங்கரர்களில் **முதல் தீர்த்தங்கரர்** ஆகும். இவர் தீர்த்தங்கரர்களில் முதலில் தோன்றியவராக கருதப்படுவதால் **ஆதிநாதர்** என்றும் அழைக்கப்படுகிறார். இவர் நயோத்ரோதா எனப்படும் ஆலமரத்தின் நிழலில் ஞானம் பெற்றார். தர்மசக்கரம் இவரது லாஞ்சனம் ஆகும். இவரது

இயக்கராக கோமுக இயக்கரும், இயக்கியாக சக்கரேஸ்வரி இயக்கியும் இருக்கின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பேராவூரில் இருக்கும். ரிஷபநாதர் சிற்பம் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். உப்புவேலூரில் உள்ள ரிஷபநாதர் கி.பி. 8-ம் நூற்றாண்டையும்; இடையாலம், பெரமண்டூர் ஆகிய ஊர்களில் இருக்கும் ரிஷபநாதர் கி.பி. 9-ம் நூற்றாண்டையும்; விழுக்கத்தில் இருக்கும் ரிஷபநாதர் கி.பி. 11-ம் நூற்றாண்டையும் சேர்ந்தவை ஆகும். கீழ்வயலாமூரில் இருக்கும் ரிஷபநாதர் கி.பி. 12-ம் நூற்றாண்டையும்; கள்ளகொளத்தூரில் இருக்கும் ரிஷபநாதர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை ஆகும்.

வளத்தியிலும், மேல்மலையனூரிலும் உள்ள ரிஷபநாதர் உருவங்கள் கி.பி. 14-ம் நூற்றாண்டை சேர்ந்தவை ஆகும். இவையாவும் கல் திருமேனிகளே இவைகள், அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் காட்சி தருகின்றன. வெண்ணிற படிமகற்களால் (morble stone) ஆன ரிஷபநாதர் திருமேனி பெரமண்டூரில் உள்ளது. இத்திருமேனி கி.பி. 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். அதே கல்லினால் வடிக்கப்பட்டுள்ள, விழுக்கத்தில் உள்ள ரிஷபநாதர் கி.பி. 12-ம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். கீழ்வயலாமூரில் உள்ள திருமேனி கி.பி. 13-ம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். இவையாவும் அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் காட்சி தருகின்றன.

விழுக்கம், மேல்மலையனூர், இடையாலம் ஆகிய ஊர்களில் கிடைக்கப் பெற்ற திருமேனிகள் பத்ம பீடத்தின் மீதும் பேராவூர் திருமேனிகள் சிம்ம பீடத்தின் மீதும் உள்ளன. கள்ளகொளத்தூரில் உள்ள சிம்ம பீடம் மூன்று சிம்மங்களையும்; வளத்தியில் உள்ள சிம்மபீடம் ஐந்து சிம்மங்களையும் கொண்டுள்ளன. வளத்தியில் கிடைக்கப்பெற்ற ரிஷபநாதர் திருமேனியின் இருபுறமும் மகரங்கள் வடிக்கப்பட்டுள்ளன. கீழ்வயலாமூர் ரிஷபநாதர் திருமேனியின் இருபுறமும் இரண்டு சிம்மங்கள் வடிக்கப்பட்டுள்ளன. வெண்ணிற படிமக்கல்லில் வடிக்கப்பட்டுள்ள பெரமண்டூர், விழுக்கம், கீழ்வயலாமூர் ஆகிய ஊர்களில் வைக்கப்பட்டுள்ள ரிஷபநாதரின் திருமேனிகள் பத்ம பீடத்தின் மீது அமர்ந்து இருப்பது போன்று வடிக்கப்பட்டுள்ளன.

இடையாலம், வளத்தி, விழுக்கம், மேல்மலையனூர், கள்ளகொத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள ரிஷபநாதர் கல்திருமேனிகளும்; பெரமண்டூரில் கிடைக்கப்பெற்ற கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ரிஷபநாதர் செப்புத் திருமேனியும்; கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மேல்மலையனூர் செப்புத் திருமேனியும்; கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இடையாலம் செப்புத் திருமேனியும் முக்கோண வடிவிலான ஸ்ரீவத்சத்தை அவைகளின் வலது மார்பில் பெற்றுத் திகழ்கின்றன. மேலே

குறிப்பிடப்பட்டுள்ள செப்புத் திருமேனிகள் கயோத்சர்க்கம் கோலத்தில், பத்ம பீடத்தின் மீது நின்ற நிலையில் உள்ளன.

பேராவூர், பெரமண்டூர், இடையாலம், வளத்தி, விழுக்கம், மேல்மலையனூர், கீழ்வயலாமூர், வீரணாமூர், கள்ளகொளத்தூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற கல்திருமேனிகளும்; பெரமண்டூர், மேல்மலையனூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற செப்பு திருமேனிகளும் பிரபாவளியைக் கொண்டு விளங்குகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள செப்பு திருமேனிகளில் உள்ள பிரபாவளிகளின் மேல்பகுதி, மகரதோரணத்தையும், பத்ர தோரணத்தையும், யாளியையும் கொண்டு விளங்குகின்றன. பிரபாவளியின் கீழ்பகுதி தூண் வடிவங்களையும், யாளி வடிவங்களையும் கொண்டு விளங்குகின்றன; பெரமண்டூர், வீரணாமூர் கல்திருமேனிகளை தவிர மற்றைய செப்பு திருமேனிகளில் சாமரை வீசும் பெண்கள் இருபுறமும் வடிக்கப்பட்டுள்ளனர். பெரமண்டூர் கல்திருமேனியை தவிர கிடைத்திருக்கும் மற்றைய திருமேனிகளில் தலைக்கு மேலே முக்குடை அமைக்கப்பட்டுள்ளன.

விழுக்கம், கீழ்வயலாமூர், மேல்மலையனூர் கல்திருமேனி களில் பன்னிரண்டு ஆரங்கள் உள்ள சக்கரங்கள் வடிக்கப்பட்டுள்ளன. பெரமண்டூரில் கிடைக்கப்பெற்ற செப்பு திருமேனியின் பிரவாளியின் வலதுபுரத்தில் ரிஷபநாதரின் இயக்கரான கோமுக இயக்கரும், இடது புறத்தில் சக்கரரேஸ்வரி இயக்கியும் உள்ளனர். பெரமண்டூர், மேல்மலையனூர், இடையாலம், பேரணை ஆகிய ஊர்களில் செப்புத் திருமேனி களில் ரிஷபநாதரின் லாஞ்சனம், காளை பொறிக்கப்பட்டுள்ளன.

சம்பவநாதர்

இரண்டாவது தீர்த்தங்கரர் நமக்குக் கிடைக்கவில்லை. **மூன்றாவது தீர்த்தங்கரான சம்பவநாதர்** நமக்குக் கிடைக்கிறார். இவரது **லாஞ்சனம் குதிரை** ஆகும். இவரது இயக்கராக **திரிமுகனும்** இயக்கியாக **துரிதாரியும்** இருக்கின்றனர். இவர் சால (sala) மரத்தின் கீழ் ஞானம் பெற்றார். சம்பவநாதர் திருமேனி எய்யல் என்ற ஊரில் உள்ள சந்திரபிரபா சமணக் கோயிலில் உள்ள மானஸ்தம்பத்தில் வடிக்கப்பட்டுள்ளது. அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் இருக்கும் இவரைச் சுற்றி பிரபாவளி உள்ளது. இவர் நீண்ட காதுகளையும் சுருள் முடியையும் கொண்டுள்ளார். இவரின் இருபுறமும் சாமரை வீசும் பெண்கள் இடம் பெற்றுள்ளனர். பேராவூரில் உள்ள சம்பவநாதரின் கல்திருமேனி கி.பி. 16 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.. இவர் நின்ற நிலையில் கயோத்சர்கம் கோலத்தில் உள்ளார். இவரின் பீடத்தில் இவரது லாஞ்சனான குதிரை வடிக்கப்பட்டுள்ளது.

இக்கல்திருமேனி சுருள் முடியோடும், நீண்ட காதுகளோடும் வடிக்கப்பட்டுள்ளது.

பத்மபிரபா

பத்மபிரபா ஆறாவது தீர்த்தங்கரர் ஆகும். இவரது இயக்கராக **கூஷ்ம** இயக்கரும், இயக்கியாக **சியாம** இயக்கியும் இருக்கின்றனர். இவரது **லாஞ்சனம் பத்மம் (தாமரை)** ஆகும். பெரமண்டூரில் கிடைக்கப்பெற்ற செப்புத் திருமேனி கி.பி. 14 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். அதுபோன்று விழுக்கத்தில் கிடைக்கப் பெற்ற செப்புத் திருமேனி கி.பி. 15 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். இவ்விரு திருமேனிகளும் நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில், சுருள் முடியோடும், நீண்ட காதுகளோடும் அமைக்கப்பட்டுள்ளன. விழுக்கத்தில் உள்ள செப்புத் திருமேனி பிரபாவளியை பெற்றுள்ளது. இதன் தலைக்கு மேலே முக்குடை அமைக்கப்பட்டுள்ளது. பிரபாவளி மகர தோரணத்தையும், யாளி தலையையும் கொண்டுள்ளது. பிரபாவளியில் தூண்களின் அமைப்பும் சாமரை தாங்கிய பெண்களை இருபுறமும் கொண்டுள்ளது. இவரின் லாஞ்சனமாக இருக்கும் செந்தாமரை இத்திருமேனியின் பாதத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

சுபார்சுவநாதர்

சுபார்சுவநாதர் **ஏழாவது தீர்த்தங்கரர்** ஆகும். இவரது இயக்கர் **வரநந்தி** ஆகும். இவரது இயக்கி **காளி** ஆகும். இவரது **லாஞ்சனம் ஸ்வஸ்திகம்** ஆகும். இவர் **சிரிஷ** (sirisha) மரத்தின்கீழ் ஞானம் பெற்றார். கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுபார் சுவர் கள்ளகொளத்தூரில் காணப்படுகிறார். இவரது லாஞ்சனம் ஸ்வஸ்திகம் இவரது பீடத்தில் காணப்படுகிறது. நின்ற நிலையில் கயோத்சர்க்க கோலத்தில் இருக்கும் இச்செப்புத் திருமேனி நீண்ட காதுகளோடும், சுருள் முடியோடும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருமேனியை சுற்றி பிரபாவளி அமைக்கப்பட்டுள்ளது. பிரபாவளி மகர தோரணத்தோடும், யாளி தலையோடும் உள்ளது. இதன் இருபுறமும் தூண்களின் வடிவமும், போதி கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பிரபாவளியின் இருபுறமும் சாமரை தாங்கிய பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.

சந்திரபிரபா

சந்திரபிரபா **எட்டாவது தீர்த்தங்கரர்** ஆகும். இவரது **லாஞ்சனம் பிறைச்சந்திரன்** ஆகும். இவர் **நாக** மரத்தின் கீழ் ஞானம் பெற்றார். இதனால் இவருக்கு நாகேசர் என்ற பெயரும் உண்டு. திருநறுங்கொண்டையில் கிடைக்கப்பெற்ற கல்திருமேனி கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். பெரமண்டூரில் இரு கல்திருமேனிகள் கிடைத்துள்ளன. அவை, காலத்தால்

கி.பி. 12, 13 - ஆம் நூற்றாண்டுகளை முறையே சேர்ந்தவை ஆகும். கண்ணலம், எய்யல் ஆகிய ஊர்களில் கிடைக்கப்பெற்ற கல்திருமேனிகள் காலத்தால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும். இவை அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் உள்ளது. பெரமண்டூரில் உள்ள சந்திரபிரபா கோயிலில் கிடைக்கும் கல்திருமேனியும்; அதே ஊரில் உள்ள ரிஷபநாதர் கோயிலில் கிடைக்கும் கல்திருமேனியும் நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளன. திருநறுங் கொண்டையில் உள்ள, கி.பி. 13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, செப்புத் திருமேனியும்; கி.பி. 14 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எய்யல், மேல்மலையனூர் செப்புத் திருமேனிகளும் பத்ம பீடத்தின் மீது நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளன. இவைகளின் கைகள் பூமி ஸ்பரிஸ முத்திரையுடன் காட்சி தருகின்றன. இத்திருமேனிகளின் மார்பில் முக்கோண வடிவிலான ஸ்ரீவத்சம் உள்ளன. ஆனால் திருநறுங்கொண்டை செப்புத் திருமேனியின் மார்பில் ஸ்ரீவத்சம் பூரணகும்ப வடிவில் உள்ளது. பெரமண்டூர், கண்ணலம், எய்யல் ஆகிய இடங்களில் உள்ள கல்திருமேனிகளில் சாமரை தாங்கிய பெண்கள் இடம் பெற்றுள்ளனர். பெரமண்டூர், எய்யல் ஆகிய இடங்களில் கிடைக்கப் பெற்ற செப்புத் திருமேனிகளிலும், கல்திருமேனி களிலும், கண்ணலம் கல்திருமேனிகளிலும் மேல்மலையனூர் செப்பு திருமேனியிலும் தலைக்கு மேலே முக்குடை அமைக்கப்பட்டுள்ளது.

கண்ணலம், திருநறுங்கொண்டை, பெரமண்டூர், எய்யல் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற கல் திருமேனிகளில் பிரபாவளிகள் வடிக்கப்பட்டுள்ளன. திருநறுங்கொண்டை கண்ணலம், எய்யல் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ள கல்திருமேணிகளில் கொடிகளும், பழங்களும், நாகமரமும் காட்சி தருகின்றன. பெரமண்டூர், எய்யல், மேல்மலையனூர் செப்புத் திருமேனிகளில் உள்ள பிரபாவளிகளில் மகர தோரணம், பத்தர தோரணம், யாளி, தூண்களின் அமைப்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன. இப்பிரபாவளிகளில் **விஜய** இயக்கரும் **ஜுவாலாமாலினி** இயக்கியும் இடம் பெற்றுள்ளனர். இவற்றின் வலப்புறத்தில் சக்கரமும், இடபுறத்தில் சங்கும் வடிக்கப் பட்டுள்ளன. திருநறுங்கொண்டை, எய்யல், பெரமண்டூர், மேல்மலையனூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற திருமேனிகளின் பீடங்களில் சந்திர பிரபா தீர்த்தங்கரரின் லாஞ்சனமான பிறைச்சந்திரன் வடிக்கப்பட்டுள்ளனது.

புஷ்பதந்தர் அல்லது சுவிதிநாதர்

புஷ்பதந்தர் ஒன்பதாவது தீர்த்தங்கரர் ஆகும். இவரது இயக்கராக **அஜித** இயக்கரும், **மகாகாளி** இயக்கியும் உள்ளனர்.

இவரது லாஞ்சனம் மகரம் ஆகும். கி.பி.13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புஷ்பதந்தர் திருமேனி தொரப்பாடியில் உள்ளது. இத்திருமேனி பத்மபீடத்தின் மீது கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளது. இவரின் வலது மார்பில் ஸ்ரீவத்சம் உள்ளது. இவருடைய பிரபாவளி மகர தோரணத்தையும், யாளி தலையையும் கொண்டுள்ளது.

சீதளநாதர்

இவர் பதினோராவது தீர்த்தங்கரர் ஆகும். இவரது இயக்கராக பிரம இயக்கரும், இயக்கியாக மானவி இயக்கியும் உள்ளனர். சீதளநாதரின் செப்புத் திருமேனி பெரமண்டூரில் உள்ள ரிஷபநாதர் சமணக் கோயிலில் உள்ளது. இது காலத்தால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். இவர் பத்ம பீடத்தின் மீது நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளார். இவரின் லாஞ்சனமான அஸ்வதம் பீடத்தின் கீழ் குறிக்கப்பட்டுள்ளது.

சிரையாம்ச நாதர்

இவர் பதினோராவது தீர்த்தங்கரர் ஆகும். இவர் ஈஸ்வர இயக்கரையும், கௌரி இயக்கியையும் கொண்டு விளங்குகிறார். இவர் தூம்பரா மரத்தின் கீழ் ஞானம் பெற்றார். சிரையாம்ச நாதரின் செப்புத் திருமேனிகள் இரண்டு நெடிமொழியனூரில் உள்ளன. இவை காலத்தால் கி.பி. 18 - ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை ஆகும். இத்திருமேனியில் உள்ள பிரபாவளி மகர தோரணத்தையும், யாளியையும் பெற்றுள்ளன. இவரின் இருபுறமும் சாமரை தாங்கிய பெண்கள் உள்ளனர். இவரின் லாஞ்சனம் ரினோசரஸ் (Rhinocearous), இத்திருமேனிகளின் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

வாசுபூஜ்யர்

வாசுபூஜ்யர் பன்னிரண்டாவது தீர்த்தங்கரர் ஆகும். இவரின் லாஞ்சனம் எருமை ஆகும். கி.பி. 18 நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படும் வாசுபூஜ்யரின் செப்பு திருமேனி கிழ்வயலாமூரில் உள்ளது. இவர் சுருள் முடியோடும், நீண்ட காதுகளோடும் கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளார்.

விமலநாதர்

விமலநாதர் பதிமூன்றாவது தீர்த்தங்கரர் ஆகும். கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விமலநாதர், செப்பு திருமேனியாக பெரமண்டூரில் காட்சி தருகிறார். இவரின் வலது மார்பில் தங்கத்தினாலான ஸ்ரீவத்சம் உள்ளது. இத்திருமேனியின் பிரபாவளி மகர தோரணத்தையம், யாளியையும் கொண்டு விளங்குகின்றது. சாமரை தாங்கிய பெண்கள் பிரபாவளியின் இருபுறமும் உள்ளனர். பிரபாவளியின் இருபுறமும் தூண்வடிவங்

களும், புஷ்பபோதிகை வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பிரபாவளியின் வலதுபுறம் சண்முக இயக்கியாரும், இடது புறம் வைரோதி இயக்கியும் உள்ளனர். செப்பு திருமேனியின் பீடத்தில் விமலநாதரின் லாஞ்சனமான பன்றி அமைக்கப்பட்டுள்ளது.

அனந்தநாதர்

அனந்தநாதர் பதிநான்காவது தீர்த்தங்கரர் ஆகும். மேலத்திப்பாக்கத்தில் அனந்தநாதர் கல்திருமேனியாக, தியான முத்திரையுடன், காட்சி தருகிறார். இதன் காலம் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு ஆகும். அனந்தமங்கலத்தில் உள்ள அனந்தநாதர் பாறைச் சிற்பம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். மேலத்தப்பாக்கத்தில் உள்ள இரண்டு செப்புத் திருமேனிகள் கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளை சேர்ந்தவை ஆகும். செப்புத் திருமேனிகளும், அனந்தமங்கலம் பாறைச் சிற்பமும் பத்ம பீடத்தின் மீது நின்ற நிலையல் காயோத்சர்கம் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுருவங்களின் வலது மார்பில் ஸ்ரீவத்சம் உள்ளன. மேலத்திப்பாக்கத்தில் கிடைக்கப்பெற்ற செப்பு திருமேனிகளின் பிரபாவளிகளில் மகர தோரணமும் யாளியும் அமைக்கப்பட்டுள்ளன.

சாந்திநாதர்

சாந்திநாதர் பதினாறாவது தீர்த்தங்கரர் ஆகும். சாந்திநாதர் செப்புத் திருமேனியாக பெரும்புகை என்ற ஊரில் உள்ளார். இவர் பத்மபீடத்தின் மீது நின்ற நிலையல் காயோத்சர்கம் கோலத்தில் உள்ளார். இவரது லாஞ்சனம் மான் பீடத்தின் மீது அமைக்கப் பட்டுள்ளது.

குந்துநாதர்

குந்துநாதர் பதினேழாவது தீர்த்தங்கரர் ஆகும். குந்து நாதரின் செப்பு திருமேனி விழுக்கத்தில் கிடைக்கிறது. இவ்வுருவம் நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இத்திருமேனியின் வலது மார்பில் ஸ்ரீவத்சம் முக்கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திருமேனியைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள பிரபாவளியில் மகர தோரணமும், யாளியும் தூண்களின் அமைப்பும் புஷ்ப போதிகையும் உள்ளன. பிரபாவளியில் இருபுறமும் சாமரை தாங்கிய பெண்கள் இடம் பெற்றுள்ளனர். குந்துநாதரின் லாஞ்சனமான வெள்ளாடு பீடத்தின் மீது வடிக்கப்பட்டுள்ளது.

மல்லிநாதர்

மல்லிநாதர் பத்தொன்பதாவது தீர்த்தங்கரர் ஆகும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்திருமேனி திருவதிகையில் கிடைக்கிறது. இவர் தியான முத்திரையுடன் காட்சி தருகிறார்.

இவரது தலையைச் சுற்றிலும் பிரபாமண்டலம் அமைக்கப் பட்டுள்ளது. இவர் சுருள் முடியோடும் நீண்ட காதுகளோடும் காட்சி தருகிறார்.

முனிஸ்சுருத நாதர்

இவர் இருபதாவது தீர்த்தங்கரர் ஆகும். இவரது இயக்கராக வருணஇயக்கரும், இயக்கியராக பாகுரூபினி இயக்கியும் இருக்கின்றனர். முனிஸ்சுருகத நாதரின் செப்புத் திருமேனி இடையாலத்தில் கிடைக்கின்றது. இவ்வுருவம் கயோத்சர்க்கம் கோலத்தில் பத்ம பீடத்தின் மீது நிற்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. இவர் நீண்ட காதுகளோடும் சுருள் முடியோடும் காட்சித் தருகிறார். இவரின் வலது மார்பில் ஸ்ரீவத்சம் இடம் பெற்றுள்ளது.

நேமிநாதர்

நேமிநாதர் இருபத்தொன்றாவது தீர்த்தங்கரர் ஆகும். கீழ்வயலாமூரில் உள்ள செப்பு திருமேனி கி.பி. 12 - ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். திருநறுங்கொண்டையில் உள்ள செப்பு திருமேனி கி.பி. 16 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். பெரமண்டூரில் உள்ள செப்பு திருமேனி கி.பி. 13 ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். இவை யாவும் பத்ம பீடத்தின் மீது நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளன. பெரமண்டூர், திருநறுங்கொண்டை ஆகிய இடங்களில் உள்ள செப்புத் திருமேனிகளின் தலைக்கு மேலே முக்குடை அமைக்கப்பட்டுள்ளன. இத்திருமேனிகளில் உள்ள பிரபாவளி களில் மகர தோரணமும், யாளியும், தூண்களின் அமைப்பும் உள்ளன. பெரமண்டூரில் உள்ள செப்புத் திருமேனியில் **சர்வான** இயக்கரும், **கூஷ்மாண்டி** தேவியும் வடிக்கப்பட்டுள்ளன. **இவரின் லாஞ்சனமான சங்கு** பெரமண்டூர், கீழ்வயலாமூர், உப்புவேலூர், ஏதாநெமிலி, நெடிமொழியனூர் ஆகிய ஊர்களில் கிடைக்கப் பெற்ற திருமேனிகளின் பீடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. திருநறுங்கொண்டை செப்புத் திருமேனியின் பீடத்தில் குணபத்ராச்சாரியார் நின்ற நிலையில் அஞ்சலித்து காட்சி தருகிறார். இப்பீடத்தில் தமிழிலும், கிரந்தத்திலும் எழுதப்பட்ட எழுத்துகள் காணப்படுகின்றன. கி.பி. 16 - ஆம் நூற்றாண்டை சேர்ந்த இவ்வெழுத்துகள் **"ஸ்ரீ குண பத்ராச்சாரியன் சதாசேவை"** என்று குறிப்பிடுகின்றது.

பார்சுவநாதர்

பார்சுவநாதர் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர் ஆகும். சமண மதத்தை உண்மையாக நிறுவிய தீர்த்தங்கரர் இவராகும். இவர் வீதியுலா திருமேனியாக தமிழ்கத்தில் திகழ்கிறார். அனந்தமங்கலத்தில் உள்ள பார்சுவநாதர் பாறை திருமேனி

கி.பி. 6 - ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். சோழவாண்டிபுரத்தில் உள்ள பார்சுவநாதர் பாறை திருமேனி கி.பி. 6 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். வளத்தியில் உள்ள கல்திருமேனி கி.பி. 8 - ஆம் நூற்றாண்டையும், திருநறுங்கொண்டையில் உள்ள கல்திருமேனி கி.பி. 8 - ஆம் நூற்றண்டையும் சேர்ந்தவை ஆகும். இவையவும் பத்ம பீடத்தின் மீது கயோத்சர்க்கம் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தொண்டூரில் உள்ள பார்சுவநாதர் பாறை திருமேனி தியான முத்திரையுடன் அமர்ந்த கோலத்தில் காட்சித் தருகிறார். இவரின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றண்டு என்பது தொல்லியல் ஆய்வாளர்களான திரு. நடன. காசிநாதன், திரு. சந்திரமூர்த்தி ஆகியோரின் கருத்து ஆகும். இங்கு தமிழ் பிராமி கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

பெரமண்டூரில் உள்ள கல்திருமேனி நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் உள்ளது. இதன் காலம் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு ஆகும். விழுக்கத்தில் உள்ள வெள்ளி திருமேனி கி.பி. 12 - ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். கீழ்வயலாமூரில் உள்ள செப்புத் திருமேனி கி.பி. 11 - ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். மேல்மலையனூர் செப்புத் திருமேனி கி.பி. 12 - ஆம் நூற்றாண்டையும்; திருநறுங்கொண்டை செப்புத் திருமேனி கி.பி. 14 - ஆம் நூற்றாண்டையும்; பேரணையில் உள்ள செப்பு திருமேனி கி.பி. 17 - ஆம் நூற்றண்டையும் சேர்ந்தவை ஆகும். இத்திருமேனிகள் பத்மபீடத்தின் மீது நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் காட்சி தருகின்றன. அனந்தமங்கலம், சோழவாண்டிபுரம் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற பாறை திருமேனிகள் ஒன்பது தலை நாகத்தை தலைமீது கொண்டுள்ளன.

திருநறுங்கொண்டை திருமேனி ஒன்பது தலை பாம்பை தலை மீது கொண்டுள்ளது. மேல்மலையனூர், பேரணை, செண்டியம்பாக்கம் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற திருமேனிகள் ஏழுதலை பாம்பை தலைமீது கொண்டுள்ளன. தொண்டூர், வளத்தி, கூடலூர், திருநறுங்கொண்டை, பெரமண்டூர், பேராவூர், கீழ்வயலாமூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற பாறை திருமேனிகளும், கல் திருமேனிகளும் செப்புத் திருமேனிகளும் ஐந்து தலை பாம்பை தலைக்கு மேலே கொண்டுள்ளன. நெடிமொழியனூர் உப்புவேலூர் தவிர மேற்கூறப்பட்ட மற்றைய திருமேனிகளில் ஸ்ரீவத்சம் வலது மார்பிலும், உப்புவேலூரிலும், நெடிமொழியனூரிலும் உள்ள திருமேனிகளில் ஸ்ரீவத்சம் நடு மார்பிலும் அமைக்கப்பட்டுள்ளன.

கூடலூர், செண்டியம்பாக்கம், விழுக்கம், பேரணை, மேல்மலையனூர், கீழ்வயலாமூர், திருநறுங்கொண்டை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற திருமேனிகளில் தலைக்கு மேலே

முக்குடை அமைக்கப்பட்டள்ளன. மேல்மலையனூர், கீழ்வயலாமூர், திருநறுங்கொண்டை, பேரணை, செண்டியம்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள பிரபாவளிகளில் மகர தோரணம் உள்ளன. மேல்மலையனூர், கீழ்வயலாமூர், திருநறுங்கொண்டை ஆகிய திருமேனிகளின் பிரபாவளியில் வித்தியாதரர்கள் இடம்பெற்று உள்ளனர். விழுக்கம், கீழ்வயலாமூர், பேரணை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற பிரபாவளிகளில் பார்சுவநாதரின் இயக்கரான தரனேந்திரரும், இயக்கியரான பத்மாவதியும் இடம் பெற்றுள்ளனர். பார்சுவநாதரின் லாஞ்சனமான பாம்பு, பேரணை, செண்டியம்பாக்கம், மேல்மலையனூர், திருநறுங்கொண்டை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற திருமேனிகளின் பீடங்களில் வடிக்கப்பட்டுள்ளன. சமண அடியார் ஒருவர் நின்ற கோலத்தில் அஞ்சலித்து இருப்பது அனந்தமங்கலம் பாறைத் திருமேனிகளில் காட்டப்பட்டுள்ளது.

மகாவீரர்

சமண மதத்தில் மகாவீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரராக இருக்கின்றார். இவர் மாதங்க இயக்கரையும், சித்தாயிகா இயக்கியையும் கொண்டு விளங்குகின்றார். மகாவீரரின் திருமேனிகள் நமக்கு அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் கிடைக்கின்றன. அனந்தமங்கலத்தில் உள்ள மகாவீரர் திருமேனி கி.பி. 6 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். தியாக துர்க்கத்தில் கிடைக்கும் மகாவீரர் கல்திருமேனி கி.பி. 8 - ஆம் நூற்றாண்டை சேர்ந்தது ஆகும். மேல்த்தாமூரில் உள்ள மலைநாதர் கோவில் உள்ள பாறை திருமேனி கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். சோழவாண்டிபுரத்தில் உள்ள கல்திருமேனி கி.பி. 11 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். பெரமண்டூரில் கிடைக்கும் கல்திருமேனி, கி.பி. 12 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். இத்திருமேனிகள் யாவும் அமர்ந்த நிலையில் தியான முத்திரையுடன் காட்சித் தருகின்றன. கீழ்வயலாமூரில் கிடைக்கும் செப்புத் திருமேனி கி.பி. 12 - ஆம் நூற்றாண்டையும்; பெரமண்டூரில் கிடைக்கும் செப்புத் திருமேனி கி.பி. 13 - ஆம் நூற்றாண்டையும்; பேராவூரில் கிடைக்கும் செப்பு திருமேனி கி.பி. 14 - ஆம் நூற்றாண்டையும், செண்டியம்பாக்கத்தில் கிடைக்கும் செப்புத் திருமேனி கி.பி. 19 - ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை ஆகும். இச்செப்புத் திருமேனிகள் யாவும் நின்ற நிலையில் கயோத்சர்க்கம் கோலத்தில் காட்சி தருகின்றன.

மேற்கூறப்பட்ட திருமேனிகள் யாவும் சுருள் முடியோடும் நீண்ட காதுகளோடும் காட்சித் தருகின்றன. முக்கோண வடிவிலான ஸ்ரீவத்சம் இத்திருமேனிகளின் வலது மார்பில் அமைக்கப்பட்டுள்ளன. அனந்தமங்கலம், சோழவாண்டிபுரம் ஆகிய இடங்களில் கிடைக்கும் பாறை திருமேனிகளும், தியாக

துர்க்கம், வீரபாண்டி, மேல்சித்தாமூர், பெரமண்டூர், திருநறுங்கொண்டை ஆகிய இடங்களில் கிடைக்கும் கல்திருமேனிகளும், கீழ்வயலாமூர், பெரமண்டூர், பேராவூர், செண்டியம்பாக்கம் ஆகிய இடங்களில் கிடைக்கும் செப்புத் திருமேனிகளும் தலைக்கு மேலே முக்குடையை கொண்டு உள்ளன. சோழவாண்டிபுரம், வீரபாண்டி ஆகிய இடங்களில் கிடைக்கும் திருமேனிகளில் பிரபாவளி அமைக்கப்பட்டுள்ளது. மேல்சித்தாமூர் திருநறுங்கொண்டை ஆகிய இடங்களில் கிடைக்கும் மகாவீரர் உருவங்களோடு, கொடிகளும், பழங்களும், இலைகளும் கொண்ட சால மரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கீழ்வயலாமூர், பெரமண்டூர், இடையாலம், செண்டியம் பாக்கம் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற செப்பு திருமேனிகளில் உள்ள பிரபாவளிகள் மகரத் தோரணத்தோடும் சாமரை தாங்கிய பெண்களோடும் காணப்படுகின்றன. தியாக துர்க்கம் கல்திருமேனியிலும், கீழ்வயலாமூர், பெரமண்டூர், இடையாலம், செண்டியம்பாக்கம் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற செப்புத் திருமேனிகளிலும் சக்கரமும் சங்கும் அமைக்கப்பட்டுள்ளன. மகாவீரரின் லாஞ்சனமான சிம்மம் கீழ்வயலாமூர், பெரமண்டூர், இடையாலம், பேராவூர், செண்டியம்பாக்கம் ஆகிய இடங்களில் கிடைக்கப் பெற்ற செப்புத் திருமேனிகளின் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தியாகதுர்க்கம் மகாவீரர் திருமேனியின் பீடத்தில் மூன்று சிம்மங்களும் அனந்தமங்கலம் மகாவீரர் சிலையில் நான்கு சிம்மங்களும்; திருநறுங்கொண்டை, சோழவாண்டிபுரம் ஆகிய இடங்களில் கிடைக்கும் திருமேனிகளின் பீடத்தில் இரண்டு சிம்மங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

47. புதையலில் கிடைத்த சமண உலோகச்சிலைகள்

ம. காந்தி, வேலூர்.

தமிழ்நாட்டில் சமணம் பரவல்

மௌரியப் பேரரசன் சந்திர குப்தனும் பத்ரபாகு முனிவரும் தென்னிந்தியாவில் முதன் முதலில் கன்னட நாட்டில் சமணத்தைப் பரப்பினர். சமணத் துறவியர் ஊர்களின் பக்கத்தில் உள்ள மலைக்குகைகளில் தங்கி அருளறம் போதித்தனர். துறவிகள் குகைகளில் உறைய படுக்கைகளை அரசர்களும் ,செல்வந்தர்களும், வியாபாரிகளும் செதுக்கி அளித்தனர். இது போல பல குகைப்படுக்கைகள் தொண்டை மண்டலத்தில் செதுக்கப்பட்டு உள்ளன. அவை மட்டுமல்லாமல் அழகிய கட்டுமானச் சமணக் கோயில்களும் கட்டப்பட்டுள்ளன.

சமணம் மேலும் தொண்டை மண்டலத்தில் விரிவடையக் காரணம் கங்கர்கள் பல்லவர் ஆட்சியின் பிற்பகுதியில் தொண்டை மண்டலத்தில் தங்களுடைய ஆளுகையை விரிவுப்படுத்தியதேயாகும்.[1] பல்லவர், கங்கர், சோழர், பாண்டியர், சம்புவராயர் மற்றும் விஜயநகர பேரரசர்களின் கீழ் சமணம் செழித்து வளர்ந்ததற்கான சான்றுகளாகக் கல்வெட்டுகளும் கட்டுமானக் கோயில்களும் , ஓவியங்களும் இருக்கின்றன.[2] இக்கட்டுரைத் தமிழ்நாட்டின் தொண்டை மண்டலத்தில் புதையலாகக் கிடைக்கப் பெற்ற சமண உலோகச் சிலைகளைப் பற்றி ஆராய்கிறது.

உலோகச் சிலைகள் - புதையல்

காலப்போக்கில் பல கோயில்கள் அழிந்துள்ளன. அழிந்ததன் விளைவாகக் கோயிலில் இருந்த சிலைகள் பூமியில் புதைந்தன. தற்காலத்தில் மக்கள் பூமியின் மேற்பரப்பில் தோண்டும் போதும் ,ஏர்உழும் போதும் உலோகச் சிலைகள் புதையலாகக் கிடைத்துள்ளன. அவ்வூர்களில் திண்டிவனம் வட்டத்தில் கிடங்கில், சிங்காணிக்குப்பம், வந்தவாசி வட்டத்தில் சளுக்கை, போளூர் வட்டத்தில் திருமலை மற்றும் அரும்பலூர் மற்றும் வாணியம்பாடி வட்டத்தில் செங்கிலிக் குப்பம் ஆகும்.

புதையலாகக் கிடைக்கப் பெறுபவை அரசினரின் நடவடிக்கைகளுக்குப் பின்னர் தமிழ்நாட்டு அரசின் அருங்காட்சியகத்துறைக்கு அளிக்கப்படுகின்றன. இவற்றில் அரும்பலூர்

மற்றும் செங்கிலிக் குப்பம் சிலைகள் வேலூர் அருங்காட்சியகத்தில் இருக்க[3] மற்றவை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன.

இந்த உலோகச்சிலைகளின் விளக்கம் வருமாறு,

அ. அரும்பலூர்

அரும்பலூர் போளூர் வட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்த ஊராகும். அரும்பலூர் செய்யாற்றின் தென்கரையில் இருக்கிறது. பண்டைக்காலத்தில் அரும்பலூரில் சமணக்கோயில் இருந்துள்ளது. அரும்பலூரில் தற்பொழுது சமணர்கள் ஒருவரும் இல்லை, கோயிலும் இல்லை. கி.பி. 1995 டிசம்பரில் அரும்பலூர் (சர்வே எண் 117/3) நெல்லடிக்கும் களத்தில் நெல்லைக் காய வைத்துக் குவித்து நெல்லைப் பெருக்கிய போது துடைப்பத்தின் தேய்வால் இக்களத்தின் மேற்பரப்பில் உலோகச்சிலைகள் பளபளப்பாகத் தெரிந்தன. ஆகையால் அவ்வூர் மக்கள் அந்த இடத்தில் தோண்டி பார்த்த போது சமண உலோகச் சிலைகள் புதையலாகக் கிடைத்தன. தற்பொழுது இந்தச் சிலைகள் வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் காட்சியாக வைக்கப்பட்டிருக்கின்றன.

1. நிற்கின்ற தீர்த்தங்கரர்

சேர்க்கை எண்391 - 2001 . உயரம் 47.5 செ. மீ. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு . தீர்த்தங்கரர் உயரமான தாமரைப் பீடத்தில் கயோட்சர்க நிலையில் நிற்கிறார். தாமரைப் பீடம் ஒரு சதுரபீடத்தில் இணைக்கப்பட்டுள்ளது. பீடத்தின் மேல் பக்கத்தின் நான்கு மூலைகளிலும் ஒரு தாமரை வீதம் புடைப்பாக வடிக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரரின் சதுர முகம் அமைதியானது ஆகும். தலையில் அழகிய சுருள் முடிகள் ஒரே சீராக உள்ளன. இந்தச் சிலையின் வலது மார்பில் ஸ்ரீவத்ஸ குறி அழுத்தமின்றி பொறிக்கப்பட்டிருக்கிறது. வயிற்றுப் பகுதில் உருளையான சதை காண்பிக்கப்பட்டிருக்கிறது. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள சிங்காணிக் குப்பத்தின் மகாவீரர் சிலையில் காணப்படும் வயிற்றுச் சதைப்பற்று அரும்பலூர் சிலையை ஒத்துள்ளது.

2. நிற்கின்ற தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் 392-2001, உயரம் 39 செ.மீ. இது கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலையாகும்.இந்த தீர்த்தங்கரர் சிலை உள்ளீடற்றதாகும். இந்த வகைச் சிலை முழுமையாக உலோகத்தினால் வார்க்காமல் முதலில் தீர்த்தங்கரரின் முழு உருவத்தையும் களி மண்ணில் உருவாக்கி அதன் மீது மெழுகைச் சீராகத் தடவி பின்னர் மெழுகின் மீது சிலை உருவாக்கப் பயன்படும் புற்று மண்ணைச் சீராகப் பூசுவர்.இவ்வாறு

உருவாக்கப்பட்ட சிலையை நிழலில் நன்கு காய வைக்க வேண்டும். பின்னர் இந்தச் சிலையைச் சூடு காட்டி மெழுகை வடிப்பர். மெழுகு இருந்த இடம் காலியாக இருக்கும். காலியிடத்தில் நன்கு உருக்கப்பட்ட உலோகத்தை ஊற்றுவர். பின்னர் மேற்பரப்பில் உள்ள மண்ணை உடைத்து விடுவர். இதன் பின்னர் சிலையை அழகாக்குவர். இவ்வகை உள்ளீடற்ற சிலையாகும்(Hollo Casting). இது மென்மையும், நீள்வட்ட முகமும் உடையது. மற்ற சிலைகளை விட இதனுடைய கை விரல்கள், கால்களின் முட்டிகளைத் தொடுமளவில் உள்ளன. இந்தச் சிலையின் கண்மணிகள் இடத்தில் சிறு பள்ளங்கள் காணப்படு வதால்அவ்விடங்களில் வண்ண மணிகள் பொருத்தியிருக்கலாம். இந்தச் சிலையின் வலது கால் கணுக்காலில் உடைந்துள்ளது. இவருடைய தலையின் பின் பக்கத்தில் காணப்படும் சிறு வளையம் முக்குடைப் பொருத்துவதற்கு ஏற்றதாக இருந்திருக்கலாம்.

3. நிற்கின்ற மகாவீரர்

சேர்க்கை எண் 393 - 2001. உயரம் 35 செ.மீ. முந்தைய தீர்த்தங்கரரின் சுருள் முடியைப் போல் அல்லாமல் இவருடைய சுருள் முடி நெற்றியை அகலமாகக் காட்டி ஏற்றிக் காட்டப்பட்டிருக்கிறது. நேரான பார்வையுடைய முகம். காதுகள் தொங்குகின்றன. மகாவீரர் தாமரைப் பீடத்தில் நிற்கிறார். தாமரைப் பீடம் சதுர பீடத்தில் இணைக்கப்பட்டுள்ளது. சதுர பீடத்தின் இரண்டு பக்கங்களில் பிரபையைப் பொருத்த ஏற்றவாறு இரண்டு கம்பங்கள் மேல் நோக்கி வார்க்கப் பட்டுள்ளன. தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்தப் பொறிப்பில் 90 சதவீதம் சிதைந்துள்ளது.. வெண்மணி வீரக்கல்லின் எழுத்தமைதியில் இந்த மகாவீரர் பீடத்தில் எழுத்தமைதி காணப்படுவதால் இந்த மகாவீரர் சிலை கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

4. அமர்ந்த மகாவீரர்

இதனுடைய திண்டு பீடம் சேர்க்கை எண் 394 - 2001.மரம் சேர்க்கை எண் - 405-2001. இவை நான்கினையும் ஒன்று சேர்த்தால் இந்த மகாவீரர் சிலை முற்றடைகிறது. உயரம் 27 செ.மீ. தலை நிமிர்ந்து உள்ளது. வட்ட முகம். இவர் நீள் சதுர பீடத்தில் இணைக்கப்பட்ட தட்டையான தாமரைப் பீடத்தில் அமர்ந்துள்ளார். இவரைத் தாங்கும் திண்டின் மேல் நீள் சட்டத்தின் முனைகள் மகரத் தலைகளாக வார்க்கப்பட்டுள்ளன. திண்டின் நடுவிலிருந்து தீச்சுவாலைகளுடைய நீள் வட்ட ஒளி வட்டம் திகழ்கிறது. (பாமண்டலம்) ஒளி வட்டத்தின் மேலே உள்ள மரத்தில் கிளிகளும் அணிலும் உள்ளன. இம்மரம் மகா வீரருக்குரிய சாலமரமாகும். பீடத்தில் இவருடைய வாகனமான

சிங்கங்கள் காணப்படுகின்றன. பீடத்தின் ஜகதியில் தமிழில்"**ஸ்ரீவிசைய குரத்தியகள் அட்டிவிச்ச படிம** "என செதுக்கப் பட்டுள்ளது. எழுத்தமைதியைக் கொண்டு இந்தச் சிலை கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று முடிவு செய்யலாம்.

5. நிற்கின்ற தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் 395-2001 உயரம் 22 செ.மீ. பீடம் சேர்க்கை எண் - 407 - 2001, பிரபையின் துண்டுகள் சேர்க்கை எண் - 410-2001 இவை யாவும் ஒரே சிலையைச் சேர்ந்தவை. சிலைகி.பி.10 ஆம் நூற்றாண்டினது. தீர்த்தங்கரரின் வலது மார்பில் ஸ்ரீவத்ஸ சின்னம் காணப்படுகிறது. வட இந்திய பாணியில் வார்க்கப்பட்ட ஒரு சமீபகால பார்சுவ நாதர் செப்புத்திருமேனி வாணியம்பாடி வட்டம் செங்கிலிக் குப்பத்தில் கிடைத்தது . சேர்க்கை எண் - 415-2001. இதன் நடு மார்பில் ஸ்ரீவத்ஸ சின்னம் உள்ளது. பிரபையின் உச்சியில் பின் பக்கத்தில் உள்ள துளைகள் முக்குடையைப் பொருத்த இருக்கிறது. பிரபையை பீடத்தில் பொருத்த இருந்த கம்பங்கள் உடைந்துள்ளன.

6. அமர்ந்த மகாவீரர்

சேர்க்கை எண் 396-2001 உயரம் 18 செ.மீ. மகாவீரர் செவ்வக பீடத்தில் அமர்த்தப்பட்டுள்ளார். தாமரைப்பீடத்தைக் காண்பிக்க பீடத்தின் மேல் பரப்பில் தாமரை இதழ்கள் வரிகளாகச் செதுக்கப்பட்டுள்ளன. அங்கு முன் பக்கத்தில் ஒரு அழகிய சிறிய பூ பொறிக்கப்பட்டுள்ளது. அவருடைய முதுகை ஒரு திண்டு தாங்குகிறது. ஒளி வட்டம் வட்ட வடிவமானதாகும்.திண்டின் வெளி மருங்கிற்கு ஒரு சாமரதாரர் வீதம் இருவர் நிற்கின்றனர். மகாவீரரின் தலைக்கு மேலே முக்குடை ஒரே அளவில் நிற்கின்றது. வெண்சாமரங்கள், முக்குடை, ஒளிவட்டம் , அசோகமரம் ஆகியன தீர்த்தங்கரருக்குரிய 21 அதிசயங்களில் அடங்கும் என்பதை அபிதான சிந்தாமணியில் ஏமச்சந்திரர் தெரிவிக்கிறார்.[4] முக்குடைக்கு மேல் ஒரு கோயிலின் விமானத்தின் அமைப்பைக் காணலாம். பீடத்தின் முன் பக்கத்தில் கன்னட மொழியில் "**பாபூதி ஓஜா பாவினிமா**"என்ற எழுத்துப் பொறிப்பு இருக்கிறது. இதன் பெருள்"**பெரிய குரு பாவினிமாவுக்குரியது**" எனப்படுகிறது.[5] எழுத்தமைதியைக் கொண்டு இந்தச் சிலை கி.பி. 12 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

7. சுபார்சுவநாதர்

சேர்க்கை எண் - 397 - 2001 சிலையின் உயரம் 17 செ.மீ. இது கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சிலை ஒரு வட்ட பீடத்தில் நிற்கிறது. இந்த பீடத்திலிருந்து ஒரு ஐந்து தலை நாகம் சுபார்சுவநாதருக்குக் குடையாக நிற்கிறது. ஒரு தலை அல்லது

ஐந்து தலைகள் அல்லது ஒன்பது தலைகள் உள்ள நாகம் சுபார்சுவநாதருக்கு உரியதாகும்.

8. பார்சுவநாதர்

சேர்க்கை எண் 398 - 2001. உயரம் 10.5 செ.மீ. பார்சுவ நாதருடைய முகம் சேதமடைந்துள்ளது. இவருடைய தலைக்கு மேலே நாகத்தின் தலைகள் உடைந்து காணப்படவில்லை. எனினும் நாகத்தின் பின்பக்கத்தில் தலைகள் மூன்றாகப் பிரிவதைக் காண்கையில் இச்சிலை பார்சுவநாதர் என்றுக் கூறலாம். சேர்க்கை எண் -411 - 2001 உள்ள தாமரைபீடம் இந்த பார்சுவநாதருக்குப் பொருந்துகிறது. இந்த பீடத்தில் "**ஸ்ரீகட்டிந மகள் நாகட்டி விட்ட படிமம்**" என்ற தமிழ் எழுத்துக்கள் உள்ளன. இத்தமிழ் எழுத்தின் கால அடிப்படையில் இந்தச்சிலை கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்

9. அமர்ந்த அம்பிகா

சேர்க்கை எண் -399 - 2001 உயரம் 13.5 செ.மீ. கி.பி, 9 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலை. அம்பிகா நெளிவாக தாமரைப் பீடத்தில் அமர்ந்திருக்கிறார். சிலைக்கு இரண்டு கைகள் உள்ளன. இந்த கட்டுரையில் இடம் பெறும் அம்பிகா சிலைகள் இரண்டு கைகள் பெற்றவர்கள். இந்த சிலையின் கைகளில் மாம்பழங்களைப் பெற்றிருக்கிறார். அம்பிகாவின் தலைக்குப் பின் பக்கத்தில் ஒளிவட்டம் உள்ளது. அம்பிகாவின் கொண்டை விரிந்தாற் போல் அழகு செய்யப்பட்டுள்ளது. ஒளிவட்டத்தின் மீது தியான நிலையில் நேமிநாதர் மாமரத்தடியில் அமர்ந்திருக்கிறார். அம்பிகாவின் மூத்த மகன் **சுபங்கரா** நின்று கொண்டும், இளைய மகன் **பிரபாங்கரா** சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டும் இருக்கின்றனர். அம்பிகாவை **குஷ்மாண்டி இயக்கி** என்றும் அழைப்பர். அரிஷ்டநேமிக்கு அல்லது நேமிநாதருக்கு அம்பிகா சாசன தேவதையாக விளங்குகிறார். இயக்கன் **காபாடினும்**, இயக்கி **அம்பிகாவும்** சமயம் சார்ந்த பயணிகளுக்குப் பாதுகாவலர்கள். இயக்கன் - இயக்கிகளும் செல்வ குடும்பத்தினர் களாகையால் தங்களை விலை உயர்ந்த அணிகலன்களால் அலங்கரித்துக் கொள்ளுகின்றனர்.[6]

10.அமர்ந்த அம்பிகா

சேர்க்கை எண் -400 - 2001 சிலையின் உயரம் 16 செ.மீ. கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலையாகும். செவ்வக பீடத்தில் இணைக்கப்பட்டுள்ள சிறிய தாமரைப் பீடத்தில் அம்பிகா அமர்ந்திருக்கிறார். அம்பிகாவின் வலது கை மாம்பழத்தைப் பிடித்திருக்கிறது. இடது கையில் இளைய மகன் **பிரபங்கரா** உள்ளான். வலது புறத்தில் மூத்த மகன் **சுபாங்கரா** சாமரத்தை ஏந்தியுள்ளான். அம்பிகாவின் ஒளிவட்டம் பெரியது.

ஒளிவட்டத்திற்கு மேல் மாமரத்தின் கீழ் நேமிநாதர் அமர்ந்துள்ளார். பீடத்தின் முன் பக்கத்தில் சிங்கம் உள்ளது.

11. நின்ற கோலத்தில் அம்பிகா

சேர்க்கை எண் -401 - 2001 உயரம் 22.5 செ.மீ., கமுகமரம் சேர்க்கை எண் -404 - 2001, பீடம் சேர்க்கை எண் - 406 - 2001 .இவை மூன்றும் ஒன்றிணைந்தவை . கி.பி. 10 ஆம் நூற்றாண்டு சிலையாகும். அம்பிகாவின் தலையில் சிறிய மகுடம் அழகு செய்கிறது. சிரச்சக்கரத்தின் நடுவிலிருந்து முத்துமாலை தொங்குகிறது.உடலில் எளிய சன்ன வீரம் அணியப்பட்டுள்ளது. கால்களை அணி செய்யும் காப்புகளின் முன் பக்கத்தில் பூக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அம்பிகாவின் வலது கையில் மலர் இருந்து உடைந்துள்ளது. இடது கையில் கிளி அமர்ந்துள்ளது. பீடத்தில் நான்கு பள்ளங்கள் உள்ளன. பெரிய நடுப்பள்ளத்தில் அம்பிகாவிற்கும், மற்ற பள்ளங்களில் தன்னுடைய இரண்டு ஆண் மக்களுக்கும், பணிப் பெண்ணிற்கும் இடமுள்ளன. பீடத்தின் முன் பக்க ஜகதியில் வட்டெழுத்துப் பொறிப்புள்ளது. மற்ற இரண்டு அம்பிகா சிலைகள் அமர்ந்த நிலையில் வடித்திருப்பதும் மாமரங்கள் காண்பித்திருப்பதும் அவர்களின் உடல் அமைப்பும் அவர்களுக்குரிய வட்ட ஒளி வட்டங்களும் தக்காணக் கலைப் பாணியைப் பறைச் சாற்றுகின்றன. ஆனால் நிற்கும் அம்பிகா சிலை தமிழ்நாட்டின் சமணப் பண்பைப் பகர்கின்றது.[7]

12. சாமரதாரர்கள்

சேர்க்கை எண்கள் - 402 - 2001 மற்றும்403 - 2001 உயரம் முறையே 12 செ.மீ. மற்றும் 11 செ.மீ. இந்த இரண்டு சிலைகளும் சேர்க்கை எண் 394 -2001 உள்ள மகாவீரருக்கு உரியவை. சேர்க்கை எண் -402 - 2001 உள்ள சாமரதாரர் மகாவீரருக்கு வலது பக்கத்திலும் சேர்க்கை எண் -403 - 2001 உள்ள சாமரதாரர் மகாவீரருக்கு இடது புறத்திலும் நிற்கின்றனர். இவை கி.பி. 9 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

ஆ. சளுக்கை

சளுக்கை எனற ஊர் வந்தவாசியிலிருந்து வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் இருக்கிறது. சோழப்பேரரசின் முதலாம் இராசேந்திரனின் இரண்டாவது மகன் சோழகேரளன் ஆவார். இவர் சாளுக்கிய மன்னனை வென்ற புகழ் நிலைக்கு இந்த சாளக்கியான சோழகேரளபுரம் என்ற வணிகநகரை ஏற்படுத்தினார்.[8] இவ்வூரில் சோழக்கேரளப் பெரும்பள்ளியும் இவனுடைய பெயரில் கட்டப்பட்டது. எனவே சளுக்கையில் சமணர்கள் இன்று வரை வாழ்ந்து வருகின்றனர். சளுக்கையில் கி.பி.1980 முதல் எட்டுச் சமணச் சிலைகள் புதையலாகக் கிடைத்தன.

13. மகாவீரர்

சேர்க்கை எண் -1564 - 89 உயரம் 26.5 செ.மீ.[9] இச்சிலை கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. செவ்வக பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் மகாவீரர் அமர்ந்திருக்கிறார். கைகள் தியான நிலையில் உள்ளன. எளிமையான திண்டும் அதனைத் தொடர்ந்து இரு மருங்கிலும் எழுகின்ற யாளிகளும் அவற்றின் தலைமீது மகரத் தலைகளும் வடிக்கப்பட்டிருக்கின்றன. பத்ர பீடத்தின் கண்டத்தில் மூன்று சிங்கங்கள் முன்பக்கம் பார்த்தவாறு புடைப்பாகக் காணப்படுகின்றன. அரும்பலூரின் அமர்ந்த மாவீரரின் (சேர்க்கை எண் -394 - 2001) முகஅமைப்பை இந்த மகாவீரர் சிலையின் முகம் ஒத்திருப்பதாலும் கைவினைப் பாணியில் நெருங்கி வருவதாலும் வீரகேரளபுரம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டிருப்பதாலும் சமணப்பள்ளிக்கு வீர கேரளப் பெரும்பள்ளி எனப் பெயரிட்டிருப்பதாலும் இந்த மகாவீரர் சிலை கி.பி. 11 - ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடிக்கப்பட்டிருக்கலாம்.

14. சாமரம் வீசுபவர்

சேர்க்கை எண் - 1567 - 89 உயரம் 14 செ.மீ. சிலையின் காலம் கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு. இவர் துவிபங்க நிலையில் சாய்ந்து நிற்கிறார். தலையில் கரண்ட மகுடம் அணி செய்கிறது. வலது கையில் சாமரம் தோள் மீது சாய்த்து இருக்க இடது கை வாழ்த்தும் நிலையில் காணப்படுகின்றது.

15. சாமரம் வீசுபவர்

சேர்க்கை எண் - 1568 - 89 உயரம் 13 செ.மீ. சிலையின் காலம் கி.பி.10 ஆம் நூற்றாண்டு. முந்தைய சாமரதாரரைப் போல இவரும் துவிபங்க நிலையில் நிற்கிறார்.பல்லவர் பாணி இந்த இரண்டுச் சிலைகளிலும் தென்படவில்லை. எனவே கலைப்பாணி அடிப்படையில் இவை கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை யாகும். இவர்களின் கால்களுக்குக் கீழ் உள்ள முளைகள் மகாவீரர் சிலைகளுக்குப் பக்கத்தில் செருக உகந்தவை.

16 . மகர்வீரர்

சேர்க்கை எண் - 1561 - 89 உயரம் 85 செ. மீ. இந்தச் சிலை கி.பி.13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மகாவீரர் ஒரு சிறிய வட்ட பீடத்தில் நிற்கிறார். தலையில் வரிசையாக சுருள்முடிகள் அழகு செய்கின்றன. உள்ளங்கைகள் இவருடைய உடலை நோக்கித் தொங்குகின்றன. சதுர பீடத்தில் சிங்க உருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

17 . தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் - 1562 - 89 உயரம் 26.5 செ.மீ. சிலை கி.பி. 12 ஆம் நூற்றாண்டுப் பாணியில் உள்ளது. தீர்த்தங்கரர் தாமரைப்

பீடத்தில் கயோட்சர்க நிலையில் நிற்கிறார். முகம் சற்று தேய்ந்துள்ளது. தாமரைப் பீடத்தின் பக்கங்களில் பிரபையைத் தாங்க சட்டங்கள் உள்ளன. நீள் வட்ட பிரபை அவற்றில் பொருத்தப்பட்டிருக்கிறது. பிரபையின் வெளி விளிம்பில் இருபத்தேழு தீச்சுடர்கள் இருக்கின்றன. உச்சியில் உள்ள சுடர் பெரியதாகும். பெரிய இந்தச் சுடருக்குக் கீழ் மாலை அலங் கரிக்கிறது. பிரபையின் ஒவ்வொரு பக்கத்தின் நடுப்பகுதியிலும் மகரங்கள் அலங்கரிக்கின்றன.

18. சுபார்சுவநாதர்

சேர்க்கை எண் - 1563 - 89 உயரம் 13.5 செ.மீ. சிலை கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இவர் ஒரு செவ்வக பீடத்தில் கயோட்சர்க நிலையில் நிற்கிறார். செவ்வகப் பீடத்தின் பக்கங்களில் இருந்து பிரபை எழுகிறது. பிரபையின் மேல் பகுதி உடைந்துள்ளது. சிலைக் குள்ளமாகத் தெரிவது போல் வடிக்கப் பட்டிருக்கிறது. ஐந்து தலை நாகம் சுபார்ஸ்வநாதருக்குப் படமெடுத்துக் காக்கிறது. பீடத்தின் கீழ்பகுதியின் நான்கு மூலைகளும் கால்களாக மாற்றப்பட்டுள்ளன.

19. சக்கரீஸ்வரி

சேர்க்கை எண் - 1565 - 89 உயரம் 6.5 செ.மீ. சக்கரீஸ்வரி ஒரு தாமரைப் பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் வீற்றிருக்கிறார். தலையை ஒரு சிறிய மகுடம் அலங்கரிக்கிறது. சிலைக்கு நான்கு கைகள் உள்ளன. மேல் கைககள் சக்கரங்களைக் கத்தரி முத்திரையில் பெற்றுள்ளன. வலது கீழ்க்கை தாமரையையும் இடது கீழ்க்கை பழத்தையும் பிடித்துள்ளன. பிரதிஸ்தசாரா சங்ரகாரம் கூறுவதுடன் ஒப்பிட்டால் இச்சிலையை சக்கரீஸ்வரியாகக் கொள்ளலாம். சக்கரீஸ்வரி ஆதிநாதருடைய இயக்கியாகும். சக்கரீஸ்வரி சிலை கி.பி. 12 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

20. ஜினவாணி

சேர்க்கை எண் - 1566 - 89 உயரம் 6.5 செ.மீ. காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு. ஜினவாணியும் ஒரு தாமரைப்பீடத்தில் அர்த்த பத்மாசனத்தில் உள்ளார். நான்கு கைகளில் மேல் கைகளில் அக்கமாலையும், பாசமும் பெற்றுள்ளன. கீழ்கைகள்சுவடியையும், கமண்டலத்தையும் பிடித்துள்ளன. ஜினவாணியின் தலை அழகிய கொண்டையாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஜினவாணியே சுருததேவியாவார்.

சிங்காணிக்குப்பம் - இந்த ஊர் திண்டிவனம் வட்டத்தில் திண்டிவனத்திலிருந்து வடக்கில் 16 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்கிருந்து கல்வெட்டுக் கிடைக்கவில்லை. சிங்காணிக்குப்பத்தில் ஐந்து உலோகச்சிலைகள் புதையலாகக் கிடைத்தன.[10]

21. மகாவீரர்

சேர்க்கை எண் - *389 - 57* உயரம் *84.5* செ.மீ. இது கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. உயரமான சதுர பீடத்தில் இணைக்கப்பட்டுள்ள தாமரைப் பீடத்தில் மகாவீரர் கயோட்சர்க நிலையில் நிற்கிறார். முகம் அருள் பாலிக்கும் அன்பு செழுமியதாக வடிக்கப்பட்டிருக்கிறது. வலது கையின் மணிக்கட்டில் உடைந்துள்ளது. இது அழகிய சிலையாகும். பிரபையைத் தாங்க வைக்கப்பட்ட சட்டங்கள் உடைந்து விட்டன. சதுர பீடத்தின் தாமரை ஜகதியின் நான்கு மூலைகளிலும் வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

22. தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் - *390 - 57* உயரம் *54.5* செ.மீ. வட்ட உலோக கட்டில் தீர்த்தங்கரர் நிற்கிறார். இவருடைய முகம் மலர்ச்சியாக சிலை வடிக்கப்பட்டிருக்கிறது. தலைமுடி வரிசை வரிசையாக சுருண்டிருப்பதைச் சிற்பி காண்பித்திருக்கிறார். கைகள் நளினமாகத் தொங்குகின்றன. சிலை வடிப்புப் பாணியைக் கொண்டு இந்தச்சிலை கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

23. தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் - *392 - 57* உயரம் *24* செ.மீ. இது கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். அழகிய தாமரைப் பீடத்தில் தீர்த்தங்கரர் நிற்கிறார். கை விரல்கள் நளினமாகக் காட்டப்பட்டுள்ளன. விரல்கள் தொடையைத் தொடுவது போல் தோன்றுகின்றன. இச்சிலையின் இரண்டுக் கால்களுக்கு இடையில் மற்ற சிலைகளை விட அதிக இடைவெளி தெரிகிறது. தாமரைப் பீடம் சதுர பீடத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. தாமரைப் பீடத்தின் பக்கங்களில் பிரபையைத் தாங்கும் சட்டங்களை சதுரபீடத்தின் பக்கங்களில் வீரிட்டெழும் சிங்கங்கள் தாங்குகின்றன.

24. திரிதீர்த்தி

சேர்க்கை எண் - *393 - 57* உயரம் *19* செ.மீ. சிலையின் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு . தலைமைத் தீர்த்தங்கரர் சதுர பீடத்தில் அர்த்த பர்யங்காசனத்தில் அமர்ந்துள்ளார். தலையில் சுருள்முடி காண்பிக்கப் பட்டிருக்கிறது. கைகள் தியானத்தில் இருக்கின்றன. தலைக்குப் பின்பக்கத்தில் வட்டமான ஒளிவட்டம் இருக்கிறது. நீள் வட்ட எளிய பிரபை பட்டையாகக் காட்டப்பட்டிருக்கிறது பீடத்திலிருந்து எழுகிறது. பிரபையின் உச்சியில் ஒரே அளவாக உள்ள முக்குடைகளும், முக்குடைக்குப் பக்கத்தில் பக்கத்திற்கு ஒன்றாக ஆலவட்டமும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மூலநாயக ருக்கு வலது பக்கத்தில் சிறிய தாமரைப் பீடத்தில் தீர்த்தங்கரர்

நிற்கிறார். இவருக்குப் பிரபையும் பாமண்டலமும் காணப்படுகின்றன. இடது பக்கத்தில் அதே போன்று தாமரைப் பீடத்தில் சுபார்ஸ்வநாதர் நிற்கிறார்.இவருடைய தாமரைப் பீடங்கள் சதுர பீடத்தில் இருந்து எழுந்து வருகின்றன. சதுர பீடத்தின் நான்கு அடிப்பக்கங்களும் கால்களாக நிற்கின்றன. இது கன்னட நாட்டுப் பாணி சிலையாகும்.

25. இயக்கி அம்பிகா

சேர்க்கை எண் - 391 - 57 உயரம் 56 செ.மீ. அம்பிகா சிலை கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அம்பிகா தாமரைப் பீடத்தின் மீது திரிபங்க நிலையில் நிற்கிறார். தலையை அழகிய கரண்ட மகுடம் அணி செய்கிறது. கரண்ட மகுடத்தில் நேமிநாதர் உள்ளார். வலதுகை சிம்ம கரணத்திலும்,இடதுகை பணிப் பெண்ணின் தலைமீதும் உள்ளன. அம்பிகாவின் முகம் புன்னகைக்கிறது. கழுத்தாரங்களும், சன்னவீரமும், இடுப்பணி களும், கைகளில் வாகு வளையங்களும், வளையல்களும் சிலைக்கு எழிலூட்டுகின்றன. அம்பிகாவின் வலது பக்கத்தில் பீடத்தின் மீது கரண்ட மகுடத்துடன் அம்பிகாவின் ஒரு மகன் நிற்கிறார். இடது புறம் திரிபங்கத்தில் நிற்கும் பணிப்பெண் தம்முடைய கைகளில் மலர் மாலையை ஏந்தியுள்ளார். கிடங்கில் - கிடங்கில் தற்காலத்தில் திண்டிவனம் நகரின் ஒரு பகுதியாகத் திகழ்கிறது.[11]இங்கு ஒரு தீர்த்தங்கரர் சிலைப் புதையலாகக் கிடைத்தது.[12]

26. தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் - 721 - 74 உயரம் 78 செ.மீ. தீர்த்தங்கரர் தாமரைப்பீடத்தில் நிற்கிறார். முகம் அமைதியானது. தீர்த்தங்கரின் கழுத்துச் சிறியதாகத் தெரிகிறது. வலது கை உடலில் இருந்து சற்று தள்ளித் தொங்குகிறது. தாமரைப் பீடத்தைத் தாங்கும் சதுர பீடத்திலிருந்து பக்கவாட்டில் சட்டங்கள் எழுகின்றன. இவற்றை யாளிகள் தாங்குகின்றன. பீடத்தின் அடிப்பகுதியில் வளையங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. பீடத்தில் தமிழ் பொறிப்புள்ளது. அது' **நாயனார் அதிபதி அழகர், வக்கரம் கிழார்'** என்பவர் இச்சிலையை அளித்துள்ளார் எனக் குறிப்பிடுகிறது . எழுத்தமைதி பார்த்தால் இச்சிலை கி.பி.13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்ற முடிவுக்கு வரலாம்.

திருமலை

திருமலை போளூர் வட்டத்தில் போளூரிலிருந்து வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் இருக்கிறது. திருமலை ஒரு சிறந்த சமண சமயத் தலமாகும். இவ்வூர் முதலாம் பராந்தகசோழன் காலம் முதல் சிறந்து விளங்குகிறது. தற்பொழுது ஒரு சமண மடமும் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வூரில் ஒரு தீர்த்தங்கரர் சிலைக் கிடைத்துள்ளது.

27. தீர்த்தங்கரர்

சேர்க்கை எண் - 705 - 73 உயரம் 25 செ.மீ. தீர்த்தங்கரர் தியான நிலையில் நீள் சதுர பீடத்தில் அமர்ந்துள்ளார். அவருடைய முதுகை ஒரு நீண்ட திண்டு தாங்குகிறது. திண்டின் மேல் பகுதியின் சட்டத்தின் முனைகள் மகரத் தலைகளாகத் தோன்றுகின்றன. திண்டின் பின்பக்கத்தில் சாமரம் வீசுபவர்கள் தங்களுடைய வெளிக் கையில் சாமரத்தைத் தோள் மீது போட்டு, உள்கைகளைத் தொடை மீது வைத்து நிற்கின்றனர். தீர்த்தங்கரரின் தலைக்குப் பின் பக்கத்தில் ஒளிவட்டம் இருக்கிறது. ஒளிவட்டத்திற்கு மேலே ஒரே அளவான முக்குடைகள் நிற்கின்றன. மூன்று சிலைகளும் கீழ் நோக்கிய பார்வையினவாகும். சிலையின் பாணியை நோக்கும் போது இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கொள்ளலாம்.

செங்கிலிக்குப்பம்

இவ்வூர் வாணியம்பாடி வட்டத்தில் வாணியம்பாடிக்கும் ஆம்பூருக்கும் இடையில் அமைந்துள்ளது. இங்கு பாலாற்றுப் படுகையில் ஒரு சிலைக் கிடைத்தது.

28. பார்சுவநாதர்

சேர்க்கை எண் - 415 - 2001 இது சிறிய சிலையாகும். பார்ஸ்வநாதர் ஒரு தட்டையான பீடத்தில் தியானத்தில் அமர்ந்துள்ளார். இவருடைய மார்பின் நடுவில் ஸ்ரீவத்ச குறி காணப்படுகிறது. தலைக்கு மேலே ஏழு தலை நாகம் குடையாக நிற்கிறது. இச்சிலை தற்காலத்தைச் சேர்ந்தது.[13]

கலைப்பாணி

அரும்பலூரின் சமணக்கோயிலின் உயர்வு சிறப்பு நான்கு திசைகளிலும் பரவியிருந்திருக்கிறது. அதன் விளைவால் அரும்பலூரின் சமணக் கோயிலைப் பல நாட்டு மக்களும் வந்து வழிபட்டதோடு சமணச் சிலைகளை வார்த்துத் தானமும் செய்துள்ளனர் என்பதற்குச் சான்றாக ஐந்து செப்புத் திருமேனிகளின் பீடங்களிலும் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் தமிழ் எழுத்து நான்கு பீடங்களிலும்,கன்னடமொழி ஒரு பீடத்திலும் பொறிக்கப் பட்டுள்ளன. தமிழ் எழுத்துக்கள் உள்ளவற்றில் ஒரு பீடம் மட்டும் வட்டெழுத்துப் பொறிப்பைப் பெற்றிலங்குகிறது.

வட்டெழுத்து வடஆற்காடு மாவட்டத்தில் பண்டை நாள்களில் பொறிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் வட்டெழுத்துப் பொறிப்புள்ள சிலை கொங்கு நாட்டிலிருந்து வந்த பக்தர்களால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும்,

கன்னட பொறிப்புள்ள சிலை கன்னட நாட்டினர் அளித்துள்ளனர் எனவும் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் தமிழ் எழுத்துப் பொறிப்புள்ள சிலைகள் மட்டும் உள்ளூர் பக்தர்களால் கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம். பிற்காலப் பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் அரும்பலூரில் சமணம் உயர்ந்த நிலையில் திகழ்ந்திருந்ததை இந்த புதையல் சிலைகள் காட்டுகின்றன.

1988 இல் இந்தியத் திருவிழாவின் போது வெளியிடப்பட்ட புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள சமணச் சமயச் செப்புத் திருமேனிகளில் குஜராத் மற்றும் கர்நாடக மாநிலங்களில் இருந்து சேகரிக்கப்பட்டவை அடங்கும். இந்தச் செப்புத் திருமேனிகளில் பீடங்களுக்குக் கீழ்ப்பகுதி தரையில் நிற்க நான்கு மூலைகள் கால்களாக மாற்றப்பட்டுள்ளன.

ஆந்திர மாநிலம் பாபட்லாவின் சமணச் சிலைகள் ஐதராபாத்து அருங்காட்சியகத்தில் காட்சியில் உள்ளன. அவற்றின் சில செப்புத் திருமேனிகளின் பீடங்களின் அடிப்பகுதியில் நான்கு மூலைகளும் நான்கு கால்களாகச் செய்யப்பட்டு தரையில் நிற்கின்றன. மேலும் சில சிலைகளின் பிரபையின் உச்சியில் கோயிலின் விமானத்தின் கலசத்தைப் போன்று காணப்படுகின்றன. தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகளின் பிரபை சற்று உருளையாக வடிப்பது வழக்கம். ஆனால் பாபட்லாவின் சிலைக்குப் பிரபை தட்டையாக வடிக்கப்பட்டிருக்கிறது . இந்த பாணி பிரபைகள் பெல்லாரி மாவட்டத்து அர்பனஹல்லியின் கோகலியின் தீர்த்தங்கரர், சுமதிநாதர், மகாவீரர் சிலைகளில் காணப்படு கின்றன. இந்த பாணி அரும்பலூர் கன்னட பொறிப்புள்ள மகாவீரர் சிலையிலும் அமர்ந்த அம்பிகா சிலைகளிலும், சளுக்கை சுபார்ஸ்வநாதர் சிலையிலும், சிங்காணிக்குப்பத்தின் திரிதீர்த்தி செப்புத் திருமேனியிலும் காணக்கிடைக்கிறது.

பிரபைகளுக்கும் பீடங்களுக்கும் அதிக அளவில் உலோகம் பயன்படுத்தப்படாதது சமணர்களின் பொருளாதாரச் சிக்கனத்தைக் காட்டுகிறது. சம்ணர்களில் சிலர் வியாபாரிகள். அவர்களுக்குப் பொருளாதாரம் நன்குத் தெரியும். எனவே பக்தி இருந்தும் சிலைகள் வடிக்கப்பட்டிருந்தும் அதிக உலோகத்தைப் பயன்படுத்தி வீணடிக்கவில்லை எனக் கொள்ளலாம்.

முடிவுரை

இதுவரை பார்த்தவை வழியே தொண்டை மண்டல புதையல் உலோகச் சிலைகள் சமண சமய வரலாற்றை அறியவும் கலை மற்றும் பண்பாட்டு வரலாற்றையும் அறிந்துக் கொள்ளவும் பெரிதும் பயனுள்ளதர்கின்றன.

உதவிய நூல்கள்

1. I.K. Sarma , pages 5 - Temples of the Gangas of Karnataka, A.S.I. 1992
2. ஏ.ஏகாம்பரநாதன், தொண்டை நாட்டுச் சமணக் கோயில்கள், ஜைனர் இளைஞர் மன்றம், சென்னை,1991.
3. ம.காந்தி, அரும்பலூர் சமணச் சிலைகள், அய்யாவீடு, வேலூர்,2004.
4. B.C Bhattachara .pages 43. The Iconography, Motilala Banarsidass 1939.
5. R. Kannan - K. Lakshminaraayanan. pages 17. Iconography of the Jain Images in the districts of Tamil nadu Government Museum Chennai, 2002.
6. B.C. Bhattacharya, page 92, The Iconography ;Motilala Banarsidass 1939.
7. ம. காந்தி, பக்கம் 15, அரும்பலூர் சமணச் சிலைகள், அய்யாவீடு, வேலூர்,2004.
8. இல. தியாகராசன், சோழகேரளன், காமரசவல்லி பதிப்பகம், அரியலூர், 1991. A.R.E. No.474/1920.
9. R. Kannan - K. Lakshinaraayanan. pages 17. Iconography of the Jain Images in the distfrricts of Tamiln nadu Government Museum Chennai 2002.
10. R. Kannan - K. Lakshmi naraayanan. pages 17. Iconography of the Jain Images in the districts of Tamil nadu Government Museum Chennai 2002.
11. M.Gandhi, Page 23, Saivite Temples of the Chola period in South Arcot District in Tamil nadu - A report submitted to the Nehru Trust, New Delhi, 1994.
12. மா. சந்திரமூர்த்தி - கி. சீதரன், இராசராசன் வரலாற்றுக் கூடம், தொல்லியல் துறை வெளியீடு, ப.27, சென்னை, 1985.
13. ம. காந்தி, பக்கம் 11, அரும்பலூர் சமணச் சிலைகள், அய்யாவீடு,வேலூர், 2004.



48. வேலூர் மாவட்டத்தில் சமணத் தடயங்கள்

கி. குமார், பாகவெளி.

வேலூர் பகவதிமலை குகைப்பள்ளிகள்

வேலூர் நகருக்கு தெற்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் வேலப்பாடி என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு கிழக்கே உள்ள பெரிய மலைத்தொடரின் நடுவில் வேலப்பாடி மலை என்றும் பகவதி மலை என்றும் அழைக்கப்படும் மலை உள்ளது. இம்மலையின் மேற்பரப்பில் இயற்கையாக அமைந்த குகைகள் பல உள்ளன. ஆவற்றுள் அருகருகே அமைந்துள்ள மூன்று குகைகளில் சமணத் துறவிகளால் பயன்படுத்தப்பட்ட பாறைப்படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன.

முதலாவதாக உள்ள சிறய குகையில் ஒரு படுக்கை மட்டும் பள்ளமாக வெட்டப்பட்டுள்ளது. இப்படுக்கையின் தலையணைப் பகுதியும் சிறிய அளவில் இரண்டு பாதங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குகைக்கு சற்று மேல்பகுதியில் இரண்டாவது குகை உள்ளது. இக்குகையினுள் ஒரு படுக்கை அழகாக வெட்டப்பட்டுள்ளது. இரண்டாவது குகைப் பள்ளிக்கு வடக்கே ஒரு பெரிய பாறை காணப்படுகிறது. இப்பாறையின் அடிப்பகுதியில் உள்ள குகையின் உட்புறத்தில் மூன்று பாறைப் படுக்கைகள் வரிசையாக வெட்டப்பட்டுள்ளன. சூமற்காணும் பாறைப்படுக்கைகள் அனைத்தும் வழவழப்பபானதாக அமைக்கப்பட்டுள்ளன. இப்படுக்கைகள் கி.பி. 7–8ம் நூற்றாண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

சமண பாதங்கள்

முதலாவது குகைப்பள்ளிக்கு அருகே கிழக்குப் பகுதியில் சுமார் 51/2 அடி நீளமுள்ள இரண்டு பாதங்கள் அழகாக வடிக்கப்பட்டுள்ளன இவற்றின் முன்பகுதி மற்றும் பின்பகுதிகளில் தாமரை மலர்கள் பாதத்தில் நடுப்பகுதியில் நாற்கோண வடிவிலான அமைப்பு மெல்லியதாக செதுக்கப்பட்டுளுளன. துமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சமணர் பாதங்களுள் பகதிமலையிலுள்ள பாதங்களே மிகப்பெரியதாகும். இந்த பாதங்கள் கிபி. 9–ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. இக்குகைளில் வாழ்ந்த சமண துறவியர்கள் இப்பாதங்களுக்கு தினமும் வழிபாடு செய்திருக்க வேண்டும்.

கல்வெட்டுகள்

பகவதி மலையிலுள்ள சமண பாதங்களுக்கு அருகே உள்ள பாறைப்பகுதிகளில் தமிழ் கல்வெட்டுகள் இரண்டும் சில தெலுங்கு கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆவைகளில் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருண்ணனின் 26–ம் ஆட்சியாண்டில் (கி.பி.865) பொறிக்கப்பட்ட கல்வெட்டில் கூடாடும் பாறை மலையிலுள்ள பன்னபேஸ்வரம் என்னும் கோயிலை பன்னப்பை என்பவர் அமைத்தார் என்றும், அக்கோயிலுக்கு நுளம்ப மன்னன் திரிபுவன தீரன் என்பவர் பங்களநாட்டு படுவூர் கோட்டத்திலுள்ள வேளர்பாபு என தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பன்னபேஸ்பரம் என்ற கோயில் பன்னப்பை என்பவரின் பெயரை கொண்டிருப்பினும் இது பன்னகேஸ்வரர் என்றழைக்கப்படும் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதருக்கு எழுப்பப்பட்ட கோயிலாகும். இக்கோயில் காலப்போக்கில் சிதைந்து போயுள்ளது. க்ஷசங்கற்சுவர்களும் கட்டிட இடிபாடுகளும் இவற்றை உறுதிசெய்கின்றது.

பாதங்களுக்கு அருகே மற்றொரு தமிழ்க்கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில் யக்கர் குர என்ற சொல் மட்டும் தெளிவாக உள்ளது. முற்றவைகள் சிதைந்து காணப்படுகின்றன. மேலும் இங்குள்ள தெலுக்கு கல்வெட்டுகளும் சிதைந்த நிலையில் உள்ளன.

நெட்டேறிமலை தொல்லியல் சின்னங்கள்

வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம் இரயில் நிலையத்திற்கு கிழக்கே சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில், இரயில்பாதைக்கு வடக்கே, நெட்டேறிமலை என்றழைக்கப்படும் சிறிய மலைஅமைந்துள்ளது. இது காட்பாடி வட்டம், வேப்பூர் ஊராட்சியைச் சேர்ந்ததாகும். இம்மலையில் பல தொல்லியல் சின்னங்கள் இருப்பது இக்கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புதிய கற்கால சின்னங்கள் (Neolithic Age)

நெட்டேறி மலையில் பல குகைகளும், நீர்ச்சுனைகளும் இயற்கையாகவே அமைந்துள்ளன. மேலும், மனிதன் வாழ்வதற்கேற்ற சூழலும், இயற்கை வளமும் இம்மலையில் இருப்பதால் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதாவது புதிய கற்காலத்திலிந்தே மக்கள் வாழ்ந்து வந்திருப்பது அறிய வருகிறது. புதிய கற்காலத்தைச் சேர்ந்த கற்கோடரி (Neolithic Axe) செல்ட் (celt) எனப்படும் சிறு கற்கருவி போன்ற பல கருவிகள் முழுமையானதாகவும், உடைந்த நிலையிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. மேலும், புதிய கற்காலத்தைச் சேர்ந்த சாம்பல நிற (grey ware) பானை ஓடுகளும், கையினால் செய்யப்பட்ட சிவப்பு நிற பானை ஓடுகளும் ஏராளமாக காணப்படுகின்றன.

நிறத்தில் கோட்டுருவமாக தீட்டப்பட்டுள்ள மனிதன் தனது கால்களை அகலமாக விரித்துவைத்துக் கொண்டு, வலது கையில் நீளமான கயிற்றினை பிடித்துக் கொண்டிருப்பது போலவும், இடது கையில் சிறிய ஆயுதத்தை மேலே உயர்த்தி பிடித்துக் கொண்டிருப்பது போலவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. வெண்மை நிறத்திலுள்ள மனிதனின் உருவம் தலையில் குடுமி வைத்துக் கொண்டு நின்ற கோலத்தில் தனது இரு கைகளையும் மேலே உயத்தியவாறு காணப்படுகிறது. இவ்விரு ஓவியங்களும் பெருங்கற்காலத்தைச் சார்ந்ததாகும்.

மேலும், பஞ்சபாண்டவர் பாறை என்றழைக்கப்படும் (சமணர் பாறை படுக்கைகள் உள்ள) குகையின் கூரைப் பகுதியிலும் சில குறியீடுகள் வெண்மை நிறத்தில் தீட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மிகவும் மங்கலாக கட்சியளிக்கின்றன. இரண்டு பக்கங்களிலும் திரிசூல (Trident) அமைப்புகொண்ட குறியீடும், இரண்டு சாய்வான கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்வது போன்ற அதாவது பெருக்கல் குறி (Sign of multipication) போன்ற குறியீடும் வரையப்பட்டுள்ளன. மேலும், இரண்டு முக்கோணங்கள் (Triangles) ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பது போன்ற அதாவது உடுக்கையைப் (Damaru) போன்ற குறியீடும் மிக அழகாக வரையப்பட்டுள்ளன. மேலும், தமிழ் பிராமி (Tamil Brahmi) எழுத்துக்களான (e) மற்றும் (k) போன்ற குறியீடுகளும் இக்குகையில் வரையப்பட்டுள்ன. இவை, தமிழ் பிராமி எழுத்து உருவாவதற்கு முன்னர் வரையப்பட்ட ஆரம்ப கால குறியீடுகளாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

கி.மு.3 அல்லது 2–ஆம் நூற்றாண்டிலேயே இது அமைக்கப் பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

சமணபாதங்கள்:

குகைப்பள்ளி அமைந்துள்ள நெட்டேறி மலையின் உச்சியில் முருகன் குண்டு என்றழைக்கப்படும் பெரிய பாறை உள்ளது. இப்பாறையின் மீது இரண்டு கால் பாதங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. இப்பாதங்களுக்கு அருகே ஒரு அடி ஆழம் கொண்ட உரல் போன்ற பள்ளம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை சமண துறவிகள் மூலிகை மருந்துகள் தயாரிப்பதற்காக பயன்படுத்தியிருக்க வேண்டும். மேலும், பாதம் அமைந்துள்ள குண்டிற்கு அருகே சூரிய ஒளி படாத ஒரு சிறிய நீர்சுனை உள்ளது. சமண துறவிகள் இச்சுனையின் நீரை குடிப்பதற்கும், மூலிகை மருந்துகள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

குகைப்பள்ளிக்கு ஆபத்து:

சமணர் குகைப்பள்ளி அமைந்துள்ள நெட்டேறி மலையில் கடந்த பத்து வருடங்களாக தொடர்ந்து பாறைகள் உடைக்கப்பட்டு வருகின்றன. இக்குகையையும், இம்மலையையும் பாதுகாக்குமாறு உள்ளூர்

நாராயணபுரம் குகைப்பள்ளி

வேலூருக்கு கிழக்கே சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் பூட்டுத்தாக்கு கிராமத்திற்கு அருகில் நாராயணபுரம் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூர் வாலாஜாப்பேட்டை வட்டத்தைச் சேர்ந்ததாகும். இக்கிராமத்திற்கருகே உள்ள சானார் பண்டை என்றழைக்கப்படும் இடத்திற்கு மேற்கே சிறிய குன்று உள்ளது. உள்ளூர் மக்கள் இக்குன்றினை குரங்குமலை என்றும் பஞ்சபாண்டவர் மலை என்றும் அழைக்கின்றனர். இக்குன்றின் கிழக்கு அடிவாரத்தில் இயற்கையாக அமைந்த குகைகள் பல அடுக்கடுக்காக காணப்படுகின்றன. இக்குகைகளை உள்ளூர் மக்கள் பஞ்சபாண்டவர் குகைகள் என அழைக்கின்றனர். அவற்றுள் பெரிய குகையானது தரைப்பகுதியிலிருந்து சுமார் 3 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இக்குகையின் உட்பகுதியில் சிறுசிறு குகைகள் காணப்படுகின்றன. தென்பகுதியில் உள்ள குகையில் மொத்தம் 7 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறுபடுக்கைகள் கிழக்கு மேற்காக வரிசையாகவும், ஒரு படுக்கை மட்டும் வடக்கு தெற்காக தனியாகவும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படுக்கையிலும் தலைவைத்து படுப்பதற்கேற்றாற்போல தலையணை பகுதிகள் வெட்டப்பட்டுள்ளன. தனியாக உள்ள படுக்கையினை இக்குகைப்பள்ளியின் தலைமை துறவி பயன்படுத்தியிருக்க வேண்டும். மழைநீர் மேலிருந்து வழிந்து குகையினுள் வராமலிருப்பதற்காக குகையின் முகப்புப் பாறையில் நீண்ட பள்ளம் வெட்டப்பட்டுள்ளது. மேலும் பெரிய குகைக்கு சற்று வடக்கில் ஒரு சிறிய குகை உள்ளது. இதன் உட்புறத்தில் மிகவும் அழகாக ஆழமாக ஒரு படுக்கை வெட்டப்பட்டுள்ளது. இக்குகையினுள் இருப்பவரை வெளியிலிருந்து பார்க்க முடியாத அளவிற்கு மிகவும் ஆழமாக உள்ளது.

மேற்காணும் குகைக்கு மேலுள்ள அடுக்கில் மற்றுமொரு சிறிய குகை காணப்படுகிறது. இதன் உட்பகுதியில் வடக்கு தெற்காக இரண்டு படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றிற்கு தலையணை பகுதி தெற்குபகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குகைக்கு செல்வதற்கு சரியான பாதை வசதி கிடையாது. சிறிய ஏணியை பயன்படுத்திதான் இதனுள் செல்லமுடியும்.

படுக்கைகளிலோ அல்லது குகையின் முகப்பிலுள்ள பாறைகளிலோ கல்வெட்டுகள் எதுவும் காணப்படவில்லை. எனினும் தமிழகத்தில் சமணசமயம் பரவிய ஆரம்ப காலத்திலேயே இக்குகைப்பள்ளி உருவாக்கப் பட்டு தொடர்ந்து 13–ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

இக்குகைப்பள்ளியின் முன்பகுதியில், பிற்காலத்தில் அதாவது 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டில் ஒரு மண்டபம் எழுப்பப்பட்டிருக்கிறது. இதுவும் நாளடைவில் பழுதடைந்து தற்போது அதன் சுவடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

இக்குகைக்கு அருகே தலைபாகம் உடைக்கப்பட்ட நிலையில் ரிஷபநாதரின் சிற்பமொன்று காணப்படுகிறது. இச்சிற்பமானது இக்குகைப்பள்ளியில் வைத்து வழிபாடு செய்யப்பட்டிக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

நாராயணபுரம் குகைப்பள்ளிக்கு கிழக்கே அமைந்துள்ள சானார் பண்டை என்றழைக்கப்படும் பகுதி சமணர்களின் குடியிருப்புப் பகுதியாகும். சமணர் பண்டை என்ற பெயர் பிற்காலத்தில் சானார் பண்டை என மாற்றி அழைக்கப்பட்டு வருகிறது.

இரத்தினகிரி குகைப்பள்ளி

வாலாஜாப்பேட்டை வட்டத்தில் வேலூருக்கு கிழக்கே சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இரத்தினகிரி என்னும் தலம் அமைந்துள்ளது. இங்குள்ள மலையில் புகழ்பெற்ற பாலமுருகன் திருக்கோயில் அமைந்துள்ளது. இம்மலையின் வடக்கு அடிவாரத்தில் இயற்கையாக அமைந்த சிறிய குகை ஒன்று வடகிழக்கு திசையை நோக்கியவாறு காணப்படுகிறது. இது சுமார் 15 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டுள்ளது. இக்குகையின் கூரைப்பகுதியில் பெருங்கற்காலம் எனப்படும் இரும்பு காலத்தைச் சேர்ந்த வெண்மை நிறத்தாலான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மேலும், குகைக்கு அருகே ஏராளமான கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் காணப்படுவதால் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இக்குகையானது உறைவிடமாக பயன்படுத்தப்பட்டிருப்பது அறிய வருகிறது. பின்னர் இப்பகுதியில் சமண சமயம் பரவியபொழுது சமண துறவிகளின் உறைவிடமாக மாற்றப்பட்டிருக்கிறது. இக்குகையினுள் நான்கு பாறைப் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படுக்கைகளுக்கு தலையணை பகுதி வெட்டப்படவில்லை. மேலும் படுக்கைகளிலும் அவற்றின் அருகிலும் சில குறியீடுகள் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால், கல்வெட்டுக்கள் எவையும் காணப்படவில்லை. இக்குகையும் படுக்கைகளும் பார்ப்பதற்கு மிகவும் எளிமையாக காணப்படுவதால், தமிழகத்தில் சமண சமயம் பரவிய ஆரம்பகாலத்திலயே அதாவது கி.பி.2 அல்லது 1–ஆம் நூற்றாண்டிலேயே இக்குகைப்பள்ளி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

ஆபத்தான நிலை:

அன்மையில் மலையின் உச்சியில் அமைந்துள்ள பாலமுருகன் கோயிலுக்கு சாலை அமைக்கும் பணி நடைபெற்றபோது இக்குகைப் பள்ளிக்கு அருகே இருந்த பாறைகள் அனைத்தும் உடைத்தெடுக்கப் பட்டுள்ளன. இக்குகையின் மேலுள்ள பாறையும் உடைந்து காணப்படுகிறது. இதனால், இக்குகைப்பள்ளி அழியும் நிலையில் உள்ளது.

இரத்தினகிரி குகைப்பள்ளிக்கு வடக்கே சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கீழ்மின்னல் என்னும் கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரில் சமணர் கோயில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இவ்வூரிலிருந்த மகாவீரரின் சிற்பம் தற்போது வேலூர் அரசு அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திம்மணாச்சாரி குப்பம் குகைப்பள்ளி

வாலாஜாப்பேட்டை வட்டத்தில் பூட்டுத்தாக்கிற்கு தெற்கே சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் திம்மணாச்சாரிகுப்பம் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூருக்கு வடக்கே "பஞ்சபாண்டவர் மலை " என்றழைக்கப்படும் மலையின் உச்சியில் இரண்டு பெரிய குண்டுகளுக்கிடையில் இயற்கையாக அமைந்த குகை ஒன்று வடமேற்கு திசையை நோக்கியவாறு அமைந்துள்ளது. இது கிழக்கு மேற்காக சுமார் 25 அடி நீளமும் வடக்கு தெற்காக சுமார் 20 அடி அகலமும் கொண்டுள்ளது. இக்குகையின் உட்பகுதியிலுள்ள சமமான பாறை தளத்தில் ஆறு படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படுக்கைகளுக்கு தலையணை பகுதிகள் வெட்டப்படவில்லை. இப்படுக்கைகளும் இரத்தினகிரி படுக்கைகளைப் போல் மிக எளிமையாக உள்ளன. இங்கு கல்வெட்டுக்கள் எவையும் காணப்படவில்லை. இக்குகைப்பள்ளியும் சமண சமயம் பரவிய ஆரம்ப காலத்திலேயே (கி.பி.2 அல்லது 1–ஆம் நூற்றாண்டு) உருவாக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

கி.பி.9–ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தின் தென்பகுதியை கங்கர்கள் ஆண்டுவந்தனர். சமண சமயத்தை சார்ந்த இவர்கள் சோழர், சாளுக்கியர் மற்றும் இராட்டிரகூடர்களின் ஆளுமையின் கீழ் ஆண்ட சிற்றரசர்கள் ஆவர். இவ்வரசர்களுள் இரண்டாம் இராசமல்லன் என்பவரது அரசியல் செல்வாக்கு தமிழகத்தின் வடபகுதியில் பரவியிருந்தது. இம்மன்னர் வேலூர் மாவட்டத்திலுள்ள வள்ளிமலையிலும், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சீயமங்களத்திலும் சமணர் குகைப்பள்ளிகளை அமைத்துள்ளார். இவருடைய காலத்தில் தமிழகத்தின் வடபகுதியில் சமண சமயம் விரைவாக பரவியது. இம்மன்னரின் காலத்தில் கர்நாடகத்திலிருந்து பல சமண துறவியர்கள் தமிழகம் வந்துள்ளனர். திம்மண்ண ஆச்சாரியார் என்பவர் அத்துறவிகளுள் ஒருவராக இருக்கக்கூடும். திம்மண்ணா என்பது கன்னடப் பெயர் ஆகும். ஆச்சாரியார் என்பது சமணசமய துறவிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்றாகும். திம்மணாச்சாரியார் திம்மணாச்சாரிகுப்பத்தின் பஞ்சபாண்டவர் மலையிலுள்ள குகைப்பள்ளியில் பலகாலம் உறைந்து சமய தொண்டாற்றி இருக்கக்கூடும். எனவே அவருடைய பெயராலேயே இவ்வூருக்கு திம்மணாச்சாரி குப்பம் என பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

சமணர் குகைப்பள்ளி:

நெட்டேறி மலையின் தென்மேற்கு பகுதியில் சுமார் 150 அடி உயரத்தில் இயற்கையாக அமைந்த பெரிய குகை ஒன்று தெற்கு நோக்கியவாறு உள்ளது. இக்குகையின் உட்பகுதியில், கிழக்கு பாகம் உயர்ந்தும், மேற்குபாகம் தாழ்ந்தும் காணப்படுகிறது. இது சுமார் 15 மீட்டர் நீளமும் 10 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இக்குகைக்கு செல்வதற்கு சரியான பாதை வசதி இல்லை. சிறிது சரிவாக, அதாவது, நெட்டாக உள்ள பாறையின் மீதுதான் ஏறிச்செல்ல வேண்டியுள்ளது. ஆகவேதான் இம்மலைக்கு நெட்டேறிமலை என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது போலும். உள்ளூர் மக்கள் இக்குகையினை "பஞ்சபாண்டவர் பாறை" என அழைக்கின்றனர். இக்குகையில் மொத்தம் எட்டு பாறைப் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. குகையின் உட்பகுதியில் ஐந்து படுக்கைகள் வரிசையாக காணப்படுகின்றன. இவற்றில் நான்கு படுக்கைகளுக்கு மட்டும் தலையணை பகுதி வெட்டப்பட்டுள்ளது. அவற்றுள் மூன்று படுக்கைகளுக்கு இரண்டு பக்கங்களிலும் தலையணை பகுதி உள்ளது. இப்படுக்கைகளுக்கு தென்பகுதியில் குகையின் நுழைவாயிலில் மூன்று படுக்கைகள் வடகிழக்கு–தென்மேற்காக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு படுக்கை மிக ஆழமாக (9 செ.மீ.) வெட்டப்பட்டுள்ளது. இப்படுக்கைகள் அனைத்தும் மிகவும் வழவழப்பாக உள்ளன. இக்குகையிலுள்ள பெரிய படுக்கை 188 செ.மி. நீளமும் 67 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. சிறிய படுக்கை 140 செ.மீ. நிளமும் 50 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது.

குகையின் முன்பகுதியில் திண்ணை போன்ற மேடை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மீது சுமார் ஐந்துபேர் அமர்ந்து கொள்ளலாம். இக்குகைப்பள்ளியின் தலைமைத் துறவி இம்மேடையின் மீது அமர்ந்து கொண்டு தமது சீடர்களுக்கு சமய கல்வியை போதித்திருக்ககூடும் என கருதப்படுகிறது. குகையின் உட்பகுதியில், படுக்கைகளுக்கு அருகே மழைநீர் வழிந்து செல்வதற்கு, கிழக்கு–மேற்காக ஒரு சிறிய கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. மேலும், குகைக்கு வெளியே, கிழக்கு புறத்தில் மேடாக உள்ள பாறையின் மீதும் குகையினுள் மழைநீர் வராமலிருப்பதற்காக ஒரு சிறிய கால்வாய் வடக்கு–தெற்காக நீளமாக வெட்டப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள்:

குகையினுள்ளும், படுக்கைகளுக்கு அருகிலேயும், ஆங்காங்கே சிறிய துண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஆனால், அக்குகைக்கு வந்து செல்வோர் அக்கல்வெட்டுக்களின்மீது தமது பெயர்களை செதுக்கிவைத்து பழைய கல்வெட்டுக்களை சேதப்படுத்தி அவைகளைபடிக்க இயலாமல் செய்துள்ளனர். பழங்காலத்தில் தமிழகத்தின் நுழைவுப் பகுதியாக கருதப்பட்ட பாலாற்றுப் படுகையில், இக்குகைப்பள்ளி அமைந்துள்ளதால் சமண சமயம் பரவிய ஆரம்பகால கட்டத்திலேயே அதாவது கி.மு.3 அல்லது

2–ஆம் நூற்றாண்டிலேயே இது அமைக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

சமணபாதங்கள்:

குகைப்பள்ளி அமைந்துள்ள நெட்டேறி மலையின் உச்சியில் முருகன் குண்டு என்றழைக்கப்படும் பெரிய பாறை உள்ளது. இப்பாறையின் மீது இரண்டு கால் பாதங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. இப்பாதங்களுக்கு அருகே ஒரு அடி ஆழம் கொண்ட உரல் போன்ற பள்ளம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை சமண துறவிகள் மூலிகை மருந்துகள் தயாரிப்பதற்காக பயன்படுத்தியிருக்க வேண்டும். மேலும், பாதம் அமைந்துள்ள குண்டிற்கு அருகே சூரிய ஒளி படாத ஒரு சிறிய நீர்சுணை உள்ளது. சமண துறவிகள் இச்சுணையின் நீரை குடிப்பதற்கும், மூலிகை மருந்துகள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

குகைப்பள்ளிக்கு ஆபத்து:

சமணர் குகைப்பள்ளி அமைந்துள்ள நெட்டேறி மலையில் கடந்த பத்து வருடங்களாக தொடர்ந்து பாறைகள் உடைக்கப்பட்டு வருகின்றன. இக்குகையையும், இம்மலையையும் பாதுகாக்குமாறு உள்ளூர் பொதுமக்களிடம் பலமுறை கேட்டுக் கொண்டும், இம்மலையில் பாறை உடைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது பஞ்சபாண்டவர் பாறையும் அதற்கருகிலுள்ள சில பாறைகளும் மட்டுமே எஞ்சியுள்ளன. மேலும், மலையின் மேற்கு பகுதியில் கல்குவாரி மிக ஆழமாக வெட்டப்பட்டு வருகிறது. எனவே, இம்மலையில் பாறை உடைக்கும் பணி தொடர்ந்தால் இன்னும் சில நாட்களில் நெட்டேறி மலை முற்றிலுமாக அழியக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆகவே, பல தொல்லியல் சான்றுகளைக் கொண்டுள்ள நெட்டேறி மலையையும், சமணர் பாறை படுக்கைகளையும் அழிவிலிருந்து காப்பாற்றுவது நமது கடமையாகும்.

ஈராளச்சேரி மகாவீரர்

அரக்கோணம் வட்டம் காவேரிப்பாக்கத்திற்கு கிழக்கே சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் ஈராளச்சேரி அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள தாமரைக் குளத்திற்கு அருகே 120 செ.மீ. உயரமும் 60 செ.மீ. அகலமும் கொண்ட மகாவீரர் சிற்பம் காணப்படுகிறது. மகாவீரர் அமைதியான முகத்துடன் பத்மாசனத்தில் அமர்ந்தவாறு தியான நிலையில் உள்ளார். இவருடைய உடலமைப்பு அழகாக வடிக்கப்பட்டுள்ளது. மகாவீரரின் தலையைச் சுற்றிலும் அரைவட்ட பிரபாவளியும், தலைக்குமேல் முக்குடையும் அதன் இரு புறங்களிலும் கொடி தோரணங்களும், தலையின் பின்புறம் சக்கரமும் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன. தோள்பட்டைக்கு இருபக்கங்களிலும் இரண்டு இயக்கர்கள் தலையில் மகுடத்துடன் காணப்படுகின்றனர். இயக்கர்களின் கால்களுக்கு கீழே இருபுறங்களிலும் மகரங்கள் காணப்படுகின்றன. மகாவீரரின் இரு பக்கங்களிலும் இரண்டு

சிம்மங்களும், பீடத்தின் முன்பகுதியில் மூன்று சிம்மங்களுமாக ஆகமொத்தம் ஐந்து சிம்மங்கள் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளன. இம்மகாவீரரின் சிற்பம் கி.பி.10 ஆம் நூற்றாண்டைய சோழர் கலைப்பாங்கினை கொண்டு விளங்குகிறது.

அமராபுரம்

அரக்கோணம் வட்டத்தில் காவேரிப்பாக்கத்திற்கு கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் உத்திராம்பட்டு என்னும் ஊருக்கு அருகே அமராபுரம் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூர் ஈராளச்சேரியிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அருகே உள்ள சிறிய மேடான பகுதியில் தலை மற்றும் மேல்பாகம் உடைக்கப்பட்ட நிலையில் மகாவீரர் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இச்சிற்பத்தினை உள்ளூர் மக்கள் 'தலைவெட்டின சாமி' என்றழைக்கின்றனர். முகம் முற்றிலும் சிதைந்து காணப்படுகிறது. இவருடைய மார்பு விரிந்தும், கைகால்கள் நீளமாகவும், அழகாகவும் வடிக்கப்பட்டுள்ளன. இவர் தனது இரு கைகளையும் ஒன்றன் மீது ஒன்றாக தனது மடியின் மீது வைத்துக்கொண்டு தியான நிலையில் காணப்படுகிறார். மகாவீரரின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு இயக்கர்கள் நின்ற நிலையில் உள்ளனர். இவற்றின் தலைபாகமும் உடைந்து காணப்படுகிறது. இச்சிற்பம் கி.பி. 9–ம் நூற்றாண்டைச் சார்ந்தாகும்.

மாகாணிப்பட்டு தீர்த்தங்கரர் சிற்பம்

வேலூர் மாவட்டம் அரக்கோணம் வட்டத்தில், காவேரிப்பாக்கத்திற்கு வடக்கே சுமார் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் மாகாணிப்பட்டு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள கரியமாணிக்கப்பெருமாள் கோயிலுக்கு தெற்கே வயல்வெளியில் மகாவீரர் சிற்பம் சிறிது மண்ணில் புதைந்த நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் உயரம் 85 செ.மீ. அகலம் 65 செ.மீ. ஆகும். பீடம் முழுவதும் மண்ணில் புதைந்துள்ளது. மகாவீரர் பரந்த முகத்தினையும் அகன்ற மார்பினையும் பெற்று யோகநிலையில் அமர்ந்த வண்ணம் காட்சியளிக்கிறார். தலைக்குப் பின்னால் சந்திர பிரபையும் அதற்குமேல் முக்குடையும், முக்குடையின் உச்சியில் ஞானத்தைக் குறிக்கும் தீச்சுவாலையும் காணப்படுகின்றன. தலைமுடி சுருள்சுருளாகவும், காதுகள் நீண்டு அதில் வளையம் அணிந்துள்ளது போன்றும் தோற்றமளிக்கிறது. கழுத்தில் தசை மடிப்புகள் காணப்படுகின்றன. மார்பின் வலது புறத்தில் சிறிய ஸ்ரீவத்சம் (திருமறு) பொறிக்கப்பட்டுள்ளது. கண், வாய், மற்றும் மூக்கு பகுதிகள் சிதைந்து காணப்படுகின்றன. இவருடைய இரு பக்கங்களிலும் இரண்டு சிம்மங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவைகள் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிக்கொண்டு பாய்வது போல் தோற்றமளிக்கின்றன. மகாவீரரின் தோள்பட்டைக்கு மேல் இருபக்கங்களிலும் இரண்டு இயக்கர்கள் சாமரம் வீசிக்கொண்டுள்ளனர். இவர்களின் தலையில் கிரீட மகுடம் காணப்படுகிறது. இம்மகாவீரரின் சிற்பம் கி.பி. 10–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

பிரபாவளியும், அதற்குமேல் முக்குடையும் காணப்படுகின்றன. இரண்டு பக்கங்களிலும் இரு இயக்கர்கள் திரிபங்க நிலையில் நின்றவாறு சாமரம் வீசிக் கொண்டுள்ளனர். இயக்கர்களின் தலையைச் சுற்றிலும் சக்கரங்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கு மேல் பகுதியில் கொடி தோரணமும், பூக்கள் மற்றும் பழங்கள் தொங்குவது போன்றும் அழகாக செதுக்கப்பட்டுள்ளன. இயக்கர்களுக்கு கீழ் பகுதியில் இரண்டு பக்கங்களிலும் குதிரைகள் பாய்ந்து செல்வது போல் காட்டப்பட்டுள்ளதால், இது மூன்றாம் தீர்த்தங்கரரான சம்பவநாதரின் சிற்பமாக இருக்கலாம் என கருதப்படுகிறது. இச்சிற்பம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

திருமணி

காட்பாடி வட்டத்தில், காட்பாடிக்கு தென்மேற்கே சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் திருமணி கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரில் இருந்த தீர்த்தங்கரரின் சிற்பம் தற்போது வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிலையானது சுமார் 3 1/2 அடி உயரமும், 2 அடி அகலமும் கொண்டுள்ளது. பீடத்தின் இடது பாகம் உடைந்துள்ளது. தீர்த்தங்கரரின் முகம் சிறிதளவு சிதைந்து காணப்படுகிறது. இவர் பீடத்தில் அமர்ந்தவாறு ஆழ்ந்த தியான கோலத்தில் உள்ளார். காதுகள் நீளமாகவும், அதில் வளையம் அணிந்திருப்பது போலவும் காணப்படுகிறது. இவருக்குப் பின்னால் திண்டும், அதற்குமேல் வியாளியும் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் தலைக்குப் பின்னால் நீள்வட்ட பிரபாவளியும் அதற்குமேல் முக்குடையும் உள்ளன. தீர்த்தங்கரரின் இருமருங்கிலும் சாமரம் வீசுவோர் சிற்பங்கள் அழகாக செதுக்கப்பட்டுள்ளன. கொடி மற்றும் மலர் தோரண அமைப்பு அழகாக உள்ளது. முக்குடை சிறிது உடைந்துள்ளது. முக்குடைக்குமேல் சிம்மத்தின் தலை மட்டும் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 12–ம் நூற்றாண்டு கலைப்பாணியில் உள்ளது.

கந்தனேரி

வேலூர் மாவட்டத்தில் விரிஞ்சிபுரத்திற்கு மேற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் கந்தனேரி கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரில் வேலூர்–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையின் ஓரமாக ஒரு தீர்த்தங்கரர் சிற்பம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அச்சிற்பத்தினை ஒளிப்படம் (Photo) எடுப்பதற்காக மீண்டும் அப்விடத்திற்கு சென்று பார்த்தபோது அச்சிலை அங்கு காணப்படவில்லை. அன்மையில் நெடுஞ்சாலை விரிவாக்கப்பணி நடைபெற்ற சமயத்தில் அச்சிற்பத்தினை அவ்விடத்திலிருந்து அகற்றியுள்ளனர். அதன்பிறகு அந்த சிற்பம் எங்கு கொண்டு செல்லப்பட்டது என்ற விவரம் தெரியவில்லை. உள்ளூர் மக்களும் அச்சிலை எங்கு கொண்டு செல்லப்பட்டது என்ற விவரத்தை தெரிவிக்க மறுத்து விட்டனர்.

சிவநாதபுரம் குகைப்பள்ளி

வேலூர் வட்டத்தில் ஊசூருக்கு தெற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் சிவநாதபுரம் என்னும் சிறிய கிராமம் அமைந்துள்ளது. இவ்வூருக்கு தெற்குப்பகுதியில் ஜவ்வாது மலைத் தொடரைச் சேர்ந்த வெள்ளைக்கல்மலை என்றழைக்கப்படும் மலையின் வடக்கு அடிவாரத்தில் இயற்கையாக அமைந்த குகை ஒன்று வடக்கு நோக்கியவாறு காணப்படுகிறது. இக்குகை சுமார் 7 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இக்குகைக்கு அருகே சுமார் 2500 ஆண்டுகளுக்கு முந்தைய பெருங்கற்காலம் எனப்படும் இரும்பு காலத்தைச் சேர்ந்த பெருங்கற்படைச் சின்னங்களும் வசிப்பிடமும் காணப்படுகின்றன. இக்குகையிலும் இரும்புகால மக்களால் வரையப்பட்ட வெண்மைநிறத்தாலான ஓவியங்கள் காணப்படுகின்றன. இரும்பு காலத்திற்கு பிறகு கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் இக்குகை சமண முனிவர்களால் குகைப்பள்ளியாக பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இக்குகையின் பாறை தளத்தில் நான்கு பாறைப் படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் மூன்று படுக்கைகள் வரிசையாக உள்ளன. ஒவ்வொரு படுக்கையிலும் தலைவைத்து படுப்பதற்கு ஏற்றாற்போல் தலையணைப்பகுதி செதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு படுக்கையிலும் வழவழப்பான களிம்பு பூசப்பட்டுள்ளது. பெரிய படுக்கையானது 167 சென்டி மீட்டர் நீளமும் 62 சென்டி மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. சிறிய படுக்கை 167 சென்டி மீட்டர் நீளமும் 53 சென்டி மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இப்படுக்கைகளுக்கு சற்று தொலைவில் ஒரு பெரிய படுக்கை தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இப்படுக்கையினை இக்குகைப்பள்ளியின் தலைமை குரு பயன்படுத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவ்வூர் மக்கள் இப்பாறைப் படுக்கைகளை <u>"பஞ்சனமடம்"</u> என அழைக்கின்றனர்.

2. சிவநாதபுரத்திற்கு அருகே உள்ள அத்தியூரில் பைரவநாதர் கோயில் உள்ளது. இக்கோயில் சமணர் கோயிலாக இருந்து பின்னர் இந்து கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் இவ்வூருக்கு கிழக்கே அமைந்துள்ள கைலாசகிரி மலையில் அருகன் மாங்கல் என்று ஒரு பெரிய பாறை உள்ளது. இப்பாறையினை இன்றும் அருகக் கடவுளின் பெயரால் அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், கைலாசகிரி மலைக்கு கிழக்கே அரியூர் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள விஜயநகர கால கல்வெட்டில் இவ்வூர் அருகூர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அருகு என்னும் பெயர் சமணர் கடவுளான அருகதேவனைக் குறிக்கும். எனவே அருகத் தேவனின் பெயரில் உருவாக்கப்பட்ட சமணர்களின் ஊரே அரியூர் (அருகு + ஊர்) என கருதப்படுகிறது.

<u>அனந்தலை குகைப்பள்ளி</u>

வாலாஜாப்பேட்டைக்கு வடகிழக்கே சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அனந்தலை கிராமம் அமைந்துள்ளது. இவ்வூருக்கு கிழக்கே அமைந்துள்ள மலையின் வடமேற்கு பகுதியில் ஒரு சிறிய குன்றின் உச்சியில்

இயற்கையாக அமைந்த குகையில் சமணகுகைப்பள்ளி இருந்தது இக்கட்டுரையாசிரியரால் 1990–ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அக்குகைப்பள்ளியை மீண்டும் பார்வையிடச் சென்றபோது கடந்த ஓராண்டிற்கு முன்னர் அக்குகையும், அக்குகை இருந்த குன்றும் கற்பாறைகளுக்காக முற்றிலுமாக அழிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. மேற்காணும் குகைப்பள்ளியில் ஐந்து படுக்கைகள் செதுக்கப்பட்டிருந்தன. அவைகளுக்கு தலையனை பகுதி அமைக்கப்படவில்லை. இக்குகைப்பள்ளியினை உள்ளூர் மக்கள் தேவரடியாள் பாறை என அழைத்து வந்தனர். தற்போது அக்குகைப்பள்ளி இருந்த சுவடே இல்லை.

மேற்குறிப்பிட்ட குகைப்பள்ளி இருந்த மலையானது பதினான்காவது தீர்த்தங்கரரான அனந்தநாதரின் பெயரில் 'அனந்தநாதர் மலை' என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் அப்பெயர் சிறிது மருவி 'அனந்த மலை' என அழைக்கப்பட்டு பிறகு இவ்வூரின் தற்போதைய பெயரான 'அனந்தலை' என மருவியுள்ளது. சமஸ்கிருதத்தில் இவ்வூர் "பிராஉற்ததேவராஜபுரம்" ***(City of the Proud Kings of Gods)*** என அழைக்கப்படுகிறது. சுந்தரம்பள்ளி

வேலூர் மாவட்டம் திருப்பத்தூருக்கு தென்மேற்கே சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் தருமபுரி மாவட்ட எல்லையில் சுந்தரம்பள்ளி என்னும் கிராமம் அமைந்துள்ளது. சோழமன்னன் சுந்தரசோழனின் பெயரில் சமண பள்ளியாக உருவாக்கப்பட்ட (சுந்தரசோழம்பள்ளி) ஊராக இருக்கலாம் என கருதப்படுகிறது. தற்பொழுதும் இவ்வூரில் பல சமணர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. சிலைக்கு அருகே பல பாறைகளும் செங்கற் துண்டுகளும் காணப்படுவதால் இங்கு சமணர் கோயில் இருந்திருக்க வேண்டும்.

இவ்வூருக்கு வடபகுதியில் புலியாண்ட நயினார் என்பவரது நிலத்தில் பச்சை நிற கல்லினால் செய்யப்பட்ட தீர்த்தங்கரரின் திருவுருவச்சிலை ஒன்று காணப்படுகிறது. இச்சிலை மிகவும் நேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர் ஆசனத்தில் அமர்ந்தவாறும் இரு கரங்களும் ஒன்றன்மீது ஒன்று வைத்தவாறும் தியான நிலையில் காணப்படுகிறார். இவருக்கு பின்புறம் திண்டும் அதற்கு மேல்பகுதியில் இருபக்கங்களிலும் சாமரம் வீசுவோரும் மிக அழகாக காட்டப்பட்டுள்ளன. தலைக்குப் பின்னால் கலையம்சம் பொருந்திய அரைநீள்வட்ட பிரபாவளியும் அதற்குமேல் முக்குடையும் கொடி மற்றும் மலர் தோரணங்களும் வடிக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரருக்கு வலது பக்கத்தில் சாமரம் வீசுவோரின் தலைக்குமேல் பகுதியில் யாளி என்றழைக்கப்படும் முதலையின் சிற்பம் காட்டப்பட்டுள்ளதால் இது ஒன்பதாவது தீர்த்தங்கரரான புஉஷ்பதந்தரின் சிலையாக இருக்கலாம் என கருதப்படுகிறது. இச்சிலை முற்கால சோழர்களின் அதாவது கிபி 9–10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சு.19.

வாலாஜாபேட்டை

வாலாஜாபேட்டை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நெடுங்காலமாக வைக்கப்பட்டிருந்த சமண திருவுருவச் சிலை ஒன்று தற்பொழுது வேலூர் அரசு அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இச்சிலையானது வாலாஜா நகரிலேயே இருந்ததா அல்லது அருகிலுள்ள வேறு ஏதாவது ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டதா என்பதை அறிய இயலவில்லை. இச்சிலை கருப்புநிற கருங்கல்லினால் சுமார் நான்கு அடி உயரத்தில் வடிக்கப்பட்டுள்ளது. அமர்ந்த நிலையில் இரு கரங்களையும் ஒன்றன்மேல் ஒன்று வைத்துக்கொண்டு ஆழ்ந்த தியானத்தில் இருப்பதுபோல காணப்படுகிறது. முகம் நீள்வட்டத்தில் மிக அழகாக காணப்படுகிறது. முத்துக்கள் பதித்தது போன்ற முடியமைப்பு, புன்முறுவல் பூத்த அதரங்கள், தவத்தால் மெல்ல மூடிய கண்கள் யாவும் இதற்கு உயிரூட்டுபவையாகத் திகழ்கின்றன. காதுகள் நீளமாகவும் அவற்றில் வளையம் அணிந்துள்ளது போன்றும் செதுக்கப்பட்டுள்ளன. மூக்கு மிகவும் கூர்மையாகவும் கழுத்து மற்றும் இடுப்பு பகுதிகளில் தசை மடிப்புகளும் காணப்படுகின்றன. பரந்த மார்பும், வளிப்பான உடலமைப்பும் இத்திருஉருவத்திற்கு கம்பீரமான தோற்றத்தை அளிப்பவையாக உள்ளன. கை மற்றும் கால்கள் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளன. இது புடைப்புச் சிற்பமாக இல்லாமல் தனிச் சிலையாக உள்ளது. மற்ற சமண திருவுருவச் சிற்பங்களில் காணப்படுவது போன்ற முக்குடையோ, பீடமோ, திண்டோ, இலச்சினையோ, சாமரம் வீசுவோரோ மற்ற அலங்காரங்களோ ஏதுமின்றி சிலை மட்டுமே அழகாக வடிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். இது ஆதிநாதரின் சிலையாக இருக்கலாம் என கருதப்படுகிறது. இச்சிலையானது மேலை கங்கர்களின் கலைப்பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

கீழ்மின்னல் மகாவீரர் சிற்பம்

வாலாஜா வட்டத்தில் உள்ள இரத்தினகிரி மலைக்கு அருகே கீழ்மின்னல் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திலிருந்த மகாவீரர் சிற்பம் ஒன்று தற்பொழுது வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் உயரம் சுமார் 4 1/2 அடி மற்றும் அகலம் சுமார் 3 அடி ஆகும். தீர்த்தங்கரரின் முகம் நீள்வட்டமாகவும், சிறிது சிதைந்தும் காணப்படுகிறது. தோள்பட்டைக்குமேல் தலையைச் சுற்றிலும் சிறிய பிரபாவளியும் அதிலிருந்து தீச்சுவாலை எழுவது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளன. பிரபாவளியானது இருபக்கங்களிலுமுள்ள மகரயாளியின் வாயிலிருந்து எழுவது போல காட்டப்பட்டுள்ளது. மகாவீரர் பத்மாசனத்தில் அமர்ந்தவாறு தியான கோலத்தில் உள்ளார். இவருக்கு இரண்டு பக்கங்களிலும் சாமரம் வீசுவோர் சிற்பங்கள் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளன. பிரபாவளிக்கு மேல் முக்குடையும், கொடி தோரணங்களும் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன. மகாவீரரின் இலச்சினையான சிம்மங்கள் அவருக்கு இரண்டு பக்கங்களிலும் காணப்படுகின்றன. இச்சிற்பமானது கிபி 10–ஆம் நூற்றாண்டு கலைப்பாணியில் உள்ளது.

சேண்பாக்கம் மகாவீரர் சிற்பம்

வேலூர் நகருக்கு மேற்கே சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் சேண்பாக்கம் அமைந்துள்ளது. இவ்வூரிலிருந்த தீர்த்தங்கரரின் சிற்பம் தற்போது வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கீழ்மின்னல் மகாவீரர் சிற்பம் போன்றே தோற்றமளிக்கிறது. இது சுமார் 3 1/2 அடி உயரமும், 2 அடி அகலமும் கொண்டுள்ளது. முகம், முக்குடை மற்றும் கால் பகுதிகள் சிதைந்து காணப்படுகின்றன. தீர்த்தங்கரர் தாமரை மலர் பீடத்தில் தியான நிலையில் அமர்ந்த வண்ணம் காணப்படுகிறார். இரு பக்கங்களிலும் மகாவீரரின் இலச்சினையான சிம்மங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சிம்மங்களுக்கு மேல் யாளியும் அதற்குமேல் சாமரம் வீசுவோரும் இரண்டு பக்கங்களிலும் நின்று கொண்டுள்ளனர். இடது புறத்தில் உள்ள சாமரம் வீசுபவரின் தலைப்பகுதி உடைந்து காணப்படுகிறது. தீர்த்தங்கரரின் தலையைச் சுற்றிலும் அலங்கார பிரபையும், அதற்குமேல் முக்குடையும் கொடி மற்றும் தோரணங்களும் காணப்படுகின்றன. இச்சிற்பமானது கி.பி. 10–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

களத்தூர்

அரக்கோணம் வட்டத்தில் ஓச்சேரிக்கு தென்கிழக்கே சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் களத்தூர் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள வெள்ளாளர் தெருவின் மேற்கு பகுதியில் சமண தீர்த்தங்கரரின் சிற்பம் ஒன்று புதையுண்ட நிலையில் காணப்படுகிறது. இது சுமார் 4 அடி உயரமும், 2 1/2 அடி அகலமும் கொண்டுள்ளது. மேல் பகுதி சற்று உடைந்துள்ளது. தீர்த்தங்கரரின் இருமருங்கிலும் சாமரம் வீசுவோர் 'சிற்பங்கள் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரரின் முகம் சிதைக்கப்பட்டுள்ளது. காதுகள் நீண்டு காணப்படுகின்றன. தலைக்கு மேல் அரை நீள்வட்டத்தில் பிரபாவளியும், அதற்குமேல் முக்குடையும் வடிக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரர் பீடமொன்றில் அமர்ந்த வண்ணம் தியானக் கோலத்தில் உள்ளார். இச்சிற்பத்தின் கீழ்பகுதி புதைந்த நிலையில் காணப்படுவதால் எந்த தீர்த்தங்கரரின் சிற்பம் என்பதை அறிய இயலவில்லை. இச்சிற்பம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டின் கலைப்பாங்கினை பெற்றுள்ளது.

49. திருநறுங்கொண்டைச் செப்புத் திருமேனிகள்

மா. சந்திரமூர்த்தி, சென்னை.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், திருநறுங்கொண்டை கிராமத்தில் அப்பாண்டை நாதர் கோயிலில் பீடத்தில் எழுத்துப் பொறிப்புடன் கூடிய தர்மதேவியின் சிலை ஒன்றை இக்கட்டுரை ஆசிரியர் சில ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடித்தார்.

சோழர்காலம்

கி.பி. 12, 13 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்கால எழுத்தமைதியில் அந்த எழுத்துப் பொறிப்பு உள்ளது. குருக்கள் ஸ்ரீபாலதேவரும் அவர் தம்பி நாராயண அச்சன் என்பாரும் பொற்றாமரைக் குளத்தின் தெற்கில் அமைந்துள்ள திருநறுங் கொண்டைக் கோயிலுக்கு சரகிபலதேவி எனும் புதிய செப்புச் சிலையைத் தானமாகக் கொடுத்ததை அந்த எழுத்துப் பொறிப்பு தெரிவிக்கிறது. அச்செய்தி கீழ்வருமாறு,

ஸ்வஸ்தஸ்ரீ திருநறுங்கொண்டைக்குப் பொற்தாம(ரை) தெற்கிற் கோயிலி விருந்த

. . . (அ) க்ஷுடன பாடுக்கும் எடுபட இப்பொன் அரை இப்பொருள் கொடுத்து மீட்டு இவருக்கு

. சிரைப் புதிதாகச் செய்வித்தான் சிரகிபலதேவி இத்தம்மம் இவரு குருக்கள் ஸ்ரீபா

லதேவர்க்கும் உடந்பாடு இவர் தம்பி (நாராயண) ஆச்சந் உபயம்.*

இச்சிலை தவிர 25 க்கும் மேற்பட்டசிலைகள் அப்பாண்டை நாதர் கோயிலின் முகமண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ள இச்சிலைகளுள் மூன்றில் வாசகங்கள் இருப்பது ஏற்கனேவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தர்மதேவியின் பீடத்தில் உள்ள எழுத்துப் பொறிப்பு இதுகாறும் கண்டறியப்படவில்லை. எனவே இது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இக்கல்வெட்டு வாசகங்கள் என்ன சிலை என்பது பற்றியும் அதன் காலம் மற்றும் கொடையளித்தவர் பெயர் பற்றியும் அறிய உதவும் சான்றுகளாக உள்ளன.

---

*மா. சந்திரமூர்த்தி - நடன. காசிநாதன் இருவராலும் படிக்கப் பட்டது, தினமணி, 26.10.98.

தர்மதேவி

தர்மதேவியின் உருவம் திரிபங்க நிலையில் பத்ரபீடத்தில் எழிலாக நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இரண்டு கரங்களுள் ஒன்று கடக முத்திரையிலும், மற்றொன்று லோல முத்திரையிலும் அமைந்துள்ளன. தலையில் உள்ள கரண்ட மகுடத்தில் முன்புறம் அமர்ந்த நிலையில் தீர்த்தங்கரர் உருவம் காட்டப்பட்டுள்ளது.

தர்மதேவியின் உடலை அணிகள் பல அழகு செய்கின்றன. தேவியின் அருள்சுரக்கும் முகமும், கச்சையற்ற மார்பகமும், ஒடுங்கிய இடையும், எழிலானத் தோற்றமும் சோழர்கலையை பிரதிபலிக்கின்றன. இத்தேவியின் வலப்புறம் இரண்டு உருவங்களும், இடப்புறம் ஒரு உருவமும் காணப்படுகின்றன. வலப்புறமுள்ள உருவங்களுள் ஒன்று பாதம் வரையிலுமே உள்ளது. மற்றொன்று குழந்தையின் உருவம். இடப்புறமுள்ள பணிப்பெண்ணின் உருவம் வலக்கரத்தில் கலசம் ஏந்தியும் இடக்கரம் தொங்கும் கரமாகவும் உள்ளன. இச்சிலையின் உயரம் 80 செ.மீ. அகலம் 16.5 செ.மீ.

பார்சுவநாதர்

சதுரமான வார்ப்பு தகட்டின் மேல் உள்ள பத்மபீடத்தில் கைகளில் இடது கை துண்டிக்கப்பட்ட நிலையில் நின்ற வண்ணம் இச்சிலை காட்சியளிக்கிறது. வலதுகை இடையின் பக்கவாட்டில் முழங்கால் வரை நீண்டு தாழ்கையாக உள்ளது. தலையின் மீது ஏழுதலைகள் கொண்ட பாம்பு தன் மகுடத்தை வளைத்து நிழல் கொடுக்கம் நிலையில் காணப்படுகிறது. பாம்பின் நீண்ட வால் இவ்வுருவத்தின் பின்புறமாக உடலை ஒட்டி வளைந்து வலது திருவடியை அடைகிறது. தலை முழுவதும் சுருண்ட கேசங்கள் காட்டப்பட்டுள்ளது. வடிந்த நீள் செவிகளில் அணிகள் இல்லை. மேலும் இத்திருமேனியின் கழுத்து, மார்பு, இடுப்பு, கை, கால்களிலும் அணிகள் இல்லை. ஆடை ஏதும் இல்லாமல் நிர்வாண கோலத்தில் இத்திருமேனி வார்க்கப்பட்டுள்ளது.

வலது மார்பின் மேல் ஸ்ரீவத்சம் என்ற அடையாளம் முக்கோண வடிவில் உள்ளது. இத்திருமேனி திலகம் தரிக்காத நெற்றி, தூக்கிய புருவம், அகன்ற கண்கள், திறந்த விழி, நீண்ட அகன்ற நாசி, சற்று பிரிந்த உதடுகளுடன் காட்சி அளிக்கிறது. வலது, இடது கால்களின் புறப்பகுதியில் சிறுவட்டம் வெட்டப்பட்டுள்ளது. இது கனமாக செய்யப்பட்ட செப்புத் திருமேனி. பீடம் மட்டும் பித்தளையால் வார்க்கப்பட்டுள்ளது. பீடத்தின் கீழ் '**கறடிபாக்கம் சக்கறவர்த்தி நயினார் தர்மம்**' என்ற பொறிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 37 செ.மீ., அகலம் 9 செ.மீ.

அப்பாண்டை நாதர்

சதுரமான பத்ர பீடத்தின் மீதுள்ள பத்ம பீடத்தில் நேராக நின்ற நிலையில் இத்திருமேனி வார்க்கப்பட்டுள்ளது. வலதுகை முழங்கால் வரை நீண்டு தாழ்கையாக உள்ளது. இடக்கை புஜத்தில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. தலையின் மீது ஒன்பது தலைகள் உள்ள பாம்பு மகுடத்தை வளைத்து நிழல் கொடுக்கும் நிலையில் உள்ளது. பாம்பின் வால் பின்புற உடலை ஒட்டி வளைந்து வலது திருவடியை அடைகிறது.

தலையைச் சுற்றிலும் சுருண்ட கேசங்கள் ஐந்து வரிசையில் காணப்படுகிறது. நீள் செவிகளில் அணிகள் இன்றி எளிமையாக உள்ளது. இத்திருமேனியிலும் கழுத்து, மார்பு, இடுப்பு, தோள், கை, கால்களில் அணிகள்ஏதுமில்லை. ஆடையற்ற நிர்வாண நிலையில் இத்திருமேனி வார்க்கப்பட்டுள்ளது. வலது மார்பில் மட்டும் ஸ்ரீவத்சம் காணப்படுகிறது. தூக்கியபுருவம், நீண்ட கண்கள், திறந்த விழி, நீண்ட நாசி, சற்றுப்பிளந்த உதடுகள், விரிந்த மார்பு, 'அகன்றதோள்கள், நீண்ட உடல் வாகு யாவற்றையும் பெற்று இத்திருமேனி கனமாக வார்க்கப்பட்டுள்ளது. பாம்பின் உடலில் உள்ள செதில்கள் கூட நுட்பமாக காட்டப்பட்டுள்ளது. பீடத்தின் முன்புறத்தில் கிரந்த எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது.

பீடத்தில் முன்புறத்தில் நான்கு அமர்ந்த சிம்மங்களும், பக்கவாட்டில் இரு சிம்மங்களும் ஆக ஆறு அமர்ந்த சிம்மங்கள் பொறிக்கப்பட்டுள்ளது. பீடத்தின் முன்புறம் இரண்டும், பின்புறம் இரண்டுமாக நான்கு வட்டத்துளைகள் வெட்டப்பட்டுள்ளன. பீடங்களின் பக்கவாட்டில் வளைந்த கொம்புகள் வார்க்கப் பட்டுள்ளது. இத்திருமேனி உருவ அமைதியைக் கொண்டும் பீடத்தில் உள்ள கிரந்த எழுத்துக்களின் கால அமைதியைக் கொண்டும் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறலாம். இதன் உயரம் 54 செ.மீ., அகலம் 10.5செ.மீ.

உதவிய நூல்கள்

1. ஏ.ஏகாம்பரநாதன், திருநறுங்கொண்டை வரலாறு, ஜைன இளைஞர் மன்றம், சென்னை.

2. ஏ.ஏகாம்பரநாதன், தொண்டை நாட்டு சமணக் கோயில்கள், ஜைன இளைஞர் மன்றம், சென்னை.



50. ஹரப்பன் நாகரிகக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை

நடன . காசிநாதன், சென்னை

குமரிக்கண்ட நாகரிகம்

தமிழகத்தின் தென்கோடிப்பகுதியாக விளங்கிய பண்டையக் குமரிக்கண்டமே மனித இனத்தின் தொடக்க இடமாக விளங்கியிருத்தல் வேண்டுமென புவியியல் அறிஞர்களெல்லாம் பல்வகைச் சான்றுகளோடு உறுதியாய்க் கூறியுள்ளனர்.[1]

கி.பி. 2001 - ஆம் ஆண்டில் மடகாஸ்கரில் டைனோசார் விலங்கின் கல்படிவம் (Fossil) கண்டெடுக்கப்பட்டது. இப்படிவம் தொடக்ககால டைனோசாரின் குறுகிய வடிவம் என்றும், இது ஒரு நாய் அளவு உள்ளது என்றும், 65 - விருந்து 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையது என்றும் அதனைக் கண்டு பிடித்த ஆய்வாளர் தெரிவித்து விட்டு, இத்தகைய டைனோசார் விலங்கு படிவம் அர்ஜென்டினாவிலும், இந்தியாவிலும் கிடைத் திருப்பதால் குமரிக்கண்டம் எனற ஒரு நிலப்பகுதி இருந்து தென்னமெரிக்கா, இந்தியா, மடகாஸ்கர் ஆகிய பகுதிகளை இணைத்திருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.[2]

24.4.2005 இந்து நாளிதழில், அமெரிக்காவில் உள்ள பிரேசிலில் முதலையொன்றின் கல்படிவம் (Fossil) கிடைத்திருப்ப தாகவும், அதன் மூலம் தென் அமெரிக்காவும் மடகாஸ்கரும் சுமார் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றாக இணைந் திருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் உறுதியாக நம்புகிறார்கள் எனறு செய்தி வெளிவந்துள்ளது.[3]

மனித இனம் முதன் முதலில் தோன்றிய இடமான குமரிக்கண்டத்தில் தான் முதல் மொழி, முதல் எழுத்து, முதல் தொழில் ஆகியவை தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

வி.ஆர். இராமச்சந்திர தீஷிதர் அவர்கள் "தமிழர் தோற்றமும் பரவலும்" என்ற நூலில் 'லெமூரியா எனப்படும் குமரிக்கண்டமே திராவிடர்களுடைய மூலத்தாயகமாகும் . நடுக்கடல் இனத்தவர் என்று அழைக்கப் பெறும் அந்த இன மக்கள் இந்தியாவின் தென்பகுதியில் தோன்றியவர்களாவர். அப்பகுதி கடல்வாய்ப்பட்ட திராவிடருடைய முலத்தாயகத்தின் ஒரு பகுதியாகும். அம்மூலத் தாயகமே கடல் கொள்ளப்பட்ட லெமூரியாவில் இருந்தது. அங்கு அரும்பிய நாகரிகமே வடமேற்கு இந்தியப் பகுதியில் சிந்து வெளி

நாகரிகமாக வளர்ந்தது. மொஹஞ்சதாரோவில் வளர்ந்த திராவிடரின் நாகரிகமே நடு நிலக் கடலை அடுத்த பகுதிகளில் எகிப்திய நாகரிகம் போன்ற பல நாகரிகங்கள் தோன்றக் காரணமாக இருந்திருக்கக் கூடுமெனத் தோன்றுகிறது' என்று எழுதியுள்ளார்.[4]

குமரிக்கண்டம் "தமிழகத்தின் ஒரு பகுதி மட்டுமின்றி தமிழினம், தமிழ் நாகரிகம் ஆகியவற்றின் தாயகம் என்றே கூறவேண்டும். ஏனெனில் தமிழைத் தொன்று தொட்டு வளர்த்த சங்கங்கள் மூன்றனுள் தலைச்சங்கம் நடை பெற்ற கபாடபுரமும் இக்குமரிப்பகுதியிலேயே இருந்தது. எனவே தலைச்சங்க காலமாகிய முதல் ஊழியிலும், இடைச்சங்கக் காலமாகிய இரண்டாம் மூன்றாம் ஊழியிலும் இக்குமரிப்பகுதியிலேயே தமிழர் ஆட்சியும், நாகரிகமும், மொழி வளர்ச்சியும் ஏற்பட்டன என்பதும், தெற்கிலிருந்து கடல் முன்னேறி வரவர அவர்கள் (தமிழர்கள்) வடக்கு நோக்கிப் பரந்து சென்றனர் என்பதும் விளங்குகின்றன." என்று பன்மொழிப்புலவர் கா. அப்பாத் துரையார் குறிப்பிட்டுள்ளார்.[5]

குமரிக்கண்டத்தின் தென் மதுரையில் திகழ்ந்த முதற்சங்க காலத்தில் எழுத்துக்கள் பட எழுத்துக்களாக (Pictographs), இருந்திருக்க வேண்டும். அவ்வெழுத்தில் தான் இலக்கியங்கள் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும். முதல் கடல்கோள் ஏற்பட்டு தென் மதுரை அழியப்பெற்றதும் அங்கு வாழ்ந்திருந்த மக்களில் சிலர் மேல்திசை நோக்கியும் வடதிசை நோக்கியும் இடம் பெயர்ந்திருப்பர். தற்பொழுது அந்தமானிலும் இலங்கையிலும் கடல்கோள் ஏற்பட்டதும் அந்நாடுகளைச் சேர்ந்த ஒரு பகுதி மக்கள் இந்தியாவிற்கு வந்து விட்டது போன்று. .குமரிக்கண்டத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் பட எழுத்து முறையை நன்கு அறிந்தவர்கள். ஆதலால் அவர்கள் எங்கு சென்றார்களோ அங்கு அதைப் பயன்படுத்தியிருக்கின்றர்.. அம்மக்களில் ஒரு பிரிவினர்தான் ஹரப்பாவிலும், நடு நிலக் கடல் பகுதியிலும் (Medit erranean sea) தங்கி வாழ்ந்து வந்தனர். ஆதலால் தான் அவர்கள் பட எழுத்துக்களைப் பயன் படுத்தியிருக்கின்றனர். அப்பட எழுத்துக்களும் இடம் மற்றும் தட்ப வெட்ப நிலைக் கேற்ப சில வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன.

இரண்டாம் சங்கமான இடைச்சங்கம் கபாடபுரத்தில் நிகழ்ந்த போது பட எழுத்துக்கள் கருத்தெழுத்துக்களாக (Idekograph) மாற்றம் பெற்றிருந்திருக்கலாம். அக்கருத்தெழுத்துக் களில் தான் இடைச்சங்க கால இலக்கியங்கள் எழுதப்பெற் றிருக்கும். இரண்டாம் கடற்கோளால் கபாடபுரமும், மூன்றாம் கடற்கோளால் மணவூரும் அழியப்பெறற பிறகு மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து பாண்டி நாட்டின் மதுரைக்கு வந்து கடைச்சங்கத்தை ஏற்படுத்தித் தமிழாய்வு செய்திருக் கின்றனர். கடைச்சங்க காலத்தில் எழுத்தானது கருத்தெழுத்தின்

நிலையிலிருந்து ஒலியெழுத்தாகி (Phonograph) பின்னர் நிலையெழுத்துத் (Standard Scrirpt) தன்மையைப் பெற்று விட்டது. கி.மு. 1000 அளவிலேயே நிலையெழுத்தாக வளர்ச்சியடைந்து விட்டது. இதனைத்தான் ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழியில் காணப்பெறும் தமிழ் எழுத்துக்களும்[6] இலங்கையில் அநுராதபுரத்தில் பானையோடுகளில் கிடைக்கப்பெற்ற தமிழ் எழுத்துக்களும்[7] மற்றும் ஆனைக்கோட்டை செப்பு முத்திரை இருவகை எழுத்துக்களும்[8] புலப்படுத்துகின்றன.

குமரிக்கண்டத்திலிருந்து மக்கள் வடமதுரைக்கு வந்த காலம் கி.மு. 1287 - இல் ஏற்பட்ட கடல்கோளுக்குப் பிறகாகலாம். அக்கடல் கோளால்தான் இலங்கை இந்தியாவிடமிருந்து பிரிந்தது என்று பௌத்தர்களால் கூறப்பட்டுள்ளது.[9] மூன்றாம் கடல்கோள் சுமார் கி.மு. 3000-த்தில் நிகழ்ந்திருக்கிறது. அவ்வாறெனில் இரண்டாம் கடல்கோள் தோராயமாகக் கி.மு. 5000-த்திலும், முதல் கடல்கோள் தோராயமாக கி.மு. 10,000-திலும ஏற்பட்டிருக்கலாம்.

ஹரப்பன் நாகரிகத் தொடக்கம்

சுமார் கி.மு.10000 அளவில் குடிபெயர்ந்த குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியினர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியை அடைய சில காலம் ஆகியிருக்கலாம். அவர்கள் பல இடங்களில் தங்கி சில காலம் வாழ்ந்த பிறகு ஒரு பகுதியினர் ஹரப்பா, மொஹஞ்சதாரோ பகுதிக்கு வந்திருக்கலாம். ஹரப்பா, மொஹஞ்சதாரோவில் தங்கி கோட்டைகளையும், திட்டமிடப்பட்ட நகரத்தையும் அமைப்பதற்குச் சில நூறு ஆண்டுகள் ஆகியிருக்கக்கூடும். அந்த காலகட்டத்தில்தான் அவர்கள் சிற்பங்களையும் ஒருவகை எழுத்துப் பொறித்த களிமண் தகடுகளையும் பயன்படுத்தி யிருக்கின்றனர். இக்காலம் வரலாற்றாசிரியர்களால் கி.மு. 7000-த்திலிருந்து கி.மு. 1500 என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஹரப்பன் நாகரிக மொழி பற்றி இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ரேமாண்ட் மற்றும் பிரிட்ஜட் அல்ச்சின் ஆகியோர் கீழ்க்காணும் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

"We agree in most respects with Parpola's conclussions on thie subject, and we believe particularly that the most likely contendent as the language of the Harappan inscriptions is an ancestral language of the Dravidan family."

"Next, inspite of doubts regarding its significance, the remains that a Dravidian language, Brahui, is still spoken by nomadic pastoralists in the Baluchi hills, west of the Indus; it is in no way improbable that Brauhi is a surviving remnant of an earlier more extensive spread of Dravidian speech, and this would therefore lend support to a Dravidian candidature for the predominant language of the Indus civilization. But this does not necessarily mean that Brahui is directly descended from that language."[10]

அதாவது அல்ச்சின் தம்பதியர், தாங்கள் பர்பலோவின் கருத்துக்களில் முழு உடன்பாடு கொண்டிருப்பதாகவும், குறிப்பாக ஹரப்பன் நாகரிகக் கல்வெட்டுக்களின் மொழி, திராவிட மொழிக்குடும்பத்தின் முன்னோடி மொழி என்பதைத் தாங்கள் முழு அளவில் ஒப்புக்கொள்வதாகவும், அம்மொழிக் குடும்பத்தில் ஒன்றான "ப்ராஹுய்" மொழி இன்றும் சிந்து நதிக்கு மேற்கேயுள்ள பலுசி மலைப் பகுதியிலுள்ள நாடோடிகளால் பேசப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளனர். மேலும் "ப்ராஹுய்" மொழி தற்காலத்திலும் நிலைத்து நிற்கும் திராவிட மொழிக்குடும்பத்தை எச்சமாகும் என்றும், சிந்துவெளி நாகரிக மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது என்ற நிரூபிக்க இது ஒன்றே போதுமானதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் ப்ராஹுய் திராவிட மொழியிலிருந்து நேரடியாக வளர்ந்த மொழி என்று அதற்குப் பொருள் இல்லை என்றும் கூறியுள்ளனர். அதாவது ப்ராஹுய் திராவிட மொழியிலிருந்து சில மாற்றத்துக்குள்ளாகி வளர்ந்துள்ள மொழி என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட முதற் கடல்கோளின்போது வெளியேறிய சிலர் தங்களோடு அங்கே வழங்கி வந்த பட எழுத்து முறையையும் மனதில் தாங்கிக் கொண்டு சென்றனர் என்ற கருத்துக்கு வலுவூட்டுவதாக அல்ச்சின் தம்பதியினரின் மேற் குறிப்பிட்ட க்ருத்து காணப்படுகிறது. மொழி ஒன்று மட்டும் திராவிட மொழி குடும்பத்தைச் சார்ந்ததல்ல; ஹரப்பன் நாகரிகக் கட்டடங்களும், சிற்பங்களும் திராவிடக் கலைக்குடும்பத்தைச் சார்ந்தவையேயாகும்.

ஹரப்பன் நாகரிக கட்டடப் பகுதிகள்

போலன் ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் "மெஹர்கர்" என்னுமிடம் ஹரப்பன் நாகரிகக் காலத்தின் தொடக்க நிலையைத் தெரிவிக்கும் இடமாகும் . இங்கு மக்கள் கி.மு. 7000-த்திலிருந்து வாழ்ந்திருந்தார்கள் என்றும்; கி.மு. 5500 - 5000 அளவில ஒரு பெரு வெள்ளம் ஏற்பட்டு பேரழிவை அப்பகுதியில் ஏற்படுத்தியது என்றும்; ஆனாலும் கி.மு. 5000 முதல் அப்பகுதியில் மக்கள் தொடர்ந்து வாழ்ந்திருக்கிறார்கள் என்றும் அகழாய்வு மூலம் தெரிய வந்திருக்கிறது.

இங்குள்ள தொடக்கப் பாள நிலையில் (6500 - 6000 B.C.) பத்துக்கும் மேற்பட்ட கட்டடப்பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை கையால் வனையப்பட்ட களிமண் கற்களால் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டடத்திலும் இரண்டு அல்லது நான்கு நீண்ட சதுர அறைகளும் ஒரு சமையலறையும் காணப்படுகின்றன. ஆதலால் இவை மக்கள் வாழ்ந்த வீடுகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சுடப்படாத களிமண்ணால் கையால் வனையப்பட்ட ஒரு மனித பொம்மை இக்காலகட்டத்தில் கிடைத்திருக்கிறது. இது மெஹர்கரின் பிற்காலப்பாள நிலைகளில் (4000 B.C.) கிடைத்திருக்கும் பெருமளவிலான சுடுமண் பெண் உருவங்களுக்கு முன்னோடியானது என்று ஊகிக்கப்படுகிறது.

மெஹர்கரில் கி.மு. 5000 - ஐச் சார்ந்த பாள நிலையில் ஒரு பெரிய கட்டடப் பகுதி தெரியவந்துள்ளது. இதுவும் சுடப்படாத களிமண் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. பல அறைகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. நடுவில் ஒரு நடைப்பாதையைக் கொண்டு இரு மருங்கிலும் அறைகளை வரிசையாக உடையதாக உள்ளது. இவ்வறைகள் வீடுகளாகவோ அல்லது தானியம் சேமித்து வைக்கும் கிடங்குகளாகவோ இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவை சுமார் 2000 அல்லது 3000 ஆண்டு களுக்குப் பிற்பட்ட நன்கு வளர்ச்சியடைந்த ஹரப்பன் நாகரிகக் காலத்தில் காணப்பெறும் தானியக்கிடங்குக்கு முன்னோடியாகும் என்று கருதத் தூண்டுகிறது என்று அல்ச்சின் தம்பதியர் எழுதியுள்ளனர்.[12]

இராஜஸ்தானில் உள்ள "காலிபங்கனும்", மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவில் உள்ளது போன்றே இரு பெரும் பகுதிகளைக் கொண்டிருந்திருக்கிறது.இதன் ஒரு பகுதி கோட்டை யாகவும், மற்றொரு பகுதி நகரமாகவும் விளங்கியிருக்கிறது. இக்கட்டடங்களும் வடக்கு தெற்கு நோக்கியதாகவே மொஹஞ்சதாரோ , ஹரப்பா போன்று அமைந்திருக்கிறது. மேற்குத் திசையில் கோட்டையையும் கீழ்த்திசையில் நகரத்தையும் கொண்டிருந்திருக்கிறது. கோட்டை இரு பகுதிகளாகப் பிரிந்திருந்திருக்கிறது. வடக்குப் பகுதியில் வீடுகளும் தெற்குப் பகுதியில் மேடைகளும் இருந்திருக்கின்றன.

நகரப்பகுதியில் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற தெருக்கள் மொஹஞ்சதாரோவில் காணப்பெறுவது போன்று காணப் படுகின்றன.[13]

மேற்காணும் கட்டடப் பகுதிகள் தொடக்கக் கால ஹரப்பன் நாகரிகத்தைச் (Pre-Harappan Period) சேர்ந்ததாகலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

சுவர்களெல்லாம் சுடப்படாத களிமண் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது.கோட்டைப்பகுதியும் நகரப்பகுதியும் மதில்களால் சூழப்பட்டிருக்கின்றன. மேற்காணும் கட்டட அமைப்பு சோழநாட்டு பூம்புகார் நகரமைப்பையும், பாண்டி நாட்டு மருங்கூர்ப்பட்டினத்தின் நகரமைப்பையும் நினைவு படுத்துவதாக உள்ளது. ஒரு வேளை ஹரப்பன் கால நகரமைப்பும், பூம்புகார் நகரமைப்பும் கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் இருந்த நகரமைப்பின் சாயலாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஹரியானாவைச் சேர்ந்த "பனாவலியிலும் "காலிபங்கனில் கிடைத்துள்ளதைப் போன்றே கட்டடப்பகுதி கண்டறியப் பட்டுள்ளது. இக்கட்டடமும் சுடப்படாத களிமண் கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. களிமண் கலவை இணைப்புப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.[14]

கோட்டைப் பகுதியில் முக்கால் வட்ட(Apsidal structure) கட்டடப்பகுதி ஒன்று வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அதில் அடுப்பு ஒன்றும் காணப்படுகிறது. இவ்வடிவம் தமிழ் நாட்டின் வடபகுதியில் பரவலாகக் காணப்பெறும் முக்கால் வட்ட அமைப்பில் உள்ள கோயில்களை (Apsidal Templaes) நினைவுக்குக் கொண்டு வருகிறது.

குஜராத் கட்ச் மாவட்டத்திலுள்ள "தோலவீரா" வில் கோட்டைப் பகுதி, நடு நகரம், கீழ்நகரம் மற்றும் விழாத்திடல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பெரு நகரம் இருந்திருக்கிறது. நகரத்தைச் சுற்றியுள்ள மதில் கிழக்கு மேற்கில் 700 மீட்டரும் தெற்கு வடக்கில் 600 மீட்டரும் கொண்டதாக உள்ளது. இதன் முதல் நிலை அடித்தளம் 11 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. வீடுகள் சுடப்படாத களிமண் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இதில் இரண்டாம் நிலை கட்டடச் சேர்க்கைகள், மூன்றாம் நிலை கட்டட விரிவாக்கம் எனப் பல நிலைகளில் கட்டடங்கள் எழுப்பப் பெற்றிருக்கின்றன.[15]

இங்கு ஹரப்பன் கால மற்ற நகரமைப்புகளில் காண முடியாத . சதுரக் கற்பலகைகளும்(Ashlar Masinry slabs), தூண்களின் அடிப்பகுதிகளும் படிக்கட்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன. மேற்காணுபவை தூண்கள் தாங்கப் பெற்ற ஒரு மண்டபம் (Pillared Hall) இருந்ததற்கான அடையாளங்களாக இருக்கலாம். தோலவீரா கட்டடங்களின் காலம் கி.மு. 3000 முதல் கி.மு. 1500 முடிய உள்ள காலமாகும்.

மொஹஞ்சதாரோவில் கண்டறியப்பட்ட நீராடும் பெருங்குளம், தானியக்கிடங்கு மற்றும் தூண்கள் தாங்கிய மண்டபம் ஆகியவையும்; ஹரப்பாவின் தானியக்கிடங்கும் மிகவும் அறிமுகமானவை. மொஹஞ்சதாரோவின் குளம் சமயச் சார்பானது என்று கருதப்படுகிறது.[16] இவைகளின் காலம் கி.மு. 2700 முதல் கி.மு. 1500 முடிய உள்ள காலமாகும்.

இதே போன்று குஜராத்தில் உள்ள லோத்தலில் கண்டறியப்பட்ட கப்பல் நிறுத்துமிடம் (Dock) வரலாற்றாராய்ச்சி யாளர்களுக்கு நன்கு அறிமுகமான ஒன்றாகும் . இதன் காலம் கி.மு.2300. இங்கு பண்டகசாலை (Ware House) ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளது. கப்பல் நிறுத்துமிடத்தின் நான்கு பக்கங்களிலும் சுட்ட செங்கல் சுவர் கட்டப்பட்டிருக்கிறது.

சிற்பங்கள் ஓவியங்கள்

இனி இந்நாகரிகக் காலத்தில் காணப்பெறும் கற்சிற்பங் களையும், சுடுமண்சிற்பங்களையும், செப்புத்திருமேனி களையும், பானையோட்டின் மீது வரையப்பட்ட ஓவியங்கள் பற்றியும், சில பொருட்கள் மீது காணப்பெறும் கீறல் உருவங்கள் பற்றியும் மற்றும் களிமண் தகடுகள் மீது காணப்படும் மனித, தெய்வ, விலங்கு உருவங்கள் பற்றியும் காணலாம். மேற்கூறப்பெற்ற அனைத்தையும் பற்றி விரிவாக எழுதப் பெற்றால் ஒரு தனி நூல் அளவுக்கு விரியும். இங்கு அவைகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் சுட்டிக் காட்டப் பெறும்.

சிந்து மற்றும் பலுசிஸ்தான் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள மெஹர்கர் என்னும் இடம் ஹரப்பன் நாகரிகத் தொடக்கக் காலத்தைச் (Pre - Harapan or Eqrly Harappan Period) சார்ந்தது. இங்கு சுமார் கி.மு. 6000 வாக்கில் கையால் வனையப்பட்ட சுடப்படாத களிமண் மனித உருவம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்பது முன்னரே கூறப்பட்டது.[18] மேலும் கி.மு. 4000 அளவிலேயே சுடுமண் பெண் உருவங்கள் கிடைத்திருக்கின்றன.

மேலும் தொடக்ககால ஹரப்பன் நாகரிகக் காலத்தைச் சார்ந்த "கோட் டிஜி" (KotDiji) "கும்லா" (Gumla) "ரஹ்மான்தேரி" (Rahaman Dheri) "லெவான்" (Lewan) ஆகிய இடங்களில் பானையோட்டின் மீது வரையப்பட்ட எருமைக் கொம்புகளை யுடைய தெய்வ உருவம் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட் டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றின் காலம் கி.மு. 3500 -லிருந்து கி.மு. 3000 வரை உள்ள காலமாகும்.[20]

நன்கு வளர்ச்சியடைந்த ஹரப்பன் நாகரிகக் காலத்தைச் (Mature Harappanm Peried) சார்ந்த மொஹஞ்சதாரோவிலிருந்து கால்களை நீட்டி அதன் மீது குழந்தையைக் குப்புறப்படுக்க வைத்துக் குளிப்பாட்டுவது போன்று காணப்பெறும் பெண் சுடுமண் பொம்மையும், பலவித அணிகலன்களைக் கழுத்திலும், இடுப்பிலும், காதிலும் அணிந்து காணப்படும் பெண் சுடுமண்பொம்மையும்[21] தாய்தெய்வ சுடுமண் பொம்மையும், காளை, குரங்கு, செம்மறியாடு, அணில், போன்ற சுடுமண் விலங்கு பொம்மைகளும், களிமண் தகடுகளில் காணப்பெறும் ஒற்றைக் கொம்பு எருது, நீர்யானை, மற்றும் தெய்வங்களின் உருவங்களும் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை.

மேலும் இங்கு கண்டெடுக்கப்பட்ட கற்சிற்பங்களான மனித தலை உருவம், நடனமாடும் ஆண் உருவம், மனித உடல் உருவம், முக்கோண (Trefoil) பூ வேலைப்பாடுடைய மேலாடை யோடிருக்கும் ஆண் உருவம் ஆகியவைகளும், செம்பினால் செய்யப்பெற்ற நடனப் பேரழகி, உருவம், எ[illegible]மை[22] ஆகியவையும் உலகப்புகழ் பெற்றவை.

ஹரியானாவில் உள்ள "குனலி" யிலிருந்து கிடைத்துள்ள ஒரு பானையோட்டில் எருமைக் கொம்புத் தெய்வம் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.[23]

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள காலிபங்கனிலிருந்து சுடுமண் தகட்டில் கீறல் உருவமாக எருமைக்கொம்புத் தெய்வ உருவம் வரையப்பட்டிருப்பது கண்டெடுக்கப்பட்டுள்ளது.[24] மேற்காணும் இரு இடங்களின் நாகரிகங்களும் தொடக்கக்கால ஹரப்பன் நாகரிகம் (Pre - Harappanm Peried) என்று கருதப்படுகிறது.

குஜராத் மாநிலம் அஹமத் நகர் மாவட்டத்திலமைந்துள்ள "தைமாபாத்" என்னுமிடத்தில் பிற்கால ஹரப்பன் நாகரிகப் (Late Harappanm Peried) பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நான்கு செப்புப் பொருட்கள் முக்கியமானவை. யானை உருவம், எருமை. உருவம் மற்றும் இரு காளைகள் பூட்டப்பட்ட இரதத்தை ஆடை அணியா மனிதன் ஓட்டும் நிலையிலுள்ள உருவம் ஆகியவை அனைத்தும் மிகச் சிறந்த வேலைப்பாடுடன் காணப்படுவதாகும்.[25]

தொடக்கத்திய ஹரப்பன் கால (Pre Harappaan) முழுத்துவம் பெற்ற ஹரப்பன் கால (Late Harappaan) பிற்காலத்திய ஹரப்பன் கால (Mature Harappaan) சுடப்படா மற்றும் சுடப்பட்ட மண் பொம்மைகளையும் கற்சிற்பங்களையும் தீவிரமாக ஆய்வு செய்த அல்ச்சின் தம்பதியர், களிமண்ணால் உருவம் செய்யும் கலை கி.மு. 7000 - 6000 அளவிலேயே உருவாகிவிட்டது என்றும், அக்கலை தொடர்ந்து வளர்ச்சியடைந்து முழுத்துவம் பெற்ற ஹரப்பன் நாகரிகக் காலத்தில் உயர் நிலையை எய்தி விட்டது என்றும் கூறியுள்ளனர். மேலும் மனித உருவங்களில் பெண் உருவங்கள் தான் அதிக அளவில் காணப்படுகின்றனவென்றும், சில பெண் உருவம் குழந்தையோடு காணப்படுகிறதென்றும் தெரிவித்துள்ளனர். பெண் உருவங்கள் மிகுந்த அணிகலன்களையும் பெரிய முடியழகையும் கொண்டு விளங்குகின்றன. ஆண் உருவங்கள் குறைந்தே காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படுவனவும் பெரும்பாலும் ஆடையணியா உருவங்களாகவே உள்ளன. விலங்குகளில் இந்திய எருது, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, நீர்யானை, யானை, கரடி, முயல், குரங்கு போன்றவை செய்யப் பெற்றிருக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளனர்.[26] மேற் குறிப்பிட்ட உருவங்களில் உள்ள பெண் உருவங்கள் தாய்த் தெய்வ வழிபாட்டைப் பிரதிபலிப்பவை என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளனர்.[27]

முழுத்துவம் பெற்ற ஹரப்பன் நகர நாகரிகத்தில் (Mature Harappaan Period) தான், குறிப்பாக மொஹஞ்சதாரோ ,ஹரப்பா பகுதிகளில் தான் செப்புப் படிமங்களும்; கற்சிற்பங்களும் காணப்படுகின்றன. இக்காலத்தில்தான் இறை வழிபாடும்

முழுத்துவம் பெற்று விட்டதாகத் தெரிகிறது. குறிப்பாகச் சிவ வழிபாடு முன்னிலைப் படுத்தப்பட்டது என்பது களிமண் தகடுகளில் காணப்பெறும் பல்வித உருவங்களைக் கொண்டு கணிக்கப்படுகிறது.[28]

தாடியும் லேசான மீசையும் கொண்டு முக்கோண பூ வேலைப்பாடுடைய மேலாடையை அணிந்து காட்சி தரும் மொஹஞ்சதாரோவின் கற்சிற்பம் மதகுருவா அல்லது அரசரா அல்லது தெய்வமா என்று கணிக்க முடியாத நிலையில் உள்ளது. என்றும் இவ்வுருவம் மெசபொடாமிய உருவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அரசரின் உருவமாக இருக்கலா மென்றும் அல்ச்சின் தம்பதியர் தம் கருத்தைத் தெரிவித் துள்ளனர்.[29]

முடிவுரை

இக்கட்டுரையில், முதலாவதாக ஹரப்பன் நாகரிக மக்கள் குமரிக்கண்டத்திலிருந்து கி.மு. 10000 வாக்கில் ஏற்பட்ட முதல் கடல் கோளுக்குப் பின் குடிபெயர்ந்த மக்களில் ஒரு பிரிவினர் என்பது கூறப்பெற்றுள்ளது.

இரண்டாவதாக மொஹஞ்சதாரோ, ஹரப்பா, காலிபங்கன், பனாவலி ஆகிய இடங்களில அமைந்துள்ள நகரமைப்பு தமிழகத்தின் சோழநாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்திலும், பாண்டி நாட்டு மருங்கூர்ப்பட்டினத்திலும் அமைந்திருந்த நகரமைப்பு முறையோடு ஒற்றுமையுடையதாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் குமரிக்கண்டத்தில் இருந்த மயேந்திர மலையில் தெய்வத்தச்சன் மயன் அவதரித்தார் என்றும், அவர் தென்மதுரையில் பல நகரங்களையும் உருவாக்கியுள்ளார் எனவும் சிற்பச்சித்தர் வை. கணபதி ஸ்தபதி கூறியுள்ளார்.[30] ஆதலால் அந்நககரமைப்பு முறையைப் பின்பற்றித்தான் ஹரப்பன் நாரிகக் காலச் சிற்பிகள் கட்டியிருக்கின்றனர் எனக் கொள்ளலாம்.

மூன்றாவதாக கி.மு. 7000 - 6000 அளவிலேயே பெண் தெய்வ வழிபாடு ஹரப்பன் நாரிகத்தில் இருந்திருக்கிறது என்பதும், பெண் உருவங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், சுடுமண் உருவங்கள், செப்புப்படிமங்கள் மூலம் உணர்த்தப்பட்டிருக்கிறது.

நான்காவதாக ஹரப்பன் நாகரிகத்தில் கோயிலில் உள்ள இறைவனின் முன்பாக அரசர்களின் சிலைகள் அமைக்கப் பெற்றிருந்தன என்றும் காட்டப்பட்டிருக்கிறது. இப்பழக்கம் தமிழ்நாட்டில் பல்லவர், சோழர், பாண்டியர், விசநயநகர அரசர், நாயக்கர், குறுநில மன்னர்கள் ஆகியோர் ஆட்சிக்காலங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருப்பதை இன்றும் அவர்களால் எடுப்பிக்கப்பெற்ற கோயில்களில் நாம் காணலாம்.

உருவ வழிபாடு ஆகம வழிபாட்டைக் கடைப்பிடிப்பவர்களின் வழிபாடாகும். ஆகமமானது குமரிக்கண்டத்திலிருந்த மகேந்திர மலையிலிருந்து சிவ பெருமானால் கூறப்பட்டது என்று கருதப்படுகிறது. "மன்னுமாமலை மகேந்திர மதனிற் சொன்ன வாகமந் தோற்றுவித்தருளியும்" என்றும் "மந்திர மாமலை மேயாய் போற்றி" என்றும் மணிவாசகர் கூறியுள்ளதிலிருந்து தெரிந்துக் கொள்ளலாம். மேலும் சிவ வழிபாடு தென்னாடான குமரிக்கண்டத்திலிருந்தே பிற அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியது என்றும் கொள்ளப்படுகிறது. ஆதலால் ஹரப்பன் நாரிகம் தமிழர்களுடையதே என்பது உறுதியாகிறது.

மேலும் முக்கால் வட்ட கோயில் அமைப்பு முறை, கோயில் இறைவனுக்கு முன்பாக மன்னர் சிலை அமைத்தல் என்பனவும் தமிழக நடை முறையாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தாய்த் தெய்வ வழிபாடு தமிழர்களுக்கே உரிய ஒன்றாகும். அவ்வழிபாடும் குமரிக்கண்டத்திலேயே தோன்றியிருக்க வேண்டும் . அதன் காரணமாகத்தான் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்த ஹரப்பன் நாகரிகப் பகுதியிலும் அவ்வழிப்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடித்திருக்கின்றனர். தாய்த் தெய்வ வழிபாட்டின்தாக்கம் கி.மு. 700 லிருந்து தமிழகத்தில் பெரும் வழக்காக இருந்திருக்கிறது என்பது திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள தாய்த் தெய்வச் செப்புத் திருமேனியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பெண்களுக்கு முக்கியத்துவம் தரப்படாத ஒரு நாகரிகம் இந்தோ ஆரிய நாகரிகம் . அதே போன்று சிவ வழிபாடு மற்றும் தாய்த் தெய்வ வழிபடும் இந்தோ ஆரிய நாகரிகத்தில் கிடையாது. இந்திரனுக்கும் அக்னிக்கும் தான் இந்தோ ஆரிய நாகரிகத்தில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

கோயில் அமைக்கும் முறை, நகரம் நிர்மாணிக்கும் முறை, உருவ வழிபாட்டு முறை ஆகிய அனைத்தும் திராவிடர்களின் முன்னோர்களான குமரிக்கண்டத் தமிழர்களுடையதேயாகும். ஆதலால் ஹரப்பன் நாகரிகம் குமரிக்கண்ட நாகரிகத்தின் தொடர்ச்சி என்பது நிரூபணமாகிறது.

அடிக்குறிப்புகள்

1. Elliot Scot, Lost Lemuria, PP 23-38. Sir Walter, History of the world, P.99, N. Mahalingam, Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies.
2. Hindu, Februay 8, 2001, `Dog Sized Dionosaur fossil unearther; news published.
3. Hindu, February 24, 2005, p.15, Chennai Edition.

4. Ramachandra Dikshitar, V.R. Origin and Spread of the Tamils, PP. 35-36.
5. *அப்பாத்துரை கா. குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு (கழகம், சென்னை - 1941(, பக். 2-3.*
6. Hindu, February, 17, 2005.
7. Sunday Observer, April 29, 1990, Sunday Times, Srilanka, 15.4.1990.
8. Indrapala, Hindu, April 26. 1981.
9. *தமிழ்நாடு வரலாறு, தொல் பழங்காலம், தமிழ்நாடு அரசு வெளியீடு, பக்கம் 122.*
10. Reymond and Bridget Allchin, Originsof a Civilization, (1997), pp 185-186.
11. Ibid, p. 129
12. Ibid, p. 131, Fig. 17
13. Ibid, pp. 161-162.
14. Jagatpat Joshi, R.S. Bisht, India and the Indus Civilisation, (1994), P. 14.
15. Ibid, pp. 23-28
16. Allchin, Op.Cit.pp. 165-166.
17. S.R. Rao, Journal of Marine Archaeology, Vol.1, (1990). p. 59.
18. Allchin, Op.cit.P. 129
19. Ibid, p. 136.
20. Allchin, Op.Cit.pp. 151-152.
21. Ibid, Plates 23 & 24.
22. C. Sivaramamurti, Harappan Art, Published by the National museum, New Dehli.
23. Jagatpati Joshi, R.s. Bisht, India and the Indua Civilisation, (1994), P.2, Plate 1.
24. Ibid, p. II, Plate VII.
25. Ibid, p. 42, Plate XX
26. Allchin, Op.Cit.p. 195.
27. Ibid, p. 196.
28. Natana Kasinathan, "Contribution of Harappan Civilization to Saivism", Journal of Indian History and Culture, Septemper, 2002, Ninth Issue, pp. 7-18.
29. Allchin, Op.Cit, p. 202.
30. Dr.V. Ganapati Sthapati, Vastú Purusha Mandala, A Shilpi speaks series 18, (2003), pp. 5-6.

51. Jain Vestiges Recently Discovered in Tamilnadu*

Natana Kasinathan

Tamil Nadu is one of the high yielding states of antiquitie such as sculptures, bronzes, copper-plates, coins etc. Recently, a few Jain images have been discovered from different parts of Tamil Nadu dating from 3rd - 4th centuries A.D. to 13th Century A.D.

As far as Tamil Nadu is concerned the spread of Jainism appears to have taken place from 5th - 4th century B.C. as a considerable number of ancient Tamil inscriptions mentioning about the donation of rock beds to the Jain monks are found engraved either on the rock beds or at the surroundings of the natural caverns of the mountains lying in various districts of Tamil Nadu. But no sculpture of either Jain images or the Jain monks of this period has so far been found. The earliest specimen of probably and Yakshi of Jain origin is assignable to 3rd - 4th centuries A.D. While the Tirthankaras found carved on Thirunathat Kunru near Chenjee in Villupuram District, are assignable to Cir. 5th - 6th Centuries A.D. Some scholars are of the opinion that the Tirthankaras of Thirunathar Kunru belong to 8th Century A.D. A number of Tirthankara figures assignable from 8th century onwards had been located especially in Pandianadu.

Hence it can be firmly said that the advent of Jainism first appeared in Tamil Nadu during 5th - 4th century B.C. and slowly spread in the subsequent periods inspite of stiff opposition from Saiva Nayanmars and vaishnava Alvars during 5th, 6th and 7th centuries and blossomed in full form from 8th century onwards.

Since the Jain monks had lived in isolated hillocks it seems that they could not preach their doctrine, freely among people during pre-Chiristian era. But in the post Christian era they were able to penetrate into the interior populated area and compel a section of the population, especially the merchant community to embrace Jainism.

This religious impact had influenced them to build a number of Jain temples and produce many sculptures and bronze images. It seems that wherever the merchat community lived they either carved out exquisite panel sculptures or produced beautiful sculptures in round or cast elegant bronze images for worship. The existence of such outstanding figures are being located year by year in Tamil Nadu. The following are the recent invaluable discoveries:

I. Unique Yakshi Sculpture

The outstanding sculpture of an Yakshi was discoved in the first week of January 1999 at kadaimalaipputtur, a small village in Kanchipuram District.1 It is a colossal image measuring to 1.50 Metre height installed at the side of the road which leads to Vandavasi (Wandiwash) from Toluppedu. This remarkale figure is worshipped as Korravai by the local people.

Standing in Samabhaga pose wears a crescent shape Jatabhandam with a bell like coifure over it. The long bow like eye with almost closed eyelids, protruding nose, tight lips, hanging ears wearing something like ornaments help the jug shape face to look calm and serene. Having two hands in proportionate thickness the left is held in lolahasta position

*It is reproduced here from Journal of Tamil Studies, Volume 51 and 52, Published by the Internation Institue of Tamil Studies, Chennai.

while the right in abhaya mudra. Both the hands are found wearing bangles on shoulders and forearms and with spreadout fingers. The round big breasts, the triangle shaped stomach, the broad hip and the banana trunk like legs give a crude form suggesting its antiquity to an earlier period. The undergarment she wears extends upto food having a single knot at the centre of the hip with a tussle hanging upto the knee. The foot portion is broken.

One lady attendant is seen standing on either side. The attendant who stands by her right side carrys a box on her head with a cushion in between her head and the box probably symbolizing the wealth. The attendant on her left is also in standing position bearing a pot on her head. She also has an ornamented cushion below the pot, which may represent the auspicious object of Kumbha. There attendants are also having only two hands each. The right hands of both the figures appear to be in disproportionate length while left hands are shown as if they are supporting the objects that are on their heads. All other features of them are quite in consonance with the main figure Yakshi. The right side attendant is little taller than the left one.

This Yakshi sculpture is uique as far as Tamilnadu is concerned as this is the earliest among Yakshi figures so far notices. It is assignable to 3rd-4th centuries A.D. This date has been assigned by comparing the charateristic features of amarawati Yakshi figure which is dated to 2nd century B.C.

The Yakshi worship appears to have been quite familiar in Tamilnadu from post Cankam age as we have a reference to yakshi as punkan iyakki (i.e., Yakshi who has flower like eyes) in a Tamil literature cilappatikaram2 which is assignable to 1st to 3rd centuries A.D.

The find spot of this Yakshi is also significatnt as Kadaimalaipputtur is not far off from kanchipuram where a famous Jain centre Paruttikkunru was in existence during post Christian era. An authentic reference to this effect comes from a copper charter known as Pallankoil copper plates of Simhavarma Pallava period.3 It was issued in his 6th regnal year i.e./ 556 A.D. Anandamangalam about 10km west of Kadaimalaipputtur was also another flourishing Jain center in 10th Century A.D. Jinagirippalle4 was the name of this centre. Hence it is apparant that Kadamalaipputtur and its surroundins should have nurtured Jainism from very early period i.e., atleast from 3rd century A.D. onwards.

II. Other Jain Sculptures

Stone image known as Abhinandana, the fourth Tirthankara has been located at Kurumpundi in Kandarva Kottai Taluk of Pudikkottai District.5 Hs is seated in Ardhapariyanka asana. The Mukkutai (Tripple umbrella) and the Priyala tree are seen above the head. on either side one Yaksha is holding a Chamara. A lady holding flower in her hand and the figures of monkeys are carved on the pedestal. This kind of figure is rarely available in Tamil Nadu and it is datable to 8th-9th century A.D.

Stone image of Mahavira and a Tirthankara were discovered from Vadugappatti in Madurai District.6 On the side of the Tirthankara image an inscription in Vatteluttu charater is engraved. Both the image and the epigraph and contemporary assignable to 10th - 11th century A.D. This image is about 4½ feet high and 1½ feet width. The inscription refers to the reclamation of the village Mananilainallur alias Malaikulam. It is known from this inscription that this village was one of the famous Jain centres and the merchant community Ticat Yayirattu Ainnurruvar had lived in it employing a security force known as Attanikal the probably equivalent Tamil term of Attikocam the sanskrit word. hence it is evident that this Mahavir imge was worshipped by the above merchant community.

More than 900 years old Mahavirar sculpture carved on a stone slab which is about 120cm. high and 60cem. width had been found at Iralacheri near Kaverippakkam, in Arakkonam Taluk of Vellore District.7 Mahavirar is seated on a lotus pedestal in dyana pose keeping his hands crossed on his lap. His head is seen in a half circle prabha. Mukkutai (Tripple umbrella), scroll decoration above his head and the Siras Chakra behind his head are also found. He is flanked by Yaksha on either side. At the feet of them Makaras are sculptured alongwith three lions in seated posture on the front side of the pedestal. This image is datable to 11th century A.D. on stylistical ground.

A mutilated sculpture of Mahavira was discoverd from Amarapuram, just one kilometer away from Iralacheri of the same Vellore District.8 The face of this image is damaged. He is also in seated posture keeping his hands crossed and kept on his lap. As usual one Yaksha is standing on either side of him. The head portion of the Yakshas are also broken.

A sculpture of Mahavira assignable to 12th century A.D. seated on a pita which bears the figures of lion, is partly damaged on its face. This image has been accidentally unearthed while sand was dug for transporting, in a river bed of Aditangal a hamlet of the Village Alandur in Thiruninravur Taluk of Tiruvallur District.9 It is believed that the name Aditangal of this hamlet could have been named after Adikalar, i.e., Tirthankarar.

An exciting seated Tirthankara Sculpture had been spotted by the Tamilnadu Archaeological Research Institute at Nerkunram about 8km south east of Tozhuppedu in kanchipuram District.10 It is seated in yogasana position placing the legs crossed one over the other. In the same way the hands are also kept. The eyes are almost closed suggesting that he is in deep dyana.

Tirtankara is found flanked by an Yaksha on either side. It also appears that there are four more figues apparently ladies standing two on each side. The lady figures that are by the side of his right thigh are more visible than those that stand in opposite side. Hence there are six human figures in total apart from two Gandharvas who are seen seated above his head on either side of a tripple umbrella. The flamed prabha around his head adds beauty to his calm and serence face. This sculpture is datable to 8-9th century A.D.

III. Inscribed Tirthankara image

An inscribed stone image of Tirthankara of Rajaraja - I period had been located at Pandalkudi in Kamarajar District. 11 Pandalkudi is situated on the highway leading to Ettayapuram from Aruppukkottai. This Jain image is found on the outskirts of a Vinayaka temple which is a newly built one. This is said to have been brought to this place recetly as the banyan tree under which it was installed, had broken and fallen on this image. It is further said that originally there should have been a small Jain temple as the remnans of which are still seen there.

This figure is seated in ardhabhariyankasana on a pedestal which is carved with two lion motif in standing posture. Cusion at the back of this figure and the hallow of light around his head are also seen. The typical tripple umbrella is found above his head. Chauri bearers are also carved on either side. On the front and sides of the pitam the inscription in typical Chola character is engraved in seven lines. It is written in 22nd regnal year of Rajaraja the great who ruled from 985 to 1014 A.D. It refers to the gift of the image to the Jain Palli of Nallur of Vembunadu by an individual Pugalsadaiyan in memory of his grandfather and grandmother.

IV. Inscribed Bronze Image

An inscribed Dharmadevi bronze image at Appandainathat temple (Jain temple) of Tirunarungondai, a village in Ulundurpur Taluk of Villupuram District wad identified recently.12 The existence of the engraving on the pedestal of this image was brought to the notice of this author by Thiru M. Chandramurthy, Registering Officer of the Tamil Nadu State Department of Archaeology and was deciphered by both of them.

The inscription is in four lines of the typical Chola character assignable to 12th - 13th century A.D. and it reads as follows:

1. Savasti Sri Tirunarunkontaikkup porrama(rai) terkir Kovililliirunta.
2. (a) Kshan Patukkum Itupata Ippon arai IP-porul Kotuttu mittu ivarukku
3. (a) laip Putitakac ceivittan carakipalatevi it tarmam ivaru Kurukkal Sri Bha
4. la Tevarkkum Utanpatu ivar Tampi (Narayan) Accan Upayam.

The incription refers to a gift of new bronze image of (chragibaladevi) tp Tirunarunkontai temple with was situated south of Porramarai tank by the priest Baladevar and his brother (Narayan) Achachan.

The image which bears the engravings is now known as Dharmedevi and is datable to the same period of the inscription. It is one among of more than twenty-five bronze images housed in the grilled chamber of the Mukhamantapa of Appandainathar temple. Of the above images three bearing engravings have already been noticed. But the

current engraving which is on the pedestal of Dharmadevi has so far not been noticed. Henced it assumes importance. This and the earlier engravings are the authentic records for identifying the image, its date and the donar who made these offerings.

This Dharmadevi is standing in three bhanga posture on the padmapita over a patrapita. It has two hands being one in Katakamutra while the other in lola hasta. The karanta maguta which adore her head is found with a seated Tirthankara flanked by Makara head.

On the right side of this Devi there are three figures two on the right and one on the left. Of the two on the right one is left with feet only while the other appears to be a child. The left soide figure is a lady carrying a pot on her right hand. Her left hand is shown as lola hasta.

The height of Dharmadevi bronze image is about 80cm and the width between the two shoulders is abou 16½cm.

V. Votive Terracotta Plaques

The Tamil Nadu State Department of Archaeology has located a few remarkable votive terracotta plaques datable to nearly 2000 years old bearing the engravings in Archaic Tamil and Ashokan Brahmi Characters in possession of a Vidwan Thiru I. Ramaswamy of Poluvampatti in Coimbatore District.13 Moreover a considearable number of terracotta figurines also have been found having the inscriptions written in the same combined script either on the base or at the top of the images. Thiru I. Ramaswamy, an octogenerian Tamil scholar has informed about these collection to the Curator of Coimbatore, Thiru R. Poongundran and requested him to examine them personally and publish it for the benefit of the public. Immediately, Thiru Poongundram visited

his house and examined these plaques and figurines sent a detailed report to the author of this article.

In turn, the author of this article rushed to Poluvampatti along with Poongundran and made arrangements to take photographs of these objects. With the help of these photographs, we were able to decipher a few sentences here and there in each plaques. To get the readings confirmed and clarified, this author approached the Veteran Scholar Thiru I. Mahadevan for his comments and improvement. He readily responded to the request of this author and took pains to decipher more sentences and sent back the revised and improved reading to him.

The entire collection of this finding include three terracotta plaques and about 20 terracotta figurines besides a copper piece engraved with a male figure probably a chieftain and his name Kadan written in archaic Tamil script. It is presumed that these terracotta plaques and figurines could have been presented as votive offerings to a local temple. When asked about the provenance of these plaques and figurines, Thiru. I. Ramaswamy informed that these were brought from Perur a subur bean an of the city of Coimbatore and added that these have been collected when the diggings were made for the foundation of new houses.

The practice of offering votive objects like terracotta plaques and figurines were in vogue in North India.14 As far as Tamil Nadu in concerned, this tradition of offering votive plaques has not so far been met with. But offering the wooden cradle with the figure of a child for getting pregrnant and installation of terracotta figures of horses, elephants, and dogs in front of Ayyannar and Vediappan temples were prevalent from pallava period i.e., from 6th - 7th century A.D. Hence,

these terracotta plaques and figurines assume great significacned and serve a valuable source material for understanding the religious evolution in Tamil Nadu.

It is reasonable to presume that a Jain temple should have been in existence at Perur from very early period. In support of this, a copper plate, brought to light by Thiru I. Mahadevan, mentions that a Jain temple known s Arhata Ayatam was at Perur and some Karsa panam were gifted by a concubine of a Ganga king to that temple. Hence it is justified that there was a Jain temple during Ganga period at Perur. This attests the fact that Perur was a Jain centre from pre-Christian era. Hence it is possible that the terracotta plaques and figurines could have been offered to that Jain temple. These inscribed plaques refer to some Nadus, some villages and some personal names. Erumainadu and Kumilivur are often mentioned in these inscriptions. These words make us to recall the Erumainadu and Kumulivur referred to in the inscription assignable to 1st - 2nd century A.D. of Sithannavasal in Pudukkottai District.

Hence these plaques and figuries could also be dated to that period. A prakrit word Dhanam is also found mentioned. At present only a few sentences, here and there have been deciphered. For decipherment of full protion, it may take a long time. The dicovery of these inscribed terracotta votives and figurines mark a milestone in the religious history of Tamil Nadu. Thiru I. Ramasamy, who has brought such an improtant findings to the notice of this author deserves our congratulations and the historians and Tamil scholars would be ever grateful to him.

These above ramarkable finds push back considrably the antiquity and evolution of Jain religion in Tamil Nadu. If a systamatic exploration

is carried out in Perur area of Coimbatore District one can expect that more artefacts could be collected to shed light on the origin and evolution of Jain religion in Tamil Nadu.

Therefore, it appears that though the Jain religion was prevalent in Tamil Nadu from 5th - 4th century B.C., it started to take a deep root only after the upsurge of Saiva Nayanmars and Vaishnava Alwars came to an end. For the gradual growth of this religion, the ruling monarchs had also lent their supporting hands by being more tolerant towards all religions. They themselves had built some Jain and Buddha Pallis for the benefit of the followers of those religions. The merchants who were always in the next hierarchy had fully supported Jainism and installed Tirthankara images not only in Jain temples, but also wherever they sojourned while they were travelling to far off places on commercial purposes. At some vulnerable points they had to employ security guards not only to protect themselves and their properties, but also to their religious edifices. Even inspite of this terrific situation Jain Tirthankaras were seem to have worshipped even in remote corners of Tamil Nadu from 10th century onwards.

Notes and References

1. This sculpture and four more other sculptures of Ayyanar and Durga were located by myself, M/s. Tamaraikannan and M. Chandramurthy, at kadaimalaipputtur and Inam Sittamaur.

2. Silambu 11. 2446-2447.

3. ARE, A-10/1958-59, TASSI, 1958-59, p. 41ft. Endowment made to Vajranandikkuravar is mentioned in this charter.

4. ARE, 430/1922-23.

5. R. Muthu, Archaeological Officer, Thanjavur located this image and is published in Tolporu Ayvuthuraiyin Ariya Kandupidippuakal (Tamil) 1988 to 1998 (pub) 1998 p. 27.

6. K. Sridharan. Registering Officer, Trichy, discovered and is published in the same report, in page 15.

7. This author, D. Thulasiraman, curator and P. Venkatesan, School Teacher discovered and is published in the same report in pages 16-17.

8. Ibid. p. 16-17.

9. D. Thulasiraman locaed and is published in the same report in page 12.

10. This image was noticed by this authore M/s. Tamaraikannan and Muthu Ethirajan while they were on exploration.

11. V. Vedachalam, Epigraphist, article on Mutal Rajarajan Kalvettu Porikkaperra Tirthankara Tirumeni (Tamil).

12. M. Chandramurthy, Registering Officer, Chennai, discovered News appered in Dinamani, Tamil Daily on 26.10.1998.

13. R. Poongunan, Curator, examined and news about this appeared in 'The Hobby World' Vol. I, issue No. 4, p.3, Dinamalar, Tamil Daily on 13.6.88.

14. A similar terracotta disc has been picked out at Pipraowash, R. Sengupta, 'Mlechas', Professor K.A. Nilakanta Sastri, Felicitation Volume, 1981, p. 186, Fig. (b). Few more discs are illustrated in Origin and Evolution of Indian clay sculpture, C.C. Das gupta, Univeristy of Calcutta (1961) Figures 72, 75 and 84 assignable to Maurya and Sunga period.

மணிவாசகர் பதிப்பகத்தின் பரிசு பெற்ற நூல்கள்

உலகப் பெருங்கவிஞர் கம்பர்
திருமுறையும் திருக்கோயில்களும்
கலைவாணன் கவிதைகள்
சுற்றுலா வளர்ச்சி
வண்ணங்கள் வடிவங்கள்
கம்ப்யூட்டர்
தமிழ்நாட்டுச் சத்திரங்கள்
சிறுவர் நல்வழிப்பாடல்கள்
தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம்
பண்பாட்டு மானிடவியல்
தனித்தமிழ் இயக்கம்
நோய் அறிதல்
மண்சுமை
கல்வெட்டில் வாழ்வியல்
மலையாள மொழியில் முதல் இலக்கணம்
தகவல் தொடர்பியல்
அறிவியல் ஆயிரம் தொகுதி (1-2)
தமிழிசை இயக்கம்
மரங்கள்
உரையாசிரியர்கள்
பரிபாடல் திறன்
இசையியல்
கம்பர்
திருவருட்பா சிந்தனை
திருக்குறள் கூறும் உறுதிப் பொருள்
தமிழ் மொழி வரலாறு
தாகூர்
தொழுநோய்

மொழி வளர்ச்சியும், மொழி உணர்வும்
மணிக்கொடி காலம்
வீரர் உலகம்
ஊருக்குள் ஒரு புரட்சி
வேரில் பழுத்த பலா
தமிழகக் கலை வரலாறு
இலக்கண வரலாறு
கல்லெழுத்துக் கலை
இந்திய அரசமைப்பு
இரணியூர்க் கோவில்
நேமம் கோவில்
இலக்கண உருவாக்கம்
பகுத்தறிவுக் கும்மி
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை
வயிரவன் கோயில்
ஐ.நா. மனிதகுல நம்பிக்கை ஒளி
காதல் காவியம்
இதழியல்
மாணிக்கச் செம்மல்
சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே
கவிதை உருவாக்கம்
திரைஇசை அலைகள்
காமன்வெல்து நாடுகள்
சங்க இலக்கியக் களஞ்சியம்
காலங்கள்
தமிழ்நாட்டுத் தாவரங்கள்
தமிழ்நாட்டுப் பறவைகள்
மரபுவழிப் பரதப் பேராசான்கள்
தமிழர் மானிடவியல்
இந்திய தத்துவக் களஞ்சியம்
தமிழ்ச் சொற்றொடர் அகராதி
தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்

